Koviloor Digital Library

ஐங்குறுநூறு

[மூலமும் உரையும்]

புத்தகம் - 1

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 15559
VTN0109

உரையாசிரியர்

முனைவர் அ. தட்சிணாமூர்த்தி

தலைமைப் பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ. மா. பரிமணம்
முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன்

Alagappa University
Central Library
63737

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை– 600 098.

Koviloor Digital Library

ஐங்குறுநூறு (மூலமும் உரையும்)

முனைவர் அ. தட்சிணாமூர்த்தி

முதல் பதிப்பு : ஏப்ரல், 2004

© நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

Code No : A 1261

ISBN : 81-234- 0848 - X

விலை : சங்க இலக்கியம்
எட்டுத்தொகை & பத்துப்பாட்டு
நூல்கள்
ரூ.3000

ஒளி அச்சு : பிரிண்ட்மேஜிக்
84-சி, நீதிமன்றச் சாலை,
தஞ்சாவூர் - 613 001.
☎: 04362 - 277981.

அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ்
142, ஜானிஜான்கான் ரோடு
ராயப்பேட்டை, சென்னை-600 014.
☎: 28482441.

Koviloor Digital Library

ஐங்குறுநூறு
புத்தகம் - 1

உள்ளுறை

பக்கம்

உரை பற்றிய முன்னுரை
- முனைவர் அ. தட்சிணாமூர்த்தி
உரையாசிரியர் v

முதலாவது - மருதம் - ஓரம்போகியார்

1. வேட்கைப் பத்து 5
2. வேழப் பத்து 26
3. களவன் பத்து 50
4. தோழிக்கு உரைத்த பத்து 70
5. புலவிப் பத்து 87
6. தோழி கூற்றுப் பத்து 111
7. கிழத்தி கூற்றுப் பத்து 135
8. புனலாட்டுப் பத்து 159
9. புலவி விராயப் பத்து 176
10. எருமைப் பத்து 199

இரண்டாவது - நெய்தல் - அம்மூவனார்

11. தாய்க்கு உரைத்த பத்து 222
12. தோழிக்கு உரைத்த பத்து 245
13. கிழவற்கு உரைத்த பத்து 271
14. பாணற்கு உரைத்த பத்து 281
15. ஞாழற் பத்து 296
16. வெள்ளாங்குருகுப் பத்து 316
17. சிறுவெண் காக்கைப் பத்து 338
18. தொண்டிப் பத்து 356
19. நெய்தற் பத்து 380
20. வளைப் பத்து 405

Koviloor Digital Library

மூன்றாவது - குறிஞ்சி - கபிலர்

21.	அன்னாய் வாழிப் பத்து	.....	425
22.	அன்னாய் பத்து	.....	450
23.	அம்ம வாழிப் பத்து	.....	473
24.	தெய்யோப் பத்து	.....	492
25.	வெறிப் பத்து	.....	513
26.	குன்றக்குறவன் பத்து	.....	535
27.	கேழற் பத்து	.....	558
28.	குரக்குப் பத்து	.....	582
29.	கிள்ளைப் பத்து	.....	608
30.	மஞ்ஞைப் பத்து	.....	633

Koviloor Digital Library

ஐங்குறுநூறு மூலமும் உரையும்

உரை பற்றிய முன்னுரை

ஐங்குறுநூற்றின் உரை வரலாற்றைக் கூறுமுன் இந்நூல் பற்றிச் சில சொல்வது இன்றியமையாதது. இது சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டுச் சான்றோரால் தொகை செய்யப்பட்ட எட்டுத்தொகை நூல்களுள் மூன்றாவதாக அமைந்தது. மருதம் முதலிய ஐந்திணையொழுகலாறுகளை, நற்றிணை முதலியவற்றிலுள்ள செய்யுட்களைவிட அடியளவால் குறைந்த நூறுநூறு பாக்களால் தனித்தனியே விளக்குதலால் இஃது ஐங்குறுநூறு என்று பெயர் பெற்றது. இந்நூற் செய்யுட்களின் சிற்றெல்லை மூன்றடிகள்; பேரெல்லை ஆறு அடிகளாகும். மூன்றடிகொண்ட அகவல்களைத் தன்பால்கொண்ட சங்க நூல் இஃதொன்றே. இந்நூற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். அவ்வாழ்த்துச் சிவபெருமானுக்குரியதாகும்.

டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் தம் பதிப்பில் 129, 130 ஆகிய பாடல்கள் முழுவதும் கிட்டாது ஒழிந்தன என்றும் 416, 490 ஆகிய செய்யுட்களில் இரண்டாம் அடி சிதைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் 490ஆம் செய்யுள் முழுமையாகக் கிடைத்ததாகக் குறித்துத் தம் பதிப்பில் அப்பாடலை வெளியிட்டுள்ளார். 416 ஆம் பாடலின் இரண்டாம் அடியிலுள்ள சீரை முதலடியில் ஈற்றுச்சீராகச் சேர்த்துப் பாட்டை நான்கடிகள் கொண்டதாக மாற்றியுள்ளார்.

இந்நூலின் மருதத்திணையை ஓரம்போகியாரும், நெய்தற்றிணையை அம்மூவனாரும், குறிஞ்சியைக் கபிலரும், பாலையை ஓதலாந்தையாரும் முல்லையைப் பேயனாரும் இயற்றினர் என்பதனைப் பழஞ்செய்யுள் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சிக் கபிலன் – கருதிய
பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு"

இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையென்ற சேரமன்னர் பெருந்தகையாவார். இதற்குத் திட்பமும் நுட்பமும் கொண்ட பழையவுரையொன்று கிடைத்துள்ளது நாம் பெற்ற பேறாகும்.

Koviloor Digital Library

திணைகளைந்தனையும் இன்ன வரிசையில்தான் சொல்லவேண்டும் என்ற உறுதியான வரையறை யாதும் இல்லை. நூல்களில் அமைந்த திணை வரிசை பற்றிய பட்டியலை ஐயர் பதிப்பில் கண்டுகொள்க. சங்க இலக்கியத் தொகைகளில் மருதத்தை முதலாகக்கொண்டது இந்நூல் மட்டுமே. இந்நூலில் அது முதலாக வைக்கப்பட்டதற்கு ஐயர் கூறும் காரணம் பொருத்தமானதே. இந்நூலைத் தொகுத்த சான்றோரும் தொகுப்பித்த அரசரும் சேரநாட்டினர். எனவே, ஆதன் அவினி என்னும் சேரமானை வாழ்த்தும் வேட்கைப் பத்தினைத் தன்பால்கொண்ட மருதத்தை முதலில் வைத்தனர் என்பார் அவர். சேரநாட்டுத் துறைமுகப்பட்டினமான தொண்டியின் பெயரால் ஒரு பத்தினைக் கொண்ட நெய்தற்கு அடுத்த இடம் கொடுக்கப்பட்டது. சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிப் பெருமைப்படுத்தியவரும், மலைநாட்டில் வாழ்ந்து பழகியவரும், குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவரும் ஆன கபிலரால் பாடப்பட்டது மூன்றாவது இடம்பெற்றது. பாலையும் முல்லையும் இவற்றின்பின் முறையே வைக்கப்பட்டமைக்குக் காரணம் கூறுவது எளிதன்று.

இந்நூலில் காணும் புதுமைகள் பலவாகும். இதன் திணைகள் யாவையும் சமமான எண்ணிக்கையில் செய்யுட்களைப் பெறல், ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துக்களாகப் பிரிந்திருத்தல், ஒவ்வொரு பத்தும் செய்யுட்களின் தொடக்கச் சொல் அல்லது தொடர், செய்யுட்களின் ஈற்றுச் சொல், கூற்றுக்குரியோர், கேட்போர், கருப்பொருள் முதலானவற்றில் யாதானுமொன்றால் பெயர் பெறல், திணை மயக்கத்திற்கு மிகுதியான இடந்தருதல், பிறவற்றில் காணமுடியாத மிகப் பல புதிய கிளவிகள் இடம்பெறல், பிறதொகைகளில் காணமுடியாத புதிய சொற்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருத்தல் ஆகிய புதுமைகள் இந்நூலைப் பிறவற்றினின்றும் பிரித்துக்காட்டுகின்றன. இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது ஆகியவற்றுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. இதிலமைந்த பத்து என்னும் அமைப்பே பத்திப்பனுவல்களிலும் கையாளப்பட்டது என்பதனை எண்ணிப் பார்க்கலாம்.

Koviloor Digital Library

இந்நூலை நமக்குத் தேடித்தந்த பெருமை தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாத ஐயரையே சாரும். பழைய உரையுடன் இதனை இப்பெருமகன் 1903-ல் வெளியிட்டார். இப்பெருமகனாரையும், இதனை இவர் வெளியிடுவதற்கு வேண்டிய பொருளுதவியையும் பிற உதவிகளையும் செய்த புரவலரான மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர், பெருமைக்குரிய பா. இராச இராசேசுவர சேதுபதி அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்வோமாக.

இனி ஐங்குறுநூற்றுக்கு அமைந்த இந்தப் புத்துரை பற்றிச் சில சொல்வது இன்றியமையாதது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகர் ஆகியோருள் ஒருவரோ எனப் பேரறிஞரான தமிழ்த்தாத்தாவே ஐயுறத்தக்க பெருமைக்குரிய உரையாசிரியர் ஒருவரால் உரைவிளக்கம் பெற்ற நூல் ஐங்குறுநூறு. இவ்வுரைபற்றி உ.வே. சாமிநாத ஐயர் கூறுவது வருமாறு: "இந்நூலின் பழையவுரை பதவுரையுமன்று; பொழிப்புரையுமன்று; அகத்திணை நூல்களுக்கேயுரிய உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் முதலியவற்றைப் பெரும்பாலும் நலமுற விளக்கிச் சிற்சில இடத்துமட்டும் திரிசொற்களின் பொருளைப் புலப்படுத்திச் சிறுபான்மை இலக்கணக் குறிப்பையும் சொன்முடிபு, பொருள் முடிபுகளையும் பெற்றுள்ளது. 469-ஆம் பாடலுக்கு மேலுள்ளவற்றிற்குக் கையெழுத்துப் பிரதியில் இவ்வுரை காணப்படவில்லை; இடையிடையே சிற்சில பாடல்களுக்குமில்லை. ஆனாலும் கிடைத்தவரையில் பாடல்களின் பொருள்களைத் தெரிந்துகொள்வதற்கு இவ்வுரை மிகச் சிறந்த கருவியாகவுள்ளது. இந்நூல் போலவே நடையாலும் பொருள் நுணுக்கத்தாலும் இவ்வுரையும் மிகப் பாராட்டற்பாலது."

உரையின்றி விடப்பட்ட பாடல்கட்கும் ஒருவழியாக உரையெழுதிப் பதிப்பிக்க எண்ணிய தம் எண்ணத்தை, இவ்வுரையின் மாட்சியைக் கண்ட பின்னர்க் கைவிட்டுவிட்டதாக ஐயரவர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகு சிறப்புடைய உரை நம்மனோர்க்கு நன்கு விளங்காமையால் விரிவான உரைகளை ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களும், பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனாரும் எழுதி வெளியிட்டனர். பிள்ளையவர்களின் விளக்கவுரையின் முதலிரண்டு தொகுதிகள்

Koviloor Digital Library

1957–ஆம் ஆண்டிலும், மூன்றாம் தொகுதி அடுத்த ஆண்டிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டன. இதன்பின்னர் 1961–இல் பெருமழைப் புலவரின் பேருரை திருநெல்வேலி, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வெளிவந்தது. இவ்விரண்டு உரைகட்கு முன்பே ஈழநாட்டுச் சான்றோர் ஒருவர் வகுத்த உரையைப் பெரும்புலமை சான்ற பெருமகன் தி. சதாசிவ ஐயர் (1943) வெளியிட்டிருந்தார். அண்மைக்காலத்தில் புலியூர்க்கேசிகனாரின் உரையும், நாராயண வேலுப்பிள்ளையாரின் உரையும், சென்னை வர்த்தமானன் பதிப்பகத்தின் உரையும் வெளிவந்துள்ளன. இவற்றுள்ளும் முன்னர்க் குறித்த நான்கு உரைகளுமே தமிழ்ச்சான்றோர் பெருமக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஆய்வுரைகளாகக் கொள்ளப்பட்டுள.

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிடும் இப்புதிய உரையை யான் எழுதுதற்குப் பேருதவியாய் அமைந்தவை இங்குச் சுட்டிய நான்கு உரைகளுமேயாம்.

இப்புதிய உரை மர்ரே ராஜம் வெளியிட்ட ஐங்குறுநூற்றின் மூலம் மட்டுமே அமைந்த நூலை மூலபாடமாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஐயர் வெளியிட்டுதவிய பழையவுரையையொட்டியே பெரும்பாலும் உரை வகுக்கப்பட்டுள்ளது. எனினும், அவ்வுரையினும் சிறப்புடைத்தாகப் பிறர் உரை காணப்படின் சிற்சில இடங்களில் அவ்வுரையும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளமையைக் காணலாம்.

பழைய நூல்களில் பாட வேறுபாடுகள் மிகவுண்டு என்பதனை அறிஞர் அறிவர். உரையாசிரியர்கள் தாம்தாம் சரியென்று கருதிய பாடங்களையே மேற்கொள்கின்றனர். எனவே உரைகளில் வேறுபாடு அமைவதனைத் தவிர்த்தல் இயலாது. சிலபோது, பாடவேறுபாடுகள் இல்லாதபோதும் உரைகள் வேறுபடக் காரணம் உண்டு. செய்யுட் சொற்களைத் தத்தம் விருப்பம்போல் இடமாற்றி இயைத்துப் பொருள் கோடலும், சொற்களை வருவித்துப் பொருள் கோடலும், பலபொருள் ஒரு சொற்கட்குத் தம் விருப்பத்திற்குரிய பொருளைக் கோடலும் இவ்வுரை மாறுபாட்டுக்குக் காரணமாகும். நான்கு உரைகட்குப் பின்னர் எழும் இவ்வுரையில் அம்முன்னைய உரைகளை ஆங்காங்கே எடுத்துக்காட்டுவது இந்நூலைப் பயில்வார்க்கும் ஆய்வு செய்வார்க்கும் மிகுபயன் விளைக்கும் என்று

Koviloor Digital Library

கருதினேன். இதன் விளைவாகப் பல செய்யுட்கட்கு வகுத்த உரைகளில் பலருடைய வேறுபட்ட உரைகட்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. (எ.டு. 93, 109, 116, 187, 248, 250, 266, 374 முதலானவை).

இந்நூலின் அனைத்துச் செய்யுட்களுக்கும் முதன்முறையாக உரை வகுத்த சான்றோர், பெயர் அறியப்படாத ஈழத்து அறிஞரே. அவர் உரை 1999–ஆம் ஆண்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இது பெரும்பாலார்க்கு அறிமுகமானதன்று. இவ்வுரையில் ஆங்காங்கு அவருடைய கருத்துக்களும் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக 109, 116ஆம் செய்யுட்களின் உரைகளைக் கூறலாம்.

அகச் செய்யுட்களுக்கே சிறப்பாக உரிய உள்ளுறைப் பொருளைப் பழைய உரையாசிரியர் மிக நுட்பமாக விளக்கினார். அவர்க்குப்பின் வந்தாரும் தத்தமக்குத் தோன்றிய வகையில் தம் புலமைத்திறம் வெளிப்பட உள்ளுறைகளை விளக்கினர். எனவே புதிய விளக்கங்களை எழுத யான் முயலவில்லை. மாறாக, ஒரு செய்யுட்கு ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளுறைகள் கிடைக்குமிடமெல்லாம் அவற்றைப் பதிவுசெய்துள்ளேன். இது முன்னைய உரைகளில் காணமுடியாத ஒரு கூறாகும். (எ.டு. 68, 70) உரைகளை ஒப்பீடு செய்வார்க்கு இது பேருதவி புரியும்.

முன்னைய உரைகளில் பொருத்தமில்லனவாகத் தோன்றிய இடங்கள் நயமான முறையில் மறுக்கப்பட்டுள்ளமையையும் இதன் சிறப்புக் கூறுகளுள் ஒன்றாகக் கருதலாம். அவற்றுட்சில வருமாறு: 181ஆம் செய்யுளில் 'நெய்தலம் பகைத்தழை' என்ற தொடர் இடம்பெறுகின்றது. இதற்குப் 'பல்வேறு வகையான தழைகளால் தொடுக்கப்பட்ட தழையுடை' என்று கூறப்பட்ட உரையை மறுத்து, 'ஒன்றோடொன்று மாறுபடும் வகையில் தொடுக்கப்பட்டது' என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் 88, 89ஆம் பாடல்களில் இடம்பெறும் 'எவ்வை' என்ற சொற்கு ஐயரவர்களும், பிள்ளையவர்களும் 'எம் தங்கை' என்றே பொருள்கொண்டனர். இதனை இப்புத்துரை தக்க சான்றுகளோடு மறுக்கிறது. நற்றிணை 172ஆம் செய்யுட்குப் பின்னத்தூரார் வரைந்த உரையில் 'நுவ்வை' என்பதற்கு 'நும் தங்கை' எனப் பொருள்

Koviloor Digital Library

கூறியமை பிறழவுணர்ந்ததன் விளைவு என்பது இவ்வுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'கல்லா' என்ற அடைமொழி சங்க இலக்கியத்தில் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளது. இதற்குத் தன் தொழிலையன்றிப் பிறதொழில் ஒன்றும் கல்லாத' என்ற இடைக்கால உரையாசிரியர் கருத்தையே பின்வந்தாரும் ஏற்றனர். இவ்வுரையில் இக்கருத்து மறுக்கப்பட்டுப் புதிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (சான்று: 304, 429)

இந்நூலின் 259 ஆம் செய்யுளில் குறப்பெண் முருகனுக்குப் பலியிட்டு வணங்குதல் பேசப்படுகிறது. இதில் இடம்பெறும் 'குலமுதல் வழுத்தி' என்ற தொடருக்குக் குலதெய்வமாம் முருகனை வணங்கி என்பதே நேரிய பொருளாயினும், பிள்ளையவர்கள் 'கடவுட்குலம்' என இயைத்துக் கோயில் என உரை வகுத்துள்ளார். மேலும் இதிலுள்ள 'முதல்' என்பதற்கு முதற்பொருள் (First Cause) என்று பொருள்கொண்டார். இவ்வுரையில், 'குலம் என்ற சொல்லுக்குக் கோயில் என்ற பொருள் பிற்காலத்தில் அமைந்தது உண்மையெனினும், சங்கநூற் செய்யுட்களில் ஒன்றிலேனும் இச்சொல் இப்பொருளில் ஆளப்படவில்லை என்றும், மலையுறை கடவுளாம் (தம்) குலமுதல் என்று நேர்ப்பொருள் கொள்வதே சரியெனப்படுகிறது' என்றும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஐங்குறுநூற்றில், பிற அகத்தொகைகளிற் காணமுடியாத புதுமைகள் பல இடம்பெற்றுள்ளன. இப்புதுமைகளைப் புதுமைகளாக முன்னைய உரையாசிரியர்களில் யாரும் சுட்டிக்காட்டவில்லை. இக்குறையை இவ்வுரை ஓரளவு நிறைவுசெய்கிறது. அவற்றுட்சில வருமாறு:

1. 'பசு' என்னும் சொல் ஆ, ஆன் என்ற பொருளில் முதன்முதலாக ஆளப்படல் (271:3)
2. 'இந்திரவிழா' முதன்முதலில் சுட்டப்படல் (62)
3. 'குருவி' என்ற வடிவம் முதன்முறையாக இடம்பெறல் (295) (பிற தொகைகளில் 'குரீஇ' என்றே வழங்கும்)
4. சேரநாடு புத்திலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தியது என்பது (180)
5. பெண்மகவு வேண்டித் தவம் செய்வதற்கு முதற் சான்று இதிலுள்ளது என்பது. (257)

Koviloor Digital Library

6. உடன்போன தலைவி இடைச்சுரத்தில் கண்டாரை யான் போகின்றபடியை யாய்க்குநீர் கூறவேண்டும் எனச் சொல்லியது 'புதுக்கூறு' என்பது. உடன்போக்கில் தலைவன் தேரூர்ந்து செல்வது புதுமை என்றல் (385) முதலியன.

7. கார்காலத்தில் தலைவன் பிரிவதாகப் பாடல் புதுமரபு என்றல். (427) இங்குக் காட்டியன சில மட்டுமே. இன்னும் பலவுள. இவ்வுரையைப் பயில்வார் மேலும் பல செய்திகளை அறியலாம்.

குமரிப்பெண் கூந்தலில் மலரணிதல் மரபன்று என்றும், சிலம்பு கழித்தலும், மலர் சூட்டுதலும் திருமணச் சடங்கின் கூறுகள் என்றும் தமிழ்க்காதலில் வற்புறுத்துவார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார். (பக். 159 – 160) தம் கருத்துக்குச் சான்றாக அவர்கள் காட்டிய பாடல் உரையில் (294) இதற்குத் தக்க மேற்கோளுடன் மறுப்புக் கூறப்பட்டுள்ளது.

யாரும் பயன்படுத்தாத கருத்தாழமும் நயமும் மிக்கதோர் தொடரைக் கையாண்டமையால் சில புலவர்கள் அத்தொடர்களாலேயே பெயர் சூட்டப்பட்டனர். இத்தகையோர் இருபத்தெழுவர் காணப்படுவர். குறுந்தொகையில்தான் அப்பெயர்கள் முதலிற் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று 'மீனெறி தூண்டிலார்' என்னும் பெயராகும். 'கானயானை கைவிடு பசுங்கழை மீனெறி தூண்டிலின் நிவக்கும் நாடனொடு' (குறுந். 54) என்ற தொடர் இச்சிறப்புப் பெயரமையக் காரணமாய் அமைந்தது. இத்தொடர் இந்த நூலின் 278ஆம் பாட்டில் 'குரங்கின் வன்பறழ் பாய்ந்தென இலஞ்சி மீனெறி தூண்டிலின் நிவக்கும் நாடன்' எனச் சிறிது மாற்றத்துடன் ஆளப்பட்டுள்ளது. இதனைத் தொகுப்பாசிரியர்கள் கண்டிருப்பின், மேலே சொன்ன குறுந்தொகைப் பாட்டின் ஆசிரியர்க்கு 'மீனெறி தூண்டிலார்' என்ற பெயரை இட்டிருப்பாரோ ? என்னும் ஐயத்தை இவ்வுரை எழுப்புகிறது. இவை இவ்வுரையின் குறிப்பிடத்தக்க கூறுகள் மட்டுமே.

ஐங்குறு நூற்றுக்கு மட்டுமன்றி, வேறு எந்த நூலுக்கும் புதிய புதிய விளக்கங்களுடன் புதிய உரைகள் தோன்றுவதற்கு எப்பொழுதும் இடமுண்டு. இப்பொழுது எழுதப்பட்டுள்ள இவ்வுரை, முன்னைய உரைகளின் கூறுகளையும் உள்ளடக்கியிருத்தலின் ஆராய்ச்சி செய்வார்க்குப் பெரிதும் உதவும் என்று நம்பலாம். இவ்வுரையில் குறைகள் காணின் பொறுத்துக்கொள்ளுமாறு அறிஞர் பெருமக்களை வேண்டுகின்றேன்.

Koviloor Digital Library

சான்றோர் பலர் ஆராய்ந்து உரை வகுத்த இந்நூலுக்கு எளியேனும் உரையெழுதும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்திற்கு என் மனமார்ந்த நன்றி உரியது.

எளியேன் உரையெழுதப் புக்க காலை, அவ்வுரையினை மேற்பார்வை செய்து, குறைகளைச் சுட்டிக்காட்டியும் நிறைகளைப் பாராட்டியும் ஊக்கமளித்து இவ்வுரை முயற்சி வெற்றிபெறப் பெருந்துணை புரிந்தவர்கள், அடக்கமே உருவமாக அமைந்து, தம் விரிந்து பரந்ததும் ஆழ்ந்து நுணுகியதுமான தமிழ்ப்புலமையை என்போன்றோர் முன்னேறி வாழ்வு பெறப் பயன்படுத்தியவரான பெரும்புலவர் **முனைவர் அ. மா. பரிமணம்** ஆவார்கள். அமரர் ஆகிவிட்ட அவர்களை என் நெஞ்சம் திறப்போர் அதிற் காண்குவர்.

பேராசிரியர் அ. மா. ப. அவர்களின் மறைவிற்குப் பின், இவ்வுரைத் திட்டத்தினை வழி நடத்தும் பொறுப்பினைத் தம் பல பணிகட்கிடையே தம் தோளில் தாங்கிக்கொண்டு எங்கட்குத் துணைபுரிந்த **முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியனார்க்கு** என் நன்றி உரியது.

இவ்வுரைநூலை மிக அழகிய முறையில் அச்சுக்கோவை செய்த பெருமை **தஞ்சை பிரிண்ட்மேஜிக் கணினி** அச்சகத்தைச் சாரும். அச்சகத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் பாராட்டும் நன்றியும் உரியவாகும். அச்சுக்கோவை செய்ததோடமையாது, நூல் பிழையின்றி வெளிவரல் வேண்டும் என்பதனை நோக்கமாகக்கொண்டு, மெய்ப்புத் திருத்தும் பணியில் என்னோடு ஒத்துழைத்த இனிய தம்பி **திருமிகு ஜோசப்** அவர்கட்கு என்றும் கடப்பாடுடையேன்.

இந்நூலின் இறுதியில் உள்ள அருஞ்சொற்பொருள் அகர நிரல் ஆய்வாளர்கள் **திருமிகு சத்திய நாராயணன், திருமதி பிருந்தாஸ்ரீ** ஆகியோரின் உழைப்பினால் உருவானதாகும். அவர்கட்கு எம் பாராட்டும் நன்றியும் உரிய.

என் சிற்றறிவு கொண்டு யான் வரைந்த இவ்வுரையினை ஏற்றுக்கொண்டு இத்தகு பணியில் யான் மேலும் மேலும் முனைந்து ஈடுபட ஊக்கமளிக்குமாறு தமிழ்ப்பெருமக்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்.

முனைவர் அ. தட்சிணாமூர்த்தி

Koviloor Digital Library

பாடினோர் பாடப்பட்டோர் முதலானோர் வரலாறு

1. பாரதம் பாடிய பெருந்தேவனார்:

பெருந்தேவனார் என்னும் பெயர் பெற்ற சான்றோர், வடமொழியில் இருக்கும் மாபாரதத்தைத் தமிழிற் பாடிய சிறப்பினால் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனச் சிறப்பிக்கப்பட்டார். சங்கத்தொகை நூல்களாம் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் உள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் இவர் இயற்றியவையாம். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் 'பாரதவெண்பா' என்னும் நூலை இயற்றியவரும் பெருந்தேவனார் என்றே அறியப்படுகின்றார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள புறத்திணை இயலுக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைந்த செய்யுட்கள் பலவற்றை மேற்கோளாகக் காட்டுகின்றார். இச்செய்யுட்களை இயற்றியவரை அவர் பெருந்தேவனார் என்றே குறிப்பிட்டார். யாப்பருங்கல விருத்தியிலும் இவருடைய செய்யுட்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. வெண்பா யாப்பிலமைந்த பாரதத்தை இயற்றியவரையும், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக இயற்றியவரையும் வெவ்வேறு காலத்துக்குரியோராகக் கருதுவர் அறிஞர்,

நச்சினார்க்கினியமும், யாப்பருங்கலவிருத்தியும் காட்டும் பெருந்தேவனார் கி. பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகலாம் என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. தொகை நூல்களுள் வரும் வாழ்த்துச் செய்யுட்களைத் தவிர, அகநானூற்றில் ஒன்றும் நற்றிணையில் ஒன்றுமாக இருசெய்யுட்கள் இவர் பெயரால் வழங்குகின்றன. திருவள்ளுவ மாலையிலும் ஒரு செய்யுள் இவர் இயற்றியதாக அறியப்படும்.

தொகை நூல்களுள் இரு செய்யுட்கள் பாடிய இப்புலவர் சங்க காலத்தவராகவே கருதப்பட வேண்டும். அவ்வாறாயின், சங்க காலம் என்பது கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின்னும் நீள்கிறது என்று அறியலாம். நூல்களைத் தொகை செய்த சான்றோரும், அதற்குத் துணைபுரிந்த மன்னர்களும் வாழ்ந்த காலமே பெருந்தேவனார் காலமும் என்று முடிவு செய்யவேண்டியுள்ளது.

Koviloor Digital Library

புறநானூற்றிலுள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுள், ஏனைய தொகைகளில் உள்ள கடவுள் வாழ்த்துச் செய்யுட்கள் போலன்றி, நூலின் முதற் செய்யுளாகவே அமைந்துள்ளது ஆராய்ச்சிக்குரியதாகிறது. கடவுள் வாழ்த்துப் புறத்திணைச் சார்புடையதாகலான் அது நூலின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படும் தகுதிபெற்றது என்றும், ஏனையவை அகநூல்களானமையால் அவற்றுக்குரிய வாழ்த்துப் பாடல் நூலின் புறத்தே அமைக்கப்பட்டது என்றும் கருதவேண்டியுள்ளது. நூல்கள் தொகை செய்யப்பட்ட காலத்தில் வாழ்ந்த இப்புலவரே புறநானூற்றைத் தொகுத்திருத்தலும் கூடும். இக்கருத்தினை அறிஞர் ஆராயவேண்டும்.

இவர் வாழ்ந்த காலத்தை அறுதியிடுவது சற்றுச் சிக்கலானதாகவே தோன்றுகிறது. கடவுள் வாழ்த்துப் பாடாது நூலியற்றல் குறைபாடுடையது என்ற கருத்து நிலவிய காலத்தவராக இவரைக் கருதவேண்டும். பதினெண்கீழ்க்கணக்கிலுள்ள பல நூல்கட்குக் கடவுள் வாழ்த்து இல்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிற்கும் கடவுள் வாழ்த்து இல்லை. கடவுள் வாழ்த்துப் பாடியே நூலைத் தொடங்க வேண்டும் என்னும் கருத்து நன்கு வேரூன்றியிருந்த காலம்தான் பெருந்தேவனார் காலம் என்று கூறுவது தவிரத் திட்டவட்டமாக இவர் காலத்தைக் குறித்திட இப்பொழுது இயலவில்லை.

நற்றிணையிலுள்ள வாழ்த்துச் செய்யுள் திருமால் வணக்கமாகும். குறுந்தொகையிலுள்ள முருகவேட்குரித்து, ஏனையவை சிவபெருமானுக்குரியன. இதனால், சைவ வைணவச் சமயப் பிரிவுகட்கிடையே போட்டியும் பூசலும் தோன்றிய பல்லவர் காலத்திற்கு முற்பட்டவர் இவர் என்று கருதுவதில் தவறில்லையென்க. இவ்வகையில் இவர் இளங்கோவடிகளையொத்துள்ளார்.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பற்றி இன்னும் விரிவாக ஆராயவேண்டியுள்ளது என்று கூறுவது தவிர, முடிவாக யாதும் கூறுவதற்கு இப்பொழுது வாய்ப்பில்லை. நச்சினார்க்கினியத்திலும், யாப்பருங்கலவிருத்தியிலும் காணப்படும் மேற்கோட் செய்யுட்கள், தொகை நூல்களில் வரும் வாழ்த்துச் செய்யுட்கள் ஆகியவற்றை ஒருங்கு வைத்து ஆய்தல் விரும்பத்தக்கதாகும்.

2. ஓரம்போகியார் :

இவர் இயற்றியனவாகச் சங்கத் தொகை நூல்களில் ~~110~~ 109 செய்யுட்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

ஐங்குறுநூறு	–	100
நற்றிணை	–	2
குறுந்தொகை	–	5
அகநானூறு	–	~~2~~ 1
புறநானூறு	–	1
		109

Koviloor Digital Library

இவர் பாடிய 109 அகச்செய்யுட்களுள் குறுந்தொகை 70, 122 ஆகிய இரு செய்யுட்கள் தவிர ஏனையவை மருதத்திற்குரியன. இதனால் இவரை மருதப்புலவர் என்று பாராட்டுவது தவறாகாது.

இவர் ஆதன் அவினி என்னும் சேரமானையும் (ஐங் முதற்பத்து) சோழன் கடுமான் கிள்ளியையும் (56, 78) பெயரறியப்பெறாத பாண்டியனையும் (54) விராஅன் (58) மத்தி (61) என்னும் குறுநிலத்தலைவர்களையும் குறிப்பிட்டுள்ளார்.

காவிரியாற்றையும் (42) வையையாற்றையும் (7) குறிப்பிடும் இவர் முதன்முதலாக இந்திர விழாவைப்பற்றிப் பேசுகின்றார் (62) தைத்திங்களில் நிகழும் நோன்பு பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளார். (84)

அரசர்களின் செயல்கள் பற்றி அகச்செய்யுட்களில் பேசுவது அக்கால மரபு எனினும் அகச் செய்யுட்களில் ஒரு மன்னனை வாழ்த்தும் மரபு இவரிடம் மட்டுமே காணப்படுகிறது. இங்ஙனமே 'விளைக வயலே, வருக இரவலர், பால்பல ஊறுக பகடுபல சிறக்க' என்றவாறு உலக நன்மைகள் குறித்து வேண்டுவதும் இவரிடம் மட்டுமே காணும் புதுமையாம். தோற்றோர் புல் மேய்வது பற்றியும் இவரே முதற்கண் குறிப்பிடுகின்றார்.

3. அம்மூவனார் :

இவர் இயற்றியனவாக மொத்தம் 127 செய்யுட்கள் கிடைத்துள்ளன. அவை வருமாறு:

ஐங்குறுநூறு	–	100
நற்றிணை	–	10
குறுந்தொகை	–	11
அகநானூறு	–	6

இவர் பாடியவற்றுள் அகம் 35, குறுந்தொகை 327, நற்றிணை 76, 397 ஆகியவை தவிர ஏனைய யாவும் நெய்தலுக்குரியன.

இப்புலவரும் மலைநாட்டிற் பிறந்தவராக அறியப்படுகிறார். அந்நாட்டுத் தொண்டியை இவர் புகழ்ந்து பாடுவதால் இதனை அறியலாம். மூவன் என்னும் பெயர் மலைநாட்டுப் பகுதியில் பெருவழக்கு என்பர் சான்றோர். இவர் சேரனாலும் பாண்டியனாலும் பேணப்பட்டவர் என்றறிகிறோம். மேலும்,

Koviloor Digital Library

திருக்கோவலூரையாண்ட காரிவள்ளல் பாலும் இவர் அன்புடையவராகக் காணப்படுகிறார். கொற்கையிற் கிடைக்கும் முத்தினை இந்நூலின் 185ஆம் செய்யுளில் தலைவியின் பல்லுக்கு உவமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

தொண்டி நகரைக் 'குட்டுவன் தொண்டி' என்று சிறப்பிக்கின்றார். (ஐங். 178) அந்நாட்டகத்துள்ள மரந்தை நகரத்தையும் அவர் குறித்துள்ளார். 'துஞ்சா முழவின் கோவற் சேரமான் நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்றுரைப் பெண்ணையும் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும் நெறியிரும் கதுப்பு' (அகம். 38) என்று தலைவியின் கூந்தலைச் சிறப்பித்தலால் இவர் காரியின் அன்பைப் பெற்றவர் என்று அறியலாம்.

இவர் காலத்தில் நெல்லும் உப்பும் ஒரே விலைக்கு விற்கப்பட்ட வரலாற்றை இவர் பாடிய இரு செய்யுட்களால் (அகம். 140, 390) அறியலாம். பெண்ணுக்குப் பரியம் கொடுத்தல் பற்றியும், இவர் குறிப்பிடுகின்றார். (ஐ. 147, அகம். 280).

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயாகியர்என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே — குறுந். 49.

தாயுடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு
அன்னா வென்னும் குழவி போல
இன்னா செயினும் இனிது தலையளிப்பினும்
நின்வரைப் பினள் என் தோழி — குறுந். 397.

சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்
பிறப்புப் பிறிதாகுவதாயின்
மறக்குவென்கொல் என் காதலன் எனவே — நற். 397.

முதலான இலக்கியப் பகுதிகள் தமிழறிஞர்கள் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்க்கத் தக்கனவாகும்.

'தொண்டிப்பத்து' அந்தாதித் தொடையாக அமைந்துள்ளதோடு, கிளவி வகையாலும் தொடர்புற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அந்தாதி, கோவை ஆகிய இலக்கிய வகைகட்கு வித்தூன்றியவராகிறார்.

Koviloor Digital Library

4. கபிலர் :

கபிலர் இயற்றியனவாக மொத்தம் 235 செய்யுட்கள் கிடைக்கின்றன. சங்கப் புலவர்களுள் இத்துணைச் செய்யுட்களை இயற்றியோர் வேறு யாரும் இலர். அவை பற்றிய விவரம் வருமாறு:

நற்றிணை	–	20
குறுந்தொகை	–	29
கலித்தொகை	–	29
ஐங்குறுநூறு	–	100
பதிற்றுப்பத்து	–	10
அகநானூறு	–	16
புறநானூறு	–	30
குறிஞ்சிப்பாட்டு	–	1
		235

இவற்றுள் 195 செய்யுட்கள் அகத்துக்குரியன. இவற்றுள்ளும் நற்றிணை 59, 267, 291, 320, குறுந்தொகை 246, அகநானூறு 203 ஆகிய ஆறு செய்யுட்கள் தவிர்த்து ஏனைய 189 செய்யுட்கள் குறிஞ்சித் திணைக்குரியன. குறிஞ்சிக்கபிலர் என இவர் பாராட்டப்படுவதன் காரணம் இதனால் நன்கு விளங்கும்.

தாம் வாழும் நாளிலேயே புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்பட்டவர் இவர். "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" (புறம். 126), "செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம். 53) "பொய்யா நாவின் கபிலன்" (புறம். 174) "உவலை கூராக் கவலையின் நெஞ்சின் நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்" (பதிற். 85) என்பன புலவர்தம் பாராட்டுரைகளாகும்.

பாரிக்கும் கபிலர்க்கும் இடை நிலவிய நட்பின் திறம் உலகறிந்தது. பாரி மறைந்தபின் வாழ விருப்பமின்றி உண்ணாநோன்பொடு உயிர் பதிப்பெயர்ந்தவர் இவர். 'யானே தந்தை தோழன், இவரென் மகளிர்' என உரிமை பாராட்டிய கெழுதகைப் பண்பு இவருடையது. இவருடைய புலமையை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இவரால் பாடப்பட்ட பெருமைக்குரியோர் வேள்பாரி, பேகன், மலையமான் திருமுடிக்காரி, சேரமான்செல்வக்கடுங்கோ வாழியாதன், இருங்கோவேண்மான்,

Koviloor Digital Library

விச்சிக்கோன், நள்ளி, பாரிமகளிர், அகுதை, அந்துவன், கழாத்தலையார், ஆகியோர் ஆவர்.

பார்ப்பனச்சிறார் குடுமி உடையார் என இவர் குறிக்கிறார். (ஐங். 202). குறவன் மகள் வேண்டி முருகனை வழிபட்டான் என இவர் குறிக்கிறார். (ஐங். 257) மீனெறி தூண்டில் உயர்வதுபோல் மூங்கிற்கோல் உயர்வதாக இவரும் பாடுவார். (ஐங். 278) வெள்ளம் என்னும் பேரெண்ணை ஒரு செய்யுளிற் சுட்டுவார். (ஐங். 281)

5. ஓதலாந்தையார் :

இவர் பாடியனவாக நமக்குக் கிடைப்பன 103 செய்யுட்கள். ஐங்குறுநூற்றின் நான்காம் நூறு தவிர இவர் இயற்றியனவாகக் கிடைப்பன குறுந்தொகையில் உள்ள மூன்று செய்யுட்கள் மட்டுமே. குறுந்தொகையில் இவர் பாடிய மூன்றனுள் இரண்டு (12, 229) பாலைக்குரியன; ஒன்று 21 முல்லைக்குரியது. கானம் கார்காலம் என்று அறிவித்தாலும், தன் தலைவன் வாராமையால் அது கார்காலம் என்று ஏற்காத தலைவியைப் படைத்தவர் இவர். (குறுந். 21) சிறுவயதில் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டோர் காதலராகிக் கனிந்து உடன்போனமை கண்டு ஊரவர் ஊழை வியந்ததாகப் பாடியவரும் இவரே. (குறுந். 229).

ஐங்குறுநூற்றில் இவர் பாடிய பாடல்களைப் பற்றி அறிஞர் வ. சுப. மா. அவர்கள் வியந்து பாராட்டுவதனைத் தமிழ்க்காதலுள் கண்டுகொள்க.

> 'நின்யைந்து உறைவி கடுஞ்சூற்சிறுவன்
> முறுவல் காண்டலின் இனிதோ
> . . . . . நீ இகந்து செய் பொருள்?' – ஐங். 309.

என்பது இவர் படைத்த தோழியின் வினா. இவர் தம் செய்யுட்களில் எயிற்றியைத் தலைவியாக்கியுள்ளார். (ஐங். 363, 364, 365) உடன்போக்கை அறநெறி என்று ஏற்றுக்கொள்வாள் இவர் படைத்த தாய் (ஐங். 371) தன்னைப்போல் தன் மகளை உடன்கொண்டு போன காளையின் தாயும் துயரடைய வேண்டுவாள் இன்னொருத்தி (ஐங். 373) பாலைத் திணையின் 39, 40 ஆகிய பத்துக்கள் கற்று இன்புறத்தக்கன.

6. பேயனார் :

இவராற்பாடப்பட்டனவாய் நமக்குக் கிடைப்பன 104 செய்யுட்களாம். ஐங்குறு நூற்றிலுள்ள முல்லைத் திணைச் செய்யுட்கள் தவிர இவர் பாடிய ஏனை நான்கும் குறுந்தொகையில் உள. அவற்றுள் முல்லைத்திணைக்குரியன மூன்று. இவர் பற்றி அறியத்தக்க சிறப்பான

Koviloor Digital Library

செய்திகள் எவையும் இல. இவருடைய புலமையை வியந்து பாராட்டும் அறிஞர் வ. சுப. மாணிக்கனாரின் கருத்துக்களைத் தமிழ்க்காதலுள் கண்டுகொள்க. தலைவன் தன் மனைவியுடனும் மகனுடனும் மகிழ்ந்து வாழும் வாழ்வின் சிறப்பினைச் செவிலி கூற்றுப்பத்தில் காண்க. தலைவன் கார்காலத்தில் வினைமேற் செல்வது என்பது இவர் செய்யுட்களிற் காணும் புதுமைகளுள் ஒன்று. தன் காதலியின் உருவவெளிப்பாடு கண்டு தலைவன் பேசுவதாக ஒரு செய்யுளை இயற்றியுள்ளார். (446) தலைவியைக் காண உடனே புறப்படாத தலைவனைப் பார்த்து, 'நினக்கு யாம் பாணரு மல்லேம் எமக்கு நீயும் குரிசிலை அல்லை' எனக்கூறி விடை பெறும் பாணனை இவர் அறிமுகம் செய்கிறார். (ஐங். 480) முல்லையுட்பாலை விரவுவதாக ஒரு பத்தினை அமைக்கின்றார். (44 புறவணிப்பத்து)

7. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் :

இவர் ஐங்குறுநூற்றைத் தொகுத்தவராக அறியப்படுபவர். மலைநாட்டகத்துள்ள கூடலூர் இவர் இருப்பிடமாகும். இவர் இயற்றிய புறம் 229ஆம் செய்யுள் இத்தொகையைத் தொகுப்பித்த சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறந்தபொழுது இரங்கிப் பாடியதாகும். இதன்கண் அமைந்த வானியற் செய்திகள் இவருடைய பேரறிவினைக் காட்டப் போதுமானவை. வானியல் தொடர்பான கலைச்சொற்கள் பலவும் இச்செய்யுளில் இடம்பெறக் காண்போம். இச்செய்யுளும், இதற்கு வரையப்பட்ட பழைய உரையும் ஐயர் எழுதிய குறிப்புரையும் பண்டைத் தமிழரின் வானியல் அறிவு மேம்பாட்டுக்குச் சிறந்த சான்றுகளாம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்து

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற் கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே.

ஆசிரியர் : பாரதம் பாடிய
பெருந்தேவனார்

துறை : வாழ்த்து

துறை விளக்கம் : அஃதாவது, பாரதம் பாடிய பெருந்தேவனார், அருந்தமிழ்ச் சான்றோர் ஐவரால் ஆக்கப்பெற்ற இவ்விழுமிய நூல் என்றும் நின்று நிலவுதற் பொருட்டும், இந்நூலை ஓதியுணர்ந்தார், வாழ்வின் விழுமியங்கள் அனைத்தையும் பெற்று உய்தற் பொருட்டும் மாதொரு பாகனாம் சிவபெருமானை வாழ்த்திப் பாடிய செய்யுள் என்பதாம்.

இவ்வாழ்த்துப் புறப்பொருள் வகையுள் ஒன்றான பாடாண்டிணையைச் சார்ந்ததாகும். பாடாண்டிணையுள் அடங்குவன இன்னவை என்பது,

பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே
(தொல். பொருள். புறத். 207)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் விளங்கும். இதன் கண்ணுள்ள நாலிரண்டு வகைகளை விளக்கும் இளம்பூரணர், 'நாலிரண்டு வகையாவன : கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல் வகை, மங்கல வகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படை வகை, பரிசிற்றுறைவகை, கைக்கிளை வகை, வசை வகை என்பன' என்றார். அவற்றுள் இது கடவுள் வாழ்த்து வகை சார்ந்ததாம்.

Koviloor Digital Library

இவ்வைங்குறுநூற்றின்கண் அமைந்த செய்யுட்கள் யாவும் சுருங்கிய அடிகளால் அமைந்த ஆசிரியப் பாவினால் இயன்றனவாகும். சங்க நூல்கள் யாவற்றினுள்ளும், மூன்றடியால் இயன்ற அகவலைத் தன்னகத்தே கொண்டது இந்நூலொன்றே யாதலின், இதற்கு மூன்றடியால் அமைந்த அகவலில் வாழ்த்துச் செய்யுள் இயற்றியுள்ளார். ஏனைத் தொகை நூல்கட்கும் இவ்வாறே அவ்வந்நூலின் யாப்பும் அடிவரையறையும் நோக்கி இவர் வாழ்த்துப் பாடியுள்ளதனைக் கண்டு கொள்க.

ஈழ நாட்டுச் சான்றோர் ஒருவர் இந்நூற்குச் சுருக்கமானதோர் உரை வகுத்துள்ளார். அப்புலமைச் சான்றோர் இவ்வாழ்த்தினை ஏற்புடைக் கடவுள் வாழ்த்து என்று குறித்துள்ளார்.

மனமொத்த ஆணும் பெண்ணும் ஒருயிரும் ஈருடலுமாய் வாழ்வது பற்றியது அகத்திணை இலக்கியமாதலின் மாதொரு கூறுடைய சிவபெருமானைப் பற்றிய வாழ்த்தினை அமைத்தார் பெருந்தேவனார் என்று கூறும் இச்சான்றோர், இதன் பொருத்தத்தினைக் கல்லாடத்தில் வரும் ஒரு விழுமிய பகுதியால் விளக்கியுள்ளார். அப்பகுதி வருமாறு :

.... தழைத்தெழு
தாளியும் கொன்றையும் தழைத்தலின் முல்லையும்
பாந்தளும் தரக்கும் பயிறலின் குறிஞ்சியும்
முடைத்தலை எரிபொரி யுடைமையின் பாலையும்
மாமையும் சலமும் மேவலின் மருதமும்
கடுவும் சங்கமும் ஒளிர்தலின் நெய்தலும்
ஆகத் தனது பேரருள் மேனியில் ....
திணையைந் தமைத்த இணையிலி நாயகன்.

உரை : நீல நிறமான திருமேனியையும், தூய அணிகலன்களையும் உடைய உமையம்மையைத் தன் உடம்பின் ஒரு கூறாகக் கொண்ட சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடியின் நிழற்கீழ் மூவகை உலகங்களும் முறையே தோன்றி நிலைபெற்றன. (யாம் அப்பரம்பொருளைப் பணிந்து, ஏத்தி உய்வோமாக.)

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'நீல மேனி வாலிழை' என்று உமையம்மையைக் குறித்தது அன்னையின் நிறம் ஆழ்ந்த கருமை என்பது பற்றியாம். அன்னைக்கு நீலி, கறுப்பி என்னும் பெயர்களும் உண்டு. காளி என்பதும் அப்பொருளுடைய திருப்பெயரே. வால், தூய்மையும் வெண்மையும் ஆம். எனவே வாலிழை முத்துமாலை எனலாம். பாகம் என்றாரேனும் இடப்பாகம் அல்லது வாமபாகம் எனக் கொள்க. ஒருவன் என்றது, தனக்கு நிகர் தானே ஆன பரம்பொருள் என்பது பற்றியாம். இறைவன் திருவடி அனைத்துயிரும் இன்புறுதற்கு இடனாகலின் 'நிழல்' என்றார். 'ஈசன் எந்தை இணையடி நீழலே' என்றார் அப்பர் பெருமானும்.

மூவகை உலகங்களாவன விண்ணும் மண்ணும் பாதலமும் என்பர். இனி, மேல், நடு, கீழ் என்று வழங்குதலும் உண்டு. உலகங்கள் எண்ணில் கோடியென்பர். ஆயினும் அவை இம்மூன்றனுள் அடங்கும். இனி, அவன், அவள், அது என மூவகையாற் சுட்டியுணரப்படும் உலகங்களே மூவகை உலகு என்பாரும் உளர்.

'மூவகை உலகும் முகிழ்த்தன முறையே' என்றதன் பொருளாவது, பரம்பொருளிலிருந்து வானும், அதனினின்றும் காற்றும், அதனினின்றும் தீயும், அதனினின்றும் நீரும், அதனினின்றும் மண்ணும் என முறைப்படத் தோன்றின என்பது. 'நீராகி நிலம்படைத்தனை, நெருப்பாகி நீர் பயந்தனை, ஊரொழுவிற் காற்றொழுவினை, ஒளிகாட்டு வெளிகாட்டினை' என்பது பேராசிரியர் வகுத்த தொல்காப்பிய உரையிற் கண்டது. (தொல். பொருள். பேரா. மேற்கோள்) மாதவச் சிவஞான முனிவர்க்கு இக்கருத்து உடன்பாடன்று. அவர் கருத்தைச் சிவஞானமாபாடியத்திற் கண்டு கொள்க.

மூவகை உலகையும் முறையே தோற்றுவித்துக் காத்துத் துடைத்து விளையாடும் இறைவனின் இருதாள்களை இடையறாது பணிந்து ஏத்தி உய்வது மாந்தர் கடன் என்பது இதனால் வற்புறுத்தப்பட்டது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : வால் இழை - தூய்மையான அணிகள்; பாகம் - இடப்பாகம்; ஒருவன் - ஒப்பற்ற பரம்பொருள்; முகிழ்த்தன - தோன்றின.

இலக்கணக்குறிப்பு : வாலிழை - வாலிழைகளை அணிந்த உமையம்மையைக் குறித்தலின் அன்மொழித்தொகை; நிழல் - உவமையாகுபெயர்.

Koviloor Digital Library

முதலாவது
மருதம்

(ஓரம்போகியார்)

1. வேட்கைப் பத்து

வேட்கையாவது விழைவு. அன்பின் ஐந்திணைக்கு உரிய களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கங்களினும் தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவியும் அவள் தோழிமாரும் யாதனை விரும்பியிருந்தனர் என்பதனைத் தலைமகன்பால் தோழி கூறுவதாக அமையும் பத்துச் செய்யுட்களின் தொகுதி வேட்கைப் பத்தாயிற்று.

1

'வாழி ஆதன், வாழி அவினி!
நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க!' என வேட்டேமே.

கூற்று : புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய், மீண்டு தலைவியோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி, 'யான் அவ்வாறு ஒழுக, நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : பரத்தையர் கூட்டுறவில் நெடுநாள் வாழ்ந்த தலைமகன் தன் பிழையுணர்ந்து தன் மனைவியை மீண்டும் கூடினான். அப்பொழுது தோழியை நோக்கி, 'யான் உங்களைப் பிரிந்து வாழும் நாட்களில் நீங்கள் யாது எண்ணியிருந்தீர்கள்?' என வினவினான். அதற்கு விடையாகத் தோழி சொல்லியது இது.

இனிவரும் நான்கு செய்யுட்கட்கும் இதுவே கூற்றாகக் கொள்க (1 – 5).

உரை : தலைவ! 'எம் மன்னனாகிய ஆதன் அவினி நெடிது வாழ்க! எம் நாட்டு வயல்களில் நெல்வளம் சிறக்குமாக! நாட்டில் பொன் வளம் பெருகுமாக!' எனவே விரும்பி வாழ்ந்தாள் எம் தலைவி. அவள் தோழியராகிய யாமோ, அரும்புகள் நிரம்பிய புன்னை மரங்களும், முட்டைகளை மிகுதியாகக் கொண்ட சிறுமீன்களும் நிறைந்த ஊரின் தலைவன் வாழ்க! அவனுடன் அவன் பாணனும் வாழ்க!' என விரும்பி வாழ்ந்தோம்.

உரை விளக்கம் : மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகமாதலின், நாடுகாவற்பொருட்டு மன்னனை வாழ்த்தினாள் தலைவி. 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' ஆதலின் நெல்வளம் பெருக வேண்டினாள். ஈதல் இசைபட வாழ்தல் இரண்டும் இல்லறத்தார்க்குச் சிறப்புத்தருவன ஆதலின் அவை பொருட்டுப் பொன் பெருக்கம் வேண்டினாள்.

தலைவனின் தீயொழுக்கத்தால் அவனுக்கும், அத்தீயொழுக்கத்திற்குத் துணை புரிந்தமையால் அவன் பாணனுக்கும் தீங்கு வாராமைப் பொருட்டு 'யாணர் ஊரன் வாழ்க!' என்றும் 'பாணனும் வாழ்க!' என்றும் ஆயத்தார் வேண்டினர்.

புலவி கொள்வதற்குரிய காரணங்கள் பலவுள்ள பொழுதும், அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல், இல்லறவாழ்விற்கு வேண்டுவன அன்றி வேறு யாதும் செய்யாது வாழ்ந்த சிறப்பு நோக்கித் தோழி தலைவியை 'யாய்' எனச் சிறப்பித்தாள் என்க.

Koviloor Digital Library

தன் குழந்தைகள் வெறுக்கத் தக்கன செய்யினும் பொறுத்து அன்பு செய்யும் பண்பு தாய்மைப் பண்பாதலின்; தலைவன் பிழைபொறுத்த தலைவியை அன்னை எனச் சிறப்பித்தாள் தோழி. 'பாணனும்' என்று உம்மை கொடுத்துச் சொன்னது, அவன் தன்னளவில் வாழ்த்துப்பெறத் தகுதியில்லாதானெனினும், தலைவனோடு நட்புடையானாதலின் அவனும் வாழ்த்துக்கு உரியன் என்பதுபற்றியாம்.

ஆதன் என்றும் அவினி என்றும் தனித்தனியே கூறி வாழ்த்தினாலும், இரண்டு பெயர்களும் ஒருவனையே குறித்த இருபெயர்கள் என உட்கொண்டு, 'ஆதனவினி யென்பான் சேரமான்களிற் பாட்டுடைத் தலைமகன்' என்றார் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர். பழைய உரையாசிரியர்க்கும் இதுவே கருத்தாகத் தெரிகின்றது.

ஆதன் என்பது குடிப்பெயர் என்றும் அவினி என்பது இயற்பெயர் என்றும் கருதுவர். நெடுஞ்சேரலாதன், பெருஞ்சேரலாதன், செல்வக்கடுங்கோ வாழியாதன் எனப் பல சேரமான்கள் அறியப்பெறுகின்றனர்.

பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார், இங்கு வாழ்த்துப் பெற்றவன் கபிலரால் பதிற்றுப்பத்திலும் புறநானூற்றிலும் பாடப்பட்ட செல்வக்கடுங்கோவாழியாதனே எனக் கருதுகின்றார். ஆதனவினி, ஆதன் எழினி, ஆதன் அழிசி எனச் சங்கச் செய்யுட்களில் பேசப்படுவார் இவன் குடித்தோன்றல்கள் எனக் கருதப்படுவர்.

அவினியென்பான் ஓரம்போகியார் காலத்தில் ஆண்டவன் என்றும், அவனை வாழ்த்த விழைந்த புலவர் அவன் குடி முதல்வனான செல்வக்கடுங்கோ வாழியாதனையும் வாழ்த்து முகமாகத் தோழி வாயிலாக வாழ்த்தினார் என்றும் கருதுவார் இவர். அரச வாழ்த்தே முதற்பத்தாக அமைந்திருப்பது இந்நூலுக்குச் சிறப்பளிக்கின்றது.

Koviloor Digital Library

இனி, இச்செய்யுளில் நெல் என்றது பிற கூலங்களையும் உளப்படுத்தியது என்று கொள்க. பொன் என்றது கூலங்களல்லாத பிற செல்வ வகைகளாகும். அவை முத்து, பவழம், நீலம், இரத்தினம் முதலானவை. 'நனைய காஞ்சி' என்றும் 'சினைய சிறுமீன்' என்றும் கூறியது, வளம் நிறைந்த ஊர் தலைவனுடையது என்ற கருத்திலாம். நனையும் சினையும் வளமைச் சின்னங்களாம். இடையறாத வருவாயுடையான் தலைவனாதலின் 'யாணர் ஊரன்' என்றாள். அதுவே அவன் பரத்தமைப் பண்புக்கும், அதற்குதவும் பாணர் முதலான வாயில்கட்குப் பொருள் வழங்கும் அவன் கொடைமைக்கும் துணையாயிற்று என்ற குறிப்புண்மையும் நோக்குக.

அருஞ்சொற்பொருள் : வேட்கை – விருப்பம்; நனை – அரும்புகள்; சினை – முட்டைகள்; சிறுமீன் – மீன்வகையுள் ஒன்று; யாணர் – புதிய வருவாய்.

இலக்கணக்குறிப்பு : பொலிக, சிறக்க – வியங்கோள் வினைமுற்றுக்கள்; நனைய, சினைய – பெயரெச்சங்கள்; வேட்டோள் – வேட்டாள் என்பது வேட்டோள் எனத் திரிந்தது; யாமே – ஏகாரம் பிரிநிலை; யாயே – தேற்றேகாரம்; பாணனும் – உம்மை இறந்தது தழுவியது. இழிவுச் சிறப்புமாம்.

மேற்கோள் : தலைவனைக் காஞ்சியூரன் என்றல் :

– கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை நாணி

– குறுந். 10.

உள்ளுறை : நறுமணம் கமழும் காஞ்சி மலர்களும், புலால் நாற்றம் வீசும் மீன்களும் ஒக்க விளையும் ஊரன் எனத் தலைவனைச் சுட்டியது, அவன் கற்புக்கடம் பூண்ட குலமகளிரையும், இழிந்த பரத்தையரையும் ஒருநிகராகக் கொண்டு வாழ்கிறான் என்பதனை உள்ளுறுத்ததாகும்.

Koviloor Digital Library

Alagappa university
Central Library
63737

2

'வாழி ஆதன், வாழி அவினி!
விளைக வயலே! வருக இரவலர்!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன் கேண்மை வழிவழிச்
சிறக்க!' என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி நெடிது வாழ்க! வயல்கள் விளைவால் சிறக்க! இரவலர் எம் உதவி நாடி வருக!' எனவே விரும்பி வாழ்ந்தாள் எம் தலைவி. யாமோ, 'பல இதழ்கள் பொருந்திய நீலத்தோடு நெய்தலும் ஒப்ப மலரும் குளிர்ந்த நீர்த்துறைகளைக் கொண்ட ஊரன் தலைவியொடு கொண்ட காதலுறவு பிறவிதொறும் தொடர்வதாக!' என விரும்பி வாழ்ந்தோம்.

உரை விளக்கம் : 'கேள் கேடூன்றவும் கிளைஞர் ஆரவும்' தம்முடைமையைப் பகுத்துக் கொடுத்து வாழ்வது இல்லறத்தார் கடன். இதற்கு வேண்டும் பொருட்செல்வப் பெருக்கம் உழவினையடிப்படையாகக் கொண்டதாதலின் வயல் விளைவு வேண்டினாள். ஈதல் இயையாத பொழுது சாதலும் இனிமையுடையது ஆதலின் அது நிகழ்தற்குரிய இரவலர் வருகை விரும்பப்பட்டது. இப்பொது நலனன்றித் தன்னலம் யாதும் விரும்பாதிருந்தாள் தலைவியென்றாள்.

தலைவனின் பரத்தைமைப் பண்பால் அவனுக்குத் தலைவிபால் இருந்த கேண்மை நாளும் குறைவது கண்டனர் ஆதலின், அது மீண்டும் பெருகவேண்டும் என வேண்டினர். இப்பிறவியிலன்றி, இனிவரும் பிறவிகளிலும் அவ்வுறவு நீடிக்க 'ஊரன் கேண்மை வழிவழிச் சிறக்க' என்று வாழ்த்தினர்.

Koviloor Digital Library

பல்லிதழ் நீலம் என்றது, இதழ்களின் அடர்த்தி குறித்தது. நெய்தலும் நீலமும் நிகர்த்தலாவது, இரண்டும் நீல நிறமுடையனவாதலாம்.

அருஞ்சொற்பொருள் : நீலம் - குவளைமலர்; நெய்தல் - நெய்தல் நிலத்திற்குரிய சிறப்பான நீர்ப்பூ; கேண்மை - உறவு; வழிவழி - நாள்தொறும், பிறவிதோறும்.

மேற்கோள் : இரவலர் வருகை விரும்புதல் :
புரப்போர் புன் கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே
- புறம். 72.

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மாஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று
குறள் - 1058

கணவன் மனைவி உறவு பிறவித் தொடர்பு :
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே
- குறுந். 49.

உள்ளுறை : நறுமணம் மிக்க பல்லிதழ்க் குவளை மலரோடு புல்லிய நெய்தற்பூ ஒப்பாக விளங்கும் துறை என்றது நற்பண்பு மிக்க தலைவியின் மாண்புணராது வறிய காம இன்பம் ஒன்றனையே கருதி இழிந்த பரத்தையைத் தலைவன் சமமாக மதித்தொழுகுதலைச் சுட்டியதாம்.

சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊரனென்றது குலமகளிருடனே பொது மகளிர் இகலுமூரன் என்றவாறு என்பது பழையவுரை.

Koviloor Digital Library

3

'வாழி ஆதன், வாழி அவினி!
பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'வித்திய உழவர் நெல்லொடு பெயரும்,
பூக் கஞல் ஊரன் தன் மனை
வாழ்க்கை பொலிக!' என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : *'எம் அரசனாகிய ஆதன் அவினி வாழ்க! ஆப்பயனாகிய பால்வளம் மிகுவதாக! எருதுகள் எண்ணிக்கையில் மிகுவனவாக!' என விழைவதன்றி வேறொன்றும் விழைந்திலள் எம் அன்னையாம் தலைவி. யாமோ, 'பின் விளைவை விரும்பி வயலுக்கு விதைகொண்டு சென்ற உழவர் முன்னர் விளைந்த நெல் மணிகளை மனைக்குக் கொண்டு மீளுதற்கு இடனான பூக்கள் மலிந்த ஊரன் தன் இல்லத்திலேயே தங்கி, இல்லறத்தில் பொலிவானாக!' என விரும்பி வாழ்ந்தோம்.*

உரை விளக்கம் : உழவின் ஆக்கத்திற்கு உழுபகடுகளும், மிகுந்த வருவாய்க்கு ஆக்களும் இன்றியமையாதன. வயல் வளமும், ஆன் வளமும் ஒருசேர வேண்டிப் பெண்கள் நோன்பு இயற்றியமையை 'ஓங்கி உலகளந்த' என்னும் திருப்பாவைப் பாசுரத்தால் அறிக. பகடுகளின் சிறப்பு நோக்கிப் பண்டைச் சான்றோர் வள்ளல்களின் பகடுகளையும் வாழ்த்தினர். 'பால் பல ஊறுக' என்றதில் 'பல' என்பது மிகுதிப்பொருள் தந்தது. பகடு சிறத்தலாவது எண்ணிக்கையில் பல்குதல். வித்திய உழவர் நெல்லொடு பெயர்தலாவது, வயலில் முன்பு விதை தெளித்த உழவர் அது நன்கு விளைந்த பின் பன்மடங்கு விளைவொடு திரும்புதலாகும். ஒன்று நூறாக விளைய விரும்பினர் என்க. அன்றியும், வித்திய (சென்ற) உழவர், மீள்கையில் முன்னைப் போகத்து விளைவினைக் கொண்டு செல்வதைக் குறித்ததுமாம்.

Koviloor Digital Library

நடுதலும் அறுவடை செய்தலும் அடுத்தடுத்த கழனிகளில் நிகழ்தலை இது சுட்டிற்றென்க. தலைவன் மனை வாழ்க்கையிற் பொலிதலாவது, புறப்பெண்டிர் உறவை விடுத்துத் தன் மனைவியொடு இல்லறவாழ்வின் பயனை நுகர்ந்து, மகப்பெற்றுப் புகழ் பெறுதலாம்.

அருஞ்சொற்பொருள் : பல ஊறுக - மிகுதியாக ஊறுக; வித்திய - விதைத்த; பெயர்தல் - மீளல்; கஞலுதல் - நெருங்குதல்.

மேற்கோள் : நெல் வளமும் பகடு வளமும் பெற வாழ்த்தல் :
'வேலி ஆயிரம் விளைக நின் வயலே'
- புறம். 391.

பகடுதரு பெருவளம் வாழ்த்திப் பெற்ற
திருந்தா மூரி
- புறம். 391.

நெடுங்கடை நின்று பகடு பல வாழ்த்தி
- புறம். 383.

உள்ளுறை : எதிர்கால விளைவிற்காக இப்போது விதைகளை விதைத்த உழவர் முன்னர் விளைந்த நெல்லை மனைக்குக் கொண்டு சென்றனர் என்பதன் உட்பொருளாவது பின் வரப்போகும் புதிய பரத்தையரை நுகர்வதற்குரிய வருவாய் செய்து அக்காலத்து அவனோடு உறவாடும் பரத்தையரோடு காமம் நுகர்வான் என்பது.

உ 4

'வாழி ஆதன், வாழி அவினி!
பகைவர் புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க என வேட்டேமே.

வளர்தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 15559

Koviloor Digital Library

கூற்று : மேலது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! அவன் பகைவர் அவனுக்குத் தோற்றுப் புல்லுணவு அருந்துவாராக! எம் நாட்டில் மறைவல்ல அந்தணர் தம் ஓத்தினை ஓதுக!' எனவே விரும்பினாள் எம் தலைவி. யாமோ, பூத்த கரும்பையும் காய்த்த நெல்லையும் மிகுதியாய்க் கொண்ட வயல்கள் நிறைந்த ஊரன் மார்பு ஊர்ப்பொது நிலம்போல் பல்பெண்டிர் நுகர்ச்சிக்கு உரியதாகாது ஒழிக' என விரும்பி வாழ்ந்தோம்.

உரை விளக்கம் : பகைவர் தோல்வி தம் மன்னனுக்கு ஆக்கமாக, மன்னன் ஆக்கம் மக்களின் ஆக்கமாதலின் மன்னன் வெல்க என்று வாழ்த்தினாள் தலைவி. பகைவர் தோற்று, தம் தோல்வியை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாகப் புல்லை மேய்வது போல் குப்புற வீழ்வது மரபாதலின் புல்லார்க என்றாள். அன்றியும், புல்லையே உணவாகக் கொள்ளுமாறு வென்றோர் பகைவரை வற்புறுத்தி இழித்தனர் எனினும் ஆம்.

பார்ப்பார் ஓதுவது நாட்டுக்கு மழையும் வளமும் நல்கும் என்பது பண்டையோர் நம்பிக்கையாம். இது மன்னன் செங்கோலனாய் இல்லாவழிக் கூடாதாம். அதுபற்றியே 'ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூன் மறப்பர், காவலன் காவான் எனின்' என்றார் நாயனாரும். அறத்திற்கும் அந்தணர் நூற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல் என்றதும் அதுபற்றியே. இன்னும், கற்புடைய மாதர் வாழும் நாடு மழைவளம் சுரக்க இன்ப வாழ்வு எய்தும் என்பதனை, 'வானம் பொய்யாது, வளம் பிழைப்பு அறியாது, நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு' என இளங்கோவடிகளும் கூறுவார். மன்னன் செங்கோலனாகாதவழி, பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது என்பதும் பழந்தமிழர் கோட்பாடாகும். இக்கருத்தெல்லாம் உட்படுத்தியே 'பார்ப்பார் ஓதுக' என்று வேண்டினாள். 'மார்பு பழனமாகற்க' என்றாள், ஊர்ப்பொது நிலமான பழனம் பலர்க்கும் பொதுவில் நுகர்வதற்குரியதாவதுபோல் தலைவன் மார்பு தலைவியொருத்திக்கே

Koviloor Digital Library

உரிமையாவதன்றிப் பொதுமகளிர்க்கு உரிமை ஆகக் கூடாது என்னும் விருப்பத்தால்.

நெல்லும் கரும்பும் நிலத்திற்கு அணியாதலின், தலைவன் ஊர் அத்தகு வளமுடையது என்பாளாய், 'பூத்த கரும்பின் காய்த்த நெல்லின் கழனியூரன்' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : பழனம் – ஊர்ப்பொது நிலம்.

இலக்கணக்குறிப்பு : வாழி, ஆர்க, ஓதுக, ஆகற்க – வியங்கோள் வினைமுற்றுக்கள்.

உள்ளுறை : பூத்துப் பயன்படாத கரும்பையும் காய்த்துப் பயன் தரும் நெல்லையும் உடைய ஊரன் என்றது, குடிக்கு விளக்காகும் குதலைச் செவ்வாயுடைய மக்களையீன்றுதரும் கற்புடைய மாதரையும் அச்சிறப்பில்லாத விலைநலப் பெண்டிரையும் ஒப்பக் கருதி வாழ்கிறான் தலைவன் என்ற பொருளிலாம். பரத்தையர் குலமகளிர்க்கு ஒப்பாகார் என்பது, 'அவரும், பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் பயந்து, நன்றி சான்ற காற்பொடு எம்பாடாதல் அதனினும் அரிதே' (நற். 330.) என்பதால் அறியப்படும்.

5

'வாழி ஆதன், வாழி அவினி!
பசி இல்லாகுக! பிணி சேண் நீங்குக!'
என வேட்டோளே, யாயே : யாமே,
முதலைப் போத்து முழுமீன் ஆரும்
தண் துறை ஊரன் தேர் எம்
முன் கடை நிற்க' என வேட்டேமே.

கூற்று : மேலது.

Koviloor Digital Library

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! நாட்டில் பசியாகிய பிணி இல்லாது நீங்குக! ஏனை நோய்களும் சேய்மைக் கண்ணே நீங்குக!' எனவே விரும்பி வாழ்ந்தாள் எம் தலைவி. யாமோ, ஆண் முதலை, தன்னோடு உடன் வாழும் முதிர்ந்த பெரிய மீன்களைத் தேர்ந்து உண்ணும் தண்ணிய நீர் நிலைகளைக் கொண்ட ஊரன்தேர், பிற பெண்டிர் மனை முற்றத்தே நிற்றலை ஒழித்து எம் முற்றத்தே நிற்பதாக!' என விரும்பி வாழ்ந்தோம்.

உறுபசியும் ஓவாப்பிணியும் சேராது இயல்வது நல்ல நாடு என்றார் நாயனார். பசியும் பிணியும் நலியும் நாட்டில் இல்லறம் சிறவாதாதலின் 'பசியும் பிணியும் சேண் நீங்குக' என வாழ்த்தினாள்.

முதலைப் போத்தும் முழு மீனும் சுட்டப்பட்டது நிலத்தின் நீர் வளத்தைக் குறிப்பால் சுட்டியதாகும். ஆழமான நீரிலன்றி முதலைகள் வாழாவாதல் தெளிக. தலைவன் தேர் பலகாலும் பரத்தையர் மனைமுற்றத்தே நின்றதைக் கண்டு கண்டு வருந்தியோராதலின், இனியேனும் அவன் தேர் தம் முற்றத்திடத்தேயே நிற்றலை விரும்பினராய் 'எம் முன்கடை நிற்க' என வேண்டினர் என்க.

அருஞ்சொற்பொருள் : முதலைப்போத்து – ஆண் முதலை; முழுமீன் – முழு வளர்ச்சியடைந்த பெருமீன்; முன்கடை – வீட்டு முற்றம்.

மேற்கோள் : பசியும் பிணியும் நீங்க வாழ்த்தல் :

'பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க'

– மணிமேகலை. 1 : 10 – 11.

உள்ளுறை : முதலைப் போத்து, தன்னோடு ஒரே நீர்நிலையில் வாழும் முழு வளர்ச்சியுற்ற மீனை உணவாகக் கொள்ளும் ஊரன் என்றது, தலைவன் தன்னோடு வாழ்வாரின் பழைய நட்பை அறச் சிதைத்து அவர்களின் உயிரைக் கவரும் கொடுமையாளன் என்பதை உள்ளுறுத்தியதாகும்.

Koviloor Digital Library

மேலும், தலைமகன் தான் வாழும் ஊரில் தன் மிகுகாம வேட்கையைத் தணித்துக் கொள்ளத் தகுதியுடைய பரத்தையரைத் தேர்ந்து அவர்களை நுகர்வான் என்ற கருத்தை உள்ளடக்கியதுமாம்.

6

'வாழி ஆதன், வாழி அவினி!
வேந்து பகை தணிக! யாண்டு பல நந்துக!'
என வேட்டோளே யாயே : யாமே,
'மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண் துறை ஊரன் வரைக,
எந்தையும் கொடுக்க!' என வேட்டேமே.

கூற்று : களவினில் பல நாள் ஒழுகி வந்து, வரைந்து கொண்ட தலைமகன், தோழியோடு சொல்லாடி, 'யான் வரையாது ஒழுகுகின்ற நாள் நீயிர் இங்கு இழைத்திருந்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் களவினை நெடுங்காலம் நீட்டித்துப் பின் தலைவியை மணம் புரிந்து கொண்டான். மணத்தின் பின் ஒரு நாள் அவன் தோழியோடு உரையாடும் பொழுது, 'யான் பன்னாள் களவினை நீட்டித்த காலை, நீயிர் யாது செய்து வாழ்ந்தீர்?' என வினவிய போது அவள் சொல்லியது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! அவன் பகை தணிவானாக! அவன் வாழும் ஆண்டுகள் நீளுமாக!' எனவே வேண்டினாள் எம் தலைவி. யாமோ, விரிந்த பொய்கையிடத்தே முகிழ்ந்த தாமரைகளையுடைய தண்ணிய துறைகளைக் கொண்ட ஊரன் இவளை விரைவில் வரைவானாக! அவன் மகள் வேண்டி வரும்போது எம் தந்தையும் மனம் மகிழ்ந்து கொடை நேர்வானாக! என விரும்பி வாழ்ந்தோம்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தலைவி, தலைவனை முதல் முறை கண்டபோதே கற்புக் கடம்பூண்டனள் ஆதலின், வேறொன்றும் விரும்பாது, மன்னனின் வெற்றியையும் நீண்ட வாணாளையுமே விரும்பினாளாம். 'வேந்து பகை தணிக' என்றதன் பயன், அவன் பகைவரெல்லாம் நண்பராகியொழுகவே, நாட்டில் அமைதி நிலவும் என்பதாகும். அமைதியற்ற நாட்டில் இல்லறம் சிறவாதென்பது தெளிவாமாதலின் இங்ஙனம் வேண்டினாள். நாடு நலம்பெற மன்னன் வாழ்நாள் நீட்டித்தல் இன்றியமையாதது ஆதலால், 'யாண்டு பல நந்துக' என்றாள்.

தலைவியின் வாழ்வே தம் வாழ்வும் ஆதலின் தோழியும் ஆயத்தார் பிறரும் தலைவியின் காதல் வாழ்வு சிறக்கவும், களவு கற்பாக மாறி அவள் மகவீன்று மனையறத்தில் பொலியவும் விரும்பி 'தண்டுறையூரன் வரைக' என வேண்டினர். அவன் வரைய விருப்பினன் எனினும் தமர் மறுத்தற்கும் வாய்ப்புண்டாகையால், 'எந்தையும் கொடுக்க' என விரும்பினர்.

இனி, அகன்ற பொய்கைக்கண் தாமரை மலர்ந்தாற்போல, அகன்ற ஊர்க்கண் அலர் எழுந்தமையால், தலைவியது ஆற்றாமை கண்டு 'வரைக' என்றும், இற்செறிப்பும், வேற்றுவரைவும் இடையீடு செய்தமையின் 'எந்தையும் கொடுக்க' என்றும் வேண்டினர் என்றுமாம்.

அருஞ்சொற்பொருள் : நந்துதல் – வளர்தல்; மலர்ந்த – அகன்ற; முகைந்த – மலர்ந்த; வரைக – மணம் முடிக்க.

இலக்கணக்குறிப்பு : எந்தை – எம் தந்தை என்றதன் மரூஉ.

மேற்கோள் : அரசன் வாழ்நாள் நீட்சிக்கு வாழ்த்தல் :

நின்று நிலைஇயர் நின் நாண்மீன் நில்லாது
படாஅச் செலீஇயர் நின் பகைவர் மீனே

– புறம். 24.

Koviloor Digital Library

உள்ளுறை : பொய்கைக்குத் தாமரை மலர்ந்து மணம் பரப்புவது சிறப்பாகும். அதுபோல் தலைவன் தலைவியை விரைவில் மணந்து அவளால் இல்லறமும் பொலிய வேண்டும் என்பது குறிப்பு. 'மனைக்கு விளக்கம் மடவார்' என்பதும் ஈண்டு நினையத்தக்கது.

7

'வாழி ஆதன், வாழி அவினி!
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'
என வேட்டோளே யாயே : யாமே,
உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்
தண் துறை ஊரன் தன்னூர்க்
கொண்டனன் செல்க!' என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! நாட்டில் அறம் செழிக்குமாக! அதற்கு மறுதலையான பாவம் ஒழியுமாக!' எனவே எம் தலைவி விரும்பியிருந்தாள். யாமோ, உளை பொருந்திய பூக்களை மிகுதியாகக் கொண்ட மருத மரத்தில் குருகுகள் தம் இனம் சூழக் குழுமியிருக்கும் தண்ணிய துறையினை உடைய ஊரன் எம் தலைவியைத் தன்னூர்க்குக் கொண்டு சென்று மணந்து வாழ்வானாக!' என விரும்பி வாழ்ந்தோம்.

உரை விளக்கம் : மாந்தர் அடையத்தக்க பேறுகளுள் அறமே முதன்மையானது. அவ்வறம் போற்றவே அரசு தோன்றிற்று. நல்லன தழைக்க அல்லன கடிவதே அரசின் கடமையும் ஆயிற்று. இதனாலேயே கொடிது கடிந்து கோல் திருத்தி நாடாளச் சான்றோர் வற்புறுத்தினர். அரசனை வாழ்த்திய தலைவி அவனால் நிலைநிறுத்தப்படும் அறம் தழைக்குமாறும் அவ்வறத்திற்கு மாறான பாவம் நீங்குமாறும் வாழ்த்தினாள். அறவினை ஒருபால் பெருக, மறவினை இன்னொருபால் ஓங்குமாயின் பயனின்றாகலின்

Koviloor Digital Library

'அல்லது கெடுக' என்றும் உடன் வாழ்த்தினாள். 'அல்லவை தேய அறம் பெருகும்' என்றார் வள்ளுவரும். அறம் சுருங்கி, மறம் பெருகிய சமூகத்தில் இல்லறநெறி சிறவாதாதலின், தலைவி, தன்னைப் பற்றி எண்ணாளாய், உலக நன்மை பற்றி எண்ணினாள்.

களவு வெளிப்படின் அலர் தோன்றும் என்றும், நொதுமலர் மகட்பேசி வரக்கூடுமென்றும் ஆயத்தார் அஞ்சினர் ஆதலின் 'கொண்டனன் செல்க' என விழைந்தனர். தலைவியின் கற்பைக் காப்பாற்ற இதனினும் வேறு வழியில்லையெனத் துணிந்தபோது தோழி உடன் போக்கினுக்கு உதவுவது அறநெறி யாதலின் அங்ஙனம் வேண்டினர் என்க.

அருஞ்சொற்பொருள் : நனி சிறக்க – நன்கு வளர்க; அல்லது – அறம் அல்லாதது, அஃதாவது மறம்; உளை – பூவின் உள்ளே உள்ள மயிர் போன்ற உறுப்பு; மருது – மருதமரம்; கிளை – இனம்; குருகு – நாரையினம்.

இலக்கணக்குறிப்பு : கொண்டனன் செல்க – கொண்டு செல்க – முற்றெச்சம்.

மேற்கோள் : அறமே முதன்மையானது :

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
– புறம். 55.

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப் படூஉம் தோற்றம் போல
– புறம். 91.

உள்ளுறை : பூக்கள் நிறைந்த மருத மரம் குருகுகள் தம் இனத்தோடு வாழ இன்றியமையாதனவானாற்போலத் தலைவியின் உயிர் வாழ்க்கைக்குத் தலைவன் இன்றியமையாதவன் என்பது உள்ளுறைப் பொருளாம்.

Koviloor Digital Library

இனி, உளைப்பூ மருத மரத்தின்கண் குருகு தன் கிளையோடிருந்து இன்புறுமாறு போல, தலைவனும் தன் இல்லத்தின்கண் தலைவியோடிருந்து இல்லறம் நிகழ்த்துதல் வேண்டும் என்னும் குறிப்பும் இதன்கண் உண்டு என்பார் உளர்.

8

'வாழி ஆதன், வாழி அவினி!
அரசு முறை செய்க! களவு இல்லாகுக!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'அலங்கு சினை மாஅத்து அணி மயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்பதாக! என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! அரசன் முறை செய்து குடிகளைக் காக்க! நாட்டில் களவு முதலான மறவினைகள் இல்லாமற் போக!' எனவே விரும்பியிருந்தாள் எம் தலைவி. யாமோ, அசையும் கிளைகளை உடைய மாமரத்தில் அழகிய மயில்கள் தங்குவதற்கு இடனான பூக்கள் மலிந்த ஊரன் செய்த சூள்கள் இப்பொழுது மெய்யாகுமாக! என வேண்டினோம்.

உரை விளக்கம் : அரசன் முறை செய்யாத வழி மழைதவறும். மழை தப்பினால் மண்ணுலக வாழ்க்கை இல்லையாம். பெண்டிர்க்குக் கற்பும் சிறவாது. கள்வரும் கொலைஞரும் பிறரும் பெருகுவர். இந்நிலையில் இல்லறம் சிறக்க வழியில்லையாதலின் 'அரசு முறை செய்க, களவு இல்லாகுக' என வாழ்த்தினாள் தலைவி.

தலைவன் நெடுநாள் களவு நீட்டித்தானாகலின், அவன் செய்த சூள் பொய்க்குமோ என அஞ்சினராதலின் 'ஊரன் சூள் வாய்ப்பதாக!' என வாழ்த்தினர். வாய்த்தலாவது உண்மையாதல்.

Koviloor Digital Library

தலைவியை ஊழ்வயத்தால் முதற்கண் சந்தித்த வேளையில், 'நின்னைப் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என நேர் இறை முன்கை பற்றித் தெய்வத்தின் முன் சூள் உரைத்ததனை நினைவு கூர்ந்தனர் ஆயத்தார் என்க.

'பூக்கஞல் ஊரன்' என்றது தலைவனது ஊரின் வளத்தைச் சுட்டியதாகும்.

அருஞ்சொற்பொருள் : அலங்கு சினை – அசைகின்ற கிளை; அணிமயில் – அழகிய மயில்; கஞலுதல் – நெருங்குதல்; சூள் – உறுதிமொழி; வாய்ப்பதாக – மெய்யாகுக.

மேற்கோள் : தலைவன் சூள் உரைத்தல் :

அறம் புணையாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையிற் போற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலின்

– குறிஞ்சி. 208 – 210.

எக்கர் நண்ணிய எம்மூர் முன்றுறை
நேர் இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொடு உற்ற சூளே

– குறுந். 53.

நாட்டில் களவில்லையாதல் :

அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப் பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்

– பெரும். 39 – 41.

உள்ளுறை : அசையும் கிளைகளைக் கொண்ட மாமரத்தில் தங்கும் மயில் அம்மரத்திற்கும் அது நின்ற சோலைக்கும் அணி செய்தாற்போல, தலைவியும் தலைவன் மனைக்கு அணியாக இருந்து

Koviloor Digital Library

சிறப்பிக்க, விரைவில் தலைவன் அவளை வரைந்து எய்தல் வேண்டும் என விரும்பினர் ஆயத்தார்.

9

'வாழி ஆதன், வாழி அவினி!
நன்று பெரிது சிறக்க! தீதில்லாகுக!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'கயல் ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண் துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க! என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! அறப்பயன்கள் பெரிதும் வளர்வனவாக! மறப்பயன்கள் அறவே நீங்குக!' எனவே விரும்பியிருந்தாள் எம் தலைவி. யாமோ, கயல்மீன்களை விரும்பி உண்ட நாரை வைக்கோல் போரில் தங்குதற்கு இடனான தண்ணிய துறைகளை உடைய ஊரன் எம் தலைவியோடு கொண்ட நட்பு ஊரில் அம்பலுக்குக் காரணமாகாது ஒழிக!' என விரும்பி வாழ்ந்தோம்.

உரை விளக்கம் : உலக நன்மையைக் கருதிய தலைவி இன்பத்திற்குக் காரணமான நற்செயல்கள் பெருகவும், துன்பத்திற்குக் காரணமான மறச் செயல்கள் அழியவும் விரும்பி 'நன்று பெரிது சிறக்க தீது இல்லாகுக!' என விரும்பினாள். ஈண்டுத் தீது என்றும் நன்று என்றும் சுட்டப்பட்டன முறையே தீமைக்கும் நன்மைக்கும் காரணமான மறச் செயல்களும் அறச்செயல்களுமாம். தீது இல்லாகுக என்றது, சிறிதும் இல்லையாகுக என்னும் பொருளில் ஆகும்.

Koviloor Digital Library

கயல் மீன், அதை உண்ணும் நாரை, வைக்கோற்போர் ஆகிய மூன்றும் வளமையின் சின்னங்களாகும். 'தண்டுறை ஊரன் கேண்மை அம்பல் ஆகற்க' என்றனர், தலைமக்களிடையேற்பட்ட காதல் உறவு ஊரவர் அறிந்து அலர் தூற்றத் தொடங்கும் முன்பே தலைவியைத் தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் என்ற விழைவினால். அம்பலாவது அலரின் தொடக்க நிலையாம். அது அலராகிப் பின் கௌவையாகும் என்பர் அகப்பொருள் அறிஞர்.

அருஞ்சொற்பொருள் : நன்று – அறத்தின் பயன்; தீது – மறப்பயன்; கயல் – ஒருவகை மீன்; ஆர்தல் – உண்டல்; போர்வில் – வைக்கோற்போர்; சேக்கும் – தங்கும்; கேண்மை – நட்பு; அம்பல் – அலரின் தொடக்க நிலை.

மேற்கோள் : பெண்டிர் அம்பல் மொழிதல் :

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற
– நற். 149.

நாரை போர்வில் தங்குதல் :

– கழனிக்
கயலார் நாரை போர்வில் சேக்கும்
பொன்னணி யானைத் தொன்றுமுதிர் வேளிர்
குப்பை நெல்லின் முத்தூறு
– புறம். 24.

உள்ளுறை : கயல் மீனை விரும்பி உண்ட நாரை வைக்கோற் போரில் தங்கும் என்றது, தலைவியின் பெண்மை நலத்தைப் பிறர் அறியாது மறைவிலே நுகர்ந்த தலைவன், வரைதலைக் கருதாது தன்னில்லத்திலே தங்கினான் என்னும் உள்ளுறைப் பொருள் தந்தது.

Koviloor Digital Library

10

'வாழி ஆதன், வாழி அவினி!
மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க!'
என வேட்டோளே, யாயே : யாமே,
'பூத்த மாஅத்து, புலால் அம் சிறு மீன்
தண் துறை ஊரன் தன்னொடு
கொண்டனன் செல்க என வேட்டேமே.

கூற்று : மேலது.

உரை : 'எம் மன்னனாகிய ஆதன் அவினி வாழ்க! நாட்டில் மழை வளம் சிறக்குமாக! அதன் உதவியால் பல்வகைச் செல்வங்களும் பெருகுமாக!' எனவே விரும்பியிருந்தாள் எம் தலைவி. யாமோ, பூத்துக் குலுங்கும் மாமரங்களையும், புலால் நாற்றம் வீசும் சிறுமீன்கள் நிறைந்த தண்ணிய நீர்த் துறைகளையும் உடைய ஊரன், தலைவியைத் தன்னோடு கொண்டேகி மணந்து இன்புறுவானாக! என விரும்பியிருந்தோம்.

உரை விளக்கம் : தலைவி தலைவனை ஊழ் கூட்ட முதற்கண் கண்டபோதே அவன் தன்னை மணந்து கொண்டதாகவே எண்ணிக் கொண்டாளாதலின், தலைவன் வரையாது களவு நீட்டித்தபோது, உலக நன்மையொன்றையே கருதி, உலக வாழ்வுக்கு இன்றியமையாத மழைவளத்தையும், அதன் விளைவான செல்வச் செழிப்பையும் மட்டுமே விரும்பியிருந்தாள். மழையின்றி மாநிலத்து உயிர்கட்கு நிலைபேறு இல்லை. மாரி வறங்கூரின் தேவர்க்குரிய பூசையும் விழாவும் இல்லை. எனவே வசியும் வளனும் சுரக்க வாழ்த்துவது மரபாயிற்று.

ஊரார் அறியின் அலராகும் என்னும் அச்சத்தாலும், பெற்றோர் இற்செறிப்பரோவென்னும் ஐயத்தாலும் தலைவியின் இன்ப வாழ்வு சிறக்குமாறு தலைவன் தலைவியைத் தன்னூர்க்குக் கொண்டேகி வரைதல் வேண்டினார் ஆயிற்று.

Koviloor Digital Library

பழையவுரை : இவள் நின்னை எதிர்ப்பட்ட அன்றே வரைந்தாய் எனக்கொண்டு இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகினாள்; யாங்கள், 'அவன் வரைந்து கொள்ள நினையானாயின், பூத்த மாவினையும், புலாலஞ் சிறுமீன்களையும் உடைய ஊரனாதலால், அதற்கேற்ப, எம்மூர்க்கண் அறத்தொடு நிலை வகையால் கற்புடைமையும், எதிர்ப்பாட்டினால் அலரும் கிளைப்பவாயினும் உடன்கொண்டு செல்வானாக' என விரும்பினோம்.

அருஞ்சொற்பொருள் : மாரி – மழை; வாய்க்க – பருவத்தே பெய்க; வளம் – செல்வ வளம்; சிறக்க – பெருகுக; புலால் – தீ நாற்றம்; (கவிச்சு).

இலக்கணக்குறிப்பு : கொண்டனன் – கொண்டு ... முற்றெச்சம்; மா அத்து – அத்து ... சாரியை.

மேற்கோள் : மழை வேண்டி வாழ்த்தல் :

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
– மணி. 1 : 70–71.
– சிலப். 5 : 72–73.

உள்ளுறை : மலர்ந்து மணம் கமழும் மாமரத்தையும், புலால் நாறும் சிறு மீனையும் ஒருங்கே தண்துறை உடைத்தானாற் போன்று, இவ்வூரின்கண், நின்னை அகம் மலர்ந்து வரவேற்கும் யாங்களும் உளேம்; அலர் தூற்றும் சிறுபுன் மாக்களும் உளர், ஆதலால், எம்பெருமான் விரைந்து தலைவியை உடன்கொண்டு செல்க என்று விரும்பினோம் என்னும் குறிப்புடையது என்க.

– பெருமழைப்புலவர்.

வேட்கைப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

2. வேழப் பத்து

மருத நிலக் கருப் பொருள்களுள் ஒன்றான வேழம் (நாணல்) பாடல்தொறும் இடம்பெறும் பத்துச் செய்யுட்களையுடையது வேழப்பத்தாயிற்று.

11

மனை நடு வயலை வேழம் சுற்றும்
துறை கேழ் ஊரன் கொடுமை நாணி,
'நல்லன்' என்றும், யாமே;
'அல்லன்' என்னும், என் தடமென் தோளே.

கூற்று : பாணன் முதலாயினார்க்குத் தலைமகன் கொடுமை கூறி வாயில் மறுத்த தலைமகள் கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள் சொல்லியது. 'தலைவன் எவ்வாறு தப்பி ஒழுகினும், அவன் கொடுமை நின்னாற் புலப்படுதல் தகாது' என்று கழறிய பாங்கற்குத் தலைமகள் சொல்லியதூஉம் ஆம்.

கூற்று விளக்கம் : பரத்தையரோடு உறவுகொண்டு வாழ்ந்த தலைமகன் தன் மனையாளை மீண்டும் கூட விரும்பிப் பாணன், விறலி முதலியோரைத் தூதுவராக அனுப்பினான். தலைமகள் அவர்க்கு வாயில் மறுத்தாள். அது தகாது என்று கடிந்து கொண்டான் தலைவனின் நண்பன். அவனுக்கு விடையாகத் தலைவி கூறியது இது. இரண்டாவது கூற்றின் பொருள் வெளிப்படை.

உரை : மனையின்கண் நட்டு வளர்க்கப்பட்ட வயலைக்கொடி அயலேயுள்ள நாணலைச் சுற்றிப்படர்தற்குரிய துறை பொருந்திய

Koviloor Digital Library

ஊரனின் தீயொழுக்கத்தினை நாணி, (அதனைப் பிறர் அறியாதிருக்க எண்ணி) அவன் நல்லவன் என்று யாம் கூறி வருகின்றோம். ஆனால் எம் மெல்லிய பெரிய தோள்களோ அவன் நல்லவன் அல்லன், கொடியன் எனத் தம் மெலிவினால் தூற்றுகின்றன.

உரை விளக்கம் : மனை நடு வயலை என்றாள் அது இளம் பெண்களால் வீட்டருகே நடப்பட்டு அன்புடன் பேணப்படுவது என்பது பற்றி. வேழம் நீர்த்துறையருகிலும், வயலோரத்திலும் வளர்வதாகும். எனவே, இல்லிலே வளரும் வயலை, அதன் எல்லையைத் தாண்டி வெளியே சென்று ஆண்டு வளரும் வேழத்தினைச் சுற்றிப்படர்ந்தது என உணர வேண்டும். இதனால், வீடு, துறையருகே இருந்தமை தெளிவாகும்.

ஊரன் கொடுமையாவது, வதுவை வழிப்பெற்ற மனைவி தனித்து வாட, வாலிழை மகளிர் தம் சேரியில் அயல் மாதர் காம வயத்தனாய்க் கிடந்ததாகும். தன் கணவனின் நெகிழ்ச்சியான ஒழுகலாறு தனக்குத் துயர் செய்யினும், அதனைப் பிறர் அறியத் தானே தூற்றுதல் அவன் பெருமைக்கு இழுக்காமாதலின், அதனை அற மறைத்தொழுகினாள். ஆதலின், 'கொடுமை நாணி நல்லன் என்றும்' என்றாள். தன் கணவன் உயிரே தன்னுயிர் எனக் கொண்டவளாதலின், அவன் பழியையும் தன் பழியாகக் கொண்டாளாய், அவன் குறையை மறைத்து வாழ்ந்தாள் என்க.

இங்ஙனம் தான் அவன் பழியை மறைத்து ஒழுகினாலும், தன் தடமென் தோள்கள், அஃதாவது, அவன் உடனுறைந்த காலத்தில் பருத்தும் மென்மைத் தன்மையுடனும் இருந்த தோள்கள், அவன் பிரிவு தந்த தனிமையால் மெலிந்து, அவன் நல்லன் அல்லன் என ஊரறியத் தூற்றின என்பாள், 'அல்லன் என்னும் என் தடமென் தோளே' என்றாள். இதனால், தன் நோக்கம் நிறைவேறாமைப் பொருட்டு வருந்தினாள் என்றுணர்க. தோள்கள் மெலிந்தமை, தன்னை மீறிய செயலாதலின், 'இவை மெலிந்து உண்மையை வெளிப்படுத்தியமைக்கு யான் என் செய்வேன்?' என இரங்கினாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : வயலை – ஒருவகைக் கொடி; வேழம் – நாணல்; கொடுமை – புறந்தொழுக்கம்; என்றும் – என்று சொல்கின்றோம்; என்னும் – என்று சொல்லுகின்றன; தட – பெரிய.

இலக்கணக்குறிப்பு : துறை கேழ்ஊரன் – துறை கெழு ஊரன், கேழ் என்னும் சொல் திரிந்தது. கொடுமை நாணி – கொடுமைக்கு நாணி; குவ்வுருபு தொக்கது; என்றும் – தன்மைப் பன்மை வினைமுற்று; என்னும் – அஃறிணைப் பன்மை வினைமுற்று; தட – உரிச்சொல்.

மேற்கோள் : வயலை வீட்டில் வளர்வது என்பது :

இல்லெழு வயலை ஈற்றா தின்றென

– நற். 179.

மனைநடு வயலை மரன் இவர் கொழுங்கொடி

– அகம். 176.

வயலைக்குத் தலைவி நீரூற்றிப் பேணல் :

வயலை, நாடொறும் ஆர நீரூட்டிப்
புரப்போர் யார் மற்றுப் பெறுகுவை
அளியை நீயே

– அகம். 383.

தலைவி தலைவன் கொடுமைக்குத் தான் நாணுதல்:

தண்ணந் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும்மே

– குறுந். 9.

தன் எவ்வம் கூரினும் நீசெய்த அருளின்மை
சேரியும் மறைத்தாளென் தோழி

– கலி. 44.

Koviloor Digital Library

உள்ளுறை : வீட்டகத்தே வேரூன்றியிருக்கும் வயலை அயலே படர்ந்து வேழத்தினைச் சுற்றும் துறைகேழூரன் என்றதனால், தலைவன் தன் மனையகத்தே வாழும்பொழுதும் பரத்தையர் உறவையே எண்ணுவான் என்று கூறினாளாயிற்று.

வீட்டகத்து மரத்தின் கொம்பினை விடுத்து அயலேயுள்ள வலியற்ற நாணலிற் படரும் என்றது, குலப்பிறப்பினளான மனைவியிருக்க, இழிகுல மகளிரை நாடிச் சென்றான் தலைவன் என்று பொருள் தருவது நுனித்துணர்க.

12

கரை சேர் வேழம் கரும்பின் பூக்கும்
துறை கேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல, யாமே;
தோற்க தில்ல, என் தட மென் தோளே.

கூற்று : உழையர் நெருங்கிக் கூறிய திறமும் தனது ஆற்றாமையும் நினைந்து வாயில் நேரக்கருதிய தலைமகள் பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறாளாய்க் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரை நீங்கி வந்த தலைமகனை ஏற்றுக் கொள்ளுமாறு வாயில்கள் சொன்னதற்கு இணங்கியும், தன்னுடைய ஆற்றாமைக்கு ஆட்பட்டும் அவனை ஏற்றுக் கொள்ள நினைத்த தலைவி, மேலும் அவன் பரத்தையர்க்கே அன்பு செய்தான் எனக் கேட்டு, மனம் வெதும்பித் தன்னுள்ளே சொல்லிக் கொண்டது.

உரை : கரையிலே வளரும் கொறுக்கைச்சி, கரும்பினைப் போலவே வெண்பூக்களைத் தோற்றுவிக்கும் நீர்த்துறைகளைக் கொண்ட ஊரனின் கொடுமையை யாம் பொறுத்து வாழ்வோமாக. என் பெரிய மென்மையான தோள்கள் அவன் கொடுமையைப் பொறுக்க இயலாது தோற்று ஒழிக.

Koviloor Digital Library

உரை விளக்கம் : கொறுக்கைச்சிக்கும், கரும்புக்கும் பொதுவான பெயர் வேழம் என்பது. கரும்பின் பூவும் வேழப்பூவும் வெண்ணிற முடையன; மணமில்லாதவை; ஏறத்தாழ அருகருகே அவை வாழ்கின்றன; பூக்களால் அவற்றை எளிதில் வேறுபடுத்திக் காணுவது அரிது. எனவே 'கரைசேர் வேழம் கரும்பின் பூக்கும்' என்றாள்.

வரம்பை மீறிய கொடுமையொழுக்க முடையவனுக்கு இரங்கி வாயில் நேர்ந்து வாழ்தலினும், அவன் கொடுமையை – அது எத்துணைப் பெரிதாயினும் நாம் இன்னும் பொறுத்திருத்தல் நன்று என்ற கருத்தில் 'கொடுமை நன்றும் ஆற்றுக' என்றாள். 'என் பெருத்த மெல்லிய தோள்கள் அவனுடைய பிரிவை எண்ணி எண்ணிச் சாம்பி ஒரேயடியாகக் கெட்டழிக' என்பாளாய், 'தோற்கதில்ல என் தடமென் தோளே' என்றாள். அஃதாவது, தன் பருத்த மென்மையான தோள்கள் கெட்டழியினும் தண்டாப் பரத்தனாம் தன் கணவன் பொய்ச்சூளை நம்பி அவனுக்கு உடம்படுதல் ஆகாது என்று கருதினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : வேழம் – கொறுக்கைச்சி; நன்றும் – நன்றாக; 'நன்று பெரிதாகும்'; ஆற்றுக – பொறுத்திருப்போமாக; தோற்க – மெலிந்து கெட்டழிக; தட – பருத்த.

இலக்கணக்குறிப்பு : தில்ல – விழைவுப் பொருளில் வந்த இடைச் சொல். ஆற்றுக, தோற்க என்பன வியங்கோள் வினை முற்றுக்கள்.

மேற்கோள் : வேழம் கரும்பைப் போல் பூத்தல் :
வேழம் கரும்பின் அலமரும் கழனி
– ஐங். 18.

உள்ளுறை : 'கரைசேர்வேழம் கரும்பிற்பூக்கும்' என்றது உள்ளுறை உவமம்.

Koviloor Digital Library

வரம்பினுள் அடங்காது, தன் விருப்பப்படி வளரும் வேழம் தன்னகத்தே சாறும் இனிமையும் அற்றதாய் உட்டுளை உடையதாய் இருந்தும், அகத்தே செறிவுடையதும் ஆற்றவும் இனிமை பயப்பதும் பெரும்பயன் தருவதும் வயலகத்தே அடங்கி வாழ்வதுமாகிய கரும்பு போலப் பூத்துக் காண்போரை மருட்டும் துறையை உடைய ஊரன் ஆதலின், அவன் அகத்தே அன்பும் இனிமையும் அற்றவராய்ப் பொய்ம்மையே உடையரும், பயனற்றவருமாகிய பரத்தையரின் புறத்தோற்றத்தாலே மயங்கி எம்மைப் புறக்கணிக்கின்றான் என்பது இதன் கருத்து. (பெருமழைப்புலவர்).

பழைய உரை : கரை மருங்கு நிற்கும் வேழம் வயலகத்து விளைக்கும் தீங்கரும்பு போலப் பொலியும் ஊரன் என்றது பொது மகளிர்க்குக் குல மகளிரைப் போலச் சிறப்புச் செய்கிற்பான் என்றவாறு.

13

பரியுடை நல்மான் பொங்குஉளை அன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே.

கூற்று : வாயிலாய்ப் புக்கார்க்குத் தலைமகள், 'அவன் பெண்டிர் நள்ளென் யாமத்தும் துயிலார்; அவர் அறியாமல் அவன் வரும் திறம் யாது?' எனச் சொல்லி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : பரத்தையர் மனையிலிருந்து தலைவன் பாணன் முதலாயினாரைத் தூதாக அனுப்பினான். அவன் மீண்டு வருவதற்கு அவன் பெண்டிர் வாய்ப்புத் தராது எந்நேரமும் விழித்திருப்பர் என்று கூறி ஏற்க மறுத்துத் தலைவி கூறுவது இது.

உரை : நல்ல செலவினை உடைய உயர்ந்த சாதிக் குதிரையின் நீண்ட சாமரையை ஒத்துக் கரையில் வளரும் வேழம்

Koviloor Digital Library

வெண்பூக்களைத் தரும் குளிர்ந்த துறையினை உடைய ஊரன் பெண்டிர், ஊரவர் யாவரும் உறங்கும் நடுயாமத்திலும் கண் விழித்திருப்பர். ஆதலின், அவர்கள் அறியாமல் தலைவன் வருவது அரிது. (எனவே நீவிர் வந்த வழி மீள்க).

உரை விளக்கம் : விரைந்த ஓட்டமே குதிரைகட்குச் சிறப்புத் தருவதாதலின் 'பரியுடை நன்மா' என்றாள். பரியுடைமையினாலேயே அது நன்மா ஆயிற்று என்க. நடையாவது, குதிரைகட்குக் குதிரை நூல்களில் கூறப்பட்ட பல்வகை நடைகளாம். அவையாவன மல்லகதி, மயூரகதி, வானர கதி, சசகதி, சரகதி என்பன. (திவாகரம்)

உளையாவது குதிரையின் தலையில் அணியும் கவரி போலும் அணிவகை. அது குடுமி போன்றது. ஓடும்பொழுது ஆடி அழகு சேர்ப்பது. அது தலையாட்டம் என்றும் சொல்லப்படும். பழையவுரையாசிரியர் வெண்கவரி என்கிறார். நெற்றியில் தாழ்ந்து கிடந்து அசைவது என்பாரும் உளர்.

அடையாகிய கரை அடைகரையாயிற்று. அடையும் கரையும் ஒன்றையொன்று சிறப்பித்து நின்றன. 'ஊரன் பெண்டிர்' என்றாள், அவர் தலைவனால் மனைவியர் போலக் கருதப்படும் காரணம் நோக்கி. பெண்டு என்பது பெண் என்று பொதுப்பொருள் தருவதோடு மனைவியைச் சிறப்பாகச் சுட்டுவதும் தமிழ் மரபாகும். பெண்டிர் என்ற பன்மைச் சுட்டு, அவர் பலர் என்பதனைக் காட்டும். இதனால் தலைவன் பரத்தைமை மிகுதி பழிக்கப்பட்டதாம்.

ஊர் துஞ்சு யாமம் என்ற பொருளில் துஞ்சூர் யாமம் என்றாள். ஊரார் யாவரும் துஞ்சினாலும், தாம் மட்டும் கண் விழித்திருந்து தலைவன் மீளாமல் காத்திருப்பர் என்று கருதிக் கூறியது இது. அவன்பால் தாம் பெறும் பயன் கருதி, அவனைத் தலைவிபால் மீளாமல் விழிப்பாகக் காத்தனர் என்க. இதனால், தலைவன் தன்னில்லம் திரும்பும் மனநிலையுடையனாயினும், முழுதும் பரத்தையரின் ஆட்சிக்குட்பட்டுத் தடுமாறினான் என்பது பெறப்பட்டது. 'துயிலார்' என்னாது துயிலறியார் என்றாள்,

Koviloor Digital Library

அவர்களின் இடைவிடாத கண்காணிப்புக்கு உட்பட்டமை பற்றி. ஊரன் என்ற குறிப்பாவது, அவன் ஊரை ஆளும் தகுதியுடையன் எனினும் தன்னையாளும் தகுதியின்றி இழிந்த பரத்தையர் ஆட்சிக்கு உட்பட்டான் என்பதாம். தலைவன் வருதற்கு அறவே வாய்ப்பில்லை என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : பரி – செலவு; மான் – குதிரை; உளை – தலையாட்டம் என்னும் அணி.

இலக்கணக்குறிப்பு : பரி – பரிதல் என்று பொருள் தரும் முதனிலைத்தொழிற்பெயர்; பொங்குளை – வினைத்தொகை; அடைகரை – இருபெயரொட்டுப் பண்புத்தொகை. யாமத்தும் – உம்மை உயர்வு சிறப்பு; துஞ்சூர் – ஊர் துஞ்சு என்பது முன்பின்னாகத் தொக்கது; கால்வாய் என்பது வாய்க்கால் என்றானாற் போன்றது இது.

மேற்கோள் : வேழம் கரும்புபோல் பூத்தல் :
கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்
– ஐங். 12.

வேழ வெண்பூ வெள்ளுளை
– ஐங். 19.

குதிரைகள் உளையணிதல் :
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
– அகம். 125.

யாமத்தும் துஞ்சாத மாந்தர்
– நற். 262.

– பலருடன்
துஞ்சூர் யாமத்தானும் என்
நெஞ்சத் தல்லது வரவறியானே
– குறுந். 302.

Koviloor Digital Library

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுது இடை தெரியின்
பொய்யே காமம்.

– குறுந். 32.

உள்ளுறை : 'வேழம் வெண்பூப் பகரும்' என்றது உள்ளுறை. சிறப்பில்லாத வேழவெண்பூ, சிறப்புடைய குதிரையின் உளைபோல் மலரும் என்னும் ஏனை உவமம் உள்ளுறைக்குச் சிறப்புத் தந்தது. வேழம் வெண்பூப்பகரும் ஊரன் என்றது, பரத்தையரின் பொய்ம்மையை மெய்யான அன்பு எனக் கருதியும், அவர்தம் செயற்கையழகை இயற்கையழகு எனக் கருதியும் அவர்பால் விடுதலறியா விருப்பினன் ஆயினன் என்று உள்ளுறுத்துக் கூறினாள் என்க.

பழைய உரை : பரியுடை நன்மான் தலைக்கணிந்த வெண் கவரி போல வேழம் வெண்பூவைக் கொள்வாரைக் குறித்துக் கொடுக்கும் ஊரன் என்றது, நன்று போலக் காட்டித் தம் நலத்தினை விற்பார் வாழும் ஊரன் என்றவாறு.

14

கொடிப் பூ வேழம் தீண்டி, அயல
வடிக் கொள் மாஅத்து வண் தளிர் நுடங்கும்
அணித் துறை ஊரன் மார்பே
பனித் துயில் கொள்ளும் இன்சா யற்றே.

கூற்று : தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பால் உணர்ந்த தோழி, 'அவன் கொடுமை நினையாது அவன் மார்பை நினைந்து ஆற்றாய் ஆகின்றது என்னை?' என்றாட்கு, 'அவன் கொடியனே ஆயினும், அவன் மார்பு குளிர்ந்த துயிலைச் செய்யும் இனிய சாயலை உடைத்து ஆதலால் காண்' எனச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையருடன் உறவாடித் தலைவியைப் பிரிந்திருந்த பொழுது, தலைவி புணர்ச்சி விரும்பி அது கிட்டாது வருந்தினாள். அதனை உணர்ந்த தோழி, 'தலைவன் கொடுமையை எண்ணி அவனை வெறுத்தலை விடுத்து அவன் மார்பை விரும்புவது எக்காரணம் பற்றி எனக் கேட்ட போது தலைவி அவளுக்கு அளித்த விடை இதுவாகும்.

உரை : ஒழுங்குபட அமைந்த பூக்களைக் கொண்ட வேழம் தீண்டியதனால், அயலே உள்ள வடுக்களை உடைய மாமரத்தின் வளமான தளிர்கள் அசைந்து ஆடுதற்கு இடனான அழகிய நீர்த்துறைகளை உடைய ஊரன் மார்பு குளிர்ந்த துயிலைத் தரும் இனிய மென்மையினை உடையது. (அத்துயில் பெறாமையால் ஆற்றேனாகின்றேன்).

உரை விளக்கம் : வேழங்கள் ஒழுங்குபட அமைந்தமையால் அவற்றின் பூக்களும் வரிசையாக நீண்டமைந்தமையின் கொடிப்பூ என்றாள். நீண்ட பூ என்றலும் ஒன்று. இப்பூக்கள் மாமரத்தின் தளிர்களைத் தீண்டின என்றது, அவை அத்துணை உயரமாக வளர்ந்தன என்ற குறிப்புடையது. மாமரங்கள் வடுக்களோடும் புதிய தளிர்களோடும் இருந்தன என்ற குறிப்பினால், அது இளவேனிற் காலத்தைக் குறித்தது. பனித்துயில் என்றது ஊற்றின்பத்தினைக் குறித்தது. இன்சாயல் என்றதும் அதனையே குறித்தது. இடக்கரடக்கலாகப் புணர்ச்சியைச் சுட்டியதாகக் கொள்க. இவ்வினிமையைத் தான் நுகரத்தாராமல், பரத்தையர் நுகரக் கொடுத்தான் தலைவன் என்பது அவள் குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : கொடிப்பூ – வரிசையாக அமைந்த பூ; அயல – பக்கத்திலுள்ள; வடி – வடு – மாம்பிஞ்சு; வண்தளிர் – வளப்பமான தளிர்; நுடங்குதல் – அசைதல்; பனி – குளிர்ச்சி; சாயல் – மென்மை.

இலக்கணக்குறிப்பு : தீண்டி – தீண்ட என்ற எச்சத்தின் திரிபு.

Koviloor Digital Library

மேற்கோள் : இளவேனிலில் மாமரம் தளிர் ஈனும் என்பது :
மாவும் வண்தளிர் ஈன்றன
– அகம் 355.

தலைவன் மார்பில் தலைவி துயிலல் :
ஓங்கு மலை நாடன்
மலர்ந்த மார்பில் பாயல்
தவ நனி வெய்யள்
– ஐங். 205.

ஐய குறுமகட் கண்டிகும் வைகி
மகிழ்நன் மார்பில் துஞ்சி
– நற். 20.

ஆர்வ நெஞ்சமொடு அளைஇ
மார்புறப் படுத்தல் மரீஇய கண்ணே
– நற். 171

உள்ளுறை : நீண்ட பூவினை உடைய வேழம் தீண்டுதலான் வடுக்களைக் கொண்ட மாவின் தளிர் நுடங்கும் என்றது பரத்தையரால் தலைவி மெலிவுற்றதைக் குறித்தது.

15

மணல் ஆடு மலிர் நிறை விரும்பிய, ஒண் தழை,
புனல் ஆடு மகளிர்க்குப் புணர் துணை உதவும்
வேழ மூதூர் ஊரன்
ஊரன் ஆயினும் ஊரன் அல்லன்னே.

கூற்று : சேணிடைப் பிரிந்துவந்து உடன் உறைகின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகின்றது என்று குறிப்பினான் உணர்ந்து, தலைமகள் வேறுபட்டாளாக, தோழி அதனை அறியாது,

Koviloor Digital Library

'அவன் உடன் உறையவும் வேறுபடுகின்றது என்னை?' என்றாட்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : நெடுந்தொலைவு பிரிந்து தலைவன் மீண்டு வந்த பிறகு அவனுக்குப் பரத்தையர் தொடர்பு ஏற்பட்டதைக் குறிப்பால் அறிந்த தலைவி வருந்தினாள். தோழியோ அவள் கணவன் உடன் வாழும்பொழுதே வேறுபட்டதற்குக் காரணம் அறியாளாய் வினவினாள். அதற்கு விடையாகத் தலைவி கூறியது இது.

உரை : கரையின்கண் மணல்மேடுகளை இடும் வண்ணம் பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தில் நீராடித் திளைக்கும் ஒளியுடைய தழையாடையை உடுத்திய மகளிர்க்கு, அவர்களின் விருப்பத்திற்குரிய மிதவையை உதவுகின்ற வேழக்கரும்பை மிகுதியாகக் கொண்ட மூதூரை உடைய ஊரன், ஊரிலேயே உறைபவனாயினும், தன் புறத்தொழுக்கத்தால் ஊரில் இல்லாதவனாகவே கருதப்படுவான்.

உரை விளக்கம் : பெருவெள்ளம் மணற்குவியல்களை உருவாக்குதல் பற்றி 'மணலாடு மலிர்நிறை' எனப்பட்டது. பெண்கள் அசோகு முதலியவற்றின் தழைகளைத் தொடுத்து அணிவது பண்டைய வழக்காதலின் 'விரும்பிய வொண்டழை' என்றாள். தலைவன் தழையுடையைக் கையுறையாகக் கொடுத்தல் அன்பின் அடையாளமாகக் கருதப்பட்டது என்பதனைத் தமிழ் அகப்பொருள் இலக்கணமும் இலக்கியமும் பரக்கப் பேசும் – 'என்னை தானும் மலைந்தான் எமக்கும் தழையாயின, என்ன மரம் கொல் அவர் சாரலவ்வே' (ஐங்.201) என்பது காண்க.

'புணர்துணை' என்றது வேழத்தால் செய்யப்பட்ட தெப்பத்தையாகும். இனி, புணர்துணையாகும் தலைவன் என்று பொருள் கூறலும் ஒன்று. காதலன்பால் பிணிப்புண்ட மைந்தரும் மகளிரும் கூடி நீராடுமிடத்து ஏனைத் துணைவரின் நீக்கி அவரது துன்னாமையைச் சிறப்பித்துப் புணர்துணை என்பு என்றார் ஔவை சு.துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

இங்ஙனம் தலைவன் தன்னை விரும்பும் பரத்தையர்க்குத் துணையாயினன் என்க. இவன் இத்தகைய் ஊரனாதலின், இங்ஙனம் ஒழுகுதலில் வியப்பில்லை என்றாளாம். 'ஊரன் ஆயினும்' என்றதற்கு, அவன் தன் ஊரிலேயே வாழ்ந்தாலும் என்று பொருள் கொள்க. அவன் தான் காண ஊரிலேயே இருந்தாலும், அதனால் தான் பெறும் பயன் ஒன்றுமில்லை. ஆதலால், அவன் அவளைப் பொறுத்த அளவில், ஊரில் இல்லாதவனாகவே கருதத்தக்கவனாம். பயன்படாத பொருள் இருந்தும் இல்லாதது போன்றதே யாதலின், 'ஊரனாயினும் ஊரனல்லன்னே' என்று நொந்துரைத்தாள்.

அருஞ்சொற்பொருள் : மலிர்நிறை – மிக்க வெள்ளம்; புணர்துணை – புணர்ந்த துணை; நீராடுதற்குரிய துணை; ஊரன் ஆயினும் – ஊரில் உறைபவன் ஆயினும்.

இலக்கணக்குறிப்பு : ஊரன் – குறிப்பு வினையாலணையும் பெயர்; அல்லன்னே – விரித்தல் விகாரம்; புணர் துணை – வினைத்தொகை.

மேற்கோள் : காதலர் வேழப்புணை தழுவிப் புனலாடுதல் :
– நட்பே,
கொடுங்கோல் வேழத்துப் புணை துணையாகப்
புனலாடு கேண்மை அனைத்தே
– அகம் 186.

கழை நிலைபெறாஅக் காவிரி நீத்தம்
குழைமாண் ஒள்ளிழை நீ வெய்யாளொடு
வேழவெண்புணை தழீஇப் பூழியர்
கயம் நாடு யானையின் முகனமர்ந்தா அங்கு
நெருநல் ஆடினை புனலே
– அகம். 6.

Koviloor Digital Library

காதலன் ஒரூரக்த்திருந்தும் தலைவியைக்
காணாதிருத்தல் :
ஓரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
ஏதிலாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே
– குறுந். 231.

உள்ளுறை : வேழம் புனலாடும் பெண்டிர்க்கு உதவுதல் போலத் தலைவனும் பரத்தையர்க்கு வேண்டுவன செய்வான் என்பது உள்ளுறைப் பொருள்.

16

ஓங்கு பூ வேழத்துத் தூம்புடைத் திரள் கால்
சிறு தொழு மகளிர் அஞ்சனம் பெய்யும்
பூக் கஞல் ஊரனை உள்ளி,
பூப்போல் உண்கண் பொன் போர்த்தனவே.

கூற்று : வாயிலாகப் புகுந்தார்க்குத் தோழி, 'அவன் வரவையே நினைந்து இவள் கண்ணும் பசந்தன; இனி அவன் வந்து பெறுவது என்ன?' எனச் சொல்லி, வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் வீட்டிலிருந்து தூதுவர்களை அனுப்பினான். அங்ஙனம் வந்தார்க்குத் தலைவி பல நாளாகக் காத்திருந்து அவள் கண்கள் நிறமாறியதனைச் சொல்லித் தோழி வாயில் மறுத்தது.

உரை : நீண்ட பூவையுடைய நாணலின் உள்ளே துளையை உடைய திரண்ட தண்டினுள் சிறுமை வாழ்வினரான குற்றேவல் மகளிர் கண்ணுக்கிடும் மையினைப் பெய்து வைக்கும், பூக்கள் மலிந்த ஊரின் தலைவனை எண்ணி, இவள் தாமரை மலர்போலும் (அழகிய) கண்கள் பசலையுற்றன.

Koviloor Digital Library

உரை விளக்கம் : சிறு தொழு மகளிர் ஆவார் யாவரெனின் சிறுமை வாழ்வினராய், செல்வர் மனைக்கண் இருந்து அவர் இட்ட பணிகளைச் செய்து வாழும் எளிய மகளிர். பணிப்பெண்கள் என்க. சிறுமையாவது அடிமைத் தன்மையாம். 'ஊரனை உள்ளி' என்றாள், எப்பொழுது வருவான் என்று இடையறாது எதிர்பார்த்திருந்தமையை விளக்க. அங்ஙனம் எதிர்பார்த்து அவள் ஏமாற்றமுற்றமையின் கண்கள் பொலிவிழந்தன. பொன் போர்த்தன என்றாள், கண்கள் பீர்க்கம் பூவைப்போல நிறம் மாறினமையின்.

இனி, தொழு என்பதற்கு இல்வாழ்க்கை என்று பொருள் செய்வாரும் உளர். மேலும், தொழுமகளிராவார் தொழுவறைகளில் தொழில் புரியும் கடையர் மகளிர் என்றும் கூறுவர். வேழத்தண்டில் அஞ்சனத்தைப் பெய்து வைக்கும் வழக்கம்போலவே, மூங்கிற்குழாயில் தேறலைப் பெய்து வைக்கும் வழக்கமும் இருந்தது. 'நீடமை விளைந்த தேக்கள் தேறல்' 'அம்பணை விளைந்த தேக்கள் தேறல்' முதலிய சான்றுகள் இப்பண்டை வழக்கத்தினை அறியத் துணைபுரிகின்றன.

அருஞ்சொற்பொருள் : ஓங்குதல் – உயர்தல்; நீள்தல்; தூம்பு – உட்டுளை; தொழுமகளிர் – பணிப்பெண்டிர்; அஞ்சனம் – கண்மை; கஞலுதல் – நெருங்குதல்; உள்ளி – நினைத்து.

இலக்கணக்குறிப்பு : ஓங்குபூ, திரள் கால் – வினைத் தொகைகள்.

மேற்கோள் : தொழுவர் என்பார் செல்வர் மனைப் பணியாளர் என்பது :

> கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
> கொள்ளுறழ் நறுங்கல் பல்கூட்டு மறுக.
>
> – நெடு. 49–50.

உள்ளுறை : சிறு தொழுமகளிர் தூம்புடைத் திரள் கால் அஞ்சனம் பெய்யும் ஊரன் என்றதன் கருத்தாவது, சிறந்த அஞ்சனத்தைப் பொற் செப்பிற் பெய்யாது இழிந்த வேழத்தண்டில் பெய்யும் சிறு

Koviloor Digital Library

தொழுமகளிர் போன்று, தலைவனும் உயர்ந்த குலமகளாகிய தலைவியின் பால் வைத்ததற்குரிய தண்ணளியை இழிந்த பரத்தையர் பால் வைத்தனன் என்பதாம். உயர்ந்தார்க்குப் பயன்பட வேண்டியவன் இழிந்தார்க்குப் பயன்படுகிறான் என்பது.

17

புதல் மிசை நுடங்கும் வேழ வெண் பூ
விசும்பு ஆடு குருகின் தோன்றும் ஊரன்
புதுவோர் மேவலன் ஆதலின்,
வறிது ஆகின்றது என் மடம் கெழு நெஞ்சே.

கூற்று : தலைமகன் பரத்தையிற் பிரிந்த வழி, 'இவ்வாறு ஒழுகுதலும் ஆடவர்க்கு இயல்பு அன்றே; நீ இதற்கு நெஞ்சு அழிகின்றது என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரோடு குலவி மகிழ்தலும் ஆடவர்க்கு இயல்பானதேயாதலின் அதற்காக வருந்த வேண்டாவென அறிவுறுத்திய தோழிக்குத் தலைவி சொல்லியது

உரை : பசிய புதர்களிடையே ஓங்கி வளர்ந்த வேழத்தின் வெண்மலர்கள் காற்றால் அசைந்து வானவெளியில் பறக்கும் கொக்குப்போலத் தோற்றமளித்தற்கு இடமான ஊரன், நாளும் புதிய பரத்தையரைத் தேடிச்சென்று அவர்களை நுகர்பவன் ஆதலின், என் அறியாமை மிக்க நெஞ்சம் அவனையே நினைந்து மெலிகின்றது.

உரை விளக்கம் : வேழம் புதர்களை விட உயரமாக வளர்ந்திருத்தல் கருதி, 'புதல்மிசை நுடங்கும்' என்றாள்.

கரும்பசுமையுடைய புதர்கட்குமேல் அவற்றுக்கு அண்மையில் அசையும் வேழ வெண்பூ, கரிய வானத்தையொட்டிப் பறக்கும் குருகு போல் உள்ளதாகக் கூறும் அழகினை எண்ணுக.

Koviloor Digital Library

'புதுவோர் மேவலன்' என்றாள் அவன் நாள்தொறும் புதியவரை நாடிச் சென்று நுகர்பவன் என்னும் பொருளில். அத்தகையவனை எண்ணும்தோறும், அவன் திருந்துவான் என்ற நம்பிக்கை வறண்டு போதலின் 'வறிதாகின்றது என்....நெஞ்சு' என்றாள். 'வறிது சிறிதாகலின், என்நெஞ்சம் சுருங்குகின்றது, அல்லது மெலிகின்றது என்றாளுமாம். 'மடங்கெழு நெஞ்சு வறிதாகின்றது' என்றாள், கொடியவனுடைய அன்பிற்கு ஏங்குவதனால். அவன் இனித் திருந்தமாட்டான் என்று எண்ணி அவள் நெஞ்சு கலங்கிற்றாம்.

அருஞ்சொற்பொருள் : புதல் – புதர்; நுடங்கும் – அசைந்து ஆடுகின்ற; விசும்பு – ஆகாயம்; குருகு – வெண் கொக்கு; அன்னமுமாம்; புதுவோர் – புதிய பரத்தையர்; மேவலன் – விரும்புபவன்; வறிதாகின்றது – வறண்டு போகிறது; சுருங்குகின்றது; மெலிகின்றது. மடம் – அறியாமை.

இலக்கணக்குறிப்பு : குருகின் – 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு.

மேற்கோள் : தலைவன் புதுவோரை நாடிச் செல்லுதல் :

நல்லோர் நல்லோர் நாடி
வதுவை அயர வேண்டுதி நீயே

– ஐங். 61.

உள்ளுறை : புதல்மிசை நுடங்கும் வேழத்தின் வெண்பூ விசும்பின்கண் ஆடும் குருகுபோல் தோன்றும் ஊரன் என்றது, சிறப்பில்லாத பரத்தையராயினும் உயர்ந்த குலமகளிர் போலத் தோற்றமளித்து மயக்குகின்றனர் என்னும் உள்ளுறைப் பொருளைக் கொண்டது. வேழத்தின் வெண்பூ புதன்மிசை நுடங்கினும் விசும்பாடு குருகுபோலத் தோன்றும் என்று கொண்டு, நனவின்கண் நம்பால் அன்பின்றிப் புறத்தொழுகுவானாயினும் கனவின்கண் அன்புடையவனாய்த் தோன்றுகின்றான் என்பது பழைய வுரைகாரரின் விளக்கம்.

Koviloor Digital Library

18

இருஞ் சாய் அன்ன செருந்தியொடு வேழம்
கரும்பின் அலமரும் கழனி ஊரன்;
பொருந்து மலர் அன்ன என் கண் அழ,
பிரிந்தனன் அல்லனோ, 'பிரியலென்' என்றே?

கூற்று : பரத்தையிற் பிரிந்து வந்து தெளித்துக் கூடிய தலைமகற்குப் பின் அவ்வொழுக்கம் உளதாய வழி, அவன் விடுத்த வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை காரணமாகப் பிரிந்து சென்று மீண்டுவந்து தலைவியை நயப்புரைகளால் தெளிவித்து அவளோடு கூடியிருக்கும் காலத்தில், மீண்டும் பரத்தையரொடு உறவு கொண்ட தலைவன் விடுத்த வாயில்கட்குத் தலைவி இங்ஙனம் விடையளித்தாள்.

உரை : நாணல் கரிய நிறமுடைய தண்டான் கோரையை ஒத்த செருந்தியோடு கரும்பினைப் போலக் காற்றால் அலைப்புண்டு சுழலுதற்கு இடமான ஊரை உடையவன், 'நின்னை என்றும் இனிப் பிரியேன்' என்று வாக்குறுதியளித்து என்னுடன் கூடியிருந்து, பின்னர் அது பொய்யாகுமாறு, இணைந்த மலர்களையொத்த என் கண்கள் அழுமாறு பிரிந்தான் அல்லனோ? (அவன் பொருட்டு நீவிர் தூது வந்தது என்னை?)

உரை விளக்கம் : தலைவன், 'பிரியலென்' என்று தெளிவித்தது, முன்னர்ப் பரத்தையிடமிருந்து மீண்டு வந்து கூடியபொழுது என்க. பஞ்சாய் முதலிய கோரை வகைகளும் நாணலும் நீர் வளம் கொண்ட நிலத்தில் செழித்து வளர்வன வெனவே, சாய் செருந்தியோடு வேழம்...அலமரும் என்றாள். செருந்தியும், சாயும் வயலில் வளர்வன. வேழம் கரையில் வளர்வது. அங்ஙனம் கரையில் வளரும் வேழம், அயலே வயலில் வளரும் கரும்பு அலமருதல்போல் அலமரும் என்றாள். 'பொருந்து மலர்' என்று கண்களைச் சுட்டியது இணைந்த

Koviloor Digital Library

மலர்கள் போல் அவை உள்ளமை பற்றி. அழகாலும் வடிவாலும் அவை ஒன்றையொன்று நிகர்த்தன. 'மலர் அன்ன என் கண் அழ' என்றாள், அவை அழுதற்குரியன அல்ல என்னும் பொருளில். 'என்றும் மகிழ்ச்சி நிறைந்திருக்கவேண்டிய என் கண்கள் கலுழுமாறு சூள் பொய்த்தவன்' என்றாள். 'பிரியேன் என்றவன் பண்டு பிரிந்தான் அல்லனோ? இப்பொழுது மீண்டும் அவ்வாறு உங்கள் வழிச் சொல்லி அனுப்புவதனை யான் நம்பி உடம்படுவது எப்படி?' என்று வாயில் மறுத்தாள் என்க. 'பொருந்துமலர்' என்பதற்கு அழகிய மலர் போலும் என்று பொருள் உரைப்பாருளர். இனி, மணம் பொருந்திய தாமரை மலர் போலும் கண்கள் என்பாரும் உளர்.

அருஞ்சொற்பொருள் : இரும் சாய் – கரிய தண்டான் கோரை; செருந்தி – நெட்டிக்கோரை; வேழம் – நாணல்; பொருந்து – இணைந்த.

இலக்கணக்குறிப்பு : கரும்பின் – 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்புப் பொருள் தந்தது. அழ – செயவென் எச்சம்.

மேற்கோள் : வேழமும் கரும்பும் ஒத்திருத்தல் :
'கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும்
துறை கேழ் ஊரன்'
– ஐங் 12.

உள்ளுறை : செருந்திப்பூவோடு வேழம் கரும்பு போல அலமரும் என்றது, தம்சேடியரோடு பரத்தை மகளிர் குலமகளிர் போலத் தருக்கித் திரிவர் என்ற உள்ளுறைப் பொருள் கொண்டது. (பழைய உரை)

Koviloor Digital Library

19

எக்கர் மாஅத்துப் புதுப் பூம் பெருஞ்சினை,
புணர்ந்தார் மெய்ம் மணம் கமழும் தண்பொழில்,
வேழ வெண்பூ வெள்உளை சீக்கும்
ஊரன் ஆகலின் கலங்கி,
மாரி மலரின் கண் பனி உகுமே.

கூற்று : 'பல்நாள் அவன் சேணிடைப் பிரியவும் ஆற்றியுளையாகிய நீ சில் நாள் அவன் புறத்து ஒழுகுகின்ற இதற்கு ஆற்றாயாகின்றது என்னை?' என்ற தோழிக்கு, 'எதிர்ப்பாடு இன்றி ஒரூர்க்கண்ணே உறைகையினாலே ஆற்றேன் ஆகின்றேன்' எனத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்: தலைவன் சில நாள் பரத்தையரோடு உறைதலைக் கண்டு தலைவி வருந்தினது கண்ட தோழி, பலநாள் நெடுந்தொலைவில் தலைவன் தங்கிய போது அப்பிரிவைப் பொறுத்த நீ இப்பொழுது சில நாட்பிரிவிற்கு வருந்துவது ஆகாது என்ற போது, ஒரூரில் இருந்து கொண்டே தன்னைக் காணாதிருந்த அன்பின்மையால் தான் வருந்துவதாகத் தலைவி கூறியது.

உரை : மணல் திட்டின்கண் நிற்கும் மாமரத்தின் புதிய மலர்களைக் கொண்ட பெரிய கிளை, திருமணத்திற்கூடிய பெண்களின் உடல்கள் மணப்பதுபோல் நறுமணம் கமழும் குளிர்ந்த பொழிலில் நாணலின் வெண்ணிறம் உடைய பூக்களின் வெண்ணிறத்துய், அம்மாமரத்தின் அரும்பினைத் துடைக்கின்ற ஊரினை உடையவன் தலைவனாதலின், என் கண்கள் அவன் கொடுமை கண்டு கலங்கி, மாரிக் காலத்தில் மழையில் நனைந்த மலர்போல் கண்ணீர் உகுக்கின்றன.

உரை விளக்கம் : மாம்பூவினால் தண்ணிய பொழில் நறுமணம் கமழ நின்றதை, புணர்ந்தோர் மெய்ம்மணம் போன்றது என்றாள், மணப்பெண் திருமணத்தின்போது பல்வகை

Koviloor Digital Library

மலர்களாலும் சந்தனம் முதலியவற்றாலும் நறுமணம் கமழ்வது பற்றி. தம் காதலரைப் புணர்ந்தோர் என்றும் பொருள் கூறலாம். 'வெண்உளை' என்றாள் வேழப்பூ குதிரைகட்கு அணியும் உளை (தலையாட்டம்) போன்றிருப்பது பற்றி. மாமரத்தின் கிளைகளைத் தீண்டி அதன் பூக்களைச்சிதைக்கும் அளவிற்கு உயர்ந்து வளர்ந்தமை தோன்ற 'உளை சீக்கும்' என்றாள். இதனால் நிலத்தின் வளப்பம் சுட்டியவாறு. மாரிக்காலத்து அடுத்தடுத்துப் பொழியும் மழையால் பூக்கள் எப்பொழுதும் நீரொழுகுதல் பற்றி, இடையறாது கலங்கும் கண்கட்கு அவற்றை உவமை கூறினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : எக்கர் – மணல் திட்டு; புணர்ந்தோர் – புதுமணம் புரிந்த பெண்டிர்; வேழம் – நாணல்; வெள்உளை – வெள்ளியது (பஞ்சுபோன்றது) சீக்கும் – துடைக்கும், அழிக்கும்.

இலக்கணக்குறிப்பு : மாரிமலரின் – இன் ஒப்புப் பொருள் தரும் ஐந்தன் உருபு.

மேற்கோள் : தலைவனைக் கூடிய பெண்ணின் உடல் மணம் கமழ்தல் :

பொறிகிளர் ஆகம் புல்லத் தோள்சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலின்
– நற். 55

உள்ளுறை : மாம்பூக்கள் நன்கு விரிந்து, மணமகளிர் மேனிபோல் மணம் வீசத்தக்க பொழிலை, அம்மலர்கள் அரும்பாக இருக்கும் பருவத்தில் வேழத்தின் பூத்துடைக்கும் என்றதால், நெட்டிடைப் பிரிந்து சென்று, பின் திரும்பி வந்து சேர்ந்து வாழ வேண்டிய பருவத்தில், அப்போது துய்க்க வேண்டிய இன்பங்களை நுகராமல் விலக்கும் பரத்தையர்களை உடையது தலைவன் ஊர் என்பது விளக்கமாகின்றது. (பழைய உரை)

Koviloor Digital Library

20

அறு சில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப்பூச் சினை சீக்கும்,
காம்பு கண்டன்ன தூம்புடை, வேழத்துத்
துறை நணி ஊரனை உள்ளி, என்
இறை ஏர் எல் வளை நெகிழ்பு ஓடும்மே.

கூற்று : தலைமகளை வாயில் நேர்வித்தற்பொருட்டாக, 'காதலர் கொடுமை செய்தாராயினும் அவர் திறம் மறவாதொழியல் வேண்டும்' என்று முகம் புகுகின்ற தோழிக்கு, 'என் கைவளை நில்லாதாகின்றது அவரை நினைத்ததன் பயனன்றே; இனி அமையும்' எனத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியை மீண்டும் சார்வதற்குத் தோழியின் உதவியை நாடினான். தோழி அதற்கு உடம்பட்டாள். காதலரின் தவறுகளைப் பொருட்படுத்தலாகாது என்று அறிவுறுத்தினாள். அதற்குத் தலைவி தான் அவனை நினைத்ததன் பயனாகத் தன் கைவளை கழன்றமை கூறி வாயில் மறுத்துரைத்தது.

உரை : ஆறு சிறிய கால்களையும் அழகிய சிறகுகளையும் உடைய தும்பி நூறு இதழ்களையுடைய தாமரைப்பூவில் இட்ட முட்டைகளை அழிக்கின்ற, மூங்கிலைப் போன்ற, உள்ளே துளையினை உடைய வேழத்தை உடைய நீர்த்துறையினை அடுத்துள்ள ஊரனை இடைவிடாது எண்ணியதனால் என்னுடைய முன் கையில் செறிக்கப்பட்ட ஒளியுடைய வளையல்கள் நெகிழ்ந்து கழன்றோடுகின்றன. (அத்தகையவர்க்காக நீ பரிந்து பேசுவது வியப்பு).

உரை விளக்கம் : தும்பியென்பது தேன் உண்ணும் வண்டுகளுள் ஒரு வகையினதாகும். ஆறுகால்கள் உடைமையின் அதனை 'அறுகாற்பறவை' எனவும் கூறுவதுண்டு. தாதுண்பறவை (அகம். 4) என்றலும் உண்டு. அதன் சிறகுகள் பளபளப்பாகவும் கண்ணுக்கு

Koviloor Digital Library

இனியனவாகவும் உள்ளமையின், 'அம்சிறை' என்றாள். 'அஞ்சிறைத்தும்பி' எனப் பிறரும் கூறுவர். 'அம்' என்பதற்கு உள் என்ற பொருளும் உண்டாதலின் உள்ளே சிறகினைக் கொண்ட என்று விளக்குவதும் உண்டு. (ரா. ராகவ ஐயங்கார், குறுந்தொகை விளக்கம் பாட்டு '2' உரை காண்க.) ஏனைய தாமரைகளினும் மிகுதியான இதழ்களை உடைய தாமரையை நூற்றிதழ்த் தாமரை என்றாள். நூறு என்றது. மிகுதி என்ற பொதுவான பொருள் தந்தது. நூறு இதழ்கள் கொண்டதொரு தாமரை வகை உலகில் உள்ளதன்று. வண்டுகள் தாமரையில் முட்டையிடும் போலும்! நாணல் மூங்கில் சாதியைச் சேர்ந்தது. அது நீர்த்துறை அருகே வளர்ந்ததாதலின் மூங்கில் போல் உயர்ந்து காணப்பட்டது. எனவே 'காம்பு கண்டன்ன' என்றாள். 'துறை நணி ஊரன்' என்றாள். தலைவன் ஊர் நீர்த்துறைக்கு அண்மையிடத்தில் இருந்தமையின். ஊரனின் கொடுமையொழுக்கத்தினை எண்ணி எண்ணி உடல் மெலிந்தமையை, வளையல் கழல்வது கொண்டு வெளிப்படுத்தினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : சில்கால் – சிறிய கால்; சில கால்கள் என்றும் கூறுப. அம் சிறை – அழகிய சிறகு; அகச்சிறகுமாம்; தும்பி – வண்டு வகை; சினை – முட்டை; சீத்தல் – அழித்தல்; காம்பு – மூங்கில்; தூம்பு – உட்டுளை; வேழம் – நாணல்; நணி – அருகே உள்ள; உள்ளி – நினைத்து; இறை – முன் கை; எல் – ஒளி; நெகிழ்பு – நெகிழ்ந்து.

இலக்கணக்குறிப்பு : பூச்சினை – பூவின்கண் இட்ட சினை – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. நெகிழ்பு – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஓடும்மே – விரித்தல் விகாரம்.

மேற்கோள் : மெலிவால் வளை நெகிழ்தல் :

– இறை இறந்து
இலங்குவளை நெகிழ்ச் சாஅய்

– குறுந். 50.

Koviloor Digital Library

நெடுமென் பணைத்தோள் சாஅய்த்
தொடி நெகிழ்ந்து

– குறுந். 85.

தாமரை நூறு இதழ் உடைத் தென்றல் :
சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலர்

– புறம். 27.

உள்ளுறை : தாமரைப் பூவிலுள்ள தும்பியின் சினையை வேழம் அழிக்கும் (துடைக்கும்) என்றது, தன்னிடம் என் மகன் தங்குதலையும் விலக்குவாராகிய பரத்தையரைக் கொண்டான் என்ற உள்ளுறை கொண்டது. (பழைய உரை)

வேழப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

3. களவன் பத்து

இப்பத்திலுள்ள ஒவ்வொரு பாடலிலும், மருதநிலத்துக்குரிய கருப்பொருள்களுள் ஒன்றான களவன் (நண்டு) இடம்பெறலான் இது களவன் பத்தாயிற்று.

21

முள்ளி நீடிய முது நீர் அடைகரைப்
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்
தண் துறை ஊரன் தெளிப்பவும்,
உண்கண் பசப்பது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : 'புறத்தொழுக்கம் எனக்கு இனி இல்லை' என்று தலைமகன் தெளிப்பவும், 'அஃது உளது' என்று வேறுபடும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன்பால் பரத்தைமையொழுக்கம் கண்டு தலைவி வேறுபட்டாள். அவளைத் தேற்றும் பொருட்டு 'இப்பொழுது என்பால் புறத்தொழுக்கம் இல்லை' என்று தலைமகன் கூறினான். ஆனால் தலைவி அவன் சொல்லை நம்ப மறுத்து மீண்டும் மனம் வேறுபட்டாள். அது கண்ட தோழி இங்ஙனம் கூறித் தேற்றினாள்.

உரை : அன்னையே! முள்ளிச் செடிகள் அடர்ந்து வளர்ந்துள்ள பழைய நீர் நிலைகளின் கரைகளில் வாழும், தம் மேனியில் புள்ளிகளைக் கொண்ட நண்டுகள் ஆம்பல் தண்டுகளை அறுப்பதற்கு இடமான குளிர்ந்த நீர்த்துறைகளைக் கொண்ட ஊரின்

Koviloor Digital Library

தலைவன், 'இனி என்பால் பரத்தையர் ஒழுக்கம் ஒருபோதும் உளதாகாது' என உறுதி கூறிய பின்னும் நின்னுடைய மையுண்ட கண்கள் பசலைகொள்வது எக்காரணம் பற்றி?

உரை விளக்கம் : முள்ளியாவது நீர் நிலைகளில் வளரும் ஒருவகைச் செடியாம். முள்ளை உடையது முள்ளியாயிற்று. நீடுதலாவது மிகுதியாக வளர்தல். நீண்டு வளர்ந்துள்ள எனலுமாம். முதுநீர் என்றாள், எப்போதும் வற்றாது நிற்றல் பற்றி. தன் ஓட்டின்மீது நண்டு புள்ளிகளை உடைமையால் புள்ளிக் களவன் எஃறு சிறப்பித்தாள். 'பொறிவண்டு' என்றாற்போலக் கொள்க. ஆம்பலாவது அல்லியாம். ஈண்டு ஆம்பலின் தண்டினைச் சுட்டிற்று. தெளிப்பவும் என்பதில் உம்மை, தலைவி தலைவன் கூறிய உறுதிமொழியை ஏலாமையைக் குறை கூறுவதனைக் குறித்தது. உண்கண்பசப்பது எவன்கொல்?' என்றாள், அங்ஙனம் அவள் பசப்பது தகாது என்னும் பொருளில்.

அருஞ்சொற்பொருள் : முள்ளி – நீர் முள்ளிச் செடி; காரண இடுகுறிப் பெயர்; நீடிய – மிகுதியாக வளர்ந்துள்ள; நீண்டு வளர்ந்த; முதுநீர் – பழைய நீர்; களவன் – நண்டு; கள்வன் என்றலுமாம். எவன் – என்ன காரணம் பற்றி.

இலக்கணக்குறிப்பு : ஆம்பல் – ஆம்பற்றண்டினைக் குறித்தமையின் ஆகுபெயர். கொல் – அசைநிலை.

மேற்கோள் : நண்டு புள்ளிகளையுடைத்தாதல் :
பொறிமாண் அலவன்
– சிலப். 10 : 91

நண்டு கூரிய உகிருடையது :
கொடுந்தாள் அளைவாழ் அலவன் கூருகிர்
– குறுந். 351.

Koviloor Digital Library

உள்ளுறை : 'முள்ளி நீடிய .... அறுக்கும் ஊரன்' என்றது உள்ளுறை உவமம்.

நண்டு ஆம்பலின் தண்டைத் தன் கூரிய உகிரால் அறுத்துத் தனக்குரியதான அடைகரையின் கண் வாழுமாறு போன்றே தலைவனும் பரத்தையர் தொடர்பினை விட்டொழித்துத் தன் இல்லின் கண் என்றும் பிரியாது வாழ்வான் என்பதனை இது விளக்கி நின்றது.

22

அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேர் அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து, 'இனி
நீயேன்' என்றது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : களவினில் புணர்ந்து, பின்பு வரைந்து கொண்டு ஒழுகா நின்ற தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்றாக, ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவினில் தலைவியைக் கூடிய தலைமகன், உரிய உறுதிமொழிகளைத் தந்து மணந்து கொண்டு இல்லறம் நிகழ்த்திய பொழுது தன் உறுதிமொழிக்கு மாறாகப் புறத்தொழுக்கம் பூண்டு பிரிந்தமை கண்டு வருந்திய தலைவி, தன் தோழியிடம் இங்ஙனம் தன் வருத்த மிகுதியை வெளியிடுகின்றாள்.

உரை : அன்னையே! சேற்றில் அளைந்த புள்ளிகளையுடைய நண்டு முள்ளிச் செடிகளின் வேர்களுக்கிடையே அமைந்த தன் வளையிலே சென்று வாழ்தற்கு இடனான ஊரையுடைய தலைவன், முன்னர் நாம் மகிழுமாறு பல நல்ல மொழிகளைக் கூறி மணந்துகொண்டு, 'இனி நின்னை எஞ்ஞான்றும் பிரியேன்' என்று கூறிய உறுதிமொழி இப்போது என்னவாயிற்று?

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'நல்ல கூறி மணந்து' என்றாள், களவுக்காலத்தே தலைவன் தன்னுடைய நலன்களைப் பலபடப் பாராட்டியும், உறுதிமொழிகள் பலவற்றைக் கூறியும் தன்னை வயப்படுத்தியதனை உட்கொண்டமையான். அந்நாளில் தலைவன் பாராட்டிய பல்வேறு நலன்களும் இப்பொழுதும் தன்பால் இருப்பனவாக, இப்பொழுது அவற்றையெல்லாம் புறக்கணித்தவனாய்ப் பரத்தைமை கொண்டு ஒழுகுதல் அவனுக்குத் தகாது என்பது அவள் கருத்தாகும். தன்னை அவன் மணந்த நாளில், 'இனி நின்னை என்றும் பிரியேன்' என்று உறுதி கூறியவன் இன்று அவ்வுறுதிமொழியை மறந்தது எக்காரணம் பற்றியென அறியாதாள், 'எவன்கொல்?' என்று ஐய வாய்பாட்டால் வினவினாள் என்க. அவன் பிரியுமாறு தன்பால் எக்குறையும் இல்லையென்பது கருத்து.

'நீயேன் என்றல்' என்பதற்கு, அன்று இவ்வாறு கூறியவன் இன்று இவ்வாறு நிலை தடுமாறியது என்று பொருள் கொள்க.

அருஞ்சொற்பொருள் : அள்ளல் - சேறு; ஆடிய - அணிந்த; அளை - வளை; இனி - இப்பொழுது; நீயேன் - பிரியேன்.

இலக்கணக்குறிப்பு : வேரளை - வேர்களின் அடியில் உள்ள வளை ... ஏழன்தொகை.

மேற்கோள் : தலைமகன் பிரியேன் என உறுதி கூறல் :
'சிறு காரோடன் பயினொடு சேர்த்திய
கற்போல் பிரியலம்'
- அகம். 1.

உள்ளுறை : தன் உடல் முழுவதும் சேற்றைப் பூசிக்கொண்ட நண்டு, அதனைச் சிறிதும் கருதாது, அச்சேற்றுடனேயே தன் வளையின்கண் சென்று உறையும் ஊரன் என்றது, தகுதிப்பாடு மிகுதியும் கொண்ட தலைவன், தன் தீயொழுக்கம் பற்றி ஊரவர் சொல்லும் பழிச் சொல் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாது, பரத்தையர் மனைக்குச் செல்கிறான் என்ற கருத்தை உள்ளடக்கியமை கண்டு கொள்க.

Koviloor Digital Library

23

முள்ளி வேர் அளைக் களவன் ஆட்டி,
பூக் குற்று, எய்திய புனல் அணி ஊரன்
தேற்றம் செய்து நப்புணர்ந்து, இனித்
தாக்கு அணங்கு ஆவது எவன்கொல்? – அன்னாய்!

கூற்றும் விளக்கமும் மேலன.

உரை : அன்னையே! இளமகளிர் முள்ளிச்செடியின் வேர்களிடையே அமைந்த வளைகளில் வாழும் நண்டுகளை அலைத்தும், பூக்களைப்பறித்தும் விளையாடி இன்பம் எய்துதற்கு இடனானதும், நீரால் அழகு எய்தியதும் ஆகிய ஊர்க்குத் தலைவனான நம் காதலன், களவுக் காலத்தில் நாம் விரும்பும் வண்ணம் நல்லன பலவும் கூறி நம்மைத் தெளிவித்துக் கூடி இப்பொழுது அதற்கு மாறாகத் தீண்டி வருத்தும் அணங்காவது ஏனோ? யான் அறியேன்.

உரை விளக்கம் : பண்டை மகளிர் நண்டுகளை அவை வாழும் வளையினின்றும் வெளிப்படச் செய்து அவற்றை அலைத்து விளையாடுவது மரபாம். இதனை அலவனாட்டல் என்பர். இங்ஙனமே, பூக்களைப் பறித்தலையும் ஒரு விளையாட்டாகக் கொண்டனர். பிற்காலத்தில் எழுந்த பக்திப்பாடல்களில் 'பூவல்லி' என்று இது பாராட்டப்படுகின்றது. திருவாசகத்தில் உள்ள திருப்பூவல்லி நினையத்தக்கது. நிலத்திற்கு அணி நீராதலின் 'புனல் அணி ஊரன்' எனப்பாராட்டினாள். அவன் ஊர் நீரால் அணிபெற்றதாயினும், தலைவன் தனக்குரிய நன்னீர்மையால் அணி பெறாது பழியை அணியாகக் கொண்டான் என்பது குறிப்பாகக் கொள்க. சொற்பெயராமையும், சேர்ந்தோர் புன்கண் அஞ்சலும் உயர்ந்தோர் ஒழுக்கமாகவும், தம் எதிர்பார்ப்புக்கு மாறாகத் தலைவன் தாக்கி வருத்தும் அணங்கானமை பொறாதவள், 'தேற்றம் செய்து நப்புணர்ந்து, இனித்தாக்கணங்கு ஆவது எவன்?' என வினவினாள்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : ஆட்டி – அலைத்து; குற்று – பறித்து; தேற்றம் – தெளிவுறுத்தல், நம்புமாறு செய்து; அணங்கு – தெய்வம். தாக்குதல் – தீண்டல்.

இலக்கணக்குறிப்பு : நம்புணர்ந்து என்றது நப்புணர்ந்து என்றானது வலித்தல் விகாரம்.

மேற்கோள் : மகளிர் அலவனாட்டி விளையாடல் :

இலங்கு வளை தெளிர்ப்ப அலவ னாட்டி

– ஐங். 197.

– நின்னோடு

சிலை விலங்கு எல்வளை ஞெகிழ
அலவன் ஆட்டுவோள்

– நற். 363.

மகளிர் பூப்பறித்து மகிழ்தல் :

சுனைப்பூக் குற்றும் தொடலை தைஇயும்

– நற். 173.

சுனைப்பூக் குற்றும் தொடலை தைஇயும்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை

– குறுந். 142.

அணங்கு தாக்கி வருத்துதல் :

'தாக்கணங்கு தானைக்கொண்டன்ன துடைத்து'

– திருக். 1082.

உள்ளுறை : 'முள்ளி வேரளைக் களவனாட்டி ...... ஊரன்' : மகளிர், அளையின்கண் வாழும் நண்டுகளை அலைத்துப் பூக்களைப் பறித்து விளையாடி இன்பம் பெறும் ஊரன் என்றதில், தலைவன், மனையின் கண் இல்லறம் நிகழ்த்தும் தன்னைத் தன் தீயொழுக்கத்தால் வருத்திப் பரத்தையர் மனைக்கண்ணே காம இன்பம் நுகர்ந்தான் என்பது உள்ளுறைப் பொருளாக அமைந்தது.

Koviloor Digital Library

24

தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர்
எய்தினன் ஆகின்றுகொல்லோ? மகிழ்நன்
பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலம் கொண்டு துறப்பது எவன்கொல்? –அன்னாய்!

கூற்று : 'பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப் பற்றி ஒழுகுகின்றான்' என்பது கேட்ட தோழி, வாயிலாய் வந்தார் கேட்ப, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரொடு உறவு கொண்டு ஒழுகும் தலைமகன் மீண்டும் தன் மனையாளைச் சேர விரும்பித் தூதுவரை அனுப்பினான். தலைமகன் பல பரத்தையரோடும் உறவு கொண்டு, ஒருத்தியை விடுத்து ஒருத்தியை நாடித்திரிகிறான் என்று அறிந்த தோழி, தலைவனுக்குத் தூதுவராய் வந்தார் கேட்கும் வகையில், தலைவியை இங்ஙனம் வினவினாள்.

உரை : அன்னையே! தன் ஓட்டின்மேல் புள்ளிகளைக் கொண்ட நண்டு தான் பிறந்தவுடனேயே தன்னை ஈன்ற தாய் இறக்கும்படி செய்யும் கொடுமையை உடையது. தான் ஈன்ற பார்ப்பினையே தின்னும் பண்புடையது முதலை. இவ்விரண்டும் மிகுதியாக வாழும் ஊரையுடையவன் நம் தலைவன். அவ்வுயிர்களின் கொடும் பண்பினைத் தலைவன் தானும் மேற்கொண்டான் போலும்! அங்ஙனம் இல்லையெனில், மருத நிலத் தலைவனாகிய நம் காதலன், தான் பொன்னாலான வளையல்கள் ஒலிக்கும்படி தழுவிய மகளிரின் பெண்மை நலத்தை நுகர்ந்து பின்னர் அம்மகளிரைத் துறந்து அவர்களை வாடச் செய்வதற்கு வேறு காரணம் யாதோ?

உரை விளக்கம் : நண்டு கருவுயிர்த்தவுடனே இறந்து படும் இயல்பினதாதலான், அதன் இறப்பிற்கு அதன் குஞ்சுகளே

Koviloor Digital Library

காரணமாதல் பற்றிக் குஞ்சுகளின் கொடுமை கூறுவளாய்த் 'தாய்சாப்பிறக்கும் புள்ளிக் களவன்' என்றாள்.

தானீன்ற பிள்ளையைத் தன்னுயிர் நீத்தும் காக்கும் இயல்புடைய தாய்மைப் பண்பிற்கு முற்றும் மாறாகத் தான் ஈன்ற பிள்ளையை அன்பு சிறிதுமின்றித் தானே இரையாகக் கொள்ளும் இயல்புடைமை நோக்கிப் 'பிள்ளை தின்னும் முதலை' என்றாள்.

தாயிடம் பிள்ளையும், பிள்ளையிடம் தாயும் அன்பு கொள்ளுதல் உலகியலில் இயல்பாகவிருக்க, அதற்கு முற்றும் வேறான தன்மை நண்டினிடத்தும் முதலையிடத்தும் காணப்படுதல் பற்றி, தலைவனின் அன்பற்ற தன்மைக்கு அவை எடுத்துக்காட்டாய் அமைந்தன.

இத்தகு அன்பற்ற உயிர்களுடன் தானும் ஓரூரில் வாழ்தலால், சார்ந்ததன் வண்ணமாகத் தானும் கொடுமைப் பண்பினை எய்தினன் கொல்லோ என ஐயுற்றாள் தோழி என்க. மக்களுள் ஒருவனாய் இருந்தே, விலங்குப் பண்பினனாதலை இங்ஙனம் வியந்தாளாம்.

'பொலந்தொடி தெளிர்ப்ப முயங்கி' என்றது, தலைவன் பரத்தையரை மிகு காமத்தனாய் முயங்கி இன்புற்றான் என்பது பற்றியாம். பரத்தையரின் நலத்தை நுகர்ந்தான் அவர்பால் அன்புடையனாதல் இயல்பு. இதற்கு மாறாக, அவர்களைத் துறந்து செல்லல் கொடுமையின்பாற்பட்டது என்பாள், 'நலங்கொண்டு துறப்பது எவன்கொல்?' என்றாள். பரத்தையர் நலம்கொண்டு பின் அவர்களைத் துறப்பவன் தலைவன். எனவே, மீண்டு வந்தானெனினும், தலைவியையும் அவன் துறந்தேகல் ஒருதலை என்பது தோழியின் குறிப்பாம். இதனைக் கேட்ட தூதர் தாம் வந்த நோக்கம் நிறைவேறாது மீள்வர் என்பது அவள் எண்ணம் ஆகும்.

அருஞ்சொற்பொருள் : தாய் சாப்பிறக்கும் – தாய் சாகுமாறு பிறக்கும்; பிள்ளை – பார்ப்பு; முதலைத்து – முதலையை உடையது; எய்தினன் – மேற்கொண்டனன், அடைந்தனன்;

Koviloor Digital Library

மகிழ்நன் – மருதநிலத் தலைவன்; பொலந்தொடி – பொன்னாலான வளையல்; தெளிர்ப்ப – ஒலிக்கும்படி.

இலக்கணக்குறிப்பு : சாப்பிறக்கும் – சாவப்பிறக்கும் என்பதில் உள்ள வகரம் கெட்டது. 'சாவ என்னும் செயவென் எச்சத்து இறுதி வகரம் கெடுதலும் உரித்தே' (தொல். எழுத். 209) என்னும் விதி கொள்க. முதலைத்து – குறிப்பு வினை முற்று. பொன் + தொடி – செய்யுளாதலின் பொலந்தொடியென்றாயிற்று.

'எய்தினன் ஆகின்று' என்பதில் உள்ள எய்தினன் என்பதற்கு, சேரியிலுள்ளார் கூறுவதனால் இங்கு எய்தினனாயிற்றோ? என்று உரை கூறுவார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை.

தலைவனின் கொடுமைப் பண்பே ஈண்டு விதந்தோதப் படுதலின், தன்னூரில் வாழும் நண்டு, முதலை ஆகிய அஃறிணை உயிர்களின் கொடுமைப் பண்பினையே தானும் எய்தினனோ என்று கோடலே சாலச் சிறந்தது என்க. மக்களுள் ஒருவனாயினும், விலங்குப் பண்பினனாயினமை இதில் குறிக்கப்படுதல் காண்க.

மேற்கோள் : முதலை தன்பார்ப்புத் தின்னல் :
தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை
– ஐங். 41.

நண்டு தாய்சாவப் பிறக்கும் என்பது :
கூற்றமாம் நண்டிற்குத் தன்பார்ப்பு
– சிறுபஞ்ச. 11.

உள்ளுறை : தாய்சாப் பிறக்கும் .... அவனூர் :

நம்முடைய பழைய பெண்மை நலம் முற்றும் அழியும்படி கூறும் பொய்யையும், தனக்குப் பிறர் செய்த நன்மை சிதையும்படி தோன்றும் அன்பின்மையும் உடையவன் தலைவன் என்ற உள்ளுறைப் பொருள் தோன்றுவது நோக்குக.

Koviloor Digital Library

25

புயல் புறம் தந்த புனிற்று வளர் பைங் காய்
வயலைச் செங் கொடி களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு பலர்க்கு
இழை நெகிழ் செல்லல் ஆக்கும் – அன்னாய்!

கூற்று : கூற்றும் விளக்கமும் மேலன.

உரை : அன்னையே! மழையினால் பேணி வளர்க்கப்பட்ட, இளமையை உடைய வளர்கின்ற பசிய காயையுடைய வயலையின் செந்நிறம் கொண்ட கொடியை நண்டு அறுப்பதற்கு இடனான வயல்கள் சூழ்ந்த ஊரையுடைய தலைவன் மார்பு பல பெண்டிர்க்குத் தாம் தம் இழையை நெகிழவிடுதற்குரிய காம நோயை ஆக்கும் தன்மையதாகும்.

உரை விளக்கம் : வயலைச் செங்கொடி வீட்டருகே நட்டு நீரூற்றி வளர்க்கப்படுவதுண்டு. ஈண்டுச் சுட்டப்படுவது வயலருகே வளர்வதாதலின், நீரூற்றி வளர்க்கப்படுவதனினின்றும் வேறுபடுத்துதற்குப் 'புயல் புறம் தந்த' என்று அடையொடு கூறப்பட்டது. 'புனிற்றுவளர் பைங்காய்' என்றாள், அண்மையில் ஈனப்பட்ட, இன்னும் வளர் நிலையிலேயே இருக்கும் காய் என்பது தோன்ற. களவனால் அறுக்கப்படுவது என்றமையான், இவ்வயலைக் கொடி வயலருகே உள்ளது என்பது பெறப்படும். 'பலர்க்கு' என்று வாளா கூறினும், பல பரத்தையர்க்கும் என்று பொருள் கொள்க. செல்லல் என்னும் சொல் பொதுவாக நோய் என்று பொருள்படும். ஆயினும், இழை நெகிழ் என்னும் அடையான், காமநோய் என்பது பெறப்பட்டது. தலைவியொருத்திக்கு மட்டுமே செல்லலாக்கத்தக்க தலைவன் மார்பு, பல பெண்டிர்க்குரியதானமை தோன்றப் 'பலர்க்கு .... செல்லல் ஆக்கும்' என்றாள்.

'அயல்புறம் தந்த' என்று பாடம் கொண்டு மனையின் பக்கத்தே நட்டு வளர்த்த என்று பொருள் கொள்வர் பிறர்.

Koviloor Digital Library

வயலில் வாழும் நண்டு அறுக்கும் என்னும் குறிப்பால், இவ்வயலை மனையிடத்தே வளர்வதன்று என்பது பெறப்படுதலின் இப்பாடம் சிறவாமை அறிக. செடிகொடிகள் மழையால் தழைத்தலைப் புலவர்கள் சிறப்பித்தலை 'அறுகைத் தழங்கு குரல் வானின் தலைப் பெயற்கு ஈன்ற ..... முகை' (அகம். 136) என்பதனாலும் அறிக.

அருஞ்சொற்பொருள் : புயல் – மழை மேகம்; புறம் தந்த – பேணிப்பாதுகாத்த; புனிறு – ஈன்ற அணிமை; கழனி – நெல்வயல்; பலர்க்கு – பல பரத்தையர்க்கு; இழை – அணிகலன்கள்; செல்லல் – துன்பம், வருத்தம்.

மேற்கோள் : தலைவன் மார்பு மகளிர்க்கு நோய் தரல் :

'கணங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மணங்கமழ் வியன்மார்பு அணங்கிய செல்லல்'
– அகம். 22.

உள்ளுறை : 'புயல்புறம் .... அறுக்கும்.'

முற்றாத இளங்காய் அழிந்துபடும் வண்ணம் அதன் தாயாகிய வயலைக் கொடியைக் களவன் அறுக்கும் ஊரன் என்பதன் உள்ளுறைப் பொருளாவது, தலைவியின் இளம்புதல்வன் வருந்துவது உணராது, தலைவன் தன் புதல்வன் தாய்க்குத் துன்பம் செய்கிறான் என்பதாகும்.

26

கரந்தைஅம் செறுவில் துணை துறந்து, களவன்
வள்ளை மென் கால் அறுக்கும் ஊரன்
எம்மும், பிறரும், அறியான்;
இன்னன் ஆவது எவன்கொல்? அன்னாய்!

கூற்று : தலைமகற்கு வாயிலாகப் புகுந்தார், 'நின் முனிவிற்கு அவன் பொருந்தா நின்றான்' என்றவழி, தலைமகட்குத் தோழி, 'அவன் பாடு அஃது இல்லை' என்பதுபடச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைமகன் தூதுவராக வந்தவர் 'தலைவன் நின் சினத்திற்கு அஞ்சி நல்ல நெறியில் வாழ்கிறான்' என்று கூறியது கேட்ட தோழி, தலைமகளுக்குச் சொல்வதுபோல் பாவித்து அவன் இன்னும் திருந்தவில்லை என்பதுபடச் சொல்லியது.

உரை : அன்னையே! கரந்தைக்கொடி படர்ந்த அழகிய வயலில் வாழுகின்ற நண்டு தன் காதலியைப் பிரிந்து போய் வள்ளைக் கொடியின் மெல்லிய தண்டை அறுத்தற்கு இடனான ஊரை உடைய தலைவன் எம்முடைய துன்பத்தினையறிய மாட்டான்; அவ்வாறே பிற மகளிர் துயரத்தையும் உணர மாட்டான். இங்ஙனம் பண்பாடற்றவனாக அவன் ஆகியது என்னையோ?

உரை விளக்கம் : கரந்தை என்பது ஒருவகைக் கொடியாகும். அது மண்டிக்கிடந்தமையால் வயல் அழகுபெற்றுத் திகழ்ந்தது என்பதுபடக் 'கரந்தை அம் செறு' என்றாள். (அம் – அழகிய.) 'செறுவில் துணை துறந்து' என்றாள், களவன் தன் காதல் துணையான பெண் நண்டினை அவ்வயலிலே விடுத்துப் பிரிந்தமை தோன்ற. 'எம்மும்' என்றாள் நம்மையும் என்னும் பொருளில். தலைவன் துறந்துபோனால் தலைவியொடு தோழி தானும் வருந்துவள் என்க. 'அறியான்' என்றது துயரை உணரான் என்ற பொருளிலாகும். பிறர் துயர்களுக்கு வருந்தி அத்துயர் துடைக்கவேண்டிய தலைமைப்பாடே அவன்பால் பிறர் எதிர்பார்ப்பதாகவும், பிறர் பழிதூற்றும் வகையில், தன் தலைமைப் பாட்டுக்குப் புறம்பாக ஒழுகுவது எவ்வாறு என்னும் பொருளில், 'இன்னன் ஆவது எவன்கொல்' என வியந்தாள். இப்படி ஆவான் என்பதனை யாம் முன்பே அறியத் தவறினோமே என்று கழிவிரக்கம் கொண்டாளாம். தன்னை நம்பிச் சேர்ந்தோர் வருந்துமாறு ஒழுகுவது நன்மாந்தர் இயல்பன்று என்றவாறு. அவன் திருந்துவது அரிது என்று கூறி வாயில் மறுத்தாள் என்க.

'எம்மும் பிறரும் அறியான்' என்பதற்கு, 'ஊரன் எமது இயல்பும் பரத்தையர் இயல்பும் நன்கு அறியாது என்று விளக்கம் தருவாரும் உளர். (ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை)

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : செறு – வயல்; அம் – அழகிய; வள்ளை – வள்ளைக்கொடி; கால் – தண்டு; பிறரும் – பிற பெண்டிரையும் (பரத்தையர்).

இலக்கணக்குறிப்பு : அறியான் – உணராதவனாய் ... முற்றெச்சம், எதிர்மறை வினைமுற்றுமாம்; கொல் – அசைநிலை.

உள்ளுறை : களவன் துணை துறந்து வள்ளை மென் காலை அறுக்கும் என்றது, தான் துணையாகக் காதலித்து ஒழுகும் பரத்தையரையும் நீங்கி எம்மையும் வருத்தி ஒழுகுவான் என்ற பொருளை உள்ளுறுத்தது. (பழையவுரை)

27

செந்நெல்அம் செறுவில் கதிர்கொண்டு, களவன்
தண்ணக மண் அளைச் செல்லும் ஊரற்கு
எல்வளை நெகிழச் சாஅய்,
அல்லல் உழப்பது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : தலைமகன் மனைக்கண் வருங்காலத்து வராது தாழ்ந்துழி, 'புறத்தொழுக்கம் உளதாயிற்று' எனக் கருதி வருந்தும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தன் மனைக்கு உரிய காலத்தில் வராது காலந்தாழ்ந்து வந்தான். அதுகொண்டு அவன்பால் பரத்தைமை உண்டு எனக் கவலையுற்ற தலைவிக்குத் தோழி இங்ஙனம் கூறித் தலைவன் பிழையில்லாதவன் எனத் தெளிவுறுத்தியது.

உரை : அன்னையே! நண்டு செந்நெல் விளையும் அழகிய வயலிற் புகுந்து முற்றிய கதிர்களைக் கொய்துகொண்டு தன் குளிர்ச்சி பொருந்திய உள்ளிடத்தையுடைய தன் மண் வளைக்குச் செல்லுதற்கு

Koviloor Digital Library

இடனான ஊரினை உடைய நம் காதலன் பொருட்டாய் ஒளியுமிழும் வளைகள் கழன்று வீழுமாறு உடல் மெலிவுற்று வருந்துவது எதற்கு? (வருந்துதலை ஒழி.)

உரை விளக்கம் : வயல் தன்பாலுள்ள நெற்பயிர் கதிர்முற்றிய நிலையில் அழகிதாகத் தோற்றுதலான், 'செந்நெல் அம் செறுவெனச் சிறப்பித்தாள். இதனால் தலைவன் செல்வச் செழிப்பு உணர்த்தப்பட்டது. தலைவன் தன் கடமையின் பொருட்டு வெளியே சென்று, கடமைக்கண் கருத்தூன்றியிருந்தமையின் காலந்தாழ்த்து வீடு திரும்பினானாக, தன் அன்பு மிகுதியால் தலைவன்பால் புறத்தொழுக்கம் உளதாக ஐயுற்று வருந்தினாள், தலைவி. அவ்வருத்தம் தகாது என்பாளாய், தோழி, 'ஊரற்கு எல்வளை நெகிழச் சாஅய் அல்லல் உழப்பது எவன்கொல்?' என்றாள். எவன்கொல் என்னும் வினா, அவள் வருத்தம் தக்க காரணத்தொடு பட்டதன்று எனவுணர்த்திற்று.

அருஞ்சொற்பொருள் : செறு – வயல்; தண் அகம் – குளிர்ச்சியான உட்பகுதி; அளை – வளை; எல் – ஒளியுடைய ;சாஅய் – மெலிந்து.

இலக்கணக்குறிப்பு : ஊரற்கு – குவ்வுருபு பொருட்டு என்னும் பொருளில் வந்தது.

உள்ளுறை : நண்டு செந்நெற்கதிரைக் கொண்டு தன் மண்ணாலான குளிர்ந்த வளையகத்திற்குச் செல்லும் ஊரன் என்றது தலைவன் தன் முயற்சியாற் பொருளீட்டி அது கொண்டு தன் மனை புகுவான் என்னும் உள்ளுறைப் பொருள் உணர்த்தியவாறு காண்க.

Koviloor Digital Library

28

உண்துறை அணங்கு இவள் உறை நோய் ஆயின்,
தண்சேறு களவன் வரிக்கும் ஊரற்கு
ஒண் தொடி நெகிழச் சாஅய்,
மென் தோள் பசப்பது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : இற்செறித்த இடத்துத் தலைமகட்கு எய்திய வேறுபாடு கண்டு, 'இது தெய்வத்தினான் ஆயிற்று என்று, தமர் வெறி எடுப்புழி, அதனை விலக்கக் கருதியதோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைமகள் ஒரு தலைவன்பால் காதல் கொண்டதனால், அவன் பிரிந்தபோது உடல் மெலிவுற்றாள். அம்மெலிவினைத் தெய்வத்தால் வந்ததாக வுட்கொண்ட அவள் உறவினர் முருகவேளுக்கு வெறியாட்டு நிகழ்த்த முயன்றனர். அஃதுணர்ந்த தோழி, தலைவியின் கற்பினைக் காப்பான் வேண்டிச் செவிலியின்பால் உண்மையை வெளிப்படுத்தும் பொருட்டுக் கூறியது.

உரை : என் அன்னையே! இவள் உற்ற நோய், ஊரார் நீர் உண்ணும் துறையில் உறையும் அணங்கினால் உண்டானது என்று நீ கருதுவையாயின், நண்டு குளிர்ச்சியான சேற்றிலே ஊர்ந்து தன் உகிரினால் கோலமிடுதற்கு இடமாக அமைந்த ஊரன்பொருட்டு, இவள் தன் ஒளி உமிழும் வளைகள் கழன்றோடுமாறு உடல்மெலிந்தும் தன் மென்மையான தோள்கள் பசலையுறுமாறும் வருந்துவது எதன்பொருட்டோ?

உரை விளக்கம் : உண்டுறையாவது நீர்நிலையின்கண் ஊரார் குடிநீர் கொள்வதற்கு இறங்குதற்கு இடனாக அமைந்தது. மாந்தரைத் தீண்டி வருத்தும் அணங்குகள் நீர் நிலையின்கண் தங்கும் என்பது பண்டையோர் நம்பிக்கையாம். 'உண்டுறை உறை அணங்கு இவள் நோய்' என மாற்றிக் கூட்டுக. நோய் ஆயின் என்பதனை, நோய்க்குக் காரணம் ஆயின் எனக் காரணப் பொருட்டாக்குக.

Koviloor Digital Library

இவள் நோய்க்கு அணங்கு காரணம் எனில் ஊரன் பொருட்டு இவள் வளை நெகிழ்வதும், மேனி பசலை கொள்வதும் என் என வினவியமையால், தலைவியின் மெலிவிற்கு ஊரன் ஒருவன்மேல் அவள் கொண்ட காதலே காரணம் எனச் செவிலிக்கு உணர்த்தி வெறிவிலக்கியதன் வாயிலாக, தலைவியின் கற்பினைக் காத்தாளாயிற்று. வெறி விலக்கினாள் என்பது துறை விளக்கத்தால் அறியப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : உண்துறை – நீர் உண்ணும் துறை; அணங்கு – தீண்டி வருத்தும் தெய்வம்; தண்சேறு – குளிர்ந்த சேறு; வரித்தல் – கோலம் செய்தல்; சாஅய் – மெலிவுற்று.

மேற்கோள் : வெறி விலக்கித் தோழி அறநதொடு நிற்றலுக்கு. ஐங்குறுநூற்றின் வெறிப்பத்திலுள்ள தோழி கூற்றுக்களைக் காண்க. வெறி விலக்கல் குறிஞ்சிக்குரியது. கருப்பொருளால் இது மருதமாயிற்று. இனி வருவனவும் இத்தகையனவே.

29

மாரி கடி கொள, காவலர் கடுக,
வித்திய வெண் முளை களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்பு உற மரீஇ,
திதலை அல்குல் நின் மகள்
பசலை கொள்வது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : வரைவு எதிர்கொள்ளார் தமர் அவண் மறுப்புழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவன் வரைவு வேண்டி வரும்பொழுது தலைவியின் சுற்றத்தார் அவனுக்கு இணங்க மறுத்தமை கண்ட தோழி, தலைவி அவனை விரும்பிக் கற்புக்கடம் பூண்டாள் என்பதனைச் செவிலிக்குக் குறிப்பால் உணர்த்தியது.

Koviloor Digital Library

மிகுதியாக உதிரும் ஊரனுக்காக நின் மகள் தன் பேரழகினை இழப்பது யாது காரணத்தால் என யான் அறியேன்.

உரை விளக்கம் : வயல் நண்டின் கண்கள் நீண்டும், வெளிப்பார்வைக்கு வேம்பின் அரும்பு போன்றும் இருத்தலின் 'வேப்பு நனையன்ன நெடுங்கண்' என்றாள். நண்டு வளையின் உட்புறம் நீர் நிரம்பி எப்போதும் குளிர்ந்திருத்தல் பற்றித் 'தண்ணக மண்ணளை' என்றாள்.

நெற்பூவினை 'இரும்பூ' என்றது அதன் மிகுதி நோக்கியாம். 'இரும்பூ உறைக்கும்' என்ற குறிப்பால் இன்னும் கதிர் முற்றாத நிலை உணரப்படும். நெற்பூவாகிய உணவினைத் தான் தேடிச் செல்லாத வகையில் தன் வளையிலேயே நெற்பயிர்கள் மிகுதியாகப் பெய்யும் என்பது கருத்து.

ஊரற்கு என்பதில் குகரம், பொருட்டு என்னும் பொருள் தந்தது. ஊரன்பொருட்டுக் கவின் இழப்பது எவன்? எனக் கொள்க. அவ்வூரன்பால் அவட்குள்ள பெரும் காதலே அவள் நலன் இழத்தற்குக் காரணம் என்றாள் என்க. அத்தகையவனுக்கு மணம் செய்து கொடுக்க மறுத்தால் அவளை அவள் தமர் இழந்துவிடற்கு ஏதுவாகும் என எச்சரித்தாளாம்.

அருஞ்சொற்பொருள் : வேப்பு – வேப்பமரம்; நனை – அரும்பு; நெடுங்கண் – நீண்டகண்; இரும்பூ – மிகுதியான பூ; பெரும்பூ; உறைக்கும் – உதிரும்; கவின் – அழகு.

இலக்கணக்குறிப்பு : வேம்பு வேப்பு என்றானது வலித்தல் விகாரம்; கரும்பு கருப்பானது போன்றது இது.

மேற்கோள் : நண்டின் கண்ணுக்கு வேப்பு நனை உவமை:
வேப்பு நனை யன்ன இருங்கண் ஈர் ஞெண்டு
– அகம். 176.

Koviloor Digital Library

நண்டுவளை குளிர்ச்சியாக இருத்தல்:
களவன் தண்ணக மண்ணளை.

– ஐங். 27.

உள்ளுறை : 'களவன்................உறைக்கும் ஊரன்' என்றது, தலைவன் பொருள்தேடியலையச் சிறிதும் இடனின்றித் தன்னில்லத்திலேயே செல்வத்தை மிகுதியாகக் கொண்டவன் என்னும் பொருளையுட் கொண்டது.

களவன் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

4. தோழிக்கு உரைத்த பத்து

தலைமகள் தன் தோழிக்கு உரைப்பது குறித்த பத்துச் செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.

31

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
கடன் அன்று என்னும் கொல்லோ? - நம் ஊர்
முடம் முதிர் மருதத்துப் பெருந் துறை
உடன் ஆடு ஆயமோடு உற்ற சூளே?

கூற்று : முன் ஒருநாள் தன்னோடு புதுப்புனல் ஆடுழி, இனிப் புறத்தொழுக்கம் விரும்பேன்' என ஆயத்தாரோடு சூளுற்ற தலைமகன் பின்பும் பரத்தையரோடு புனலாடத் தொடங்குகின்றான் என்பது கேட்ட தலைமகள், அவன் உழையர் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் ஒருநாள் தலைவியோடு புதுப்புனல் ஆடி மகிழ்ந்த போது, அவள் தோழியர் முன்னிலையில் 'இனிப்பரத்தையர் தொடர்பினை விரும்பேன்' என உறுதி கூறினான். தான் கூறியதனை மறந்து மீண்டும் புறத்தொழுக்கம் மேற்கொண்டான். அதனை அறிந்த தலைவி, அவன் உதவியாளர் காதில் விழுமாறு தன் தோழிக்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே! நீ வாழ்க! யான் கூறுவதனைக் கேட்பாயாக! நம்மூர்க்கண் உள்ள மிகவும் வளைந்த மருத மரங்களைக் கொண்ட நீர்த்துறையில், நம்முடன் புனலாடிய தோழியர்

Koviloor Digital Library

அறியத் தான் கூறிய சூளுரைகளை மேற்கொள்வது தனக்குக் கடமையன்று என்பானோ தலைமகன்?

உரை விளக்கம் : பலர்முன் தான் சொன்ன உறுதிமொழியை மறந்து மீண்டும் பரத்தையரோடு உறவு கொண்டமையின், சொன்ன சொல்லைக் காத்தல் சான்றோர் கடனாகவும், தான் அது தனக்குக் கடன் இல்லை என்பானோ என வினவினாள். 'நின்ற சொல்லர்' என்று தான் நம்பிய தலைவன் இவ்வாறு நிலை தடுமாறுவது அவட்கு வருத்தம் தந்தது என்க. பலரும் அவனைப் பொய்யன் எனத் தூற்றுவரேயென்று கவன்றாளாம். முடமாவது வளைவு. அதன் முதிர்வாவது மிக வளைந்திருத்தல். இதனை, முடமும் முதிர்வும் உடைய மருதம் என விளக்கலும் ஒன்று. 'பெருந்துறை' என்றாள், தானும் தன் தோழியரும் அன்றி ஊரார் பலரும் நீராடும் பெரிய துறை என்பது நோக்கி. அஃதாவது ஊரறியச் சூளுரைத்தான் என்பது.

முடம்முதிர் மருதம் மிகவுடையது என்றது, யாவரும் எளிதில் ஏறத்தக்கது என்னும்பொருளில். தலைவன் பரத்தையர் பலர்க்கும் எளியன் என்ற பொருள் கொள்ள இதில் இடமுண்மை காண்க.

அருஞ்சொற்பொருள் : மகிழ்நன் – மருதநிலத் தலைவன்; கடன் – கடப்பாடு; முடம் – வளைவு; ஆயம் – தோழியர் குழு.

இலக்கணக்குறிப்பு : அம்ம – கேட்பிக்கும் இடைச்சொல். கொல் – ஐயப் பொருள் தந்த இடைச் சொல்.

32

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
ஒரு நாள் நம் இல் வந்ததற்கு, எழுநாள்
அழுப என்ப, அவன் பெண்டிர் –
தீ உறு மெழுகின் ஞெகிழ்வனர் விரைந்தே.

Koviloor Digital Library

கூற்று : வாயில் வேண்டிப் புகுந்தார் கேட்பத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் பொருட்டுப் பிரிந்திருந்த காலத்தில், தன் மனைக்கு மீளக் கருதிப் பாணர் முதலியோரைத் தலைவிபால் தூதுவராக அனுப்பினான். அவர் இல்லத்திற்கு வந்த பொழுது, அவர்கள் கேட்குமாறு தலைவி தோழிக்குச் சொல்லியது இது.

உரை : தோழியே! நீ வாழ்க! யான் கூறுவதைக் கேள். நம் தலைவர் ஒரு நாள் நம் இல்லத்திற்கு வந்தது பொறாது, அவன் காதலிக்கும் பெண்டிர் தீயில் பட்ட மெழுகுபோல் உள்ளம் விரைவாக உருகுமாறு, ஏழுநாள் வருந்துவர் என்பர். (அங்ஙனமாக அவன் ஈண்டு வருவதாகத் தூது விடுவது என்ன கருதி?)

உரை விளக்கம் : எப்பொழுதும் பிரியாது வாழ்வதற்குரிய வீட்டிற்கு ஒருநாள் வந்தான். அவ்வப்போது வந்து செல்லும் அயலோர் வீடுபோலத் தன் இல்லத்தைக் கருதியும், பரத்தையர் மனையே தன் மனையாகக் கருதியும் வாழ்கிறான் தலைவன் என்பாளாய், 'ஒருநாள் நம்மில் வந்ததற்கு' என்றாள். 'எழுநாள்' என்பது பலநாள் என்னும் பொருள் தந்தது. 'என்ப' என்றாள், இதனைப் பலரும் அறிவர் என்னும் குறிப்பில். 'அவன் பெண்டிர்' என்று உரிமைப் படுத்துக் கூறினாள், பரத்தையரையே தன் மனைவியர் போல் கருதுவான் தலைவன் என்னும் கருத்தில். அஃதாவது, விதிப்படி மணந்த மனைவி ஒருத்தி இருப்பதாக அவன் கருதிட மறந்தான் என நொந்தாள் என்க. தீப்பட்டவுடன் உருகுவது மெழுகு. ஒருநாள் வந்ததற்கே விரைந்து உருகுவார், பலநாள் வரின் உயிர் தரியார் என இகழ்ச்சி தோன்றக் கூறினாள். அவர் பொருட்டாக அவன் அங்கேயே வாழ்தல் நன்று என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : மெழுகின் – மெழுகைப்போல; நெகிழ்வனர் – உள்ளம் நெகிழ்ந்தவராய்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : மெழுகின் – 'இன்' ஐந்தன் உருபு, ஒப்புப் பொருளில் வந்தது. உறழ்ச்சிப் பொருளில் வந்ததுமாம். நெகிழ்வனர் – முற்றெச்சம். நெகிழ் என்பது ஞெகிழ் ஆனது முதற்போலி. வந்ததற்கு – குவ்வுருபு பொருட்டுப் பொருள் தந்தது.

மேற்கோள் : ஒருநாள் ஏழு நாளாகத் தோன்றல்:
'ஒருநாள் எழுநாள்போல் தோன்றும்'
– திருக். 1269.

பரத்தையரை அவன் பெண்டிர் எனல் ;
பெண்டிரொடு ஆடும் என்ப
– ஐங். 33.

பெண்டிர் ஊர் இறை கொண்டனன்
– ஐங். 40.

33

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
மருது உயர்ந்து ஓங்கிய விரிபூம் பெருந் துறை,
பெண்டிரொடு ஆடும் என்ப – தன்
தண்தார் அகலம் தலைத்தலைக் கொளவே.

கூற்று : மேலது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் கூறுவதொன்றைக் கேள். நம் தலைவன் மருத மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ள பூக்கள் நிரம்பிய பெரிய துறையின்கண், (தனக்கு விருப்பமான) பெண்டிரொடு புனலாடி மகிழ்வதாகப் பலர் கூறுகின்றனர். அப்போது, அவனுடைய குளிர்ந்த மாலைகள் அணிந்த மார்பினை ஒவ்வொருவரும் தழுவிக்கொண்டதாகவும் கூறுகின்றனர்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'உயர்ந்து ஓங்கிய' என்றாள் மரங்கள் மிகவுயர்ந்து வளர்ந்திருப்பது பற்றி.. நீர்த்துறையாதலின் விரிபூக்கள் என்பன தாமரை, அல்லி, குவளை முதலிய நீர்ப்பூக்களாகும். தலைத்தலைக் கொளலாவது, ஒவ்வொருவரும் அவன் மார்பைத் தத்தமக்கு உரியதாகக் கருதித் தம்முள் போட்டியிட்டுத் தழுவல். ஈண்டுக் கொளல் என்றது புணையாகத் தழுவுதலை. தலைவன் மார்பைத் 'தண்டார் அகலம்' என்றது அது தரும் ஊற்றின்பம் கருதி என்க. தலைத்தலை என்றாள் தான் ஒருத்திக்கே உரியதனைப் பலரும் உரிமை கொண்டு தழுவினர் என்பதனைக் குறிக்க.

அருஞ்சொற்பொருள் : தலைத் தலை - ஒவ்வொருவரும்; கொள - தெப்பமாகக் கொள்ள; தண்டார் - குளிர்ந்த மாலை. குளிர்ச்சியை மார்பிற்கு ஏற்றுக.

மேற்கோள் : தலைவன் மார்பைப் பலரும் தழுவி நீராடல்:
மார்பு தலைக் கொண்ட மாணிழை மகளிர்
....
....
கடல் மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன்வீழ்பு
பலர்கொள் பலகை போல
வாங்க வாங்க நின்று ஊங்கு அஞர் நிலையே.
- நற். 30.

தலைவன் மார்பு புணையாதல் :
ஆர்கலி வெற்பன் மார்பு புணையாக .... அருவி
யாடுதல் இனிதே
- குறுந். 353.

Koviloor Digital Library

34

அம்ம வாழி, தோழி! நம் ஊர்ப்
பொய்கைப் பூத்த, புழைக் கால் ஆம்பல்
தாது ஏர் வண்ணம் கொண்டன –
ஏதிலாளர்க்குப் பசந்த என் கண்ணே.

கூற்று : மேலது.

உரை : தோழி! நீ வாழ்க! யான் சொல்வதனைக் கேள். அன்பில்லாதவனாய் ஒழுகும் நம் காதலன் பொருட்டு என் கண்கள் நம்மூரில் உள்ள இயற்கை நீர்நிலையின்கண் பூத்த உட்டுளை பொருந்திய தண்டினைக் கொண்ட அல்லியின் தாது போன்ற பொன்னிறத்தை அடைந்தன.

உரை விளக்கம் : ஏதிலராவர் யாரெனின் நம்மாட்டு யாதொரு தொடர்பும் இல்லாதவர். நம் நன்மை கண்டு மகிழ்தலும், துன்பம் கண்டு வருந்தலும் செய்யாதவர் என்க. தலைவன் அன்பு மாறிப் புறவொழுக்கம் மேற்கொண்டமையின் தன் புலவி தோன்ற 'ஏதிலாளர்' என்றாள். யாதும் தொடர்பற்ற அவர் ஈண்டு வருதற்கு ஏது இலர் – யாதொரு காரணமும் இலர் எனினும் பொருந்தும். தலைவரின் கொடுமையொழுக்கமே தன் கண்கள் பசப்புறக் காரணம் என்பாளாய் 'ஏதிலாளர்க்குப் பசந்த' என்றாள். பூப்போன்ற தன் அழகிய கண்கள் ஏதிலாளன் பொருட்டுப் பசந்து தம் நலம் இழந்தன என்பாள் 'தாதேர் வண்ணம் கொண்டன' என்றாள். ஆம்பல் தண்டு உள்ளே துளையுடையதனை மறைத்துத் தோன்றுவது போல் நம் காதலரும் தன் அன்பின்மையைச் சொல் முதலியவற்றால் மறைத்து ஒழுகுவார் என்பாளாய்ப் 'புழைக்கால் ஆம்பல்' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : புழை – துளை; கால் – தண்டு; ஆம்பல் – அல்லி; தாது – மகரந்தப் பொடி; ஏதிலாளர் – தொடர்பற்றவர்.

இலக்கணக்குறிப்பு : கண் – கண்கள் பால்பகா அஃறிணைப் பெயர்; ஏர் – உவம உருபு.

Koviloor Digital Library

மேற்கோள் : ஆம்பல் தண்டு உட்டுளை கொண்டது:
தூம்புடைத் திரள்கால் ஆம்பல்
– குறுந். 178.

நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள் கால்
– நற். 6.

கண்கள் பசலையுறுதல் :
பூப்போல் உண்கண் பொன்போர்த் தனவே
– ஐங். 16.

அன்பற்ற தலைவனை ஏதிலாளன் எனல்:
சிறு வீ ஞாழல் பெருங்கடற் சேர்ப்பனை
ஏதி லாளனும் என்ப
– நற். 74.

35

அம்ம வாழி, தோழி! நம் ஊர்ப்
பொய்கை ஆம்பல் நார் உரி மென் கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே;
இனிப் பசந்தன்று, என் மாமைக் கவினே.

கூற்று : வாயிலாய்ப் புகுந்தார் தலைமகன் குணம் கூறிய வழி, 'அவனுக்கு இல்லாதனவே கூறுதலால், இப்பொழுது காண் என் மேனி பசந்தது' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் விடுத்த வாயில்கள் தலைவன் நற்பண்பினன் என்பது தோன்றப் பலவாறு புகழ்ந்து அவனை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தினர். அதுகேட்ட தலைவி, தன் கணவனுக்கு இல்லாத பண்புகளை இருப்பனவாகக் கற்பித்துக் கூறியதனை ஏற்காது, தன் மேனி பசப்புற்றதாகத் தோழியிடம் கூறி, வாயிலாரை விலக்கினாள்.

Koviloor Digital Library

உரை : தோழியே! நீ வாழ்க! யான் கூறுவதொன்றைக் கேள். என் மாமைக்கவின் நம்மூரின்கண் உள்ள பொய்கையில் வாழும் ஆம்பலின் நார் உரிக்கப் பட்ட தண்டினும் மிகுதியாக ஒளிர்ந்த காலம் ஒன்றிருந்து. அஃது இப்பொழுது கழிந்தது. இப்பொழுது, அது தன் சிறப்பழிந்து பசலையுற்றது காண்.

உரை விளக்கம் : நிழற்றுதலாவது ஒளிவிடுதல். ஆம்பலின் தண்டு இயல்பாகவே மென்மையும் மினுமினுப்பும் கொண்டது. அதன் நார் உரிக்கப்பட்ட நிலையில், அதன் ஒளி பன்மடங்கு சிறந்து காட்டும். அத்தகைய அல்லித் தண்டினும் மிகுந்த ஒளியுடைத்தாக இருந்த தன் மாமை, வாயிலாக வந்தார் தன் கணவன்பால் இல்லாத நற்பண்புகளைப் பாராட்டியது அறிந்து தன் சிறப்பை இழந்தது என்றாள் தலைவி. தன் மன உளைச்சலைத் தன் மேனியே வெளிப்படுத்திற்று என்பது.

'நிழற்றுதல்' என்பதற்கு, நிழற்றுதல் ஒழித்து என்று பொருள் கொள்க. அவன் பிரிந்த ஞான்றும் எப்படியோ நிலைத்திருந்த என மாமை இவர்கள் இல்லாததைச் சொன்னதால் அதிர்ச்சியுற்றுப் பசந்தது என்றாளாம். அவன் பிரிந்த கொடுமையினும் வாயில்களின் பொய்யுரையாகிய கொடுமை பெரிது என்றாள். மன்னைச் சொல் கழிவுப் பொருள் தந்தது. மாமையாவது அழகு. அஃதாவது கருநிறத்தோடு கூடிய அழகாம். நோயின்றி இயன்ற யாக்கை நலமும், அழகு திகழும் இளமை நலமும் ஒருங்கு விளங்கும் மகளிரது மேனி நிறம் மாமை என்பார் துரைசாமிப் பிள்ளை.

இனிப்பசந்தது என்றாள், இதுகாறும் சிறந்திருந்தமை புலப்பட.

அருஞ்சொற்பொருள் : மென்கால் – மெல்லிய தண்டு; உரி – உரிக்கப்பட்ட; நிழற்றுதல் – ஒளிர்தல்; மாமை – மேனி அழகு.

இலக்கணக்குறிப்பு : மன் – கழிவுப் பொருள் தந்த இடைச் சொல்.

Koviloor Digital Library

மேற்கோள் : மாமை நாருரித்த ஆம்பல்தண்டு போல்வது:
நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்
நார் உரித்தன்ன என் மதனில் மாமை
– நற். 6.

36

அம்ம வாழி, தோழி! ஊரன்
நம் மறந்து அமைகுவன் ஆயின், நாம் மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம் மன்னே –
கயல் எனக் கருதிய உண்கண்
பயலைக்கு ஒல்காவாகுதல் பெறினே.

கூற்று : தான் வாயில் நேரும் குறிப்பினளானமை அறியாது, தோழி வாயில் மறுத்துழி, அவள் நேரும் வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனால் அனுப்பப்பட்ட பாணர் முதலான வாயில்கட்கு, உடம்பட்டு வாயில்நேர எண்ணியிருந்தாள் தலைவி. ஆனால் அவள் தோழி, இவள் மனக்கருத்தை அறியாளாய் வாயில் மறுத்தாள். அப்போது, தோழியும் தன் கருத்திற்கு இசையுமாறு தலைவி அவளைத் தெருட்டியது இது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் சொல்வதனைக் கேள். ஊரனாகிய நம் காதலன் நம்மை நினையாது மறந்திருக்க இயலுமாயின், கயல் மீன்களோ எனக் கண்டார் மருளும் அழகுடைய என் மையுண்ட கண்கள் பசலை நோய்க்கு ஆட்பட்டுத் தளர்ச்சியுறவில்லையெனில், யாமும் அவனை நினையாது மறந்திருத்தலையும் ஒருகால் வல்லோம் ஆவோம்.

உரை விளக்கம் : கண்டாரெல்லாம் கயலோவென ஐயுற்று வியந்த கண்கள் தலைவன் பிரிவையாற்றாமல் அழகிழந்து நிறம்

Koviloor Digital Library

கெட்டனவாதலின், தலைவனை ஏற்றுக்கொள்வது தவிர வேறு வழியில்லை என்பாளாய், 'பயலைக்கு ஒல்காவாகுதல் பெறினே... அமைகுவம்' என்றாள். 'மன்னே' என்றாள், அங்ஙனம் ஆகாமை குறித்து. அவள் மனக்கருத்தையே கண்கள் பசந்து புலப்படுத்தின. என்பொருட்டாக ஏலாவிடினும், கண்கள் பொருட்டாவது ஏற்பது கடன் என்றாள். 'ஊரன் நம் மறந்து அமைகுவன் .... ஆயின், நாம் மறந்து .... அமைகுவம்' என்றாள், 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்' என்னும் பெருந்தகைப் பெண்டிர் இயல்பையொட்டி. அவர் தம் சிறுமையால் நம்மை மறந்து அமையினும் நம் பெருமையால் அவரை மன்னிப்பது சால்பு என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : உள்ளாது – நினையாது; அமைதல் – பொருந்தியிருத்தல்; உண்கண் – மையுண்ட கண்கள்; பயலை – பசலை; ஒருவகை விளர்ப்பு வண்ணம். ஒல்குதல் – தளர்தல், சுருங்குதல்.

இலக்கணக்குறிப்பு : பயலை – பசலை என்பதன் போலி; மன் – ஒழியிசை.

மேற்கோள் : தலைவன் பொருட்டுக் கண் பசத்தல் :

– நாடன்
நோய் தந்தனனே தோழி
பசலை யார்தந்தன குவளையம் கண்ணே.
– குறுந். 13.

– மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து பனிமல்க
– ஐங். 37.

ஏதிலாளர்க்குப் பசந்த என் கண்ணே
– ஐங். 34.

Koviloor Digital Library

37

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
நயந்தோர் உண்கண் பயந்து, பனி மல்க
வல்லன் வல்லன் பொய்த்தல்;
தேற்றான், உற்ற சூள் வாய்த்தல்லே.

கூற்று : தலைமகளைச் சூளினால் தெளித்தான் என்பது கேட்ட காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தன்னைப் பிரிந்து தலைவிபால் மீண்டு 'இனிப் பிரியேன்' என உறுதிமொழிகள் பலவும் கூறித் தேற்றினான் என்பதுகேட்ட காதற் பரத்தை, தலைவியின் தோழியர் கேட்கும் வண்ணம் அவன் சூள்பொய்க்கும் இயல்பினன் என்பதுபடத் தன் தோழிக்குச் சொல்லியது இது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் கூறுவதனைக் கேள். மகிழ்நன் தன்னை விரும்பி வாழும் பெண்டிரின் மையுண்ட கண்கள் பசப்புற்று நீர் நிறையுமாறு பொய்த்தலில் மிக மிக வல்லனாவான். அவன் தான் செய்த சூளை மெய்ப்பித்தலை ஒரு போதும் அறியான்.

உரை விளக்கம் : காதற் பரத்தையாவாள் பொது மகளாகப் பலர்க்கு உரிமை பூண்டாளன்றி, பரத்தையின் மகளாகப் பிறப்பினும் ஒருவன் தனக்கே உரிமை பூண்டு வாழ்பவள். தன் காதலன் தனக்குக் கூறிய உறுதிமொழிகளை மறந்து இப்பொழுது தன் மனைவிபால் மீளவின், தனக்கு நேர்ந்த துன்பத்தினைப் பட்டறிவால் அறிந்தவளாதலின் 'பொய்த்தல் வல்லன் வல்லன்' என்றாள் என்க. அடுக்கு மிகுதிப் பொருட்டும், இடைவிடாமைப் பொருட்டும் ஆம். அவன் ஒன்றில் வல்லான் எனின், தன்னை நம்பினாரை வஞ்சித்து வருந்தச் செய்தலிலேயே, வேறொன்றிலும் அன்று என்பது அவள் கருத்தாம். அத்தகையோன் இப்பொழுது தலைவியிடம் உறுதி மொழி கூறுகின்றானெனில், தன் இயல்புப்படி அவளையும் ஏமாற்றி வருந்தச்

Koviloor Digital Library

செய்வது உறுதி என்றாளாம். தன்னையும் தன்னைப் போலும் பிற பரத்தையரையும் மட்டுமன்றித் தன்னை விதிப்படி மணந்தவளையும் வஞ்சித்தலை அவன் இயல்பாகக் கொண்டவன் என்று இழித்தவாறு. அவன் பல பரத்தையரோடு உறவு கொண்ட தண்டாப்பரத்தன் என்பது 'நயந்தோர்' என்ற பன்மை வாய்பாட்டால் தெளிவாயிற்றாம். இது கேட்கவே, தலைவி ஊடி விலக்குவாள் என்பதும், அவன் மீண்டும் தன்பால் வருவான் என்பதும் அவள் கருத்தாகும்.

அருஞ்சொற்பொருள் : நயந்தோர் – விரும்பிய பெண்டிர்; பனிமல்க – கண்ணீர் பெருக; வல்லன் – வன்மையுடையான் (சமர்த்தன்) தேற்றான் – தெளியான்; வாய்த்தல் – கடைப்பிடித்தல்.

இலக்கணக்குறிப்பு : வல்லன் வல்லன் – அடுக்குத் தொடர்; பொய்த்தல் – தொழிற்பெயர்; வாய்த்தல்லே – வாய்த்தலே என்பதன் விரித்தல் விகாரம்.

38

அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
தன் சொல் உணர்ந்தோர் அறியலன் – என்றும்
தண் தளிர் வெளவும் மேனி,
ஒண் தொடி முன் கை, யாம் அழப் பிரிந்தே.

கூற்று : தலைமகன் மனைவயிற் போகக் கருதினான் என்பது சொல்லிய தன் தோழிக்குப் பரத்தை சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தை மனையில் இருந்து தன் மனைக்குச் செல்ல விரும்பியதைத் தோழி வாயிலாகக் கேட்ட பரத்தை அவட்குச் சொல்லியது.

உரை : தோழியே! யான் சொல்வதைக் கேள். நீ நெடிது வாழ்க. தலைவன் தண்ணிய மாந்தளிர் அழகினைக் கவர்ந்து

Koviloor Digital Library

கொண்ட மேனியையும் ஒள்ளிய தொடியணிந்த முன்கையையும் உடைய நாம் அழும்படியாக நம்மைப்பிரிந்து செல்ல எண்ணினானெனில் தன் சொல்லை மெய்யெனத் தெளிந்தவர்களின் நிலையை அவன் என்றும் உணராத தன்மையனேயாம்.

உரை விளக்கம் : தன்னுடைய மேனி தண்ணியதும் ஒளிபொருந்தியதுமான மாந்தளிரின் அழகினைத் தன்னுடைய தாக்கிக் கொண்டது என்பாளாய், 'வௌவும் மேனி' என்றாள். அவள் மேனி மாந்தளிரையொத்த குளிர்ச்சியும் நிறமும் ஒளியும் உடையது என்பது கருத்து. யாம் அழுதலையும் பொருட்படுத்தாமல் தன் மனைக்குத் திரும்புவது அவன் கருத்தாயின், அவன் அன்பற்றவன் என்பது தெளிவு. அவனுடைய இச்செயல் அறமற்றது என்பாள், தன் சொல்லை நம்பியோரின் அவலத்தை அவன் உணரும் அறிவில்லாதவன் என இழித்துரைத்தாள் என்க. நிலம் பெயர்ந்தாலும் தம் சொல் பெயராமை பெரியோரின் பண்பாகவும், இவன் அதற்கு மாறாக ஒழுகுவதனால் பெரியோனாக நாம் மதித்து அவனை ஏற்றுக் கொண்டது நம் அறியாமையே என்பது பட இங்ஙனம் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : வௌவுதல் – கவர்தல்.

இலக்கணக்குறிப்பு : தண்டளிர் – ஆகுபெயர், தளிரின் அழகைக் குறித்தலான்; ஒண்டொடி முன்கை – அன்மொழித் தொகை.

மேற்கோள் : மாந்தளிர் மேனிக்கு உவமை :
நறுவடிப் பைங்கண் மாஅந்தளிர்
அன்ன நன்மா மேனி

– குறுந். 331.

Koviloor Digital Library

39

அம்ம வாழி, தோழி! ஊரன்
வெம்முலை அடைய முயங்கி, நம் வயின்
திருந்து இழைப் பணைத்தோள் நெகிழ,
பிரிந்தனன் ஆயினும், பிரியலன் மன்னே.

கூற்று : ஒரு ஞான்று தலைவன் தன் மனைக்கண் சென்றது கொண்டு, 'அவன் பெண்மை நலம் எல்லாம் துய்த்துக் காதல் நீங்கிப் பிரிந்தான்' என்று தலைவி கூறினாள் எனக்கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : ஒரு நாள் தலைவன் பரத்தையை நீங்கித் தன் வீடு திரும்பியபொழுது அவன் மனைவி, பரத்தையின் பெண்மை நலமெல்லாம் துய்த்து அன்பின்றிப் பிரிந்ததாகக் கூறினாள். அதனைக் கேள்வியுற்ற பரத்தை, தலைவிக்குப் பாங்கானவர்கள் கேட்குமாறு, தன் தோழிக்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே! நீ வாழ்க! யான் சொல்வதனைக் கேட்பாயாக! ஊரன் நம்முடைய விரும்பத்தக்க முலைகளைத் தன்மார்போடு நன்கு பொருந்துமாறு அணைத்துப்பின் நம்மிடமிருந்து பிரிந்து, திருத்தமுறச் செய்யப்பட்ட அணிகளால் அழகுபெற்ற நம் பருத்த தோள்கள் மெலியுமாறு பிரிந்து சென்றான் எனினும், அவன் பிரிந்தவன் அல்லன்.

உரை விளக்கம் : தலைவன் நம்மைப் பிரிந்தான் என்பது உண்மைதான் என்றாலும் அவன் விரைவில் மீண்டும் இங்குவரத்தவறான் என்பாளாய், 'பிரிந்தனனாயினும் பிரியலன்' என்றாள். தலைவன் தன்பாலே மிகுதியான அன்புடையன் எனத் தலைவி கருதவேண்டும் என்பது அவள் விருப்பம் என்க. 'நம் விரும்பத்தக்க முலையை நன்கு முயங்கிப் பிரிந்தவன்' என்றாள், அம்முயக்கத்தின் இன்பம் அவனால் எளிதில் மறக்கத்தக்கதன்று என்னும் கருத்தில். வேண்டா வெறுப்போடு முயங்குவார் அடைய

Koviloor Digital Library

முயங்கார் ஆதலால், தலைவன் தன்னை ஆழ்ந்த அன்போடு தழுவினான் என்பது பட அடைய முயங்கினான் என்றாள். 'ஓரூர் வாழினும் சேரி வாரார் சேரி வரினும் ஆர முயங்கார்' என்று பிறரும் கூறுவர். (குறுந். 231)

அருஞ்சொற்பொருள் : வெம்முலை – விருப்பமூட்டும் முலை; அடைய – பொருந்துமாறு; நம்வயின் – நம்மிடமிருந்து; திருந்திழை – நன்கு செய்யப்பட்ட அணிகள்; நெகிழ – நெகிழுமாறு.

இலக்கணக்குறிப்பு : ஞெகிழ – நெகிழ என்பதன் போலி.

இனி, இச்செய்யுளை, ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி, அவன் நம்மைப் பிரிந்தானாயினும் நினைவினும் கனவினும் ஓவாது நம் வயின் வரலான் அது கொண்டு நோக்கின் அவன் நம்மைப் பிரிந்தானும் அல்லன். ஆகவே நான் ஆற்றுவன் என்பது படக் கூறியது எனக்கோடல் சிறப்பு என்பார், பெருமழைப்புலவர். இங்ஙனமே இடைக்காலத்து உரையாசிரியர்களும் பல செய்யுட்களைப் பழைய உரையிலுள்ள கிளவிகளினும் வேறான கிளவிகட்கு உரியவாக்குதலைப் பரவலாகக் காணலாம்.

40

அம்ம வாழி தோழி மகிழ்நன்
ஒண் தொடி முன் கை யாம் அழப் பிரிந்து தன்
பெண்டிர் ஊர் இறை கொண்டனன் என்ப
கெண்டை பாய்தர அவிழ்ந்த
வண்டு பிணி ஆம்பல் நாடு கிழவோனே.

கூற்று : உலகியல் பற்றித் தலைவன் தன் மனைக்கண் ஒரு ஞான்று போனதே கொண்டு அவ்வழிப் பிரியாது உறைகின்றான் என்று அயற்பரத்தையர் பலரும் கூறினாரென்பது கேட்ட காதற் பரத்தை அவர் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : நெடுங்காலம் தலைவன் பரத்தை வீட்டில் இருந்தான். ஒருநாள் தன் இல்லம் சென்றான். அதுகண்ட பிற பரத்தையர், தலைவன் காதற் பரத்தையைக் கைவிட்டுத் தன் வீட்டிலேயே உறைகிறான் என்றனர். இதைக்கேட்ட காதற்பரத்தை, அப்பரத்தையர்க்கு நட்புடையார் காதிற்படுமாறு தன் தோழிக்கு இவ்வாறு கூறினாள்.

உரை : தோழியே, நீ வாழ்க! நான் சொல்வதற்குச் செவி கொடுப்பாயாக! மகிழ்நன், ஒளிபொருந்திய தொடியணிந்த முன் கைகளை உடைய நாம் வருந்தி அழுமாறு பிரிந்து, தன் கிழத்தியர் உறையும் ஊரிலேயே நிலையாகத் தங்கினான் என்கின்றனர். அன்னோர், அவன் கெண்டை மீன்கள் தம்மீது பாய்தலினால் மலர்ந்து வண்டுகளைப் பிணித்துக் கொள்ளும் ஆம்பல் மலர்கள் நிறைந்த நாட்டின் தலைவன் என்பதனை அறியார். (அறிந்தவர் எனில் இவ்வாறு கூறார்.)

உரை விளக்கம் : 'தன் பெண்டிர்' என்று பரத்தையால் குறிக்கப்பட்டோர் தலைவனை மணந்தோராவர். இதனால் ஒருவருக்கு மேற்பட்டவரைத் தன் கிழத்தியராகக் கொண்டவன் தலைவன் என்றாயிற்று. 'இறைகொண்டனன்' என்றது நிலைத்துத் தங்கினான் என்னும் பொருட்டு. 'என்ப' என்றாள், அங்ஙனம் சொல்வோர் உண்மையறியா மடவோர் என்பதுபட. ஆம்பல்மலர்கள் மீன்கள் பாய மலரும் என்றது நாட்டின் நீர்வளத்தைப் பாராட்டியதாகும். அம்மலர்கள் தேன் நிரம்பியிருந்தமையின் வண்டுகளைத் தம் போக்கில், பிற மலர்களை நாடிப் போகவொட்டாமல் தடுத்தனவென்க.

அருஞ்சொற்பொருள் : பாய்தர – பாய; அவிழ்ந்த – மலர்ந்த; வண்டுபிணி – வண்டுகளைப் பிணிக்கும்; கிழவோன் – உரிமையுடையோன்.

இலக்கணக்குறிப்பு : பாய்தர – தர துணை வினை; பிணி ஆம்பல் – வினைத்தொகை; வண்டு பிணி – இரண்டாம் வேற்றுமைத் தொகை.

Koviloor Digital Library

மேற்கோள் : மீன் பாய்தலால் தாமரை மொட்டு மலர்தல் :
'தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்ட
லரும் திருவையாறே'
(ஊன்பாயும் எனத் தொடங்கும் திருஞான
சம்பந்தர் தேவாரப் பாட்டு)

உள்ளுறை : வண்டுபிணி ஆம்பல் ஊரன் தலைவன் எனவே, சிலபோது பிற இடங்களிலும் செல்வதுண்டெனினும் அவற்றை மீண்டும் தம்பால் வருவித்துக் கொள்ளும் இயல்புடைய தேனைத் தம்பால் உடையவாய் அவற்றைப் பிணித்துக் கொள்ளுவது போன்று, தலைவன் உலகியல்பற்றித் தன் மனைக்குச் சென்றானாயினும் மீண்டும் தன் மனையை நாடி வருமாறு செய்யும் அழகும் பெண்மை நலமும் தன்னிடம் உண்டு என்று அவள் கூறியதாக உள்ளுறை கொள்க. (பெருமழைப்புலவர்)

தோழிக்கு உரைத்த பத்து முற்றிற்று

Koviloor Digital Library

5. புலவிப் பத்து

காமப்புணர்ச்சி சிறப்புறுதற்கு உதவும் புலவி என்பதனைப் பொருளாகக் கொண்ட பத்துச் செய்யுட்களின் தொகுதி புலவிப்பத்தாயிற்று.

41

'தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையோடு
வெண் பூம் பொய்கைத்து, அவன் ஊர்' என்ப;
அதனால்
தன் சொல் உணர்ந்தோர் மேனி
பொன் போல் செய்யும் ஊர்கிழவோனே.

கூற்று : கழறித் தெருட்டற் பாலராகிய அகம் புகல் மரபின் வாயில்கள் புகுந்துழி, தலைவனையும் பாணன் முதலாகிய பக்கத்தாரையும் இகழ்ந்து, தலைவி கூறியது.

கூற்று விளக்கம் : தலைமக்களிடையே பூசல் நிகழ்ந்துழி, தவறுகளைச் சுட்டிக்காட்டித் தெளிவிக்கும் உரிமைகொண்ட பாணர், கூத்தர், அறிவர் முதலானோர் தலைவன் விடுக்கத் தலைவிபால் வந்த பொழுது, தலைவன் ஒழுகலாறு பற்றி வெறுப்புக் கொண்ட தலைவி, தலைவனையும் அவன் வாயில்களையும் இகழ்ந்துரைப்பது.

உரை : தான் ஈன்றெடுத்த பார்ப்பினைத் தானே உண்டு பசிதீரும் அன்புணர்ச்சியற்ற முதலையையும், வெண்ணிறப் பூக்களைக் கொண்ட பொய்கைகளையும் கொண்டது தலைவனுடைய ஊர் என்பர். அதனால், அவ்வூரின் தலைவனும் தன் சொல்லை

Koviloor Digital Library

மெய்யென்று தெளிந்திருப்போர் மேனியில் தன் பிரிவினால் பொன்னிறம் கொண்ட பசலையூரச் செய்பவனாயினான்.

உரை விளக்கம் : அன்பிற் சிறந்தது தாயன்பு. ஆனால் முதலையோ தானீன்ற பார்ப்பினைத் தானே தின்று மகிழும் கொடும் பண்பினை உடையது. அதனால், அதன் மிகு கொடுமை விளங்குமாறு 'தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை' என்றாள். தாய்க்கே சிறப்பாகவுரிய அன்பு அதற்கு இல்லையென்பது.

வெண்பூவென வாளா கூறினும், வெண்டாமரையும், வெள்ளல்லியும் கொள்ளப்படும். பொய்கையாவது மனிதராற் செய்யப்படாது, இயற்கையானமைந்த நீர்நிலையென்ப. 'என்ப' என்று குறித்தாள், அவ்வூரின் இயல்பு பலராலும் நன்கறியப்பட்டது என்னும் பொருளில். 'தன் சொல்' எனச் சுட்டப்பட்டவை, தான் தலைவிபால் பேரன்புடையான் என்பது பட அவன் சொன்னவையும், 'நின்னைப்பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என்றவாறு உறுதி கூறியவையும் ஆம்.

'உணர்ந்தோர்' என்பது, தலைவன் சொன்னவை அனைத்தும் மெய்யானவை என்று நம்பி ஏற்றுக் கொண்டோர் என்று பொருள்படும்.

பொன்போற் செய்தலாவது, பொன்னின் நிறம் கொண்ட பசலையூரச் செய்தலாகும். 'நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர், என்றும் என் தோள் பிரிபறியலர்' என நம்பிய நம்பிக்கை பொய்யாயினமையின், அவள் மேனி பொன்னிறம் கொண்டதாம். நிலம் திறம் பெயரும் காலையாயினும் தம் சொற்பெயராமை பெரியோர் பண்பாகவும், இதற்கு மாறாக நடந்தவனுக்காகப் பரிந்து வந்தோர் இகழ்ச்சிக்குள்ளாயினர் என்க.

வெண்பூ – வெண்மை அறிவின்மையும் ஆதலின், அறிவற்ற பூக்களையுடையது என்று பொருள் கொள்க.

Koviloor Digital Library

அவன் ஊரின் பண்பு அவனுக்கும் ஆயிற்று என்பாள், 'முதலையொடு .... அவன் ஊர்' என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : பார்ப்பு – பறவை முதலியவற்றின் இளமைப் பெயர்; பொய்கைத்து – பொய்கைகளை உடையது; உணர்ந்தோர் – மெய்யெனத் தெளிந்தோர்.

மேற்கோள் : முதலை தன்பார்ப்பைத் தின்பது என்பது :

தாய்சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு
பிள்ளை தின்னும் முதலைத்து அவனூர்
– ஐங். 24.

உள்ளுறை : அன்பில்லாத முதலையென்றது அன்பில்லாத தலைவனை நோக்கியது என்றும், பொய்கையில் வெண்பூ என்றது புறத்தொழுக்கத்திற்குத் துணையாகிய அறிவில்லாதாரை நோக்கியது எனவும் கூறுவார் பழைய உரையாசிரியர்.

தலைவன் தன்னை நம்பி வாழ்வோரை வருத்துகின்றவனும் அன்பு சிறிதும் இல்லாதவனும் ஆதற்கு உள்ளுறை உவமம். இனி வெண்பூ என்றது, அவன் சொல்லை மெய்யென்று நம்பும் இயல்புடைய வெள்ளை மனமுடைய தன்னை நோக்கியது என்றலே சிறப்புடையது என்றார் பெருமழைப்புலவர். அவனும் முதலை போன்று அன்பில்லாதவனாக, யானோ அப்பொய்கையில் மலரும் வெண்பூப் போன்ற வெள்ளை மனமுடையவளாக இருக்கிறேன். ஆதலாற்றான் அவன் நம்பியவரைப் பசலை பாயும்படி செய்பவனாகின்றான் என்பதே அதற்கு உள்ளுறையாகக் கோடல் சிறப்பு என்று மேலும் கூறுவார்.

அறிவின்மையைத் தலைவனோடு கூடி வாழும் பரத்தையருக்கு ஏற்றுவார் துரைசாமிப் பிள்ளை. வாயில்கட்கு ஏற்றினார் பழைய உரையாசிரியர். அவன் ஊரிலுள்ள வெண்பூக்களைச் சுட்டியதனால், அவனோடு இணங்கி அவன் சொல்லையே தலைவிக்கு உய்த்து வந்து அவர் சார்பாகப் பேசிய

Koviloor Digital Library

வாயில்கள் மேல் ஏற்றும் பழைய உரையாசிரியர் கருத்தே மிகுதியும் பொருந்தும். இவர் கருத்தே இச்செய்யுளின் கூற்றொடு நன்கு பொருந்தியுள்ளது.

42

மகிழ் மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ –
யாணர் ஊர! – நின் மாண் இழை அரிவை?
காவிரி மலிர் நிறை அன்ன நின்
மார்பு நனி விலக்கல் தொடங்கியோளே.

கூற்று : தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை, 'தலைவன் பிற பரத்தையருடன் ஒழுகினான்' என்று புலந்தாளாக, அதனை அறிந்த தலைவி, அவன் தன் இல்லத்துப்புக்குழி, தான் அறிந்தமை தோன்றச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனுக்கு மிக அன்புடைய பரத்தையொருத்தி, தலைவனுக்கு வேறு பல பரத்தையருடன் உறவிருப்பதறிந்து அவனுடன் ஊடி நின்றாள். இதனை அறிந்த தலைவி, தன் கணவன் தன் இல்லத்திற்கு மீண்டபொழுது, அச்செய்தியைத் தான் அறிந்தமை தோன்றக் கூறியது.

உரை : நாடொறும் புதுப்புது வருவாயினை உடைய வளமிக்க ஊரின் தலைவனே! மாட்சிமை மிக்க அணிகலன்களைப் பூண்ட நின் காதலி காவிரியாற்றின் பெருவெள்ளம் போற் பரந்த நின் மார்பினை மிகவும் வெறுத்து விலக்கத் தொடங்கினாள். (இதனை யான் அறிவேன்). ஒருவேளை அவள் கள்ளை மிக உண்ட வெறியினால் தன் அறிவு மயங்கினாளோ!

உரை விளக்கம் : தலைவனால் காதலிக்கப்பட்ட பரத்தையை 'நின் மாண் இழை அரிவை' என்றாள். பல அணிகலன்களை அணிந்து தனக்கு இயற்கையாக இல்லாத அழகைச் செயற்கையாக

Koviloor Digital Library

மேற்கொண்டமையன்றித் தன் போல் இயல்பான பண்பு நலன்களால் மேம்பட்டாளல்லள் பரத்தை என இழிவுபடுத்தும் நோக்குடன் இங்ஙனம் கூறினாள். 'நின் ... அரிவை' என்றாள், விதிப்படி மணந்து கொண்ட தன்னை விலக்கி யாதொரு தொடர்பும் அற்ற ஒருத்தியை உரிமை மகள் போல் கொண்டாடினான் தலைவன் என்பது தோன்ற. தலைவன் மார்பைக் 'காவிரி மலிர் நிறை' என்றாள், அது இன்னார் இனியார் என்ற வேறுபாடின்றிப் பரத்தையர் பலரும் அணைந்து இன்புற இடம் தந்தமை பற்றி. தலைவனின் வரம்பிகந்த பரத்தைமையை இங்ஙனம் சுட்டினாள். நாளும் புதுப்புது பரத்தையரை நாடி நுகர்பவன் தலைவன் என்பது தோன்ற 'யாணர் ஊர' என்றாள். யாணர் புது வருவாய் ஆதலால் அவ்வருவாய் மிகுதியே தலைவன் கட்டற்ற ஒழுகலாற்றுக்கு ஏது என்றவாறு. தலைவனோடு ஊடும் உரிமை பூண்டவள் தலைவியே யெனினும், அவன் தனக்கே உரியான் போலக் கருதிப் பரத்தையொருத்தி ஊடினாள் என்பது தான் அறிந்தது பட, 'நின் மார்பு நனி விலக்கல் தொடங்கினோள்' என்றாள்.

'மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ' என்றாள், தலைவன் தானும் அவளுடன் கள்ளுண்டு மயங்கியிருந்தானேனும், அவனினும் பரத்தையின் வெறி மிகுதிப்பட்டது என்பதனைச் சுட்டிக் காட்டுதற்காக. அவள் அங்ஙனம் விலக்காத வழித் தலைவன் தன்னில்லத்திற்கு மீண்டு வந்திரான் என்பது கருத்தாகக் கொள்க. அவள் மயங்காத நிலையில் தன்பால் மீண்டிருந்தால், தான் ஏற்றுக் கொள்ளக் கூடும் எனத்தலைவனை விலக்கிய நயம் காண்க.

அருஞ்சொற்பொருள் : மகிழ் – கள்ளுண்டலால் உண்டாய செருக்கு; சிறப்ப – மிக; யாணர் – புதிய வருவாய்; அழகுமாம். அரிவை – பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாகக் கொள்ளப்படும் பெண்களுள் மூன்றாம் பருவத்தள். ஈண்டுப் பொது நிலையில் ஒரு பெண் என்று பொருள். மலிர் நிறை – மிகுதியான வெள்ளம். காவிரி வெள்ளம் போன்ற மார்பென்றது, பல பெண்டிரும் அணையும் தன்மை பற்றியாம்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : மகிழ் – மகிழ்வு என்று பொருள்படும் முதனிலைத் தொழிற்பெயர்; சிறப்ப – மிகுந்தமையால் .. ஏதுப் பொருளில் வந்த செயவென் எச்சம்; நனி – மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல்.

மேற்கோள் : தலைவன் மார்பில் அணைதல் வெள்ளநீரில் திளைத்தலையொத்தமை :
கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநள் போல
நடுங்கஞர் தீர முயங்கி
– அகம். 62.

பரத்தை தலைவனொடு ஊடுதல் :
மலர்ஏர் உண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலும் நின் காதலி
– அகம் 176.

43

அம்பணத்து அன்ன யாமை ஏறி,
செம்பின் அன்ன பார்ப்புப் பல துஞ்சும்
யாணர் ஊர! நின்னினும்
பாணன் பொய்யன்; பல சூளினனே.

கூற்று : பாணன் வாயிலாகப் புகுந்து தெளிப்ப மறுத்த தலைமகள், பாணனோடு தலைவன் புகுந்து தெளித்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையிற் பிரிந்த, தலைமகன் தன் பாணனைத் தூதாக விடுத்தான். அவன் தலைவியைத் தெளிவிக்க முயன்று தோற்றான். பின்னர்த் தலைவனும் பாணனும் இணைந்து

Koviloor Digital Library

வந்து தலைவியைத் தெளிவிக்க முயன்ற போது தலைவி இருவரும் பொய்யர் என்று கூறி வாயில் மறுத்த கூற்று இது.

உரை : மரக்காலை யொத்த யாமையின் முதுகில் செம்பினைப் போன்ற செந்நிறம் வாய்ந்த அதன் பார்ப்புகள் ஏறித் துயில்வதற்கு இடனான நாளும் புது வருவாயை உடைய ஊரின் தலைவனே! நீ பொய்யன் எனில் உனக்குத் துணை போகும் நின் பாணன் நின்னினும் பொய்ச் சூள் செய்வதில் வல்லவனாவான். (நின் பொய்மொழிகளாலும் சூளுரைகளாலும் யான் மனமிளகேன்).

உரை விளக்கம் : யாமை நெல் முதலிய கூலங்களை அளக்க உதவும் மரக்காலை வடிவால் ஒத்திருத்தலின், 'அம்பணத்தன்ன யாமை' என்றாள். யாமைப் பார்ப்புகள் செந்நிறமுடையனவாதலின் செம்பினை உவமை கூறினாள். யாமை தன் பார்ப்புகளைக் காவல் புரிதலை நூல்கள் கூறுதலின், அதன் தாயன்பு பெறப்படும். (குறுந். 152) தலைமகன் களவுக் காலத்தே செய்த சூளுரைகள் யாவும் பொய்க்குமாறு புறப்பெண்டிர்பால் நாட்டம் கொண்டானாதலின் அவனைப் பொய்யன் என்று பழித்துரைத்தாள். அவனால் அனுப்பப்பட்ட பாணனும் தலைவனுக்கு உடந்தையாய்த் தன் நாவன்மையால் தலைவியைத் தெளிவிக்க முயன்றானாதலின் 'நின்னினும் பாணன் பொய்யன்' என்றாள். 'நும் பொய்ம்மொழிகளை ஏற்று ஏமாற்றமடைந்தது சாலும், நீவிர் வந்த வழி மீள்க' என்பது கருத்து.

அருஞ்சொற்பொருள் : அம்பணம் – மரக்கால்; யாமை – ஆமை; பண்டு யாறு, யாடு, யாமை, யாக்கை என வழங்கிய பல சொற்கள் பின்னாளில் ஆகார முதற்சொற்களாய் மாற்றமுற்றன. யாணர் – புது வருவாய்; சூள் – உறுதிமொழி.

மேற்கோள் : பாணர் பொய் புகல்வோர் என்பது :

நைவளம் பூத்த நரம்பியை சீர்ப்
பொய்வளம் பூத்தன பாணா நின்பாட்டு
– பரி. 18 : 20.

Koviloor Digital Library

கைகவர் நரம்பின் பனுவற் பாணன்
செய்த அல்லல் பல்குவ வையெயிற்று
ஐதகல் அல்குல் மகளிர் இவன்
பொய்பொதி கொடுஞ்சொல் ஓம்புமின்
— நற். 200.

'— பாணன் கையதை,
வள்ளுயிர்த் தண்ணுமை போல
உள்யாதும் இல்லதோர் போர்வையம் சொல்லே'
— நற். 310.

உள்ளுறை : யாமையின் முதுகிலேறி அதன் பல பார்ப்புகள் துஞ்சும் ஊரன் என்றது தலைவனும் பல மக்களைப் பெற்றவன் என்ற உள்ளுறைப் பொருள் விளக்கும். மக்களைப் பெற்றார் பொய் புகறல் தகாது என்பதும் போதரும். (பழையவுரை)

44

தீம் பெரும் பொய்கை யாமை இளம் பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசினா அங்கு,
அதுவே ஐய, நின் மார்பே;
அறிந்தனை ஒழுகுமதி; அறனுமார் அதுவே.

கூற்று : பரத்தையர் மனைக் கண்ணே பலநாள் தங்கித் தன் மனைக் கண்ணே வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பலநாள் பரத்தையர் கூட்டுறவில் வாழ்ந்து பின் தன் மனைக்குத் திரும்பிய பொழுது, அவனுக்கு வாயில் மறுக்கும் தோழி சொல்லியது.

உரை : பெரும! இனிய நீரைக் கொண்ட பெரிய பொய்கையில் வாழும் யாமையின் இளம் பார்ப்புகள் தம் தாயின்

Koviloor Digital Library

முகம் நோக்கியிருந்து வாழ்வு பெற்றாற் போல, நின் மனையாளும் நின் மார்பினை நோக்கி வாழ்கின்றாள். எனவே, நீ அதனை உணர்ந்து ஒழுகுவாயாக. அதுவே அறனாவதும் என அறிகுவையாக.

உரை விளக்கம் : பொய்கையாவது மாந்தரால் தோண்டப் பட்டதன்றி இயற்கையிலேயே அமைந்ததாகும். அது பெரிய தாயினும் நீரால் நிறையப் பெறாதாயின் பயனின்று என்பாளாய், 'தீம் பெரும் பொய்கை' என்றாள். ஈண்டு 'தீம்' என்றது அதன் கண் உள்ள இனிய நீரை. யாமைகள் கரையின்கண் முட்டையிட்டுப் புதைத்து நீங்கும். முட்டைகளிலிருந்து பார்ப்புகள் வெளிப்பட்டு நீர்க்குள் செல்லும். அவை தாயால் வளர்க்கப் பெறுவதில்லை. பார்ப்புகள் தாயின் முகத்தை நோக்கியே வாழும் என்பர். அதனால் 'பார்ப்புத் தாய்முகம் நோக்கி வளர்ந்திசினா அங்கு' என்றாள். 'அதுவே ஐயநின்மார்பு' என்பதனை, 'ஐய, அதுவே நின் மார்பு' என மாற்றிக் கொள்க. அதுவே என்பது அத்தகையதே என்று பொருள் தந்தது. அஃதாவது, யாமைப் பார்ப்புகட்கு அவற்றின் தாய் முகம் எத்தகையதோ அத்தகையது நின் மார்பு நின் மனையாட்கு என்றாள். பார்ப்புகளை அணைத்து அன்பு செலுத்தாவிடினும், யாமையின் பார்ப்புகள் தாய் முகம் நோக்கி வளர்ந்தாற்போலவே இவளும், நீ இவளை அணைத்து இன்புறுத்தாவிடினும் நின் மார்பைப் பல்கால் காண்டலிலேயே இன்பம் எய்துகிறாள் என்றவாறாம். நின்னையன்றி இவட்குப் புகலில்லை என்பதனை அறிவுடைய நீ புரிந்து கொண்டு வாழ்வாயாக என்பாள் 'அறிந்தனை ஒழுகுமதி' என்றாள். இதுகாறும் இவ்வறிவின்றியிருந்த குறையைச் சுட்டியவாறாம். அங்ஙனம் வாழ்வதே இல்லறத்திற் போற்ற வேண்டிய அறம் என்பாளாய், 'அறனுமார் அதுவே' என்றாள்.

"இளம்பார்ப்பு தலைமகள், தாய்முகம் தலைமகன் மார்பு. நின் மார்பாற் பெறும் பயனும் இன்றிக் காட்சியும் பெறுகின்றிலள் என்பது" என்பது ஈழத்து உரையாசிரியர் குறிப்பு.

Koviloor Digital Library

தீம்பெரும் பொய்கை தலைவன் இருந்து இல்லறம் நிகழ்த்துதற்கு உரிய இல்லத்திற்கு உவமை என்றார் பெருமழைப்புலவர். தலைவன் அங்ஙனம் செய்யத் தவறினான் என்பது குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : தீம் – இனிய (நீரையுடைய); பொய்கை – இயற்கையான நீர் நிலை; வளர்ந்திசினா அங்கு – வளர்ந்தாற் போல.

இலக்கணக்குறிப்பு : அறிந்தனை – அறிந்தனையாய், முற்றெச்சம்; அறனுமார் – 'மார்' அசை நிலை.

மேற்கோள் : காதலனைக் காண்டலே பேரின்பம் :
காதலர் நல்கார் நயவார் ஆயினும் பல்கால்
காண்டலும் உள்ளத்திற்கு இனிதே
– குறுந். 60.

காதலிக்கு மார்பு தாராமை :
தெறலரும் கடவுள் முன்னர்த் தேற்றி
மெல்லிறை முன்கை பற்றிய சொல்லிறந்து
ஆர்வ நெஞ்சம் தலைத் தலை சிறப்ப நின்
மார்பு தருகல்லாய் பிறனாயினையே
– அகம். 396.

45

கூதிர் ஆயின் தண் கலிழ் தந்து,
வேனில் ஆயின் மணி நிறம் கொள்ளும்
யாறு அணிந்தன்று, நின் ஊரே,
பசப்பு அணிந்தனவால் – மகிழ்ந! – என் கண்ணே.

கூற்று : நெடுநாள் பரத்தையர் இடத்தனாய் ஒழுகிய தலைமகன் மனைவயின் சென்றுழித் தோழி சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : நெடுநாள் பரத்தமை மேற்கொண்டு வாழ்ந்த தலைமகன் மீண்டு வந்து வாயில் வேண்டிய பொழுது, தோழி, அவன் பிரிவால் தலைவி பசலையுற்றதைச் சொல்லி இடித்துரைத்தது.

உரை : மருதநிலத் தலைவ! நின் ஊர் கூதிர்காலத்தில் குளிர்ந்த கலங்கல் நீரைத் தருவதும், கோடைக் காலமாயின் நீலமணி போலும் தெளிந்த நீரைக் கொண்டதும் ஆகிய ஆற்றால் அழகுபெறுதலைத் தனக்கு இயல்பாகக் கொண்டது. ஆனால் என் கண்ணோ பசலையால் அணி பெறுகின்றது.

உரை விளக்கம் : கூதிராவது அறுவகைப் பெரும் பொழுதுகளுள் ஒன்று. ஐப்பசியும் கார்த்திகையும் அதற்குரிய காலப்பகுதியாகும். இக்காலத்துக்குரிய நீர் கலங்கியும் குளிர்ந்தும் இருத்தலின் தண்கலிழ் என்றாள்.

வேனிலாவது கோடைக்காலமாகும். அஃது இளவேனில், முதுவேனில் என இருவகைப்படும். இவற்றுக்குச் சித்திரை - வைகாசி, ஆனி - ஆடி ஆகியவை முறையே உரிய வென்பர். வேனிற் காலத்தில் நீர் பெரிதும் வற்றி அறல் மிகுந்து காணப்படும். அவ்வறல் நீர் தெளிந்திருத்தலின் ஒளியுடைய மணியை உவமை கூறினாள். மழை பெய்யும் காலமாயினும், மழையில்லாக் கோடையாயினும் நின்னூர் அணியுடன் திகழ, நின்னை மணந்த தலைவியோ எப்பொழுதும் பசலையணிந்தாள் எனத் தலைவனின் தீயொழுக்கத்தினைச் சுட்டிக் கூறினாள் தோழி. 'நின் ஊர் எப்பொழுதும் நீர்வளம் மிக்க ஆற்றால் அழகு பெறுகிறது. ஆனால் தலைவியோ தன் இயல்பான அழகினை இழந்து நிற்கிறாள்' என்ற கருத்தில் 'பசப்பணிந்தனவால் ..... கண்ணே' என்றாள். அஃதாவது, 'தலைவி ஒன்றை அணிந்துள்ளாள் எனில், அஃது உன் தீயொழுக்கத்தால் உண்டான பசலையே' என்றாள்.

பசலையுற்றவள் தலைவியே யெனினும் தனக்கும் தலைவிக்கும் இருதலைப்புள்போல் ஒருயிர் ஆதலின் 'என் கண்ணே' என்றாள் என்க. இஃது அகத்திணையில் இயல்பாகக் காணத் தக்கதேயாம்.

Koviloor Digital Library

தலைவியின் கண்கள் பசந்தமைக்குக் காரணமாவது, தலைவன் நெடுநாள் பரத்தையர் மனைக்கண் உறைந்ததும், அவன் வருவானாவெனப் பலகாலும் நோக்கி நோக்கி வாளிழந்தமையுமாம். கண்பசந்தது என்றது, மேனி முற்றும் வாடிற்று என்னும் பொருளதாகும். மேனிமெலிவினைக் கண்ணே வெளிப்படுத்தவல்லதென்பது.

சங்க இலக்கியத்தில் தோழி கூற்றையும் தலைவி கூற்றையும் தெளிவாக வேறு படுத்திக் காண்பது அரிதாகும். தோழிக்கும் தலைவிக்குமுள்ள உறவின் நெருக்கத்தைக் காட்ட நல்லிசைப் புலவோர் இவ்வுத்தியைப் பயன்படுத்தியபோதும், இப்பாடலைத் தலைவி கூற்றாகவே கொள்வது மிகவும் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

''ஐயவியன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தா அய்த்
துறையணிந்தன்று அவர் ஊரே
இறையிறந்து புலம்பணிந்தன் றவர்
மணந்த தோளே'' – (குறுந்.50)

என்பது தலைவி கூற்றாகவே கொள்ளப்படுவது நோக்குக.

அருஞ்சொற்பொருள் : கலிழ் – கலுழ்தல் அஃதாவது கலங்கல் நீர்; மணி – நீல மணி; அணிந்தன்று – அழகுபெற்றது; பசப்பு – பசலை; மகிழ்நன் – மருத நிலத்தலைவன்; வேனில் – கோடை; கூதிர் – குளிர்ப் பருவம்.

இலக்கணக்குறிப்பு : பசப்பணிந்தன வால் – ஆல், அசை நிலை.

நயவுரை : ''நின் ஊரின் கண்ணதாகிய யாறேனும் ஒருபருவத்தே கலங்கிக் கிடந்தாலும் மற்றொரு பருவத்தே தெளிந்து கிடப்பதாகின்றது. தலைவியின் கண்களோ எல்லாப்பருவத்தும் பசலை பூத்தே இருக்கின்றன.'' என்பார் பெருமழைப்புலவர்.

Koviloor Digital Library

46

நினக்கே அன்று அஃது; எமக்குமார் இனிதே -
நின் மார்பு நயந்த நல் நுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை ஆகி,
ஈண்டு நீ அருளாது, ஆண்டு உறைதல்லே.

கூற்று : மனைக்கண் வருதல் பரத்தை விலக்க விலங்கி, பின்பு, உலகியல் பற்றி, அவள் குறிப்பினோடும் வந்தமை அறிந்த தோழி தலைவனைப் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் வயத்தனாய் அவர் இல்லில் நீண்டநாள் தங்கினான். பின்னர் உலகியலையொட்டிப் பரத்தை விடுக்க, தலைவன் தன்னில்லம் ஏகினபோது, தோழி அவனுக்கு இடித்துரை வழங்கித் தலைவியொடு கூட்டுவிக்கும் முகமாகச் சொல்லியது இது.

உரை : பெரும! நின் மார்பை யணைந்து இன்புறலைப் பெரிதும் விரும்பிய அழகிய நெற்றியை உடைய பரத்தையின் மனக் கருத்தை அறிந்து அதன்படியொழுகும் தன்மையுடையையாகி நீ இங்கு மீண்டு வந்து தலைவிக்குத் தலையளி செய்தலை விடுத்து, அவள் இல்லத்திலேயே உறைவாயாகில், அது நினக்கு மட்டும் இன்பம் பயப்பதன்று; எமக்கும் இன்பமே யாம்.

உரை விளக்கம் : பரத்தையை, 'நின் மார்பு நயந்த நன்னுதல் அரிவை' என்றாள், தலைவன் அவட்கே தன் மார்பை நெடிது நாள் துய்க்கத் தந்தமையைக் குறிப்பால் உணர்த்த.

'அரிவை வேண்டிய குறிப்பினையாகி' என்றதன் நோக்கம் யாதெனின், தலைவியின் குறிப்பறிந்து நடக்கக் கடவனாகிய தலைவன், பரத்தையின் மனக் குறிப்பையே அறிந்து நடத்தலை மேற்கொண்டான் என அவனை இடித்துரைப்பதாம்.

Koviloor Digital Library

தலைவிக்கு அணிசெய்யத் தானே விரும்பி வராது, உலகியல் நோக்கி, தலைவிக்காக இரக்கப்படுவாள் போன்று அவள் விடுக்க வந்தானாதலின் அவன் வரவுக்குக் காதல் காரணமாகாது, பரத்தையின் விருப்பமே காரணமானமையின், 'ஈண்டு நீ வாராது ஆண்டுறைதல் நினக்கேயன்றி எமக்கும் இனிது' என்றாள். நீ இங்கு வரினும், நின் மனம் அப்பரத்தையிடத்ததேயாம் என்று இடித்துரைத்தாள் என்க. பொய்மை முயக்கத்தினும் தனிமை எமக்கு இனிதே என்றாள் என்க. ஆண்டு உறைதல் நினக்கே இனிமையாதலன்றி என்றது, தலைவனுடைய உண்மையான விருப்பம் ஆண்டு உறைதலே என்பது உணர்த்திற்று. பரத்தை விடுக்க வந்தான் என்பதனைத் தோழி உணர்ந்தாளாதலின், அவன் வந்ததற்குத் தலைவிபால் தனக்குள்ள அன்பு காரணம் அன்று. எனவே, அவன் வருதலின் வாராமையே நன்று என்றாள் என்க. 'நின்னின் வேறல்லோம் ஆதலின் நினக்கு யாது இன்பமோ அதுவே எமக்கும் இன்பமாம். எனவே நீ ஆண்டே உறைவது எமக்கும் இன்பமே' எனப்புலவி தோன்றக் கூறினாள் எனினும் அமையும்.

அருஞ்சொற்பொருள் : நயந்த – விரும்பிய அரிவை – பரத்தை; ஈண்டு நீ அருளாது – ஈண்டு நீ வந்து தலைவிக்கு அருள் செய்யாது.

இலக்கணக்குறிப்பு : எமக்குமார் – ஆர் அசை நிலை; உறைதல்லே – விரித்தல் விகாரம்.

47

முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த
அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்
அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர!
மாண் இழை ஆயம் அறியும் – நின்
பாணன் போலப் பல பொய்த்தல்லே

Koviloor Digital Library

கூற்று : பாணற்கு வாயில் மறுத்த தலைமகள் பின் அப்பாணனோடு தலைமகன் புகுந்து, தன் காதன்மை கூறிய வழிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையர் வீட்டிலிருந்த தலைமகன் தன் இல்லம் மீள விரும்பித் தன் பாணனைத் தூதுவனாக அனுப்பினான். தலைவி அவனுக்கு வாயில் மறுத்தபின் தலைமகன் அப்பாணனோடு வந்து வாயில் வேண்டியபோது தலைவி கூறியது.

உரை : கூரிய பற்களையுடைய பாணர்குடிப் பெண்ணின் இன்சுவை மிக்க கெடிற்றுமீன் சொரியப்பட்ட அகன்ற பெரிய வட்டி நிறையுமாறு மனைக்கிழத்தி அறுவடை செய்த நெல்வயலில் விளைந்த பெரும்பயற்றை நிரப்பும் ஊர்த்தலைவ! நீ நின் வாயிலாக வந்த பாணன் போலவே பல்வகைப் பொய்களையும் கூறவல்லவன் என்பதனை யானேயன்றி, மாட்சிமிகு அணிகளையணிந்த தோழியரும் நன்கு அறிவர். (நின் மாய மொழிகட்கு யான் ஆட்படேன்).

உரை விளக்கம் : முள் எயிறு – கூரிய எயிறு. இதனால் பாண்மகளின் இளமை சுட்டப்பட்டது. கெடிறு – ஒருவகை மீன். இக்காலத்தார் இதனைக் கெளிறு, கெளுத்தி எனக் கூறுவர். கொழுப்பு மிகுந்த இம்மீன் வகை இன் சுவையுடையது. ஆதலின் ‘இன் கெடிறு’ என்றாள். வட்டியாவது அகன்ற வாயை உடைய கூடை வகையாகும். மனையோள் – குடும்பத் தலைவி. உழவர் குடிப்பெண் என்க. அரிகால் பெரும் பயறு என்றாள், அறுவடைக்குப் பின் விதைக்கப்பட்டிருந்து பயன் அளித்தலின். வட்டி நிறையப் பயற்றை நிறைத்தாள். ஆதலின் நெல்லும் உப்பும் நேர் ஆனமை போல் ஒரு வட்டி மீனுக்கு ஒரு வட்டி பயறு என்ற அளவில் பண்டங்கள் மாற்றிக் கொள்ளப்பட்டமையின். இதனால், தலைவன் ஊர் தொடர்ச்சியான விளைவுகளைத் தரவல்லது என்பதும், மீன்கள் நிறைந்த நீர்நிலைகளை மிகவும் உடையது என்பதும் விளங்கும். தலைவன் பலவாறு பொய் மொழிய வல்லான் என்பதனைத் தான் அறிந்தது போலவே, தன் தோழிமாரும் அறிவர் என்றாள்.

Koviloor Digital Library

அஃதாவது அவனுடைய பொய்மைப் பண்பு ஊரறிந்தது என்பதாம். கணவன் என்பது நோக்கி நான் மறந்தாலும், என் தோழியர் மறவார் என்றாளாம். 'பொய்யுடைய தலைவனுக்குப் பொய்யுடைய பாணன் வாய்த்தவாறு என்னே!' என வியப்பாள் போல இகழ்ந்தாள் என்க.

அருஞ்சொற்பொருள் : முள் எயிறு – கூரிய பல்; கெடிறு – ஒரு மீன் வகை. சொரிந்த – சொரியப்பட்ட; மனையோள் – குடியானவப் பெண்; குடும்பத் தலைவி. அரிகால் – நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்; பெரும்பயறு – பெரிய அளவிலான பாசிப்பயறு; மாயம் – பொய்; ஏமாற்று.

இலக்கணக்குறிப்பு : பொய்த்தல்லே – பொய்த்தலே என்பதன் விரித்தல் விகாரம். 46ஆம் செய்யுளிலும் இவ்வாறு வந்தமை காண்க. ஆயம் அறியும் – ஆயமும் அறியும் என்பதன் உம்மை தொக்கது. பாணன் போல ... பொய்த்தல் – நீயும் என்பது தொக்கது.

மேற்கோள் : மீனுக்கு ஈடாகப் பிறபொருள்களைத் தருதல் :

கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்
– புறம். 33.

வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர
– ஐங். 48.

உள்ளுறை : கெடிறு சொரிந்த வட்டி நிறைய மனையோள் பயறு நிறைக்கும் ஊர என்றது நீ நின் காதல் சொல்லி விடுத்து அவர் சிறந்த காதல் சொல்லி விடப்பெறுவாய் என்பார் பழைய உரையாசிரியர்.

Koviloor Digital Library

பாண்மகள் கொணர்ந்த இழிந்த மீனுக்குச் சமமாக மனையாட்டி சிறந்த நெல்லைக் கொடுப்பது போன்று நீயும் பரத்தையர் தரும் இழிந்த காம இன்பத்திற்கு ஈடாக உயர்ந்தோரிடத்துச் செய்ய வேண்டிய தலையளியை அவர்பால் செய்யாநின்றனை என்பது உள்ளுறையாம் என்றார் பெருமழைப்புலவர். இதுவே சிறப்புடையது.

48

வலைவல் பாண்மகன் வால் எயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!
வேண்டேம், பெரும! – நின் பரத்தை
ஆண்டுச் செய் குறியோடு ஈண்டு நீ வரலே.

கூற்று : பரத்தையர் மாட்டு ஒழுகாநின்று தன் மனைக்கண் சென்ற தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் மனையிலிருந்து, பரத்தையர் செய்த குறிகளோடு தன் இல்லம் வந்த போது தலைமகள் புலந்து சொல்லியது.

உரை : வலைவீசி மீன் பிடிப்பதில் வல்ல பாணனுடைய வெண்மையான பற்களை உடைய இளமகள், வரால் மீனைக் கொண்டுவந்து சொரிந்த வட்டியுள் உழவர் மனைக் கிழத்தி முந்தைய ஆண்டு விளைந்த பழைய வெண்ணெல்லைச் சொரிதற்கு இடமான ஊரனே! நீ நின் காதற் பரத்தை அவள் இல்லத்திலே நின் மேனியிற் செய்த நகக்குறி முதலிய அடையாளங்களுடனே நம் மனைக்கு வருதலை யாம் விரும்பவில்லை. (இங்கிருந்து மீள்வாயாக!).

உரை விளக்கம் : 'யாண்டுகழி வெண்ணெல்' என்றமையின் கொளக் கொளக் குறையாத கூழுடைய வளமனை வாழ்வினள் அவள் என்பது பெறப்படும். பழைய நெல் என்றது துய்த்துக் கழியாத

Koviloor Digital Library

செல்வ வளத்தைச் சுட்டியதாம். உயர்ந்த மீன் வகைக்கு உயர்ந்த நெல்லைக் கொடுத்தாளாம். 'நின் பரத்தை' என்றாள் நின்னால் என்னினும் மேலாகக் கருதப்பட்டவள் என்னும் பொருளில்.

குறியென்றது காம விளையாட்டின்கண் காதலர் தமக்குள் பரிமாறிக் கொள்ளும் பற்குறி, நகக்குறி முதலியவற்றை. இதன் விரிவைக் காம நூற்களில் பரக்கக் காணலாம்.

யான் நின்பால் பொறித்தற்குரிய குறியை அவள் செய்தாள் என்பாளாய், 'ஆண்டுச் செய் குறி' எனச் சுட்டினாள். 'நின் தகாத ஒழுக்கினை நின் வாய் வன்மையால் மறைக்க முயலினும், அக்குறிகளே சான்றாய் நின் பொய்ம்மையினைப் பறை சாற்றும்' என்றாளாம். 'இழிந்த இடத்தில், இழிந்தாளால் செய்யப்பட்ட குறியோடு, உயர்ந்த எம்மனையில் இற்கிழமை பூண்ட எம்மிடம் காட்ட வந்தனை' என இடித்துரைத்தாளாம். ஆண்டு, ஈண்டு என்பன இப்பொருளை விளக்குவன. பழிசுமந்து வரும் நின்னைக் கூட யாம் வேண்டேம் என மறுப்பாள், 'வேண்டேம் பெரும!' என்றாள். பெருமகனாகியிருந்தே சிறுமகனாய் நடந்து கொண்டதனைப் 'பெரும' என்னும் விளி குறித்து நின்றது காண்க.

அருஞ்சொற்பொருள் : வல் – திறமை மிக்க; மடமகள் – இளமகள்; யாண்டுகழி ... ஓராண்டுக்குமுன் விளைந்த; வேண்டேம் – விரும்போம்; குறி – அடையாளம்; வெண்ணெல் – வெண்ணிறம் கொண்ட ஒரு நெல் வகை.

மேற்கோள் : உழவர் மகளிர் பழைய நெல்லைக் கொடுத்தல் :

காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு
அவ்வாங்கு உந்தி அஞ்சொற் பாண்மகள்
. . . .
பழஞ் செந்நெல்லின் முகவை கொள்ளாள்.
– அகம். 126.

Koviloor Digital Library

உழவர் மனையில் பழம் பல்லுணவுப்
பொருள் இருத்தல் :
முகடு துமித்து அடுக்கிய பழம்பல்லுணவின்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்
– பெரும்பாண். 246–247.

தலைவன் பரத்தை செய்த குறியோடு வருதல் :
மற்றது, அறிவல் யான் நின் சூள் அனைத்தாக
நல்லார்
செறிதொடி யுள்ள வடுவும் குறி
பொய்த்தார்
கூருகிர் சாடிய மார்பும் குழைந்த நின்
தாரும் ததர்பட்ட சாந்தமும் சேரி
அரிமதர் உண் கண்ணார் ஆராக் கவவின்
பரிசழிந்து யாழநின் மேனி கண்டு யானும்
செருவொழிந்தேன் சென்றீ இனி'
– கலி. 61.

'தொல்கவின் தொலையினும் தொலைக சார
விடேஎன் விடுக்குவென் ஆயின் கடைஇக்
கவவுக்கை தாங்கும் மதுகையம் குவவுமுலை
சாடிய சாந்தினை வாடிய கோதையை
ஆசில் கலம் கழீஇ அற்று'
– நற். 230.

உள்ளுறை : வரால் மீன் பொருட்டு வெண்ணெல்லைக் கொடுக்கும் மனையோள் போன்று நீயும் பரத்தையிடம் துய்க்கும் காமஇன்பத்தின் பொருட்டு உயர்ந்த பண்பாட்டினை இழந்தனை என உள்ளுறை கொள்க. (பெருமழைப்புலவர்)

இனி இதற்கு, 'வாயில்கள் கூறிய காதன்மைக்குத் தலைவி வாயில் நேர்ந்தமை கூறியவாறு' என்று உள்ளுறை கூறுவார் துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

49

அம் சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சில் மீன் சொரிந்து, பல் நெற்பெறூஉம்
யாணர் ஊர! நின் பாண்மகன்
யார் நலம் சிதையப் பொய்க்குமோ, இனியே?

கூற்று : பாணன் வாயிலாகப் பரத்தையரோடு கூடினான் என்பது கேட்ட தலைமகள் தனக்கும் பாணனால் காதன்மை கூறுவிப்பான் புக்க தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன், ஊடல் கொண்ட பரத்தையைத் தெளிவித்தற் பொருட்டுப் பாணனை வாயிலாக அனுப்பி அவள் ஊடல் தீர்த்துக் கூடியதனை அறிந்த தலைவி, பின்னர்த் தன்னொடு கூடுவதற்காகப் பாணன் துணையொடு அவன் வந்த பொழுது தலைவி புலந்து கூறியது இது.

உரை : அழகிய சிலவாகிய கூந்தலையும், அசைந்தசைந்து நடக்கும் இயல்பையும் கொண்ட பாணர்குடிப் பெண், சில மீன்களையே கொடுத்து, அவற்றுக்கு ஈடாகப் பலவாகிய நெற்களைப் பெறுதற்கு இடமான, நாளும் புது வருவாய்களைத் தரும் ஊர்க்குத் தலைவனே! இனி, நின் பாண்மகன் யாருடைய அழகைக் கெடும்படி பொய் புகலும் கருத்துடையானோ, யான் அறியேன்.

உரை விளக்கம் : மகளிர்க்குக் கூந்தலும் நடையும் கவர்ச்சியூட்டுவனவாதலின் ‘அஞ்சிலோதி அசைநடைப் பாண்மகள்’ என்றாள். ‘சில்லோதி’ என்றாள் அவள் இளமை நோக்கி. சில மீன்களைக் கொடுத்து அவற்றுக்கு ஈடாகப் பல மீன்களைப் பெறுவது பாண்மகளின் தொழில் வன்மையை விளக்கிற்று என்க.

சில மீன்களைப் பெறப் பல நெல்லைத் தரும் வளப்பம் மிக்க மாந்தரை மிகுதியாகவுடையது தலைவன் ஊர் என அவன் வளமையைச் சுட்டினாளாம். அன்றியும் பாணர்கள் பொய் கூறலில்

Koviloor Digital Library

வல்லவர் எனவே, அவர் குடிப் பெண்ணும் தன் நாவன்மையால் பெருமை பெற்றாள் எனக் கோடலும் ஒன்று. பாணன் தன் பொய்ம்மொழிகளால் பலரையும் மயக்கித் தலைவனொடு கூட்டுவான் எனவே, அதனை அறிந்தாள், 'இனி யார் யார் அழகைச் சிதைப்பானோ' என வியந்து வினவினாள். பொய்ப்பதும், அதன்வழி அறியாப் பெண்டிரை ஏமாற்றுவதும் அவன் வழக்கம் என்பது பட, பல பரத்தையரை மயக்கி நினக்கு ஆட்படுத்திய பொய்யன், இப்பொழுது என் நலத்தையும் சிதைக்க வந்துள்ளான். அதற்கு யான் இடம் தாரேன் என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : அம் – அழகு; ஓதி – கூந்தல்; பல் நெல் – மிகுதியான நெல்; பல்வகை நெல்லுமாம்; நலம் – அழகு.

மேற்கோள் : பாணன் பொய்யன் என்பது :

யாரினும் இனியன் பேரன்பினனே
. . . .
யாண ரூரன் பாணன் வாயே.

– குறுந். 85.

உள்ளுறை : பாண்மகள் சில மீன்களையே தந்து பல்வேறு நெல் வகைகளையும் பெறுவாள் என்றது, 'நின் பாணன் சில பொய்களையே திறம்படச் சொல்லிப் பற்பல மகளிரின் அழகினைச் சிதைப்பான் என்னும் உள்ளுறைப் பொருள் கொண்டது.

இதற்கு, 'சிலவாய பொய் வார்த்தைகளைக் கூறிப் பல இன்பத்தைப் பெறுவான்' என உள்ளுறை காண்பார் ஈழத்து உரையாசிரியர். பற்பல மகளிரின் அழகினைச் சிதைப்பான் என்பதற்கு மாறாக, 'பல மகளிரை நின்பால் புணர்ப்பான்' என விளக்குவார் துரைசாமிப் பிள்ளை.

இனிப் பொய் கூறுதலைத் தலைவனுக்கு ஆக்கி, 'ஒரு சில பொய்களைக் கூறியே பலவேறு மகளிரின் நலத்தையும் நீ நுகர்வை' என்று கூறுவார் பெருமழைப் புலவர்.

Koviloor Digital Library

50

துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர! –
தஞ்சம் அருளாய் நீயே; நின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே.

கூற்று : மனையின் நீங்கிப் பரத்தையிடத்துப் பல் நாள் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தன் மனையை அகன்று, பரத்தையர் சேரியில் நெடுநாள் தங்கி மீண்டுவந்து வாயில் வேண்டிய தலைமகனுக்குத் தோழி சொல்லியது இது.

உரை : வஞ்சி மரங்கள் உயர்ந்து வளர்தற்கு இடமானதும், நாளும் புதிய வருவாய் பெருகுதற்கு இடமானதுமான ஊரின் தலைவ! தலைவிக்குச் செல்வம் போன்ற ஆயத்தோரும், யாமும் வருந்துகின்றோம். நின்னைத் தன் நெஞ்சிற் பெற்ற இவளும் அழுகின்றாள். எனவே, நீ (நின் பரத்தைமையை நீங்கி) இவளுக்கு எண்மை உடையையாய் அருள் செய்வாயாக!

உரை விளக்கம் : வஞ்சியின் உயர்ச்சியும் வருவாய்ப் பெருக்கமும் சுட்டவே தலைவனுடைய செல்வ வளத்தைப் பாராட்டினாள் ஆயிற்று. பெருஞ்செல்வன் மனைவியாயிருந்தே துயர் மிகுதியால் அழுகிறாள் என்றவாறு. இதனால், தலைவன் பரத்தைமையைக் குறிப்பால் சுட்டி வருந்தியமை அறிக. தஞ்சமாவது எண்மைப் பண்பாகும். 'நீ நின் கடிய தன்மையைக் கைவிட்டு இவளுக்கு எளிமையுடையையாய் மாறுக' என்பாளாய் 'தஞ்சம் அருளாய் நீயே' என்றாள். ஆயமும் உயிர்த்தோழியும் வருந்தவும், தலைவி அழவும் காரணமாய் அமைந்தான் தலைவன். எனவே அவர்களின் துன்பத்திற்குக் காரணமானது அவன் அன்பின்மையே என்பதனைச் சுட்டுவாளாய், 'நீ எமக்கு எண்மை உடையவனாய் அருள் செய்திலை' என்றாளுமாம். ஈண்டு அருளாய்! என்பது

Koviloor Digital Library

எதிர்மறை முற்றாகக் கொள்ளப்பட்டது. 'தஞ்சம்' புகலுமாதலின், 'நின் நெஞ்சம் பெற்ற இவளும் அழும்; இவட்குத் தஞ்சம் அருள்வாயாக!' என்று வேண்டியதாகவும் பொருள்கொள்ள இடமுண்டு.

'துணையோர்' எனச் சுட்டப்பட்டோர் தலைவியின் ஆயத்தோர் என்பது ஐயர் பதிப்பின் குறிப்புரை தரும் செய்தி. இதற்கு மாறாக, இன்னோர் இருமுது குரவரும், ஏனைய சுற்றத்தாரும் வினைவல பாங்கினாரும் பிறரும் என்றார் பெருமழைப் புலவர். 'குன்றும்' என்றொரு சொல்லை வருவித்து, 'நின்னைப் பற்றுக் கோடாகக் கொண்டு வாழும் இயல்புடைய சுற்றத்தார் நற்செல்வமும் குன்றா நிற்கும்' என்றார். சுற்றத்தாரையே செல்வமாகக் கொண்டு விளக்கினார் இவ்வாசிரியர்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை துணையோராவார் 'தலைமகனது துணைமை பெற்றுப் பொருள் செய்து கொள்ளும் பான்மையோர்' என்றார். செல்வம் என்பது பொருட்செல்வமே என்பது இவர் கருத்து. தலைவன் நெடுநாள் தன் இல்லில் இல்லாமையால், அவனை நம்பி வாழ்ந்தோர் வாழ்விற்கு வேண்டும் செல்வம் இன்றி வருந்தினர் என்பது இவர் கருத்து. 'செல்வமும் யாமும் வருந்துதும்' என்பதில் அஃறிணையும் உயர்திணையும் சேர்ந்து 'வருந்துதும்' என்ற முடிபு கொண்டதற்கு அமைதி கூறுவாராய், 'தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி என்று எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்' (தொல். சொல். 43) என்னும் நூற்பாவை மேற்கோள் காட்டியுள்ளார்.

இனி 'நின் நெஞ்சம் பெற்ற இவள்' என்பதற்கு, 'ஒரு காலத்தில் நின் நெஞ்சார்ந்த அருளைப் பெற்ற இவள்' என்றும் பொருள் கொள்ளலாம். இப்பொழுது நிலைமை வேறாயிற்று என்பது குறிப்பு. 'நீ ஒருகால் நின் நெஞ்சம் முழுவதும் இவளையே கொண்டிருந்தனை. இப்பொழுது பெரிதும் மாறியுள்ளாய்' என்ற பொருளும் கொள்ளலாம். 'இவளும் அழும்' என்றாள். 'நின்னைக் கணவனாகப் பெற்ற இவள் அழுதற்குத் தகுதி உடையாள் அல்லள்.

Koviloor Digital Library

அவளைத் தொடர்ந்து அழுமாறு செய்யாதிருப்பாயாக!' என்ற பொருள்பட.

அருஞ்சொற்பொருள் : துணையோர் – ஆயத்தோர், நம்பி வாழ்வோர், இருமுதுகுரவரும் பிறரும்; யாம் – தோழி; யாணர் – புது வருவாய்; தஞ்சம் – எண்மை, புகல்; அருளாய் – அருள்வாயாக, அருள் செய்கின்றிலை.

இலக்கணக்குறிப்பு : இவளும் – உம்மை உயர்வு சிறப்பு; இவளுமார் – ஆர் இசைநிறை.

புலவிப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

6. தோழி கூற்றுப் பத்து

இதன்கண் வரும் பத்துச் செய்யுட்களும் தோழி கூற்றாகவே அமைதலின் தோழிகூற்றுப் பத்தெனப்பட்டது.

51

நீர் உறை கோழி நீலச் சேவல்
கூர் உகிர்ப் பேடை வயாஅம் ஊர!
புளிங்காய் வேட்கைத்து அன்று, நின்
மலர்ந்த மார்பு இவள் வயாஅ நோய்க்கே.

கூற்று : வாயில் பெற்றுப் புகுந்து போய்ப் புறத்தொழுக்கம் ஒழுகி, பின்பும் வாயில் வேண்டும் தலைமகற்குத் தோழி மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையரோடு தங்கி இன்பம் நுகர்ந்து, பின்னர் பாணர் முதலானோர் வாயிலாகத் தலைவியைக் கூடி, மீண்டும் பரத்தையரைக் கூடி வாழ்ந்தான். அதனால் தலைவி ஊடியிருந்தாள். பின்னும் அவன் வந்து வாயில் வேண்டி நின்றான். அப்போது தோழி வாயில் மறுப்பாளாய்ச் சொல்லியது இது.

உரை : நீர் நிலையிலே வாழும் தன்மையுடைய சம்பங்கோழியின் நீல நிறம் கொண்ட சேவலைக் கூரிய நகங்களை உடைய அதன் பெட்டை தன் வயா நோய் தீர்தற்பொருட்டு (எப்பொழுதும்) நினைத்திருக்கும் ஊர்க்குத் தலைவனே! இவளுடைய வேட்கையால் உண்டாகும் நோய்க்கு, நினது அகன்ற மார்பு இப்பொழுது இவட்குப் புளிங்காயைச் சுவைக்க விரும்புவார்

Koviloor Digital Library

அதனை நினைத்த அளவிலேயே வாயில் நீரூறுமாறு போல இன்பம் தரும் தன்மையை உடையதன்று. (அது ஒரு காலத்தில் இவட்கு நினைத்த அளவிலேயே இன்பம் தருவதாக இருந்ததுண்டு).

உரை விளக்கம் : சம்பங்கோழி நீல நிறமுடையது. அது நீர்வாழ் பறவையாதலின் நீர் உறை கோழி என்றாள். இப்பறவைச் சாதியின் சேவல் நீல நிறத்தது என்ற குறிப்பால், பேடையும் அந்நிறத்ததாயிற்று.

'வயா நோய்' என்றது வேட்கையோடு தொடர்புடையது. இது சூல்கொண்ட உயிர்கட்குப் பொதுவாக உரியது. சூல்கொண்ட பெண்டிர் புளிப்புச் சுவையைப் பெரிதும் நாடுவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாம். வயவு நோய் என்றும் இதனைக் குறிப்பர் சான்றோர். இன்னோர் மண்ணின் மணத்தையும் விரும்பி அதனை யாருமறியாது வாயிலிட்டுச் சுவைப்பர். இதனை, 'வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது பகைவர் உண்ணா அரு மண்ணினையே' (புறம். 20 : 14 – 15) என்பதால் அறிக. வயவு – வயா; கருப்பமுற்ற மகளிர்க்கு நுகரப்படும் பொருள்மேற் செல்லும் வேட்கை; அதனால் அவர்கள் புகையுண்ட மண்ணையுண்பர்; "மனை புகையுண்ட கருமண்ணிடத்து, பவள வாயிற் சுவை காணாது" (கல்லாடம், 7); வயாநோய் எய்தி மண்ணினை நுகர்தல் தேன்சோர், முருகவிழ் துவைத் தண்டார் முகுந்தனை மல்லலோங்கு, திருமகள் சேரும் முன்னம் சேர்ந்திட வேண்டுமென்ன, இருநில மங்கை முன்போ யெய்துதல் போன்றதன்றே. (கூர்மபுராணம், கண்ணன் அவதரித்த, 21) என மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் இதனைப் புறம். 20 ஆம் செய்யுட்குரிய குறிப்புரையில் விளக்கியுள்ளமை காண்க. சூல்கொண்ட மகளிர் புளிச்சுவை விரும்புவர் என்பதனை, 'பசும்புளி வேட்கைக் கடுஞ்சூல் மகளிர்' (குறுந். 287) என்பதாலும் அறிக.

சூல்கொண்டார்க்கு நுகரும் பொருட்கள்பால் உண்டாகும் வேட்கையே வயா எனினும், ஈண்டுப் பொதுவகையால் விருப்பம் என்று பொருள் கொள்க. காதலிக்குக் காதலன் மார்பு நினைத்த

Koviloor Digital Library

அளவிலேயே புணர்வில் நுகரும் இன்பம் போல்வதோர் இன்பமூட்டுவது. அத்தகைய இன்பத்தினைத் தலைவிக்குப் பண்டெல்லாம் அளித்து வந்த தலைவன் மார்பு, இப்பொழுது பரத்தையர்க்கு இன்பமூட்டுவதாய் மாறினமையின், அம்மார்பின்மேல் அவட்கு வெறுப்புண்டாயிற்று என்பாள் 'புளிங்காய் வேட்கைத்து அன்று நின் மலர்ந்த மார்பு' என்றாள். இதனால், 'நீ இவண் வந்தாலும், முன்போல் நின் மார்பைத் தழுவி முழுமையான இன்பமுறும் நிலையில் இல்லை. நீ நின் பரத்தையிடமே செல்க' என மறுத்தாளாம். பண்டெல்லாம் நின் மார்பை, நினைத்தமாத்திரமே, புளிங்காயை வயவுறு மகளிர் நினைத்த அளவிலேயே வாயில் நீரூறப் பெற்று ஒருவகை இன்பமுறுதல் போலத் தானும் இன்புற்றவள் இப்பொழுது அம்மனநிலை மாறினாள் என்றாளாம். 'நண்ணேன் பரத்த நின் மார்பு' என விலக்குவாள் என்பது.

''ஊரனே! இவளது வயவு நோய்க்கு நினது அகன்ற மார்பு புளிங்காய் வேட்கைதானும் விளைவிப்பதன்றி நினைக்குந்தோறும் புலவிக்கு ஏதுவாய் இரா நின்றது'' என்ற துரைசாமிப்பிள்ளையின் உரை சிறப்பானது.

இலங்கை உரையாசிரியர், 'வேட்கைத்தன்று' என்பதனை உடன்பாடாட்டு வினைமுற்றாகக் கொண்டு, 'நினது விரிந்த மார்பானது, இவளது வேட்கை நோய்க்குப் புளியங்காயின் தன்மையாய் இருக்கும்' என்று உரை காண்கின்றார். மேலும், 'ஊரனே! சேவலைப் பெடையானது நினைத்துத் தனது வயாநோய் தீரும்; அதுபோல, நின் மார்பு இவளை நயவாதாயினும் இவள்தானே நினைந்து தன் வேட்கை நோய் தீர்வாள் என்பது' என்கின்றார்.

இது, தொல்காப்பிய உவம இயல் 25 ஆம் நூற்பாவிற்குப் பேராசிரியர் வகுத்த உரையைத் தழுவி எழுதப்பட்டதாகும்.

பொருந்துவது கோடல் சான்றோர் கடன்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : உறை - வாழ்கின்ற; உகிர் - நகம்; பேடை - பெட்டைக்கோழி; வயாம் - விரும்பும், ஆசைப்படும்; மலர்ந்த மார்பு - அகன்ற மார்பு.

52

வயலைச் செங் கொடிப் பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக் கண்
செவ் வாய்க் குறுமகள் இனைய,
எவ் வாய் முன்னின்று - மகிழ்ந! - நின் தேரே?

கூற்று : வாயில் பெற்றுக் கூடியிருந்த தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை காரணமாகப் பிரிந்து சென்ற தலைமகன் மீண்டு வந்து தலைவியை இரந்து வாயில் பெற்று அவளோடு கூடியின்புற்றது கண்ட தோழி அவனோடு நகையாடிச் சொல்லியது இது.

உரை : மருதநிலத் தலைவ! செந்நிற வயலைக் கொடியால் மாலை தொடுத்தமையால் செவ்விய தன் விரல் மேலும் சிவந்தவளும், செவ்வரி பரந்த குளிர்ந்த கண்களையுடையவளும் சிவந்த வாயினையும் இளமையையும் உடையவளுமான இவள் அழுது வருந்தும் வண்ணம் நின் தேர் இனி எவ்விடத்தை அடையச் சமைந்து நிற்கின்றது?

உரை விளக்கம் : மென்மையும் குளிர்ச்சியும் கொண்ட வயலைக் கொடியால் மாலை தொடுப்பினும் இயல்பாகவே சிவந்த தலைவியின் மெல்விரல்கள் மேலும் சிவக்கும் என்றது தலைவியின் மென்மையான தன்மையை விதந்து கூறுதற்பொருட்டாம். கண்களும் சிவந்தன, வாயும் சிவந்தது, விரலும் சிவந்தன எனச் செம்மையையே மீண்டும் மீண்டும் பாரித்துரைத்தாள், தலைவியின் புற அழகினைப் புகழும் நோக்குடன்.

Koviloor Digital Library

அழகும் இளமையும் கூடியவள் அவள் என்பதனை விளக்கக் 'குறுமகள்' என்றாள். 'இத்தகையாளை மனைவியாகப் பெற்ற நீ புறப்பெண்டிரை நயந்து அவட்கு ஏதம் சூழ்ந்தனையே' எனத் தலைவனை இடித்துரைத்தாள் தோழி என்க.

மெல்லிய மாலை தொடுத்ததனாலேயே இவள் விரல்கள் சிவந்தனவெனில், நீ பிரிந்திருந்த நாளில் சுவரில் கோடிட்ட போது எங்ஙனம் சிவந்திருக்கும் எனக் கேட்பாள் போல் விரல் சிவந்தமையை விதந்தோதினாள் எனலும் ஒன்று. இனி மீண்டும் அவள் இனையுமாறு நினையற்க என்பது அவள் குறிப்பாகக் கொள்க. இப்பொழுது இனிமையாக இவளுடன் கூடிக்களிக்கும் நீ எங்ஙனம் அவளைப் பிரிந்திருந்தனையோ என வியந்தவாறாம்.

நகையாடுவது அவள் நோக்கமாதலின், அவர் தேர் வாளா நிற்பவும், அது யாரோ ஒருத்தியின் நலன் நுகர்தற்குத் தலைவனை ஏற்றிச் செல்லச் சமைந்திருப்பதாகக் கற்பித்து 'எவ்வாய் முன்னின்று?' என வினவினாள்.

அருஞ்சொற்பொருள் : வயலை – ஒருவகைக் கொடி; பிணையல் – மாலை; தைஇ – தொடுத்து; அரி – கோடுகள்; மழைக்கண் – குளிர்ந்த கண்; இனைய – இனையுமாறு, வருந்துமாறு; எவ்வாய் – எவ்விடத்திற்கு; முன்னுதல் – நினைத்தல், முற்படல்.

மேற்கோள் : தலைவன் பரத்தையர் சேரிக்குத் தேரில் செல்லல் :

காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன்'

– குறுந். 45.

Koviloor Digital Library

53

துறை எவன் அணங்கும், யாம் உற்ற நோயே? –
சிறை அழி புதுப் புனல் பாய்ந்தெனக் கலங்கிக்
கழனித் தாமரை மலரும்
பழன ஊர! – நீ உற்ற சூளே.

கூற்று : தலைவி தன்னுடன் போய்ப் புனலாடிய வழி, 'இது பரத்தையருடன் ஆடிய துறை' என நினைந்து பிறந்த மெலிவை மறைத்தமையை உணர்ந்த தலைமகன், மனைவயிற் புகுந்துழி, 'தெய்வங்கள் உறையும் துறைக்கண்ணே நாம் ஆடியவதனால் பிறந்தது கொல், நினக்கு இவ்வேறுபாடு?' என்று வினவினாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தலைவியை உடன் கொண்டு சென்று புனலாடினான். அத்துறை முன்னர்த் தன் கணவன் பரத்தையருடன் ஆடியது என்பதை நினைவு கூர்ந்தாளாதலின், தலைவி உளம் வருந்தினாள். ஆயின் அதனை வெளிக்காட்டாது மறைத்தாள். அஃதுணர்ந்த தலைமகன், அவளை நோக்கி, 'தெய்வங்கள் தங்கும் நீர்த்துறையில் புனலாடியவதனால் தான் வருந்தினாயோ?' என வினவினான். அதற்கு விடையாகத் தலைவி 'இம்மெலிவு நின் ஒழுக்கத்தினால் ஏற்பட்டது' என்பதுபடக் கூறியது.

உரை : புதுப்புனல் கரையை உடைத்துப் பாய்ந்ததாகக் கழனியில் உள்ள தாமரை மலர் கலக்கமுற்று மலர்வதற்கு இடனான ஊர! இத்துறை எனக்குத் துன்பமளிக்கக் காரணம் யாது? ஒன்றும்இல்லை. யான் அடைந்த துயர்க்கு நீ என்பாற் செய்த சூளுரையே காரணமாகும்.

உரை விளக்கம் : தலைவன் தன் மனத்தை அடக்கியாளாது, அதன் போக்கில் விடுத்துக் கட்டுப்பாடின்றி ஒழுகினவன் என்பதுபடச் 'சிறையழி புதுப்புனல் பாயும் ஊர' என்றாள் என்க.

Koviloor Digital Library

கதிரவன் ஒளிபட்டு இயல்பாக மலரும் தன்மையுடைய தாமரை, சிறையை உடைத்துப் பாய்ந்த நீரின் விசையால் செயற்கையாக மலர்ந்தது என்பாள், 'கலங்கிக் கழனித் தாமரை மலரும்' என்றாள். சிறைப்பட்ட நீர் வயல்களில் உள்ள தாமரையை வாழ்வித்தலை விடுத்து, அதனைச் சிதைத்துத் துயர் உறுத்திற்று என்பது குறிப்பு. இது தலைவன் ஒழுக்கத்தைக் குறிப்பால் உணர்த்தியது காண்க.

துறை அணங்குதலாவது, துறைக்கண் உறையும் தெய்வங்கள் துன்புறுத்தலாம். நீர்த்துறைகள் தெய்வங்கள் உறையும் இடங்கள் என்பது பண்டையோர் நம்பிக்கை. சங்க இலக்கியத்தில் இது பரவலாக இடம் பெறும் செய்தியாம். 'யாமுற்ற நோய்' என்பது, நோய்க்குக் காரணம் என்ற பொருள் தருவதாம். தன் கலக்கத்திற்குக் காரணமாவது தலைவன் பண்டு, 'நின்னைப் பிரியேன். பிரியின் உயிர் தரியேன்' என்று செய்த சூளை அருளின்றிப் பொய்த்துப் பரத்தையரோடு உறவு கொண்டமையே என்று அவன் உணர்ந்து வருந்துமாறு கூறினாள் என்க. 'நின் சூளை நீ மறந்தமையின் நினக்கு ஏதம் வருமேயெனக் கலங்கினேன்' என்றாளாம். பழனமாவது யாவரும் சென்று பயன்கொள்ளத் தக்க பொது நிலமாதலின், 'பழன ஊரன்' என்றாள், பரத்தையர் பலரும் அணைந்து இன்புறுவது தலைவன் மார்பு என்னும் குறிப்பில்.

அருஞ்சொற்பொருள் : அணங்கும் – துன்புறுத்தும்; எவன் – எக்காரணம் பற்றி; சிறை – அணை; புனல் – நீர்; பாய்ந்தென – பாய்ந்தமையால்; பாய்ந்த அளவிலேயே; கழனி – வயல்; பழனம் – ஊர்ப்பொது நிலம்; சூள் – உறுதிமொழி.

இலக்கணக்குறிப்பு : துறை – துறைக்கண் உள்ள தெய்வம் – ஆகுபெயர்.

மேற்கோள் : நீர்த்துறை அணங்குடைத்தாதல் :

அணங்குடைப் பனித்துறை கைதொழுதேத்தி,
யாயும் ஆயமோடயரும்

– அகம். 246.

Koviloor Digital Library

துறையும் ஆலமும் தொல்வலி மரா அமும்
முறையுளிப் பராஅய்'

– கலி. 101.

சூள் அணங்குமென்பது :
எம்மணங்கினவே மகிழ்ந எம்மூர்
வியன்றுறை நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடுற்ற சூளே'

– குறுந். 53.

உள்ளுறை : சிறையை அழித்துப் புதுப்புனல் பாயக் கழனித் தாமரை முதற்கண் கலங்கிப்பின் மலரும் பழனங்களை உடைய ஊரன் என்றது, நின் கட்டுப்பாடற்ற தன்மையால் முதற்கண் வேறுபட்டுப் பின்னர் மனம் ஒருவாறு தெளிந்து நின்னைக் கூடும் பரத்தையர் பலரை உடையது உன் ஊர் என்றவாறாம்.

54

திண் தேர்த் தென்னவன் நல் நாட்டு உள்ளதை
வேனில் ஆயினும் தண்புனல் ஒழுகும்
தேனூர் அன்ன இவள் தெரிவளை நெகிழ,
ஊரின் ஊரனை நீ தர, வந்த
பைஞ்சாய்க் கோதை மகளிர்க்கு
அஞ்சுவல், அம்ம! அம் முறை வரினே.

கூற்று : வாயில் வேண்டிவந்த தலைமகற்குத் தலைமகள் குறிப்பு அறிந்த தோழி, அவன் கொடுமை கூறி, வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : பரத்தையர் மனை நீங்கி வந்து வாயில் வேண்டினான் தலைவன். தலைவி அவன் கொடுமையொழுக்கம் கருதி அவனுக்கு இணங்க மறுக்கிறாள் என்பதனைக் குறிப்பால் உணர்ந்த தோழி, தலைவனுக்கு வாயில் மறுத்துக் கூறியது இது.

Koviloor Digital Library

உரை : ஊரனே! திண்ணியனவாய்ச் செய்யப்பெற்ற தேர்களைக் கொண்ட பாண்டியனுடைய நல்ல நாட்டகத்தே உள்ளதும், கோடைக்காலமாயினும் குளிர்ந்த புனல் ஒழுக்கம் கொண்டதுமான தேனூரைப் போன்ற பேரழகுடையவளாகிய இவளுடைய, ஆராய்ந்து தேரப்பட்ட வளையல்கள் நெகிழுமாறு நீ இவளைப் பிரிந்து பரத்தையர் சேரிக்குத் தேரூர்ந்து செல்குவையாயின், தலைவி பொருட்டுச் செவ்வணி அணிந்து அங்கு யான் உலகியல் மரபுப்படி வரலாமெனில், அங்கு நின்னால் கொணரப்பட்டு அதனால் உன்னைச் சார வந்த, பஞ்சாய்க் கோரையாற் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த மகளிரை யான் அஞ்சுகின்றேன்.

உரை விளக்கம் : திண்ணிய தேர்ப்படைகள் அரசர்தம் வெற்றிக்குச் சிறந்தனவாதலின் பாண்டியனைத் 'திண்டேர்த் தென்னவன்' என்றாள். இதனால் அவன் ஏனைப் படைப் பிரிவுகளையும் பெற்றவன் என்பதாகக் கொள்க. படையின்றி மன்னர் சீர் வாடிவிடுமாதலின் இங்ஙனம் பாராட்டினாளாம். தென்னவன் நாட்டை நன்னாடெனப் பாராட்டினாள், அந்நாட்டின் நீர்வளமும், நிலவளமும் பற்றி மட்டுமன்றித் தமிழ்வளம் பற்றியும் என்க. இதனாலேயே 'தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ் நனை மரபின் மதுரை' என்றும், 'தமிழ்கெழு கூடல்' என்றும் சான்றோர் போற்றினர். (சிறுபாண். 66 – 67; புறம். 58 : 13) நீர் வறண்ட கடுங்கோடைக் காலத்திலும் தண்புனல் ஒழுகுவது தேனூரின் சிறப்பாவது போலவே, தன் கணவன் அளிபெற்ற காலத்திலும், அளியிழந்து வாடும் காலத்திலும் அவன்பால் அன்பு செலுத்தும் ஒழுக்கினளாவது தலைவியின் சிறப்பு என விளக்கும் முகத்தான் 'தேனூர் அன்ன இவள்' என்றாள்.

'தெரிவளை' எனத் தலைவியின் வளையலைச் சிறப்பித்தாள், அவள்பாலுள்ள வளைகளின் மிகுதி நோக்கி. அங்ஙனமேனும் ஒரு வளையும் அவள் கைகளில் நில்லாது கழன்றோடுதலைக் குறிப்பாளாய், 'வளைநெகிழ' என்றாள். தலைவனின் நெகிழ்ந்த ஒழுக்கம் வளை நெகிழ்வுக்கு ஏதுவாயிற்று. தலைவன் பரத்தையர்

Koviloor Digital Library

சேரிக்குத் தேரூரின், தலைவியின் வளை கழல்தல் கருதி 'வளை நெகிழ ஊரின்' என்றாள்.

'நீ தர வந்த மகளிர்' என்றாள், பரத்தையர் பலர் என்பதாலும் அவர்களை அவனே தேரூர்ந்து சென்று தொகுத்து வந்தான் என்பதாலும் என்க. இதனால், தலைவன் அடங்கா வேட்கை சுட்டப்பட்டது. பைஞ்சாய் என்பது ஒருவகைக் கோரையாம். இதனைத் தண்டாங்கோரை என்றும் கூறுவர். இது மருதநிலத்தில் மண்டிக்கிடப்பது. பூத்தொடுத்தற்கு இதனைப் பயன்படுத்தினர் என்பது, 'பஞ்சாய்க்கோரை பல்லிற் சவட்டிப் புணர்நார்ப் பெய்த புனை கவின் கண்ணி' (பெரும்பாண். 217-218) என்பதனால் உணரப்படும். எனவே, 'பைஞ்சாய்க் கோதை மகளிர்' என்பதற்குப் பஞ்சாய்க்கோரையாற் புணர்க்கப்பட்ட மாலையை அணிந்த மகளிர் என உரை கொள்ளப்பட்டது. இவ்வாறன்றி, 'பஞ்சாய்க் கோரை போல் நீண்ட கூந்தலையுடைய மகளிர்' என வுரைப்பாரும் உளர். 'மகளிர்க்கு அஞ்சுவல் அம்ம' என்றாள், அவர்களால் தான் நெருக்கப் படவும் ஒறுக்கப்படவும் கூடும் என்பது பற்றி.

இதிலுள்ள 'ஊரின் ஊரனை' என்ற பகுதியை அறிஞர் வெவ்வேறு வகையில் விளக்குவர். உ.வே. சாமிநாதய்யர் பதிப்பில் உள்ள குறிப்புரை முதற்கண்ணுள்ளதை வினையெச்சமாகக் கொண்டது. ஊரின் - தேரூர்ந்து செல்வாயாயின். 'ஊரனை' என்பதில் ஐகாரம் முன்னிலையை விளக்கும் என்கிறது குறிப்புரை.

முதற்கண் உள்ள 'ஊரின்' என்பதனை ஊரின் ஒரு பகுதியாகிய பரத்தையர் சேரியென விளக்குவர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. பெருமழைப்புலவர் 'உள்ளூரின் கண், இருந்தேயும் வேற்றூர் போல்வதாகிய பரத்தையர் சேரியின்கண் வதிகின்ற பெருமானே' என விளக்குவார்.

அம்முறை என்பதனை உலகறி சுட்டாகக் கொண்டு, தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்த செய்தியையாதல் மகவீன்று நெய்யாடிய செய்தியையாதல் தலைவனுக்கு உணர்த்தும் பொருட்டுத் தோழி

Koviloor Digital Library

பரத்தையர் சேரிக்குச் செல்லுதல் உலகியல். இஃது உலகறி செய்தியாதலானும் நாணுத்தகவுடைய செய்தியாகலானும் அம்முறையென்று சுட்டினாள்' என்று விளக்குவார் பெருமழைப் புலவர்.

மேற்கோள் : தலைவியின் அழகுக்கு ஊர் உவமையாதல் :

- குட்டுவன்

மரந்தை அன்ன என் நலம் தந்து சென்மே

- அகம். 376.

தேனூர் : இது பாண்டிய நாட்டிலுள்ளதோர் ஊர். இப்பத்தின் 55, 57 ஆம் செய்யுட்களும் இவ்வூரைப் பாராட்டுதலைக் காண்க. 'வலஞ்சுரி மராஅத்து வேனில் அஞ்சினை கமழும் தேனூர்' (குறுந். 22) எனப் பிறரும் இதனைப் போற்றுவர்.

55

கரும்பின் எந்திரம் களிற்று எதிர் பிளிற்றும்,
தேர்வண் கோமான், தேனூர் அன்ன இவள்
நல் அணி நயந்து நீ துறத்தலின்,
பல்லோர் அறியப் பசந்தன்று, நுதலே.

கூற்று : வரைந்த அணிமைக்கண்ணே புறத்தொழுக்கம் ஒழுகி, வாயில் வேண்டி வந்து, தன் மெலிவு கூறிய தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியைத் திருமணம் புரிந்துகொண்ட அண்மைக் காலத்திலேயே தலைவன் பரத்தையரோடு உறவு கொண்டான். பின்னர்த் தன் இல்லம் வந்து தன் வருத்தம் கூறி வாயில் வேண்டத் தோழி அவனை இடித்துக் கூறி வாயில் மறுத்தது இது.

Koviloor Digital Library

உரை : தலைவ! நீ கரும்பாலைப் பொறி களிற்றின் பிளிறலொலிக்கு மாறாக ஒலிக்கும், பரிசிலர்க்குத் தேர்களை அளிக்கவல்ல பாண்டியனுடைய தேனூரை நிகர்க்கும் என் தோழியின் பெரிய அழகினை முதற்கண் விரும்பிப் பின்னர் அவளைப் பிரிந்து போனமையின், அவள் நுதல் யாவரும் அறியும் வண்ணம் பசலை நிறம் எய்தியது. (நின் தகைமை இருந்தவாறு நன்று!)

உரை விளக்கம் : பாண்டிநாடு மருத வளம் மிக்கது என்பாளாய், 'கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்' என்றாள். நெல்லும் கரும்பும் நிலத்துக்கு அணியாதலின், கரும்பைச் சொல்ல நெல்லும் பெறப்படும். யானையின் ஒலியைப் பிளிறல் என்பவாகலின், அதனையே நிகர்க்கும் ஆலை ஒலியையும் பிளிறல் என்றாள். தேர்வண் கோமான் என்றது, அதனொடு மாவும், பிற பொன்னும் பொருளும், நிலமும் கொடுப்பான் என்னும் பொருட்டு. நல்லணி நயந்து என்றது, களவுக்காலத்து நிகழ்ச்சியைக் கருதியது. நயந்து நீ துறத்தலின் என்பதற்கு, முன்னர் விரும்பிப் பின்னர்த் துறந்து என்று பொருள் கொள்க. 'முன்னர் நின் விருப்பத்திற்குக் காரணமான இவள் அழகு பின்னர் நுமக்குக்கசந்ததோ?' என வினவினாள் என்க. 'பாண்டிய நாட்டுத் தேனூர் அன்ன இவளை வெறுத்துப் போயின உனக்கு மீண்டும் ஈங்கு என்ன வேலை?' என்பாள் போல வெகுண்டு கூறினாள்.

'பசத்தற்குரியதல்லாத இவள் நுதல் பசந்ததற்குக் காரணமானவன் நீயன்றோ?' என்றாளாம். 'பல்லோர் அறிய' என்றது பிறர் அறியாமல் நின் பழியை இவள் மறைக்க முயன்றாலும், இவள் நுதல் பலருக்கும் பறைசாற்றுமாறு பசலையுற்றது என்ற கருத்திலாகும். அறிதலாவது, அறிந்து தூற்றுதல்.

அருஞ்சொற்பொருள் : எந்திரம் – ஆலை; நல்லணி – பெரிய அழகு; பிளிறல் – யானையின் ஒலி; பசந்தன்று – பசந்தது, நிறம் வெளிறிற்று.

Koviloor Digital Library

மேற்கோள் : கரும்பாலையின் ஒலி களிற்றின் பிளிறல் போன்றிருத்தல் :

அணங்குடை ஆளி தாக்கலின் பலவுடன்
கணஞ் சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை

– பெரும்பாண். 258–60.

உள்ளுறை : களிற்றெதிர் பிளிற்றும் என்றது, நீ கூறுகின்ற மெலிவுக்கு மேலே மெலிவு கூறுகின்றது இவள் நுதல் என்பதாம். (பழையவுரை)

'களிற்றெதிர் கரும்பின் எந்திரம் பிளிற்றும் என்றது, உயிருடைய யானைக்கு மாறாக உயிரற்ற பொறி ஆரவாரித்தல் போன்று, கற்புடைய தலைவிக்கு மாறாகக் கயமகளிர் நின்னைக் கைக்கொண்டுவிட்டனர்' என உள்ளுறை காண்பார் பெருமழைப் புலவர்.

56

பகல் கொள் விளக்கோடு இரா நாள் அறியா,
வெல் போர்ச் சோழர், ஆமூர் அன்ன இவள்
நலம் பெறு சுடர் நுதல் தேம்ப,
எவன் பயம் செய்யும், நீ தேற்றிய மொழியே?

கூற்று : புறத்தொழுக்கம் உளதாகியது அறிந்து தலைமகள் மெலிந்துழி, 'அஃது இல்லை' என்று தேற்றும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரோடு தலைவனுக்கு உறவு உண்டு என்பதறிந்த தலைவி வருந்தி மெலிந்தாள். அதனைத் தலைவன் மறுத்து அவட்குத் தேறுதல் கூறியதை அறிந்த தோழி, 'நீ கூறிய தேறுதல் மொழிகள் பயனற்றவை' என்று கூறி வாயில் மறுத்தது இது.

Koviloor Digital Library

உரை : நண்பகல் போன்ற விளக்குகளின் ஒளிமிகுதியால் இராக்காலத்தினை அறிய இயலாத, போர் வெற்றியால் புகழ்பெற்ற சோழரின் ஆமூர்போலும் அழகுடைய இவள் நலம் மிகுந்த ஒளியுடைய நுதல் ஒளி மழுங்குமாறு, நீ முன்பு செய்த சூளுரை யாவும் பொய்த்தன வாதலால், நீ இன்று செய்யும் சூள் என்ன பயனைச் செய்ய இயலும்? (ஒன்றுமில்லை).

உரை விளக்கம் : 'பகல்கொள் விளக்கு' என்றது நடுப்பகல் போலும் ஒளியை உடைய விளக்குகளை. பகற்பொழுதில் நண்பகலே மிகுந்த ஒளியுடையதாதலின் பகல் என்றது நடுப்பகல் என விளக்கப்பட்டது. 'இராநாள் அறியா' என்றாள், இரவைப் பகலினின்றும் வேறுபடுத்த இயலாமை கருதி. 'வெல்போர்ச் சோழர்' என்றதற்கு, சோழர் தாம் செய்யும் போர்கள் அனைத்திலும் வெற்றியே குவிக்கும் பெருவீரத்தினர் என்று பொருள் கொள்க. முன்னை இரு செய்யுட்களில் பாண்டிநாட்டுத் தேனூரைச் சிறப்பித்த புலவர் இச்செய்யுளில் சோணாட்டு ஆமூரைச் சிறப்பிக்கின்றார். 'பண்டு நீ கூறிய தேறுதல் மொழியாலே நலம்பெற்ற இவள் நுதல், நின் தவறான ஒழுக்கத்தினாலே பொய்த்துப் போயினமையின் இவள் நுதல் இன்று ஒளியிழக்கலாயிற்று. அவ்வாறிருப்ப நீ இன்று கூறும் தெளிவுரைகள் யாது பயன் விளைக்கக் கூடும்?' என அவன் தெளிவுரைகளின் என்றும் பயனற்ற தன்மையைச் சுட்டினாள் என்க. 'ஆமூரில் பகலையும் இரவையும் வேறறிய இயலாமை போல் யாம் நின் பொய்யையும் மெய்யையும் பிரித்தறிய மாட்டேம்' என்றாளும் ஆம்.

இராநாள் உளதாகவும் விளக்கங்கள் தம் ஒளியால் அதனை அறியாவண்ணம் மறைப்பதுபோல, நின்பால் பரத்தைமை உளதாகவும், அதனை இப்பொய்மொழிகளால் மறைத்துத் தெளிவிக்கின்றாய் எனத் தலைவனது தெளிப்புரையின் இயல்பு கூறினாள் என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

அருஞ்சொற்பொருள் : பகல் விளக்கு – பகல் போதின் ஒளியை உடைய விளக்கு; தேம்ப – ஒளிமழுங்குமாறு; எவன் பயன் செய்யும்? – எப்பயன் செய்யும்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : விளக்கொடு - ஒடு உருபு ஆல் உருபின் பொருட்டு.

57

பகலில் தோன்றும் பல் கதிர்த் தீயின்
ஆம்பல் அம் செறுவின் தேனூர் அன்ன
இவள் நலம் புலம்பப் பிரிய,
அனை நலம் உடையளோ - மகிழ்ந! - நின் பெண்டே?

கூற்று : தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயிற்று என்பது கேட்ட தோழி அவனை வினாவியது.

கூற்று விளக்கம் : தலைமகனுக்குப் பரத்தையர் உறவு உண்டு எனக் கேள்வியுற்ற தோழி, அவன் தலைவியைப் பிரிந்து போகும் அளவில் அத்துணை அழகியோ நின்பரத்தை என வினவியது.

உரை : ஞாயிற்றைப் போலத் தோன்றும் பல கதிர்களை யுடைய தீயினையும், ஆம்பல் நிறைந்த வயல்களையும் உடைய தேனூர் என்னும் நகரைப் போலும் இவளுடைய பெண்மை நலம் தனிமையால் கெட்டொழியுமாறு நீ பிரிதற்கு, நின்னால் விரும்பப்பட்ட அப்பரத்தை அத்துணைப் பேரழகியோ? கூறுக.

உரை விளக்கம் : பகலைச் செய்வது பகல் எனப்பட்டது. பல்கதிர்த்தீயெனப்பட்டது வேள்வித்தீயென்பார் பழைய உரையாசிரியர். வேள்வித் தீயும் ஆம்பலஞ் செறுவுமுடையது தேனூர் என்றாள். வேள்வித் தீயொடு தாமரை மலர் முரணுவதாக நாட்டை வருணிப்பதுண்டு (புறம். 397). 'இனிப் பகலெரி சுடரின் மேனி சாய' என்றாற்போல, 'பல்கதிர்த் தீயின் இவள் நலம் புலம்ப' என இயைத்துப் பொருள் கோடலும் உண்டு. பல்கதிர் என்றது ஈண்டுப் பல சுடர்களாகும். பல சுடர்கள் கொண்டு எரியும் வேள்வித்தீ, நண்பகற்போதில் சுடரும் ஞாயிறு போன்றது என்பது கருத்து.

Koviloor Digital Library

'நின் பெண்டு' என்றது நின் மனையோளினும் சிறந்தவளாக நீ கருதும் பரத்தை என்னும் பொருளிலாம். நின் மனையாளை அயலாள் ஆக்கும் வண்ணம் அத்துணைப் பெரியவளோ அவள் என்றாளாம். 'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், பொறையும் எனப் பல சிறப்பும் கொண்ட என் தோழியை மறந்து பொய்மையும் பகட்டும் கயமையும் அணியாகக் கொண்ட பரத்தையை நச்சினை' என இகழ்ந்தவாறு. இனி, தலைவனுடைய அயன்மை தோன்றப் பரத்தையை நின்பெண்டு என்றாள் என்பார் பெருமழைப் புலவர்.

'மகிழ்' கள்ளாதலின், நீ கள்ளுண்டு களித்தமையான் அறிவு திரிந்தனையோ என்ற குறிப்பும் தோன்ற 'மகிழ்ந' என்று விளித்தாள் என்க.

இனி, இல்வாழ்வார்க்குரிய வேள்வியையும், வளவயற்கு அணி செய்யும் ஆம்பலையும் கூறியதனால், தலைவிபால் மனையற மாண்பும் கொடைக்கடன் இறுத்தற்குரிய வளமையும் உண்மை சுட்டப்பட்டது என்பார் உளர். மேலும், நலம் என்றது, குடிக்கு விளக்காகும் மகப் பயக்கும் நலம் என்பதும் ஒன்று. அவட்கு அந்நலம் இல்லையென்பது. (அகம். 176).

தேனூர் : தேனூர் சுண்ணாம்பிற்குப் பெயர் போனது என்பது, 'தேனூர்ச் சுண்ணாம்பும் மானூர் வெற்றிலையும்' என்னும் பழமொழியால் விளங்கும். (உ.வே.சா. பதிப்பில் இச்செய்யுள் உரைக்குரிய குறிப்புரை) இவ்வூரின் நீர் வளம் 'வேனிலாயினும் தண்புனல் ஒழுகும்' எனப் பாராட்டப்படலின் (ஐங். 54.) அங்குக் கிளிஞ்சல் மிகுதியாய் வளரவும் அதனால் சுண்ணாம்பு வளம் பெருகவும் இடமேற்பட்டது என்க.

அருஞ்சொற்பொருள் : பல்கதிர் - பல சுடர்கள்; ஆம்பல் - அல்லி; செறு - வயல்; புலம்ப - வருந்த; அனை - அத்துணை.

இலக்கணக்குறிப்பு : பகல் - ஆகுபெயர்.

Koviloor Digital Library

58

விண்டு அன்ன வெண்ணெற் போர்வின்,
கை வண் விராஅன், இருப்பை அன்ன
இவள் அணங்குற்றனை போறி;
பிறர்க்கும் அனையை யால்; வாழி நீயே!

கூற்று : உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் புலந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தைமை ஒழுக்கமறிந்து தலைவி மிகையாக ஊடிய பொழுது தலைவன் முயன்றும் அவ்வூடலைத் தீர்க்க முடியாதவனானான். அந்நிலையில் தானும் அவள்பால் ஊடுவதாகத் தோற்றங் காட்டியபொழுது தோழி அவன் ஊடலைத் தணிக்க முயன்றது.

உரை : மலைபோலுயர்ந்த வெண்ணிற நெற்போர்களை மிகுதியாகக் கொண்ட விரான் என்னும் வண்மை மிக்க தலைவனுக்குரிய இருப்பை என்னும் ஊரை நிகர்த்த நலம் கொண்ட என் தோழியால் நீ பெரிதும் துன்பமடைந்தாய் போலும்! நீ மணந்து கொண்ட இவளால் மட்டுமல்லாது, நீ உறவு கொண்ட பரத்தையர் பலராலும் இங்ஙனமே வருத்தமுறுவாய் போலும்! நீ வாழி!

உரை விளக்கம் : விரான் என்பவன் இருப்பை நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட வள்ளல். அவன் வள்ளன்மைக்கு ஏது கூறுவாள் 'விண்டு அன்ன வெண்ணெற் போரின் ..... இருப்பை' என்றாள். மலையென நெற்போர்களைக் கொண்ட ஊரின் தலைவன் விரான் என்றவாறு. கொடைவளத்திற் சிறந்த இருப்பையையொத்தவள் தலைவியென்றதனால் அவளுடைய மனையறப் பண்புவளம் சிறப்பிக்கப்பட்டது. ஊடுவதற்குக் காரணம் யாதும் இன்றியே தலைவன் ஊடினானாதலின் அவனை அசதியாடும் விருப்புடன் 'அணங்குற்றனை போறி' என்றாள். 'இங்ஙனம் ஊடுவதுபோல் பாசாங்கு செய்தல் நினக்கு இயல்பாதலின்,

Koviloor Digital Library

நின் பரத்தையர் பலரிடமும் இங்ஙனமே ஒழுகுவாய் போலும்!' என நகையாடுவாளாய், 'பிறர்க்கும் அனையை' என்றாள். விளையாட்டு வகையால் தான் கூறியதனைப் பொறுத்தருளுமாறு வேண்டும் குறிப்பில், 'வாழி நீயே!' என வாழ்த்தினாள்.

இனி, ஈழத்து உரையாசிரியர் 'இவள் அணங்குற்றனை போறி' என்பதற்கு, 'இவளைத் துயரமடையச் செய்தவனைப் போல்கின்றாய்' எனப்பொருள் கூறினார். 'வரம்பு மீறி அவளோடு ஊடி அவளுக்குத் துயரம் செய்தவன் என்னும் பழியை அடைகின்றாய்' என்று கூறி அவன் தவறு செய்தமையைச் சுட்டித் தெருட்டுவதாக விளக்குவதும் ஒருவகையிற் சிறந்த பொருளாகவே தோன்றுகின்றது. எனினும் 'உற்றனை' என்ற தன்வினைச் சொல்லை 'உறுவித்தனை' எனப் பிற வினையாகக் கொள்வது அவ்வளவு பொருத்தமாகப்படவில்லை. 'யார் அணங்குற்றனை கடலே' (குறுந். 163) என்பதிற் போல இவ்விடத்தும் தன்வினையாகக் கொண்டு பொருள் கூறலே பொருத்தமானது என்க.

புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள விராலி மலையை விரான்மலை எனக் கொள்வாரும் உளர். 'இவன்மலை விராலிமலை என்று வழங்குகிறது; இருப்பை இவனுடைய ஊர்?' என்பது ஐயர் பதிப்பில் காணும் குறிப்பு. இருப்பை நகரைப் பரணர்,

'தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலிபுனல் வாயில் இருப்பை'

(நற். 260)

என்றும்,

'வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரியக் கழனி
வாங்குசினை மருதத் தூங்கு துணர் உதிரும்
தேர்வண் விரா அன் இருப்பை'

(நற். 250)

என்றும் பாராட்டுவார்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : விண்டு – மலை; போர்வு – வைக்கோற்போர்; கைவண் – வள்ளன்மை மிக்க; அணங்கு – துன்பம்; போறி – காண்கின்றாய்; பிறர் – பிற பெண்டிர்; அனையை – அத்தகையை.

இலக்கணக்குறிப்பு : அன்ன – உவம உருபு; போறி – முன்னிலை வினைமுற்று; ஆல் – அசைநிலை.

குறிப்புப் பொருள் : நெல்வளம் கொண்ட இருப்பை அன்னள் தலைவி என்றது, அவள் தலைவன் விரும்பும் பல உயர்ந்த பண்புகளையும் நிரம்பப்பெற்றவள் என்றதனை உள்ளுறுத்தியது.

59

கேட்டிசின் – வாழியோ, மகிழ்ந! – ஆற்றுற,
மையல் நெஞ்சிற்கு எவ்வம் தீர
நினக்கு மருந்து ஆகிய யான், இனி,
இவட்கு மருந்து அன்மை நோம், என் நெஞ்சே.

கூற்று : தலைமகள் ஆற்றாளாம் வண்ணம் மனைக்கண் வரவு சுருங்கிய தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாயவழி ஆற்றாளாகிய தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தன் மிகையான புறத்தொழுக்கம் காரணமாகத் தன்னில்லத்திற்கு வருதல் அரிதாயிற்று. அதனைப் பொறுக்கலாற்றாது தலைவி வருந்தியது கண்டு தோழி மனம் நொந்து தலைவனுக்குக் கூறியது.

உரை : மகிழ்நனே! யான் கூறுதலைச் செவி கொடுத்துக்கேள்! நீ நெடுங்காலம் வாழி! களவுக் காலத்தில் தலைவியின் கூட்டம் விரும்பி நீ வருந்திய போது 'நினக்கு ஆறுதல் உண்டாகுமாறு, நின் துயருக்கு மருந்தாக விளங்கிய யான், இன்று இவள் நின்னாலுற்ற

Koviloor Digital Library

துயருக்கு மருந்தாக இயலாமை கருதி என் நெஞ்சு பெரிதும் வருந்துகின்றது.

உரை விளக்கம் : கேட்டிசின் என்றும் வாழி என்றும் தொடங்கியது, தான் கூறப்போகும் செய்தியின் இன்றியமையாமை குறித்தது. தலைவனுக்குரிய மையலும், எவ்வமும் களவுக் காலத்தில் அவனுக்கு நிகழ்ந்தவற்றைச் சுட்டியதாகும். தலைவியைக் காணாது தலைவன் வருந்தியபொழுதெல்லாம் அவனுக்கு ஆறுதலாக இருந்தவள் தான் என்பதுபட இங்ஙனம் கூறினாள். தலைவியும் தலைவனும் தனக்கு இருகண்கள் போல்வார் எனினும், களவுக் காலத்து அவனுக்கு உதவியவாறு, கற்புக் காலத்துத் தன் தோழிக்கு உதவ முடியாமையை எண்ணி நொந்தவளாய் 'இவட்கு மருந்தன்மை நோம் என்னெஞ்சு' என்றாள். இனி, என்றது கற்புக்காலமாகிய இப்பொழுது என்னும் பொருட்டு. 'நின்னைக் குடிநன்குடையன் என்றும், கூடுநர்ப்பிரியலன் என்றும், கெடு நாமொழியலன் என்றும் பலவாறு புகழ்ந்து அவளை நினக்கு அன்புடையளாக வளர்த்த யான், இன்று நீ நிலைமாறியொழுகுதல் கண்டு நோவதோடு, என்னால் நேர்ந்த துயர் தாங்காத என் தோழிக்குத் துயர் தீர் மருந்தாக இயலாமைக்காகவும் நோகின்றேன்' என்றாள். இதனால், தலைவிக்காக நின்னைத் திருத்திக் கொள்ளாவிடினும், எனக்காகவாவது திருத்திக் கொள்ளலாகாதோ என வினவினாள் என்க.

இனி, 'நினக்கு என்பது இடையே வந்து சேர்ந்த நினக்கு என்பதுபடவும், இவட்கு என்பது, பிறந்தநாள் தொடங்கி ஆருயிர்க்கேண்மையுடைய இவட்கு என்பதுபடவும் நின்றன' என்ற பெரும்மழைப்புலவரின் விளக்கம் நினைந்து இன்புறத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : கேட்டிசின் – கேட்பாய்; ஆற்றுற – ஆறுதல் உறும்படி; மையல் – மயக்கம்; எவ்வம் – காமத்துயர்; மருந்து – தீர்வு.

இலக்கணக்குறிப்பு : இசின் – முன்னிலை அசை; நோமென் நெஞ்சு ... நெஞ்சு நோம் – அஃறிணை ஒருமை வினைமுற்று.

Koviloor Digital Library

மேற்கோள் : களவுக்கால நிகழ்ச்சியைக் கற்புக் காலத்து நினைவு கூர்தல் :

அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும்பாம்பு வழங்கும் தெருவின்
நடுங்களுர் எவ்வம் களைந்த எம்மே

– குறுந். 354.

களவுக் காலத்துத் தோழி சொல்லியது மெய்யானது எனக் கற்புக் காலத்தில் மகிழ்ந்தது :

குடிநன்குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் என நீ
வல்ல கூறி வாய்வதின் புணர்த்தோய்
நல்லைகாண்

– அகம். 352.

60

பழனக் கம்புள் பயிர்ப்பெடை அகவும்
கழனி ஊர! நின் மொழிவல்; என்றும்
துஞ்சு மனை நெடுநகர் வருதி;
அஞ்சாயோ, இவள் தந்தை கை வேலே?

கூற்று : வரையாது ஒழுகும் தலைமகன் இரவுக் குறி வந்துழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் வரையக் கருதாது களவு நீட்டித்தான். நாடொறும் இரவுப் பொழுதில் வருதலை மேற்கொண்டான். அவனை எதிர்கொண்டு வரைவு முடுக்க எண்ணியவள் இங்ஙனம் வினவினாள்.

உரை : பழனத்தில் வாழும் சம்பங்கோழிச் சேவல் இடைவிடாது ஒலியெழுப்புகின்ற தன் பெடையைத் தன்பால் கூவி

Koviloor Digital Library

அழைத்தற்கு இடனான வயல்களை நிரம்பவுடைய ஊரின் தலைவனே! இல்லில் இருப்பார் யாவரும் இனிது உறங்கும் நடு யாமப் பொழுதில் வருகின்றனையே! இவள் தந்தையின் கையிலுள்ள வேலினை நீ அஞ்சமாட்டாயா? (யாம் எப்பொழுதும் அஞ்சுதலுடையோம்).

உரை விளக்கம் : பழனமாவது ஊர்ப்பொது நிலம். அது நீர்வளம் உடையதாதலின் பல்வேறு பறவைகளும் அங்கு வாழ்வது இயல்பு. கம்புட்கோழியாவது சம்பங்கோழியாகும். இதனைச் செண்பகம் என்றும் இக்காலத்து வழங்குவர். இது கனைகுரல் உடையது என்பதால் 'கம்புட்கோழி கனைகுரல் இயம்ப' என்றார் பிறரும். 'பயிர்ப்பெடை' என்றாள், அதன் பெட்டை இடைவிடாது ஒலித்தமையால். அதன் தனிமை தீர அதன் சேவல் அகவி அழைத்தமையால் பெடை அகவும் என்றாள். 'நின்மொழிவல்' என்றாள் 'நின்னை ஒன்று வினவுதல் உடையேன்' என்ற பொருளில். 'தெரியாமல்தான் கேட்கிறேன்' எனத் தொடங்கி ஒரு வினாவை எழுப்புதல் இன்றும் உலக வழக்காகும். இது, வியப்பை வெளிப்படுத்தும் குறிப்புடையது. 'நெடுநகர்' என்றாள் அது காவல் மிகுதியும் உடையது என்னும் பொருள்பட. 'இவள் தந்தை கைவேல் அஞ்சாயோ?' யாவரும் அஞ்சும் எம் தந்தைக்கு நீ சிறிதும் அஞ்ச மாட்டாயோ? அத்துணைத் துணிவுடையையோ? அவன் கண்ணிற் படுவையாயின் நின் நிலையும் தலைவியின் நிலையும் என்னாகும்? இங்ஙனம் பல பொருளும் உட்படுத்தி 'அஞ்சாயோ இவள் தந்தை கை வேலே?' என்று வியந்து வினவிய திறம் காண்க.

'நீ வரும் வழியில் எதிர்ப்படும் பல்வேறு ஏதங்களை நின் அஞ்சாமை மிகுதியால் பொருட்படுத்தாய் எனினும், நினக்கு நேரத்தகும் துன்பங்களை எண்ணி வருந்தும் எம் பொருட்டு வருந்தாய் எனினும், அவ்வண்ணமே என்றும் விழிப்புடன் இருந்து தலைவியைக் காக்கும் யாய்க்கு நீ அஞ்சாய் எனினும், இவள் தந்தையின் வேலுக்கும் நீ அஞ்சாதிருத்தல் அறியாமை' என்பாள் 'அஞ்சாயோ இவள் தந்தை கை வேலே?' என்றாள். தந்தையைக் கூறவே 'தன்னையர் பொருட்டும் அஞ்சாயோ' என வினவியதாகவும் கொள்க.

Koviloor Digital Library

'துஞ்சுமனை வருதி' என்றது, யாவரும் துஞ்சும் நடு யாமம் என்பதைச் சுட்டிற்று. 'யாவரும் துயிலும் நடு இரவிலும் யாம் விழித்திருக்கின்றோம். இப்படி எத்துணை நாள் அல்லற்படுவது? விரைவில் வரைந்து எய்துவது உன் கடன்' என்றவாறாம். 'என்றும்' என்றாள் நாடொறும் வருதல் பற்றி. 'நெடுநகர்' என்றதற்குப் பெரிய நகரம் என்று பொருள் கொண்டார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. எனினும் நகர் என்னும் சொல் சங்க இலக்கியத்தில் பெரிய மாளிகை வீட்டையே பெரிதும் குறிப்பதாம். தன் குடும்பத்தின் வளமையைச் சுட்டுவது குறிப்பாதலின் வீடு எனக் கோடலே மிகப் பொருத்தமானது. நீயே அடியறிந்து ஒதுங்கா ஆரிருள் வந்துஎம் கடியுடை வியனகர்க் காவல் நீவியும் பேரன்பினையே பெருங்கல் நாட (நற். 156) என்பதில் நகர் இப்பொருள் படுதல் காண்க. நகர் என்ற சொல் வீடு என்று பொருள்படுதலை ஐங்குறுநூறு 376, அகம். 17, 22, 136, குறுந்தொகை 338 ஆகியவற்றிலும் கண்டு கொள்க. மனை என்பது மனைக்கட்டையும் நெடுநகர் என்றது வீட்டையும் குறிக்கும் என்க. மனைக்கண் உள்ள பெரிய வீடு என்க. கண் உருபு வருவிக்கப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : பழனம் - ஊர்ப்பொது நிலம்; பயிர்ப்பெடை - பயிர்தலை உடைய பெட்டைப்புள்; மொழிவல் - வினவுவேன்; துஞ்சுதல் - உறங்கல்.

இலக்கணக்குறிப்பு : ஊரன் - அண்மை விளி; வருதி - முன்னிலை முற்று; அஞ்சாயோ - ஓகாரம் வினா.

மேற்கோள் : தலைவன் யாமத்தில் வருதல் பற்றித் தோழி முதலானோர் வருந்தல் :

'நடுநாள் வாரலை வருந்துதும் யாமே'
– குறுந். 69.

இயங்குநர் மடிந்த அயம் திகழ் சிறுநெறிக்
கடுமா வழங்குதல் அறிந்தும்
நடுநாள் வருதி நோகோ யானே'
– நற். 257.

Koviloor Digital Library

பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்கு வந்தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே
– குறுந். 355.

குறிப்புப் பொருள் : 'பழனக்கம்புள் பயிர்ப்பெடை அகவும் கழனியூர' என்றது, பழனத்திலுள்ள சம்பங்கோழிச் சேவல், வரம்புடைய கழனியில் இருந்து தன்னைக் காதலித்தழைக்கும் பேடையின் இயல்பறியாமல் அதனை வருந்திக் கூவியழைப்பது போன்று நீயும் கூடி மனைக்கண்ணிருந்து நின் வரைவினை எதிர்பார்த்து வருந்தியிருக்கும் தலைவியின் நிலையறிந்து வரையாமல் வீணே இருளினும் பகலினும் வந்து வந்து போகின்றனை என்றவாறு. (பெருமழைப்புலவர் விளக்கம்).

மருதத்தில் குறிஞ்சி நிகழ்ந்ததற்கு இச்செய்யுள் மேற்கோளாகும். (தொல். அகத். 12, நச்.)

தோழி கூற்றுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

7. கிழத்தி கூற்றுப் பத்து

பரத்தை காரணமாகப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டி வந்தபொழுது கிழத்தி தலைவனிடம் பேசுவதாக அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.

61

நறு வடி மா அத்து விளைந்து உகு தீம் பழம்
நெடு நீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்,
கைவண் மத்தி, கழாஅர் அன்ன
நல்லோர் நல்லோர் நாடி,
வதுவை அயர விரும்புதி நீயே.

கூற்று : 'வதுவை அயர்ந்தாள் ஒரு பரத்தையைச் சில நாளில் விட்டு, மற்றொரு பரத்தையை வதுவை அயர்ந்தான்' என்பது அறிந்த தலைமகள், அவன் மனைவயின் புக்குழிப் புலந்தாளாக, 'இது மறைத்தற்கு அரிது' என உடன்பட்டு, 'இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பல பரத்தையரை அடுத்தடுத்து வதுவையிற் கூடினான் என்பதறிந்த தலைமகள், அவன் இல்லம் திரும்பியபொழுது ஊடினாள். இதனை மறைத்தல் அரிது என வுணர்ந்து இனி இவ்வாறு நிகழாது எனத் தலைவன் உறுதி கூறிய பொழுது தலைவி இங்ஙனம் நொந்து உரைத்தாள்.

உரை : பெரும! நறிய வடுக்களைக் கொண்ட மாமரத்தில் நன்கு முற்றிக் கீழே விழும் இனிய பழம் நெடிய நீர் நிறைந்த பொய்கையில் 'துடும்' என்னும் ஒலியுடன் விழுதற்கு இடனான,

Koviloor Digital Library

வள்ளன்மை மிக்க மத்தி என்பானது கழார் முன்றுறை போன்று அழகுடைய நல்லோர் பலரை நாடிச் சென்று பெற்று வதுவை செய்து கொள்ளலை நீ வழக்கமாகக் கொண்டனை. (அங்ஙனமாக நின் சொல்லை நம்புவது யாங்ஙனம்?)

உரை விளக்கம் : மத்தியென்னும் வள்ளலின் கழார் முன்றுறை, கரைகளில் மாமரங்களை மிகுதியாகவுடைய பொய்கைகள் கொண்ட அழகிய ஊராதலின் பேரழகு வாய்ந்த பரத்தையர்கட்கு அவ்வூரை உவமை கூறினாள் தலைவி.

மாவடுவினை நறுவடி யென்றாள் அதன் நறிய மணத்தின் காரணமாக. விளைந்து உகுதீம்பழம் என்றாள், பறிப்பாறின்றிக் கிடந்தமை தோன்ற.

'கைவண் மத்தி கழாஅர் அன்ன நல்லோர்' என்று பரத்தையரைக் குறித்தாள், அவன் வரையாது வழங்குவதுபோல தம்மை நாடிவந்த ஆடவர் பலர்க்கும் வரையாது தம் பெண்மையைக் கொடுத்து இன்புறுத்தும் பரத்தையர் என்னும் குறிப்பில்.

'நல்லோர் நல்லோர்' என்னும் அடுக்கு, புதுப்புதுப் பரத்தையரை நாளும் தேடி அலைவான் என்ற குறிப்புடையது. இவ்வடுக்கு இழித்தற்கண் வந்தது என்பார் துரைசாமிப் பிள்ளை.

நாளும் புதுமை நாட்டமுடைய நீ, மணந்து நாளாகிய எம்போல்வாரிடம் தங்குவது அரிதே என்று இடித்துரைக்கும் வகையில் இங்ஙனம் கூறினாளாம்.

அருஞ்சொற்பொருள் : வடி – வடு, மாம் பிஞ்சு; விளைந்து – முதிர்ந்து; உகு – உதிர்கின்ற, விழுகின்ற; பொய்கை – இயற்கை நீர் நிலை; துடும் – ஒலிக்குறிப்பு; கழார் – கழார் முன்றுறை என்னும் ஊர். இது காவிரிக் கரையில் இருந்தது. வதுவை – மணம்.

Koviloor Digital Library

மேற்கோள் : விளைந்த மாம்பழம் பொய்கையில் வீழ்தல் :

கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்

– குறுந். 8.

கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம் கொக்கின்
கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்
தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழும்
தண்டுறை ஊரன்

– நற். 280.

தலைவன் பரத்தையை வதுவை செய்தல்:

நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி

– அகம். 66.

மாரி ஈங்கை மாந்தளிர் அன்ன
அம்மா மேனி ஆயிழை மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தாரிடைக் குழைய
முழவு முகம் புலரா விழவுடை ஆங்கண்
வதுவை மேவலன் ஆகலின்

– அகம். 206.

தலைவன் பரத்தையை வதுவை செய்து கொள்ளல் :

திருமருது ஓங்கிய விரிமலர்க் காவின்
நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை அயர்ந்தனை என்ப

– அகம். 36.

வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவோடு வரூஉம் பாணன்

– அகம். 56.

Koviloor Digital Library

நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி
– அகம். 66.

வரலாறு : மத்தியென்பான் காவிரிக்கரைப் பகுதியை ஆண்ட பரதவர் கோமான். இவன்பால் வேற்படை இருந்தது. 'பல்வேல்மத்தி' (அகம்.6) என்று இவனைப் பரணர் குறிப்பிடுவார். இவன் வெண்மணிவாயில் என்னுமிடத்தில் கல்லைக்கொண்டு ஒரு துறையை அமைத்தான் என மாமூலனார் பராட்டுகின்றார் (அகம். 211). இவன் ஆண்ட கழார் நாட்டில் கழார்க் கீரன் எயிற்றியார் என்ற பெண்பாற் புலவர் வாழ்ந்தார். இவர் பாடியவை அகம். 163, 217, 235, 294 குறுந். 135, 261, 330, நற். 281, 312 ஆகியவை.

உள்ளுறை : இதன்கண், நறுவடி மா அத்து விளைந்துகு தீம்பழம் அதற்கு உரிமையுடையோர்க்குப் பயன்படாமல் பொய்கையில் வீழ்ந்து ஆங்கு வாழும் மீன்கட்கே இரையாதல் போன்று நீயும் இல்லற உரிமையுடைய எனக்குப் பயன்படாமல் பரத்தையர் பலர்க்கும் பயன்படுவாய் ஆயினை என்ற உள்ளுறை கொண்டார் பெருமழைப்புலவர்.

இனி, இங்ஙனமன்றி, நறுவடிமாவின்கண் விளைந்து முதிர்ந்த தீம்பழம் அதனின் நீங்கி நெடுநீர்க் குட்டத்துத் துடும் என விழுமென்றது, பரத்தையர் சேரிக்கண் நலம் கனிந்து சிறந்த பரத்தையர் தம் தாயார் முதலாயினாரின் நீங்கி நின்னோடு வதுவையிற் கூடி மகிழ்வர் என உள்ளுறை காண்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

62

இந்திர விழவிற் பூவின் அன்ன
புன் தலைப் பேடை வரி நிழல் அகவும்
இவ்வூர் மங்கையர்த் தொகுத்து, இனி
எவ்வூர் நின்றன்று – மகிழ்ந! – நின் தேரே?

Koviloor Digital Library

கூற்று : மேலது.

உரை : பெரும! தன் புல்லிய தலையில் பூப்போன்ற சூட்டினைக் கொண்ட மயிற்பேடை செறிவில்லாத புள்ளி நிழலில் இருந்து கொண்டு தன் சேவலை அன்புடன் அகவி அழைப்பதற்கு இடமானது இவ்வூர். இவ்வூரில் வாழும் பரத்தை மகளிர் பலரையும், இந்திரவிழாவில் ஆடல் பாடல்களை நிகழ்த்துதற்குத் தொகுப்பது போல் அவர்பால் காமம் நுகர்தற் பொருட்டுத் தொகுத்தனை. அத்தோடமையாமல் மேலும் மங்கையரைத் தொகுக்க நின்னுடைய தேர் வேறு எவ்வூரிலே நிற்கின்றது உரையாய்.

உரை விளக்கம் : தலைவன் கட்டுப்பாடற்ற முறையில் பரத்தையர் பலரையும் நாடி அலைந்தான் என்ற பொருளில் இங்ஙனம் வினவினாள். இந்திர விழாவின்போது ஊர்த்தலைவர் பரத்தையரைத் தொகுத்துக் கொணர்ந்து ஆடல் பாடல் நிகழ்த்தச் செய்த பண்டை வழக்கத்தினை இவ்வுவமை சுட்டுகிறது போலும்! உள்ளூர்ப் பரத்தையர் பலரையும் நுகர்ந்த தலைவன் 'வேற்றூர்ப் பரத்தையரையும் நுகரத்துடிக்கிறான் என்ற தலைவியின் இகழ்ச்சியுரையின் சுவை காண்க. வேற்றூர்ப் பரத்தையரைக் கொணர நின் பாங்காயிரைத் தேரோடு அனுப்பிவிட்டு இங்கு வருதல் எதற்கு?' என்று இடித்துரைத்தாள் என்க.

'நின் தேர் இப்பொழுது வேறு பரத்தையரை வதுவை அயரச் செல்கின்றது. வழியிலே இவ்வில்லம் இருத்தலின் ஈண்டுச் சிறிது நிற்கின்றது என்பது குறிப்பென்க. எனவே, நின் தொழிலைத் தொடர்ந்து செய்திடுக. ஈண்டு நீ தங்குதல் வேண்டா, நின் வழியே செல்க என்று வெகுண்டு கூறிப் புலந்தாளாயிற்று' என்பது பெருமழைப்புலவர் விளக்கம்.

இனி, 'இந்திர விழவிற் பூ' என்பதனை மகளிர்க்கு அடையாக்கி, இந்திரவிழாவிற்குப் பூக்களைத் தருவித்துத் தொகுத்தாற் போல, இவ்வூர் மங்கையரைத் தொகுத்து, என்று பொருள் கொள்ளினும் அமையும். இப்பூக்கள் உள்ளூர் மங்கையர்க்கே உவமையென்க.

Koviloor Digital Library

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை வேறுவேறு ஊர்களினின்றும் மங்கையரைக் கொணர்ந்து என்றார். பாடலில் 'இவ்வூர் மங்கையர்' என்றே வருதலாலும் அடுத்து, 'எவ்வூர் நின்றன்று?' என்று வினாவெழுப்புதலாலும் அது பொருந்தாமை பெறப்படும்.

இந்திரவிழாவின் பல்வேறு கூறுகளையும் மிக விரிவாக முதலிற் கூறிய நூல் சிலப்பதிகாரமே. அவ்விழாப் பற்றிய முதல் சங்கநூற் சான்று இச்செய்யுளே.

அருஞ்சொற்பொருள் : பூவின் அன்ன - பூப்போன்ற சூட்டு; பேடை - பெண் மயில்; வரிநிழல் - செறிவற்ற புள்ளிநிழல்.

மேற்கோள் : பரத்தையரைத் தேரில் ஏற்றி வருதல் :

மாட்டு மாட்டோடி மகளிர் தரத்தரப்
பூட்டுமான் திண்டேர்

— *கலி. 98.*

நேரிழை நல்லாரை நெடுநகர்த்தந்து நின்
தேர்பூண்ட நெடு நன்மான்

— *கலி. 70.*

உள்ளுறை : புன்றலை மயிற்பேடை வரி நிழலில் இருந்து சேவலை அழைத்தது என்பது, 'நின் பிரிவினாலே மனைக் கண் தனித்திருந்து அழுது வருந்தினேன்' என்னும் உட்பொருள் தந்தது என்க.

63

பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்
வாளை நாள் இரை பெறூஉம் ஊர!
எம் நலம் தொலைவது ஆயினும்,
துன்னலம் - பெரும! - பிறர்த் தோய்ந்த மார்பே.

Koviloor Digital Library

கூற்று : பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையிற்பிரிந்துபோய் மீண்டுவந்து வாயில் வேண்டிய தலைமகனுக்கு வாயில் மறுப்பாளாய்த் தலைவி ஊடிச் சொல்லியது.

உரை : இயற்கையாய் அமைந்த நீர்நிலையை வாழிடமாய்க் கொண்ட புலால் நாற்றம் வீசும் நீர் நாய், வாளை மீனை நாட்காலத்தே இரையாகக் கொள்ளும் ஊரனே! எம்முடைய அழகு முற்றும் அழிந்தொழியுமாயினும், பெருமானே, பிற பெண்டிரைத் தழுவியின்புற்ற நின் மார்பை நெருங்கோம்.

உரை விளக்கம் : நீரில் வாழும் நாய் மீன்களை விரும்பியுண்ணுவதாதலின் 'புலவுநாறு' என்று அடைபெற்றது. வாளைமீனைத் தன் காலை வேளை உணவாகவுண்டலின், 'நாள்இரை' என்றாள். வைகறைப்போதிலே இரையாகக் கொள்ளும் எனினும் அமையும். எம்நலம் தொலைவதாயினும்' என்றாள், தன் தாயால் அரிதின் முயன்று வளர்க்கப்பட்ட அருமைப்பாடுடையதாதலின். 'யாய் ஓம்பு ஆய்நலம்' எனப் பிறரும் கூறுதல் காண்க. 'உன்னை அணையாமை காரணமாக என் அழகு கெடுவது உறுதி. எனினும் பலரும் தோயும் பரத்தை மார்பினைப் பலகால் தோய்ந்து தூய்மையிழந்த நின் மார்பைப் பொருந்தேம்' என்பாளாய்ப் 'பிறர்த் தோய்ந்த நின் மார்பைப் பொருந்தேம்' என்றாள். பெண்ணியலார் பலரும் கண்ணால் உண்ட மார்பினையே வெறுக்கும் இயல்புடையவளாதலின், பிறரைத் தோய்ந்த அவன் மார்பை இழித்தது பொருத்தமேயாம்.

நற்குடிப்பிறப்பினனாயினும் இழிகுலப் பெண்டிரைத் தோய்ந்தமையான் அவன் மார்பு அவர் நாற்றமே வீசியது. எனவே, 'உனக்கு நுகரத் தகுவார் அவரேயாதலின் ஆண்டுச் செல்க. மேற்குடிப் பிறப்பினளாய என்னை நெருங்குதலை ஒழிக' என்று தன் உயர்வு தோன்ற விலக்கினாள். ஒரு கால் 'ஊர' என விளித்தவள்

Koviloor Digital Library

மீண்டும் 'பெரும' என்றாள், 'நீ பெருமகன் எனப்படும் பெருமையை இழக்கலாமோ?' என வினவும் வகையில்.

அருஞ்சொற்பொருள் : நீர் நாய் – நீரில் வாழும் ஒருவகை உயிர். அது நாய் போலும் தோற்றமுடையதாதலின் இப்பெயர் பெற்றது. வாளை – கொழுப்புச் சத்து மிக்க தொரு மீன் வகை. நாளிரை – காலை உணவு. துன்னலம் – பொருந்த மாட்டோம். பிறர் – பரத்தையர்.

மேற்கோள் : பரத்தையரை அணைந்த மார்பைக் குலமகளிர் வெறுத்தல் :

குறுக வாரல் தொடுகலம்
ஆசில் கலம் கழீஇயற்று?

– நற். 350.

பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு

– திருக். 1311.

நீர் நாய் வாளை மீனை உணவாகக் கோடல் :

நாளிரை தரீஇய எழுந்த நீர் நாய்
வாளையோடு உழப்ப

– அகம். 336.

நீர் நாய் புலால் நாறலும் வாளை கோடலும் :

பொய்கை நீர் நாய்ப் புலவு நாறு இரும்போத்து
வாளை நாளிரை தேரும் ஊர

– அகம். 386.

உள்ளுறை : நீர் நாய் பொய்கையை இருப்பிடமாக்க் கொண்டிருந்தும் தன்னுடலின் புலால் நாற்றத்தைக் கழுவிக்கொள்ளாமல் மீண்டும் புலால் நாறும் வாளையையே இரையாக் கொள்ளும் தன்மையொத்து நீயும் நின் குடிக்கேற்ற

Koviloor Digital Library

உயர்நெறி நில்லாயாய் இழிந்த காம நுகர்ச்சிக்கெனப் பரத்தையரை நாடி நுகர்கின்றாய் என்ற உள்ளுறை அமைந்தமை காண்க. (பெருமழைப்புலவர்)

64

அலமரல் ஆயமோடு அமர்துணை தழீஇ
நலம் மிகு புதுப்புனல் ஆட, கண்டோர்
ஒருவரும் இருவரும் அல்லர்;
பலரே தெய்ய; எம் மறையாதீமே.

கூற்று : தலைமகன் பரத்தையரோடு புனலாடினான் என்பதறிந்த தலைமகள் அவன் மறைத்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் மனையிலிருந்து தன் இல்லம் மீண்டான். அவன் பரத்தையரோடு புனலாடினமையை மறுத்து வாயில் வேண்டினான். அப்பொழுது அவன் பலர் காணப் புனலாடினமை சொல்லி வாயில் மறுத்தாள் தலைவி.

உரை : சுழன்று திரியும் மகளிர் கூட்டத்தின் நடுவே, நின்னால் விழையப்பட்டவராய் நினக்குப் புணர்துணையாய் அமைந்த பரத்தையோடு நீ அழகுடைய புதுப்புனலில் ஆடித் திளைத்ததனைக் கண்டோர் ஒருவரோ இருவரோ அல்லர். மிகப்பலரேயாவர். எம்மிடம் உண்மையை ஒப்புக்கொள்ளத் தயங்கற்க.

உரை விளக்கம் : பரத்தை தன் தோழியர் கூட்டம் சூழத் தலைவனுடன் புனலாடினாளாதலின் 'ஆயமொடு .... புதுப்புனலாட' என்றாள். அமர்துணை என்றது பரத்தையை. அவள் தலைவன் விருப்பத்திற்கு உரியவளாதலின் 'அமர்துணை' என்றாள். 'நின் அமர்துணையான யான் தனித்துக் கிடக்கப் பரத்தையைத் துணையாகக் கொண்டாய்' என்பது குறிப்பு. நலம் மிகு என்பது அழகுமிக்க என்று பொருள் தருமாயினும், தன்னுள் குளித்து

Koviloor Digital Library

மகிழ்வாரின் உடல் நலத்தை மிகுத்தலின் நலம் மிகு புதுப்புனல் என்றாள் எனலும் பொருந்தும். தலைவன் பலர் காண ஆடினான் என்பதனைத் தெளிவாக அறிந்தமை புலப்படுமாறு 'பலரே தெய்ய எம் மறையா தீமே' என்றாள். இனி மீண்டும் அவர்பால் சேர்ந்து நீராடி மகிழ்வாயாக என்று விலக்கினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : அலமரல் – சுழலுதல்; ஆயம் – தோழியர் கூட்டம்; அமர் – விருப்பம்; மறையாதீம் – மறைத்தல் வேண்டா.

இலக்கணக்குறிப்பு : தெய்ய – முன்னிலைக்கண் வரும் இடைச்சொல். இது தெய்யோ என்றும் வரும் என்பதனைத் 'தெய்யோ' பத்தால் அறிக..

மேற்கோள் : தலைவன் பரத்தையரோடு நீராடல் :

எஃகுடை எழில்நலத் தொருத்தியொடு நெருநல்
வைகுபுனல் அயர்ந்தனை என்ப

– அகம். 116.

இழைமாண் ஒள்ளிழை நீ வெய்யாளோடு
நெருநல் ஆடினை புனலே

– அகம். 6.

65

கரும்பு நடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசி களையும் பெரும் புனல் ஊர!
புதல்வனை ஈன்ற எம் மேனி
முயங்கன்மோ தெய்ய; நின் மார்பு சிதைப்பதுவே.

கூற்று : ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : பரத்தையர் மனைக்கண் இருந்த தலைமகன் தனக்குப் புதல்வன் பிறந்த அணிமைக் காலத்தில் இல்லம் திரும்பினான். தலைவியின் ஆற்றாமையைப் பயன்படுத்தித் தலைவியை முயங்க நெருங்கிய தலைவற்கு இடித்துரையாக அவள் சொல்லியது.

உரை : கரும்பு நடப்பட்டு வளர்ந்த பாத்தியில் தானே வளர்ந்த ஆம்பல் தேன் வண்டுகளின் பசியை அகற்றுவதற்கு இடனான மிக்க நீர் வளம் கொண்ட ஊரின் தலைவனே! அண்மையில் தான் புதல்வனை ஈன்ற என் மேனியை முயங்குதலை ஒழிப்பாயாக! (ஏனெனில்) நீ தழுவினால் உன் மார்பின் அழகினை என் தீம்பால் சிதைக்கும்.

உரை விளக்கம் : 'கரும்பு நடு பாத்தி' என்பதற்குக் கரும்பு முன்பே நடப்பட்டு இப்பொழுது அது நன்கு வளர்ந்துள்ள பாத்தி எனப் பொருள் கொள்க. கரும்புப் பாத்தியில் உழவர் வளர்க்காது தானே வளர்ந்தது அல்லியாகும். அல்லி, தாமரை ஆகியன ஆழ நீரில் தழைக்கும் தன்மையன. அவை வளர்வதற்கு ஏற்ற நீர் நிரம்பியன பாத்திகள் என்க. அதற்குத் தகப் பெரும்புனல் ஊர் எனப்பட்டது.

'புதல்வனை ஈன்ற எம் மேனி' என்றாள். தான் பரத்தையர் போலன்றி, குடிக்கு விளக்காகும் மகனைத் தலைவனுக்கு ஈன்ற பெருமிதம் காரணமாக. அதனை முயங்கினால் தலைவன் மார்பு அழகிழக்கும் என்றது குறிப்பு மொழியாகும். புதல்வன் மார்பில் ஊரும் இன்பத்தினும், நின் மார்பில் நின்பரத்தை படுத்துத்துயில் பெறுவதே நினக்குப் பேரின்பமாகும் என இகழ்ந்தாள் என்க. பரத்தையை அணைத்தால் நின் மேனி நறுமணம் நாறும் என்றும் சுட்டினாளாம். மேலும், பரத்தையர் பொருட்டு மலராலும், மணியாலும் சாந்தாலும் அணி செய்யப்பட்ட நின் மார்பழகு பாழாய்விடும் என்றாளுமாம். 'மகனை ஈன்று உடல் இளைத்துப் புனிறு நாறும் என் உடம்பைத் தழுவலைத் தவிர்த்துத் தூயரும், நறியருமாகிய நின் பரத்தையரை நுகர மீள்க!' என்று விலக்கிய நயம் காண்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கலித்த – செழித்து வளர்ந்த; சுரும்பு – வண்டு வகை; களையும் – நீக்கும்; முயங்கன்மோ – முயங்கற்க; மார்பு சிதைப்பது – அது நின் மார்பின் அழகைச் சிதைக்கும்.

இலக்கணக்குறிப்பு : முயங்கன்மோ – மோ – முன்னிலை அசை; தெய்ய – அசை; மார்பு – மார்பின் அழகு ... ஆகுபெயர்.

மேற்கோள் : புதல்வனை ஈன்ற தாயை முயங்கத்
தலைவன் அஞ்சுவான் என்றல் :
இனியே, புதல்வன் தடுத்த பாலொடு தடைஇத்,
திதலை யணிந்த தேங்கொள் மென்முலை,
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம் வேண்டினமே,
தீம்பால் படுதல் தாமஞ்சினரே"
– அகம். 26.

தூயர் நறியர் நின் பெண்டிர்
பேஎய் அனையம் யாம் சேய்பயந் தனமே'
– ஐங். 70.

குறிப்புப் பொருள் : கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியின்கண் ஆம்பல் முதலியன தழைத்துச் சுரும்பினத்தின் பசிகளையும் என்ற வினை உவமப் போலியால், பரத்தையர்க்காக அமைக்கப்பட்ட இல்லின்கண் யாம் இருந்து விருந்தோம்பல் முதலிய அறங்களைப் புரிந்தொழுகுகின்றோம் என்ற விளக்கம் தந்தார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. இது பேராசிரியர் விளக்கத்தையொட்டியதாம். (தொல். பொருள். உவம. 25). பேராசிரியர் 'கலித்த தாமரை' என்று பாடம் கொண்டார். இனிப் பெருமழைப் புலவர், 'கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல் .... ஊர என்றது, நாம் இல்லறம் செய்தற்கு இயற்றிய இவ்வில்லத்திலே பரத்தையர் குழுமி அவர் சுற்றத்தாரை ஓம்பா நிற்பர்' என்ற விளக்கம் தருவார்.

Koviloor Digital Library

66

உடலினென் அல்லேன்; பொய்யாது உரைமோ;
யார் அவள், மகிழ்ந! தானே - தேரொடு,
தளர் நடைப் புதல்வனை உள்ளி, நின்
வளமனை வருதலும், வெளவியோளே?

கூற்று : புதல்வனைப் பிரியாதவன் பிரிந்து, புறத்துத் தங்கி, வந்தானாக, அவனொடு புலந்து தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : *தளர்நடைப்பருவத்தில் உள்ள தன் மகனைத் தழுவியின்புறுதலை மறந்து பரத்தையர்பால் தங்கியவன், மகன் நினைவு தோன்றியதனால் தன் வீடு திரும்ப முயன்ற போது அவனைத் தடுத்தாள் பரத்தையென்பது கூறித் தலைவி ஊடியது.*

உரை : *பெரும! யான் நின்னோடு சினந்து மாறுபட்டு வினவவில்லை; உண்மையை மறையாது கூறுக! நீ நின் தேரூர்ந்து, நின் தளர்நடைப்புதல்வனைக் காண விழைந்து நின் வளம் நிறைந்த மனைக்குத் திரும்புதலையும் தடுத்து நிறுத்திய அந்தப் பெண்தான் யாரோ?*

உரை விளக்கம் : *இளம்புதல்வன் தளர்நடை பயிலும் காலம் ஈன்றோர்க்குப் பேரின்பம் தரும் காலமாதலால், அக்காலத்தும் தலைவன் பரத்தையில்லத்தில் தங்கி நெடிதுநாள் கழித்து வந்தது கண்டு தலைவி பொருமினாள் என்க. அங்ஙனம் அவன் வாராமல் தடுத்தவள் பரத்தையேயாம் எனக் கருதி இங்ஙனம் வினவினாள். 'அவள் சொல்லி நீ வாராதிருக்கும் அளவிற்கு அவட்கும் உனக்குமுள்ள உறவு அத்துணை நெருக்கமானதோ?' என்று வினவும் வகையில், 'அவள் யார்?' (என்ன உறவினள்) என்றாள். கணவனின் இவ்வொழுகலாறு தலைவிக்குச் சினம் தோன்றக் காரணமேனும், 'உடலினென் அல்லேன்' என்றாள், 'நின்பால் சினம் கொள்ள நான் யார்? என்னும் குறிப்பில். 'என்னைக் கூடுதற்குத் தடைவிதித்த பரத்தை புதல்வனைக் காணவும் தடை செய்தாள்' என்று பரத்தையின்*

Koviloor Digital Library

கொடுமை கூறினாளாய் 'புதல்வனை உள்ளி ..... வருதலும்' என்றாள். பரத்தைமை மேற்கொண்டொழுகும் ஆடவர் தம் காலத்தாழ்வுக்குப் பொய்யான காரணம் கூறல் இயல்பாகலான், 'பொய்யாது உரைமோ' என்றாளாம். 'இதுகாறும் வாராமைக்கு ஏதுவாக அவனுக்குத் தன்பால் அன்பில்லை யென்றும், வரவிற்கு ஏது புதல்வன்பாலுள்ள அன்புடைமை யென்றும், அதனால் தனக்கு அவன் புதல்வன் தாய் என்னும் இயல்பன்றிப் பிறிதில்லை யென்றும் சொல்லிப் புலந்தாளாம்' என்ற துரைசாமியார் உரை நயம் சிறப்பானது.

'தேரோடு தளர் நடைப் புதல்வனை உள்ளி' என இயைத்து, நடைவண்டியாகிய தேரை ஈர்த்துத் தளர்நடை பயிலும் புதல்வனை நினைத்து' என்று பொருள் கோடல் இன்னும் சிறப்பாம். 'பொலந் தொடிப் புதல்வனைத் தேர் வழங்கு தெருவில் தமியோற் கண்டே' (அகம். 16) என்பது காண்க. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையும் இக்கருத்துடையவரே.

அருஞ்சொற்பொருள் : உடலுதல் - சினத்தல், பகைத்தல், மாறுபடல்; உள்ளி - நினைத்து; வெளவியோள் - தடுத்தோள்.

இலக்கணக்குறிப்பு : உரைமோ - 'மோ' முன்னிலை அசை.

மேற்கோள் : புதல்வன் தளர் நடைபயிலுதல் கண்டு
பெற்றோர் இன்புறுதல் :
'மையற விளங்கிய ....
....
பாலோடலர்ந்த முலை மறந்து முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி நடை பயிற்றா
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போலவரும் என்னுயிர்'
- கலி. 81.

Koviloor Digital Library

மகன் தளர்ந்து ஓடுவது :
மாண்டொழில் மாமணி கறங்கக் கடை கழிந்து
காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி
– அகம். 66.

மகன் விளையாட்டைக் கண்டு இன்புற
விரும்பிப் பிரியாத தலைவன் :
– அதன் தலை,
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல்
கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே; நினையின்,
யாதனிற் பிரிகோ'
– நற். 166.

இந்நூலின் 403, 406 ஆகிய செய்யுட்களைக் காண்க.

67

மடவள் அம்ம, நீ இனிக் கொண்டோளே –
'தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்
பெரு நலம் தருக்கும்' என்ப; விரிமலர்த்
தாது உண் வண்டினும் பலரே,
ஓதி ஒள் நுதல் பசப்பித்தோரே.

கூற்று : தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை புறனுரைத்தாள் எனக்கேட்ட தலைவி, தலைமகன் வந்துழி, அவள் திறத்தாராய் நின்று ஒழுகும் வாயில்கள் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனால் பேரன்பு செய்யப்படும் பரத்தை தன் குறை கூறினாள் எனக்கேள்வியுற்ற தலைவி, அப்பரத்தைக்குச் சார்வாய்ப் பணி செய்யும் வாயில்கள் கேட்குமாறு, தன்னை வந்தடைந்த தலைவனுக்குச் சொல்லியது.

Koviloor Digital Library

உரை : தலைவ! நீ இப்பொழுது வரித்துக் கொண்ட பரத்தை பெரிதும் அறியாமை மிக்கவளாவாள். தன்னொடு எவ்வகையானும் ஒத்திராத என்னொடு தன்னை ஒப்பிட்டுத் தன்னுடைய மிகுநலம் பற்றித் தருக்குகின்றாள் எனக் கேட்டேன். முன்பு நின்னால் நலன் துய்க்கப்பட்டுத் தம் கதுப்பின் அயலே விளங்கும் ஒளிபொருந்திய நெற்றி பசலையுறப்பட்ட மகளிர் மலர்த்தாது உண்ண மொய்க்கும் வண்டினும் பலராவர். இதனை அவள் அறியாள்போலும்!

உரை விளக்கம் : 'உன்னால் துறக்கப்பட்டுத் தம் நெற்றியின் ஒளியை இழந்த இளம்பரத்தையர் பலர் இருத்தலை அறியாதவளாய், நீ அவளைப் பிரிந்தமைக்கு நானே காரணம் எனக் கருதி நின் காதலி என்னைப் புறன் உரைத்தாள்' என்பாளாய், அவளை மடவோள் என்றாள். இதனால், மகளிர் பலர்க்கும் வஞ்சம் செய்யும் இயல்பு தலைவனுக்குரியது என்பது கருத்தாகக் கொள்க. குலமகளோடு விலைமகள் நிகராள் ஆகலின், 'தன் இளநலம் ஒன்றே கொண்டு, தன்னொடு பிற எவ்வகையினும் ஒவ்வாத என்னோடு தன்னைச் சரிநிகராகக் கருதித் தருக்குகிறாள்' என்றாள். மக்களையீன்று மனையறம் காத்தலின் உடல் மெலிந்து அழகிழந்தேனாயினும் எனக்கு அவள் நிகராகாள் என்பதனை அறிக என்பாள் இங்ஙனம் கூறினாளாம். 'பைந்தொடி மகளிரொடு புதல்வர்ப் பயந்து நன்றி சான்ற கற்பொடு எம் பாடாதல் அதனினும் அரிதே' (நற்.330) என்ற நற்றிணைப் பகுதியால், தலைவியோடு பரத்தை ஒவ்வாள் என்பதனை உணரலாம். 'தன் மேனியழகைப் பிற புறப் பெண்டிர் அழகோடு ஒப்புக்காட்டித் தருக்குவாளாக' என்றாள் எனலாம். பரத்தையர் நாட்டமுடைய தலைவன் வண்டென இழிக்கப்படுவதுண்டாதலின், அவனால் வஞ்சிக்கப்பட்டாரின் மிகுதிக்கும் வண்டினையே உவமை கூறினாள். 'நீ வண்டொப்பை' என்பது குறிப்பு. ''தன்னோடு ஒப்பாகாமையுடைய என்னை என்றது, என்னினும் அவள் நலத்தாற் சிறந்தாள் என்றதற்கு நின்னொழுக்கமே சான்றாகவும் அவள் வாளா தன்னோடு ஒப்பாகாத என்னை ஒப்புவியா நின்றாள் என்பதுபட நின்றது. 'கொண்டான் தூற்றின் கூறையும் தூற்றும்' என்பது பழமொழி; நீயே என்னை இகழின் அவள் இகழ்தல் தவறன்றே என்பது கருத்து'' என்பது பெருமழைப்புலவர் விளக்கம்.

Koviloor Digital Library

இச்செய்யுட்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தை மறுத்துத் துரைசாமிப் பிள்ளை கூறும் கருத்தை அவர் உரையிற் கண்டு கொள்க.

அருஞ்சொற்பொருள் : மடவள் – அறியாமையுடையாள்; இனி – இப்பொழுது; நிகர் – ஒப்பு; தருக்கு – செருக்கு; ஓதி – தலைமயிர்.

இலக்கணக்குறிப்பு : அம்ம – இடைச்சொல்.

மேற்கோள் : பரத்தை தன் அழகு மிகுதி கருதித் தருக்குடன் உரைத்தல் :

கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி
....
.... பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடும் காக்கதன் கொழுநன் மார்பே

– குறுந். 80.

வருகதில் அம்ம எம் சேரி சேர!
அரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காணத்
தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடிபயின்று தரூஉம் பெரும் களிறு போலத்
தோள் கந்தாகக் கூந்தலின் பிணித்து அவன்
மார்புகடி கொள்ளேன் ஆயின்

– அகம். 76.

68

கன்னி விடியல், கணைக்கால் ஆம்பல்
தாமரை போல மலரும் ஊர!
பேணாளோ நின் பெண்டே –
யான் தன் அடக்கவும், தான் அடங்கலளே?

Koviloor Digital Library

கூற்று : பரத்தை தான் தலைமகளைப் புறங்கூறி வைத்து, தன்னைத் தலைமகள் புறங்கூறினாளாகப் பிறர்க்குக் கூறினமை கேட்ட தலைவி தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகளைப் பற்றிக் குறைகூறி வந்த பரத்தை, மாறாகத் தன்னை அவள் புறங்கூறியதாகப் பொய்யைப் பரப்பினாள். அது கேட்ட தலைமகள், தன்பால் மீண்ட தலைவனிடம் இங்ஙனம் கூறினாள்.

உரை : இருள் நன்கு நீங்காத வைகறைப் பொழுதில் திரட்சி கொண்ட தண்டினையுடைய அல்லியின் மொட்டுக்கள் தாமரைபோல மலர்வதற்கு இடமான மருதநிலத்து ஊர்த்தலைவ! நீ காதலிக்கும் பெண்டு பேணவேண்டுவனவற்றைப் பேண அறியாத மடமையளோ? யான் தன்னை அடக்கவும் தான் அடக்கமின்றி என்னைப்புறம் கூறுகின்றனளே!

உரை விளக்கம் : கன்னி விடியலாவது இளங்காலைப் பொழுதாம். அஃதாவது இருள் நன்கு விலகாத பொழுதாம். காலையில் மலர்வது தாமரை. மாலையில் மலர்வது அல்லி. ஆனால் இருள் இன்னும் புலரவில்லையாதலின் முன்னை நாள் மாலையில் மலர்ந்தது இன்னும் தன் இதழ் விரிய நின்றமையின் ஆம்பல் தாமரைபோல் தோன்றிற்றாம். அங்ஙனம் தோன்றுதற்கு நிறவொற்றுமையும் காணமாயிற்று என்க.

பெண்டிர்க்கு அழகு அடங்கியொழுகுதலாகவும் நாவடக்கமின்றித் தன்னைத் தூற்றியமையால் 'பேணாளோ' என்று வினவினாள். ஈண்டு அது அடக்கத்தின் மேற்று. 'பேணாளோ?' என்ற வினா, நீ கூறும் அறிவுரைகளைப் பேணியொழுக மாட்டாளோ என்ற பொருளும் உடையது. என்னைப் புறங்கூறுவதனை நீ அடக்கவில்லையா, அன்றி நீ அடக்கியும் அவள் பேணாது அடங்க மறுக்கின்றாளோ என்று வினவினாளுமாம். 'யான் அடக்கவும்' என்றாள், தான் தனக்குப் பாங்காயினார் வழி அதற்கு முயன்றமை புலப்பட.

Koviloor Digital Library

விதிப்படி மணந்துகொண்டவட்கே 'பெண்டு' என்னும் உரிமைச் சொல் உரியது. ஈண்டு 'நின் பெண்டு' என்றது, தான் அவன் பெண்டாகவும், அதனை மறந்து தலைவன் ஒரு ஏதில் மகளை நச்சி வாழ்ந்தது குறித்து நின்றது.

'யான் தன்அடங்கவும்' எனப்பாடங்கொண்ட பெருமழைப்புலவர், யான் அடங்கி வாளாவிருப்பவும் எனப் பொருள் கூறினார். ஆயின், உ.வே.சா. பதிப்பில் இப்பாடம் காணப்படவில்லை. இதுவே பாடமாயின், 'யான் தன் அ்டங்கவும்' என்பதற்கு, 'யான் தன்னடக்கத்தைக் கடைப்பிடிக்கவும்' என்று பொருள் கூறுக. யான் தன்னடக்கத்தைப் பேணியதனால், அவளைக் குறை கூறக் காரணங்கள் இருப்பினும் என் தன்னடக்கத்தால் வாய் மூடியுள்ளேன் என்று சொன்னதாகப் பொருள்படும்.

அருஞ்சொற்பொருள் : கன்னி விடியல் – குமரி விடியல்; விடிந்தும் விடியாத வேளை; கணைக்கால் – திரண்ட தண்டு; பேணல் – போற்றியொழுகல்.

மேற்கோள் : பரத்தையைத் தலைவி, 'நின் பெண்டு' என
இகழ்ச்சி தோன்றத் தலைவனிடம் கூறல் :
– மகிழ்நன்
....
பெண்டிரொடு ஆடும் என்ப'
– ஐங். 33.

தூயர் நறியர் நின் பெண்டிர்
– ஐங். 70.

குறிப்புப் பொருள் : 'ஆம்பல் தாமரைபோல மலரும் ஊரன் என்றது, சிறிது காலம் நின்னுடன் கூடியது கொண்டு நெடிதுகாலம் நின்னுடன் இல்லறத்தோடு கூடி வாழும் அவர் போன்று மதித்திருக்கும் ஊரன் என்பது' என்க் குறிப்புப் பொருள் காண்கிறார் இலங்கை உரையாசிரியர். பெருமழைப்புலவர், "இழிந்த ஆம்பல்

Koviloor Digital Library

உயரிய தாமரை மலர்போலத் தோன்றுதற்குக் காரணம் விடியற்காலத்திற்கு இயல்பான இருள் கதிரவனால் நன்கு அழிக்கப்படாமையே ஆதல் போன்று நின் பெண்டின் பேதைமையை நீ நன்கு அகற்றாமையே ஆகும். அகற்றியிருப்பையேல் அவள் என்னைப் பழி தூற்றாது அமைந்திருத்தல் கூடும்" என விளக்கியுள்ளார்.

இனி, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, 'சிறப்பில்லாத ஆம்பல் தாமரை போல மலரும் என்றதனால், கற்புச் சிறப்பு இன்மையாமல் அடங்கிக் கிடத்தற்குரிய பரத்தை குலமகளிர் போலச் சிறப்புடையாள் எனக் கருதித் தருக்குகின்றாள்' எனக் குறிப்புப் பொருள் காண்பார். இம்மூன்றும் தத்தம் அளவில் சிறந்தமை காண்க.

69

கண்டனெம் அல்லமோ, மகிழ்ந! நின் பெண்டே? –
பலர் ஆடு பெருந்துறை, மலரொடு வந்த
தண்புனல் வண்டல் உய்த்தென,
உண்கண் சிவப்ப, அழுது நின்றோளே!

கூற்று : தலைமகன் பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையைக் களவில் மணந்து ஒழுகுகின்றதனை அறிந்த தலைமகள், 'தனக்கு இல்லை' என்று அவன் மறைத்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் மிக்கிளமைப் பருவத்துப் பரத்தையொருத்தியொடு களவிற் கூடினான். அதனைப்பற்றி வினவிய தலைவியிடம் அதனை அவன் மறைத்தான். அதற்கு விடையாக, அதனைத்தான் நன்கு அறிந்தமை தோன்றத் தலைவி சொல்லியது.

Koviloor Digital Library

உரை : தலைவ! பலரும் இறங்கி நீராடுகின்ற பெரிய துறையின்கண் மலரைச் சுமந்து வந்த குளிர்ந்த நீர் அதனோடு வண்டல் மண்ணால் செய்த தன் பாவையை அடித்துச் சென்றது நோக்கித் தன் மைபூசிய கண்கள் சிவப்புறும் வண்ணம் அழுதுநின்ற நின் காதலியை யாம் காணவில்லையோ?

உரை விளக்கம் : தன் தகாதவொழுக்கம் தன் மனையாட்குத் தெரியாதென எண்ணி 'யாரையும் அறியேன்' எனப் பொய் சொன்னான் தலைவனாதலின், அதனைத்தான் நன்றாகவே அறிந்தமை தோன்ற, 'நின் பெண்டை நான் கண்டனெனன்' என்று தெளிவுபடச் சொன்னாள். தான் மட்டுமே அன்றி ஊரார் பலரும் அறிவர் என்பது காட்ட, 'பலர் ஆடு பெருந்துறை' என அவளைக் கண்ட இடத்தைச் சிறப்பித்தாள். புதுப்புனல் மலர்களை ஏந்திவருவது சங்க இலக்கியத்தில் பரக்கப் பேசப்படுவது. வண்டலாவது ஈரமண்கொண்டு இளமகளிர் செய்யும் பாவையென்ப. வண்டற்பாவை என்றும் வழங்குவர். வண்டலை ஆற்றுநீர் அழித்தல் இயல்பெனவுணராது, தன் கண் சிவக்குமாறு அழுது நின்றாளாதலின் அவள் இன்னும் பேதைப் பருவத்தைப் பெரிதும் கடவாதவள் என்பது பெறப்படும். அவளைப் 'பெண்டு' என்றாள், ஓர் ஆடவன் பெண்டெனக் கொள்ளும் வயதினள் ஆகாமை கூறித் தலைவனை எள்ளுமுகமாக.

அருஞ்சொற்பொருள் : வண்டல் – ப்ாவை; உய்த்தென – அழித்ததென.

இலக்கணக்குறிப்பு : சிவப்ப – செயவென் எச்சம்; உய்த்தென – செய்தெனவென் எச்சம்.

மேற்கோள் : இளம் பரத்தை வண்டற்பாவை பற்றிக் கண் கலுழ்தல் :

கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
தெண்டிரை பாவை வௌவ
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே
– ஐங். 125.

Koviloor Digital Library

70

பழனப் பல்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர்; நறியர் – நின் பெண்டிர்;
பேஎய் அனையம், யாம்; சேய் பயந்தனமே.

கூற்று : பரத்தையரோடு பொழுது போக்கி நெடிது துய்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரோடு பொழுது போக்கி நெடிது இன்பம் துய்த்து வந்த தலைமகனிடம், தன் இளமை நலம் குறைந்தமையால் அவன் பரத்தையரை நாடிச் சென்றமை தோன்றத் தலைவி மனம் வெறுத்துக் கூறியது.

உரை : ஊர்ப்பொது நிலத்தில் உள்ள நீர்நிலையில் பல்வகை மீன்களையும் அருந்திய நாரை வயற்பக்கத்தேயுள்ள மருத மரத்தின் உச்சியில் தங்கும் மிக்க நீரால் நிறைந்த பொய்கையைக் கொண்டதும், நாளும் புதிய வருவாய் படைத்ததுமான ஊருக்குத் தலைவனே! யாம் மகப்பேறு அடைந்தமையால் (எம் உடலழகு நீங்கப்பெற்று) நின் கண்ணுக்குப் பேய்போல் தோற்றுகின்றோம். ஆனால் நின் காதலியரோ தூயராயும் நறியராயும் விளங்குகின்றனர். (ஆதலின் நீ இருக்கத்தக்கது அவர் இல்லமே. ஆண்டுச் செல்க.)

உரை விளக்கம் : பொய்கையும், பல்வகைமீன்களும், ஓங்கிய மருதும் சுட்டியமையால் ஊரின் வளப்பமும், யாணர் சுட்டியமையால் குன்றாத பொருள் வளமும் அறியப்பட்டன. இவை தலைவனொடு சார்த்தப்பட்டமையின் அவன் வளமையும், அவ்வளமை காரணமாக அவனுக்கு அமைந்த பரத்தைமைப் பண்பும் உய்த்துணரப்பட்டன. தலைவனுக்குப் பல பரத்தையர் உறவிருந்தமை 'நின் பெண்டிர்' என்ற பன்மை வாய்பாட்டால் அறியப்பட்டது. சேய் பயந்தமையால் தான் பேய்போன்ற இன்னாத் தோற்றமுற்றதாக வருந்துவதுபோல்

Koviloor Digital Library

தோன்றினும், மெய்யாக அவள் குடிக்கு விளக்காம் குழந்தைகள் ஈன்றமையான் வரும் பெருமிதவுணர்வுடையள் என்பது உணரலாம். குடிக்கு விளக்காம் சிறாரை ஈனாத் திருவற்றவர் எத்துணைத் தூயராகவும் நறியராகவும் இருப்பினும் வாழ்வின் பயனெய்தார் என்பதும், சேய்பயந்த உயர்குடிப் பெண்டிர் அதனால் அழகிழந்தாலும் பெருமையிழவார் என்பதும் பெற்றாம். 'நின் பெண்டிர் பாலுள்ளது உடலழகுபற்றிய பெருமிதமே; என்பாலுள்ளது தாய்மைப் பேற்றாலுளதாகும் பெருமிதம்' என்றாள் என்க. 'நீ பேண வேண்டுவோர் யாமேயன்றி அவரல்லர் என்பதனை நீ உணர்ந்திலை'யென ஊடினாளாம். அன்றியும், நீ விரும்புவது காமமேயெனத் துணிந்தனம் ஆகலின் அங்கேயே உறைவாயாக என எள்ளற்குறிப்பொடு கூறினாளுமாம்.

அருஞ்சொற்பொருள் : பழனம் – ஊர்ப்பொது நிலம், நீர் நிலையுமாம்; கழனி – வயல்; சென்னி – தலை, உச்சி; மாநீர் – மிக்க நீர்; யாணர் – புதுவருவாய்; அழகு; நறியர் – மணம் மிக்கோர்.

இலக்கணக்குறிப்பு : அருந்த – அருந்திய என்னும் எச்சத்தின் திரிபு; அன்றி வினையெச்சமாகவே கொண்டு, பல்மீன் அருந்துதற்பொருட்டு மருதின் உச்சிச் சேக்கும் எனினும் பொருந்தும். இனி, ஆர்ந்த என்னும் பெயரெச்சம் அருந்த என்னு திரிந்தது என்பாரும் உளர். ஆழ்ந்துபடு என்றது 'அழுந்துபடு' என்றாவது போன்றது இது.

மேற்கோள் : மகப்பேற்றினால் மேனி நாறுதல் :

நெய்யும் குய்யும் ஆடி மையொடு
மாசு பட்டன்றே கலிங்கமும் தோளும்
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோர்க்கு ஒத்தனெம் அல்லேம்

– நற். 380.

Koviloor Digital Library

குறிப்புப் பொருள் : பழனப்பன்மீனை உண்ட நாரை தங்குதற்குக் கழனி மருதின் சென்னி ஆதாரமானது போல, பரத்தையர் நலனை நுகர்ந்த நீ அவர்பால் நெடிது தங்குதற்கு யாம் சேய்பயந்தமை ஆதாரமாயிற்று என்று உள்ளுறை காண்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

இனி, "நாரை பொது நிலத்திலுள்ள பல்வேறு மீன்களையும் பிடித்துத்தின்று விட்டு வாளா தங்குதற்பொருட்டே நன்செய் நிலத்திலுள்ள மருதமரத்தின் உச்சிக்கு வருதல் போன்று, நீயும் பொழுதெல்லாம் பல்வேறு பரத்தை மகளிரை ஆராய்ந்து கூடியிருந்து தூய இல்லத்திற்கு வாளா உலகியல்பு குறித்தே வருகின்றனை" எனப் பொருள் காண்பார் பெருமழைப்புலவர். இதுவே பொருத்தமான விளக்கம்.

சேரிக் கண்ணுள்ள பரத்தையரைச் சேர வேண்டும் கருத்தோடும், இல்லின்கண் நம்மோடு தங்கும் அதற்கு வேண்டும் துணையாளரையும் உடைய ஊரன் என்று விளக்குகிறார் ஈழத்து உரையாசிரியர்.

கிழத்தி கூற்றுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

8. புனலாட்டுப் பத்து

நீர் விளையாடல் குறித்த பத்துச் செய்யுட்களின் தொகுதி புனலாட்டுப் பத்தாயிற்று.

71

சூது ஆர் குறுந் தொடிச் சூர் அமை நுடக்கத்து
நின் வெம் காதலி தழீஇ, நெருநை
ஆடினை என்ப, புனலே; அலரே
மறைத்தல் ஒல்லுமோ, மகிழ்ந?
புதைத்தல் ஒல்லுமோ, ஞாயிற்றது ஒளியே?

கூற்று : *பரத்தையரோடு புனலாடினான் எனக் கேட்டுப் புலந்த தலைமகள் தலைமகன் அதனை இல்லையென்று மறைத்துழிச் சொல்லியது.*

கூற்று விளக்கம் : *தலைவன் பரத்தையரோடு புனலாடியமை அறிந்து ஊடிய தலைவியிடம், தலைவன் தன் செயலை மறைத்த பொழுது தலைவி சொல்லியது.*

உரை : *பெரும! உள்ளே புரை பொருந்திய சிறிய வளைகளை அணிந்து, கண்டார்க்கு அச்சமூட்டும்படி ஒல்கி நடத்தலையுடைய நின் ஆசைக்கு உரிய காதலியை இறுகத் தழுவிக் கொண்டு நீ புனலாடி மகிழ்ந்தனை எனக் கண்டோர் பலரும் கூறுவர். மகிழ்ந! அது பற்றி ஊரிலெழுந்த பழிச்சொற்களை மறைத்தலாகுமோ? (ஆகாது). ஞாயிற்றின் ஒளியை யாரும் மறைக்கக் கூடுமோ?*

Koviloor Digital Library

உரை விளக்கம் : பரத்தை குறிய வளையை நிரல்பட அணிந்து, தன் கைகளை வீசி ஒலி எழுப்பிக் கண்டார் அனைவரையும் கவரும் வகையில் குலுக்கியும் அசைந்தும் நடந்தனள் என்பதுபடக் 'குறுந்தொடிச் சூரமை நுடக்கத்து' என்றாள். காமுகர் மகிழவும் நல்லறிவுடையோர் அஞ்சவும் நுடங்கி நடந்தாளாதலின் அவள் நடை சூர் அமை நடையாயிற்று. அவள் அணிந்த வளையல் ஒலியெழுப்பும் வகையில் உட்டுளை உடைத்தானமை பற்றிச் 'சூதார் .... தொடி'யென்றாள். இனி, சூது என்பதனைப் பரத்தைக் காக்கி, வஞ்சம் நிறைந்த என்று பொருள் கூறலும் ஒன்று. வட்டும் சூதும் அவட்குரித்தானமை பற்றி, ஈண்டுச் சூது என்பதனைச் சூதாடுவது என்றும் கொள்வர். 'சூது' என்பது சூதாடு கருவியுமாதலின், அதுபோன்ற முலைக் காம்புடையாள் என்னலுமாம். 'நின் வெம் காதலி' என்றாள், நீ அவளை விரும்புவையேனும் அவள் நின்னினும் வளமையுடையாரைக் காணின் நின்னைத் துறந்து அவர்பின் செல்ல வல்லாள் என்ற குறிப்பில். 'நின்னையே விரும்பி வாழும் யானிருக்க நீ பிறளொருத்தியையே விரும்பும் இழிதகைமையுடையை' என்றாளும் ஆம். 'நீ நேற்றுத்தான் பரத்தையைத் தழுவியாடினை யாதலின் கண்டவர் யாரும் மறந்திலராக, நீ இல்லையென மறுத்தனை' என்பாளாய், 'நெருநை ஆடினை' என்றாள். அன்றியும், பன்னாளும் ஆடிய நின்னை, நேற்றும் ஆடுதல் கண்டோர் பலர் என்றாளுமாம். ஞாயிற்றின் ஒளியைக் கையால் மறைக்க முயலும் பேதையர் போல் நீ நின் ஊரறிந்த பழியை மறைக்க முயன்றனை என்பாள், 'மறைத்தல் ஒல்லுமோ ஞாயிற்றது ஒளியே' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : சூது – உட்டுளை, வஞ்சம், சூதாட்டம், சூதுபோன்ற முலைகள்; ஆர் – பொருந்திய, நிறைந்த; சூர் – அச்சம்; நுடக்கம் – அசைந்த, ஒல்கிய நடை; வெம் – விருப்பம்; நெருநை – நேற்று; ஒல்லுமோ – முடியுமோ; புதைத்தல் – மூடுதல்; ஞாயிறு – கதிரோன்.

இலக்கணக்குறிப்பு : ஒல்லுமோ – ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

Koviloor Digital Library

மேற்கோள் : பரத்தையரைக் கண்டோர் அஞ்சல் :
வானவ மகளிர் மானக் கண்டோர்
நெஞ்சு நடுக்குறூஉம் கொண்டி மகளிர்
– மதுரைக். 582–83.

72

வயல் மலர் ஆம்பல் கயில் அமை நுடங்கு தழைத்
திதலை அல்குல், துயல் வரும் கூந்தல்,
குவளை உண்கண், ஏஎர் மெல்லியல்
மலர் ஆர் மலிர்நிறை வந்தென,
புனலாடு புணர்துணை ஆயினள் எமக்கே.

கூற்று : தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப்புனல் ஆட வேண்டிய தலைமகன் களவுக் காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததனை அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகள் தலைமகனோடு ஊடியிருந் தாள். தலைவன் அவள் புலவியை நீக்கித் தன்னோடு புனலாட அவளை அழைத்தான். அப்போது களவுக் காலத்தில் தன் காதலி தனக்குப் புணர் துணையாய் நீராடியதனைத் தோழி கேட்குமாறு சொல்லியது இது.

உரை : களவுக் காலத்தில் ஒருநாள் ஆற்றில் புதுவெள்ளம் வந்தபொழுது கழனியில் மலர்ந்த ஆம்பல் மலரால் தொடுத்த மூட்டு வாயை உடைய அசையும் தழையினையும், தேமலால் அழகுபெற்ற அல்குலையும், அசையும் கூந்தலையும், குவளை போலும் மையுண்ட கண்ணையும் மெல்லிய இயல்பையும் கொண்ட இவள், புனலாடி இன்புற எண்ணிய எமக்கு, தழுவி விளையாடுதற்குரிய துணையாகினாள். (அவளோடு இப்பொழுதும் புனலாட விழைகின்றேன்.).

Koviloor Digital Library

உரை விளக்கம் : தன்னோடு ஊடிய தலைவியை மகிழ்வித்து அவள் உடம்பாடு பெற விழைந்தானாதலின் அவள் கேட்குமாறு அவளுடைய கண், அல்குல், கூந்தல் முதலியவற்றைப் பாராட்டினான் என்க. தலைவன் பாராட்டுக் கேட்டு அவள் நெஞ்சு நெகிழ்வாள் என்பது அவன் உள்ளக்கிடக்கை. களவுக் காலத்திலேயே தன்னோடு புனலாடத் துணிந்தவள் இப்பொழுதும் துணிவாள் என்பது அவன் எதிர்பார்ப்பு.

இளம்பெண்கள் ஆம்பல் மலரணிதல் இயல்பாதலின், அதனைக் குறித்தான். புதுவெள்ளம் மலர்களையும் நுரையையும் சுமந்து வருமாதலின் 'மலரார் மலிர்நிறை' என்றான்.

அருஞ்சொற்பொருள் : கயில் – மூட்டுவாய்; திதலை – தேமல்; மலிர்நிறை – நிறைந்த வெள்ளம்; வந்தென – வந்தபொழுது.

இலக்கணக்குறிப்பு : வந்தென – வந்ததென என்பதன் திரிபு, எனவென் எச்சம், நுடங்கு தழை – வினைத்தொகை.

மேற்கோள் : மகளிர் ஆம்பல் அணிதல் :
சிறு வெள்ளாம்பல் இளையம் ஆகத்
[redacted]'
– புறம். 248.

தேமல் படர்தல் அல்குற்கு அழகு :
திதலையல்குல் என் மாமைக் கவினே
– குறுந். 27.

களவுக் காலத்தில் காதலி புணர்துணையாய் நீராடல் :
ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅன்
பகலே, பாடின் அருவி ஆடுதல் இனிதே
– குறுந். 351.

Koviloor Digital Library

73

வண்ண ஒண் தழை நுடங்க, வால் இழை
ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தென,
கள் நறும் குவளை நாறித்
தண்ணென்றிசினே பெருந் துறைப் புனலே.

கூற்று : மேலது.

உரை : நிறம் மிகுந்த ஒள்ளிய தழையுடை இடையில் அசைய, தூய அணிகலன்கள் அணிந்தவளும், ஒள்ளிய நெற்றியினளும் ஆகிய என் காதலி என்னோடு நீராடிய அந்த அகன்ற துறை முழுதும் தேனையுடைய நறிய குவளையின் நறுமணம் கமழ்ந்ததோடு தண்ணென்றும் குளிர்ந்தது.

உரை விளக்கம் : துறையில் உள்ள நீர்ப்பரப்பு முழுவதும் குவளை நாறியதற்குக் காரணம் அம்மலர்களை அவள் அணிந்திருந்ததாம். தனக்குத் தண்ணென்னும் ஊற்றின்பம்' தரும் அவள் உடல் அந்நீரில் திளைத்தமையால், அவள் உடலின் தண்மை நீரிற்கும் அமைந்தது என்பது அவன் கருத்தாகக் கொள்க. நீருக்குத் தண்மை இயல்பாயினும், தன் காதல் தோன்ற இப்படிக் கூறினான் என்க. 'கண்ணறும் குவளை' என்றும் பாடம். இதற்கு, தலைவியின் கண்போன்ற நறுங்குவளை என்று பொருள் கொள்க. குவளைபோல் இவள் கண்கள் இருந்தன என்பது முறையாயினும், இவள் கண்களைப் பாராட்டுவான் 'கண் நறும் குவளை' என்றான். இது பொருளையே உவமமாக்கும் இலக்கிய உத்தியாகும். தலைவன் களவுக் கால நிகழ்ச்சியை நினைவூட்டி, தலைவியின் ஊடலைத் தீர்த்துக் கூட விரும்பினான் என்பது கூற்றால் அறியப்படுகிறது.

அருஞ்சொற்பொருள் : வண்ணம் - நிறம்; வால் இழை - தூய அணி, ஒள்ளிய இழையுமாம்; அரிவை - இளம்பெண் என்ற பொதுப்பொருள்; பண்ணை பாய்தல் - விளையாட்டாக நீரில் பாய்ந்து விளையாடல்; 'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு' என்பது தொல்காப்பியம்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : என்றிசின் – இறந்த கால வினை முற்றுத் திரிசொல்; பாய்ந்தென – எனவென் எச்சம்.

அரிவை பண்ணை பாய்ந்தென, துறைப்புனல் தண்ணென்றிசின் என இயைக்க.

74

விசும்பு இழி தோகைச் சீர் போன்றி சினே –
பசும் பொன் அவிர் இழை பைய நிழற்ற,
கரை சேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள் தண் நறுங் கதுப்பே.

கூற்று : மேலது.

உரை : (பண்டு யானும் இவளும் நீராடி மகிழ்ந்த பொழுது) பசிய பொன்னாலாகிய, ஒளி விளங்கும் தன் அணிகலன்கள் மெல்லென ஒளி வீசிட, கரையருகே நின்ற மருத மரத்தின் மேலேறி நீரின்கண் விளையாட்டு விரும்பிப் பாய்ந்த பொழுது இவளுடைய குளிர்ந்த, நறிய கூந்தல் வானத்திலிருந்து கீழே இறங்கும் மயிலின் தோகைபோல அழகாகக் காட்சி நல்கிற்று.

உரை விளக்கம் : மரக்கிளையிலிருந்து தண்ணீரிற் பாய்ந்த பொழுது அவள் மயில்போலவும், அவிழ்ந்து விசையால் அசைந்த நீண்ட கருங்கூந்தல் அம்மயிலின் தோகைபோலவும் காணப்பட்டன என்பான், 'விசும்பு இழி தோகைச் சீர்போன்றிசின்' என்றான். கரிய தழையுடைய மரம் கரிய வானமாகக் காட்சி தந்தது என்றுமாம். தூய பொன்னாலும், மணிகளாலும் செய்த அணியாதலின் ஒளிவிட்டது. தலைவியை மயிலாகவும் அவள் கதுப்பை அம்மயிலின் தோகையாகவும் பாராட்டியது அவள் அன்பை மீண்டும் பெறுவது குறித்தாகும்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : விசும்பு - வானம்; இழி - இறங்குகிற; சீர் - அழகு; அவிர் - ஒளிரும்; இழை - அணிகலன்; பைய - மெல்ல; நிழற்ற - ஒளிவிட, மின்ன.

மேற்கோள் : தலைவிக்கு மயில் உவமை :

மின்னு நிமிர்ந் தன்ன கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியின் கிளைஇய கூந்தலள்,
வரை இழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடை ஊர்பு இழியக் கண்டனென்

— அகம். 158.

மகளிர் புனல் பாய்ந்து விளையாடல் :

என்னாவதுகொல் தானே கழனி
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
பாசவல் முக்கித் தண்புனல் பாயும்
யாணர் அறாஅ வைப்பின்
காமர் கிடக்கையவர் அகன்றலை நாடே

— புறம். 63.

இழை நிழற்ற மருதம் ஏறிப் பண்ணை பாய்வோள் கதுப்பு தோகைச் சீர் போன்றிசின் என இயைக்க.

75

பலர் இவண் ஒவ்வாய், மகிழ்ந! - அதனால்,
அலர் தொடங்கின்றால் ஊரே - மலர
தொல் நிலை மருதத்துப் பெருந் துறை,
நின்னோடு ஆடினள், தண் புனல் அதுவே.

கூற்று : பரத்தையோடு புனலாடி வந்த தலைமகன் அதனை மறைத்துக் கூறிய வழித் தோழி கூறியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : பரத்தையோடு புனலாடித் தன் இல்லம் திரும்பின தலைவன் வாயில் வேண்டிய பொழுது தோழி மறுத்தாள். தலைவன் தான் புனலாடவில்லை என்று பொய் புகன்றான். அவனுக்கு மறுமொழியாகத் தோழி கூறியது இது.

உரை : மகிழ்நனே! நீ பரத்தையரோடு நீராடியதனை இங்கு ஒத்துக்கொள்ள மாட்டாய். (ஆயினும் இதனைக் கேள்). மலர்களை மிகுதியாகக் கொண்ட, மிகவும் பழைமையான மருத மரம் நிற்கும் பெரிய நீர்த் துறையின்கண்ணே, நின் காதலி நின்னோடு ஆடி மகிழ்ந்ததனைக் கண்டோர் பலராவர். அதுபற்றி ஊர் முழுதும் அலர் பரவிற்று என்பதனை அறிவாயாக. ஈண்டு பழியை மறைத்தலை ஒழிக.

உரை விளக்கம் : 'பலர் இவண் ஒவ்வாய்' என்பதற்கு ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையும் பெருமழைப்புலவரும் ஏறத்தாழ ஒரே பொருள் கொண்டனர். அவற்றின் பொருத்தம் நோக்கி அவர்களையொட்டியே இதற்குப் பொருள் கொள்ளப்பட்டது. ஐயர் பதிப்பில் இத்தொடர் 'இவண் பலர் ஒவ்வாய்' என மாறப்பட்டு, 'இங்குப் பலரை ஒத்திராய்' எனப் பொருள் கொள்ளப்பட்டது. ஈழத்து உரையாளர் 'நீ நமக்குப் பொருந்துதலை உடையை அல்லை' என்று பொருள் உரைக்கின்றார். இவர் 'மருதத்துறைக் கண்ணே தண்ணிய புனலிடத்து நீராடினவள் பலர்; ஊராரும் அலர் கூறத் தொடங்கா நின்றார்' எனப் பொருள் செய்து, இவ்விரண்டின் ஏதுவாகத் தலைவன் தனக்குப் பொருந்துபவனல்லன் என்றார். ஆனால் 'நீராடினவள் பலர்' என்பது தமிழ் இலக்கண மரபோடு பொருந்தவில்லை. செய்யுளில் 'ஆடினர் தண்புனலே' என்றன்றி, 'ஆடினள் தண்புனல்' என்றே உள்ளது. எனவே, ஆடினவள் ஒருத்தியென்றும், கண்டோர் பலர் என்றும் கொள்வதே பொருந்துவது என உணர்க. இறுதியில் இடம்பெற்ற 'அது' என்பதனோடு முதற்கண் உள்ள 'பலர்' என்பதனைக் கூட்டி, இடையே 'கண்டோர்' என்று ஒரு சொல்லை வருவித்துப் பொருள் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

Koviloor Digital Library

'செய்த பிழையை நீ என்றும் ஒத்துக் கொள்வதில்லை' என்ற பொருளில் 'இவண் ஒவ்வாய்' என்றாள் என்க. 'மகிழ்ந!' என்றாள், 'நீ பெயரளவிற்கே மகிழ்நனாவதன்றி, அப்பெயர்க்கேற்ற நல்லொழுக்கம் உடையவன் அல்லை' என்ற குறிப்புடன். 'ஊரே' என்பதில் உள்ள இறுதி ஏகாரத்தை அசையாகக் கொள்ளாது, 'ஊர்முழுவதுமே' என்ற பொருளில் கொள்க. 'அலர் தொடங்கின்று' என்றாள், 'தொடங்கும் பொழுதே அலராயிற்று, இனி அது கௌவையாய்ப் பெருகும்' என்ற பொருள்பட. பன்னெடுங்காலமாக அத்துறை பலரும் நீராடுதற்குரியதாயிருந்தது என்ற குறிப்பில் அங்கிருந்த மரம் 'தொன்னிலை மருதம்' எனச் சிறப்பிக்கப்பட்டது. தலைவன் ஒழுக்கம் பலராலும் அறியப்பட்டதற்குக் காரணம் கூறியவாறு அறிக.

அருஞ்சொற்பொருள் : தொன்னிலை – நீண்ட நாளாக நிற்கும்; பழைய மரம் என்றபடி; மலர – மலரை உடைய; தொடங்கின்று – தொடங்கிற்று; ஒவ்வாய் – ஒப்புக்கொள்ள மாட்டாய்.

76

பைஞ்சாய்க் கூந்தல், பசு மலர்ச் சுணங்கின் –
தண் புனலாடி, தன் நலம் மேம்பட்டனள் –
ஒண் தொடி மடவரல், நின்னோடு,
அந்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றே.

கூற்று : மேலது.

உரை : பைஞ்சாய்க் கோரை போல் நீண்ட கூந்தலையும், பசிய மலர்போன்ற அழகிய தேமலையும், ஒள்ளிய வளையல்களையும் கொண்ட இளையாள் ஒருத்தி, (நேற்று) நின்னோடு குளிர்ந்த நீர்நிலையில் புனலாடி, அதனால் தன் நலம் மேம்பட்டு, வானுலகப் பெண்கட்குத் தெய்வம் போன்ற சிறப்பெய்தினாள் எனப் பலரும் கூறுவர். (அதனை நீ மறைக்க முடியுமோ?)

Koviloor Digital Library

உரை விளக்கம் : பைஞ்சாய் என்பது மருத நிலத்தில் வளரும் ஒரு கோரை வகை. அது நீண்டு வளரும் இயல்பினது ஆதலின், புன்லாடிய பரத்தையின் கூந்தற்கு உவமையாயிற்று. பசிய மலர் என்றாளேனும், வேங்கை மலர் என்று கொள்க. அதுவே மகளிர்மேற்படரும் சுணங்கிற்கு உவமையாக நூல்களுட் பேசப்படுவது. நின்னோடு புனலாடியதனாலேயே அவள் தேவ மகளிர்க்குத் தெய்வம் போல நலம் பெற்றாள் என்றாள், நின்னைப் பிரிந்துறைந்தமையால் நின் மனையாட்டி தேவமகளிர்க்குத் தெய்வம் போன்ற தன் நலத்தை இழந்து வறுமையுற்றாள் என்ற குறிப்பில். தெய்வமும் என்பதிலுள்ள உம்மையைப் பிரித்து மகளிர்க்கு என்பதனோடு இசைத்து அதனை உயர்வு சிறப்பாக்குவார் பெருமழைப்புலவர்.

இனி, பைஞ்சாய்க் கூந்தல் என்பதனை, அதன் நாரால் தொடுத்த மாலையணிந்த கூந்தல் என்று கொள்வாரும் உளர்.

அருஞ்சொற்பொருள் : பைஞ்சாய், பஞ்சாய் – தண்டாங் கோரை; பசுமலர் – பசிய, புதிய வேங்கை மலர்; சுணங்கு – முலைமேற்படரும் தேமல்; மடவரல் – இளம்பெண்; அந்தரம் – மேலுலகு.

இலக்கணக்குறிப்பு : பைஞ்சாய் – மாலையைக் குறித்ததால் ஆகுபெயர்; பசுமலர் – பண்புத்தொகை.

மேற்கோள் : கோரையால் மலர் தொடுத்தல் :

பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர் நார்ப் பெய்த புனைவின் கண்ணி
– பெரும். 217 – 18.

சுணங்குக்கு மலர் உவமையாதல் :

சிறுவீ ஞாழல் தேன்தோய் ஒள்ளிணர்
....
....
ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்
– நற். 191.

Koviloor Digital Library

அழகிய பெண்கட்கு வானர மகளிரை உவமை கூறல் :

– காண்வர
வானர மகளோ நீயே
– ஐங். 418.

வானுறை மகளிர் நலன் இகல் கொள்ளும்
வயங்கிழை கரந்த வண்டுபடு கதுப்பின்
ஒடுங்கு ஈரோதிக் கொடுங்குழை கணவ
– பதிற். 14 : 13 – 15.

77

அம்ம வாழியோ, மகிழ்ந! நின் மொழிவல்;
பேர் ஊர் அலர் எழ, நீர் அலைக் கலங்கி,
நின்னோடு தண் புனல் ஆடுதும்;
எம்மொடு சென்மோ; செல்லல், நின் மனையே.

கூற்று : முன் ஒரு ஞான்று தலைவியோடு புனலாடினான் எனக்கேட்டு, 'இவனுடன் இனி ஆடேன்' என உட்கொண்ட பரத்தை, 'புதுப்புனல் ஆடப்போது' என்ற தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியோடு முன்னர்ப் புனலாடினான் தலைவன் எனக் கேட்ட பரத்தை, அவனுடன் இனி ஆடுவதில்லை என்று வெறுத்திருந்தபோது, அவன் அவளைப் புதுப்புனலாட அழைத்தான். அப்போது அவள் சொல்லியது.

உரை : தலைவ! யான் கூறுவது கேள்! நீ வாழ்க! நினக்கு ஒன்று கூறுவேன். இப்பெரிய ஊர் முழுதும் அலர் பரவுமாறு, நீரிலே அலையெழும் வண்ணம் மகிழ்ச்சிமிக்கு நின்னோடு தண்ணிய புனலாட விழைந்தோம். நீ நின் மனைக்குச் செல்வதனைத் தவிர்ப்பாயாக. (நின் மனைக்குச் செல்வது கருத்தெனில் என்னை அழைக்க வேண்டா).

Koviloor Digital Library

உரை விளக்கம் : தான் தலைவனொடு புனலாடுவதனால் பேரூரில் அலர் மிகும் என்பதனை நன்குணர்ந்தவள் எனினும், தலைவிபோல் அலர்க்கு அஞ்சாதவளாய், 'அலர் எழப் புனலாடுதும்' என்றாள். இதனால் தனக்குத் தலைவனொடு உறவுண்மையை ஊர் அறிவது தனக்கு நலம் பயக்கும் என்று கருதினாளாம். அலர் எழுவதால் தலைவியின் செருக்கு அடங்கும் என்பதும் அவள் எண்ணமாம். 'நீ நின் மனைக்குச் செல்வதாயின் நின்னோடு ஆடேன்' என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : மகிழ்நன் – மருதநிலத் தலைவனுக்குப் பெயர்; மொழிவல் – கூறுவேன்; சென்மோ – செல்வாயாக; செல்லல் – செல்லற்க.

இலக்கணக்குறிப்பு : மொழிவல் – தன்மை ஒருமை வினைமுற்று; ஆடுதும் – தன்மைப்பன்மை வினைமுற்று; சென்மோ – மோ முன்னிலை அசை; செல்லல் – எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

78

கதிர் இலை நெடு வேற் கடு மான் கிள்ளி
மதில் கொல் யானையின், கதழ்பு, நெறி வந்த,
சிறை அழி புதுப் புனல் ஆடுகம்;
எம்மொடும் கொண்மோ, எம் தோள் புரை புணையே.

கூற்று : மேலது.

உரை : தலைவ! எம் தோளைப் போன்ற தெப்பத்தை எம்முடன் சேர்ந்து பற்றுவாயாக! அங்ஙனம் பற்றினால், ஒளியை உடைய இலையைக் கொண்ட வேலையும் விரைந்து செல்லும் குதிரையினையும் உடைய கிள்ளியென்னும் சோழ மன்னனுடைய, பகைவர் மதிலை அழிக்கும் யானைப் படையைப் போலத் தன் நெறியிலே மிகவும் விரைவாக வந்த, அணையை உடைத்துப் பாயும்

Koviloor Digital Library

புதுப்புனலிலே நின்னோடு ஆடுவோம். (இனித் தலைவியோடு ஆடலைத் தவிர்க.).

உரை விளக்கம் : அணையை உடைத்துப் பாயும் வெள்ளத்திற்குப் பகைவர் மதிலைக் கொம்புகளால் குத்தித் தகர்த்து உட்புகும் யானைப்படை உவமையாக அமைந்தது நயமுடைத்து. யானைப்படையைத் தடுக்க இயலாமை போல, இவ்வெள்ளமும் தடையை மீறிப் பாய்ந்தது என்பது. கிள்ளியின் யானைப்படை போர் முறை வழுவாதது போல, இவ்வெள்ளமும் தனக்குரிய நெறியிலே பாய்ந்தது என்பாள் 'நெறிவந்த' என்றாள். யானை சீறிப்பாய்தல் போல் வெள்ளமும் சீறிப் பாய்ந்தது என்பாள், 'கதழ்பு நெறி வந்த' என்றாள். நின் அணைப்பிற்கு எம் தோள்கள் உதவுவதுபோல், புணையும் நினக்கு உதவும் என்பாளாய், 'எம் தோள்புரை புணை' என்றாள். வேழம் மகளிர் தோளுக்கு உவமையாதல் போல், புணையும் வேழத்தால் ஆனது என்பது அறிக. மூங்கிற் கழிகளை இணைத்துக் கட்டித் தெப்பம் அமைப்பர்.

அருஞ்சொற்பொருள் : கதிர் – சுடர்; கடுமான் – விரைந்த செலவுடைய குதிரை; கதழ்பு – விரைவு; சிறை – அணை; புணை – தெப்பம்.

இலக்கணக்குறிப்பு : கொண்மோ – 'மோ' முன்னிலை அசை; கடுமான் – கடி என்னும் உரிச்சொல் திரிந்து கடுவாயிற்று; புரை – உவம உருபு.

கிள்ளி : கிள்ளி, சென்னி என்பன சோழர்குடித் தோன்றல்கட்குரிய சிறப்புப் பெயர்கள். நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் மன்னர்கள் பெயர்களில் இச்சொல்லைக் காண்க. இச்செய்யுளில் வரும் கிள்ளி என்பான் இன்னான் என அறிய இயலவில்லை.

Koviloor Digital Library

மேற்கோள் : *யானைகள் மதில்களை அழித்தல் :*

— செற்றார்

வெல்கொடி அரணம் முருக்கிய
கல்லா யானை வேந்து

— ஐங். 429.

களிறே, எழூஉத் தாங்கிய கதவு மலைத்தவர்
குழூஉக் களிற்றுக் குறும்புடைத்தலின்
பரூஉப் பிணிய தொடி கழிந்தனவே

— புறம். 97.

நுதிமுகம் மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயும் நின் களிறு அடங்கலவே

— புறம். 31.

79

'புதுப் புனல் ஆடி அமர்த்த கண்ணள்,
யார் மகள், இவள்?' எனப் பற்றிய மகிழ்ந!
யார் மகள் ஆயினும் அறியாய்;
நீ யார் மகனை, எம் பற்றியோயே?

கூற்று : *தன்னொடு கூடாது தனித்துப் புனலாடுகின்றான் எனக் கேட்டு, தலைநின்று ஒழுகப்படா நின்ற பரத்தை தானும் தனியே போய்ப் புனலாடினாளாக, அவளை ஊடல் தீர்த்தற் பொருட்டாகத் தலைமகன் சென்று, தான் அறியான் போல நகையாடிக் கூறிக் கைப்பற்றியவழி அவள் தோழி சொல்லியது.*

கூற்று விளக்கம் : *தலைவன் தன்னை விடுத்துத் தனியே நீராடுவதாகக் கேட்டாள் பரத்தை. அவள் தானும் அவ்வாறே செய்தாள். அவளை ஊடல் தீர்த்துப் புனலாட விரும்பிய தலைமகன் அவளை நெருங்கினான். தான் அவளை அறியான் போல,*

Koviloor Digital Library

அவள் கைப்பற்றி 'நீ யார் மகள்' என்று வினவினான். அது கண்ட தோழி சொல்லியது இது.

உரை : 'புதுப்புனலில் நெடும்பொழுது ஆடினமையால் மாறுபட்ட கண்ணையுடைய இவள் யார் மகளோ?' என்று வினவிக் கையைப் பற்றியவனே! இவள் யார் மகளாயினும் நீ அறியாய். அங்ஙனம் அறியாதவனாயிருந்தும் யாதொரு உறவும் உன்னொடு இல்லாத எம் கையைப் பற்றிய நீ யார் மகனாகுவை? அதனை எமக்கு முதலில் உரை.

உரை விளக்கம் : பரத்தையின் கண்களை 'அமர்த்த கண்' என்றான் நெடிது ஆடினமையின் இயல்பு மாறிச் சிவந்திருந்தமை கருதி. இனி, தன்பால் அன்பின்றி வெச்சென நோக்கியமையாலும் அங்ஙனம் கூறினான் எனிலுமாம். போர் செய்கின்ற கண் எனலும் ஆம். அவள் யாரெனத் தான் அறிந்திருந்தும் அவ்வாறு வினவியது, அவளொடு உறவாடுதற்கு முதற்படியாக என்க. தன் அன்பு தோன்ற அவ்வாறு வினவினானுமாம். அவள்பால் தனக்குள்ள அன்புரிமையை வெளிப்படுத்தவே அவள் கைப்பற்றி விளையாடினானாதலின், தோழி 'ஏதிலள் ஒருத்தியின் கைப்பற்றிய நீ யார் மகன்?' என்றாள். 'எம்பால் உனக்கு யாது உரிமை?' என்பது கருத்து. 'எம்கை' என்றாள் தனக்கும் தன் தோழியாகிய பரத்தைக்கும் வேறுபாடின்மை காரணமாக. 'யார் மகளாயினும் அறியாய்' என்றாள், 'நீ பண்டும் அவள் இயல்பையும் அருமையையும் அறியாய். இப்பொழுதும் அறியமாட்டாய்' என்னும் பொருளில். இவை யாவும் ஊடல் குறித்தனவேயாம். முடிவில் பிணங்கியோர் ஒன்றுபட்டனர் என்க.

அருஞ்சொற்பொருள் : அமர்த்த - மாறுபாடுற்ற.

இலக்கணக்குறிப்பு : மகனை - ஐகாரம் சாரியை; ஆடி - எச்சத்திரிபு, ஆடியமையால் எனக் காரணப் பொருட்டு; பற்றியோய் - வினையாலணையும் பெயர்.

Koviloor Digital Library

மேற்கோள் : நீராடினமையால் கண் சிவப்புறல் :
நீர் நீடாடின் கண்ணும் சிவக்கும்
– குறுந். 354.

80

புலக்குவெம் அல்லேம்; பொய்யாது உரைமோ;
நலத்தகு மகளிர்க்குத் தோட் டுணை ஆகி,
தலைப் பெயற் செம் புனல் ஆடித்
தவ நனி சிவந்தன, மகிழ்ந! நின் கண்ணே.

கூற்று : தன்னை ஒழியப் புதுப்புனலாடித் தாழ்த்து வந்த தலைமகனோடு தலைமகள் புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தன் மனையாளொடு புனலாடாது தனியே சென்று நீராடிக் காலந்தாழ்த்து வந்த பொழுது அவனொடு புலந்த தலைமகள் சொல்லியது.

உரை : மகிழ்ந! யாம் நின்னொடு புலப்போம் அல்லோம். எனவே மறைக்காமல் உண்மையை உரைப்பீராக! நலமாகிய தகுதியுடைய பரத்தையருக்குத் தீம்புனலாட்டில் தோளால் தழுவுதற்குரிய துணையாகி, முதல்மழையாலே பெருகிவந்த செம்புனலில் ஆடி, நும் கண்கள் மிகமிகச் சிவந்துள்ளன.

உரை விளக்கம் : 'உண்மையைச் சொன்னால் நாங்கள் புலப்போம் என்று கருதியே நீ பொய் கூறுகின்றாய். நீ தவறு செய்தாலும் நாங்கள் புலவோம். உண்மையைக் கூறுக' என்பாளாய், புலக்குவெம் அல்லேம் என்றாள். தன் கணவனின் ஒழுகலாற்றைப் பண்டே அறிந்தவளாதலின் அவன் பரத்தையரோடு நீராடியிருத்தல் ஒருதலையென்ற கருத்தில் 'நலத்தகு மகளிர்க்குத் தோட்டுணையாகி ...... ஆடி' என்றாளாம். 'நீராடியது உண்மையென்பதனை மிகச் சிவந்த நின் கண்களே காட்டினவாதலின், நீ மறுப்பினும் யாம்

Koviloor Digital Library

நம்புவேம் அல்லேம்' என்றாள் என்க. கார்காலத்தில் பெய்த முதல் மழையாதலின் அதன் வெள்ளம் சேறும் சகதியுமாய்ச் செந்நிறம் கொண்டிருத்தலின் செம்புனல் என்றாள். தவ, நனி என்னும் ஈருரிச்சொற்களைக் கூட்டிச் சொன்னது கண்ணின் மிகு சிவப்பைக் குறிக்கவாம்.

'மகளிர்க்கு' என்றாள் தலைவனுக்குப் பல பெண்டிரொடு தொடர்புண்டோ என்னும் ஐயுறவினால்.

கார்காலத்தில் முதன்முதல் பொழியும் மழையால் வரும் வெள்ளத்தில் நீராடி மகிழ்வது சிறப்பாதலின், அவ்வெள்ளத்தில் தன்னோடு நீராடிமகிழாமல், தான் நலத்தகு மகளிர் எனப் பெரிதும் மதித்த பரத்தையரோடு சென்று நெடும்பொழுது நீராடினான் என்பதுபடச் சொன்னமையின் 'புலக்குவெம் அல்லேம்' என்று சொன்னாலும் தலைவியின் சொற்கள் ஊடற்குறிப்புடையனவே என்று உணர்க.

அருஞ்சொற்பொருள் : புலத்தல் – ஊடல்; நலத்தகை – அழகால் உளதாகும் தகுதிப்பாடு; தலைப்பெயல் – முதல் மழை.

இலக்கணக்குறிப்பு : புலக்குவெம், அல்லேம் – தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்; உரைமோ – மோ முன்னிலையசை; தவ, நனி – மிகுதிப்பொருள் தரும் உரிச்சொற்கள்.

மேற்கோள் : நீராட்டிற் கண் சிவத்தல் :
'நீர் நீடாடின் கண்ணும் சிவக்கும்'
– குறுந். 354.

'நீத்தம் .... அரிமதர் மழைக்கண்
சிவப்ப... ஆடுகம் வம்மோ'
– அகம். 312.

புனலாட்டுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

9. புலவி விராயப் பத்து

புலவியாவது காதலரிடைத் தோன்றும் ஊடல். இதன்கண் உள்ள பத்துச் செய்யுட்களிலும் தலைவியின் புலவியும், பரத்தையின் புலவியும் கலந்து நிற்றலின், இது தலைவியின் புலவி மட்டுமே இடம்பெற்ற புலவிப்பத்தினும் வேறாகப் புலவிவிராயப் பத்து என்ற பெயர் எய்திற்று.

81

குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை
அரிப் பறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும்,
மலர் அணி வாயில் பொய்கை, ஊர! நீ
என்னை 'நயந்தனென்' என்றி; நின்
மனையோள் கேட்கின், வருந்துவள் பெரிதே.

கூற்று : தன்னைக் கொடுமை கூறினாள் தலைமகள் என்பது கேட்ட பரத்தை, தலைமகன் வந்து தன்மேல் அன்புடைமை கூறினானாக, அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகள் தன்னைப் பழித்துப் பேசினாள் என்று கேள்வியுற்ற பரத்தை, தலைமகன் தன்பால் வந்து, 'யான் உன்னைப் பெரிதும் விரும்புகின்றேன்' எனக் கூறினபோது, தலைவிக்கு நட்புடையார் காதில் விழுமாறு இங்ஙனம் கூறினாள்.

உரை : நாரைகள் (தம் கூர் அலகுகளால்) உடைத்து உண்ட வெண்மையான வயிற்றுப்பகுதியை உடைய யாமையின் தசையினை, அரித்த ஓசையினை உடைய பறையைக் கொண்ட வயலில் வினை செய்வார் இட்டு வைத்து உண்ணுதற்கு இடமான, மலர்களால்

Koviloor Digital Library

அழகுபெற்ற துறையை உடைய நீர் நிலைகளைக் கொண்ட ஊரின் தலைவ! நீ என்னை விரும்புவதாகக் கூறுவதனை நின் மனைவி கேட்டால் பெரிதும் வருந்துவாள்.

உரை விளக்கம் : குருகாவது நாரை. உடைத்து உண்டலாவது தன் கூரிய அலகால் குடைந்து உண்டலாம். யாமையின் வயிற்றுப்பகுதி வெண்ணிறத்தது ஆதலின் வெள்ளகடு என்றாள். 'அரி' என்பது பறையின் ஓசையைக் குறித்தது. பறையின் அதிர்வை இங்ஙனம் கூறினாள். வினைஞர் பணி செய்யுங்கால் பறை முழக்கல் பண்டை மரபாதலின் பறைவினைஞர் என்றாள். பணி செய்வார்க்குக் களைப்புத் தோன்றாதிருத்தற் பொருட்டுப் பறை கொட்டினர் என்பர். அல்குதல் – எஞ்சுதல். பின்னர் உண்டற் பொருட்டுச் சேமித்து வைத்தல். மிசைதலாவது உண்டலாம். அது மிசையென நின்றது. வாயிலாவது நீர்த்துறை. அது தாமரை அல்லி முதலிய மலர்கள் நிறைந்து அழகு பெற்றதாதலின் 'மலரணி வாயில்' என்றாள். 'என்னை நயந்தனென்' என்றது தலைவன் சொல்லைக் கொண்டு கூறியது. 'என்னை நீ நயந்ததாகக் கூறுவது பொய்யேயாயினும் நின் மனைவி உண்மையெனக் கொண்டு காய்வாள்' என்றாள். தலைவியின் தோழியர் அதனைத் தலைவிபால் கூற அவள் வெகுளல் வேண்டும் என விரும்பி இங்ஙனம் கூறினாளாம். 'நீ நின் மனைவியிடமே மிகுந்த அன்புடையை' என்றாள் என்க. இஃது ஊடல் குறிப்பினதாகும்.

அருஞ்சொற்பொருள் : குருகு – நாரை, கொக்கு ஆகியவற்றிற்குப் பொதுவான பெயர்; அகடு – வயிறு; அல்குதல் – தங்குதல்; வாயில் – துறை; நயத்தல் – விரும்புதல்; என்றி – என்று கூறுகின்றனை.

மேற்கோள் : அறுவடை செய்வார் பறை முழக்குதல் :

கழிசுற்றிய விளை கழனி
அரிப் பறையால் புள் ஓப்புந்து

– புறம். 396.

Koviloor Digital Library

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்
பழனப் பல்புள் இரிய
– நற். 350.

உணவை இட்டு வைத்து உண்ணல் :
கடியுடை நனந்தலை ஈன்று இளைப்பட்ட
கொடுவாய்ப் பேடைக்கு அல்குஇரை தரீஇய
மான்று வேட்டு எழுந்த செஞ்செவி எருவை
– அகம். 3 : 4 – 6.
(அல்குதல் – சேமித்து வைத்தல்).

பிற உயிர்கள் உண்டபின் எஞ்சியதை மாந்தர் உண்டல் :
ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு
அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சியாகும்
– நற். 43.

புலி தொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழி ஊன்
கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை
ஞெலிகோல் சிறுதீ மாட்டி ஒலிதிரைக்
கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்
சுனைகொள் தீம்நீர்ச் சோற்றுலைக் கூட்டும்
– அகம். 169.

உள்ளுறை : குருகுகள் உண்டு எஞ்சிய உணவை வினைஞர் உண்ணும் ஊரன் என்றது, யாம் நுகர்ந்து கழித்த எச்சிலாகிய நின் மார்பை நின் மனைவி நுகர்வாள் என்னும் உள்ளுறையைக் கொண்டது. (பழைய உரை)

Koviloor Digital Library

82

வெகுண்டனள் என்ப, பாண! நின் தலைமகள் –
'மகிழ்நன் மார்பின் அவிழ் இணர் நறுந் தார்த்
தாது உண் பறவை வந்து, எம்
போது ஆர் கூந்தல் இருந்தன' எனவே.

கூற்று : மனைவயிற் புகுந்த பாணற்குத் தலைமகன் கேட்குமாற்றால் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை இல்லத்திலிருந்து தலைவியில்லத்திற்கு தலைவன் தூதுவனாக வந்த பாணனுக்குத் தலைமகன் கேட்கும் வண்ணம் தலைவி சொல்லி வாயில் மறுத்தது.

உரை : பாணனே! நின் தலைமகள் (பரத்தை) தலைவனுடைய மார்பை அணிசெய்யும் மலர்ந்த பூங்கொத்துக்களால் ஆன நறுமணம் மிக்க மாலையில் பூந்துகளை விரும்பி உண்ணும் பறவையான வண்டுகள் எம்முடைய மலர் சூடிய கூந்தலில் வந்து தங்கின எனக்கேட்டுச் சினம் கொண்டனள் என்று கூறுகின்றனர். (அவ்வாறிருக்க நீ இங்கு வந்தது அறியின்பால் சினம் கொள்வாள்).

உரை விளக்கம் : பரத்தையைத் தலைமகள் என்றது இகழ்ச்சிக் குறிப்பாம். பிறர்க்காயின் யாம் தலைமகளாக விருப்பவும் நின் போன்றோர்க்குத் தலைமகள் இழிந்த பரத்தையே என்று பாணனையும் பரத்தையையும் இகழ்ந்தாள் என்க. 'தலைவன் மார்பில் அணிந்த மாலையிலுள்ள பூக்களில் தேனை உண்ட வண்டு, அவன் விடாது தானே வந்து எம் போதார் கூந்தலில் அமர்ந்ததாக அதற்கே வெகுள்வாள் நின் தலைமகள் எனின், அவனே விரும்பி நின்னை என்பால் தூதாக அனுப்பினான் என அறியலுறின் தலைவன் நிலையும், அவன்பொருட்டுத் தூது வந்த நின் நிலையும் என்னாகும்?' எனக் கேட்ட நுட்பம் உணரற்பாலதாம்.

Koviloor Digital Library

"தலைவன் தாரினது மலர்த்தேனை உண்ட வண்டு, தலைவி கூந்தலில் போதுகள் மலரும் செவ்வி நோக்கி இருந்தனவெனத் தனக்குப் பாங்காயினார் சொல்லக்கேட்ட பரத்தை தன்பால் இன்பம் நுகர்ந்த தலைவன் தன் மனையகம் புக்குத் தலைவி புலவி நீங்கும் செவ்வி நோக்கியிருந்தான் என உட்கொண்டு வெகுண்டாளாக, அதனை உணர்ந்த தலைவி பொறாது ... வெகுண்டனள் ...." என ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை கூறுவது நயமுடைத்து.

வெகுளுதற்குத் தக்க காரணமில்லாத போதும், அற்பமான காரணம் காட்டியும், கற்பனையான தொடர்பு கற்பித்தும் தலைவன் பால் ஊடுவோள் பரத்தை என்பதாகக் கோடல் சிறப்பாம்.

அருஞ்சொற்பொருள் : தலைமகள் – பரத்தை (எள்ளற் குறிப்பு) இணர் – பூங்கொத்து; தாதுண்பறவை – வண்டு.

மேற்கோள் : வண்டினைப் பறவையெனல் :

தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
– அகம். 4.

.... தோள் சேர்பு
அறுகாற் பறவை அளவில மொய்த்தலின்
– நற். 55.

83

மணந்தனை அருளாய் ஆயினும், பைபயத்
தணந்தனை ஆகி உய்ம்மோ – நும் ஊர்
ஒண் தொடி முன் கை ஆயமும்
தண் துறை ஊரன் பெண்டு எனப்படற்கே.

Koviloor Digital Library

கூற்று : வரைந்த அணுமைக் கண்ணே தலைமகற்குப் புறத்தொழுக்கம் உண்டாகிய வழி, அதனை அறிந்த தலைவி அவனோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : திருமணம் நிகழ்ந்த மிக அண்மைக் காலத்திலேயே தலைவனுக்குப் பரத்தையர் உறவு தோன்றியதனை அறிந்த தலைவி தலைவனோடு ஊடிக் கூறியது.

உரை : தலைவ! நீ எம்மை மணந்து கொண்ட கணவன் என்ற வகையில் அருள் செய்திலை ஆயினும், தண்ணிய துறைகளை உடைய நின்னூர்க்கண் வாழும் ஒள்ளிய வளையல்களைப் பூண்ட பரத்தைமகளிரும் நின் பெண்டுகளே என்று ஊரார் கருதுமாறு மெல்ல மெல்ல எமை விட்டு விலகிச் செல்வாயாக!

உரை விளக்கம் : 'மணந்தனை அருளாய் ஆயினும்' என்றதனால், தலைவன் தலைவிக்கு மனைவிக்குரிய உரிமை அளித்திலன் என்பதும், அவள்பால் அருளின்றி விலகிப் பரத்தையர் உறவு கொண்டான் என்பதும் உணர்த்தப்பட்டன. பெயருக்கு மனைவியென்று ஒருத்தியைக் கொண்டு, உண்மையில் தலைவன் பரத்தையரையே தன் பெண்டுகளாய்க் கொண்டு கொடுமை செய்தான் என்க. தன்னைத் தலைவனொடு யாதொரு தொடர்பும் அற்றவள் எனவும், பரத்தையரே மனைவிமார் போன்ற கேண்மையுடையார் என்றும் ஊரார் கருதுமாறு அவன் நடந்தான் என்பது. 'எம்மை மெல்ல மெல்லக் கைவிடுத்து ஒரேயடியாய் நீங்குக. உன் மனைவிமார் என்னும் பெருமையைப் பரத்தையரே பெற்று மகிழட்டும்' என்று புலந்து கூறினாளாம்.

'தலைவ, உண்மையில் நீ அருள் செய்வாய் அல்லையாகவும், உலகம் இவள் பெண்டு என்று கூறுதல் மாத்திரைக்கே என்னை மணந்து கொண்டனைபோலும். இதுவே நின் விருப்பமாயின், மெல்ல மெல்ல என்னைப் பிரிந்தனையாக ஒழுகக் கடவை. அஃது எதற்கு எனின், நும் ஊரின்கண் வாழும் ஒள்ளிய வளையலணிந்த பரத்தையர் மகளிர் எல்லாம் குளிர்ந்த துறையமைந்த ஊரனுடைய

Koviloor Digital Library

பெண்டுகளே என்று உலகம் நின்னை மீக்கூறும் பொருட்டு', என உரை கூறுவார் பெருமழைப் புலவர். இவர், 'அருளாய் ஆயினும் பெண்டு எனப் படற்கே மணந்தனை' என்று கண்ணழித்துப் பொருள் செய்தார்.

'நீ மணந்து கொண்ட மனைவிக்கன்றி இழிந்த பரத்தையர்க்கே கணவன் என்று ஊரார் கருதுமாறு ஒழுகுதல் உனக்குப் பெருமை தருவதன்று' என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : பைபய – மெல்ல மெல்ல; தணந்தனை – நீங்கியவனாய்; உய்ம்மோ – செல்வாயாக; ஆயம் – பரத்தையர் கூட்டம்; பெண்டு – மனைவி.

இலக்கணக்குறிப்பு : மணந்தனை, தணந்தனை என்பன முற்றெச்சங்கள். உய்ம்மோ – 'மோ' முன்னிலை அசை. ஆயமும் – உம்மை இழிவு சிறப்பு.

மேற்கோள் : 'பெண்டு' மனைவியென்னும் பொருளது :

தண்டுறை யூரன் பெண்டினை ஆயின்

– குறுந். 91.

84

செவியின் கேட்பினும் சொல் இறந்து
வெகுள்வோள்,
கண்ணின் காணின், என்னாகுவள்கொல்? –
நறு வீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண் கயம் போல,
பலர் படிந்து உண்ணும் நின் பரத்தை மார்பே?

கூற்று : பரத்தையர் மனைக்கண் தங்கிப் புணர்ச்சிக் குறியோடு வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையோடு கூடி இன்புற்று, அதற்குரிய அடையாளங்களோடு, தன் மனைக்குத் திரும்பி வந்து வாயில் வேண்டியபோது அவனுக்கு வாயில் மறுத்த தோழி சொல்லியது.

உரை : தலைவ! நின் புறத்தொழுக்கத்தைப் பற்றிப் பிறர் சொல்லச் செவியிற் கேட்டாலும் சொற்களால் கூறமுடியாத அளவில் சினம் கொள்ளக் கூடிய என் தோழி, நறுமணம் கொண்ட மலர்களை அணிந்த ஐந்து வகையாகக் கோலம் செய்யத்தக்க கூந்தலை உடைய இளமகளிர் தைத்திங்களில் தவத்துக்குரிய நீராடுவதற்கு இடமான குளிர்ந்த குளத்தைப் போலப் பெண்டிர் பலரும் அணைந்து இன்புறும் நின் பரத்தைமைத் தன்மை வாய்ந்த மார்பினைக் கண்கொண்டு காண நேர்ந்தால் என்னாவாள்?

உரை விளக்கம் : துறைக் குறிப்பின்படி தலைவன் புணர்ச்சிக் குறியோடு வந்தானாதலின், அவன் மார்பிற் காணும் குறிகளை நேரிற் காணின் எல்லையற்று வெகுள்வாள் என்னும் கருத்தில் 'சொல்லிறந்து வெகுள்வாள்' என்றாள். இதற்குச் சொல்லவிந்து, அஃதாவது பேச நாவெழாதபடி வெகுள்வாள் என உரைப்பாரும் உளர். ஐம்பால் என்பதற்குக் கூந்தல் எனப்பொருள் கூற இடமிருப்பினும் ஐந்து வகையாக ஒப்பனை செய்தல் என்னும் பொருள் சிறப்புடையது. ஐவகை ஒப்பனை வகைகளாவன முடி, சுருள், பனிச்சை, குழல், கொண்டை ஆகியனவாம். தைத்திங்கள் பனி மிகுந்ததாதலின் நீர் நிலைகள் தண்ணெனக் குளிர்ந்திருத்தல் இயல்பு. இத்திங்கள் கன்னிப்பெண்கள் நீராடி நோன்பு மேற்கொள்ளற்குரியதாகும். இது பற்றிய குறிப்புக்கள் பண்டைச் செய்யுட்களில் பலவாகவுள. நீரிற்படிந்து திளைத்தலையொத்துப் பெண்டிர் தம் காதலர் மார்பிற் பொருந்தி அணைத்து மகிழ்தலின், 'பலர் படிந்து உண்ணும்' என்றாள். பரத்தை மார்பு என்றாள், தலைவிக்கு மட்டும் உரித்தாகாது புறப்பெண்டிர் பலரும் வரையறையின்றி அணைத்து மகிழ்தலின். 'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் நண்ணேன் பரத்த நின் மார்பு' என்றார் நாயனாரும். 'பரத்தை மார்பு' என்றது பரத்தைமைப் பண்புள்ள மார்பு என்னும் பொருளிலாகும்.

Koviloor Digital Library

'செவியிற் கேட்பினும்' என்பதற்கு, தலைவன் மார்பைப் பிற பெண்டிர் சிறப்பித்துக் கூறினும் என்று பொருள் கூறுவாரும் உளர். தலைவி முன்னிலையில் அங்ஙனம் பிற பெண்டிர் சிறப்பித்துப்பேசல் வழக்கமின்மை அறிக.

அருஞ்சொற்பொருள் : சொல் இறந்து – சொல்ல இயலாத அளவில்; வீ – மலர்; ஐம்பால் – கூந்தல் ஒப்பனைவகை.

தைந்நீராட்டு : தைத்திங்களில் கன்னிப் பெண்கள் நீராடி நோன்பு இயற்றுதல் பண்டை வழக்கமாகும். இதனைத் தைந்நீராடல், தைநோன்பு என வழங்குப 'தாயர் அருகா நின்று தவத்தைந்நீராடுதல்' எனப் பரிபாடல் கூறுவது கொண்டு, இது தத்தம் தாய்மார் வழி காட்டப் பெண்கள் மேற்கொண்டது என வுணரலாம். இதனை அம்பாவாடல் என்றும் வழங்குவர். இதுவே பின்னாட்களில் மார்கழி நீராடல் என வழங்கிற்று என்பர் அறிஞர். 'நீ தையில் நீராடிய தவம்தலைப் படுவாயோ' (குறிஞ்சிக்கலி. 23) என்று கபிலர் பேசுகிறார். மழையில் நனைந்த குரங்குகள் அமர்ந்திருக்கும் நிலையினை, 'வான் பெயல் நனைந்த புறத்த நோன்பியர் தையூண் இருக்கையிற்றோன்றும் நாட' என நற்றிணை (22) கூறுகின்றது. 'இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத் தைஇத் திங்கள் தண்கயம் படியும் பெருந்தோட் குறுமகள்' (நற். 80) எனப் பின்னரும் வருதல் காணலாம்.

மேற்கோள் : தையில் குளம் தண்ணென்றிருத்தல் :
தைஇத் திங்கள் தண்கயம் போலக்
கொளக் கொளக் குறையாக் கூழுடை நல்லில்'
– புறம். 70.

தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
– குறுந். 196.

Koviloor Digital Library

85

வெண் நுதற் கம்புள் அரிக்குரற் பேடை
தண் நறும் பழனத்துக் கிளையோடு ஆலும்
மறு இல் யாணர் மலி கேழ் ஊர்! நீ
சிறுவரின் இனைய செய்தி;
நகாரோ - பெரும! - நிற் கண்டிசினோரே?

கூற்று : தலைமகன் பரத்தையர்மேல் காதல் கூர்ந்து நீடித்துச் செல்வுழி, மனையகம் புகுந்தானாகத் தலைவி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர்மேல் அளவற்ற காமம் கொண்டு நெடுநாள் ஒழுகுதல் கண்டு, அவன் மனைக்குத் திரும்பிய போது தலைவி புலந்து கூறியது.

உரை : வெண்மையான நெற்றியை உடைய கம்புட்கோழியின், அரித்த குரல்கொண்ட பெட்டை, குளிர்ந்ததும் நறுமணம் மிக்கதுமான ஊர்ப்பொது நிலத்தே தன் இனத்தோடு கூடியிருந்து ஆரவாரம் செய்தற்கு இடனான குறைவற்ற புதிய வருவாயினை மிகுதியாக உடைய ஊரனே! நீ நல்லது கெட்டது எனப் பகுத்தறிய முடியாத சிறார்களைப் போன்று ஒழுகுகின்றனை. பெருமானே! இதனைக் கண்டார் நின்னை எள்ளி நகையாடாரோ?

உரை விளக்கம் : கம்புட்கோழி வெண்மையான தலையை உடையதாதலின் 'வெண்நுதற் கம்புள்' என்றாள். இதனைச் சம்பங்கோழி என்றும் வழங்குவர். அரிக்குரல் என்றார் அரித்த குரல் உடைமையின் 'கனைகுரல்' என்றும் இது பேசப்படும்.

'கிளையோடு' என்பதற்குத் தன் சேவலையன்றிப் பிற தன் இனப்பறவைகளோடும் என்று விளக்கம் கூறுவாரும் உளர். கிளை என்பது ஈண்டு அதன் சேவலாதலும் பொருந்துவதே.

Alagappa university
Central Library
63737

Koviloor Digital Library

'மறுஇல் யாணர்' என்றார் அறவழியில் பெருகும் வருவாய் என்ற பொருளில். 'சான்றோன் எனத்தக்க நீ, நலம் தீது அறியாச் சிறுவர் போல் ஒழுகுகின்றனை' என்று கடிவாளாய், 'சிறுவரின் இனைய செய்தி' என்றாள். 'இனைய' என்பது, அவன்கண் காணும் கொடுமை ஒழுகலாறுகளைச் சுட்டி நின்றது. பிறர் நகைக்க வாழ்தல், பீடுமிக்க நிலையில் உள்ளார்க்குப் பொருந்துவதன்று என்பாளாய், 'நகாரோ பெரும' என்றாள். 'இற்றை நின் ஒழுகலாறு நின்னைப் பெருமகனாக எண்ணத் தடையாயிற்று' என்றாளாம். சான்றோர் இயல்பு பழியெனின் உயிரும் கொடுப்பதாதலின் அதற்கு மாறாய் ஒழுகுதலை இங்ஙனம் கடிந்தாளாம்.

அருஞ்சொற்பொருள் : நுதல் – நெற்றி; ஆலும் – கூவும்; பேடை – பெட்டை; பழனம் – பொதுநிலம்; கண்டிசினோர் – கண்டோர்; இனைய – இத்தகைய செயல்களை; கிளை – இனம், சேவல்.

இலக்கணக்குறிப்பு : கேழ் – கெழு என்றதன் திரிபு; சிறுவரின் – இன் ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புப் பொருளில் வந்தது; நகாரோ – ஓகாரம் வினா, உடன்பாட்டுப் பொருளில் வந்தது.

உள்ளுறை : இதன்கண் வரும் 'பழனத்துக் கிளையோடாலும்' என்னும் பகுதிக்குப் பழனத்தின்கண் தன் சேவலின்றியும் தனது இனத்தோடிருந்து மகிழ்ந்து ஆரவாரிக்கும் எனப் பொருள் கூறி அதற்கு இயையுமாறு, "சம்பங்கோழிப் பெடை (தன் சேவலின்றியும்) தனது கிளையோடு மகிழ்ந்து ஆலும் என்றது, "பெருமானே நீ எவ்வாறு தணந்து போயினை எனினும் யான் எனக்குரிய கடமைகளிலே நெஞ்சினைச் செலுத்தி நமது சுற்றத்தோடு ஒருவாறு மகிழ்ந்திருக்கின்றேன்" என்று உள்ளுறை காண்பார் பெருமழைப்புலவர்.

"கம்புட்பேடை சேவலொழியக் கிளையுடனே ஆலுமூர என்றது 'கிளையுடனே வாழ்கின்ற எமக்கு நின்னின் நீங்கிய மெலிவு உளதாகக் கூறுகின்றேம் அல்லேம்; நின் குலத்தொழுக்கத்துக்குத்

Koviloor Digital Library

தகாது' எனக் கழறியதாம்; "தாய்போற் கழறித் தழீஇக் கோடல், ஆய்மனைக் கிழத்திற்கு உரித்தென மொழிப என்றதூஉம் இத்திறம் நோக்கியெனக் கொள்க." - பழையவுரை.

86

வெண் தலைக் குருகின் மென் பறை விளிக்குரல்
நீள் வயல் நண்ணி இமிழும் ஊர!
எம் இவண் நல்குதல் அரிது;
நும் மனை மடந்தையொடு தலைப் பெய்தீமே.

கூற்று : 'புதல்வன் கூறிய மாற்றம் தலைமகட்குப் பாங்காயினார் கூறக்கேட்டான்' என்பது அறிந்த பரத்தை அதற்குப் புலந்து, தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தன் இளம்புதல்வன் சொல்லிய சொற்களைத் தன் மனைவிக்கு நட்பினார் கூறக் கேட்டு மகிழ்ந்தான் என்று கேள்வியுற்ற பரத்தை அதன் பொருட்டுப் புலந்து அவனிடம் கூறியது.

உரை : வெண்மையான தலையைக் கொண்ட நாரையின் மென்மையான சிறகுகள் கொண்ட பார்ப்புகளின் அழைக்கும் குரல் நெடிய வயல்கட்கு நெருக்கமாக வந்து ஒலிக்கும் ஊரனே! இனி நீ எம்மில்லத்தில் தொடர்ந்து வாழ்ந்து எமக்கு அருளுதல் மிக அரிது. எனவே நும் இல்லத்தரசிபாற் சென்று வாழ்வாயாக!

உரை விளக்கம் : குருகின் பார்ப்பினை மென்பறை என்றாள் அவை மென்மையாகப் பறத்தல் பற்றி. பறை என்பது பறத்தலாம் தொழிலை உடைய குஞ்சுகளைக் குறித்தது. விளிக்குரலாவது அவை தம் தாய்ப்பறவைகளை அழைக்கும் குரலாகும். நாரைகள் வயல்கட்கு அண்மையிலுள்ள மரங்களில் வாழ்ந்தமையின், குஞ்சுகளின் அழைப்புக்குரல் வயல்வெளியில் கேட்டது என்க.

Koviloor Digital Library

தலைவன் பெற்ற மகன் மழலை பேசத் தொடங்கிவிட்டமையால், அவன்பால் உள்ள ஈடுபாட்டால் தலைவன் இனித் தம் இல்லில் தொடர்ந்து தங்கித் தலையளி செய்ய வாய்ப்பில்லை என்று உணர்ந்தமையின், 'எம் இவண் நல்குதல் அரிது' என்றாள்.

எந்நேரமும் அவனுக்குத் தன் இளம்புதல்வன் நினைவே மிகுமாதலின் அவன் உடன் நீங்குதல் ஒருதலையென்பதாலும், ஒரோவழித் தங்கினும் முன்போல் முழுமையாகத் தன்னொடு கூடியின்புறுத்தான் என்பதாலும், 'அரைகுறை மனத்தோடு ஈண்டு உறைதலினும் உன் மனைவியிடமே செல்லுவது மேல்' என்றாளாம். அவன் மீண்டு செல்வதனை அவள் விரும்பாள் எனினும் புலவி காரணமாக அங்ஙனம் உரைத்தாள். மேலும், புதல்வனை ஈன்றவள் தன்போல் அழகும் இளமையும் குன்றாதிருத்தல் அரிதாதலின், காதலின்பத்தின் பொருட்டு மீண்டும் தன்பால் அவன் மீள்குவது உறுதியென்று கருதியும் இங்ஙனம் துணிந்து கூறினாள் எனினும் அமையும் என்க.

அருஞ்சொற்பொருள் : மென்பறை - மெல்லிய சிறகு; விளிக்குரல் - அழைப்புக்குரல்; நண்ணி - நெருங்கி; இமிழ்தல் - ஒலித்தல்; தலைப்பெய்தல் - கூடுதல், சேர்தல்.

இலக்கணக்குறிப்பு : மென்பறை - அடையடுத்த ஆகுபெயர், அன்மொழித் தொகை என்பாரும் உளர்; தலைப்பெய்தீம் - முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று.

மேற்கோள் : தலைவன் புதல்வனை நினைத்து வீடு திரும்பல் :

புனிறு நாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
. . . .
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன் றுறை யூரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே

- நற். 40.

Koviloor Digital Library

உள்ளுறை : 'குருகின் பார்ப்பு அழைக்கும் குரல் வயல் நண்ணி இமிழும் என்றது, நின்புதல்வன் கூறிவிடுத்தல் நீ கேட்டமை சேரியெல்லாம் அறிந்தது, நின்னால் மறைத்தல் அரிது என்பதாம்' என்பார் பழைய உரையாசிரியர்.

87

பகன்றைக் கண்ணிப் பல்லான் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர! நின் மனையோள்
யாரையும் புலக்கும்; எம்மை மற்று எவனோ?

கூற்று : தலைமகள் தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட காதற் பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்ப, தலைமகனோடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகள் தன்னைப் பற்றிக் குறை கூறினாள் என்று கேள்விப்பட்ட காதற் பரத்தை, தலைவியின் தோழிமார்கள் கேட்குமாறு தலைவனிடம் ஊடிச் சொல்லியது.

உரை : பகன்றைப் பூவால் தொடுத்த தலைமாலையணிந்த பல ஆனிரைகளை உடைமையாகக் கொண்ட இடையர், கரும்பைக் குறுந்தடியாகப் பயன்படுத்தி மாங்கனியை உதிரச் செய்யும் புதிய வருவாயினை உடைய ஊர்த்தலைவ! நின் மனையோள் எத்தகையோரையும் வெறுத்துக் கூறும் இயல்புடையவள் என்று கேட்டுள்ளேன். அவ்வாறிருக்க எம்மைப் புலத்தலில் வியப்பில்லை.

உரை விளக்கம் : பகன்றை என்பது சிவதைப்பூண்டு. நீண்ட இலையும் வெண்ணிறப் பூவும் கொண்டது இது. இதன் பூ வள்ளம் (கிண்ணம்) போன்றது ஆதலின் இதற்குப் பாண்டிலை உவமை கூறினர். ஔவையார், 'பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர் சூடாது வைகியாங்கு' என்றார். (புறம். 235)

Koviloor Digital Library

கண்ணியாவது ஆடவர் தலையிலணிவது. பல மன்னர் மரபினர் தத்தமக்குரிய தலைமாலையை (கண்ணி)க் கொண்டிருந்தனர். 'நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே நின்னோடு பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே' (புறம். 45) என்றார் கோவூர்கிழார்.

குணிலாவது குறுந்தடி. முரசு முழக்கும் தடியைக் குணில் என்பர். 'குணில்பாய் முரசு' (புறம். 143) என்பது காண்க. ஈண்டு ஆயர் மாங்கனி உதிர்க்கக் கரும்பைக் குணிலாகக் கொண்டார் என்றாள் ஊரின் செல்வவளம் நோக்கி. அரிய பொருளாம் கரும்பை, வெறும்தடிபோல் பயன்படுத்துவர் என்பது. 'நின் மனையோள்' என்பது அயன்மை குறித்தது என்பர். 'நின் மனையோள் யாரையும் புலக்கும் என்ப' என்றாள், நின் மனைவி நல்லவர் கெட்டவர் என வேறுபாடின்றி எத்தகையோரையும் வெறுத்துக்குறை கூறுவாள் என்னும் செய்தி ஊரறிந்தது' என்னும் பொருளில். 'அவ்வாறு இருப்பவும், தன் கணவனோடு உறவு கொண்டு வாழும் என்னைப் புலந்தமையில் வியப்பு இல்லை' என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : பகன்றை – சிவதைப்பூண்டு; கண்ணி – தலைமாலை; குணில் – குறுந்தடி; ஆன் – பசு; கோவலர் – இடையர்; யாணர் – புதுவருவாய்; புலக்கும் – வெறுக்கும்.

இலக்கணக்குறிப்பு : மற்று – இடைச்சொல்.

மேற்கோள் : பகன்றை மலரைச் சூடல் :

பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
– மலைபடு. 459.

சில்லேராளர், பனித்துறைப் பகன்றைப்
பாங்குடைத் தெரியல் சூடி
– பதிற். 66.

Koviloor Digital Library

உள்ளுறை : "கோவலர் கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும் யாணர் ஊர! என்றது, யாங்கள் பழித்துரைத்தோம் என்று அவட்கு இனிய சொற்கூறி, அவள் எங்களைப் பழித்துக் கூறும் சொற்களை நினக்கு இனியவாய்ப் பெறுவாய் என்றவாறு" எனக் குறிப்பார் பழைய உரையாசிரியர்.

இனி, இதற்குப் பெருமழைப் புலவர், 'இனிய உணவாகிய கரும்பினையே இன்னாமை செய்யும் குணிலாகமாற்றிக் கொண்டு இனிய மாவின் கனியை உதிர்ப்பதுபோல, நின் மனையாட்டி என்னுடைய இனிய செயல்களையே இன்னாச் செயல்களாகத் திரித்துக்கொண்டு என்னைத் தூற்றிப் பொல்லாங்கு செய்வாளாயினாள்' என்னும் உள்ளுறையுடையது எனக்கூறிப் பழைய வுரையாசிரியர் கருத்தை மறுப்பது நயமுடைத்தாகும்.

88

வண் துறை நயவரும் வள மலர்ப் பொய்கைத்
தண் துறை ஊரனை, எவ்வை எம் வயின்
வருதல் வேண்டுதும் என்பது
ஒல்லேம் போல், யாம் அது வேண்டுதுமே.

கூற்று : தலைமகனை நயப்பித்துக் கொள்கையில் விருப்பு இல்லாதாள்போல், அவ்வாறு கோடலையே விரும்புவாள், 'அது தனக்கு முடியாது' எனத் தலைமகள் புறனுரைத்தாள் எனக்கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : 'தலைவனை மயக்கித் தன்பால் இருத்திக்கொள்வதனை விரும்பி, அதன்படியே செய்தாள் பரத்தை. ஆனால் விருப்பமில்லாதாள் போல் வெளியிற்காட்டிக் கொள்கிறாள். அவ்வாறு செய்வது அவட்கு இயலாது' என்று தன்னைத் தலைவி குறை கூறினாள் என்று கேள்வியுற்ற பரத்தை, அவட்கு வேண்டியோர் கேட்கும் வகையில் தலைவனுக்குக் கூறியது இது. 'இனி அவ்வாறே செய்ய எண்ணியுள்ளேன்' என்பது கருத்து.

Koviloor Digital Library

உரை : எம் தமக்கை (தலைவி) வளம் நிரம்பிய நீர்த்துறைகளில் யாவரும் விழையுமாறு மலர்கள் பூத்து அழகு செய்யும் குளிர்ச்சியான துறைகளை உடைய ஊர்த் தலைவனை, எம்மிடமே எப்பொழுதும் வருதலை யாம் விரும்புகின்றோம் என்பதாகப் புறனுரைக்கின்றாள் என்ப. அதனை மனத்தே விரும்பாததுபோல வெளியார்க்குக் காட்டிக் கொண்டே, இனி அதனையே செய்ய எண்ணியுள்ளோம்.

உரை விளக்கம் : இயற்கையாகவே வளம் பொருந்திய நீர்த்துறையாதலின் அதன் கண் வளரும் மலர்களும் வளப்பமுடையவாயின என்பாளாய், 'வண்துறை நயவரும் வளமலர்ப்பொய்கை' என்றாள். மலர்கள் பூத்து வளம் சிறக்கும் நீர்த்துறை யாவர்க்கும் விருப்பத்தை உண்டாக்குதலின் 'நயவரும்' என்றாள். இனி, 'வண்டுறை' என்பதனை வண்டு + உறை எனப் பிரித்து, 'வண்டுகள் உறையும் யாவரும் விரும்புகின்ற வளவிய மலர்ப்பொய்கை' எனப் பொருள் கூறலும் ஒன்று. இனி, 'நயவரும்' என்பதற்கு, நயம் வருதலை வண்டுக்கே ஆக்கி, 'வண்டுகள் தாமே உறைதலை விரும்புதற்குக் காரணமான ....' என்று விளக்குவாரும் உளர்.

'எவ்வை' எனத் தலைவியைச் சுட்டியது, பரத்தை குலமகளிரை ஒவ்வாள் எனினும், தன்னை அவளொடு நிகர்த்தவளாகக் கருதியொழுகும் அவள் செருக்கினை உணர்த்திற்று என்க. தன் காதலனை முன்பே மணந்தாளாதலின் அவட்குத் தலைவி மூத்தாளாகக் கருதினாள் என்பது. இக்காலத்தார் **அக்காள்** என வழங்குப. **தமக்கை** என்பது **தம் அக்கை** என விரியும். தவ்வை என்னும் சொல் தன்மையில் வருகையில் **எவ்வை** எனவாகும். இளையாள் எனின் **எங்கை** என்று வரும்.

ஐயரவர்களின் பதிப்பில் இச்செய்யுளிலும் இதற்கு அடுத்த செய்யுளிலும் வரும் 'எவ்வை' என்ற சொற்கு 'என் தங்கை' என்றே பொருள் சொல்லப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

இச்செய்யுட்கு உரை வழங்கும் ஔவை துரைசாமிப் பிள்ளையும் இச்சொல்லுக்குத் தங்கை எனவே பொருள் கொண்டார். எவ்வை, எம் தங்கை; நும் தங்கை நுவ்வையெனவும், தம் தங்கை தவ்வையெனவும் வருதல் போல' எனக் கூறிச் சில இலக்கியச் சான்றுகளையும் காட்டுகின்றார். (மணி. 10:51-52, ஐங்.89, நற்.134) ஆயின் பெருமழைப்புலவர் இக்கூற்றை வன்மையாக மறுத்துரைக்கின்றார். அவர் காட்டும் சான்றுகள் வருமாறு :

1. " தாரை தவ்வை .... இலக்குமியாகிய
   நினக்கு இளையாள்" (மணி. 7: 104-8)

2. செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்
   (திருக். 197)

3. 'கமலத் தவ்வை நீங்குமென்ற யோத்தி வந்தடைந்த
   அம்மடந்தை தவ்வையாமெனக் கிடந்தனள்
   கைகயன் தனையை' (கம்ப. மந்தரை-88)

பெருமழைப் புலவரின் கருத்தே பொருத்தமான தென்பது அவர் காட்டியுள்ள சான்றுகளால் விளங்கும். மணிமேகலையுள் வரும் 'தவ்வை' என்பதனை இப்பெரியார் இருவரும் தத்தம் கருத்துக்கு அரணாகக் காட்டுவர். எனினும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அக்கையென்றே உரை தருவார். தமிழ்ச் சொல்லகராதியும் இப்பொருளையே தருகின்றது.

'நற்றிணை 172 ஆம் பாடலில், 'நும்மினும் சிறந்தது நுவ்வை யாகுமென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே' என்று வரும் பகுதிக்கு உரை வகுத்த பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் நுவ்வை என்பதற்குத் தங்கை எனப் பொருள் கூறியது பொருந்துவதாகத் தோன்றவில்லை.

இச்செய்யுளில், தலைவியின்தாய் தன் இளம்பருவத்து நிகழ்ச்சியொன்றைத் தன் மகளிடம் சொல்லுகிறாள். அவள் தன் தோழியரோடு விளையாடுகையில் வெண்மணலில் புதைத்த

Koviloor Digital Library

புன்னைக் கொட்டை முளைத்துச் செடியான நிலையில் அதற்கு நீரும் பாலும் பெய்து வளர்த்தாள். அது வளர்ந்து பெரிய மரமாக நின்றது. அது தன்னால் வளர்க்கப்பட்டதாதலின் அதனைத் தன் மகளாகவே கருதி வந்தாள். செய்யுளின் தலைவி அம்மரத்தை நோக்க இளையவள். எனவே, புன்னை அவட்குத் தமக்கையாகும். இதனைத் தன் தாய் தனக்குச் சொன்னதாகத் தலைவி சார்பாகத் தோழி தலைவனுக்குச் சொல்கின்றாள். இதனை ஐயர் பிறழ வுணர்ந்து ''நீயிர் வளர்த்து வரும் புன்னையானது நும்மினும் சிறந்ததன்றோ. அது நும்முடன் பிறந்த தங்கையாம் தகுதியுடைத்து'' என்று அன்னை கூறியதாக உரை செய்தனர். புன்னையை வளர்த்தவள் தலைவியின் தாயேயன்றித் தலைவியாகாள். 'பெய்து இனிது வளர்ப்ப' என்பதற்கு, ''யான் அம்முளைக்கு நெய்கலந்த பாலை நீராக வார்த்து வளர்த்தமையால்'' என்று பொருள் கொள்ள வேண்டும்.

தலைவனைத் தன்பால் ஈர்க்கவே பரத்தை விரும்பினாலும் அஃது அவட்கு இயலாது எனச் செருக்குற்றுக் கூறினாள் தலைவியெனவே, இது காறும் அது செய்யேன் எனினும் இனி அதனை அவளறியாமலேயே செய்து என் செல்வாக்கை நிலைநிறுத்துவேன் என்பாளாய், 'ஒல்லேம்போல் யாம் அது வேண்டுதுமே' என்றாள் என்க. அது எனச் சுட்டியது, தலைவன் தன்பால் வருமாறு செய்வதை.

தலைவிக்குத் தன் கணவன்பாலுள்ள செல்வாக்கினும் தனக்கு மிகுதியென்பது அவள் செருக்குரை யாகும். முடிந்தால் அவனைத் தடுத்துக் கொள்ளட்டும் என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : வண் – வளமை; நயவரும் – விருப்பத்தைச் செய்யும்; எவ்வை – எம் அக்கை; வயின் – இடம்; வேண்டுதும் – விரும்புதும்; ஒல்லேம் – இயலாதேம்.

இலக்கணக்குறிப்பு : ஒல்லேம், வேண்டுதும் – தன்மைப் பன்மை வினை முற்றுக்கள்.

Koviloor Digital Library

மேற்கோள் : பரத்தை சூள் உரைத்தல் :

1. பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
   . . . .
   . . . . தானஃது
   அஞ்சுவதுடையளாயின் வெம்போர்
   நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
   முனையான் பெருநிரைபோலக்
   கிளையொடும் காக்க தன் கொழுநன் மார்பே
   – குறுந். 80.

2. ஆதி மந்தி பேதுற்று இனையச்
   . . . .
   அந்தண் காவிரி போலக்
   கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின் யானே
   – அகம். 76.

இன்னும் இவைபோல் பல சான்றுகள் உள.

குறிப்புப் பொருள் : வள்ளிய துறைகளின் கண்ணே எல்லாரும் கொள்ளும் வண்ணம் நயந்து பூக்கின்ற மலர்களை உடைய பொய்கையூரன் என்றது, மகளிர் எல்லார்க்கும் பொதுப்பட்டிருப்பான் என்றவாறு என்பது பழையவுரை.

89

அம்ம வாழி, பாண! எவ்வைக்கு
எவன்? பெரிது அளிக்கும் என்ப – பழனத்து
வண்டு தாது ஊதும் ஊரன்
பெண்டு என விரும்பின்று, அவள் தன் பண்பே.

கூற்று : 'தலைமகன் தலைமகளைப் போற்றி ஒழுகாநின்றான்' என்பது கேட்ட காதற்பரத்தை அவன் பாணனுக்குச் சொல்லுவாளாய் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் தன் மனைவியைப் பெரிதும் விரும்பி அவட்கு அன்பு செய்கிறான் எனக் கேட்டுப் பொறாத காதற்பரத்தை, அவன் வாயிலாக அனுப்பிய பாணனுக்குச் சொல்லுவதுபோல, தலைவியின் தோழியர் கேட்கும் வண்ணம் சொல்லியது.

உரை : பாணனே! நீ வாழ்க! நான் சொல்லுவதனைக் கேள். தலைவன் என் அக்கையாகிய தலைவிக்குப் பெரிதும் தலையளி செய்வான் என்று கூறுவர் பலர். அஃது எதன்பொருட்டாம்? ஊர்ப்பொது நிலத்தில் உள்ள மலர்களில் வண்டுகள் தாதுண்டு மகிழ்தற்கு இடனான ஊரன் தலைமகளைத் தன் பெண்டு என்று கருதியதற்குக் காரணம் அவள்பால் அமைந்த நல்ல பண்புகளே; அவளுக்குள்ள பெண்மை நலமன்றாம்.

உரை விளக்கம் : தலைவியிடம் அவன் பேரன்புடையான் எனில் அஃது அவள் தன்னால் மணந்து கொள்ளப்பட்ட மனைவி என்பதும், அவள்பால் அமைந்த குடும்பப்பண்புமே காரணமாகுமேயன்றி, அழகும் இளமையும் கொண்டு தனக்குக் காதலின்பம் தரும் சிறப்பினாலன்று என்று கூறினாள் என்க. காம இன்பமளிப்பதில் தனக்கு அவள் எவ்வகையினும் ஈடாகாள் என்று இழித்தாளாம். 'எவ்வை' என்று பரத்தை சுட்டியது அவ்ள் பால் தான் கொண்ட அன்பினாலன்று. தன்னினும் வயதில் மூத்தாள் என்றும், தன் முதுமையால் தலைவன் விரும்பியவாறு காதலின்பம் தரத்தக்காள் அல்லள் என்றும் இழித்தற் குறிப்பினால் ஆகும்.

அருஞ்சொற்பொருள் : எவ்வை – எம் அக்கை; எவன் – என்ன காரணம்? பழனம் – ஊர்ப்பொதுநிலம்; பெண்டு – மனைவி.

உள்ளுறை : பழனத்து வண்டு தாது ஊதும் ஊரன் என்றது, தலைவன் பொது மகளிரான பரத்தையரைக் கூடி அவர் நலம் நுகர்வான் என்ற உள்ளுறைப் பொருள் கொண்டது.

Koviloor Digital Library

90

மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டன கொல்?
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான் கொல்?
அன்னது ஆகலும் அறியாள்
எம்மொடு புலக்கும், அவன் புதல்வன் தாயே.

கூற்று : தலைமகன் தன் மனைக்கண் செல்லாமல் தான் விலக்குகின்றாளாகத் தலைமகள் கூறினாள் என்பது கேட்ட காதற்பரத்தை தலைமகன் கேட்குமாற்றால் அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம் ; தலைவன் நெடுநாள் தன் காதற்பரத்தை வீட்டிலேயே உறைந்தான். அப்போது தலைமகள் அப்பரத்தையை அதன்பொருட்டுக் குறை கூறினாள். அதனைக் கேள்வியுற்ற பரத்தை, தலைவன் காதிற்படுமாறு, தலைவியின் தோழியர்க்குச் சொல்லியது இது.

உரை : மருதநிலத்துத் தலைவனாகிய எம் காதலனுடைய மாண்புமிக்க பண்பினை வண்டுகள் மேற்கொண்டனவா அன்றி வண்டுகளின் மாட்சிமை கொண்ட பண்பினை எம் காதலன் கொண்டானா என யாம் அறிந்தோமில்லை. அங்ஙனமாகவும், இதனை உணராது, தன் அறியாமையால், அவன் புதல்வனுக்குத் தாயாகிய தலைவி எம்பால் புலவி கூர்கின்றனள். (இஃதென்னென்பது?)

உரை விளக்கம் : மாண்குணம் என இங்குப் பரத்தை கூறியது இகழ்ச்சிக் குறிப்பாம். அஃதாவது இழிந்த குணமாம். அவ்விழி பண்பாவது வளம் நிறைந்த போது மலரை நாடிச் சென்று அதன் தேனை உறிஞ்சி அஃது தேனற்றபோது அதனை விடுத்துப் பிற மலர்களை நாடிச் செல்வது என்க. அவ்வண்டுகள் போலவே தலைவனும் தான் விரும்பிய மகளிர்பால் காமம் நுகர்ந்து

Koviloor Digital Library

அமையானாகிப் பலரையும் நாடித்திரிவானாயினன். இதனை உணராமல் தலைவி என்னைக் குறை கூறுகின்றாள் என அவள் அறியாமையைச் சுட்டினாள்.

தலைவியைப் 'புதல்வன்தாய்' என்றாள் அவள் வயதில் தன்னினும் மிக்காள் என்பது படவும், மகனுக்குத் தாயாகும் தகுதிமட்டுமே கொண்டு, தன் காதலனைத் தன்பால் இருத்திக் கொள்ளுதற்கு ஏற்ற அழகும் இளமையும் இல்லாதவள் என்பது படவும். மேலும், 'தன் கணவனைத் தகைத்துக் கொள்ளத் தகுதியில்லாதவள் என்னை இகழ்தல் என்னே!' என இகழ்ந்தாள் என்றுமாம்.

அருஞ்சொற்பொருள் : மாண் குணம் – விழுமிய பண்பு. இங்கு அஃது இழிபண்பு.

இலக்கணக்குறிப்பு : அறியாள் – அறியாளாய் .... முற்றெச்சம்.

மேற்கோள் : தலைவனை வண்டு எனல் :

''தாதுண் வேட்கையின் போது தெரிந்து ஊதா
வண்டோர் அனைய அவன்''

– நற். 25.

அவனே, நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகன் என்னாரே

– நற். 290.

புதல்வன் தாய் என்றல் இகழ்ச்சிக் குறிப்பாதல்:

''மாசில் கற்பின் புதல்வன் தாய் என
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை எள்ளல் அஃது அமைகும் தில்ல''

– அகம். 6.

புலவி விராயப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

10. எருமைப் பத்து

இதன்கண்ணமைந்த அனைத்துச் செய்யுட்களிலும் மருதநிலத்துக்குரிய கருப்பொருள்களிற் சிறந்த எருமையின் செயல்கள் எடுத்தாளப்படுதல் நோக்கி இஃது எருமைப் பத்தெனப்பட்டது.

91

நெறி மருப்பு எருமை நீல இரும் போத்து
வெறி மலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன், மகள் இவள்;
பழன வெதிரின் கொடிப் பிணையலளே.

கூற்று : குறை வேண்டிப் பின்னின்று வந்த தலைமகற்குத் தோழி, 'இவள் இளையள் விளைவு இலள்' எனச் சேட்படுத்தது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் தன்னைத் தலைவியோடு கூட்டுவிக்கும்போது தலைவன் தோழிக்குப் பின்னின்று இரக்கின்றான். தோழி, தலைவியின் கிடைத்தற்கு அருமையையும், தன் முயற்சி வெற்றிபெறுதற்குரிய வாய்ப்பின்மையையும் பலபட விளக்கி, தலைவன் வேண்டுகோளுக்குத் தன் இணங்காமையை வெளியிடுவது போலப் பேசி அவனை விலக்குவதாகும். (கூட்டுவிப்பதே அவள் நோக்கம்)

உரை : நெறிப்பினையுடைய கொம்புகளைக் கொண்ட எருமைச்சாதியின் ஆழ்ந்த கருநிற(நீலம்)முடைய பெரிய கடா, நறுமணம் நிறைந்த மலர்கள் நிறைந்த நீர்நிலைக் கண்ணே இறங்கி ஆண்டுள்ள ஆம்பல் மலர்களைச் சிதைத்தொழிப்பதற்கு இடமான,

Koviloor Digital Library

நெற்கழனிகளைக் கொண்ட ஊருக்கு உரிமையுடையவனுடைய மகளாகிய என் தோழி, ஊர்ப்பொது நிலத்தில் வளரும் வெதிரான கரும்பின் பூவால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையை அணிந்தவள் என நீ அறிவாயாக.

உரை விளக்கம் : எருமையின் கொம்பு அலை அலையாக - அறல்பட்டிருத்தலால் நெறி மருப்பாயிற்று. நீலம் என்பது ஈண்டு ஆழ்ந்த கருநிறத்தைச் சுட்டிற்று. கறுப்பியான காளியை நீலி என்பது வழக்கு. நீல இரும்போத்து என்றாள். அன்றியும் கரிய பெரிய கடா எனினும் பொருந்தும். ஆம்பல் மயக்கும் என்றாளேனும் ஆண்டுள்ள தாமரை, குவளை மலர்களையும் உள்ளடக்கினள் என்க. எருமைப் போத்தின் பிளவுபட்ட உறுதியான குளம்புகளில் பட்டு மலர்கள் சிதைந்தன என்க.

வெதிராவது மூங்கில். பழன வெதிர் என்றாள் காட்டுள் வளரும் மூங்கிலினின்றும் வேறுபடுத்திட.

வெதிரின் பிணையலாவது வெதிரின் பூக்களாலான பிணையலாகும். தலைவி சூடிக்கொள்ளும் பூவையும் சூடிடத் தகுதியற்ற பூவையும் வேறுபடுத்திக் காணும் அறிவும் இல்லாதவள் என்று சுட்டும் முகமாக, கரும்பின்பூமாலையை அணிந்தவள் என்றாள். செல்வத்தந்தையின் மகளாதலின் பிறரால் எளிதிற் கொள்ளற்குரியளல்லள் என்று உணருமாறு 'கழனியூரன் மகள்' என்றாள். இதனால், மணவாழ்விற் புகும் வயது இல்லாள் என்றும், தமர் தகுதியுடையார்க்கல்லது அவளைத் தாரார் என்றும் கூறித்தலைவனைச் சேட்படுத்தினாள். சேண்படுத்தல் சேட்படுத்தலாயிற்று. அஃதாவது விலக்குதல்.

அருஞ்சொற்பொருள் : நெறித்தல் – அறல்பட்டிருத்தல்; நீலம் – ஆழ்ந்த கருமை; இரும் – பெரிய; போத்து – கடா; வெறி – மணம்; மயக்கும் – சிதைக்கும்; பழனவெதிர் – கரும்பு; கொடி – நீண்டமைந்த; பிணையல் – மாலை.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : வெதிரின் .... பிணையல் – வெதிரின் பூவுக்கு ஆகுபெயர்.

மேற்கோள் : எருமையின் கொம்பு நெறிபட்டமை :

அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு எருமை
– அகம். 316.

எருமை நீர் நிலையிலுள்ள தாவரங்களை அழித்தல் :

இரும்பு இயன்றன்ன கருங்கோட்டு எருமை
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பல்மலர் மாந்தி
– அகம். 56.

குறிப்புப் பொருள் : எருமைப் போத்து ஆம்பலைச் சிதைக்கும் ஊரன் என்றது, தலைவியின் தமர், நல்லது கெட்டது அறியாராய் நின்னைப் பிறழ வுணர்ந்து தண்டிப்பர் என்னும் குறிப்புப் பொருளதாகும்.

92

கருங் கோட்டு எருமைச் செங்கண் புனிற்று ஆ
காதல் குழவிக்கு ஊறு முலை மடுக்கும்
நுந்தை, நும் ஊர் வருதும் –
ஒண் தொடி மடந்தை' நின்னை யாம் பெறினே.

கூற்று : 'நினக்கு வரைந்து தருதற்குக் குறை நின் தமர் அங்கு வந்து கூறாமையே' எனத் தோழி கூறினாளாக, தலைமகள் முகம் நோக்கி, 'இவள் குறிப்பினால் கூறினாள்' என்பதறிந்த தலைமகன், 'வரைவு மாட்சிமைப்படின் நானே வருவல்' எனத் தலைமகட்குச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவியைத் தன்னொடு கூட்டி வைக்குமாறு தோழியை வேண்டினான் தலைவன். அப்போது அவள், தலைவன் உறவினர் வந்து மகட்பேசினால் தலைவியின் தந்தை உடம்படுவது உறுதி என்றாள். அதற்கு விடை கூறுவானாய்த் தலைவன், தலைவி முகம் நோக்கி, தலைவியை 'யான் பெறுவது உறுதியெனில் யானே நேரில் வருவேன்' என்றான்.

உரை : ஒளி வீசும் வளையல் பூண்டவளே! நின்னை யாம் பெறுவது உறுதியென்பதனை இப்போதே அறியமுடியும் எனில், கரிய கொம்புகளையும் சிவந்த கண்களையும் உடையதும், அண்மையில் கன்று ஈன்றதுமான எருமைப்பெடை, தன் அன்பிற்குரிய கன்றுக்காகத் தானே ஊறுகின்ற மடியினை ஊட்டுதற்கு இடமான உன் தந்தைக்குரிய உம்மூருக்கு யானே வருவேன்.

உரை விளக்கம் : எருமைகள் கரிய பெரிய கொம்புகளையும் சிவந்த கண்களையும் உடையனவாதலின் கருங்கோட்டு....... செங்கண் ...... ஆ' என்றான். 'காதற் குழவிக்கு ஊறுமுலை' என்றான், எருமையின் அன்புக்குரிய கன்றின் பொருட்டுத் தானே பாலூறி நிற்றலான். குவ்வுருபு பொருட்டு என்னும் பொருள்பட நின்றது. 'பால் நினைந்து ஊட்டும்' தாயாதலின், கன்றை நினைந்த அளவிலேயே மடி சுரக்கும் என்பான், 'ஊறுமுலை' என்றான். 'மடுக்கும்' என்றான் நிறைய ஊட்டும் என்னும் பொருளில்.

'நின்னை யாம் பெறின்' என்றது தலைவியைப் பெறுவதிலுள்ள அருமைப்பாடு குறித்ததாம். தலைவியைப் பெறுவதாகவிருந்தால், தான் அதன் பொருட்டு எதனையும் செய்ய ஆயத்தமாக உள்ளதாகக் கூறினானுமாம். இதனால், அவள் மேல் தான் கொண்ட காதலின் அளவின்மையை வெளிப்படுத்தினான் என்க.

அருஞ்சொற்பொருள் : புனிற்றா – அண்மையில் கன்று ஈன்ற எருமைப் பெடை; மடுக்கும் – ஊட்டும்; பெறின் – பெறுவது உறுதியெனில்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : குழவிக்கு – 'கு'வ்வுருபு பொருட்டு என்னும் பொருள்பட வந்தது. பெறின் – செயின் என்னும் எச்சம். ஏகாரம் – ஈற்றசை. மடந்தை – அண்மை விளி.

மேற்கோள் : எருமை செங்கண்ணுடைமை :

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
– அகம். 46.

கன்றை நினைத்துப் பால் சுரத்தல் :

வீங்குமுலைச் செருத்தல் பால் வார்பு
குழவி உள்ளி ..... ஊர்வயின் பெயரும்
– குறுந். 344.

குறிப்புப் பொருள் : 'புனிற்றா தன் காதற் குழவிக்கு ஊறு முலை மடுக்கும் என்றதனால், அவள் பொருட்டுத்தான் உற்றார் பக்கல் பெறுவனவும், கூறியவாறு' என்றார் பழைய உரையாசிரியர்.

புனிற்றா தன் கன்றினுக்கு அன்புடன் ஊறுமுலை கொடுக்கும் தன்மை போலவே நின் தந்தையும் இளையோளாகிய நின்னை எனக்கு அன்புடன் கொடுத்தலை விரும்பினேன் என்ற பொருள் தோன்றுதல் காண்க.

93

எருமை நல் ஏற்றினம் மேயல் அருந்தென,
பசு மோரோடமோடு ஆம்பல் ஒல்லா,
செய்த வினைய மன்ற – பல் பொழில்
தாது உண் வெறுக்கைய ஆகி, இவள்
போது அவிழ் முச்சி ஊதும் வண்டே.

கூற்று : முயக்கம் பெற்றவழிப் பிறந்த வெறிநாற்றத்தால் பண்டையளவு அன்றி வண்டுகள் மொய்த்தனவாக, 'இதற்குக்

Koviloor Digital Library

காரணம் என்?' என்று வினாவிய செவிலித்தாய்க்குக் கூறுவாள் போன்று, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் கூந்தலில் என்றுமில்லாத அளவில் வண்டுகள் மொய்த்தமையால் ஐயுற்றுக்காரணம் வினாவிய செவிலிக்கு விடையாகத் தோழி கூறியது இது. அப்பொழுது தலைமகன் தலைவி இல்லின் வேலியருகே நின்றான்.

உரை : அன்னையே! நல்லனவாகிய எருமைக்கடாக்கள் மேய்ந்து உண்டமையான், யாண்டும் இருந்த பசிய மோரோடமும் ஆம்பலும் இல்லையாயின. எனவே வண்டினங்கள், தாம் செய்யத்தக்க வினை இதுவேயெனத் தெளிந்து, பல பொழில்களிலும் சென்று உண்ணத்தக்க பூந்தாதினை ஒரே இடத்தில் நுகரவிரும்பி, இவளுடைய பூக்கள் இதழ்விரிந்த கூந்தலின் கண் செறிவுடன் மொய்த்தன. (வேறு காரணமில்லை).

உரை விளக்கம் : எருமை ஏறுகள் (கடாக்கள்) பெருங்கூட்டமாகக் கூடி மேய்ந்தமை தோன்ற, 'ஏற்றினம்' என்றாள். 'மேயல் அருந்தென' என்றாள், அவை தம் மேய்ச்சலின்போது முழுவதனையும் உணவாகக் கொண்டன என்று விளக்க. பசிய மோரோடமும் ஆம்பலும் முற்றும் அழிந்தமைக்கு ஏற்ற காரணம் இதனால் விளக்கமாகிறது. இது காரணமாக, தேனை உணவாகக் கொள்ளும் வண்டுகள் வழியறியாது திகைத்துப்பின் இதுவே தகுதியெனத் தெளிவுற்றனவாய், தலைவியின் கூந்தலில் மொய்த்தன என்பாள், 'செய்த வினைய (வாய்), மன்ற, இவள் போது அவிழ் முச்சி ஊதும்' என்றாள். பல்வேறு பொழில்களையும் நாடித்தாம் பெறத்தக்க தாதினை இவள் கூந்தல் ஒன்றே தரும் என நம்பிச் சென்றன வென்பாள் 'பல்பொழில் தாது உண' என்றாள். பல்வேறான வண்டுகளும் இங்ஙனம் கூடினமையின் 'வெறுக்கையவாகி (செறிந்தனவாய்) ஊதும் என்றாள். இதனால், அவள் பல்வேறு மலர்களாலும் தொடுத்த மாலையைத் தன் தலையில் சூடியிருந்தாளாயிற்று. தாயின் ஐயத்தினைக் களைவது அவள் நோக்கமாதலின் இதன் பொருத்தம் உணரப்படும்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : ஏற்றினம் – ஆண்சாதி; மேயல் – மேய்ச்சல்; அருந்தென – அருந்தினவாகலின்; மோரோடம் – செங்கருங்காலி; ஒல்லா – பொருந்தா; செய்த வினைய – செய்யத்தக்க செயலாகத் தேர்ந்து; பொழில் – சோலை; வெறுக்கையை வாகி – செறிந்தனவாகி; முச்சி – கூந்தல்; ஊதும் – மொய்க்கும்.

இலக்கணக்குறிப்பு : அருந்தென – செய்தென என்னும் எச்சம். ஒல்லா – அஃறிணை எதிர்மறை வினை முற்று. வினைய – முற்றெச்சம்.

இதிலுள்ள வெறுக்கையவாகி என்பதற்குப் பழைய உரையோடு கூடிய பதிப்பில், செறிவை உடையனவாகி எனப் பொருள் தரப்பட்டது. இதனையொட்டியே மேலே உரை வகுக்கப்பெற்றது. 'வெறுக்கை' என்ற சொல் வெறுத்தல் என்னும் பொருளும் உடையது. எனவே, பெருமழைப் புலவர் "எருமை ஏற்றினம் மேயலாக மேய்ந்து மோரோடம் ஆம்பல் என்னும் இவற்றை ஒல்லாவாய்ச் செய்தன ஆதலின் அவ்வறும் பொழிற்றாதுண்ண வெறுத்தனவாய் அவற்றின் நறுமணங்கள் ஒருங்கே கமழும் இவள் முச்சியில் வண்டுகள் மூசா நின்றன" என்றார்.

இலங்கை உரையாசிரியர், 'எருமை நல்லேற்றினமானவை மேயலாகிய உணவென்று பசுமோரோடமோடு ஆம்பலை அலர் முதலியன இல்லாவாய்க் கெடுத்த நெருங்கிய பல சோலையிலுள்ள தாதையுண்ணும் விருப்பத்தை விட்டனவாய், இவளுடைய விரிந்த போதினை உடைய உச்சியில் வந்து படிந்து உண்ணா நிற்கும் வண்டுகள்' என்று உரை கூறுகின்றார்.

இவர் மேயல் என்பதற்கு உணவு என்று பொருள் கொள்கிறார். ஒல்லா என்றதற்கு இல்லாதனவாய்ச் செய்தன என்று பொருள் செய்கிறார். செய்த வினைய என்பதற்கு விருப்பத்தை விட்டனவாகி என்று பொருள் கொண்டார்.

Koviloor Digital Library

வெறுக்கையவாகி என்பதற்கு நெருங்கிய எனப் பொருள் கொண்டு நெருக்கத்தைப் பொழில்கள் மேல் ஏற்றினார்.

இம்மூவருமே 'தாதுண வெறுக்கைய வாகி' என்று பாடம் கொண்டு தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப உரை செய்துள்ளனர்.

ஐயர் பதிப்பில் 'தாதுண்' என்ற பாடமே உண்டு. வேறு பாடம் காட்டப்பெறவில்லை. இதற்கும் 'உண்ணும்' என்ற பெயரெச்சப் பொருளே அமையும். ஆயினும் வெறுக்கை செறிவுப் பொருளும் உடையது. எனவே 'இவளுடைய பூக்கள் நிறைந்த கூந்தலின்கண் செறிவுடன் மொய்த்தன' என்று பொருள் கொள்ளப்பட்டது.

இனி, ஔவை துரைசாமிப்பிள்ளையவர்கள் 'வெறுக்கையவாகி' என்பதற்கு, வெறுப்ப உண்டு (வெறுக்கும்படியாக) என்று பொருள் கொண்டார்.

'பல பொழில்களிலும் மலர்ந்துள்ள பூக்களின் தேனாகிய உணவை வெறுப்பவுண்டு, இவளது மலர்ந்த பூவணிந்த கூந்தலை மூசி முரலும் வண்டினம் எருமையின் நல்ல ஏற்றினம் மேய்ந்து விட்டதனால் பசிய செங்கருங்காலியும் ஆம்பலும் பொருந்தாவாயின; அவை தேனீட்டுவதாகிய வினை முற்றின; அதனால் இவ்வாறு மொய்ப்பனவாயின" என்றார்.

இவர் பொருந்துவதனை வண்டிற்கு ஏற்றி உரை செய்தமை தெளியப்படும். பொழில்களில் இருந்த செடிகொடிகளையெல்லாம் மாடுகள் தின்றுவிட்டமையின், வேறு வழியின்றித் தலைவியின் கூந்தலை வண்டுகள் நாடிச் சென்றன என்பதே பொருந்திய உரையாகும். தலைவியின் கூந்தலைச் சிறப்பிப்பதும் வண்டுகளின் மிகுதிக்குக் காரணம் கூறுவதும் ஆகிய இரு நோக்கங்கள் இதனால் நிறைவேறுதல் காண்க.

Koviloor Digital Library

மேற்கோள் : தலைவன் முயங்கினமையால் வண்டுகள் மொய்த்தல் :

உறுப்பகை பேணாது இரவின் வந்து
பொறிகிளர் ஆகம் புல்ல, தோள்சேர்பு
அறுகாற்பறவை அளவுஇல மொய்த்தலின்
கண்கோளாக நோக்கி, 'பண்டும்
இனையையோ?' என வினவினள்.

– நற். 55.

இதற்குத் தோழி வேறு காரணம் கற்பித்தல் :

'யாங்குணர்ந்து உய்குவள்கொல் என மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கு ஆயினவால்' என்றிசின் யானே!

– நற். 55.

மகளிர் பல்வேறு மலர்களைக் கூட்டிக் கூந்தற்கண் அணிதல் :

முதிரா வேனில் எதிரிய அதிரல்
பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்
நறுமோரோடமொடு உடனெறிந்தடைச்சிய
செப்பிடந் தன்ன நாற்றம் தொக்குடன்
அணிநிறம் கொண்ட மணிமருள் ஐம்பால்

– நற். 337.

குறிப்புப் பொருள் : ''எருமை ஏற்றினம் மேய்ந்தமையால் வண்டினம் மோரோடமும் ஆம்பலும் ஒல்லாவாயின என்றது, தலைவனோடு கூடியதனால் தலைமகள்பால் உற்ற வேறுபாட்டினை அவள் தமர் அறிந்து இற்செறித்தமையும், அவை தாதுண வெறுக்கையவாகி இவள் போதவிழ் முச்சி யூதும் என்றது, அயலார் தமக்குரிய செயல்மேற் செல்லாது இவளது வேறுபாட்டினைச் சூழ்ந்து அலர் கூறா நிற்பர் என்பதும் உள்ளுறுத்தவாறு.'' – ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

"இனி, இதன்கண், வண்டுகள் வறிய பொழிலை வெறுத்து இவள் முச்சி ஊதும் என்றது, சிறைப்புறத்தே நின்ற தலைவனுக்கு, தலைவியின் தமர் ஐயுற்று இற்செறித்து விட்டமையால் இவள் அவரை வெறுத்து நின் தண்ணளியொன்றையே விரும்புகின்றாள் ஆதலின் விரைந்து வரைந்து கோடல் நன்றெனக் குறிப்பாக உணர்த்திய படியாம் என்க."– பெருமழைப்புலவர்.

குறிப்பு : ஐங்குறுநூற்றின்கண், எளிதிற் புரிந்துகொள்ள இயலாத சில செய்யுட்களுள் இஃதொன்றாகும். இதற்கு இன்னும் பொருத்தமான உரை கூறச் சான்றோர் முனைவாராக.

94

மள்ளர் அன்ன தடங் கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையொடு வதியும்
நிழல் முதிர் இலஞ்சிப் பழனத் ததுவே –
கழனித் தாமரை மலரும்,
கவின் பெறு சுடர்நுதல் தந்தை ஊரே.

கூற்று : வரவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீள்கின்றான் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் திருமணத்திற்காகும் செல்வம் நாடிப் பிரிந்து சென்றான். பொருளீட்டி மீண்டுவருகையில் தலைவியின் நினைவு மீதூர இங்ஙனம் தன் உழையர்க்குச் சொல்லியது. தன் மனத்தொடு மொழிந்ததுமாம்.

உரை : அழகிய சுடர்விடும் நெற்றியைக் கொண்ட எம் காதலியின் தந்தை, நெல் வயல்களில் தாமரை மலரும் வளமான ஊரின் தலைவனாவான். அவ்வூர் வீரர் போன்ற தோற்றமுடைய கொம்புகளை உடைய ஆண் எருமைகள், அவ்வீரர்களின் துணைவியர் போலும் பெண்ணெருமைகளோடு தங்குதற்கு இடனான நிழல் செறிந்த பொய்கையினைக் கொண்ட பழனத்தை உடையது.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பெரிய வளைந்த கொம்புகளை உடைய எருமையேறுகளைப் போர் மறவர்களோடு உவமித்தான், அவற்றின் தறுகண்மை நோக்கி. படைத் தலைவன் ஒருவன் பகைவர்க்கு உடைந்த தன் படைக்கு நடுவே, தான் ஒருவனே முந்துற்று எதிரிகளை வெல்வதை எருமை மறம் என்று குறியீடு செய்கிறது தமிழ் இலக்கணம். (கூழை தாங்கிய எருமை). ஆதலின் இவ்வுவமையின் சிறப்பு உணரப்படும். இனி, அவ்வெருமைகளின் வளைந்த கோடுகள் மறவர் ஏந்திய வாள் போன்றிருத்தலும் கருதத்தக்கது. ஏறுகளை மறவரோடு உவமித்ததற்கு ஒப்ப, அவற்றின் பெண் இனத்தினை அம்மறவர் தம் பெண்டிரொடு உவமித்தான். 'நிழல்முதிர் இலஞ்சி' என்றான், நீர் நிலையின் கரையில் உள்ள மரங்கள் செறிந்த நிழலுடையனவாதலின் நீருக்குக் குறைவின்மை தோன்றுமாறு. 'இலஞ்சிப் பழனம்' என்றான் இரண்டும் அடுத்தடுத்து இருத்தலின். கழனியில் தாமரை மலரும் என்றதும் நிலத்தின் நீர் வளம் பற்றியேயாம். இங்ஙனம் நிழலும், நீரும், அந்நிழலில் எருமைகள் துணையொடு வதிதலும் கூறவே, தலைவியின் தந்தையின் செல்வச் சிறப்பும், ஊர் மக்களின் அமைதியான வாழ்வும் பெறப்பட்டன. இத்தகைய ஊரனின் மகள் தன் காதலி என்பது அவன் கொண்ட பெருமிதமாம்.

அருஞ்சொற்பொருள் : மள்ளர் – போர் மறவர்; கோடு – கொம்பு; தட – வளைந்த, பெரிய; இலஞ்சி – நீர்நிலை; பழனம் – ஊர்ப்பொது நிலம்; கவின் – அழகு; சுடர் – ஒளி.

இலக்கணக்குறிப்பு : சுடர்நுதல் – சுடரும் நெற்றியை உடைய தலைவி – அன்மொழித் தொகை. அது கவின்பெறு என்னும் அடைகொண்டது.

உள்ளுறை : எருமை துணையொடு வதியும் ஊர் என்றது, தான் இனித்தன் காதலியொடு இனிது வாழ்வான் என்னும் குறிப்பிற்று. தாமரை மலரும் என்றது, தன் வரவினால் தலைவி முகம் மலர்வாள் அல்லது ஊரார் தன்னை முகமலர்ந்து வரவேற்பர் என்னும் குறிப்பிற்றாம்.

Koviloor Digital Library

95

கருங் கோட்டு எருமை கயிறு பரிந்து அசைஇ,
நெடுங் கதிர் நெல்லின் நாள் மேயல் ஆரும்
புனல் முற்று ஊரன், பகலும்,
படர் மலி அருநோய் செய்தனன், எமக்கே.

கூற்று : உண்டிக் காலத்து மனைக்கண் வருதலும் சுருங்கி, பரத்தையரிடத்தனாய்த் தலைமகன் ஒழுகிய வழி, அவற்கு வாயிலாய் வந்தார்க்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் மனைக்கண் நெடிது வாழ்ந்தான்; அவ்வப்பொழுது உணவு வேளையில் வந்தவன் நாளாக ஆக அதனையும் அருகியே செய்தனன். அக்காலத்து அவனால் அனுப்பப்பட்ட வாயில்கட்குத் தலைமகள் சொல்லியது.

உரை : பெரிய கொம்பினை உடைய எருமை தன் கயிற்றை அறுத்துக்கொண்டு சென்று நெல்லின் நெடிய கதிரை நாட்காலையே உணவாகக் கோடற்கு இடமானதும், நீரால் சூழப்பட்டதுமான ஊரின் தலைவன் எமக்குப் பகல் வேளையிலும் நினைவு மிகுதற்கு ஏதுவான துன்பம் செய்தனன். (அத்தகையோன் பொருட்டுத் தூது வந்தது எதற்கோ?)

உரை விளக்கம் : எருமையின் கொம்பினைக் கருங்கோடு என்று சிறப்பித்தாள் பெரிய அளவிலான கொம்புகளைக் கொண்டது எருமையாதலின். 'கருங்கைக் கொல்லன்' என்றவாறு இங்குக் கருமை பெருமையாயிற்று. கயிற்றை அறுத்தது இராப்போதின் கடைப்பகுதியிலாகும். அங்ஙனம் சென்று விடியற்பொழுதில் நெற்பயிரை உண்டது என்க. ஊரன் 'பகலும் .... அருநோய் செய்தான்' என்றமையால், இராப்பொழுதெல்லாம் பரத்தையரை நுகர்ந்து அதனால் தனக்குத்துயர் செய்தவன் பகற்பொழுதில் சிலபோது வந்தான் என்பதும் பின்னர் அவ்வரவினையும் விடுத்து இப்பொழுது இரவிலன்றிப் பகலிலேயும் துயர் செய்தான் என்றும் இரங்கினாளாயிற்று.

Koviloor Digital Library

பகற்பொழுதில் அவனுக்கு உணவளித்தலிலும், பிற பணிகள் செய்வதிலும் ஓராற்றான் மன நிறைவு பெற்றதும் கழிந்தது என்பது கருத்தாகக் கொள்க' 'தச்சன் செய்த சிறுமா வையம்' என்று தொடங்கும் குறுந்தொகைச் செய்யுட் கருத்தை இதனோடு ஒப்பிடலாம். (குறுந். 61) மனம் ஒருநிலைப்படாது பல்வேறு நினைவுகளால் அலைக்கழிக்கப்படுதலைப் 'படர்மலி அருநோய்' என்றாள். 'இங்ஙனம் இரவும் பகலும் துயர் உறுமாறு யாம் செய்த பாவம் என்னை?' என்று வினவுவாளாய் இங்ஙனம் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : கருங்கோடு – பெரிய கொம்பு; பரிந்து – அறுத்து; அசைஇ – சென்று; நாள்மேயல் – நாட்காலத்து மேய்ச்சல்; மேயலார்தல் – உண்ணுதல்; புனல் முற்று (ம்) – நீர் சூழ்ந்த; படர் – நினைவு; மலி – மிகுதல்.

இலக்கணக்குறிப்பு : புனல் முற்று – மூன்றன் தொகை; பகலும் – இறந்தது தழுவிய எச்ச உம்மை.

மேற்கோள் : எருமை இராப்பொழுதில் கயிற்றை அறுத்து ஏகல் :

சேற்று நிலை முனைஇய செங்கண் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
– அகம். 46.

மனைவி கணவனுக்குப் பணிவிடை செய்து இன்படைதல் :

உற்றின்புறேஎ மாயினும் நற்றேர்ப்
பொய்கை யூரற்கு எண்மை
செய்தின்புற்றனம் செறிந்தன வளையே –
– குறுந். 61.

'எண்மை' என்பது ரா. ராகவய்யங்கார் கொண்ட பாடம்.

உள்ளுறை : இரவில் எருமை கயிற்றை அறுத்து விட்டு நெல்லின் நாண்மேயல் ஆரும் ஊரன் என்றது தலைவன் இரவில் ஒழுக்கமாகிய

Koviloor Digital Library

தளையை அறுத்தெறிந்து பரத்தையரை நுகர்ந்தான் என்னும் குறிப்பினதாகும். கயிற்றை அறுத்தல் ஈண்டு அவன் விலக்குவார்க்கு அடங்காமை குறித்தது என்பது பழைய உரை.

96

அணி நடை எருமை ஆடிய அள்ளல்,
மணி நிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகள், இவள்;
பழன ஊரன் பாயல் இன் துணையே.

கூற்று : பரத்தையர் பலரோடும் ஒழுகுதல் கண்டு பொறாதிருந்த தலைமகள், தலைமகன் மனைக்கண் புகுந்துழி, உடன்படுதல் கண்ட வாயில்கள் தம்முள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் பலரோடு உறவு கொண்டபோது தலைமகள் பெரிதும் மனம் வெதும்பியிருந்தாள். தலைவன் தன் பால் மீண்டதும் பழைய வெறுப்பினை நீக்கி அவனொடு மகிழ்ந்திருந்தாள். அதுகண்ட வாயில்கள் தம்முள் பாராட்டிக் கூறிக் கொண்டது இது.

உரை : அழகிய நடையினைக் கொண்ட எருமை குளித்து அதனாலுண்டான சேற்றில் நீலமணிபோன்ற நெய்தலும் ஆம்பலும் ஒருசேரச் செழித்து வளரும் கழனிகள் சூழ்ந்த ஊரனின் மகளாகிய தலைவி, பழனங்களிடையே உள்ள ஊரின் தலைவனான தன் கணவனுக்கு அவன் படுக்கையில் இனிய துணையாயினள். (என்னே வியப்பு!)

உரை விளக்கம் : 'அணி நடை எருமை' எனச் சிறப்பித்தனர் அதன் அசைந்த நடையினைப் பாராட்டு முகமாக. எருமை சினங்கொண்ட போதன்றிப் பிற நேரங்களில் மெதுவாக அசைந்து நடக்கும் இயல்பினது என்க.

Koviloor Digital Library

எருமைகள் சேற்றில் குளித்தலைப் பெரிதும் விரும்புவனவென்பது தெரிந்ததே. நெய்தல் மலர் நீல நிறம் கொண்டிருத்தல் பற்றி 'மணிநிற நெய்தல்' எனச் சிறப்பிக்கப்பட்டது. ஆம்பல் வெண்ணிறம் கொண்டதும் செந்நிறத்ததும் என இருவகை. கழனியூரன் மகளெனினும், அது பற்றிச் செருக்குக் கொள்ளாது, கணவனின் புறத்தொழுக்கத்தினைப் பெரிதாகக் கருதாது ஒத்துப்போயினாள் ஆகலின், 'கழனி ஊரன் மகள் இவள்' என விதந்து கூறினர். 'பாயல் இன்துணை' என்று தலைவியைக் குறித்தது, தலைவன் முன்பெல்லாம் இதனையெண்ணாது பரத்தையர் தரும் படுக்கையின்பத்தைப் பெரிதாக மதித்து ஒழுகினானே என்னும் குறிப்பினால் என்க. இன்னும், பழனவூரன் என்று தலைவனைச் சுட்டியது அவன் மார்பு பலர்க்கும் பழனம்போல் பொதுவாயினது பற்றியாம்.

அருஞ்சொற்பொருள் : அணி – அழகிய; அண்ணல் – சேறு; கலிக்கும் – செழித்து வளரும்; பாயல் – படுக்கை.

மேற்கோள் : எருமை பழனத்தில் தங்கல் :

வலிமிகு முன்பின் அண்ணல் ஏஎறு
பனிமலர்ப் பொய்கைப் பகல் செல மறுகி
. . . .
படப்பை நண்ணிப் பழனத்து அல்கும்

– அகம். 146.

எருமை ஆம்பல் மேய்தல் :

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரி மலர் ஆம்பல் மேய்ந்த நெறி மருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்து

– அகம். 316.

குறிப்புப் பொருள் : எருமை புகுந்து உழக்கிய சேற்றிலேயே அதற்குரிய உணவாகிய ஆம்பலும் நெய்தலும் மலர்ந்து அதற்கும் இன்பம் நல்குவது போலத் தலைவியும் தலைவனால்

Koviloor Digital Library

நலிவுற்றபோதும் அதனைக் கருதாமல் அவனைக் கண்டபோதே அகமும் முகமும் மலர்ந்து இன்பம் நல்குவாள் என்ற குறிப்புண்மை கண்டுகொள்க.

97

பகன்றை வால் மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்,
பொய்கை, ஊரன் மகள், இவள்;
பொய்கைப் பூவினும் நறுந் தண்ணியளே.

கூற்று : புறத்தொழுக்கமின்றியே இருக்கவும், 'உளது' என்று புலந்த தலைமகளைப் புலவி நீக்கிய தலைமகன், புணர்ச்சியது இறுதிக்கண் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன்பால் பரத்தையர் ஒழுக்கம் இல்லாத பொழுதும் உளது என்று தலைவி வருத்தமெய்திப் புலந்தாள். தலைவன் அவள் புலவியைத் தீர்த்துக் கூடினான். அக்கூட்டத்து இறுதியில் அவன் தன்னுள்ளே இங்ஙனம் கூறி மகிழ்ந்தான்.

உரை : இவள், கரிய தாளை (கால்) உடைய எருமையின் கன்று தன் தாயின் வெள்ளிய பகன்றை மலர் மிடைந்த கொம்பினைக் கண்டு அஞ்சுதற்கு இடமான பொய்கைகளை உடைய ஊரன் மகளாவாள். இவள் ஆண்டுள்ள பொய்கையில் மலரும் தாமரைப் பூவினும் தண்மையும் நறுமணமும் உடையவளாவாள். (இவளை மனையாட்டியாகப் பெற்றது எம் பேறே).

உரை விளக்கம் : 'பகன்றை வான்மலர்' என்றான் பகன்றைப்பூ தூய வெண்மை நிறத்தது ஆதலின். தன் இளமைத் தன்மையால் பூமிடைந்த கொம்பைக் கண்டு, தன் தாயினும் வேறான புதியதொரு விலங்கோ என்று அஞ்சிற்று எருமைக்கன்று.

Koviloor Digital Library

தன் மனைவியை அணைத்து இன்புற்றவனாதலின் அதனால் ஏற்பட்ட ஊற்றின்பத்தினையும், அவள் சூடியிருந்த மலர்கள், நறுமணச்சாந்து முதலியவற்றின் இனிய மணத்தையும் குறித்துப் பொய்கைப்பூவினும் நறுந்தண்ணியள் என்றான். ஈண்டுப் பூவென்பது தாமரை மலரை எனக் கொள்க. பொய்கையூரன் மகள் என்பதற்கேற்பப் பொய்கைப்பூவினும் தண்ணியள் என்றான்.

அருஞ்சொற்பொருள் : வால்மலர் – வெள்ளியமலர்; மிடைந்த – சிக்கிய; வெரூஉம் – அஞ்சும்.

இலக்கணக்குறிப்பு : பூவினும் – உம்மை உயர்வு குறித்தது.

மேற்கோள் : எருமை பகன்றை சூடி வருதல் :

எருமைச் சுவல்படு முதுபோத்து . . . .
குரூஉக் கொடிப் பகன்றை சூடி . . . . ''
– அகம். 316.

தலைவியின் தண்மைக்கு மலரின் தண்மை உவமை :
ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே
– குறுந். 84.

உள்ளுறை : தாயெருமையின் கோட்டிற்கிடந்த மாலையைக் கண்டு கன்று வெரூஉம் என்றது, தலைவன் மார்பிற்கிடந்த மாலையை வெளியே பிறர் அணிந்த மாலையெனப் பிழைபட உணர்ந்து தலைவி வெருஉந்தாள் என்ற உள்ளுறை கொண்டது.

Koviloor Digital Library

98

தண் புனல் ஆடும் தடங் கோட்டு எருமை
திண் பிணி அம்பியின் தோன்றும் ஊர!
ஒண் தொடி மட மகள் இவளினும்
நுந்தையும் ஞாயும் கடியரோ, நின்னே?

கூற்று : புறத்தொழுக்கம் உளது ஆகிய துணையானே புலந்து வாயில் நேராத தலைமகள் கொடுமை தலைமகன் கூறக்கேட்ட தோழி அவற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தன்பால் பரத்தையர் தொடர்பு உண்டு என்று அறிந்த அளவிலேயே அதற்காகப் புலவி கூர்ந்து வாயில் நேராத தலைவியின் கடிய தன்மையைத் தலைவன் கூறக்கேட்ட தோழி அவள் அவனை இடித்துத் திருத்தும் உரிமை உடையவள் என்பதுபடச் சொல்லியது.

உரை : குளிர்ந்த நீரிலே ஆடுகின்ற பெரிய கொம்புகளை உடைய எருமை பார்வைக்குத் திண்மையாகக் கட்டப்பட்ட படகு போல் தோற்றமளிப்பதற்கு இடமான ஊரனே! ஒளி உமிழும் தொடியினை அணிந்த மடப்பம் பொருந்திய பெண்ணாகிய இவளைக் காட்டிலும், நின் தாயும் தந்தையும் நின்னிடம் கடுமையானவராய் இருத்தற்கு உரியவரோ? (இல்லை).

உரை விளக்கம் : திண்பிணி அம்பி போல எருமை தோன்றும் என்றாள், எருமை நீரிற்குளிக்கும் பொழுது நெடுநேரம் ஒரே இடத்திலே கிடத்தல் பற்றி. தன்பால் பரத்தைமை கண்ட அளவிலேயே தான் பொறாமையைக் கடிதாகக் காட்டினள் என்பதற்காகத் தன்பால் குறை கூறினான் தலைவனாதலின், அவள் அவன்பால் கடுமை காட்டுவது உரிமை பற்றியது என்றும், அவ்வுரிமை, அவனிடம் அவன் பெற்றோர்க்குளதாகிய உரிமையினும் சிறந்தது என்றும் கூறினாள்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : தடங் கோடு – பெரிய கொம்பு, வளைந்த கொம்பு; திண்பிணி – உறுதியாகக் கட்டப்பட்ட; அம்பி – ஓடம்; படகு; நுந்தை – உன் தந்தை; கடியரோ – கடுமை உடையவரோ; நுந்தை – உன் தந்தை; ஞாய் – உன் தாய்.

இலக்கணக்குறிப்பு : தட – உரிச்சொல்; அம்பியின் – இன் ஒப்புப்பொருள் தரும் ஐந்தன் உருபு; கடியரோ – ஓகாரம் எதிர்மறை; ஞாய் – நின்தாய் என்பது பட நின்றது.

மேற்கோள் : எருமை அம்பிபோல் தோன்றல் :
மரை ஏற்றின் மேலிருந்து ஆடித்
துறையம்பி ஊர்வான்போல் தோன்றுமவன்
– கலி. 104.

குறிப்புப் பொருள் : எருமை அம்பிபோல் தோன்றும் என்றது, பலரும் ஏறிப் பயணம் செய்யும் படகுபோல் தலைவன் பலமகளிர்க்கு உரியனாயினன் என்னும் பொருள் தந்தது.

99

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை,
கழனி எருமை, கதிரொடு மயக்கும்
பூக் கஞல் ஊரன் மகள், இவள்;
நோய்க்கு மருந்து ஆகிய பணைத் தோளோளே.

கூற்று : தோழி முதலாயினோர் தலைமகன் கொடுமை கூறி விலக்கவும், தலைமகள் வாயில் நேர்ந்துழி, அவன் உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனிடம் புறத்தொழுக்கம் இருந்தமையால், தோழி முதலியோர் தலைவிக்கு அதனைச் சொல்லி, அவனுக்கு வாயில் நேர்தலை விலக்கினர். ஆனால் அன்பு

Koviloor Digital Library

மிகுதியால் அவள் வாயில் நேர்ந்தாள். அப்போது தலைவன் இங்ஙனம் உவப்புடன் கூறினான்.

உரை : பழனங்களில் வளரும் பாகற் கொடியிடையே அமைந்த முயிறுகள் நெருங்கி உறையும் கூடுகளை, அங்கேயுள்ள கழனிகளில் மேயும் எருமைகள் நெற்கதிர்களோடு சேரச் சிதைத்தற்கு இடமானதும், பூக்கள் நிரம்பியதுமான ஊரனுக்கு இவள் மகளாவாள். இவள் யானுற்ற காம நோய்க்கு மருந்தாகும் பருத்த தோள்களையுடையவள்.

உரை விளக்கம் : முயிறாவது எறும்பு வகைகளுள் ஒன்று. 'முசுடு' எனப் பேச்சு வழக்கில் இதனைச் சுட்டுவர். இம்முயிறுகள் மரங்களிலும் செடிகளிலும் கூடமைத்து வாழும். இதன் கடி கடுப்புத் தன்மை கொண்டது. பாகற்கொடிகளில் முயிறுகள் கூடுகட்டி வாழ்ந்தன என்றது அக்கொடிகளின் அடர்த்தி நோக்கியாகும். பழனமும் வயலும் அடுத்தடுத்திருத்தலின் பழனப் பாகல் வயலில் இருந்து நெற்பயிர் மீதும் படர்ந்தது. இதனால் எருமை அவ்விரண்டையும் ஒரே நேரத்தில் சிதைக்க ஏதுவாயிற்று. தலைவியின் பருத்த தோள்கள் தாம் உண்டாக்கிய காம நோய்க்குத் தாமே மருந்தும் ஆயின என்பான், 'நோய்க்கு மருந்தாகிய பணைத்தோள்' என்றான். ஏனெனில் அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்தாகலான். 'களவுக்காலத்தில் என் நோய்க்கு மருந்தான இவள் பருத்த தோள்கள், இப்பொழுதும் மருந்தாகின்றன' என்று பாராட்டினான் என்க. வாயில்கள் விலக்கியதையும் பொருட்படுத்தாமல் தன்னொடு கூடி மகிழ்ந்த பெருந்தகைமை நோக்கி அவளைப் பாராட்டும் முகமாக அவள் தோள்களைப் பாராட்டினான் என்க.

அருஞ்சொற்பொருள் : பழனம் – ஊர்ப்பொது நிலம்; கழனி – நெல்வயல்; மூசு – மூசுகிற, மொய்க்கிற; குடம்பை – கூடு; மயக்கும் – உடன் தின்று அழிக்கும்; கஞலுதல் – நெருங்குதல்; பணை – பருத்த, மூங்கிலுமாம்; முயிறு – ஒருவகை எறும்பு.

Koviloor Digital Library

மேற்கோள் : பாகலில் முயிறு கூடமைத்தல் :

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை
கழனி நாரை உறைத்தலின் செந்நெல்
விரவு வெள்ளரிசியின் தாஅம் ஊரன்

– அகம். 255.

நோயும் மருந்தும் தானாதல் :

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து

– திருக். 1102

மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
. . . .
கல் கெழு கானவர் நல்குறு மகளே

– குறுந். 71.

உள்ளுறை : முயிறு மூசு குடம்பையை நெற்கதிரோடு எருமை மயக்கும் என்றதால், தான் செய்த கொடுமையையும், வாயில்கள் அவள்மேற் செலுத்திய அன்பையும் அழித்துத் தனக்கு நலஞ்செய்தாள் எனத் தலைவன் மகிழ்ந்தமை உள்ளுறுத்தப்பட்டது.

100

புனலாடு மகளிர் இட்ட ஒள் இழை,
மணல் ஆடு சிமையத்து, எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகள், இவள்;
பாணர் நரம்பினும் இன் கிளவியளே.

கூற்று : வாயில் நேர்தற்பொருட்டு முகம் புகுவான் வேண்டி இயற்பழித்துழி, தலைமகள் இயற்பட மொழிந்த திறம் தலைமகற்குத் தோழி சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் உறவு மேற்கொண்டிருந்த பொழுது, தோழியிடம் வந்து தன் மனைவியோடு மீண்டும் கூட உதவி வேண்டினான். அதற்கு இணங்கிய தோழி, தன் தோழியிடம் சொல்லாடி, அவள் மனநிலையறிய அவன்பால் குறையிருப்பதாகப் பேசினாள். அப்போது தலைவி அதனை மறுத்து அவன் நற்பண்புகளைப் பாராட்டினாள். இதனைத் தோழி தலைவனிடம் இப்படிக் கூறினாள்.

உரை : நீர் நிலையில் ஆடிய பெண்கள் முன்னேற்பாடாக மணற் குவியலில் இட்டு வைத்த தம் ஒளிமிக்க அணிகளை, அம்மணற்குன்றுகளின் மேல் நின்று எருமைகள் தம் கொம்புகளாலும் குளம்புகளாலும் வெளிப்படுத்தும் புதிய வருவாய்களைக் கொண்ட ஊரன் மகளான இவள், பாணரின் யாழ் இசையினும் மேலாம் இனிய சொல்லைப் பேசுபவள்.

உரை விளக்கம் : நீராடும் மகளிர் எளிதில் கழலத்தக்க தம் அணிகளைக் கரையிலே பாதுகாப்பாக வைத்துச் செல்வது இயல்பாதலின் 'புனலாடு மகளிர் இட்ட ஒள்ளிழை' என்றாள். 'மணலாடு சிமைய' என்றமையின் அந்நிலத்தே பாயும் ஆற்றின் பெருமையும், அதன் கரைக்கண்ணுள்ள மணற் குவியலின் உயர்ச்சியும் தோன்றும். மாடுகள் கோட்டால் மண்ணைக் குத்திக் கிளறுவது உண்டாதலின் 'எருமை கிளைக்கும்' என்றான். பாணர் நரம்பு என்றது அதிலிருந்து எழும் இசையை.

தோழி தன்னைப் பாணனாகவும், தன் சொற்களைப் பாணன் யாழ்தரும் இசையாகவும் கற்பித்து, தன்னை மறுத்துத் தலைவன் சிறப்பினை எடுத்துரைத்த தலைவியின் சொற்களை அப்பாணன் யாழ் இசையினும் இனியன என்றாள். தான் தலைவனைத் தலைவியொடு கூட்டவே இயற்பழித்தாளாதலின், தன் எண்ணம் ஈடேறும்வகையில் தன் தோழி இயற்படமொழிந்தது அவளுக்கு இன்பம் செய்தது என்க.

அருஞ்சொற்பொருள் : ஒள்இழை – ஒள்ளிய அணிகள்; சிமை – உச்சி; கிளவி – சொல்; யாணர் – புது வருவாய்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : நரம்பு – நரம்பிடத்துள்ள இசையைக் குறித்தலின் ஆகுபெயர்.

மேற்கோள் : மகளிர் அணிகளைக் கரையிலிட்டு நீராடல் :
வண்டலாயமொடு ஒண்டுறை தலைஇப்
புனலாடு மகளிர் இட்ட பொலங்குழை
இரை தேர் மணிச்சிரல் இரை செத்து எறிந்தென
– பெரும். 311 – 13.

மாடுகள் தம் கோட்டால் மண்ணைக் குத்துதல் :
மண்ணுடைக் கோட்ட அண்ணல் நல்லே எறு
– அகம். 64 : 11

பெண்ணின் குரலுக்கு யாழ் இசை உவமையாதல் :
– குறுமகள்
நரம்பு ஆர்த்தன்ன தீம்கிளவியளே.
– ஐங். 185 : 3 – 4.

உள்ளுறை : நீராடு மகளிர் இட்ட ஒள்ளிழை மணலில் மறைந்து கிடந்தவற்றை எருமை கிளைக்கும் என்றதனால், இப்பொழுது வாயில் நேர்தலேயன்றிக் களவுக்காலத்தில் நீ செய்த நன்மை மறைந்தனவற்றையும் எடுத்துக் கூறினாள் என்பது பெறப்பட்டது. (பெருமழைப்புலவர்)

எருமைப் பத்து முற்றிற்று

மருதம் முற்றிற்று

ஓரம்போகியார்

Koviloor Digital Library

இரண்டாவது

நெய்தல்

(அம்மூவனார்)

11. தாய்க்கு உரைத்த பத்து

தோழி தன் தாயாகிய செவிலிக்குக் கூறும் வகையில் அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி தாய்க்குரைத்த பத்தாயிற்று.

101

அன்னை, வாழி! வேண்டு, அன்னை!
உதுக்காண் –
ஏர் கொடிப் பாசடும்பு பரிய ஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று, நின் மகள்
பூப்போல் உண்கண் மரீஇய
நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே.

கூற்று : அறத்தொடு நின்ற பின்னர் வரைதற்பொருட்டுப் பிரிந்த தலைமகன் வரைவோடு புகுந்தவழித் தோழி செவிலிக்குக் காட்டிச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : அறத்தொடு நின்றபிறகு தலைமகன் திருமணத்திற்கு வேண்டிய பொருள் தேடப்பிரிந்தான். அவன் பொருளோடு மீண்டு வருதலைக் கண்ட தோழி, அவன் வரவினைத் தன் தாய்க்குக் காட்டிக் கூறியது இது.

உரை : அன்னையே, நீ வாழ்க! யான் சொல்வதை விரும்பிக் கேள். நின் மகளின் பூப்போன்ற, மையுண்ட கண்களை இப்பொழுது பொருந்தியுள்ள நோய் தீர்வதற்கு மருந்தாக அமையும் கொண்கனுடைய தேர், எழுச்சியுடைய பசிய அடம்பங்கொடிகள் அறுந்து போகும் வண்ணம் ஊர்ந்தும், பின்னர்ப் பள்ளத்தே இறங்கி நெய்தற்செடிகளைச் சிதையச் செய்தும் வருகின்றது. அதனை நீ காண்பாயாக.

உரை விளக்கம் : அறத்தொடு நின்ற பின்னர்ப் பிரிந்து சென்ற தலைவன் விரைய வந்து தன் மகளை மணந்து கொள்வானோ மாட்டோனோ என மனம் தடுமாற்றமுற்று வருந்தினள் தாயாதலின், 'நின் வருத்தமெல்லாம் ஒழியுமாறு தலைவன் வருவதனை நீயே பார்' என்பாளாய், 'உதுக்காண்!' என்றாள் தோழி என்க. 'ஏர் கொடி' அழகான கொடியும் ஆம். அடம்பு என்பது நெய்தல் நிலத்திற்குரியது. அதன் பூக்கள் தேர்மணிகள் போல் தோன்றும். இலைகள் மாட்டின் குளம்புபோல் தோன்றும். கடற்கரையில் மேடான பகுதியில் வளர்ந்திருந்த அடம்பின்மீது ஏறிய தேர், பின்னர்க் கழிப்பகுதியான பள்ளத்தில் இறங்கி ஊர்ந்ததாதலின், 'ஊர்பு இழிபு நெய்தல் மயக்கி' என்றாள். இதனால் கடற்கரையில் தேரூர்தலில் உள்ள இடர்ப்பாட்டைச் சுட்டினாளாம். சுட்டவே, தலைவன் திருமணத்திற்காக அரும்பாடுபட்டு வருதலைத் தோழி உணர்த்தினாளாயிற்று. தலைவியின் கண்ணைப் 'பூப்போல் உண்கண்' என்றாள், அது குவளை மலர்போல இருந்தமையால். அங்ஙனம் இருந்த கண்களில், தலைவன் பிரிவால் ஏற்பட்ட துயரம் இப்பொழுது வெளிப்பட்டது என்பாள் 'உண்கண் மரீஇய நோய்' என்றாள். தலைவன் உறுவித்த நோய்க்கு அவனே மருந்தாதலின் 'நோய்க்கு மருந்தாகிய கொண்கன்' என்றாள். இனி 'மருந்தாகிய' என்பதனைத்

Koviloor Digital Library

தலைவன் தேர்க்கு ஏற்றி உரைப்பினும் பொருந்தும். 'நோய்க்கு மருந்தாகிய கொண்கன் தேர் வந்தன்று' எனக் கொள்க.

இனி நின் துயரும், நின் துயர்க்குக் காரணமாய் இருந்த நின் மகள் துயரமும் நீங்கும் என்றாள் என்க.

அன்னையை இருமுறை விளித்தாள் மகிழ்ச்சியின் மிகுதியை வெளிக்காட்ட.

அருஞ்சொற்பொருள் : ஏர்கொடி - எழுச்சியை உடைய கொடி, அழகிய கொடி; பாசடும்பு - பசிய அடும்பு; பரிய - இற்றுப்போகும்படி; ஊர்பு - ஊர்ந்து, இழிபு - இழிந்து; மயக்கி - சிதைத்து; வந்தன்று - வருகின்றது; மரீஇய - பொருந்திய.

இலக்கணக்குறிப்பு : உது - இடைச்சுட்டு; பாசடும்பு - பண்புத்தொகை; ஊர்பு, இழிபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்; நோய்க்கு மருந்து - குவ்வுருபு பகைப்பொருட்டு.

மேற்கோள் : தலைவன் தேர் அடும்பைச் சிதைப்பது :

ஒண்பல் மலரக் கவட்டிலை அடும்பின்
செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
- அகம். 80.

உள்ளுறை : கொண்கன் தேர் அடும்பு பரிந்து நெய்தல் மயக்கி வந்தது என்பது, தலைமக்களின் களவு உறவு பற்றிய ஊர்மக்களின் அம்பலும் அலரும் கெடும் வண்ணம் தலைவன் வரைவொடு வந்தான் என்பதனை உள்ளுறுத்தது.

இனி இதற்குக் 'களவிற்கூட்டம் வெளிப்பட்டபின்பும் வரையாது பிரிந்தானென்று அலர் கூறுவார் வருந்த வந்தான்' என உள்ளுறை கூறுவார் பழைய உரையாசிரியர்.

இது நெய்தலிற் குறிஞ்சி வந்த திணைமயக்கம்.

(தொல். பொருள். 12 நச்சி.)

Koviloor Digital Library

102

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – நம் ஊர்
நீல் நிறப் பெருங் கடற் புள்ளின் ஆனாது,
துன்புறு துயரம் நீங்க,
இன்புற இசைக்கும், அவர் தேர் மணிக் குரலே.

கூற்றும் விளக்கமும் மேலன.

உரை : அன்னையே, நீ வாழ்க! அன்னையே, நான் சொல்வதனை விரும்பிக்கேள்! நீயும் நின் மகளும், யானும் இடைவிடாது வருந்தும் துயரம் நம்மை விட்டு நீங்கியொழியும் வண்ணம் தலைவர் ஊர்ந்து வரும் தேரிற் கட்டிய மணிகளின் இனிய ஒலி, நம்மூரிலுள்ள நீல நிறம் கொண்ட பெரிய கடற்கரையில் வாழும் பறவைகள் ஒலித்தாற் போல இடையறாது ஒலிக்கின்றது. (அதனைக் கேட்டு மகிழ்வாயாக!).

உரை விளக்கம் : 'தேர்மணிக்குரல் ஆனாது புள்ளின் ஒலிக்கும்' என்றும், 'ஆனாது துன்புறு துயரம் நீங்க' என்றும் ஆனாது என்றதை ஈரிடத்தும் இசைத்துப் பொருள் கொள்க. தேர்மணியொலி, பறவைக்கூட்டத்தின் ஒலிபோலக் கேட்கும் என்றது, கூட்டமாகக் கூடியொலித்தலுக்கும், இனிமைக்கும், பொருத்தமாக அமையும் உவமையாகும். 'நம் மூர்க் கடல்' என்றது, 'நாம் அன்றாடம் கேட்கும் பறவையொலி போல் தேர்மணி ஒலிக்கும்' என்ற பொருளில் ஆகும். இனி, 'ஊரலர் அஞ்சாது நம்மூர்த் தெருவில் வருவது காண்பாயாக!' என்று மகிழ்ந்துரைத்தாள் என்றும் கொள்க. 'இதுவரையில், நம்மூர்ப் பெண்டிர் அப்பறவைகள் போல இடைவிடாது பழி தூற்றினர். இப்பொழுது அவர்கள் வாயடங்கும் வண்ணம் அவர் தேர்மணி அப்பறவைகள் போல ஒலிக்கின்றது' என்றாள் எனலும் பொருந்துவதாகும்.

Koviloor Digital Library

துன்புறு துயரம், தலைவன் வருவானோ வாரானோ என்று கலங்கிய கலக்கமாகும்.

இதுகாறும் நள்ளிரவிலும் கடற்புள்ளொலியை அவர் தேர்மணியோ என ஐயுற்று எதிர்பார்த்த நிலையெலாம் இனி நீங்கிற்று என்றாளுமாம்.

நாம் துன்புறும் வண்ணம் இசைத்த பழிமொழி அடங்குமாறு, இப்பொழுது தேர்மணி நாம் இன்புறுதற்பொருட்டு இசைத்தது என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : புள்ளின் – பறவைகள் போல; இசைக்கும் – ஒலிக்கும்; குரல் – ஓசை; ஆனாது – இடைவிடாது.

இலக்கணக்குறிப்பு : அன்னை – ஈரிடத்தும் விளி; புள்ளின் – 'இன்' ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புப் பொருளில் வந்தது; துன்புறு துயரம் – வினைத்தொகை; இன்புற – செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

மேற்கோள் : தேர்மணியொலிக்குப் புள்ளொலி உவமையாதல் :

நள்ளென் யாமத்தும் கண்படை பெறேஎன்,
புள்ளொலி மணி செத்து ஓர்ப்ப
– நற். 178.

நள்ளென் கங்குல் புள்ளொலி கேட்டொறும்
'தேர்மணித் தெள்ளிசைகொல்' என
ஊர் மடி கங்குலும் துயில் மறந்தேனே
– நற். 287.

Koviloor Digital Library

103

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! –
புன்னையொடு
ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்
இவட்கு அமைந்தனனால் தானே;
தனக்கு அமைந்தன்று, இவள் மாமைக் கவினே.

கூற்று : அறத்தொடு நின்ற தோழி, வதுவை நிகழா நின்றுழி, தாய்க்குக் காட்டி உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவி கற்புக் கடம் பூண்டிருத்தலைத் தன் அன்னைக்கு அறத்தொடு நின்று உறுதிப்படுத்தி, களவு கற்பாக முடியுமாறு செய்தமையால், திருமணம் கைகூடிற்று. அந்நிலையில், அம்மகிழ்ச்சியை வெளிப்படுத்துவாளாய், இனித் தலைவியின் மாமை தலைவனுக்கே உரிமையாயிற்று என்று கூறி உவந்தது.

உரை : அன்னையே! நீ வாழ்க. அன்னாய்! யான் கூறுவதனைக் கேட்பாயாக! புன்னையோடு ஞாழலும் பூத்து மணம் பரப்பும் குளிர்ந்த கடற்றுறையை உடைய தலைவன் என் தோழியும் நின் மகளுமாகிய இவளுக்கு என்றே அமைந்தவனாவான். அவன் இவட்கு என அமைந்தாற் போலவே, இவளுடைய மாமையாகிய கவினும் அவனுக்கு என்றே அமைந்ததாயிற்று.

உரை விளக்கம் : புன்னையும் ஞாழலும் நெய்தல் நிலத்துக்கு உரியன. அவை இரண்டும் ஒருசேரப் பூத்து அழகு செய்யும் கடற்றுறையின் தலைவன் என்றது, அவன் பெருமிதமும் புகழும் உலகறிந்தவை என்ற பொருளிலாகும். இவட்கு அமைந்தவன் என்றது, இவளுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டவன் என்னும் பொருள்பட நின்றது. தலைவியின் மாமைக்கவினுக்கும் இப்பொருளே கொள்க. பண்டைப்பிறப்பினும் இவர்கள் ஒருவர்க்கொருவர் பொருந்தி அமைந்தவாறு இப்பிறப்பிலும் பொருந்த ஊழே துணை நின்றது என்பதாகும்.

Koviloor Digital Library

அமைவு பொருத்தமாதலின் தலைவன் இவளுக்கும், இவள் தலைவனுக்கும் பொருத்தமானோர் என்றும் பொருள் கொள்ளலாம். இவள் மாமைக்கவினை நுகர்தற்குரியார் தலைவனைத் தவிரப் பிறர் யாராகவும் இருக்க முடியாது என்று உவந்து கூறினாளாம்.

அருஞ்சொற்பொருள் : ஞாழல் – புலி நகக் கொன்றை; அமைந்தனன் – உரு, நலன் முதலியவற்றால் தலைவிக்குப் பொருந்தினான்; இவட்கென்றே அமைந்தவன்; அமைந்தன்று – ஒத்தது; ஊழால் அமைக்கப்பட்டது; மாமைக்கவின் – மாமையாகிய பேரழகு.

இலக்கணக்குறிப்பு : ஆல், தானே – அசைகள்.

மேற்கோள் : கடற்கரையில் புன்னையும் ஞாழலும் செழித்திருத்தல் :

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
ஒள்ளிணர் ஞாழல் முனையின், பொதியவிழ்
புன்னையம் பூஞ்சினைச் சேக்கும் துறைவன்
– ஐங். 169.

உள்ளுறை : புன்னையொடு ஞாழல் பூக்கும் என்றது குடிப்பிறப்பும் உருவும் நலனும் ஒத்தல் கூறியவாறு. (பழையவுரை)

104

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – நம் ஊர்ப்
பலர் மடி பொழுதின், நலம் மிகச் சாஅய்
நள்ளென வந்த இயல் தேர்ச்
செல்வக் கொண்கன் செல்வனஃது ஊரே.

கூற்று : புதல்வற் பெற்றுழித் தலைமகன் மனைக்கண் சென்ற செவிலிக்கு, முன்பு அறத்தொடு நின்று வதுவை கூட்டிய தோழி, அவன் ஊர் நன்மை காட்டிச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவி கற்புக்கடம் பூண்டதைத் தன் தாய்க்கு வெளிப்படுத்தி, திருமணம் இனிதே நிறைவேற உதவினாள் தோழி. திருமணம் முடிந்து, தலைவி மகவு ஈன்றது அறிந்து, செவிலி தன் மகள் வீடு சென்று வந்தாள். அவளிடம் தோழி தலைவன் ஊர் நலனைப் பாராட்டிச் சொல்லியது இது.

உரை : அன்னையே, நீ வாழ்க! தாயே, யான் கூறுவதனை விரும்பிக்கேள். களவுக் காலத்திலே, நம் ஊரில் வாழ்வார் யாவரும் ஆழ்ந்து உறங்கும் நடு யாமத்தில், தன் மேனி அழகெல்லாம் மங்குமாறு, இயலிச் செல்லும் தன் தேரின் மீது ஏறி வருதலை வழக்கமாகக் கொண்டிருந்த செல்வச் செழிப்புக்குரிய கொண்கனான நம் தலைவனின் செல்வனுக்குரிய ஊர் அதுவாகும்.

உரை விளக்கம் : தலைவன் பலரும் உறங்கும் நள்ளிரவில், தன் நலம் கெடும்படியாகத் தலைவியைக் காணும் பொருட்டாகப் பலகாலும் வந்தவன் என்று கூறியது, அவனுடைய மெய்யன்பையும், மேன்மைப் பண்பையும் பாராட்டும் நோக்கில் ஆகும். அத்தகையவன் இப்பொழுது ஒரு மகனுக்குத் தந்தையானான் என்றும், தலைவிக்குத் தாய்மைப் பேறு கொடுத்த பெருந்தகையென்றும் பாராட்ட, 'செல்வக் கொண்கன்' என்றாள். கடற்கரை நாட்டுக்குரிய செல்வம் மிக்கவன் இப்பொழுது அரும்பெறற் புதல்வனைப் பெற்ற செல்வனானான் என்பது குறிப்பு. 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை' என நாயனார் மக்கட் செல்வத்தைப் புகழ்ந்தமையாலும், படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும் பெருஞ்செல்வர்க்கும், மயக்குறு மக்களைப் பெறாத போது யாதொரு பயனும் இல்லையாதலாலும் இங்ஙனம் கூறினாளாம். பண்டெல்லாம் தலைவனுக்கே உரியதாக இருந்த கடற்றுறை நாடு, இனி அவன் பெற்ற செல்வனுக்கு உரியதானமை பற்றி, 'கொண்கன் செல்வனஃது ஊர்' என்றாள் என அறிக. நலம் மிகச்சாஅய் நள்ளென் கங்குலில் வந்தவன் இப்பொழுது மகனைப் பெற்ற சிறப்பினால் பல நலனும் வாய்க்கப் பெற்றான் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பலர்மடி - பலரும் துயிலில் ஆழ்ந்திருக்கத்தக்க; சாஅய் - வாடி; நள்ளென் - நள்ளென்னும் ஓசை உடைய; இயலுதல் - அசைதல்; செல்வன் - மகன்.

இலக்கணக்குறிப்பு : மடிபொழுது, இயல்தேர் - வினைத் தொகைகள்.

மேற்கோள் : தலைவன் களவுக்காலத்தில் ஊர்மடி பொழுதில் தேரூர்ந்து போதல் :
கடுமாப் பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கன்
- நற். 149.

செவிலி தலைவன் இல்லம் சென்று பார்த்து வருவது :
ஐங்குறு நூற்று முல்லைப்பகுதியின் முதற்பத்து இப்பொருள் பற்றியது. (401 - 410)

105

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! - முழங்கு கடல்
திரை தரு முத்தம் வெண் மணல் இமைக்கும்
தண்ணம் துறைவன் வந்தென,
பொன்னினும் சிவந்தன்று; கண்டிசின் நுதலே.

கூற்று : *அறத்தொடு நின்றபின் வேண்டுவன தருதற்குப் பிரிந்த தலைமகன் வரைவொடு வந்துழி, தலை மகள் நுதற்கண் முன்புள்ள பசப்பு நீங்கும் வண்ணம் தோன்றிய கதிர்ப்புக் காட்டி, செவிலிக்குத் தோழி சொல்லியது.*

கூற்று விளக்கம் : *தோழி தலைமகள் கற்புக்கடம் பூண்டமையைத் தன் தாய்க்கு முறைப்படி வெளிப்படுத்திய பின்னர், தலைவன்*

Koviloor Digital Library

திருமணத்திற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டிக் கொண்டு திரும்பினான். தலைவன் வரைவிற்குரிய ஏற்பாட்டுடன் வந்தமையால் தலைவியின் பசப்பு நீங்கிற்று; உடல் பூரித்தது. அதனைத் தன் தாய்க்குக் காட்டித் தோழி சொல்லியது.

உரை : அன்னையே! நீ வாழ்க! அன்னாய்! யான் கூறுவதனை விரும்பிக்கேள். முழக்கத்தினைச் செய்யும் கடலின் திரைகள் கரைமீது எறிந்த முத்தம் வெண்ணிறமுடைய மணற் பரப்பிலே கிடந்து மின்னுதற்கு இடமான குளிர்ந்த, அழகிய நீர்த்துறைக்குத் தலைவன் வந்தமையால், என் தோழியின் நெற்றி பொன்னைவிடச் சிறப்பாகச் சிவந்தது. அதனைக் காண்பாயாக.

உரை விளக்கம் : முத்துக் குளிப்பார் மூச்சடக்கி அரிதாகக் கொணரத் தக்க முத்துக்கள் தலைவன் நாட்டில் மனித முயற்சி சிறிதும் இன்றியே கிடைக்கும் என்றது தலைவன் நாட்டின் வளத்தைப் பாராட்டியதாகும். முத்துக்கள் திரையினால் அலைக்கப்பட்டு வரும் என்பது,

> 'புலவுப் பொருது அழிந்த பூநாறு பரப்பின்
> இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்'
>
> – அகம். 130.

என்பதனாலும் அறியப்படும்.

'தண்ணந்துறைவன்' என்றாள், தன் துறைபோல் தானும் தண்மையான பண்புடையன் என்ற பொருள்பட. தலைவன் வந்த உடனே தலைவியின் நுதற்பசப்பு நீங்கிற்றாதலின் 'வந்தெனப் பொன்னினும் சிவந்தன்று' என்றாள். தலைவன் பிரிந்த அக்கணமே பசந்த நெற்றி, இப்பொழுது அவன் வந்த அக்கணமே ஒளிபெற்றது. நெற்றியின் ஒளி மிகுதி கூறுவாள் 'பொன்னினும்' என்றாள். 'கண்டிசின்' என்று தாயை வேண்டியதன் பொருளாவது, 'இதுகாறும் பசந்து கிடந்த நின் அன்பு மகளின் நெற்றி இப்பொழுது எவ்வளவு பொலிந்து தோன்றுகின்றது பார்!' என்ற பொருளை விளக்கிற்று என்க. 'சுடச் சுடரும் பொன் போலாது,

Koviloor Digital Library

கண்ட மாத்திரத்தே சிவந்து ஒளிர்வதாயிற்று என்றற்குப் பொன்னினும் என்றும் கூறினாள்' என்பது ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையின் அழகிய விளக்கமாகும்.

அருஞ்சொற்பொருள் : இமைக்கும் - ஒளிவிடும்; வந்தென - வந்தவுடனேயே; சிவந்தன்று - சிவந்தது.

இலக்கணக்குறிப்பு : முழங்கு கடல், தருமுத்தம் - வினைத் தொகைகள்; வந்தென - செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; பொன்னினும் - உம்மை உயர்வு சிறப்பும்மை; கண்டிசின் - முன்னிலை ஒருமை வினைமுற்று; இசின் - முன்னிலையசை.

உள்ளுறை : ஓதத்தால் அலைப்புண்டு போந்த முத்தம் மணற்கண்ணே கிடந்து விளங்குமென்றது தன் வருத்தம் நோக்காது நமக்கு நிலைநின்ற இன்பத்தைத் தருவான் என்றவாறு என்பது பழையவுரை. 'கடற்றிரை தருமுத்தம் வெண்மணல் மேற்கிடந்து இமைக்கும் என்றது, எம்பெருமான் செய்த தண்ணளி தலைவியின் திருமேனியின்கண் புத்தொளிசெய்து இனி என்றென்றும் பேரின்பம் நல்கும்' என்று காட்டுவார் பெருமழைப்புலவர்.

இனி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'கடல் திரையால் தரப்பட்ட முத்தம் வெள்ளிய மணலின்கண் கிடந்து விளங்கும் என்றது, நொதுமலர் வரைவினால் உளதாய முனிவு, தலைமகன் பிரிவு பற்றி வண்ணம் வேறுபட்ட நுதற்கண் தோன்றுவதாயிற்று' என்று உள்ளுறை காண்பார்.

Koviloor Digital Library

106

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – அவர்
நாட்டுத்
துதிக்கால் அன்னம் துணை செத்து மிதிக்கும்
தண் கடல் வளையினும் இலங்கும் இவள்
அம் கலிழ் ஆகம் கண்டிசின் நினைந்தே.

கூற்று : அறத்தொடு நின்ற தோழி அது வற்புறுப்பான் வேண்டிச் செவிலிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் மேனி வேறுபாடு கண்டு வருந்திய தாய்க்கு, உரிய நேரத்தில் தலைவி உற்ற நோய்க்குக் காரணம் காதலே என்ற உண்மை வெளிப்படுத்தினாள் தோழி. அதன்பின்னும் தெளிவடையாத தன் தாய்க்குத் தான் சொன்னதே உண்மை என வற்புறுத்தும் பொருட்டு அவள் சொல்லியது.

உரை : தாயே! நீ வாழ்க. தாயே! யான் சொல்வதனை விரும்பிக் கேள். தலைவர் நாட்டில் வாழும் தோலடியைக் கொண்ட அன்னம், (தன் காமம் மிகுதியால்) குளிர்ந்த கடலிற் பிறந்த வளையினைத் தன் பெடையென்று கருதி அதனைப் புணர முயலும். இவளது அழகு ஒழுகும் மேனி பசந்து விளர்த்தது. அவ்விளர்த்த மேனி, அன்னம் மிதிக்கும் அச்சங்கினும் மிகுதியாக மின்னுதலை நினைந்து நோக்குவாயாக.

உரை விளக்கம் : அன்னத்தின் கால்விரல்கள் தோலினால் இணைக்கப்பெற்று அது தண்ணீரில் நீந்துதற்கு உதவியான துடுப்புப் போன்றிருப்பன. அதுகொண்டு 'துதிக்கால் அன்னம்' எனப்பட்டது. தன் துணை என்று கருதி அன்னச் சேவல் மிதிக்க முயல்வதற்குக் காரணம் சங்கு தன் வடிவாலும் வெண்ணிறத்தாலும் அன்னத்தையொத்திருத்தலாகும். அன்னத்தைச் சங்கோடு ஒப்பிட்ட அழகு மதிக்கத்தக்கதாகும். அன்றியும், அவ்வாறு மிதிக்க எண்ணுதற்குச் சேவலின் காம மிகுதியும் ஒரேதுவாகும்.

Koviloor Digital Library

பிரிவு தந்த ஏக்கத்தால் தலைவியின் மாமை கெட்டு வெளிறிப் போனதாகலின் அவ்விளர்ப்பின் மிகுதி கூறுவாள் 'வளையினும் இலங்கும்' என்றாள்.

தலைவிக்கு ஏற்பட்டது காம நோயே என்பதனை வற்புறுத்தவே 'நினைந்து கண்டிசின்' என்றாள். பிறநோய் எனின் அதன் குறிவேறாகுமேயன்றி, உடல் விளர்ப்பு எய்தாது. இதனை அறிவும் ஆண்டு முதிர்ச்சியும் உடைய நீ எண்ணிப்பார் என்பாள் 'நினைந்து' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : துதி – தோல்உறை; துணை – பெடை; செத்து – கருதி; பிறழவுணர்ந்து; மிதிக்கும் – புணர முயலும்; வளை – சங்கு; இலங்கும் – ஒளிவிடும்; ஆகம் – உடம்பு; அங்கலிழ் – பேரழகு; கண்டிசின் – காண்பாய்.

இலக்கணக்குறிப்பு : கண்டிசின் – முன்னிலை வினைமுற்று; இசின் – முன்னிலை அசைச்சொல்; மிதிக்கும் – இடக்கரடக்கல்.

மேற்கோள் : துதி தோலுறையென்பது :

தூங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்
பாம்பு மதன் அழியும்

– அகம். 8.

குறிப்புப் பொருள் : 'அன்னம் தண் கடல் வளையென அறியாது துணையெனக் கருதி மிதிக்குமாறுபோலத் தலைமகன் பொருட்டுப் பிறந்த இவள் மேனி வேறுபாட்டினைப் பிறவாற்றான் உளதாயிற்றெனக் கருதி நீ ஆராய்கின்றாய்! என்ற உள்ளுறை காண்பார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

'தண்கடல் வளையினும் இலங்கும் என்றது மேனியில் வேறுபாடு' என்றார் பழைய உரையாசிரியர்.

Koviloor Digital Library

107

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – என் தோழி
சுடர் நுதல் பசப்பச் சாஅய், படர் மெலிந்து,
தண் கடற் படு திரை கேட்டொறும்,
துஞ்சாள் ஆகுதல் நோகோ யானே.

கூற்று : தோழி செவிலிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது.

கூற்று விளக்கம் : தலைவியின் மேனி வேறுபாடு கண்டு செவிலி வருந்தி, அது தீர்க்கும் வழிகளை ஆய்ந்து இடர்ப்படுவது கண்டு, அவள் நோய்க்கு ஒரு கடற்றுறைத்தலைவன்மேல் அவள் கொண்ட காதலே காரணம் என உண்மையை வெளிப்படுத்தியது.

உரை : அன்னையே! நீ வாழ்க! அன்னாய்! யான் கூறுவதை விரும்பிக்கேள். என் தோழியின் ஒளி மிக்க நெற்றி பசந்து தன் அழகு குறையப்பெற்றது; பல்வேறு எண்ணங்களால் அலைப்புற்று உடலும் மெலியப்பெற்றனள். தண்மை பொருந்திய கடலின்கண் எழும் அலைகளின் ஒலியைக் கேட்கும்தோறும் அவள் துயில் இழக்கிறாள். இதனை எண்ணி யான் நோகின்றேன்.

உரை விளக்கம் : தலைவி நுதல் பசத்தற்கும், மேனி வாடியதற்கும், உறக்கம் இழந்து துயர் கூர்வதற்கும் காரணம் அறியாத செவிலி தன் மகளை, அதற்கு யாதேனும் காரணம் உண்டோவெனக் கேட்டாள். அதற்கு நேராக விடை கூறாது, 'தண்கடல் படுதிரை கேட்டொறும் துஞ்சாள்' என்றாள். இதனால் அவள் நோய்க்குக் காரணம், ஒரு கடற்றுறைத் தலைவன் மேல் கொண்ட காதலே என்று மறைவாக உணர்த்தினாளாயிற்று. 'படுதிரை' என்றது திரையின் இரைச்சலை. அலைகள் என்றும் ஓய்வதில்லையெனவே, அலையொலி கேட்டொறும் துஞ்சாள் என்றது, அவள் பகலும் இரவும் துஞ்சாள் என்ற பொருள் தந்து நின்றது.

Koviloor Digital Library

அவள் மேனி மீண்டும் அழகு பெறவும், நுதல் தான் இழந்த ஒளியை மீண்டும் பெறவும், அவள் இழந்த உறக்கத்தை மீண்டும் எய்தவும், அத்தலைவனைக் கணவனாக அடைதலே ஒரே வழி என்று வற்புறுத்தினாள் என்க. 'நோகோ யானே' என்றாள், நீ நோகுமாறு யானும் நோகிறேன் என்று பொருள்படும்படியாக.

அருஞ்சொற்பொருள் : நுதல் – நெற்றி; சுடர் – ஒளிவிட்டு மின்னிய; சாஅய் – இளைத்து; படர் நினைவு; திரை – அலை; நோகு – வருந்துகின்றேன்.

மேற்கோள் : காம நோயுடையார் கண் துஞ்சாமை :

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல்லாவே

– குறுந். 6.

நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர் யான் மன்ற துஞ்சா தேனே

– குறுந். 5.

'இனமணி நெடுந்தேர் வாராதாயினும்
வருவதுபோலச் செவி முதல் இசைக்கும்
அரவமொடு
துயில் மறந்தனவால் தோழி எம் கண்ணே'

– குறுந். 301.

108

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! கழிய
முண்டகம் மலரும் தண் கடற் சேர்ப்பன்
எம் தோள் துறந்தனன் ஆயின்,
எவன்கொல் மற்று அவன் நயந்த தோளே?

Koviloor Digital Library

கூற்று : அறத்தொடு நிலை பிறந்த பின்னும் வரைவு நீடிற்றாக, 'மற்றொரு குலமகளை வரையும் கொல்?' என்று ஐயுற்ற செவிலி குறிப்பு அறிந்த தோழி அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவி மேனி வேறுபாடு கண்டு செவிலி கவலை கொண்டாள். அப்போது தோழி அறத்தொடு நின்று களவை வெளிப்படுத்தினாள். ஆனால் அதன் பின்னும் தலைவன் வரைய முற்படவில்லை. ஒருவேளை அவன் தன் மகளைத்தவிர வேறு ஒரு குலமகளை மணப்பானோ என்று ஐயுற்றாள் செவிலி. அதனைக் குறிப்பால் உணர்ந்த தோழி இப்படிக் கூறினாள்.

உரை : அன்னையே! நீ வாழி! அன்னையே! யான் சொல்வதனை விரும்பிக்கேள். உப்பங்கழிகளில் முண்டகச் செடிகள் மலர்ந்து நிற்கும் குளிர்ந்த கடலையுடைய நெய்தல் நிலத் தலைவனாகிய எம் காதலன் எம் தோளைப் பிரிவானாயின் அவனால் விரும்பப்பட்ட எம் தோள்கள் அடையும் பயன்தான் யாது? (ஒன்றுமில்லை)

உரை விளக்கம் : முண்டகமாவது கழிமுள்ளிச் செடியாகும். முள்ளை உடைமையின் முள்ளியாயிற்று. தலைவன் அணைத்து இன்புற்றவை தலைவியின் தோள்கள். அவற்றை அவன் அவ்வளவு எளிதில் மறந்துவிட இயலாது. ஏனெனில், அவற்றினும் சிறந்தன உலகில் காண்டலரிது. இதனால், அவன் வேறு ஒருத்தியின் தோள்களை விரும்ப முடியாது. அங்ஙனம் அவன் பிரிய நேரின் அத்தோள்கள் இருந்து அடையும் பயன் யாதும் இல்லை. இங்ஙனம் தாயிடம் கூறினாள் தோழி.

இதனால், தலைவன் அவ்வளவு எளிதில் தான் விரும்பிய தோள்களைப் பிரிய முடியாது என்றும், அங்ஙனம் பிரியும் அளவுக்கு அவன் இழிந்தோனும் அல்லன் என்றும், ஒருவேளை யாதானும் ஓர் ஏது பற்றி அவன் பிரிய நேரின், தலைவி உயிருடன் இருப்பதில் பொருளில்லை என்றும் கூறினாள் என்க.

Koviloor Digital Library

'எம் தோள்' என்றாள், தலைவிக்கும் தனக்கும் உள்ள பிரிவரிய நட்புப் பற்றி. இருதலைப்புள்ளின் ஒருயிர் போல், தனக்கும் தலைவிக்கும் இடையேயுள்ள உறவு உயிருறவாதலின் தலைவியின் தோளும் தன்தோளும் ஒன்றே என்பதுபடப் பேசினாள் என்க.

'என்னாம் கொல்' என்றும் பாடம். 'அத்தோள்கள் என்னவாகுமோ, யாரறிவார்? என்ற பொருளும், 'அவற்றுக்கு என்ன சிறப்புண்டு?' என்ற பொருளும் இதற்குக் கொள்க. தோள்கள் என்னவாகும் என்றது உயிர் மேல் நின்றது. அஃதாவது, அவள் உயிர் வாழாள் என்பது.

'எவன்கொல்?' என்ற பாடத்திற்கு 'என்ன பயன் உடைத்து' என்று பொருள் கொள்க. அவனால் தழுவப்படாத எம் தோள் இருந்தும் இல்லாததுபோன்றதே என்பது கருத்து. அத்தகு நிலை வருவதற்குத் தலைவன் இடமளியான் என்பது அவள் கருத்தாகக் கொள்க.

அருஞ்சொற்பொருள் : கழிய – கழியில் உள்ள; முண்டகம் – கழிமுள்ளி; எவன்கொல் – என்ன பயன் உடைத்து? நயந்த – விரும்பி அணைத்த.

இலக்கணக்குறிப்பு : கொல் – அசைநிலை; மற்று – இடைச்சொல்.

பழையவுரைக் குறிப்பு : முண்டகம் மலரும் .... சேர்ப்பன் என்றது, அன்பிலன் போலத் தோன்றினும் அகத்தே திரியாத அன்புடையவன் என்றவாறு.

நறுமணம் கமழாத கழியிடம் ஆயினும் முண்டகம் மலர்ந்து மணம் கமழா நிற்கும் என்றது, கடிது வரையாது நீட்டித்தமையால் நயவாதான் போல் தோன்றினும், துறவாமைக்குரிய பேரன்பினன் என்று உள்ளுறை கொள்வார் உளர்.

Koviloor Digital Library

'கழிய முண்டகம் மலரும்' என முள்ளுடையதனைப் பூ மலரும் என்று உள்ளுறுத்ததனான் இருவர் காமத்துறைக் கண்ணும் ஒருதலை இன்னா, ஒருதலை இனிது என்றாள் என்பது.

'என் தோள் துறந்தனன்' என்பது முள்ளுடைமையோடு ஒக்க, 'என்னாங்கொல் அவன் நயந்த தோள்? என்ற வழி அவன் அன்பின் திரியாமை கூறினமையின் முண்டக மலர்ச்சியோடு ஒப்பிக்கப்படும்' என்பது (தொல். உவம. 29, பேராசிரியர் உரை) பேராசிரியர் கருத்து.

முள்ளுடையதாயினும் முண்டகம் தேனும் உடையது என்பதுபடப் பூமலரும் என்றமையால், தலைவன் வரையாமையால் அன்பற்றவனாகத் தோன்றினாலும், அவன் வரைவது உறுதி என்பதால் இனிமையுடையான் என்பது விளங்கிற்று.

109

அன்னை, வாழி! வேண்டு, அன்னை! – நெய்தல்
நீர்ப் படர் தூம்பின் பூக் கெழு துறைவன்
எம் தோள் துறந்த காலை, எவன் கொல்
பல் நாள் வரும், அவன் அளித்த பொழுதே?

கூற்று : அறத்தொடு நின்ற பின்பு வரைவான் பிரிந்த தலைமகன் கடிதின் வாராதவழி, ஐயுற்ற செவிலி, 'அவன் நும்மைத் துறந்தான் போலும்; நுங்கட்கு அவன் கூறிய திறம் யாது?' என்றாட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே அமைந்த காதலைத் தோழி செவிலிக்கு வெளிப்படுத்திய பின்னர், மணத்திற்கு உரியன செய்து மீள்வதாகக் கூறிப் பிரிந்த தலைவன் காலம் நீட்டித்தான். அப்பொழுது அவனுடைய உண்மைத் தன்மையை ஐயுற்றுச் செவிலி வினவியபொழுது தோழி இங்ஙனம் கூறினாள்.

Koviloor Digital Library

உரை : அன்னையே நீ வாழ்க! அன்னையே! யான் சொல்வதனை விரும்பிக்கேள். நீரில் வாழ்தலை உடைய, உட்டுளையை உடைய நெய்தற் பூக்கள் நிரம்பிய நீர்த்துறைக்குத் தலைவன் ஆகிய எம் காதலன் எம்முடைய தோளைத் துறந்த பொழுது, அவன் பண்டு எமக்கு அருள்புரிந்த அந்த இனிய நிகழ்வே பன்னாளும் நினைவில் தோன்றுவது எக்காரணத்தாலோ? யான் அறியேன்.

உரை விளக்கம் : திருமணத்திற்கு உரியனவற்றை விரைந்து செய்யாது தலைவன் காலம் தாழ்த்தது செவிலியின் உள்ளத்தில் தலைவன் தன் மகளைக் கைவிட்டு விட்டானோ என்னும் ஐயத்தைத் தோற்றுவித்தது. ஆனால், தலைவியின் உள்ளத்திலும், அவள் தோழியின் உள்ளத்திலும் அத்தகு ஐயமோ வெறுப்போ தோன்றவில்லை. மாறாக, அவன் பிரிந்திருந்த நேரத்திலும், அவன் பண்டு காட்டிய அன்பும், அதனை வெளிப்படுத்தக் கையாண்ட மெல்லிய இனிய சொற்களுமே மீண்டும் மீண்டும் தோன்றின. அதற்குக் காரணம், அவன்மீது அவர்கள் கொண்ட பேரன்பும், பெருநம்பிக்கையுமேயாம். இந்நம்பிக்கையைத் தான் 'எம் தோள் துறந்த காலை, பன்னாள் வரும் அவன் அளித்த பொழுதே. எவன்கொல்?' என்ற வினாவால் வெளிப்படுத்தினாள். இங்ஙனம் அவன் அளியே மீண்டும் மீண்டும் தோன்றுவது ஒரு நன்னிமித்தம் என்றாள் என்க. அஃதாவது, தாம் அவனை விரும்பும் அளவிற்கு அவனும் தம்மை விரும்புவதாலேயே அவன் அளிசெய்த நினைவே தமக்கு மேலிடுகிறது என்றாள்.

'யான் அறியேன்' என்றது குறிப்பெச்சம். அறியேன் என்று கூறினும், 'அறிவேன்' என்றதாகக் கொள்க. அஃதாவது, அவன் சொன்ன சொல் தவறாமல் வந்து மணந்து கொள்வான் என்பது.

ஔவை துரைசாமிப் பிள்ளைக்கும் இதுவே கருத்தாதலை அவர் உரையால் அறிக. 'இவ்வண்ணம் மறப்பரும் கேண்மையால் மாண்புற்றார்பால் பிரிவென்பதே இல்லையாம்; வரைதல் காரணமாக மெய்யாற் பிரிந்த வழியும், மனத்தாற் பிரிவின்றி எம்மை நினைத்த

Koviloor Digital Library

வண்ணம்' இருத்தலானன்றே தலையளித்த அந்நாள் உரைத்த சொற்கள், பிரிந்துறையும் இக்காலத்தும் எம் நினைவின்கண் பன்முறையும் எழுந்து நிலவா நின்றன என்பாள், 'எம் தோள் துறந்த காலைப் பன்மாண் வரும்' என்றும், நீ ஐயுறுமாறு அவர் எம்மைத் துறந்தாராயின், எம்மை அவர் நினைத்தலும், அந்நினைவு எம் நெஞ்சில் அவரை நினைப்பித்தலும் செய்யாவாகலின், நீ வறிதே ஐயுறுதல் வேண்டா என்றற்கு 'எவன் கொல்' என்றும் கூறினாள்' என்பது அவா தரும் அழகிய விளக்கமாகும்.

'அவன் அளித்த பொழுது' என்றது, அப்பொழுது அவன் தலைவியை அணைத்ததும், நுதல் நீவியதும் ஆன செய்கைகளையும், 'நின்னைப் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என்று உறுதி கூறித் தேற்றிச் சொன்ன சொற்களையும் உட்படுத்தும். 'பன்மாண் வரும்' என்றது 'யாம் அம்முதற் கூட்டத்தையும், அப்போது தலைவன் காட்டிய பேரன்பையும் இடையறாது எண்ணியிருக்கிறோம்' என்ற பொருளிலாகும்.

'நெய்தல் நீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவன்' என்ற தொடர்க்கு அறிஞர் வேறு வேறு விளக்கம் தந்துளர். 'நெய்தலினது நீர்க்குள் பரந்தோடிப் பூக்கும் கொடியினுடைய பூக்கள் பொருந்திய துறைவன்' என்று உரை வகுத்த துரைசாமிப் பிள்ளை, 'நீர்ப்பூவாகிய நெய்தலின் கொடி, ஆம்பல் தாமரை முதலியவற்றின் கொடியாகிய தண்டுபோல உள்ளே புழையுடைமை பற்றி, 'நீர்ப்படர் தூம்பு' எனப்பட்டது. தூம்பு போல்வதனைத் தூம்பு என்றது ஆகுபெயர் என மேலும் விளக்குவார்.

'தூம்பின் பூ - உட்டுளையை உடைய பூ' என்கிறது அறிஞர். உ.வே. சாமிநாதையர் பதிப்பு.

இனி, ஈழத்து அறிஞரும் பெருமழைப்புலவரும் 'தூம்பு' என்பதனை மதகு என விளக்குவர். 'தூம்பின்பூ' என்பதனை 'ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, மதகின்கண் நெய்தற்பூப் பொருந்தியதுறைவன் என்று விளக்குகிறார் ஈழத்து அறிஞர்.

Koviloor Digital Library

பெருமழைப்புலவர், 'நீரோடு மதகு வழியின்கண் நெய்தல் மலர்கள் பொருந்தி அதனை மறைக்கின்ற நீர்த்துறையை உடைய துறைவன், என்கின்றார். பூக்கள் தூம்பின் வாயை அடைப்பதாகக் கூறியதற்கு ஏற்ப அவர் உள்ளுறையும் கூறினார். அது வருமாறு :

''நீர்ப்படர் தூம்பின் பூக்கெழு துறைவன் என்றதனால், நீரோடும் வழியை அதன்கண் தோன்றிய மலரே மறைக்குமாறுபோல அவனது விரைந்த வருகையை வரை பொருளே தடை செய்கிறது. பொருளீட்டியவுடன் விரைந்து வந்து அளி செய்தல் ஒருதலை என்னும் உள்ளுறையும் காண்க.''

இனி, துரைசாமிப் பிள்ளை, 'ஒருநாள் துறந்த காலை' என்றும் பாடமுண்டென்று கூறி, ''முன்னர்க் கூடிய ஞான்று செய்த தலையளியாற் பிறந்த கேண்மை, அவன் வாராது நின்ற பொழுதெல்லாம் மனத்தின்கண் தோன்றி, இன்று வாரார் ஆயினும் நாளை வாரார் அல்லர் எனப் பல நாளும் நினைப்பித்தலின், எம்மைத் துறப்பர் போலும் என நீ ஐயுறாதே கொள் என்று உரைக்க' என விளக்கமும் தருவார்.

ஐயர் அவர்கள் பதிப்பில் இப்படியொரு பாடவேறுபாடு காணப்படவில்லை. ஒருவேளை, பிள்ளையவர்கட்குக் கிடைத்த ஏட்டுப்பிரதியில் அவர் சுட்டும் பாடவேறுபாடு காணப்பட்டது போலும்.

அருஞ்சொற்பொருள் : நெய்தல் – கடற்கரையில் உள்ள கழிகளில் வளரும் தாவரம்; கணைக்கால் நெய்தல் எனப்பலகாலும் கூறப்படுவதால் திரட்சியான காம்பினை உடையது இதன் பூவெனத் தெரிகிறது; தூம்பு – உட்டுளை உடையது; மதகு; அளித்தல் – அளிசெய்தல்; பொழுது – காலம்.

Koviloor Digital Library

110

அன்னை, வாழி! வேண்டு அன்னை! - புன்னை
பொன் நிறம் விரியும் பூக்கெழு துறைவனை
'என்னை' என்றும், யாமே; இவ் ஊர்
பிறிது ஒன்றாகக் கூறும்;
ஆங்கும் ஆக்குமோ, வாழிய, பாலே!

கூற்று : நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவி கடற்கரை நாட்டுத் தலைவன் ஒருவனொடு காதலால் ஒன்றுபட்டுக் கற்புக் கடம்பூண்ட நிலையில், அஃது அறியாத அயலார் பெண் கேட்டு வந்தனர். அந்நிலையில் தோழி, தலைவியின் கற்பைக் காப்பாற்றுதலைத் தன் அறமாகக் கருதிச் செவிலிக்கு உண்மை வெளிப்படுத்தற்குக் கூறியது.

உரை : அன்னையே! நீ வாழ்க! அன்னையே! யான் சொல்வதனை விரும்பிக் கேட்பாயாக! புன்னை மரங்கள் பொன் வண்ணம் கொண்ட மலர்களை மலரச் செய்யும் கடற்றுறையினை உடைய தலைவனை யாம் எம் காதலுக்குரிய கேள்வன் எனக் கருதியுள்ளோம். ஆனால் இவ்வூர் மக்களோ வேறு வகையாகக் கூறுகின்றனர். பால்வரை தெய்வம் தலைவியை ஊரார் கருதுமாறு வேறொருவற்குரியவளாகவும் செய்து விடுமோ? அந்தப்பால் வாழ்வதாக!

உரை விளக்கம் : வெவ்வேறிடங்களிற் பிறந்த தலைவனையும் தலைவியையும் ஒன்றுபடுத்தியது தெய்வமே ஆதலின், அங்ஙனம் கூட்டிய அத்தெய்வமே அவர்களைப் பிரித்து விடுதலும் கூடுமோ?' என வியப்புடன் கேட்டாள். அங்ஙனம் செய்வது ஊழாகாது ஆதலின் ஓகாரம் எதிர்மறையென்க. இதனால், ஊர் என்ன சொன்னாலும் ஊழ் தன் வழியை மாற்றிக் கொள்ளாது. எனவே, தலைவியை அவள் காதலனொடு கூட்டி வைப்பதே அறம் எனச்

Koviloor Digital Library

செவிலிக்கு உணர்த்தினாள் தோழி என்க. 'தானே கூட்டிய காதலர்களைப் பிரிக்கவும் கூடுமெனில் அது வாழ்க!' என்றாள், அங்ஙனம் செய்யுமாயின் அஃது ஊழாகாது என்ற எள்ளல் குறிப்பில்.

'ஆங்கும் ஆக்குமோ' என்பதில் உள்ள உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மையாகும். பண்டே ஒருவனுக்கு உரிமையாக்கிற்று ஊழ் என்பது இதனால் போந்த பொருள்.

துறைவனை 'என்னை' என்றதற்கு 'அன்னை என்னை என்றலும் உளவே தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்' (தொல். பொருள். 246) என்னும் விதி கொள்க.

அருஞ்சொற்பொருள் : என்னை – என் + ஐ என் தலைவன்; இவ்வூர் – மாந்தர்; ஆங்கும் – அவ்வாறும்; பால் – ஊழ், விதி.

இலக்கணக்குறிப்பு : என்றும் – தன்மைப் பன்மை வினைமுற்று; ஊர் – ஊர்மக்கள் ... ஆகுபெயர்; ஆங்கும் – 'உம்மை' இறந்தது தழுவிய எச்ச உம்மை; வாழிய – வியங்கோள் வினைமுற்று; அசைநிலையும் ஆம்.

மேற்கோள் : புன்னை பொன்னிறப்பூ வுடையது :

பொன்னென நன்மலர் நறுவீ தாஅம்
புன்னை நறும்பொழில்
– அகம். 360.

தலைமக்களை ஊழே கூட்டுவிக்கும் என்பது :

பால்வரைந்து அமைத்த லல்லது அவர்வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாம் யாரோ
– குறுந். 366.

தாய்க்கு உரைத்த பத்து முற்றிற்று

Koviloor Digital Library

12. தோழிக்கு உரைத்த பத்து

தோழியை நோக்கிக் கூறுவனவாகவே அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.

111

அம்ம வாழி, தோழி! பாணன்
சூழ்கழி மருங்கின் நாண் இரை கொளீஇச்
சினைக் கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே –
அருந் தவம் முயறல் ஆற்றாதேமே?

கூற்று : 'இற்செறிப்பார்' எனக் கேட்ட தலைமகள் வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் மேனி வேறுபாடு கண்டும் ஊர் அலர்மொழிந்தது கேட்டும் பெற்றோர் அவளை இற்செறிக்க முயன்றதனைக் கேள்வியுற்ற தலைவி, திருமணம் செய்துகொள்ள முயலாத தலைவன், வீட்டயலே நிற்றலை அறிந்து, அவன் கேட்கும் வகையில் தோழிக்குக் கூறியது.

உரை : பாண்மகன் ஊரைச் சூழ்ந்துள்ள உப்பங்கழியின் பக்கத்திலே இருந்து கொண்டு, தூண்டிலின் முள்ளிலே மீன் உண்ணுதற்குரிய இரையை மாட்டி, கருவுற்ற, கயல் மீனைக் கொல்லுதற்கு இடமான துறைக்கு உரிமை கொண்ட என் தலைவனொடு கொண்ட நட்பினை, முன்னைப் பிறவியில் நல்ல

Koviloor Digital Library

தவத்தினைச் செய்யாத நாம், இப்பிறவியில் பிரிந்தும் வாழ இயலுமோ? (இயலாது).

உரை விளக்கம் : 'சூழ் கழி' என்றாள் அது ஊரை வளைத்துக் கிடத்தலின். 'நாண் இரை' என்பது, நாணின் நுனியில் அமைந்த தூண்டில் முள்ளில் கோத்த இரையாகும். அஃது நாங்கூழ்ப்புழுவும், மிகவும் சிறிய மீன்களும் பிறவுமாகும். 'அயிரை இட்டு வரால் வாங்குபவர் பற்றிப் பழமொழியும் (302) கூறும். கயலாவது ஒருவகை மீன். சூல்கொண்ட மீன் என்றும் கருதாது கொல்லும் வன்னெஞ்சுடையான் பாணன் என்பது தோன்றச் 'சினைக்கயல் மாய்க்கும்' என்றாள். தாம் உயிர் தாங்குதற்கு அடிப்படையாய் உள்ளது தலைவனொடு கொண்ட நட்பே என்று உணர்த்துவாள், 'கேண்மை பிரிந்தும் வாழ்துமோ?' என்றாள். உம்மையும் ஓகாரமும் அங்ஙனம் பிரிந்து வாழ இயலாமையை உணர்த்துன்றன. அங்ஙனம் பிரியாது வாழ்வதற்கு முற்பிறப்பிலே தவம் செய்திருக்க வேண்டும் என்றும், அத்தவம் தாம் செய்யவில்லை என்பதற்கு இப்பொழுது நேர்ந்த பிரிவே சான்றாகவுள்ளது என்றும் கூறினாள் என்க. உள்ளுறையால், தலைவன் பிரிந்து கொடுமை செய்தான் என்று உணர்த்தினாலும், தவம் செய்யாத தாமே குற்றமுடையார் என்றாள். இது பிறரை நோவாது, தம்மைத் தாமே நொந்து கொள்ளும் மனித இயற்கையை உணர்த்தும். 'அருந்தவம்' என்றது, தவம் செய்தலில் உள்ள விரத ஒழுக்கங்களின் அருமைப்பாடு கருதியாகும். 'இருந்தவம்' என்றும் பாடம். பெருந்தவம் என்பது இதன் பொருள். அரிதிற் செய்யும் தவமே பெருந்தவமும் ஆம். தலைவன் நெஞ்சில் இரக்கம் தோற்றுமாறு தன்னையே நொந்து கொண்டாள் தலைவி. 'கேண்மை பிரிந்தும் வாழ்துமோ' என்ற வினாவில், 'அப்படி இதுகாறும். உயிரை விடாது வாழும் நாம் அத்துணை இழிந்த பண்புடையோமோ?' என்ற இரக்கக் குறிப்பும் உள்ளது.

அருஞ்சொற்பொருள் : சூழ்கழி – ஊரைச் சுற்றிக் கிடக்கும் உப்பங்கழி; மருங்கு – பக்கம்; நாண் – தூண்டிற் கயிறு; இரை –

Koviloor Digital Library

மீன் உண்பதற்கு வைத்த உணவு; கொளீஇ - மாட்டி; கேண்மை - உறவு, நட்பு; ஆற்றாதேம் - இயலாத நாம்.

இலக்கணக்குறிப்பு : சூழ்கழி - வினைத்தொகை; நாண் - முள்ளைக் குறித்தலால் ஆகுபெயர்; வாழ்துமோ? - ஓகாரம் எதிர்மறை.

மேற்கோள் : பாணர் மீன் பிடித்தல் :

மீன்சீவும் பாண் சேரி

- மதுரைக். 269

பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல

- குறுந். 169.

காதலர் பிரிந்து வாழார் :

பிரிவரிதாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல கடனறிந்து
இருவே மாகிய உலகத்து
ஒருவே மாகிய புன்மையாம் உயற்கே

- குறுந். 57.

அரிதே காதலர்ப் பிரிதல் ....

- நற். 5 : 7.

நூலிடை விலங்கினும் கவவுப் புலந்துறையும்
கழி பெரும் காமம் ......

- அகம். 361 : 5 - 6.

ஒரு நாள் கழியினும் உயிர்வேறு படூஉம்
பொம்மல் ஓதி .....

- நற். 129 : 2 - 3.

Koviloor Digital Library

உள்ளுறை : 'பாணன் கழி மருங்கில் நாணில் இரை கொளீஇ இரக்கமின்றிக் கொண்ட கயலைக் கொல்லுமாறு போல இனி நம் உறவினரும், ஈண்டுப் புறத்தே திரிந்து ஆடல் பயிலும் நம்மை நல்லன போலவும் நயவ போலவும் வஞ்சக மொழி கூறியாம் கற்புக்கடம் பூண்டமையையும் பொருட்படுத்தாராய் இற்செறிப்பர். அங்ஙனம் செய்யின் ஏழையரேம் என்செய்தும்' (பெருமழைப்புலவர்)

தலைமகன் தன் கேண்மையால் இன்பம் நுகர்வித்துக் கடிது வரையாது வருத்துகின்றான் எனத் துனியுறு கிளவி தோன்றக் கூறியவாறு (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை).

பாணனைத் தலைவனாகவும், கழியைக் குறியிடமாகவும், நாளிரையைத் தன் வஞ்சனையை மறைத்துச் சொல்லும் இனிய வார்த்தையாகவும், கயலைத் தலைமகளாகவும், மாய்த்தலைத் தலைவியை வருத்துவதாகவும் உள்ளுறை உவமம் கொள்ளுமாறு கிடந்தது. (ஈழத்து உரையாசிரியர்)

112

அம்ம வாழி, தோழி! பாசிலைச்
செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன்
தான் வரக் காண்குவம் நாமே;
மறந்தோம் மன்ற, நாணுடை நெஞ்சே.

கூற்று : களவு நீடுவழி, 'வரையலன்கொல்?' என்று அஞ்சிய தோழிக்குத் தலைமகன் வரையும் திறம் தெளிக்க, தெளிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் களவுக் கூட்டத்தையே தொடர்ந்து விரும்பியிருத்தலைக் கண்ட தோழி, அவன் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லையோ என்று ஐயுற்றாள். தலைவன் விரைவில் திருமணத்திற்குரிய ஏற்பாட்டொடு வருவான் என்ற

Koviloor Digital Library

தெளிவு தனக்கிருத்தலைத் தன் தோழிக்கு இங்ஙனம் அறிவித்தாள் தலைவி.

உரை : தோழியே! நீ வாழி! யான் சொல்வதனைக் கேள். பசிய இலைகளைக் கொண்ட செருந்தி மரங்கள் அடர்ந்த, கரிய உப்பங்கழிக் கரைகளை உடைய சேர்ப்பன் (பிறர் யாரும் தூண்டாது) தானே வரைய வருதலை உறுதியாக நாம் காண்போம். நம்மைத் தேற்றுமுகமாக முன்னர் நம் காதலர் சொன்ன சொற்களை, நம்முடைய பெண்மைக்குரிய நாணத்தினால் மறந்தே போனோம். (அம்மறதியினால்தான் நீ அஞ்சுகின்றாய்).

உரை விளக்கம் : தலைவன் வரைவொடு வருவான் எனத் தலைவி தெளிவுடன் இருந்தபோது, ஐயுற்றவள் தோழியே. ஆயினும், அவள் தான் நாணுடைமையால் தலைவன் கூறிய் தேற்றுரையினை மறந்ததாகக் கூறாது, தன்னையும் உட்படுத்தி, 'மறந்தோம் மன்ற' என்றாள். தன் மறதியும் தோழி மறதியும் ஒன்றே என்றது, அவர்கட்குள் உள்ள நட்பின் செறிவைக் காட்டிற்று என்க. 'தான் வரக் காண்குவம்' என்றதனால் அவனைப் பிறர் தூண்டத் தேவையில்லை என்றும், அவனே தன் கடமையை உணர்ந்து செய்யும் உணர்வுடையன் என்றும் குறித்தாளாம். தோழியின் ஐயத்திற்கு ஏது என்னவெனில், தலைவியின் காதல் இனிதே நிறைவேற வேண்டும் என்பதே. 'தான் வரக் காண்குவம்' என்பதில், தலைவன் பெரியோரைத் தூதாக விடாது தானே வருவான் என்ற பொருளும் தோன்றுகிறது. அவன் பெரிய நெய்தல் நிலத் தலைவனாதலின் அங்ஙனம் வரத் தகுதி உடையன் என்றாளாம். அவனே எளியனாய் வந்து கேட்டால் தம் பெற்றோர் உடம்படுவர் என்று நம்பியும் இங்ஙனம் கூறினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : இருங்கழி – பெரிய கழி, கரிய கழியுமாம்; சேர்ப்பன் – நெய்தல் நிலத்தலைவன்; தாய – பரந்த, நெருங்கிய.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : மன்ற - தெளிவுப்பொருள் தரும் இடைச்சொல்; அம்ம - கேட்பிக்கும் இடைச்சொல்.

மேற்கோள் : செருந்தி நெய்தல் நிலத்திற்குரிய மரம் :

கனைத்த நெய்தல் கண்போல் மாமலர்
நனைத்த செருந்திப் போதுவாய் அவிழ
- அகம். 150.

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழ
- ஐங். 141.

பொன்னடர்ந் தன்ன ஒள்இணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
- அகம். 280.

குறிப்புப் பொருள் : பாசிலைச் செருந்தி தாய இருங்கழி என்றது தலைமகனது செல்வ மனையின் சிறப்புணர்த்தியவாறு. பாசிலைச் செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன் என்றதனால், தெளித்துரைத்த வன்புறையைக் கைந்நெகிழ்ந்து மாறுவானல்லன்; மாறின், பாசிலை இன்றி அவன் நாட்டுச் செருந்தி முதலியன கெட்டழியும் என இறைச்சி தோன்றுமாறும் காண்க.

(ஔவை சு. துரைசாமிப் பிள்ளை)

113

அம்ம வாழி, தோழி! நெென்னல்
ஓங்கு திரை வெண் மணல் உடைக்கும்
துறைவற்கு,
ஊரார் 'பெண்டு' என மொழிய, என்னை,
அது கேட்டு, 'அன்னாய்' என்றனள், அன்னை;
பைய, 'எம்மை' என்றனென் யானே.

Koviloor Digital Library

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, 'நெருநல் இல்லத்து நிகழ்ந்தது இது' எனத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் களவு நீட்டித்து வந்தான். திருமணத்தை நிகழ்த்தும் குறிப்பேதும் அவன் பால் தோன்றாமை கண்ட தலைவி, ஒரு நாள் அவன் வேலிப்புறத்தில் காத்து நின்றதறிந்து, அவன் காதில் படும்படி, 'நம் வீட்டில் நேற்று இங்ஙனம் நடந்தது' என்று தன் தோழியிடம் கூறினாள்.

உரை : தோழியே, கேட்பாயாக! வெண்மையான மணல் நிறையினை உயர்ந்து வரும் அலைகள் வந்து மோதியலைக்கும் துறைவனுக்குப் பெண்டாயினேன் யான் என நேற்று ஊரார் அலர்மொழி கூற, அதனைக் கேட்ட அன்னை 'அன்னாய்?' என என்னை வினவினள். யான் அதற்கு விடையாக, 'எம்மை?' என மெல்ல மெல்லக் கூறினேன். (இதனை நீ அறிவாய்).

உரை விளக்கம் : அலர் தூற்றியோரை ஊரார் எனப் பொதுப்படச் சுட்டினாலும், ஊர்ப்பெண்டுகள் எனக் கொள்க. ஏனெனில் அலர் கூறும் இயல்பு பெண்டிர்க்குரியதாகவே அகச் செய்யுட்கள் கூறுகின்றன. 'பெண்டு' என்ற சொல் உரிமை மகள், அஃதாவது மனைவி அல்லது மனைவியாக ஆகப்போகும் பெண் என்று பொருள்படும் சொல் என்க. 'அதுகேட்டு' என வாளா கூறினும் அதுகேட்டு மனம்நொந்து அல்லது வெகுண்டு என்று பொருள் கொள்க. அதிர்ச்சியடைந்த உள்ளத்தளாய் 'நீ அத்தகையவளா?' என்றாளாம். அஃதாவது, 'ஊர்ப்பெண்டுகள் சொல்லும் பழியுரைக்கு நீ தகுதி உடையவளா?' என்று வினவினாள். இதற்கு விடை கூறத் தயங்கினாள் தலைவி ஆதலின் 'பைபய' என்றாள். 'எம்மை?' என்று அவளும் வினாவாக விடையிறுத்தாள். 'எம்மை?' – எம்மைப் பற்றியா அலர் பேசினர்? என்னும் பொருளது. எம்மை என்ற பன்மைச் சொல், தலைவியையும் தலைவனையும் குறித்ததாகவும், தலைவியையும் தோழியையும் குறித்ததாகவும் இருவகையாகக் கொள்வர் அறிஞர்.

Koviloor Digital Library

'அன்னாய்?' என்ற வினாவால், அன்னை தலைவியை இற்செறிக்க விரும்பினாள் என்பது விளங்கும். இது தலைவன் கேட்கக் கூறியதாதலின் வரைதல் வேட்கையுடையது என்பது விளங்கும்.

ஈழத்து உரையாசிரியர் 'பைபய வெம்மை என்றனென்' எனக்கொண்டு 'மெல்ல மெல்ல வெம்மை என்று கூறினேன்' எனப் பொருள் செய்தார். 'வெம்மை என்பதற்கு வெய்ய என்பதன் பொருள்போற் கொள்க' என்று மேலும் விளக்கினார். பெருமழைப்புலவரும், 'அதுகேட்டுத் திகைப்புற்ற யான், பிறிதொன்றும் சொல்லத் தேற்றாது மெல்ல மெல்ல இது 'கொடுமை' என்று என்னுள்ளேயே சொல்லிக் கொண்டேன் காண்' எனப் பொருள் செய்தார். ஈழத்தாசிரியர் கருத்தும் இதுவேயாம். தன் இக்கட்டான சூழ்நிலையைத் தலைவனுக்குக் குறிப்பாகச் சுட்டினாள் தலைவி என்பது கருத்தாகக் கொள்க. இப்பொருளும் ஒருவகையிற் சிறப்புடையதாகவே தோன்றுகின்றது.

அருஞ்சொற்பொருள் : நென்னல் – நேற்று; ஓங்குதிரை – உயர்ந்து எழும் அலை; பெண்டு – மனைவியாகப் போவாள்; அன்னாய் – நீ அத்தகையவளா? பைபய – மெல்லமெல்ல; எம்மை – எங்களையா? (தலைவி தோழி இருவரையும் சேர்த்து)

மேற்கோள் : அலர்கூறும் பெண்டிர் :

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற

– நற். 149.

ஊர் அலர் கூறல் :

அம்பல் ஊரும் அவனொடுமொழியும்

– அகம். 282.

குறிப்புப் பொருள் : உயர்ந்த கடலலை வெண்மணற் கரையை உடைப்பது, ஊர் அலர் களவொழுக்கத்தைச் சிதைத்தலைக்

Koviloor Digital Library

குறிக்கும் என்பார் உளர். இனி, ஊர் அலர் என் வெள்ளை மனத்தைச் சிதைத்தது என்று உள்ளுறை கூறுவாரும் உளர்.

114

அம்ம வாழி, தோழி! கொண்கன்
நேரேம் ஆயினும், செல்குவம் கொல்லோ? –
கடலின் நாரை இரற்றும்
மடல்அம் பெண்ணை அவனுடை நாட்டே?

கூற்று : இடையிட்டு ஒழுகும் தலைமகன் வந்து சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தொடர்ந்து வாராது அவ்வப்போது வந்து தலைவியோடு அளவளாவிச் செல்வதனை மேற்கொண்ட தலைவன் ஒருநாள் வந்து தலைவி மனையின் அயலே நின்றான். அவனைக் கண்ட தலைவி தன் தோழியிடம் கூறியது இது.

உரை : தோழியே, நீ வாழி! யான் சொல்வதைக் கேள். கொண்கனை நாம் இங்கு எதிர்ப்பட இயலவில்லை. எனினும், கடலின் கண் வாழும் நாரை சென்று தங்கி ஆரவாரிக்கும் மடல்களை உடைய அழகிய பனை மரங்களைக் கொண்ட அவனுடைய நாட்டிற்கு நாம் செல்வோமோ?

உரை விளக்கம் : கடற்கரையில் வாழும் நாரையைக் 'கடலின் நாரை' என்றாள், அது கடல் மீனை உண்டு வாழ்தலின். இரற்றலாவது அரற்றல் அல்லது ஆரவாரஞ்செய்தல். 'கொண்கன் நேரேம் ஆயினும்' என்றது, அவன் இங்கு வந்து நம்மைத் தலைப்படவில்லையாயினும் என்ற பொருளில் ஆகும்.

Koviloor Digital Library

தலைவன் வந்து அளவளாவாத நாட்களில் அவன் பிரிவைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லையெனவே, அவன் வர இயலாவிட்டாலும் நாம் அவன் நாட்டுக்குச் செல்லலாமோ என வினவினாள். அங்ஙனம் செல்வது பெண்களாகிய தமக்கு இயலாதே எனத் தன் வருத்த மிகுதியை இவ்வினாவால் வெளிப்படுத்தினாள் என அறிக. 'உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும் என்னுற்றனகொல் இவை எனின் அல்லது கிழவற் சேர்தல் கிழத்திக்கு இல்லை' என்பது இலக்கண விதியென்பது அறிக. இவ்விதிக்குப் புறமாக நடத்தல் பெண்மைக்கு அழ்கன்றெனினும், வரைவு கடாதல் குறிப்பொடு இங்ஙனம் வினாதல் தவறில்லை என்பது சான்றோர் கருத்தாம். 'அறக்கழிவுடையன பொருட்பயம் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன்று' என்பது தொல்காப்பியமாதல் அறிக.

தன் துணையைப்பிரிந்த நாரை, பிரிவாற்றாமையால் மடலின்கண் இருந்து அரற்றிற்று என்க. இத்தகு நாரைகளின் தனிமைத்துயரை நாளும் காண்பர் தலைவர் எனினும், நம் தனிமைத் துயரை அவர் உணர்ந்தாரல்லர் என்பது குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : நேர்தல் – எதிர்ப்படல்; இரற்றும் – அரற்றும், ஆரவாரிக்கும்; மடல் – பனை மட்டை; பெண்ணை – பனைமரம்.

இலக்கணக்குறிப்பு : கொல் – ஐயப்பொருள், அசை நிலையுமாம்; நேரேம் – தன்மைப்பன்மை வினைமுற்று, ஓகாரம் வினாப்பொருட்டு.

மேற்கோள் : தலைவன் ஊர்க்குச் செல்வோம் என்று கூறல் :

பகலே பலரும் காண நாண்விட்டு
அகன் வயற்படப்பை அவ்வூர் வினவிச்
சென்மோ வாழி தோழி

— நற். 365.

Koviloor Digital Library

உள்ளுறை : கடலின் நாரை சென்று ஒலித்தற்கு இடனான பனை மரம் நிறைந்த நாடன் என்றது 'நாம் நம் இல்லத்தைத் துறந்து அவன் நாடு சென்றால் அவன் ஏற்று மகிழ்வான் என்ற கருத்தை உள்ளுறுத்தது என்பர் துரைசாமிப் பிள்ளை.

இனி, கடற்கண்ணுள்ள மீனைக் கவர்ந்து உண்டற்குரிய நாரை பெண்ணை மடலின்கண் தங்கி இரற்றுதல்போலச் செறிப்புற்றுக் கிடக்கும் என்னை வரைதலை நினையாது தன்மனைக் கண்ணே தங்கினான் என்ற உள்ளுறையும் கொள்வார் இவர்.

இனி, கடலில் உள்ள மீனைத் தின்று பசி நீங்கப்பெற்ற நாரை மகிழ்ச்சியால் ஆரவாரிக்கும் என்றது, பிறர் துன்பம் நோக்காது தான் பெற்ற மகிழ்ச்சியால் ஏமாப்பவன் தலைவன் என்பதனை உள்ளுறுத்தது என்பார் ஈழத்து உரையாசிரியர்.

115

அம்ம வாழி, தோழி! பல் மாண்
நுண் மணல் அடைகரை நம்மோடு ஆடிய
தண்ணந் துறைவன் மறைஇ,
அன்னை அருங் கடி வந்து நின்றோனே!

கூற்று : இற்செறிப்புண்ட பின்பும், வரைந்து கொள்ள நினையாது தலைமகன் வந்தானாக, அதனை அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பிரிவாற்றாமையால் தலைவி மேனியில் தோன்றிய மாற்றங்களை நோக்கி அவளைத் தாய் இல்லின்கண் காவலில் வைத்தாள். அதன்பின்னும் திருமணத்திற்கு முயலாது தொடர்ந்து வந்தான் தலைமகன். ஒருநாள் அவன் வந்து வேலிப்புறத்தே நிற்கையில், அவன் கேட்கும் வகையில் தோழிக்குத் தலைவி கூறி வரைவு கடாவியது இது.

Koviloor Digital Library

உரை : தோழியே, நீ வாழி! யான் கூறுவதனைக் கேட்பாயாக. நுண்ணிய மணல் நிறைந்த கடற்கரையின்கண் நம்மோடு விளையாடி மகிழ்ந்த குளிர்ந்த கடற்றுறைக்குரிய நம் காதலர், யாரும் அறியாமல் மறைந்து, அன்னையால் அரிதிற் காவல் செய்யப்பட்ட நம் இல்லின் அருகே வந்து நின்றனன்.

உரை விளக்கம் : 'அடைகரை நம்மோடு ஆடிய துறைவன் வந்து நின்றனன்' என்றாள், பொறுப்போடு விரைந்து வந்து மணம் முடித்தலைக் கருதாது இன்னும் விளையாட்டுணர்வினனாகவே இருக்கின்றான். அவன் அறிவு இருந்தவாறு என்னே!' என்ற பொருள் தோன்ற.

'அன்னை அருங்கடி' என்றது, அன்னையின் அரிய காவலையும் பொருட்படுத்தாது வந்த அவன் துணிவை என்னென்பது! என்ற வியப்பினை வெளிப்படுத்தவாகும். அன்னை அவன் வரவை அறிய நேரின் என்னவாகும்? என்ற அவள் அச்சம் இதில் வெளிப்படக் காணலாம.

காவலின் கடுமையைச் சுட்டி வரைவு முடுக்கினாள் தலைவி என உணர்க.

அருஞ்சொற்பொருள் : மறைஇ – மறைந்து; கடி – காவல்.

இலக்கணக்குறிப்பு : கடி – பலபொருள் உரிச்சொல்; நின்றோன் – நின்றான் ... ஆகாரம் ஓகாரமானது செய்யுள் விகாரம்.

116

அம்ம, வாழி, தோழி! நாம் அழ,
நீல இருங்கழி நீலம் கூம்பும்
மாலை வந்தன்று, மன்ற –
காலை அன்ன காலை முந்துறுத்தே.

Koviloor Digital Library

கூற்று : எற்பாட்டின்கண் தலைமகன் சிறைப்புறத்து நின்று கேட்ப, தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பிரிவுக் காலத்தில் மாலைப் பொழுதின் வரவால் தான் படும் துயரைத் தலைமகன் உணர்ந்து, விரைவில் மணம் செய்து கொள்ள வற்புறுத்தும் வகையில், ஒரு நாள் எற்பாட்டு வேளையில் அவன் வந்து மனைப்புறத்தே நிற்கையில் தோழியிடம் தலைவி கூறியது.

உரை : தோழியே நீ வாழி! யான் சொல்வதனைக் கேள். நீல நிறம் கொண்ட, பெரிய உப்பங்கழியில் வளரும் நீல மலர் குவியக் கூடிய மாலைக்காலம், தெளிவாக, கூற்றுவனைப் போன்ற கொடுமையுடைய தென்றற் காற்றை முன்னே விடுத்து இதோ வந்துவிட்டது. (யான் எங்ஙனம் பொறுப்பேன்?).

உரை விளக்கம் : உப்பங்கழி பெரிய அளவினதாயும், ஆழம் காரணமாக நீல நிறம் கொண்டதாயும் இருந்தது என்பதால் 'நீல இருங்கழி' என்றாள். 'நீலம் கூம்பும் மாலை' என்றாள், அது காலை மலர்ந்து மாலையில் கூம்பும் பண்பினது ஆதலால். கரிய சேறு நிரம்பியுள்ளமையால் நீல இருங்கழியாயிற்று என்பாரும் உளர்.

'நாம் அழ மாலை வந்தன்று' என்றாள், அது மாவும் புள்ளும் தத்தம் இடம் நோக்கி விரைந்து சென்று தத்தம் துணையோடு புணர்ந்து இன்புறும் காலமாதலின், அது நோக்கித் தாம் கண்ணீர் உகுத்து நிற்கும் அவலம் கருதி. மாலையில் நீலம் கூம்புவது இயல்பேயாயினும், ''யாம் காம நோயினாலுண்டாகிய வருத்தம் தாங்கலாற்றாதேமாய் அழ, பார்க்க முடியாதனவாய்த் தம் கண்ணை மூடினாற் போல நீலங்களின் அலரில் பொருந்திய இதழ்குவியா நிற்கும்'' என நயவுரை தருவார் ஈழத்து உரையாசிரியர். 'நீல நிறமுடைய பெரிய கழிகளினிடத்தேயுள்ள கருங்குவளை மலர்தாமும் அஞ்சிக் கண் மூடும் கொடுமையுடைய மாலைப்பொழுது' என்பார் பெருமழைப் புலவர். 'நீலநிறமான நீரோடையிடை நின்றும், இந்த மாலையின் கொடுமையாற்றாது

Koviloor Digital Library

நீலமலர் கண்ணை மூடிக்கொள்ளுமாயின், பிரிவென்னும் வெப்பத்தேயிருக்கின்ற நம்நிலை என்னாம் என்பாள், நீல இருங்கழி நீலம் கூம்பும் மாலை என்றாள். காலை தொடங்கித்தான் ஆற்றாமையால் வருந்துகின்றாள் ஆதலின் காலையை நினைந்தவள் இந்நோய் அரும்புதற்குக் காரணமான அந்தப் பொல்லாத மாலை என்பாள் மீண்டும் 'அன்ன காலை' என்றாள் என்க' என மேலும் விளக்குவார் இவர்.

'காலை அன்ன காலை' என்ற பகுதிக்கு அறிஞர் தத்தம் புலமை விளங்க வெவ்வேறு உரை வகுத்துள்ளனர்.

கால் என்பது கூற்றுவனையும் தென்றலையும் குறிக்கும் எனக் கொண்ட உ.வே.சாமிநாதையர் 'யமனைப் போன்ற தென்றற் காற்றை முன்னிட்டு' என விளக்கம் தந்தார். ஈரிடத்தும் கால் + ஐ எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

ஈழத்து உரையாசிரியரோ, 'யாம் இறந்துபடும் காலத்தை ஒத்த காலத்தை முன்னிட்டு வந்தது' என்றார். இவர், முதலில் உள்ள 'காலை' என்பதற்கு ஐயர் அவர்களையொட்டிப் பொருள் கொண்டாலும், பின் வருவதற்குக் காலம் என்றே பொருள் கொண்டார்.

பெருமழைப்புலவர் 'மாலைப்பொழுதானது, காலைப் பொழுதாகிய அந்தப் பொல்லாத காலைப் பொழுதினைத் தன் வரவிற்கு அறிகுறியாக முற்பட விடுத்து' என்றார். அன்ன என்பது உவம உருபெனக் கொள்வதே பொருத்தமானதேனும், இவர் 'அந்தப் பொல்லாத' என்ற பொருள் கொண்டார்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, 'காலை அன்ன' என்பதனை எற்படு பொழுதின்மேல் ஏற்றி, 'நாட்காலைப் பொழுது போலும் ஒளிமாலைப் போதினை முற்படவிட்டு' என்றார். எற்படுபொழுது மங்கலான ஒளியுடையது ஆதலாலும்,

Koviloor Digital Library

அது இருட்சி மிகும் மாலைக்கு முன்னர் வருவதாலும், பிள்ளையவர்கள் கூறுவது பொருத்தமே. பிள்ளையவர்கள் எற்படுபொழுது என்பதனைக் கதிர் தோன்றும் காலைப்பொழுது என்று கொள்கிறார். இது ஆய்வுக்குரியது. பிற்காலப் பொருள் இலக்கண நூலார் சிலர்க்கு இக்கருத்து உண்டு. இது தமிழ்நூல் வழக்கொடு முரண்படுதலை முனைவர் ச. சோமசுந்தர பாரதியாரின் தொல்காப்பியப் பொருட்படலப் புத்துரையிற் காண்க. கூற்றின்கண்ணும் எற்பாடு சுட்டப்படுதல் காணலாம். ஏனையோர் விளக்கத்தில், இப்பாட்டுக்குரிய கூற்றோடு இயைபு காணப்படவில்லை.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன் குழல் வரும் என நாயனார் கூறியது போலவே, ஈண்டு எற்பாடு மாலைக்கு முற்பட வந்தது என்பது அமையக் காணலாம்.

'காலையன்ன காலை' என்பதிலுள்ள இரண்டாவது காலையை (பொழுது) வாலிழை மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும் காலையாவது அறியார், மாலையென்மனார் மயங்கியோரே' (நெய்தற் கலி. 2) என்பதில் வரும் 'காலை' என்பது போற் கொள்க.

அருஞ்சொற்பொருள் : இருங்கழி - கரிய கழி, பெரிய கழி; நீலம் - நீல மலர், கருங்குவளை மலர்; மன்ற - தெளிவாக; காலை - கூற்றுவனை யொத்த; காலைப்பொழுதையொத்த; காலை முந்துறுத்து - பொழுதை (எற்பாடு) முற்பட விடுத்து; தென்றலை முற்பட விடுத்து; அன்ன - போல; அத்தகைய.

மேற்கோள் : மாலைப்பொழுது மயக்க மூட்டும் இயல்புடையது என்பது :

'மதி உமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த
இம்மருள் மாலை'

— சிலப். கானல். 41.

Koviloor Digital Library

பகல் செய்வான் போய் வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள் மாலை
– தொல். பொருள். 148
இளம். மேற்கோள்.

மாலைக் காலத்தில் காம நோய் மிகுதல் :
ஐயறிவு அகற்றும் கையறு படரோடு
அகலிருவானம் அம்மஞ்சு ஈனப்
பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை
– அகம். 71.

மாலை வாரா அளவைக் காலியல்
கடுமாக் கடவு மதிபாக நெடு நீர்ப்
பொருகடல் முரணிய உண்கண்
தெரி தீங் கிளவி தெருமரல் உயவே
– குறுந். 250.

தனியோர் இரங்கும் பனி கூர் மாலை
– குறுந். 358.

117

அம்ம வாழி, தோழி! நலனே
இன்னது ஆகுதல் கொடிதே! – புன்னை
அணி மலர் துறைதொறும் வரிக்கும்
மணி நீர்ச் சேர்ப்பனை மறவாதோர்க்கே.

கூற்று : வரையாது வந்து ஒழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதில் கருத்தின்றித் தொடர்ந்து வந்து தலைவியொடு

Koviloor Digital Library

அளவளாவி வந்தான். ஒருநாள் வந்து தலைவியின் இல்லருகே காத்து நின்றானாக, அவன் கேட்கும் வண்ணம் தலைவி தன் தோழிக்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் கூறுவதனைக் கேள். புன்னையின் அழகிய மலர்கள் உதிர்ந்து வீழ்ந்து நீர்த்துறைகள் பலவற்றினையும் கோலம் செய்யும், நீல மணி போன்ற கடலை உடைய நெய்தல் நிலத்தின் தலைவனை ஒருநாளும் மறவாதோர்க்கு, அவர்களது மேனியழகு இங்ஙனம் ஆகுதல் கொடிதேயாம்.

உரை விளக்கம் : 'இன்ன ஆகுதல்' என்பது, இங்ஙனம் பலரும் அலர்தூற்றும் அளவுக்குப் பசலை பாய்தலைக் குறித்தது. தலைவனை மறவாதிருந்த செயலுக்கு ஒரு தண்டனைபோல் மேனியழகு கெட்டது என்றாள். 'மறவாதோர்க்கு' என்று படர்க்கையில் கூறியது, 'மறவாத நமக்கு' என்ற பொருளிலாகும். 'நல்லது செய்வார் நன்மையை அடைவர் என்று பொதுவான நம்பிக்கையும் நம்மளவில் பொய்யாயிற்று' என்று வெறுத்து உரைத்தாள் என்க.

தலைவன் விரைவில் வரைவானோ மாட்டோனோ என்னும் கவலை மீதூரப்பெற்று, ஊணும் உறக்கமும் தவிர்த்தமையின் மேனி அழகிழந்தது.

அழகிய நீர்த்துறைகளை உடையவன் இங்ஙனம் நம் அழகைச் சிதைக்கும் தீவினையைச் செய்வது அழகோ என்று வினவுவாள், 'புன்னை அணிமலர் துறைதொறும் வரிக்கும் ... சேர்ப்பன்' என்றாள்.

இனி, இச்செய்யுளை, தோழி தலைவனை இயற்பழித்தாளாக, அதனை மறுத்துத் தலைவி அவனைப் பாராட்டிக் கூறியதாகத் துறை விளக்கம் தந்து, 'நம்பெருமானைப் பழியாதே' என்பது குறிப்பெச்சம் என்றார் பெருமழைப்புலவர். சேர்ப்பனை மறவாதோர்க்கு நலனே இன்னதாகுதல் கொடிதே' என்பதில் மேற்சொன்ன குறிப்பெச்சம்

Koviloor Digital Library

இருப்பதாகக் கோடல் அத்துணைப் பொருத்தமின்று. அவனை மறவாதிருக்கும் நமக்கு இத்தகு தீமை செய்தது அவர் பெருமைக்கு இயைவது அன்று என்று நேர்ப்பொருள் காண்பதே பொருத்தமாகும்.

இனி, 'மறவாதீமே' என்றும் பாடம் உண்டு. இப்பாடம் கொண்ட ஈழத்து உரையாசிரியர், ''தலைவன்மாட்டு மிக்க அன்புடையேமாகிய யாம், அவன்மீது கொடுமை கூறுதல் தகாதே ..... சேர்ப்பன் நமக்குச் செய்த இன்பத்தை நினைந்து அவன்மீது அன்புடையையாய் மறவாதிருப்பாய்'' என்று உரை செய்தார்.

இதே பாடம் கொண்ட ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, ''சேர்ப்பன் தந்த நலத்தையுடையேமாகலின், அந்நலம் இத்தன்மைத்தாதல் கொடிதாம், ஆகவே, அதனை மறந்து கூறுவார் கூறுவனவற்றைக் கூறற்க'' என்கிறார். இவ்வுரையும் வலிந்துரையெனவே தோன்றுகின்றது. யாவராலும் புகழப்பட்ட தலைவியின் மேனியழகு இப்பொழுது கெட்டது. அதனால் ஊரார் அலர்மொழிந்தனர். இங்ஙனம் ஆனமைக்குக் காரணமாவது தலைவன் வரைவுக்கு ஏற்பன செய்யாமையாகும். இதனை உணர்த்துவதே தலைவியின் நோக்கமாகும். அங்ஙனமின்றி 'அவனை மறவாதே' என்று தோழிக்கு அறிவுறுத்தியதாகக் கொள்வது அத்துணைச் சிறப்பான கருத்தன்று என்க. அவர்கள் 'மறவாதீமே' என்ற பாடத்தைக் கொண்டதே இதற்குக் காரணமாகும். ஐயர் பதிப்பில் இப்பாடமே உள்ளது.

அருஞ்சொற்பொருள் : நலன் - அழகு; இன்னது ஆகுதல் - அலர் கூறுதற்குரிய நிலைமையுடைத்தாவது; வரிக்கும் - கோலம் செய்யும்; மணிநீர் - நீலமணிபோலும் நிறமுடைய கடல்நீர்.

மேற்கோள் : புன்னை கோலம் செய்தல் :

தடவுநிலைப புன்னைத் தாதணி பெருந்துறை

- அகம். 320.

Koviloor Digital Library

- முன்றில் பொன்னென
நன்மலர் நறுவீதாஅம்
புன்னை நறும் பொழில்

- அகம். 360.

குறிப்புப் பொருள் : "இதன்கண் புன்னையணி மலர் துறை தொறும் உதிர்ந்து கோலம் செய்தாற்போன்று சேர்ப்பனும் குறியிடம் தோறும் நம்மைத் தலைக் கூடித் தண்ணளி புரிந்தனன், அந்நன்றி மறக்கற் பாலதன்று என்று உள்ளுறை காண்க." (பெருமழைப்புலவர்)

இவர் 'மறவாதோர்க்கே' என்ற பாடங்கொண்ட போதும், 'மறவாதீம்' என்ற பாடத்திற்கு ஏற்பவே உள்ளுறை கண்டுள்ளார். 'மறவாதோர்க்கே' என்னும் பாடத்தையொட்டிக் குறிப்புப் பொருள் கூறவேண்டுமெனில், 'துறைதொறும் புன்னை கோலஞ்செய்யும் துறைகளை உடையவனாய் இருந்தே, நம்முடைய கோலத்தை (அழகை) அழியுமாறு விட்டனன்' என்பது பொருத்தமாகலாம்.

118

அம்ம வாழி, தோழி! யான் இன்று,
அறனிலாளற் கண்ட பொழுதில்,
சினவுவென் தகைக்குவென் சென்றனென்;
பின் நினைந்து இரங்கிப் பெயர் தந்தேனே.

கூற்று : சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி வாயில் மறுத்த தலைமகள், பின்பு தலைமகன் வந்துழி, நிகழ்ந்ததனை அவட்குக் கூறியதூஉம் ஆம்.

கூற்று விளக்கம் : ஊடுதற்குரிய காரணம் இருந்தும் தலைவி அவனை ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் வினவிய தோழிக்குத் தலைவி கூறியது அல்லது அவள் கேளாமலேயே,

Koviloor Digital Library

தலைவன் மீண்டு வந்தபொழுது ஆற்றாமை காரணமாகத் தான் நடந்து கொண்டதனைத் தன் தோழிக்குக் கூறியது.

உரை : தோழியே, நீ வாழி! யான் கூறுவதனைக் கேட்பாயாக. யான் இன்று, நம் காதலனாகிய அன்பில்லாதானைக் கண்டபோது அவன்பால் சினம் கொண்டு ஊடுவேன் என்றும், அவன் இல்லத்துட் புகாது தடுப்பேன் என்றும் உறுதிகொண்டு அவன்முன் சென்றேன். ஆனால், அவனைக் கண்ட மாத்திரத்தில், உலகியலை நினைந்தும் மனம் இரங்கியும் அவ்வுறுதி தளரப்பெற்று வறிது மீண்டேன். (என் இயல்பு இருந்தவாறு என்னே!)

உரை விளக்கம் : அறம் ஈண்டு அன்பின்மேல் நின்றது, அதனிற் சிறந்த அறமில்லையாகலின். 'கண்டபொழுதில்' என்பதனைக் காண நேரின் என்ற பொருளிற் கொள்க. இது அவனைக் காண்பதற்கு முன் நினைத்ததாகும். காணாதபோது நினைத்தது ஒன்றாகவும் கண்டபோது நடந்து கொண்டது அதற்கு மாறானதாகவும் ஆயிற்று என்றவாறு.

'பின் நினைந்து' என்றது, உலகியலை எண்ணிய பின் என்ற பொருள்பட்டது. அஃதாவது, ஆடவர் பரத்தையருடன் உறவு கொள்வது உலகியலில் உள்ளதே ஆதலின் அதற்கு வருந்தி, ஊடி, கணவனைப் பிரிதல் நன்றன்று என எண்ணி' என்க. கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகட்கு இஃது இயற்கை என்றவாறு.

'இரங்கி' என்றது தலைவன் தனக்குப் பண்டு செய்த தலையளியை நினைத்து மனம் நெகிழ்ச்சியுற்று என்ற பொருளிலாம். 'பெயர் தந்தேன்' என்றாள், வாய் பேசாது அவனை ஏற்றுக் கொண்டமை தோன்ற. இனி, பெயர்தருதல் என்பது, தான் பழையை சூளுரையை மாற்றிக் கொண்டதனைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : அறனிலாளன் - அறநெறிப்படி ஒழுகாதவன், அன்பற்றவன்; சினவுவென் - சினம் கொள்வேன்; தகைக்குவென் - தடுப்பேன்; இரங்கி - மனம் இளகி.

மேற்கோள் : ஊட நினைத்த தலைவி பின் அது மறந்து கூடுவது :

புலப்பல் எனச் சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு
- திருக். நிறையழிதல், 9.

கணவன் இகழினும் தானிகழாக் கற்புடைமை :

சேக்கை இனியார்பால் செல்வான் மனையாளால்
காக்கை கடிந்தொழுகல் கூடா
தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினும் கேள்வரை யேத்தி இறைஞ்சுவார்
- பரி. 20 : 86 - 89.

தலைவனைக் கண்டபோது அவன் குறைகள் மறைந்தொழிதல் :

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து.
- திருக். புணர்ச்சி விதும்பல், 6.

119

அம்ம வாழி, தோழி! நன்றும்
எய்யாமையின் ஏதில பற்றி;
அன்பு இலன் மன்ற பெரிதே -
மென்புலக் கொண்கன் வாராதோனே!

Koviloor Digital Library

கூற்று : 'வரைதற்கு வேண்டுவன முயல்வேம்' எனச் சொல்லி வரையாது செலுத்துகின்ற தலைமகன், சிறைப்புறத்தான் ஆனமை அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியைக் களவிற் கூடி இன்புற்ற தலைமகன், விரைவில் மணத்திற்கு ஆவன செய்வதாக வாக்களித்துவிட்டுத் தொடர்ந்து களவினை நீட்டித்தான். அவன் ஒருநாள் தலைவியின் வீட்டருகே மறைந்து நின்றதனைக் கண்ட தலைவி, அவன் கேட்டு மணத்திற்கு வேண்டுவன செய்யும் வகையில், தன் தோழிக்குச் சொல்லியது இது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் கூறுவதனைக் கேட்பாயாக. மென்புலமாகிய நெய்தல் நிலத்தலைவன் (நம் காதலன்) தன் மிகுந்த அறியாமை ஏதுவாக, வரைவதற்குரிய கடமைக்குத் தொடர்பில்லாத பிற நெறிகளை மேற்கொண்டவனாய், திருமணத்திற்குரிய ஏற்பாடுகளோடு வாரானாயினான். அவன் தெளிவாக நம்பால் அன்புடையனல்லன். (வன்கண்மை உடையவனேயாவான்).

உரை விளக்கம் : 'நன்றும் எய்யாமையின்' என்றாள், தலைவன் உலகியலைப் பெரிதும் அறியாதவன் என்ற பொருள்பட. அஃதாவது, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது நன்மக்கள் கடமை என்பதனைச் சிறிதும் உணராத பெரிய அறியாமை மிக்கவன் என்றபடியாம்.

'ஏது இல' என்றது, திருமண முயற்சிக்கு உதவாத செயல்கள் என்க. ஈண்டு, தொடர்ந்து களவிலேயே இன்பம் துய்க்க எண்ணிய அவன் செயல் என்க. கருதிய செயலுக்குப் பயன்படாத பிற செயல்களையே செய்கிறான் என்றாளாம்.

'வாராதோன்' என்றாள், தான் சொன்ன சொற்படி உரிய ஏற்பாட்டுடன் வாராதவன் என்ற பொருளில். இதனால் அவன் அன்புடையான் போலத் தோற்றம் காட்டி, முடிவில் பெரிதும்

Koviloor Digital Library

அன்பற்றவன் ஆயினான் என்பதுபட, 'அன்பிலன் மன்ற பெரிதே' என்றாள். பெண்ணின் மென்மைப் பண்பினை அறியாதவன் எனப் பழித்தாளாம். 'மென்புலக் கொண்கன்' என்றதனால், அவன் நிலம் தான் மென்புலமேயன்றி, அவன் வன்புலம் போன்ற அன்பற்ற நெஞ்சினன் எனக் குறிப்பித்தாளாம்.

'உறுதியான அன்பும், மொழியும் உடையான் அல்லன் என்பாள், மென்புலக் கொண்கன்' என்றாள் என்பது பெருமழைப்புலவர் கருத்து.

புலம் என்பது அறிவும் ஆதலின் அவன் அறிவாலும் பண்பாலும் மெல்லியன் என்றாளும் ஆம்.

இனி, வரைதற்கு ஏதுவாகாதன, பகலிலும் இரவிலும் பயின்று வருதலும் அலர் விளைவித்தலும் முதலாயின என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. 'நன்றும் எய்யாமையின்' – 'வரைவுக்கு இடையீடாக அயல் வரைவு நிகழினும், அலர் வெளிப்படினும் யாம் இறந்துபடுவேம் என்பது அறிந்திலன்' என்பார் அவர்.

இங்ஙனம் அறக்கழிவுடைய சொற்களைச் சொல்வது தகாது ஆயினும், வரைதல் வேட்கைபற்றித் தலைவன் சிறைப்புறத்தே நிற்கக் கூறியதாதலின் அமைவுடைத்தாகும். இதற்கு 'அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றின் சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர்' (தொல். பொருள். 113.) என்னும் விதி கொள்க.

அருஞ்சொற்பொருள் : நன்றும் – பெரிதும்; எய்யாமை – அறியாமை; ஏதில – தொடர்பற்ற; பற்றி – மேற்கொண்டு; மென்புலம் – நெய்தல் நிலம்.

இலக்கணக்குறிப்பு : வாராதோன் – வாராதான் ... ஆ, ஓ ஆனது செய்யுள் விகாரம்; மன்ற – தெளிவுப் பொருளில் வந்த இடைச்சொல்.

Koviloor Digital Library

120

அம்ம வாழி, தோழி! நலம் மிக
நல்ல ஆயின, அளிய மென் தோளே –
மல்லல் இருங் கழி மல்கும்
மெல்லம் புலம்பன் வந்தமாறே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டியன செய்து கொண்டு மீள்வதாகச் சொல்லிச் சென்ற தலைவன் வந்து தலைவி வீட்டின் புறத்தே மறைவாக நிற்கக் கண்ட தலைமகள் தன் தோழிக்கு மகிழ்ந்து உரைத்தது இது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் சொல்வதனைக் கேட்பாயாக. பெரிய உப்பங்கழியில் உள்ள நீர் கருமணலை விரியச் செய்யும் மென்புலமான நெய்தல் நிலத்தலைவனான நம் காதலன் தான் சொன்ன வண்ணமே நம்மை நாடி வந்தமையால், இரங்கத்தக்க வகையில் இதுகாறும் மெலிவெய்தியிருந்த இத்தோள்கள், தாம் இழந்த அழகினை விட மிகுதியான அழகினைப் பெற்றுப் பெரிதும் பொலிவுற்றன. (அவர் அன்பு இருந்தவாறு என்னே!).

உரை விளக்கம் : நலமாவது அழகு. தோள் அழகு முன்னையினும் இப்பொழுது பெருகினமையின் 'நலமிக' என்றாள். அஃதாவது, தலைவன் முன்னர் தன்னொடு கூடி மகிழ்ந்த காலத்து இருந்ததைவிடக் கூடுதலான அழகைப் பெற்றனவாம். 'நல்லவாயின' என்றது பொலிவுமிகுந்தன என்னும் பொருட்டு. இதனால், தலைவன் பிரிந்திருந்தபொழுது அவை நலம் இழந்திருந்தமை குறிப்பால் உணர்த்தப்பட்டது. 'அளிய மென்றோள்' என்றது, தலைவன் வருதற்குமுன் இருந்த நிலைபற்றியதாம். அவன் அளியை அவை இனி முழுமையாகப் பெறுமாதலின்,

Koviloor Digital Library

அதுபற்றிய நினைவால் பன்மடங்கு பூரித்தன என்க. பண்டுபோல் நலம் மிக உடையவாயின என்றார் துரைசாமிப் பிள்ளை.

மல்லல் வளமாகும். மிகுதியான நீர்ப்பெருக்கும், குவளை முதலியனவும், மீனும் சங்கும் கழியின் வளத்திற்குக் காரணமாயின. இதனால், அவன் செல்வ மிகுதி பாராட்டப்பட்டது. கழியின் நீர் பெருகி, அயலே பாய்தலினால் மணலில் அறல் உருவாயிற்று என்பாள், 'நீர் அறல் விரியும்' என்றாள். மென்னிலமான நெய்தலுக்குரிய தலைவன் மெல்லம்புலம்பனாயினன். தலைவன் மணப்பின் மாணலம் எய்தலும் தணப்பின் நெகிழ்வதும் தோளுக்கு இயல்பு என்க.

இனி, 'நல்லவாயின' என்றது, இனி அவை நல்லவாகும் என்ற பொருள் தோன்ற நின்றதும் காண்க. அவை நலம் மிகப் பெறுதல் உறுதியாதலின் இறந்தகால வாய்பாட்டால் கூறினாள்.

வரைதற்கு வேண்டுவன ஈட்டிக்கொண்டு வந்தமை தோன்ற மல்லலம் இருங்கழி நீர் அறல் விரியும் என இழுமென் மொழியால் கூறியது இறைச்சி என்றார் பெருமழைப் புலவர்.

அருஞ்சொற்பொருள் : நலம் – அழகு; நல்லவாயின – பொலிவுற்றன; அளிய – இரங்கத்தக்கன; மல்லல் – வளம்; இருங்கழி – பெரிய உப்பங்கழி, கரிய கழியுமாம்; மலிநீர் – மிக்க நீர்; புலம்பன் – கடற்கரைத் தலைவன்; வந்தமாறு – வந்தமையால்.

மேற்கோள் : தலைவன் வரத் தலைவியின் நலனும் திரும்புதல் :

மெல்லம் புலம்பன் வந்தென
நல்ல வாயின தோழியென் கண்ணே

– ஐங். 189.

Koviloor Digital Library

- சிலம்ப
நீ யிவண் வரூஉம் காலை
மேவரும் மாதோ இவள் நலனே தெய்யோ
- ஐங். 238.

குன்று கெழு நாடன் தானும்
வந்தனன் வந்தன்று தோழியென் நலனே.
- ஐங். 263.

தோழிக்கு உரைத்த பத்து முற்றிற்று

Koviloor Digital Library

13. கிழவற்கு உரைத்த பத்து

அஃதாவது, தலைவனை நோக்கிப் பிறர் கூறும் நிலையிலமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி என்பது.

121

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?-
முண்டகக் கோதை நனைய,
தெண் திரைப் பௌவம் பாய்ந்து நின்றோளே!

கூற்று : பரத்தை தலைமகற்குச் சொல்லியது. 'பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றான்' என்பது அறிந்து தலைவி புலந்துழி, 'இத்தவறு என்மாட்டு இலை; நீ இப்புலவியை நீக்க வேண்டும்' என்று தோழிக்குத் தலைமகன் கூற, புலவியை நீக்கக் கருதிய தோழி, அவள் இளமை கூறி, நகையாடிச் சொல்லியதூஉம் ஆம்.

இனிவருகின்ற பாட்டு ஒன்பதிற்கும் இத்துறையாம்.

கூற்று விளக்கம் : *(1)* அஃதாவது, கடலாடிய பரத்தை யொருத்தியைத் தன் காதலனொடு உறவுடையாள் என ஐயுற்ற காதற்பரத்தை, அவன் தன் வீடு வந்தபொழுது ஊடிச் சொல்லியது.

(2) தன் கணவன் பெதும்பைப் பருவத்துப் பரத்தை யொருத்தியோடு உறவு கொண்டுள்ளதாக ஐயுற்ற தலைவி அவனொடு ஊடினாள். தலைவன் தன்பால் அவ்வொழுக்கம் இல்லை என்று தோழியிடம் உறுதிகூறி, புலவி நீக்க உதவுமாறு வேண்டினான்.

Koviloor Digital Library

அதற்கு உடம்பட்ட தோழி, தலைவன் உறவு கொண்ட அப்பெண் ஒரு பேதைப்பெண் என்பதுபட நகையாடிச் சொல்லியது இது.

உரை : கொண்கனே! தன் தலையிற் சூடிய முள்ளி மலர்மாலை நனையுமாறு தெளிந்த அலைகள் கொண்ட கடலில் நீராடித்திளைத்த நின் அன்புக்குரிய காதலியை யாம் காணவில்லையோ? (கண்டோம் என்றபடி).

உரை விளக்கம் : இச்செய்யுட்கு வகுத்த இரு துறைகளில் முதலாவதே மிகவும் பொருத்தமானது. எனவே, அதனையொட்டியே ஈண்டு உரை வகுக்கப்பட்டது. பரத்தை தலைவனின் காதலி என்று குறித்தது அவன் மனைவியை. அவன் தன்னொடு நீராடாது தன் மனைவியொடு நீராடினான் என அவள் புலவி கூர்ந்தபொழுது, அதனை அவன் மறுத்தான் என்பது 'கண்டிகுமல்லமோ' என்ற வினாவால் தெரிகின்றது. 'நின்கேள்' என்றது ஊடற்குறிப்பொடு சொன்னதாகக் கொள்ளற்பாலது. ஏனெனில், தானே அவனுக்கு மெய்யான கேள் என்பது அவள் கருத்து என்பதால். 'யாம் காணவில்லை என்று நீ நினைத்து உண்மையை மறைக்கின்றனை' என்பது படக் 'கண்டிகும் அல்லமோ?' என்றாள். 'கொண்க!' என்றது, கொண்கனாயினும், அப்பெயர்க்குத் தகுதியின்றிப் பொய் புகன்றனை என்னும் குறிப்பில் என்க. தன் தலையில் சூடிய கழிமுள்ளி மலர்மாலை நன்கு திரையால் துவளுமாறு பலரும் அறிய நின்னொடு நீரில் பாய்ந்து திளைத்ததனை யானும் என்தோழிமாரும் கண்டோம் என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : கண்டிகும் – கண்டோம்; கொண்கன் – நெய்தல் நிலத்தலைவன்; கேள் – காதலி, மனைவி; முண்டகம் – கழியில் மலரும் மலர் (முள்ளி); தெண்திரை – தெளிந்த அலை; பௌவம் – கடல்.

இலக்கணக்குறிப்பு : கண்டிகும் – தன்மைப் பன்மை வினைமுற்று; கொண்க – விளி.

Koviloor Digital Library

மேற்கோள் : மகளிர் நீராடுகையில் கோதை புனைந்திருத்தல்:

'அணிமலர் முண்டகத் தாய் பூங்கோதை
மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்
துணிநீர்ப் பௌவம் துணையோ டாடி'

- நற். 245.

122

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?-
ஒள்இழை உயர்மணல் வீழ்ந் தென,
வெள்ளாங் குருகை வினவுவோளே!

துறை : மேலது.

உரை : கொண்க! நின் காதலியாயுள்ளவளை யாம் கண்டதில்லையென நினைத்தனையோ? அவள், உயர்ந்த மணல் மேட்டில், தன் கல்லிழைத்த ஒளியுடைய அணி வீழ்ந்ததாக, அதனை மீண்டும் கொள்ளும் பொருட்டு, அருகே மேயும் வெள்ளாங்குருகினை நோக்கி, 'என் அணியைக் கண்டாயோ?' என வினவி நின்றாள்.

உரை விளக்கம் : பொன்னும் மணிகளும் கொண்டு செய்யப்பட்டது என்னும் குறிப்பில் 'ஒள்ளிழை' என்றாள். உயர்மணல் வீழ்ந்ததற்குக் காரணம், அவட்கு விளையாட்டின் மேலிருந்த மிகுவிருப்பமாகும். அஃதாவது, விளையாட்டுப் பருவம் நீங்காத பேதைப்பெண் என்பது கருத்து. அவளுடைய பேதைமைக்கு மேலுமொரு சான்றாக, பேசாத வெள்ளாங்குருகை வினவியதனைச் சுட்டினாள். தன்னைப்போலத் தலைவனுக்குக் காம இன்பம் தரும் தகுதி இல்லாதவள் அவள் எனப்பழித்தாள் என்றறிக.

Koviloor Digital Library

வெள்ளாங்குருகு : இது சிறியதாகவும், தூய வெண்ணிறச் சிறகுகள் கொண்டதாகவும் இருக்கும் என்பது, 'சிறுவெள்ளாங்குருகே, சிறு வெள்ளாங்குருகே துறைபோகு அறுவைத் தூமடி அன்ன நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே. (நற். 70) என்ற நற்றிணைப் பகுதியால் அறியப்படுகிறது. இதுபற்றிய விளக்கத்தை ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களின் ஐங்குறு நூற்று உரையில் (வெள்ளாங்குருகுப்பத்து) கண்டுகொள்க.

அருஞ்சொற்பொருள் : ஒள்ளிழை – ஒள்ளிய அணிகலன்; வெள்ளாங்குருகு – ஒரு நீர் வாழ் பறவை, உள்ளான் என்னும் பறவை.

123

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே! –
ஒண் நுதல் ஆயம் ஆர்ப்ப,
தண்ணென் பெருங் கடல் திரை பாய்வோளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! நின் அன்புக்குரிய காதலியை யாம் கண்டேம் அல்லேமோ? (கண்டனம்) யாம் காணுங்கால், அவள் ஒளிபொருந்திய நெற்றியைக் கொண்ட தன் தோழியர் மகிழ்ந்து ஆரவாரிக்க, தண்ணெனக் குளிர்ந்த பெரிய கடலில் பாய்ந்து நீராடினாள்.

உரை விளக்கம் : 'யாம் நின் காதலியோடு நீ நீராடியபோது, அவளை மட்டும் காணவில்லை. அவள் ஆயத்தாரையும் கண்டோம். பலரும் காண நீராடியதனை எம்மிடம் மறைப்பது கொண்கனாகிய நினக்கு அழகோ?' என்றாள் என்க. எம்மில்லத்தில் பொய்ம்மொழி கூறி, நீ நின் காதலியிடம் அன்பு மிக வைத்தனையாதலின், இனி எம்பால் வாரற்க. அவளிடமே செல்க என ஊடினாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : ஒண்ணுதல் – ஒளியுடைய நெற்றி; ஆயம் – கூட்டம்; தோழியர் குழாம்; ஆர்ப்ப – ஆரவாரம் செய்ய; திரை – அலை.

இலக்கணக்குறிப்பு : கண்டிகும் – தன்மைப் பன்மை வினைமுற்று; பாய்வோள் – ஆகாரம் ஓகாரமானது செய்யுள் விகாரம்.

124

கண்டிகும் அல்லமோ, கொண்க, நின் கேளே? –
வண்டற் பாவை வௌவலின்,
நுண் பொடி அளைஇக் கடல் தூர்ப்போளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! யாம் நின் அன்புக்குரியாளைக் கண்டு அறியேமோ? (நன்கு அறிவோம்). அவள், கடல் தன் அலைகளால், கரைமீது தான் இழைத்திருந்த பாவையைக் கவர்ந்து சென்றதனால் வெகுண்டு நுண்ணிய மணற்பொடியை அளைந்து அதனைக் கடலில் வீசி அதனைத் தூர்த்தற்கு முயல்வாளாவாள்.

உரை விளக்கம் : வண்டல் மண்ணால் பாவை செய்து, அதற்கு மலர் புனைந்து விளையாடுவது இளம் பெண்களின் வழக்கம். மணல்வீடு கட்டி விளையாடுவது போன்றதொரு விளையாட்டிது. அலைகள் எறிந்து அழிக்க இயலாத இடத்தில் பாவை இயற்றவும் அறியாதாள் என்பது இதனாற் பெறப்பட்டது. மேலும், கடலின் பெருமை தானும் உணராதவளாய், நுண்மணலால் அதனைத் தூர்க்க முயலும் அளவுக்கு அவள் பேதைமையுடையாள் என்பதும் பெறப்பட்டது. இத்தகு இளைய பருவத்தாள்பால் நீ பெறும் காம நுகர்ச்சி தான் இருந்தவாறு என்னே! என்று தலைவனை இகழ்ந்தாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : வண்டற்பாவை - மண்ணால் இயற்றிய உருவம்; வௌவுதல் - கவர்தல்; நுண்பொடி - மணல்; அளைஇ - அளைந்து அள்ளி.

மேற்கோள் : பேதை மகளிர் மணலால் கடல் தூர்க்க முயலுவது :

வண்டா றிரையழிப்பக் கையால் மணல் முகந்து
மதிமேல் நீண்ட
புண்தோய்வேல் நீர்மல்க மாதர் கடல்தூர்க்கும்
புகாரே யெம்மூர்
- சிலம்பு. 7 : 30

125

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே? -
தெண் திரை பாவை வௌவ,
உண்கண் சிவப்ப அழுது நின்றோளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! நின் அன்புக்குரிய காதலியை யாம் காணேம் அல்லமோ? (கண்டனம்). அவள், தான் கரைக்கண்ணே இயற்றிய மணற்பாவையைக் குளிர்ந்த கடற்றிரை கவர்ந்து சென்றதாக, அவ்விழப்பைப் பொறாமல் தன் மையுண்ட கண்கள் சிவப்பூர அழுது நின்றாள்.

உரை விளக்கம் : அலைகள் உலாவும் இடத்தில் பாவை அமைத்தலால் அதனை அலைகள் அழிக்கும் என்பதும் உணராதாள் என்பதும், அங்ஙனம் அழித்தபோதும் மீண்டும் ஒன்றனை அமைத்தலும் கூடுவதே என்பதும் உணராதாள் என்பதும் இதனால் விளங்கும். இதற்கும், மேற் செய்யுட்குச் சொன்ன விளக்கமே கொள்க.

Koviloor Digital Library

மிகுதியாக அழுதால் கண்கள் சிவக்கும் என்பது கூறவேண்டா. ஈண்டுக் கருமையால் அழகுபெற்ற அவள் கண்கள், அந்தமையின் கருமையும் மறையுமாறு சிவப்புற்றன என்று கொள்க.

126

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?-
உண்கண் வண்டினம் மொய்ப்ப,
தெண் கடற் பெருந்திரை மூழ்குவோளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! நின் அன்பிற்குரிய காதலியை யாம் கண்டேம் அல்லமோ? (கண்டனம்) அவள், தன் மையுண்ட கண்களில் வண்டினம் மொய்க்கவும், தெள்ளிய கடலின் பெருந்திரைக்கண்ணே மூழ்கித் திளைத்தாள்.

உரை விளக்கம் : அவள் மையுண்ட கண்கள் குவளை மலர்களேயென எண்ணிய வண்டினம் அவற்றின் மேல் மொய்த்தன என்று கொள்க. அன்றியும், தம் மின வண்டுகளோவென ஐயுற்று மொய்த்தன என்றலும் அமையும். அவ்வண்டுகளைக் கையால் ஓச்சவும் அறியாளாய், பெரிய திரையில் மூழ்கி அவற்றைக் கடிய முயன்றாள் என்க.

இதற்கும் மேற்கூறிய விளக்கமே அமையும்.

Koviloor Digital Library

127

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?–
தும்பை மாலை இளமுலை,
நுண் பூண் ஆகம் விலங்குவோளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! நின் அன்பிற்குரிய காதலியை யாம் கண்டதில்லையயோ? (கண்டனம்) அவள் தும்பை மலரால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த தன் முதிர்ச்சியுறாத முலைகளின்கண் நினது நுண்ணிய வேலைப்பாடுமிக்க அணிகலன்களை உடைய மார்பு தோயாதவாறு நின்னோடு ஊடி விலகிச் சென்றவளாவாள்.

உரை விளக்கம் : 'இளமுலை' என்றாள், அவள் மிக்க இளமையுடையாள் என்பது பட. நீ அவளை அணைக்க விரும்பியும் அவள் ஊடலால் விலகிச் சென்றாள் ஆதலால், அவள் ஊடல் தீர்த்துக் கூடுதற்கு அவளிடமே மீள்க என்றாள் என்க.

இனி, இதற்கு, 'தும்பை மலர் மாலையணிந்த இளமைத் தன்மையமைந்த முலைகள் நுண்ணிய தொழிலமைந்த ஆபரணமணிந்த மார்பின்கண் கச்சு விலகத் தோன்றும் தன்மையாள்' என்று உரை வகுப்பார் ஈழத்து உரையாசிரியர். தும்பை மாலையை மகளிர்அணிவதாகச் சொல்வது இச்செய்யுள் மட்டுமே என்பது காணத்தக்கதாகும். பொதுவாகத் தும்பை மாலையை மகளிர் அணிவதாகக் கூறுவது இல்லை. எனினும், விளையாட்டு மகளிர் சூடுவதாகக் குறிஞ்சிப்பாட்டில் கூறப்படுகிறது. (குறிஞ்சி. 90) இதனைச் சூடுவார் இளமகளிர் என ஐயரவர்களும் கூறுவார். தலைவன் காதலி, இளவயதினள் என்பதனைச் சுட்டுவதாக இதனைக் கொள்ளலாம். ஐயர் அவர்கள் தம் குறிப்புரையின்கண், 'தும்பை மாலையாலும் நுண்பூணாலும் விலங்குவோள் (குறுக்கிட்டுக் கிடப்போள்) என்று கூறுவதால்,

Koviloor Digital Library

நுண்பூணும் அவள் மார்பகத்ததே என்பது அவர் கருத்தாகத் தெரிகின்றது. இச்செய்யுள் தெளிவாக உணரற்கரிதாவது என்பதே உண்மை.

அருஞ்சொற்பொருள் : விலங்குதல் - விலகுதல், தடைசெய்தல்.

128

கண்டிகும் அல்லமோ, கொண்க! நின் கேளே?-
உறாஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை ஊட்டுவோளே!

கூற்று : மேலது.

உரை : கொண்க! நின் அன்புக்குரிய காதலியை யாம் கண்டோம் அல்லமோ? (கண்டனம்). அவள் எத்தகையவள் எனின், பால் பொருந்தப் பெறாத வறுமுலையை, உண்ணாத இயல்பினதான விளையாட்டிற்கே உரிய பாவையினது வாயில் சேர்த்தி ஊட்ட முயல்பவள்.

உரை விளக்கம் : பால் பொருந்தப் பெறாத முலைகள் என்றதாலும், பொம்மைக்கு அதுகொண்டு பாலூட்ட முயல்வாள் என்றதாலும் அவள் விளையாட்டுத் தன்மை இன்னும் நீங்கப்பெறாத பேதையென்பது பெறப்பட்டது. இங்ஙனம் கூறியது, 'நின் மனையாள் மிகவும் இளையவளாதலின், அவள்பால் காம இன்பம் நுகரவிரும்புவது நின் அறியாமையே ஆதலின், காமச் செல்வி முழுமைபெற்ற என்பால் அதனை நுகரவிரும்புவதே அறிவுடைமை' என்னும் கருத்திலாகும்.

'உறா வறுமுலை' என்றதனை முகிழாத வறிய முலை என விளக்குவாரும் உண்டு. இதனினும் பால் ஊறப்பெறாத என்பது அமைவுடையதாம். 'இல்லி தூர்ந்த பொல்லா

Koviloor Digital Library

வறுமுலை' (புறம். 164) என்றதும் காண்க. பாவையைத் தன் குழந்தையாகப் பாவித்து விளையாடும் பேதைப் பருவத்தாள் என்பது இதன் கருத்தாகக் கொள்க. இனி, ஊறா வறுமுலையென்று பாடம் கொள்ளலும் ஒன்று.

அருஞ்சொற்பொருள் : உறா - பால் ஊறப்பெறா; முகிழாத; மடா - மடுத்து, வாயில் புகுத்தி; உண்ணாப்பாவை - விளையாட்டுக்குரிய பாவை; பஞ்சாய்க்கோரைப் பாவை என்க. அதுவே மடியில் வைத்து விளையாடற்குப் பொருந்துவதாம். மணற்பாவையெனில் அதற்கு வாய்ப்பில்லையென்க. மண்ணாற் செய்த பாவையென்றார் ஐயர்.

குறிப்பு : இப்பத்தில் 129, 130 ஆகிய செய்யுட்கள் கிடைத்தில.

நெய்தற்கண் மருதத்தின் உரிப்பொருள் மயங்கிவருவதை இப்பத்தில் காண்க. பெதும்மைப்பருவத்தாள் ஒரு தலைவியொடு வேட்கை நிகழ்ந்தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்தது என்று இப்பத்துச் செய்யுட்களுக்கும் துறை கூறுவார் நச்சினார்க்கினியர். (தொல். நச். 40) பரத்தை கூற்றாகவும் தோழி கூற்றாகவும் கொள்ளத்தக்கன என ஐங்குறு நூற்றுக்குத் துறை வகுத்த சான்றோர் கூறினாலும் நச்சினார்க்கினியர் தலைவி கூற்றாகக் கொள்வது கொண்டு சங்கப்பாக்கள் பொதுவாகக் கொள்ளப்படுதற்கு மாறான துறைப்படுத்தவும் இடமளிப்பன என்னும் உண்மையை உணரலாம். இந்நூலில் மட்டுமல்லாது, ஏனையவற்றிலும் பல செய்யுட்களுக்கு இத்தகு நிலையே அமைந்துள்ளமை காணலாம்.

Koviloor Digital Library

14. பாணற்கு உரைத்த பத்து

அஃதாவது தலைமக்களுக்கு வாயிலாகும் பாணனை நோக்கிக் கூறுவதாக அமைந்த பத்துச் செய்யுட்களின் தொகுதி என்பது.

131

நன்றே, பாண! கொண்கனது நட்பே –
தில்லை வேலி இவ் ஊர்க்
கல்லென் கௌவை எழாஅக்காலே.

கூற்று : வாயில் வேண்டி வந்த பாணன் தலைமகன் காதன்மை கூறினானாக, தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக் கூறியது.

கூற்று விளக்கம் : பரத்தை மனையிலிருந்து தலைவிபால் தூது வந்த பாணன், தலைவிமீது தலைவன் பேரன்புடையான் என்று கூறி வாயில் வேண்டிய பொழுது தலைமகள் இங்ஙனம் கூறி வாயில் மறுத்தாள்.

உரை : (தலைவனிடமிருந்து தூதுவந்த) பாணனே! தில்லை மரங்களை வேலியாக உடைய இவ்வூரிலே, கல்லென்னும் ஒலியோடு பழிமொழி பிறவாது எனின், நீ கூறுவது போல, நம் கொண்கனுக்கு நம்முடன் உள்ள நட்பு இனிமையுடையதாகும்.

உரை விளக்கம் : தில்லை என்பது நெய்தல் நிலத்துக்குரிய மர வகையாகும். 'சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலம்' எனச் சிதம்பரத்

Koviloor Digital Library

திருத்தலம் மாணிக்கவாசகப் பெருமானால் பாராட்டப்படுவது காண்க. மரப்பெயர் ஊருக்கு ஆயிற்று. தில்லை மரங்களை மிகுதியாக உடைமையின், அம்மரங்களே அவ்வூருக்குப்பாதுகாப்பான வேலியாக அமைந்தது என்பாள், 'தில்லைவேலி இவ்வூர்' என்றாள். இவ்வூரின் கொண்கனாயினும் தலைவன் தன்னைத்தானே காத்தொழுகும் பண்புடையானல்லன் என்றாள். 'கல்லென் கௌவை' என்றது, தலைமகனது பரத்தைமையொழுக்கம் பற்றிய மிகப்பெரிய அலர் மொழியாகும். ஊரெல்லாம் அவன் தீயொழுக்கம் பற்றி அலர்மொழிதலால் தான் பெரிதும் வருத்தமுறுதல் பற்றி, 'இவ்வூர்' என வெறுப்புத்தோன்றச் சுட்டினாள். இவ்வாறு யான் துன்புறுதற்குக் காரணமான தலைவன் என்பால் பேரன்புடையான் என்று நீ கூறுவது வியப்புக்குரித்து என்றாளாம். அம்பல், அலர், கௌவை என்னும் மூன்றனுள் மூன்றாவது மிகப்பெரிய பழிமொழியாகும். அப்பழிமொழிக்குக் காரணமான பரத்தையர் தொடர்புள்ளவன் என்பால் உண்மையான அன்புடையனாதல் இயலாது என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : நட்பு – அன்புடன் அமைந்த உறவு; தில்லை – தில்லைமரம்; கௌவை – பழியின் முதிர்ந்த நிலை.

இலக்கணக்குறிப்பு : நன்றே – ஏகாரம் தேற்றம்; கால் – ஏழாம் வேற்றுமைப் பொருள்தரும் இடைச்சொல்; பாண – விளி; கல் – ஒலிக்குறிப்புச் சொல்.

மேற்கோள் : மரங்கள் முதலியவற்றை வேலியாக உடைய ஊர் என்ற வழக்கு :

முல்லைவேலி நல்லூரானே – புறம். 144.

வேரல்வேலி ..... சாரல் நாட – குறுந். 18.

காந்தள்வேலி ஓங்குமலை நன்னாட்டு – குறுந். 76.

Koviloor Digital Library

முந்தூழ் வேலிய மலை கிழவோன்
– குறுந். 239.

பெருநீர் வேலியெஞ் சிறு நல்லூரே
– குறுந். 345.

132

அம்ம வாழி, பாண! – புன்னை
அரும்பு மலி கானல் இவ் ஊர்
அலர் ஆகின்று, அவர் அருளுமாறே.

கூற்று : வாயில் வேண்டிவந்த பாணன், 'நீர் கொடுமை கூற வேண்டா; நும்மேல் அருள் உடையர்' என்றாற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை வீட்டிலிருந்து தலைவனால் தூதுவனாக விடப்பட்ட பாணன், தலைவியைக் கண்டு, தலைவன் அவள்மேல் பேரருள் உடையவன் என்று கூறி, தலைவன் மேற்பழி கூறவேண்டாவென வேண்டியபொழுது தலைவி அவனுக்குக் கூறி வாயில் மறுத்தது.

உரை : பாணனே! நீ வாழி! யான் கூறுவதனைக் கேள். நீ கூறுவதுபோல் நம் தலைவர் எனக்கு அருள் செய்யும் முறையைப்பற்றி, அரும்புகள் மிகுந்த புன்னை மரங்களை மிகுதியாக உடைய கடற்கரைச் சோலை சூழ்ந்த இவ்வூரில் அலர் எழுந்தது. (இதனை அறிந்து வந்த வழியே மீள்க!)

உரை விளக்கம் : தலைவன் தன்னை நீத்து, பரத்தை மனைக்கண் நெடுநாள் தங்கியதனால், தனக்குண்டான உடல் மெலிவையும், உள்ளத்து வருத்தத்தையும் கண்ட ஊரார் தலைவனது தீயொழுக்கத்தைப் பலபட எடுத்துச் சொல்லிப் பழித்தமையைப்

Koviloor Digital Library

பாணன் உணருமாறு செய்து, 'இதுதான் நம் தலைவர் எனக்குச் செய்யும் பேரருளின் அழகா?' என்று வினவி வாயில் மறுத்த நயம் பாராட்டத்தக்கது. பொய்யனுக்குத் தூதுரைக்க முன் வந்த பாணனுக்குத் தீங்கு வாரமைப் பொருட்டு, 'வாழி பாண' என வாழ்த்தினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : மலி – மிகுந்த; கானல் – கடற்கரைச் சோலை.

இலக்கணக்குறிப்பு : அம்ம – கேட்பிக்கும் இடைச் சொல்; ஆகின்று – ஆகின்றது.

குறிப்புப் பொருள் : அரும்புமலி கானல் இவ்வூர் என்றது புன்னை மரந்தோறும் அரும்புகள் முகிழ்ந்து அலராதல் போன்றே, இவ்வூரில் உள்ளார் அனைவரும் தலைவன் ஒழுக்கம் பற்றிய பழியையே தூற்றுகின்றனர் என்னும் பொருட்டு.

133

யான் எவன் செய்கோ? பாண! – ஆனாது
மெல்லம் புலம்பன் பிரிந்தென,
புல்லென்றன, என் புரி வளைத் தோளே!

கூற்று : வாயிலாகப் புகுந்த பாணன் தலைமகள் தோள் மெலிவு கண்டு, 'மனைப்புறத்துப் போய் வந்த துணையானே இவ்வாறு வேறுபடுவது தகாது' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் கடமை காரணமாகப் பிரிந்திருந்த பொழுது தலைமகள் இல்லத்திற்கு வந்த பாணன், பிரிவாற்றாமையால் மேனிவாடிக் கிடந்த தலைவியைக் கண்டு, சின்னாள் பிரிந்தமைக்கு ஆற்றாது இங்ஙனம் வருந்தி மெலிதல் தகாது என்று கூறியபொழுது அவற்குத் தலைவி கூறியது.

Koviloor Digital Library

உரை : பாணனே! யான் என்ன செய்ய வல்லேன்! நெய்தற் புலத் தலைவனாகிய நம் தலைவர் சின்னாள் பிரிந்ததற்கு ஆற்றாது, முறுக்குடைய வளையல்கள் அணிந்த என் தோள்கள், அவன் பிரிந்த அப்பொழுதே, என்னளவன்றியும் மெலிந்து பொலிவிழந்தன.

உரை விளக்கம் : தலைவன் தன் சமூகக் கடன்களை ஆற்றுதற் பொருட்டுப் பிரிதல் தவிர்க்கவியலாதாகலான், இல்லுறை மகளிர் ஆற்றியிருத்தல் கடனாகவும் இங்ஙனம் மெலிதல் நன்றோ என வினவினான் பாணனாதலால், யான் அதனை நன்கறிவேனானாலும் என்தோள்கள் அதனை அறியும் அறிவில்லாதன. எனவே, தலைவன் பிரிந்த அளவிலேயே மெலிந்து விட்டன. என்னைக் குறை கூற வேண்டா என்பாளாய், 'யான் என் செய்கோ?' என வினவினாள். ஆனாது என்றது அமையாது என்னும் பொருட்டு. அஃதாவது உடம்படாது என்பது. இனி, ஆனாது என்பதற்குத் தலைவன் தொடர்ந்து பிரிந்து சென்றதனால் தோள் மெலிந்தன என்று பொருள் செய்தலும் பொருந்துவதே.

அருஞ்சொற்பொருள் : எவன் செய்கோ – என்ன செய்வேன்; பிரிந்தென – பிரிந்த அப்போதே; புன்மை – பொலிவின்மை; புரிவளை – முறுக்கமைந்த, வளைந்த.

இலக்கணக்குறிப்பு : பிரிந்தென – செய்தென என்னும் வினையெச்சம்; செய்கோ – ஓகாரம் இரக்கக் குறிப்பு.

மேற்கோள் : பிரிவினால் தோள் மெலிதல் :

இலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந்தன்றவர் மணந்த தோளே
– குறுந். 50.

நுதல் பசப்பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடி
நெகிழ்ந்து
– குறுந். 185.

Koviloor Digital Library

தோள் தன்னள வின்றியும் மெலிதல் :
நல்லன் என்றும் யாமே
அல்லன் என்னும் என் தடமென் தோளே
– ஐங். 11.

134

காண்மதி, பாண! – இருங் கழிப் ....
பாய்பரி நெடுந் தேர்க் கொண்கனொடு
தான் வந்தன்று, என் மாமைக் கவினே.

கூற்று : பிரிவின்கண் தலைமகள் கவின் தொலைவு கண்டு வெறுத்து ஒழுகுகின்ற பாணற்குத் தலைமகன் வந்துழிக் கவின் எய்திய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பிரிந்திருந்த பொழுது தலைவியின் அழகு சிதைந்தது கண்டு மனம் வெறுப்புற்றான் பாணன். தலைவன் திரும்பி வந்ததும் தலைவி தான் இழந்த அழகினை மீண்டும் பெற்றாள். அப்பொழுது அங்கு இருந்த பாணனிடம் தலைவி கூறியது இது.

உரை : பாணனே! பெரிய கழிகளிடத்துப் பாய்ந்து செல்லும் குதிரைகள் பூட்டிய நெடிய தேரினைக் கொண்ட கொண்கன் வந்தான்;. அவனொடு சென்ற என் மாமைக் கவினும் வந்தது காண்பாயாக.

உரை விளக்கம் : 'கொண்கனொடு தான் வந்தன்று என் மாமைக் கவின்' என்றாள், அது அவன் பிரிந்த பொழுதே தானும் சென்றது என்று உணர்த்த. எனவே, அவள் அழகு அவட்கு என்றும் உரியதாதல் வேண்டின், தன் காதலன் என்றும் தன்னைப் பிரிதலாகாது என்பது அவள் கருத்தாகும். தான் தன் கவினை இழந்தமைக்காகத் தன்னைப் பாணன் வெறுத்தல் அறமாகாது என்பது.

Koviloor Digital Library

விரைவாகப் பாய்ந்து செல்லல் குதிரைக்கும், நெடிதாயிருத்தல் தேருக்கும் சிறப்பாதலின் 'பாய்பரி' என்றும், 'நெடுந்தேர்' என்றும் குறித்தாள்.

அருஞ்சொற்பொருள் : இருங்கழி – பெரிய கழி, கரிய கழியுமாம்; தான் – கவினைக் குறித்தது; மாமை – பேரழகு, மாந்தளிர் போன்ற அழகு.

இலக்கணக்குறிப்பு : காண்மதி – 'மதி' முன்னிலையசை; பாண – விளி; பாய்பரி – வினைத்தொகை.

மேற்கோள் : தலைவியின் நலன் தலைவனொடு தங்கல் :

யானே ஈண்டையேனே என்னலனே
....
கானக நாடனொடு ஆண்டொழிந்தன்றே
– குறுந். 54.

தம்மொடு தானே சென்ற நலனும்
– அகம். 103.

135

பைதலம் அல்லேம், பாண! – பணைத் தோள்,
ஐது அமைந்து அகன்ற அல்குல்,
நெய்தல் அம் கண்ணியை நேர்தல் நாம் பெறினே.

கூற்று : பரத்தை ஒருத்தியைத் தலைப்பெய்வான் வேண்டி அதனைத் தலைமகன் மறைத்து ஒழுகுகின்றது அறிந்த தலைமகள் அவன் கேட்குமாற்றால் பாணற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் ஒரு பரத்தை மீது காதல் கொண்டு அவளை அடையத் தான் செய்யும் முயற்சியைத் தன்

Koviloor Digital Library

காதலி அறியாமல் மறைத்தான். அதனைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, அவன் காதில் விழுமாறு அவன் பாணனுக்குச் சொல்லியது.

உரை : பாணனே! மூங்கில் போல் பருத்த மெல்லிய தோளையும், மென்மையும் அகற்சியும் உடைய அல்குலையும், நெய்தல் மலர் போலும் கண்களையும் உடைய பரத்தையை யாம் எதிர்ப்படுவோம் ஆயின் அதனால் யாதொரு துன்பமும் அடையோம்.

உரை விளக்கம் : தலைவன் காதல்கொண்டு அடைய விரும்பும் பரத்தை யாரெனத் தான் அறிந்தாள் போலப் பணைத்தோள், அகலல்குல், நெய்தற்கண் என அவள் உறுப்புக்களை வருணித்தாள், தலைவன் அவள் உறுப்புக்களை அவ்வாறு மதிக்கின்றான் என்று உணர்த்த. அத்தகையவள் தன்னையெதிர்ப்படின் யாம் எந்தத் துன்பமும் அடையேம் என்றது, 'அவள் அழகு எம்மழகை விஞ்சிற்று எனக் கவலையுறேம்' என்ற பொருளில். தலைவன் அவள்மேல் காதல் கொண்டதை மறைத்தான் ஆதலின், 'வெளிப்பட அவளை அவன் விரும்பினாலும், அவளோடு வாழ நேரிட்டாலும் அதற்காகக் கவலையுறேன்' என்றாள் என்க. ஏனெனில், அவள் எத்துணை அழகுடையளேனும், குடிக்கு விளக்காகும் புதல்வற்பயக்கும் பேறு தனக்கே இருத்தலின், தன்னை அவள் ஒருபொழுதும் நிகராள் ஆதலின்.

'நேர்தல் யாம் பெறினே' என்றதற்கு 'அவளைத் தலைப்படுதலை யாம் அறியப்பெறின்' என்று பொருள் கூறுவாரும் உளர்.

இனி, 'நெய்தலங்கண்ணி' என்ற தொடர்க்கு நெய்தல் மலரால் தொடுத்த மாலையை உடையாள் என்று பொருள் கொள்வாரும் உளர் முன்னே தோளும், அல்குலும் கூறப்பட்டமையின், இது கண்பற்றியதாக இருத்தலே பொருத்தமாகும்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பைதல் – துன்பம்; பணை – மூங்கில்; ஐது – மென்மை; நெய்தல் – நெய்தல்மலர்; நேர்தல் – நேர்படுதல், காண்டல்; நிகர்த்தல், அறிதல்.

இலக்கணக்குறிப்பு : பணைத்தோள் – உவமைத் தொகை; நெய்தல் – பூவுக்கு ஆகியதால் முதலாகுபெயர்.

136

நாண் இலை மன்ற, பாண! – நீயே
கோள் நேர் இலங்கு வளை நெகிழ்த்த
கானல் அம் துறைவற்குச் சொல் உகுப்போயே!

கூற்று : வாயிலாய்ப் புகுந்து தலைமகன் குணம் கூறிய பாணற்கு வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை வீட்டிலிருந்த தலைமகன், தன் மனை திரும்ப விரும்பி அதற்குத் தலைவியின் உடம்பாடு விரும்பிப் பாணனைத் தூதுவிட்டான். அவன் சென்று தலைவன் இனிய பண்புகளைத் தலைவியிடம் சொல்லி அவள் உடம்பாடு வேண்டியபொழுது தலைவி வெறுத்துக் கூறியது.

உரை : பாண! நீ முன்னர்க் கொள்ளுதல் அமைந்த என் அழகிய ஒளி உமிழும் வளையல்களை நெகிழ்வித்த சோலைகளை உடைய பெரிய கடற்கரை நாட்டின் தலைவன் பொருட்டு நன்மொழிகளை மிகுதியாகப் பேசுகின்றனையாகலான் மெய்யாகவே நீ பெரிதும் நாணிலியாவாய்!

உரை விளக்கம் : தன் தீயவொழுக்கத்தால் தன்னைத் தவிர வேறு புகலில்லாத தன் வளைகளை நெகிழ்வித்த கொடுமையாளனைப் பற்றி அளவுக்கு விஞ்சிய நல்ல சொற்களைப் பாணன் வீணே மொழிந்தான் ஆதலின் அவனை நாணிலியென்றிகழ்ந்தாள்.

Koviloor Digital Library

நாணில்லாத தலைவனுக்கு அவன் மிக நல்ல நண்பன் என்றபடி. 'அம் துறைவன் என்றாள்' அழகியதுறைக்குத் தலைவனெனினும் அவன் ஒழுக்கம் மிகக்கொடிதென்ற குறிப்பில்.

அருஞ்சொற்பொருள் : நாண்இலை – நாணம் இல்லாதவனாவாய்; மன்ற – தெளிவாக, மெய்யாகவே, ஐயத்திற்கு இடமின்றி; கேள் – கொள்ளுதல் அமைந்த; நேர் – நேரிய, அழகிய; இலங்குதல் – ஒளிர்தல்; கானல் – கடற்கரைச் சோலை; உகுப்போய் – வீணாக்குவாய்.

இலக்கணக்குறிப்பு : மன்ற – இடைச்சொல் (தெளிவுப் பொருள்) நீயே – ஏகாரம் அசை; இலங்குவளை – வினைத்தொகை.

137

நின் ஒன்று வினவுவல், பாண! நும் ஊர்த்
திண் தேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தம் நலம் பெறுபவோ மற்றே?

கூற்று : தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்து நீங்கின இடத்தும், அவன் முன்பு செய்த தீங்கு நினைந்து தலைமகள் வேறுபட்டிருந்தாளாக, இனி 'இந்த வேறுபாடு ஏன்?' என்று வினவிய பாணற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையரோடு வாழ்ந்த தலைவன் மீண்டு வந்து, மனைவியின் உடம்பாடு பெற்றுப் பின் நீங்கினான். அப்போதும் அவன் முன்பு செய்த தீங்குபற்றிய நினைவு தொடர்ந்தது. அதனால் மெலிவுற்றாள். அதற்குக் காரணம் வினவிய பாணனுக்கு அவள் சொல்லியது.

Koviloor Digital Library

உரை : பாண! நின்னை ஒன்று வினவ விரும்புகின்றேன். நின்னூரின் தலைவனான திண்ணிய தேரினைக் கொண்ட கொண்கனை விரும்பிய பெண்டிர் என்றாவது தாம் பண்டு அவன் பொருட்டு இழந்த தம் நலனை மீண்டும் பெறுவதுண்டோ? (ஒரு நாளும் இல்லை).

உரை விளக்கம் : 'நும்மூர்க் கொண்கன்' என்று பாணனுக்குச் சொன்னது, அதனால் அவனுடைய ஒழுகலாறுகளை அவன் முழுமையும் அறிந்திருத்தல் பற்றியாம். 'திண்டேர்க்கொண்கன்' என்றாள், அவர் திண்ணிய தேரினன் ஆயினும், திண்ணிய ஒழுக்கமுடையான் அல்லன் என்னும் குறிப்புடன். நயந்தோர் என்றாள், அவனை நயந்த பெண்டிர் தன்னினும் பலராய் அவ்வூரில் உள்ளனர் என்பது பற்றி. அவனை நயந்த பெண்டிர் பலரது நலம் கெட்டழிந்ததைத் தான் நீ நன்கறிவாயே; அறிந்தபின்னுமா என்னை என் நலன் இழப்பிற்குக் காரணம் வினவுகின்றாய்? என்னும் பொருளில். 'பெறுபவோ?' என்றது பெறுவது பெரும்பாலும் இல்லையென்றும், அவன் எந்நாளும் திருந்திய நடையினன் ஆதற்கு வாய்ப்பே இல்லையென்றும் உறுதிப்படச் சொன்னாள் என்க.

அருஞ்சொற்பொருள் : ஒன்று - ஒரு செய்தி; நயந்தோர் - காதலித்தோர்; பண்டைத்தொன்னலம் - பிறந்தநாள் தொட்டு இருந்த அழகு.

இலக்கணக்குறிப்பு : வினவுவல் - தன்மை ஒருமை வினைமுற்று; ஒன்று - ஆகுபெயர்; (ஒருசெய்தி); பெறுபவோ? - ஓகாரம் எதிர்மறை.

138

பண்பு இலை மன்ற, பாண! - இவ் ஊர்
அன்பு இல கடிய கழறி,
மென்புலக் கொண்கனைத் தாராதோயே!

Koviloor Digital Library

கூற்று : தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்தது அறியாது வந்த பாணற்குத் தலைமகள் நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தை வீட்டிலிருந்து திரும்பி வந்து, தலைமகளின் உடம்பாடு பெற்றுத் தலைவியைக் கூடியிருந்தான். அஃதறியாது தன் வீடு வந்து வாயில் வேண்டிய பாணனை, அவன் தலைவனை அழைத்து வந்து தன்னோடு கூட்டுவிக்க முயலாமைக்காக இடித்துரைப்பாளாய்த் தலைவி நகையாடிச் சொல்லியது.

உரை : பாண! நீ பெரிதும் நற்பண்பு இல்லாதவன் ஆயினை. ஏனெனில், தீயொழுக்கம் உடைய இவ்வூர் மென்புலக் கொண்கனை அன்பற்ற கடிய சொற்களால் இடித்துரைத்து என்னொடு கூட்டுவிக்க முயன்றாயில்லையாதலான்.

உரை விளக்கம் : நீ என்றும் தலைவன் நினக்குத் தரும் பொருளுக்கு ஆசைப்பட்டு அவன் செய்வனவற்றுக்கெல்லாம் உடம்பட்டு அவன்வழி ஒழுகும் இயல்பினை. அவனை இடித்துரைக்கும் கடமையை நீ என்றும் செய்யாய். ஆதலின் நீ மிகவும் கொடியையாவாய். வேம்பும் கடுவும் போன்ற, பிற்பயக்கும் அறிவுரையென்பது நீ யறியாத தொன்றாம் என்று வன்சொற்களால் அவனைக் கடிந்தாள் என்க. எனக்கு நலன் செய்யாது, இழியொழுக்கமுடைய அவனுக்கே துணைபோகும் உனக்கு இங்கென்ன வேலை? என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : அன்பில - அன்பற்ற; கடிய - கடுமையான சொற்கள்; கழறுதல் - இடித்துக் கூறல்; மென்புலம் - நெய்தல் நிலம்; தாராதோய் - என்னொடு கூட்டாதோய்.

இலக்கணக்குறிப்பு : மன்ற - இடைச்சொல்.

Koviloor Digital Library

மேற்கோள் : பாணன் தலைவனை இடித்துரைத்தல் :

நினக்கு யாம் பாணரல்லேம்; எமக்கு
நீயும் குரிசிலை அல்லை மாதோ -
நின் வெம் காதலி தன் மனைப் புலம்பி
ஈர் இதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளாதோயே

– ஐங். 480.

139

**அம்ம வாழி, கொண்க! - எம்வயின்
மாண் நலம் மருட்டும் நின்னினும்,
பாணன் நல்லோர் நலம் சிதைக்கும்மே.**

கூற்று : ஆற்றாமை வாயிலாகப் புகுந்திருந்த தலைமகற்குப் பாணன் வந்துழித் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் இல்லில் இருந்து தன்னில்லம் திரும்பினான். தன் பிரிவால் ஆற்றாமை கொண்டு வருந்தியிருந்த தலைமகளை அவள் ஆற்றாமையே துணையாகக் கொண்டு இல்லத்துட் புகுந்து அவளோடு இருந்தான். அப்போது பாணன் வந்தானாகத் தலைவி தலைமகனுக்குச் சொல்லியது.

உரை : கொண்க! நீ வாழி! யான் சொல்வதுகேள். எம்முடைய மாட்சிமையுடைய பேரழகைச் சிதைக்கும் நின்னைவிடவும் பன்மடங்கு நின் பாணன் பெண்டிர் பலரது நலத்தினைச் சிதைக்கவல்லவனாவான்.

உரை விளக்கம் : 'எம்மாண் நலம் மருட்டும்' என்றது, தலைவன் முதற்கண் தன் பேரழகைப் பல படப் பாராட்டிப் பின் தன்னுடைய பரத்தமையொழுக்கத்தால் அவ்வழகினைத் தன்னிடமிருந்து நீங்கச் செய்தது குறித்ததாகும்.

Koviloor Digital Library

பெண்டிரின் நலம் சிதைக்கும் வன்கண்மை கொண்ட பாணன் தலைவன் தனக்குக் கூலியாகத் தரும் பொருளுக்கு ஆசைப்பட்டு, அவன்பால் இல்லாத நற்பண்புகள் பலவற்றை இருப்பதாகப் பொய் கூறி அவர்களை வளைப்பதற்கு உதவுவதாலும், தலைமகனுக்குப் புதுப்புதுப் பரத்தையர்களை நுகரத் தருவதாலும், தலைவனைவிடக் கொடியவனாகத் திகழ்தலின், 'நின்னினும் பாணன் நல்லோர் நலஞ்சிதைக்கும்மே' என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : வயின் – இடம்; மாண் நலம் – சிறப்பு மிக்க அழகு; மருட்டுதல் – சிதைத்தல்; நல்லோர் – பெண்டிர்.

இலக்கணக்குறிப்பு : சிதைக்கும்மே – சிதைக்குமே என்பதன் விரித்தல் விகாரம் – மகரம் மிக்கது.

140

காண்மதி, பாண! – நீ உரைத்தற்கு உரியை –
துறை கெழு கொண்கன் பிரிந்தென,
இறை கேழ் எல் வளை நீங்கிய நிலையே.

கூற்று : பாணன் தூதாகிச் செல்ல வேண்டும் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் வீட்டில் இருக்கும்போது தன் இல்லம் வந்த பாணனை அவன்பால் தூதனுப்பும் விருப்பமுடையவளாய், அவனிடம் தன் மெலிவைக் கூறியது.

உரை : பாணனே! என் அவல நிலையைக் காண்பாயாக! நீராடும் இறங்குதுறையினை உடைய நெய்தல் நிலத் தலைவனாகிய என் கணவன் என்னைப் பிரிந்த அப்பொழுதே என் முன் கையில்

Koviloor Digital Library

செறிவாக அதுவரை இருந்த எனது ஒளிமிக்க வளையல்கள் கழன்று வீழ்ந்த நிலையை அவன்பால் உரைத்து அவனை என்பால் மீண்டு வரச் செய்யும் கடமையுடையை.

உரை விளக்கம் : 'கொண்கன் பிரிந்தென எல்வளை நீங்கிய நிலை' என்றாள், தலைவன் பிரிவும் வளை நீங்கியதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன என்னும் குறிப்பில். அவன் வந்தால்தான் அவை மீண்டும் செறியும் ஆதலால், அவன்பால் சென்று என் மெலிவினைக் கூறல் வேண்டும் என்று வேண்டினாள் என்க. 'இறை கேழ் எல்வளை' என்றாள், என் இறை நல்ல அழகுடன் விளங்குதற்குக் காரணமான வளை என்பதுபட. அவ்வளை நீங்கியதும், இறையின் அழகும் போயிற்று என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : உரியை – கடமை உடையை; கெழு – பொருந்திய; பிரிந்தென – பிரிந்த அப்பொழுதே; இறை – முன்கை; எல் – விளக்கம்.

இலக்கணக்குறிப்பு : மதி – முன்னிலை அசை; கெழு – கேழ் என்னும் உரிச்சொல் திரிபு.

மேற்கோள் : தலைவியின் தூதுவனாகப் பாணன் தலைவன்பால் செல்லுதற்கு இந்நூலின் 473, 474, 478, 479, 480 ஆகிய செய்யுட்களைக் காண்க.

கிழவற்கு உரைத்த பத்து முற்றிற்று

Koviloor Digital Library

15. ஞாழற் பத்து

நெய்தல் திணையின் கருப்பொருள்களுள் ஒன்றான ஞாழல் மரம் செய்யுள்தொறும் இடம் பெறுதலின் இப்பத்து ஞாழற்பத்தாயிற்று.

141

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண் துளி வீசிப்
பயலை செய்தன பனி படு துறையே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றாளாகின்ற தலைமகள், 'அவன் வரைதற்குப் பிரியவும், நீ ஆற்றாய் ஆகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தற் பொருட்டுத் தன்னூர்க்குப் பிரிந்து சென்ற போது தலைவி அப்பிரிவாற்றாது வருந்தக் கண்ட தோழி, 'தலைவன் நின்னை மணந்து கொள்வதற்குப் பிரியவும் நீ வருந்துவது எதற்கு?' என வினவ அதற்குத் தலைவி சொல்லியது இது.

உரை : தோழி! நம் கடற்கரையின்கண் குவிந்துள்ள மணல் திட்டுக்களில் ஞாழல் மலர்களும் செருந்தி மலர்களும் தம் நறுமணத்தை வீச, தண்ணிய துறைகளோ நீர்த்திவலைகளை என்மேல் வீசிப் பசலை நோயை உண்டாக்குகின்றன. (யான் வருந்தாது என் செய்வேன்?)

Koviloor Digital Library

மலர்மணம் கமழும் மணற்பரப்பிலே தன் காதலனொடு விளையாடியும், நீர்த்துறையிலாடியும் இன்பமடைந்தவள் தலைவியாதலின், அவனில்லாத போது அம்மலர்மணமும், நீர்த்திவலைகளும் பழைமையை நினைவீட்டித் துன்பத்திற்குக் காரணமாய் அவட்கு நலிவு செய்தன. அஃதாவது தலைவி ஆற்றியிருந்தபோதும், அவளையும் விஞ்சி ஆற்றாமையே மிகுவதாயிற்று என்க. மலர்மணமும் குளிர்ச்சியும் காமக்குறிப்பிற்குக் காரணமாயின என்க.

அருஞ்சொற்பொருள் : எக்கர் – மணல்மேடு; இக்காலத்தார் எக்கல் என்ப. ஞாழல், செருந்தி – இரண்டும் நெய்தல் நிலத்து மரவகைகள்; துவலை – நீர்த்துளி; பயலை – பசலை; பனி – குளிர்ச்சி.

இலக்கணக்குறிப்பு : ஞாழல், செருந்தி – ஆகுபெயர்களாய் மலர்களைச் சுட்டின; பயலை – பசலை என்றதன் போலி.

மேற்கோள் : ஞாழல் மரம் கடற்கரைக்கு அழகூட்டும் :

ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்று

– குறுந். 50.

மணற்பரப்பில் செருந்தி மலர்தல் :

– வண்டுபட
விரிந்த செருந்தி வெண்மணல் முடுக்கர்
பூவேய் புன்னை அம் தண்பொழில்

– அகம். 240.

Koviloor Digital Library

மலர் முதலான இயற்கைப் பொருள்கள்
தனியவரை வருத்துதல் :
பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
....
....
.... எனை இடர் செய்தவையே
– சிலம்பு. கானல்வரி, 14.

142

எக்கர் ஞாழல் இறங்கு இணர்ப் படு சினைப்
புள் இறை கூரும் துறைவனை
உள்ளேன் – தோழி! – படீஇயர் என் கண்ணே.

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் இரவுக் குறிக்கண் சிறைப்புறத்தானாக, 'நின்கண் துயிற்றற்பொருட்டு நீ அவனை மறக்க வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் வரைவுக்குரியன ஏதும் செய்யாது தொடர்ந்து இரவிலே வந்து தலைவியொடு அளவளாவிச் சென்றான். ஒருநாள் இரவு அவன் வந்து தலைவியின் வீட்டின் புறத்தே நின்ற பொழுது அவன் கேட்கும் வகையில், தோழி தலைவியிடம், 'நீ இரவில் உறங்க வேண்டுமெனில் தலைவனை மறக்க வேண்டும்' என்றாள். அதற்கு விடையாகத் தலைவி சொல்லியது இது.

உரை : தோழி! மணற்பரப்பில் நிற்கும் ஞாழல் மரத்தின் தாழ்ந்து தொங்கும் பூங்கொத்துக்களை உடைய கிளை வருந்துமாறு அதன் மீது நீர்வாழ் பறவைகள் தங்கியிருத்தற்கு இடனான கடற்றுறையைக் கொண்ட நெய்தல் நிலத்தலைவனை, நீ அறிவுறுத்தியவாறே நினையாதிருப்பேன். இனி என் கண்கள் உறங்குவனவாக!

Koviloor Digital Library

உரை விளக்கம் : புள் எனப்பொதுப்படக் கூறினும் நாரை, கொக்கு முதலிய நீர்வாழ் பறவைகளைக் குறித்தாள் என்க. பெரிய கிளைகளில் பறவைகள் கூடமைத்து வாழ்வது இயல்பாதலின் படுசினை என்றாள். துறைவனுடைய நினைவு தோன்றும் பொழுதெல்லாம் அவன் வரையாது வந்தொழுகுவதும், அதனால் ஊரலர் தோன்ற இடனாவதும் போன்ற பல நினைவுகள் அலைக்க அவள் உறக்கம் கெடும் என்பாளாய்த் தோழி அவனை நினையற்க என்றாள். அதற்கு உடம்படுவாள் 'உள்ளேன் தோழி' என்றாள். அப்பொழுதாவது தன் கண்கள் உறங்கட்டும் என்பாள், 'படீஇயர் என் கண்ணே' என்றாள். அவள் உறங்கிப் பன்னாளாயின என்று தலைவன் உணர்ந்து வரைவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : இறங்கு இணர் – தாழ்ந்து தொங்கும் பூங்கொத்து; படுசினை – பெரிய கிளை; புள் – பறவை; இறை கூர்தல் – வதிதல், தங்குதல்; படீஇயர் – உறங்குவனவாக.

இலக்கணக்குறிப்பு : இறங்கு இணர் – வினைத் தொகை; உள்ளேன் – தன்மை எதிர்மறை வினைமுற்று; படீஇயர் – இயரீற்று வியங்கோள் வினை முற்று.

மேற்கோள் : மரக்கிளைகளில் பறவைகள் தங்குதல் :

"தடவுநிலை மாச்சினைப் புள்ளிறை கூரும்
மெல்லம் புலம்ப"

– அகம். 10.

கண்கள் உறங்குதலை விரும்பல் :

புள்ளிமிழ் பெருங்கடல் சேர்ப்பனை
உள்ளேன் தோழி படீஇயர் என் கண்ணே

– குறுந். 243.

உள்ளுறை : படுசினை வருந்தப் புள்ளிறை கூரும் என்றது, தான் வரையாது நமக்கு வரும் நோயறியாது தான் வேண்டும் இன்பமே முடிப்பான் என்று உள்ளுறை கொள்வார் பழைய உரைகாரர்.

Koviloor Digital Library

143

எக்கர் ஞாழல் புள் இமிழ் அகன் துறை,
இனிய செய்த; நின்று, பின்
முனிவு செய்த இவள் தட மென் தோளே.

கூற்று : புறத்துத் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையர் வீட்டில் தங்கியிருந்து மீண்டு வந்து தோழியை வாயில் வேண்டியபொழுது அவள் அவனுக்குச் சொல்லியது.

உரை : தலைவ! இவளுடைய் பெரிய, மென்மையான தோள்கள், மணற்பரப்பிலுள்ள ஞாழல் மரங்களில் பறவைகள் ஆரவாரம் செய்தற்கு இடனான அகன்ற கடற்றுறையின் கண் ஒரு காலத்தில் நினக்கு இனிமை செய்தன. அத்தோள்களே சில காலம் கழித்துப் பின்னர் வெறுப்பைத் தந்தன. (இஃதென்ன வியப்பு?)

உரை விளக்கம் : தலைவி நினக்கு அரியளாக இருந்த களவுக் காலத்தில், அவள் தடமென் தோள்கள் இனிமை செய்து, அத்தோள்களே அவள் எளியளான கற்புக் காலத்தில் வெறுக்கத் தக்கனவாயின. நின் அன்பு இருந்தவாறு என்னே! என்று அவன் புறத்தொழுக்கத்திற்காக இடித்துரைத்தாள் தோழி.

''இனிய செய்து ..... மென்றோள்' என்றது, அக்காலத்து நினக்கு இனிமை செய்து பின் முனிவைச் செய்தன ஆதலால், இவை இத்தோள்களின் தவறல்லது நின் தவறன்று என்பதாம்; ஞாழற்கண்ணே புள் இமிழ் அகன் துறை என்றது இவ்வூர் அகன் துறையார் அலர் தூற்றுவர் என்பதாம்'' என்பது பழைய உரை.

''இனிமை செய்தற்கும் முனிவு செய்தற்கும் இவளுடைய தோளில் திரிபு ஒன்றும் இல்லை. அது பண்டு போலவே இருந்தது

Koviloor Digital Library

என்பாள், இவள் தடமென்தோள் என விதந்து ஓதினள். ஓதவே, 'நின் அன்பே கயப்பூப் போன்று முன்மலர்ந்து பின் கூம்புவதாயிற்று'' என்பார் பெருமழைப்புலவர்.

'இனிய செய்தலாவது, புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய் வளர்ந்து நெஞ்சம் பிணித்தல். முனிவு செய்தலாவது, அப்பிணிப்பின் நீங்கி இன்பத்தை மறத்தல்' என்பார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

இனி, 'களவுக்காலத்தில் தடமென் தோள்களாயின இப்பொழுது மெலிவுற்றுப் பொலிவிழந்தமையின் நினக்கு முனிவு செய்தன போலும்! அதுபற்றியே அழகும் இளமையும் உடைய புறப்பெண்டிரை நயந்தனை போலும். என்னே நின் பேரன்பு!' என்று கூறி, அவன் அன்பு உடலைப்பற்றியதேயன்றி உயிர்கலந்து ஒன்றிய தூய அன்பன்று என்று இடித்துரைத்தாள் என்றுமாம்.

அருஞ்சொற்பொருள் : ஞாழல் – புலிநகக் கொன்றை; இணர் – மலர்க்கொத்து; புள் – பறவைகள்; இமிழ் – ஆரவாரம் செய்யும்; முனிவு – வெறுப்பு.

இலக்கணக்குறிப்பு : செய்த – ஈரிடத்தும் பலவின்பால் வினைமுற்று; தட – உரிச்சொல்.

மேற்கோள் : களவுக் காலத்து அன்பு கற்புக் காதத்தில் வெறுப்பாதல் :

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனிர் இனியே
பாரி பறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள், தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே

– குறுந். 196.

Koviloor Digital Library

144

எக்கர் ஞாழல் இணர் படு பொதும்பர்த்
தனிக் குருகு உறங்கும் துறைவற்கு
இனிப் பசந்தன்று - என் மாமைக் கவினே.

கூற்று : 'தலைமகன் வரைந்து கோடல் நினையாது, களவொழுக்கமே விரும்பி ஒழுகா நின்றான் என்பது அறிந்து வேறுபட்ட தலைமகள், 'அவன் கூறியவாற்றால் இனிக் கடிதின் வரைவன்; ஆற்றாயாகாது ஒழிய வேண்டும்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் திருமணம் பற்றி நினையாது களவு நீட்டித்தமை கண்டு தலைமகள் மேனி வேறுபட்டபோது, தலைவன் விரைவில் வரைவான் என்று கூறி அதுவரை ஆற்றியிருக்க வேண்டும் என்று வற்புறுத்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

உரை : தோழியே! மணற்பரப்பிடையே அமைந்த பூங்கொத்துக்கள் பொருந்திய ஞாழல் மரங்கள் அடர்ந்த சோலையின்கண் தனித்த நாரையொன்று உறங்குதற்கு இடனான கடற்றுறைத் தலைவன் பொருட்டு என் மாமையாகிய அழகு இப்பொழுதுதான் பசலையுற்றது.

உரை விளக்கம் : பூங்கொத்துக்களையுடைய ஞாழற் சோலையில் தனிக்குருகு எவ்வகைக் கவலையுமின்றி, உறங்கிற்று என்று கொள்க. குருகு என்னும் சொல் பேடை சேவல் என்னும் இரண்டுக்கும் பொதுப்பெயராயினும் உறங்குவது ஆண்குருகு எனக்கொள்க. அது தன் பேடையைப் பிரிந்த நிலையிலும் இனிதே உறங்கிற்று என்க. உள்ளுறைப் பொருள் நோக்கி இவ்வாறு கொள்ளப்பட்டது. பொதும்பர் பூக்களின் நறுமணத்தோடு தண்ணிய நிழலும் உடைமையின் குருகு உறங்குதற்கு ஏற்றதாயிற்றாம். 'இனிப் பசந்தன்று' என்றாள், இதுகாறும் அது பசப்புறவில்லை;

Koviloor Digital Library

நின் சொல்லைக் கேட்டபிறகே பசந்தது என்னும் பொருளில். அவன் வரைவதாகக் கூறிய சொற்களை மெய்யென்று தன் அறியாமையால் நம்பிக் கூறியதால் இங்ஙனம் வெறுத்துக் கூறினாள். இதனால், தனக்கிருந்த ஐயம் மேலும் வலுத்தது என்றாள். 'இப்பொழுது என் மாமை பசப்புற்ற அத்துணையே; இன்னும் சின்னாள் கடந்தால் அறவே நீங்கும்' என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : இணர் – பூங்கொத்து; பொதும்பர் – சோலை; இனி – இப்பொழுது; பசந்தன்று – பசந்தது; கவின் – பேரழகு.

மேற்கோள் : தலைவி தன் கவின் பசந்தமைக்கு இரங்குவது :

இனிப் பசந்தன்று என் மாமைக் கவினே
– ஐங். 35.

பசலை உணீஇயர் வேண்டும்
திதலை யல்குலென் மாமைக் கவினே
– குறுந். 27.

உள்ளுறை : இணர்படு பொதும்பர் தரும் இன்பத்தாலே குருகு தன் பேடையை மறந்து இனிதே பொழிலில் உறங்கினாற் போல், தலைவனும் தன் வளமனைக்குச் சென்றபின், ஆண்டுள்ள பிற இன்பங்களில் மனம் செலுத்தித் தலைவியை வரையும் கடமையை மறந்திருந்தான் என்பது.

'இனிக்காலம் வந்தவிடத்தும் வரைந்து கொண்டு ஒன்றுபட்டு ஒழுக நினையாது தனித்துறைதலே விரும்புவான்' என்று உள்ளுறை காண்பார் பழைய உரையாசிரியர்.

Koviloor Digital Library

145

எக்கர் ஞாழற் சிறியிலைப் பெருஞ் சினை
ஓதம் வாங்கும் துறைவன்
மாயோள் பசலை நீக்கினன், இனியே.

கூற்று : வரைவு மறுத்த தமர் உடம்படுமாற்றால் சான்றோரைத் தலைமகன் விடுத்தது அறிந்த தோழி தலைமகள் கேட்குமாற்றால் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தலைவியின் மகட்கொடை வேண்டிய பொழுது முதலில் மறுத்தனர் தலைவியின் தமர். அவர்கள் உடம்படும் வகையில் தலைவன் சான்றோரைத் தூது அனுப்பினான். அதனை அறிந்த தோழி தன்னுள் மகிழ்ந்தவளாய்த் தலைவி கேட்கும் வகையில் சொல்லியது.

உரை : மணற் பரப்பிலுள்ள, சிறிய இலைகளையுடைய ஞாழல் மரத்தின் பெரிய கிளையைக் கடலலை மேலெழுந்து வந்து வளைத்தற்கு இடனான நெய்தல் நிலத் தலைவன், இப்பொழுது மாமை நிறமுடைய என் தோழியின் மேனியிற் படர்ந்திருந்த பசலையை நீக்கினான். (இது மகிழ்ச்சிக்குரியது).

உரை விளக்கம் : தன் காதலன் மகட்கொடை வேண்டிய பொழுது தன் தமர் மறுத்தமையால் தலைவி மேனி வேறுபட்டாள் ஆதலின், இப்பொழுது சான்றோர் வரவால் அவர் மகட்கொடை நேர்தல் ஒருதலையென்று நம்பிக்கை கொண்டமையால், தலைவியின் பசலை நீக்குவது உறுதியென்று உணர்ந்த தோழி, 'மாயோள் பசலை நீக்கினன் இனி' என்று உவந்தாள். கடலலை உயர்ந்து வந்து பெருங்கிளையின் மேற்பரப்பில் வீழ்ந்ததாதலின் அது வளைவுற்றதாம். இதனால், ஞாழல் மரம் கரைக்கு மிக அண்மையில் நின்றமை போதரும். 'நீக்கினன் இனியே' என இனி நிகழப்போவதை இறந்த கால வாய்பாட்டாற் கூறியது விரைவில் வரைவு நிகழும் என்பது பற்றியாம். தெளிவு பற்றிய தென்றுமாம்.

Koviloor Digital Library

'இனி நீக்கினன்' என்றமையால் தமர் முன் மறுத்தவர் இப்பொழுது உடம்பட்டமை தெளிவு.

அருஞ்சொற்பொருள் : சினை - கிளை; ஓதம் - கடல்; கடல் அலை; வாங்கும் - வளைக்கும்; மாயோள் - மாமை நிறத்தவள்.

இலக்கணக்குறிப்பு : நீக்கினன் - கால வழுவமைதி; சிறியிலைப் பெருஞ்சினை - முரண் தொடை.

உள்ளுறை : சிறிய இலைகளை உடைய பெரிய ஞாழற் சினையை ஓதம் வளைக்கும் துறைவன் என்றது, முன்பு தன் வழிவாராத தலைவியின் சுற்றத்தாரைத் தலைவன் சான்றோர் துணையுடன் தன் வழிக் கொணர்ந்தான் என்னும் உள்ளுறைப் பொருள் தரும்.

இனி, 'சிறியிலைப் பெருஞ்சினை' என்பது கொண்டு, ''முன்னர் உடம்படாமைக்கு நம் சுற்றத்தாருள் எம்பெருமான் மாண்பினை உணராத சிறுமையுடையோரும் பலர் உளர்; பின்னர் உடம்பட்டமைக்கு, அவருள் அவன் தகவுணரும் பெருமையுடையோரும் சிலர் உளர் என்பாள் சிறிய இலைகளை உடைய பெரிய சினை என்றாள். பெரிய சினையை வளைத்தவுடன் அதனை ஒட்டியுறும் சிறிய இலைகளும் அதனோடு சேர்ந்து வளைப்புண்ணல் போன்று இப்பொழுது நம் தலைவனுக்கு மகட்கொடை நேர்தற்கு உடம்படாதார் ஒருவருமிலர்'' என்று அழகிய விளக்கம் தருவார் பெருமழைப்புலவர்.

146

எக்கர் ஞாழல் அரும்பு முதிர் அவிழ் இணர்
நறிய கமழும் துறைவற்கு
இனியமன்ற - என் மாமைக் கவினே.

Koviloor Digital Library

கூற்று : வரைவு கடாவவும் வரையாது ஒழுகுகின்றுழி, 'நம்மை எவ்வகை நினைத்தார் கொல்லோ?' என்று ஐயுற்றிருந்த தலைமகள் வரைவு தலைவந்துழித் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவு நீட்டித்தபொழுது தலைவனை நெருங்கி, விரைவில் தலைவியை முறைப்படி மணந்து எய்துமாறு தோழி வற்புறுத்திய பின்னும் தலைவன் வரையாமையால், முதலில் தலைவன் பற்றி ஐயுற்றிருந்தாள். பின்னர் அவன் வரைதலில் முனைந்தமை கண்டு மகிழ்ந்து தன் தோழிக்குச் சொல்லியது இது.

உரை : மணல்திட்டின்கண் உள்ள ஞாழலின் அரும்புகள் முதிர்ந்த பூங்கொத்துக்களால் நறுமணம் கமழும் கடற்றுறைத் தலைவனுக்கு எனது மாமைக் கவின் மிகவும் இனிமையுடையது. (அதனால்தான் அவன் வரைவோடு வந்தான்).

உரை விளக்கம் : தன்னைத் தன் காதலன் அவ்வளவாக விரும்பவில்லையோ என முதற்கண் ஐயுற்றாளாதலின், அவன் வரைவுக்குரியன செய்தது கண்டு, தான் எண்ணியதிலுள்ள பிழையை உணர்ந்து 'என் மாமைக் கவின் தெளிவாக அவனுக்கு இனியதே என்பாளாய்,' 'இனிய மன்ற என் மாமைக்கவின்' என்றாள். 'கவின் இனிய' என்று பன்மை வாய்பாட்டாற் கூறினாள் முகக் கவினும், கண்கவினும், மேனிக்கவினும் உளப்பட. இனி, இனிய என்றது 'இனியது' என்பதன் ஈறு குறைந்த வடிவமெனலும் ஒன்று. மன்ற என்றது தெளிவாக என்னும் பொருட்டு.

அருஞ்சொற்பொருள் : அவிழ்இணர் – மலர்ந்த பூங்கொத்து; நறிய கமழும் – நறியனவாக மணம் வீசும்.

இலக்கணக்குறிப்பு : மன்ற – தெளிவுப் பொருள்தரும் இடைச்சொல்; நறிய – நறியவாய் என்று பொருள்படும் முற்றெச்சம்.

உள்ளுறை : முதற்கண் அரும்பாய் இருந்து பின் மலர்ந்து மணம் கமழ்ந்தன ஞாழற்பூக்கள். அதுபோலவே தலைவனுக்குத்

Koviloor Digital Library

தலைவிபால் ஏற்பட்ட அன்பும் முறையே வளர்ந்து திருமணமாக முற்றுப் பெற்றதாம்.

147

எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர்
ஒண் தழை அயரும் துறைவன் –
'தண் தழை விலை' என – நல்கினன் நாடே.

கூற்று : சுற்றத்தார் வேண்டிய கொடுத்துத் தலைமகன் வரைவு மாட்சிப் படுத்தமை அறிந்த தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் மகட்கொடை வேண்டிய பொழுது தன் தமர் உடம்படுவரோ மாட்டாரோ என்று ஐயுற்றுக் கவலைப்பட்ட தலைமகளுக்கு, தலைவன், அவர் உடம்பாடு பெற்றமையறிந்த தோழி கூறியது.

உரை : தோழியே! மணல் திட்டின்கண் உள்ள ஞாழல் மரத்தில் தாம் பறித்தணிய மலர்கள் கிடைக்கப்பெறாத இளமகளிர், அதன் ஒளிமிக்க தழையைத் தொடுத்து அணிந்து மகிழும் கடற்றுறை நாட்டுக்குத் தலைவன், நின் பொருட்டாக நம் தமர்க்குத் தரவேண்டிய பரிசத்திற்கு ஈடாக ஒரு நாட்டையே நல்கினான். (இனிக் கவலை விடுக).

உரை விளக்கம் : நெய்தல் நிலத்து இளமகளிர் ஞாழற்பூவை அணிந்து கொள்வதில் விருப்புடையவர். கொய்தற்கு மலரில்லாதபொழுது, அம்மரத்தின் தழையைக் கொய்து தழையுடையாக அணிந்தனர் என்பாள், 'மலர் இல் மகளிர் ஒண்டழை அயரும்' என்றாள். தண்டழை விலையாவது, தலைவி உடுத்துக் கொள்ளும் தழையுடைக்கு ஈடாகக் கொடுக்கும் விலையாகும். ஒன்றைத் தர விரும்புவார், அதனைத்தர இயலாத

Koviloor Digital Library

நிலையில் அதன் மதிப்புக்கு ஈடாக வேறொன்றைத் தருவது இயல்பாகும். மணமகன் வீட்டார் மணமகளுக்குக் கூறை கொடுக்கும் வழக்கம் இன்றும் உண்டு. கூறையாவது புதிய புடவையாகும். இதற்கு இணையானதாகத் தழையுடையினைக் கருதுவர். இதனையே ‘முலைவிலை’ யென்றனர் பண்டையோர். ‘சிறுவளைவிலை’யென்றலும் பண்டைச் செய்யுளில் (நற். 300) காணப்படுகிறது. ‘பாசிழை விலை’ என்னும் வழக்கும் உண்டு. (அகம். 90) நம்பியகப்பொருள் உரையில் முலைவிலை என்று இது சுட்டப்பட்டு இச்செய்யுள் மேற்கோளாகக் காட்டப்பட்டது. நீயணியும் தழைக்கு விலையாக (ஈழத்து உரை). முலைவிலை (பெருமழைப்புலவர்). தலைவன் தழைவிலைக்கு ஈடாகத் தன் நாட்டையே கொடுத்தான் என்றது அவனுடைய செல்வச் சிறப்பும் தாளாண்மையும் குறித்ததாகும். தழைவிலை என்றதை இடக்கர் அடக்கல் என்பர்.

அருஞ்சொற்பொருள் : மலர் இல் மகளிர் – சூடிக்கொள்ள வேண்டிய மலர் மரத்தில் கிடைக்கப் பெறாத மகளிர்; அயரும் – அணிந்து மகிழும்; தழைவிலை – பரியம்; முலைவிலை.

மேற்கோள் : மகளிர் ஞாழல் மலர் சூடல் :

ஞாழல் முதிர் இணர் கொண்டு
கழும முடித்துக் கண் கூடு கூழை

– கலி. 56.

மகளிர் ஞாழல் தழையுடுத்தல் :

கானல் ஞாழற் கவின்பெறு தழையள்

– ஐங். 191.

மணமகன் பரியம் கொடுத்தல் :

– பொலந்தார்க் குட்குவன்
முழங்குகடல் முழவின் முசுறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்து வந்து
கொடுப்பினும்

– அகம். 90.

Koviloor Digital Library

ஊரொடு நிறைசால் விழுப் பொருள்
தருதல் ஒன்றோ
– புறம். 344.

விலை வேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம் வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்
– கலி. 103 : 71–73.

சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிஎம்
முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே
– நற். 300.

உள்ளுறை : ஞாழல் மலர் இல்லாத மகளிர் அதன் தழையை விரும்பும் துறைவனென்றது, உலகை வழங்க வேண்டும் உள்ளத்தன் அஃதின்மையால் நாட்டை வழங்கினான் என்பதாம்.

148

எக்கர் ஞாழல் இகந்து படு பெருஞ் சினை
வீ இனிது கமழும் துறைவனை
நீ இனிது முயங்குமதி, காதலோயே.

கூற்று : களவொழுக்கத்தின் விளைவு அறியாது, அஞ்சிய வருத்தம் நீங்க வதுவை கரண வகையான் முடித்த பின்பு, தலைமகளைப் பள்ளியிடத்து உய்க்கும் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : ஊழின் ஆற்றலால் தலைவனும் தலைவியும் ஒருவர் கூட்டாது கூடிப் புணர்ந்து, களவொழுக்கத்தின் பல்வேறு இடையூறுகளையும் கண்டுணர்ந்த பின்பு, இனி யாதாகுமோ என்று இடையறாது அஞ்சியிருந்த தலைமகள்,

Koviloor Digital Library

பின்னர்த் தலைவன் மணச்சடங்கு வாயிலாகத் தமர் அளிக்க அவளைப் பெற்ற நாளின் இரவிலே, மணமக்கள் இருவரையும் கட்டிலேற்று கையில் தோழி தலைமகட்குக் கூறியது.

உரை : காதல் மிக்க தோழியே! மணற் பரப்பிலே நிற்கும் ஞாழல்மரத்தின் ஓங்கி உயர்ந்த கிளையின் கண் உள்ள மலர்கள் இனிதே தம் மணத்தைப் பரப்புதற்கு இடனான கடற்றுறையை உடைய நெய்தல் நிலத் தலைவனை இனி நீ நின் விருப்பப்படியே இனிது தழுவி இன்புறுவாயாக.

உரை விளக்கம் : 'ஊரறியச் சான்றோர் முன்னிலையில் தலைவனொடு வதுவைச் சடங்கில் ஒன்று பட்டமையின், முன் களவுக் காலத்தில் நெஞ்சத்தை அலைத்த அச்சத்தின் சுவடு சிறிதும் இன்றி நின் கணவனைத் தழுவி இன்புறுவாயாக' என்று வாழ்த்தினாள் தோழி என்க. நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சியாதலின் ஐயத்திற்கும் அச்சத்திற்கும் சிறிதும் இடமில்லையாதலை அறிக.

களவுக் காலத்துப் புணர்ச்சியிலும் காதலுண்டெனினும், அதில் அச்சமும் உண்டெனவே அக்காதலாற் பெறும் இன்பம் முழுமையானது அன்றாதலின், அம்முழுமையான இன்பத்தினை இப்பொழுது அடைவாயாக என்பாள் 'இனிது முயங்குமதி' என்றாள்.

'இகந்துபடு பெருஞ்சினை' என்றாள் மிகவுயர்ந்த கிளை என்னும் கருத்தில். அதில் மலர்ந்த பூக்களின் மணம் காற்றால் எற்றுண்டு நெடுந்தொலைவு பரவும். எனவே 'வீ இனிது கமழும்' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : இகந்துபடுபெருஞ்சினை - அளவை விஞ்சி வளர்ந்த பெரிய கிளை; வீ - மலர்; முயங்குமதி - தழுவி இன்புறுக; காதலோய் - அன்புடையவளே.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : முயங்குமதி – 'மதி' முன்னிலை அசைச் சொல்.

உள்ளுறை : 'எக்கர் ஞாழல் .... கமழும் துறைவன்' என்றது, தலைவனின் அன்பு இதன்மேல் இல்லை என்று சொல்லும்படி மிக வளர்ந்து பயன்பட்டது என்ற கருத்தை உள்ளுறுத்ததாகும்.

இனி, 'பெருங்குடித் தோன்றலாகிய நம் பெருமானது மாண்புமிக்க நெஞ்சத்தே அரும்பிய காதலும் நன்கு முதிர்ந்து பதனடைந்து திகழ்கின்றது' என்று உள்ளுறை காண்பார் பெருமழைப்புலவர்.

149

எக்கர் ஞாழற் பூவின் அன்ன
சுணங்கு வளர் இள முலை மடந்தைக்கு
அணங்கு வளர்த்து அகறல் வல்லாதீமோ!

கூற்று : வரைந்து எய்திய தலைமகன் தலைவியோடு பள்ளியிடத்து இருந்துழித் தோழி வாழ்த்தியது.

கூற்று விளக்கம் : தலைவன் மணச்சடங்கோடு தமர் அளிக்கத் தலைவியைப் பெற்ற பின்னர், பெரியோர் கூட்டக் கட்டிலிடத்தே அவளுடன் இருந்த பொழுது தோழி வாழ்த்திக் கூறியது இது.

உரை : தலைவ! மணற்பரப்பிலே வளரும் ஞாழல் மரத்தின் பூவை நிகர்த்த தேமல் படரப்பெற்ற இளமுலையைக் கொண்ட மடந்தையாம் இவள் துன்புறுதற்குரிய செயலொன்றும் செய்யாதும் என்றும் நீங்காதும் இனிது வாழ்வாயாக!

உரை விளக்கம் : அணங்குதலாவது துன்புறுத்தலாம். பிறரைத் தீண்டி வருத்தம் செய்யும் தெய்வமும் அணங்கு எனப்படும்.

Koviloor Digital Library

ஈண்டு அணங்கு வளர்த்தல் என்றது, தலைவி வருந்துதற்குரிய செயல்களைச் செய்தல். அணங்கு அச்சமும் ஆம். எனவே, 'இவள் அஞ்சத் தகுவன செய்யற்க' என்றாள் எனலும் ஆம். அகறலாவது அன்பின்றிப் பிரிதலாம். வதுவை நாளில் மணமக்களைக் 'கவவுக்கை நெகிழாமல் வாழ்க'வென வாழ்த்தும் மரபு பற்றி இங்ஙனம் வாழ்த்தினாள் என்க. கணவன் தன் மனைவியைப் பிரிதலே அவள் அஞ்சுதற்கும் வருந்துதற்கும் ஏதுவாதல் பற்றி 'அணங்கு வளர்த்து அகறல் வல்லாதீம்' என்றாள். நின்ற சொல்லனாகவும் நீடுதோறு இனியனாகவும், என்றும் இவள் தோள் பிரியாதவனாகவும் வாழ்க என்று வாழ்த்தியவாறு.

தலைவியின் முலையை ஞாழற்பூப் போன்ற சுணங்குடையதென்றும் இளமையுடைய தென்றும் சிறப்பித்தது, அவற்றின் அழகு மிகுதி காட்டி, அவ்வழகு கெட்டொழிய விடாதே என்று அறிவுறுத்தற்காம்.

இனி, இன்று இங்ஙனம் இளமையும் அழகும் மிக்கனவாகவுள்ள இவள் முலைகள், பின்னர்த் தளர்ந்து தாழும் காலம் வரினும் இவளை நீத்தல் ஓம்புக என்று அறிவுறுத்தினாளும் ஆம். 'அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும் ..... நீத்தலோம்புமதி' எனப் பிறரும் கூறுப. (நற். 10).

இனி, இச்செய்யுளில் வரும் 'அணங்கு வளர்த்து' என்னும் பகுதிக்கு, இவளது பெண்மைப் பேரழகினைப் பெரிதும் பெருகச் செய்து என்று பொருள் கூறுவாரும் உளர்.

அருஞ்சொற்பொருள் : சுணங்கு - தேமல்; அணங்கு - வருத்தம்; துன்பம்; அழகு எனினும் ஆம்; அகறல் - பிரிதல்; வல்லாதீம் - வல்லாய் அல்லை ஆகுக.

இலக்கணக்குறிப்பு : அகறல் - தொழிற்பெயர்; வல்லாதீம் - முன்னிலைப் பன்மை வினைமுற்று; மோ - முன்னிலையசை; அன்ன - உவம உருபு.

Koviloor Digital Library

மேற்கோள் : பூ தேமலுக்கு உவமையாதல் :

சிறுவீ ஞாழல் தேன்தோய்
ஒள்ளிணர் ....
வண்டற் பாவை வனமுலை முற்றத்து
ஒண்பொறிச் சுணங்கின் ஐதுபடத் தாஅம்

– நற். 191.

150

எக்கர் ஞாழல் நறு மலர்ப் பெருஞ் சினைப்
புணரி திளைக்கும் துறைவன்
புணர்வின் இன்னான்; அரும் புணர்வினனே.

கூற்று : முன்னொருநாள் பிரிந்து வந்த தலைமகன் பின்னும் பிரிந்து வந்துழி அவனை முயங்காளாக, தோழி, 'நீ இவ்வாறு செய்ததற்குக் காரணம் என்?' என்று வினவியவழி, தலைமகள் தோழிக்குத் தலைமகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம் : முன்னர் ஒருநாள் தலைமகன் தலைவியைப் பிரிந்து சென்றவன் மீண்டு வந்தான். தலைவி அவனை ஏற்றுக்கொண்டாள். சின்னாள் கழித்து அவன் மீண்டும் பிரிந்து புறத்தொழுக்கம் ஒழுகி மீண்டும் தன் இல்லம் புகுந்தான். தலைவி புலந்து அவனை முயங்க மறுத்தாள். அது கண்ட தோழி, அவனை விலக்கியதற்குக் காரணம் வினவிய போது அவட்குத் தலைவி கூறியது இது.

உரை : மணற் பரப்பிலே நின்ற ஞாழல் மரத்தின் நறுமணம் மிக்க மலர்களையுடைய பெரிய கிளையைக் கடலலைகள் தழுவிக்கொள்வதற்கு இடனான கடற்றுறையினை உடைய நம் காதலன், நம்முடன் கூடியிருக்கும்பொழுதும் இன்னாதவனாயினன்; மேலும் அரிதாக வந்து நம்மைப் புணர்பவனாகவும் உள்ளான். (யான் அவனை முயங்காமைக்குரிய ஏது இதுவேயாம்).

Koviloor Digital Library

உரை விளக்கம் : தலைவியைக் கூடியிருந்த போதும் இன்னானாதலாவது, பரத்தையர் பற்றிய நினைவுடையனாய் ஆரமுயங்காமையாம். மேலும், இவன் எந்நேரத்திலும் பிரிதற்குரியவன் என்னும் எண்ணம் நெஞ்சில் மிகுதலால், அவன் முயக்கில் மனம் ஒன்றாமையும் நிறைவு பெறாமையுமாம்.

அரும்புணர்வினனாதலாவது, புணர்தற்கு அரியனாதலாம். அஃதாவது நெடுநாள் இடையிட்டுத் தன் இல்லம் வந்து மனைவியைக் கூடும் தன்மையென்க. இதனை 'அருங்கேடன்' என்பது போல் கொள்க. (குறள். 210) இவ்விடையீடுபட்ட கூட்டத்தில் தலைவியின் உள்ளத்தில் பழைய பிரிவுபற்றிய வருத்தமே மிகுதலின், கூட்டத்தில் மனம் நிறைவுறுதலில்லை என்றபடி. நீண்ட இடைவெளிக்குப்பின் வந்த தலைவனை, 'இவ்வழி ஆறு மயங்கினை போலாய்' என்று கூறியதாகப் பிறரும் கூறுப. (கலி. 95)

அருஞ்சொற்பொருள் : புணரி – கடலலை; திளைக்கும் – தழுவும்; இன்னான் – இன்னாமையுடையவன்; அரும்புணர்வு – புணர்வு அரியன்; அஃதாவது அரிதின் வந்து கூடுபவன்.

இலக்கணக்குறிப்பு : புணர்வு – தொழிற்பெயர்; புணர்வினன் – வினையாலணையும் பெயர்; இன்னான் – குறிப்பு வினையாலணையும் பெயர்.

மேற்கோள் : புணர்வின் இன்னானாதல் :

பெறாஅமை அஞ்சும் பெறின் பிரிவஞ்சும்
அறாஅ இடும்பைத்து என்னெஞ்சு
– திருக். 1295.

தலைவன் அரும்புணர்வினனாதல் :

ஒரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
– குறுந். 231.

Koviloor Digital Library

மாரிக் கவாவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு ஆங்கு
ஆராத் துவலைஅளித்தது போலும் நீ
ஓர் யாட்டைக்கு ஒருகால் வரவு
– கலி. 70 : 24–26.

உள்ளுறை : 'நறுமலர்ப்பெருஞ்சினை ...... துறைவன்' என்றது, 'ஓரிடத்தானாய் ஒழுகாது வந்தும் பெயர்ந்தும் நம்மை வருத்தமுறுத்துவான்' என்றார் பழைய உரையாசிரியர்.

இனிப் பெருமழைப்புலவர், 'கடலலைகள் வந்து வந்து மோதி மோதி மூழ்குவித்துப் போவது போன்று இவனும் நம்பால் அடிக்கடி வந்து அளிசெய்வான் போன்று துன்ப நினைவுகளையே தோற்றுவித்துப் போவான்' என்ற உள்ளுறை காண்பார்.

ஞாழற் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

16. வெள்ளாங்குருகுப் பத்து

அஃதாவது, நெய்தல் நிலக் கருப்பொருள்களுள் ஒன்றான வெள்ளாங்குருகு, பாடல்தோறும் இடம்பெறுதலின் இப்பத்துப் பாடல்களின் தொகுதிக்கு இப்பெயர் அமைந்தது.

151

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
மிதிப்ப, நக்க கண் போல் நெய்தல்
கள் கமழ்ந்து ஆனாத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல்லேனே.

கூற்று : வாயில் வேண்டிய தோழிக்குத் தலைவி வாயில் மறுப்பாள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தையர் சேரியிலிருந்து மீண்ட தலைமகன் தன் காதலியின் ஊடலைத் தீர்க்கத் தோழியின் உதவியை நாடினான். அதற்கு இணங்கிய தோழி தலைவியிடம் அவன் சார்பாகப் பேசினாள். அவட்குத் தலைவி சொல்லிய மாற்றம் இதுவாகும்.

உரை : வெள்ளாங்குருகின் குஞ்சு இறந்ததாக, அதன் பொருட்டுத் தாய்ப்பறவையைக் காணச் சென்ற மடப்பம் பொருந்திய நடையைக் கொண்ட நாரை, தன் காலால் மிதித்தமையால் மலர்ந்த கண் போன்ற நெய்தல் மலர்கள் இடைவிடாது தேன் மணம்

Koviloor Digital Library

கமழுதற்கு இடமான துறைவனால் உடைந்தது என் நெஞ்சம். அவனுக்கு வாயில் நேர்தற்கு யான் உடம்படேன்.

உரை விளக்கம் : வெள்ளாங்குருகாவது வெண்ணிறக் கொக்காம். இதனை உள்ளான்குருகு என்று கருதி, அதற்கேற்ப உரை வகுப்பார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. இதன் பார்ப்பு நாரையின் பார்ப்புப் போல் தோற்றமுடையது என்று கூறும் இவ்வாசிரியர் அதற்கேற்பவே 'வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தனது பார்ப்பென நினைத்து அதனைக் காண்டற்குச் சென்ற மடப்பம் பொருந்திய நாரை' என உரை வகுத்தார். நினைத்து எனப் பொருள்படும் 'செத்து' என்னும் எச்சம் செத்தென என மருவிற்று என்பது இவர் கருத்தாகும். 'செத்தென' என்பதற்கு இறந்தமையால் என்று பொருள் கோடலே இவ்விடத்திற்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. தேவையில்லாமல் ஒரு வாய்பாட்டு வினையெச்சத்தை இன்னொரு வாய்பாட்டெச்சமாக வலிந்து கொள்ளத் தேவையில்லை. இங்குக் 'காணிய' என்ற 'செய்யிய' என்னும் எச்சம், தன் குஞ்சினை இழந்த தாய்ப்பறவைக்கு ஆறுதல் கூறக் காணச் சென்ற மடநடை நாரை என்று அழகாகப்பொருள் இயைபு கொள்ள இடமிருப்பது காண்க. மனிதர்க்குள்ள வழக்கத்தைப் பறவைமேல் ஏற்றிக் கூறிய தற்குறிப்பேற்றமாகக் கொள்ளுவார் கருத்தே பொருத்தமுடைத்தாகக் காண்கின்றது.

பிள்ளையென்றாள் பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை யாதலின். மடநடையாவது மெல்லிய, அசைந்தசைந்து நடக்கும் நடை. நாரை மிதித்தமையால் மூடிய இதழ்கள் திறந்தது மூடியிருந்த கண் உடனே திறப்பதுபோல் தோன்றிற்று என்பாள் 'நக்க கண்போல் நெய்தல்' என்றாள். ஆனாது கட்கமழ்தலாவது, அது மிதிபட்டு இதழ்விரித்தது முதல் அந்த நாள்முழுவதும் தன் மணம் பரப்புதலாகும். நேர்தல் உடம்படுதலாதலின் 'நேர்கல்லேன்' என்றாள், பரத்தமையொழுக்க முடைய தன் கணவனுக்கு வாயில்நேர விருப்பமில்லை என்னும் பொருளில். 'நெக்க நெஞ்சம்' என்றதற்கு 'அவன் ஒழுக்கத்தால் உடைந்த என் நெஞ்சம்' எனப் பொருள் கொள்க. தான் நேராமைக்கு ஏது தன் நெஞ்சம் உடைந்தமையே என்றாள் என்க.

Koviloor Digital Library

நெகிழவேண்டாத இம்மனிதன் பொருட்டு ஒருகாலத்தில் தன் நெஞ்சம் அன்பினால் கசிந்து உருகிற்று எனவும் அப்போது இவனுக்காக உருகிய நெஞ்சமாயினும் இப்பொழுது அவன் பொருட்டு உடம்பட மறுக்கிறது எனவும் கூறினாளும் ஆம்.

'செத்தென' என்பதற்கு இறந்துபட்டதாக என்றே நேர்ப்பொருள் கொண்ட பெருமழைப்புலவர் 'துறைவற்கு நெக்க நெஞ்சம்' என்றதற்கு, 'கடற்றுறையினை உடைய தலைவன் பொருட்டு நெகிழ்ந்த நெஞ்சத்தால் வாயில் நேர்தற்கு உடன்படேன்' என்று உரை செய்தார். தலைவன் வாராத பொழுதெல்லாம் அவனையே நினைந்து நெஞ்சு நெகிழ்ந்து வருந்திய தலைவி அவன் வந்தபொழுது மறுப்பது ஆகாது என்று கூறிய தோழிக்குத் தலைவி சொன்ன விடையாக இதனைக் கொள்வார் இவர். அவன் வாராத பொழுது நெகிழுமாயினும் அவன் செய்யும் கொடுமையை நினைந்து அந்நெஞ்சம் அவனை ஏற்கமறுக்கிறது என்பது தலைவி கருத்தென்பார் இவர். அன்பினால் நெஞ்சம் உருகுதல், துன்பமிகுதியால் நெஞ்சு உடைந்தொழிதல் என்னும் இருபொருள்களும் கொள்ள இடமிருப்பதால் பொருந்தியது கொள்க.

'செத்து' என்பதற்குப் பழைய உரையைத் தழுவிச் சாதற் பொருளே இங்கு மேற்கொள்ளப்பட்டது. இப்பத்து முழுவதற்கும் இதனையே கொள்க.

அருஞ்சொற்பொருள் : வெள்ளாங்குருகு - வெள்ளைக் கொக்கு; பிள்ளை - குஞ்சு; செத்தென - செத்ததனால்; காணிய - காணற்பொருட்டு; நெக்க - உடைந்த, நெகிழ்ந்த; நேர்கல்லேன் - உடம்படேன்.

இலக்கணக்குறிப்பு : செத்தென - செய்தென என்னும் வினையெச்சம்; காணிய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; ஆனா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

Koviloor Digital Library

மேற்கோள் : வெள்ளாங்குருகு தூய வெண்ணிறப்பறவை :
துறைபோகு அறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங்குருகு
– நற். 70.

உள்ளுறை : 'வெள்ளாங்குருகு தன் பார்ப்பைப் போலத் தோன்றிற்றாக அதனைக் காண்டற்குச் சென்ற மடநடைநாரை மிதித்தலானே நெய்தல் மலர் சிதைந்து இடையறாது தேன் காலும் துறை எனப் பொருள் கொண்டு, தலைவனுக்குப் பரத்தை குலமடந்தையான என்னைப்போலச் சிறந்தவளாகத் தோன்றுதலானே அவளைக் காமுற்றுச் செல்வானாக, அவன் நடையாலே (ஒழுக்கத்தாலே) என் நெஞ்சம் புண்பட்டு அன்பாலே இடையறாது கசிந்துருகி வருந்தாநின்றது காண்!' என்ற உள்ளுறையும் அதற்கு ஏற்பப் பொருள் கோடலும் தகும்'' என்றார் பெருமழைப்புலவர். இவர் வெள்ளாங்குருகைப் பரத்தையாகவும், பிள்ளையைத் தலைவியாகவும், நாரையைத் தலைவனாகவும் கொண்டார். இவர் வெள்ளாங்குருகு + இன் + பிள்ளை செத்தென எனக் கொண்டு 'வெள்ளைக்கொக்கு தனது இனிய பார்ப்பைப் போன்று தோன்றிற்றாக, அதனைக் காணிய சென்ற நாரை' எனப் பொருள் கூறுகின்றார். இது வலிந்துரையாகவே தோன்றுகின்றது.

'தனக்கு உரித்தல்லாத வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனக்கு உரித்தாகக் கருதி நாரை தன் பிள்ளையைக் கைவிட்டுக் காணச் சென்றாற்போலத் தலைமகன் தனக்குரிய என்னைக் கைவிட்டுப் பரத்தையை நாடிச் சென்று ஒழுகுகின்றான்.'

'குலமகளாகிய தன்னினும் பொதுமகளாகிய பரத்தை வேறாதலை நோக்காது, தலைமகன் பரத்தைபால் சென்றதனை வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனது பார்ப்பெனக் கருதி நாரை காணிய சென்றது.'

'நாரை மிதிப்ப நக்க நெய்தல் கட்கமழ்பு ஆனாவாறு போலத் தலைவன் விடுத்த வாயில்களால் நெருக்குண்டு யான்

Koviloor Digital Library

வாயில் நேரக் கருதினும் என் நெஞ்சு அன்புற்று வாயில் நேர்தலை உடன்படாதாயிற்று' என்பது ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தரும் மதிப்புக்குரிய விளக்கங்களாகும். இவற்றுள் ஏற்பன கோடல் அறிஞர் கடன்.

குறிப்பு : திணை மயக்குறுதலுள் இப்பத்திலுள்ள பத்துச் செய்யுட்களும் நெய்தலுள் மருதமாகும்.

152

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
கையறுபு இரற்று கானல்அம் புலம்பந்
துறைவன் வரையும் என்ப;
அறவன் போலும்; அருளுமார் அதுவே.

கூற்று : தலைமகள் வாயில் மறுத்துழி, 'இவன் நின்மேல் தொடர்ச்சியிற் குறைவிலன்; அருளும் உடையன்; ஆதலால் நீ இவனோடு புலத்தல் தகாது' என நெருங்கி, வாயில் நேர்விக்கும் தோழிக்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தை வீட்டிலிருந்து தலைமகள் பால் மீளவிரும்பி அதற்குத்தோழி உதவியை வேண்டிப் பெற்றான். தோழி தலைவியிடம், 'அவன்பரத்தைமை யொழுக்கம் பூண்டிருப்பினும், நின்பால் நிறைந்த அன்பன்: அருளாளனும் ஆவான்; எனவே புலத்தலை நீக்குக' என்று அறிவுறுத்தினாள். அதற்கு விடையாகத் தலைவி சொல்லியது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்துபட்டதாக, அதன்பொருட்டுத் தாய்ப்பறவைக்கு ஆறுதல் கூறுதற்பொருட்டுக் காணச் சென்ற மடப்பமுடைய நடையை உடைய நாரை செயலற்று ஒலிக்கின்ற கானல் பொருந்திய கடற்கரைக்குத் தலைவன் ஒரு

Koviloor Digital Library

பரத்தையைத் தனக்கு இற்பரத்தையாக வரைந்து கொள்வான் என்று பலர் கூறுப. ஆதலின், அவன் நீ கூறியவாறு அறநெஞ்சினன் போலும் அருட்பண்பும் அதுவேயாம்.

உரை விளக்கம் : தோழி தலைவன் பற்றிக் கூறிய புகழுரைகளை முழுமையாக ஏற்றுக் கொண்டாற்போலக் காட்டி, நயத்துடன் அவள் கருத்தை மறுத்துள்ளமை காண்க. தலைவன் அறவோனாகவும், அருளாளனாகவும், அன்புத் தொடர்ச்சியுடை யானாகவும் இருப்பது நீ சொல்லுகின்றவாறு உண்மையே. ஆனால் அந்த அன்பும், அறமும், அருளும் எனக்கன்றி, அவன் புதியவளாக மணந்துகொள்ளப் போவதாகப் பலர் கூறும் பரத்தைக்கே' என்று அங்கதச்சுவைபடக் கூறி வாயில் மறுத்தாள் தலைவி.

'கையறுபு இரற்றும் .... நாரை' என்றாள், அந்நாரை வெள்ளாங்குருகுக்காக இரங்கிச் செயலற்று வருந்தியது புலப்பட. 'வரையும் என்ப' என்றது, புதுப்பரத்தையைத் தலைவன் வரைவான் என்பது பலராலும் அறியப்பட்டது என்ற குறிப்பிற்று. தலைவன் அறவோனாதலின் அவளை அவட்குக் கொடுத்த வாக்குறுதி பிழையாகாதவாறு மணந்து கொள்ளும் அருளுடைமையும் அவள்பால் எதிர்பார்க்கத் தக்கதே என்று சொன்னதாகக் கொள்க.

அறவோன், அருளுமார் அதுவே முதலியன வெகுளிக்குறிப்பு.

இற்பரத்தையென்பாள் பரத்தை மகளாகி, ஒருவனுக்கே உரிமை பூண்டொழுகுபவள். விலை மகளாகாள்.

அருஞ்சொற்பொருள் : கையறுபு – செயலற்று; இரற்றும் – ஒலிக்கும்.

இலக்கணக்குறிப்பு : அருளும் ஆர் – 'ஆர்' அசைநிலை; கையறுபு – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கானலம், புலம்பம் – 'அம்' சாரியை.

Koviloor Digital Library

153

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
உளர, ஒழிந்த தூவி குவவு மணற்
போர்வில் பெறூஉம் துறைவன் கேண்மை
நல்நெடுங் கூந்தல் நாடுமோ மற்றே?

கூற்று : பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டிய தலைமகன் கேட்குமாற்றால் வாயிலாகப் புகுந்தார்க்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் ஊடலை நீக்கி அவளைக் கூட விரும்பிய தலைவன் தன் தூதுவர்களை அனுப்பினான். தலைவனும் அவர்களுடன் வந்து புறத்தே நின்றான். அப்போது தோழி அவன் கேட்கும் வகையில் வாயில் வந்தார்க்குக் கூறியது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக அதன் தாய்க்கு ஆறுதல் கூறும்பொருட்டுச் சென்ற மடப்பம் பொருந்திய நடையைக் கொண்ட நாரை, தன் அலகினால் கோதியபொழுது உதிர்ந்த இறகுகளைக் காற்றால் குவிந்த மணற்குன்றுகளிடத்தே மக்கள் பெறத்தக்க துறைவன் நட்புறவை நீண்ட கூந்தலையுடைய என் தோழி விரும்புவாளோ? விரும்பாள் காண்!

உரை விளக்கம் : நீராடிய குருகினம் கரைக்கண்ணே அமர்ந்து தம் கூரிய அலகுகளால் சிறகைக் கோதி உலர வைத்தல் இயல்பாம். அவ்வாறு கோதும்பொழுது உதிர்ந்த இறகுகள் காற்றால் எற்றுண்டு மணற்குன்றுகள்மேல் கிடந்தனவாம். பெறூஉம் என்றாள், விரும்பியோர் எடுத்துக்கொள்வர் என்ற பொருளில். 'துறைவன் கேண்மை ...... கூந்தல் நாடுமோ?' என்றதில் ஓகாரம் எதிர்மறை. இதனால் தலைவன். இனி இதன்கண் 'ஒழித்ததூவிபோர்விற் பெறூஉம் துறைவன்' என்றது, குருகு உதிர்த்த தூவியைப் பெற்று அணிபவன் தலைவனாகவே கொண்டு பொருள் செய்தால், நன்னெடுங்கூந்தல் இங்குத் தனித்துக் கிடக்க, நீ பலராலும்

Koviloor Digital Library

நுகரத்தக்க அல்லது பலர் நுகர்ந்து ஒதுக்கிய பரத்தையரோடு உறவாடி மகிழ்கின்றனை' என்று பொருள்கொள்ள இடமுண்டாம்.

அருஞ்சொற்பொருள் : உளர - கோத; தூவி - இறகு; போர்வு - போர், குவியல்; நாடுதல் - விரும்புதல்.

இலக்கணக்குறிப்பு : நன்னெடும் கூந்தல் - அன்மொழித் தொகை. (தலைவியைக் குறித்தது).

மேற்கோள் : வீழ் தாழ் தாழை ஊழுறு கொழுமுகை
குருகு உளர் இறகின் விரிபு தோடு அவிழும்
- குறுந். 228.

உள்ளுறை : 'உளரவொழிந்த ...... துறைவன்' என்றது, தலைவன் கூறிவிடுத்த வாயில்கள் மாற்றத்தைப் பரத்தையர் பெறுவர் என்ற உள்ளுறை கொண்டது என்பர். (பழையவுரை)

பரத்தையின் காதல் இடையறவுபட்டதாக அதனைச் சீர்திருத்தச் சென்ற தலைவன் தன் தவறின்மையைக் கூறும்பொருட்டு வெளியிட்ட சொற்களைத் தலைவி தன் இல்லத்திலிருந்தே தன் பாங்காயினார் கூறக்கேட்டிருக்கின்றாள் என்னும் உள்ளுறை உடையது என்பார் பெருமழைப்புலவர்.

154

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
கானற் சேக்கும் துறைவனோடு
யான் எவன் செய்கோ? பொய்க்கும் இவ் ஊரே?

கூற்று : தோழி வாயில் வேண்டி நெருங்கியவழி, வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : பரத்தையர் கூட்டுறவில் தலைவன் இருந்தமைக்காகத் தலைவி ஊடியிருந்தாள். அவள் ஊடல் தீர்த்து உதவுமாறு அவன் தோழியை வேண்டினான். அவன் வேண்டுகோளை ஏற்றுத் தலைவியை நெருங்கித் தலைவன் சார்பாகத் தோழி பேசியதற்குத் தலைவி அளித்த மறுமொழி இது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக, அக்கொக்கினைக் கண்டு ஆறுதல் கூறும் பொருட்டுச் சென்ற மடப்பத்தைக் கொண்ட நடையினை உடைய நாரை கடற்கரைச் சோலையிலே தங்குதற்கு இடனான துறைவனோடு யான் யாது செய்ய வல்லேன், இவ்வூரார் பொய்கூறுகின்றனர் ஆகலான்?

உரை விளக்கம் : தலைமகன் நிலைமாறும் பண்பினனாதல் பற்றி, உடம்பாடு வேண்டிய தோழியிடம், 'தோழியே! அவரோடு ஊடல் தீர்ந்து கூடுமாறு வேண்டுகின்றனை. அவரோடு கூடி நான் அடையத்தகும் நன்மைதான் யாதோ? அப்படியே அடையினும் அது நிலைநிற்காதே! யான் யாது செய்வேன்? மேலும் இவ்வூராரும் பண்பிலராய், அவன் பக்கத்தாராகவே பேசுவர்." என்று கூறினாள் என்க. 'எவன் செய்கோ?' என்றதற்கு, 'நம்பெருமானோடு கூடி யான் எவ்வறத்தைச் செய்வேன்?' என விளக்குவார் உளர். 'அவனொடு யான் ஒழுகும் ஒழுக்கம் என்?' என்று வெறுத்துக் கூறினாள் என்றலும் ஒன்று.

தலைவன் பண்பினைத் தோழியும் அறிவாள் எனினும் அவனுக்காகப் பரிந்து பேசக் கண்ட தலைவி, அவள் மட்டுமல்லாது ஊரே அவ்ன் சார்பிற்றான் பேசும் போலும் என்று வெறுத்துக் கூறுவாளாய், 'இவ்வூரே பொய்க்கும்' என்றாள்.

உண்மையான அன்பில்லாத வழி இல்லறம் சிறவாது ஆதலின் தலைவன் மீண்டு இங்கு வருவதால் விளையப்போகும் நன்மை யாதுமில்லை எனப் புலந்து கூறி வாயில் மறுத்தாள்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சேக்கும் – தங்கும்; எவன் செய்கு – என்ன செய்வேன்; எவ்வறம் செய்வேன்.

155

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப, ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே!

கூற்று : பல வழியானும் வாயில் நேராளாகிய தலைமகள், 'மகப்பேற்றிற்கு உரித்தாகிய காலம் கழிய ஒழுகுகின்றாய்' என நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தமையொழுக்கம் காரணமாகத் தலைவி புலவி கூர்ந்தாள். தோழி பல ஏதுக்களும் காட்டி அவள் ஊடல் தீர்க்க முயன்று தோற்றாள். அப்பொழுது தலைவி கருவுற்றிருந்தாள் ஆதலின், அதனை எடுத்துக் கூறித் தெருட்ட முயலும்பொழுது தலைவி அவட்குச் சொல்லியது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக, அக்கொக்கினைக் கண்டு ஆறுதல் கூறச் சென்ற மடப்பம் பொருந்திய நடையை உடைய நாரை பதைப்புற்றுத் துடித்தமையால் சிதைவுற்ற நெய்தல் மலர், கழியிடத்து வெள்ளத்தோடு இடம்பெயர்ந்து செல்லும் துறைவன் பொருட்டு யான் பைஞ்சாய்க் கோரைப் பாவையாகிய மகவினை முன்பே ஈன்றுள்ளேன். (இனி வேறு மகப்பேறு வேண்டேன்).

உரை விளக்கம் : வெள்ளாங்குருகின் அவலம் கண்டு இரங்கிற்றாதலின் நாரையும் துயரத்தால் துடித்தது என்க. அத்துடிப்பினால் அருகிருந்த நெய்தல் மலர்கள் சிதைவுற்றன

Koviloor Digital Library

என்றும் கழியோதம் சிதைந்த மலர்களை அடித்துச் சென்றது என்றும் அறிக.

பைஞ்சாய் என்பது கோரை வகை. இக்கோரையால் பாவை செய்து அதற்கு மலர்அணிந்து அழகு பார்ப்பதும், பாலூட்டுவதும் பேதைப்பருவ மகளிர் விளையாட்டுச் செயல்களாம். மகப்பேறு காரணமாகவாவது நீ த்லைவனொடு உடம்பட்டு வாழ வேண்டும் என்றாள் தோழியாகலின், அவளை மறுப்பாளாய், 'மகப்பேறு என்பது நான் இனிமேல்தான் அடைய வேண்டுமோ! யான் களவுக் காலத்திலேயே அவர்க்குப் பைஞ்சாய்க் கோரைப் பிள்ளையைப் பெற்றதுண்டு. அதனையே நினைத்து நிறைவு கொள்வேன்' என்று வெறுத்துக் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : பதைப்ப - மனம் பதைத்துத் துடிக்க; ததைந்த - சிதைந்த; கழிய - கழியிலுள்ள ஓதம் - அலை; பைஞ்சாய் - தண்டான்கோரை.

மேற்கோள் : பைஞ்சாய்க் கோரையால் பாவை செய்தல் :

பஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்
அஞ்சாய்க் கூந்தல் ஆய்வது கண்டு

— ஐங். 383.

பணைத் தோட்குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர்

— குறுந். 276.

உள்ளுறை : 'பதைப்ப .... ஓதமொடு பெயரும்' என்றதன் குறிப்புப் பொருளாவது, பரத்தையர் உறவு இடையீடுபட்டதாக அதன்பொருட்டு அவரைக் காணச் சென்ற தலைவன் அவர் ஊடலைப் பொறாமல் வருந்திக் கூறிய சொற்கள் என் பாங்காயினார் வாயிலாக என் செவிக்கு எட்டியிருக்கின்றன.

Koviloor Digital Library

இத்தகையோன் எங்ஙனம் நம்மோடிருந்து இல்லறம் நிகழ்த்துவான் என்ற உள்ளுறைப் பொருள் கொள்வார் பெருமழைப் புலவர். இனி இதற்கு, வாயில்கள் கூறப் பரத்தை எய்திய இரக்கத்தைத் தன் தண்ணளியால் தீர்ப்பான்' என்று உள்ளுறை கூறலும் உண்டு.

156

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
பதைப்ப, ஒழிந்த செம் மறுத் தூவி
தெண் கழிப் பரக்கும் துறைவன்
எனக்கோ காதலன்; அனைக்கோ வேறே!

கூற்று : பரத்தையிடத்து வாயில் விட்டு ஒழுகுகின்ற தலைமகனது வாயிலாய் வந்தார்க்குத் தோழி வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையரோடு உறவு கொண்டு தலைவியைப் பிரிந்திருந்தான். அவன் பரத்தையரிடத்துத் தூதுவிடுத்து அவர்களின் ஊடல் தீர்த்துக் கூடுவதில் ஆர்வம் கொண்டிருந்தான். அவன் தன் தூதுவர்களைத் தலைவியிடமும் அனுப்பி அவள் ஊடல் தீர்த்துக் கூட விரும்பி அதற்குத் தோழி உதவியை நாடினான். தலைவன் பரத்தையரோடு கொண்ட உறவை நன்குணர்ந்த தோழி, வாயில் மறுத்துக் கூறியது இது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக, அக்குஞ்சின் தாயைக் கண்டு ஆறுதல் கூற விரும்பிச் சென்ற மடப்பம் கொண்ட நடையை உடைய நாரை, துயரத்தால் துடித்தமையால் அதன் உடலிலிருந்து வீழ்ந்த சிவந்த மறுக்கள் கொண்ட இறகுகள் தெள்ளிய நீரைக்கொண்ட கழியிடத்தே பரந்து செல்லுதற்கு இடமான துறைவன், தலைவிமேல் அன்புடையன் என்று நீவிர் சொல்வது எனக்கும் உடம்பாடே. ஆயின், என் அன்னைபோலும் தலைவியின் மனத்திற்கு அஃது உடம்பாடானதன்று.

Koviloor Digital Library

உரை விளக்கம் : இனித் 'துறைவன் எனக்கோ காதலன் அனைக்கோ வேறே' என்ற பகுதிக்கு, "கடற்றுரையினை உடைய நம்பெருமான் கழிபெரும் 'காதலை உடையோன் என்று பாராட்டுகின்றனை; அவன் அத்தகைய காதலுடையோனாவது என்னிடமோ, அன்றி எம்பிராட்டியிடமோ, அன்றி பரத்தை மகளிராகிய பிறரிடத்தோ அறிகின்றிலேம்; யாரிடத்து?" என்று உரை வகுத்தார் பெருமழைப்புலவர். இவர் 'வேறே' என்றதை வினாவாகக் கொள்வது பொருத்தமாகப்படவில்லை. இச்செய்யுளை வினாவாக முடிப்பது கருத்தெனின் ஆசிரியர் எனக்கோ அனைக்கோ என்று கூறியவாறு 'பிறர்க்கோ' என முடித்திருப்பார். அவ்வாறன்றி 'வேறே' என முடித்தலின் ஏகாரத்தை ஈற்றசையாகக் கோடலே பொருந்துவது. ஈற்றடியிலுள்ள இரு ஓகாரங்களும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கூறுமாறு பிரிநிலைப் பொருளனவே என்க. 'தலைவன் தன் மனைவிபால் பெரும் அன்புடையன் என்ற உம் கருத்து எனக்குச் சரியெனவே படுகிறது. ஆனால் அன்னைக்கோ அதற்கு மாறாகப் படுகிறது' என்ற நேர்ப்பொருளே சால்புடைத்து. பழைய உரையாசிரியர் கருத்தும் இதுவே என்பது, "இவள்மேல் அவன் காதலன் என்று நீயிர் கூறுகின்ற மாற்றம் மெய்யென்பது எனக்கும் ஒக்கும்; இவள் மனத்திற்கு ஒவ்வாததென்பதாம்" என்ற அவர் கூற்றாலறியப்படும்.

அருஞ்சொற்பொருள் : காணிய சென்ற – காணச் சென்ற; பதைப்ப – பதைத்தமையாலே; செம்மறுத்தூவி – சிவந்த கறையை உடைய தூவி; தெண்கழி – குளிர்ந்த உப்பங்கழி; காதலன் – அன்புள்ளவன்; அணைக்கு – அன்னையாகிய தலைவிக்கு; வேறு – மாறானது.

இலக்கணக்குறிப்பு : பதைப்ப – செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; எனக்கோ, அனைக்கோ – ஓகாரம் பிரிநிலை; அனை – அன்னை என்றதன் தொகுத்தல் விகாரம்; ஏகாரம் – ஈற்றசை.

Koviloor Digital Library

மேற்கோள் : சிவந்தமறுவுடைய தூவியுடையது நாரை :
பொய்கை மேய்ந்த செவ்வரி நாரை
– புறம். 351 : 9.

கவிரிதழ் அன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரை
– குறுந். 103 : 2 – 3.

சிறுமீன் கவுள் கொண்ட செந்தூவி
நாராய்'
– ஐந்.எழு. 68.

உள்ளுறை : 'செம்மறுத்தூவி தெண்கழிப் பரக்கும் துறைவன்' என்றது அப்பரத்தைக்குக் கூறிவிட்டமாற்றம் எவ்விடத்தும் பரந்து செல்கின்ற துறைவன் என்றவாறு. (பழையவுரை)

இனிப் பெருமழைப்புலவர் இதனைச் சிறிது மாற்றி, 'தன்பால் ஊடியிருந்தமையாலே அன்பையிழந்திருந்த பரத்தையை ஊடல் தீர்க்கச் சென்ற துறைவன், அவள் பின்னும் பிணங்குதல் கண்டு உளம் நடுங்கி அவளைத் தெளித்தற்குக் கூறிய வஞ்சகப் பொய்ம்மொழிகள் தலைவியின் பாங்காயினார் வாயிலாய் அவள் நெஞ்சத்தே புகுந்து அவளை வருத்துகின்றன' என்பது உள்ளுறை எனக் கூறிப் பழைய உரைகாரரையும் பிறரையும் மறுப்பார். செம்மறுத்தூவி என்பது தலைவன் பரத்தையர்க்கும் பொய்யே பேசுவான் என்ற குறிப்பும், தெண்கழி என்பது தலைவியின் உள்ளம் தூய்மையானது என்ற குறிப்பும் கொண்டவை என்பார் இவர்.

Koviloor Digital Library

157

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
காலை இருந்து மாலைச் சேக்கும்
தெண் கடற் சேர்ப்பனொடு வாரான்,
தான் வந்தனன், எம் காதலோனே!

கூற்று : பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டி ஒழுகுகின்ற தலைமகன், 'புதல்வன் வாயிலாக வரும்' எனக் கேட்டு, அஞ்சிய தலைமகள் புதல்வன் விளையாடித் தனித்து வந்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தை காரணமாகப் பிரிந்திருந்தான். அவன் தலைவியின் ஊடலைத் தன் தூதர் வாயிலாகத் தீர்த்துத் தலைமகளைக் கூட முயன்றான். அப்பொழுது அவன் தன் மகனைத் துணையாகக் கொண்டு தன் இல்லத்திற்குள் நுழையப்போவதாகக் கேள்வியுற்றாள் தலைவி. ஆனால், தலைவன் வரவில்லை; மகன் மட்டுமே வந்தான். அப்பொழுது தலைவி கூறியது இது.

உரை : வெள்ளைக்கொக்கின் குஞ்சு இறந்ததாக, அதன் தாயைக் கண்டு ஆறுதல் கூறுதற்பொருட்டுச் சென்ற மடப்பம் கொண்ட நடையை உடைய நாரை காலைப் பொழுது முதற்கொண்டு அக்கொக்கோடு இருந்ததோடு நில்லாது மாலைப் பொழுதிலும் அங்கேயே தங்குதற்கு இடனான தெள்ளிய நீரையுடைய கடற்றுறைத் தலைவனான தன் தந்தையொடு வாரானாய்த் தான் மட்டும் தனியனாய் வருகின்றான் என்மேற் காதலனாம் என் மகன்.

உரை விளக்கம் : தலைவன் பரத்தமையைப் பெரிதும் வெறுத்தவள் தலைவியாதலின் அவன் வாயில் வேண்டி வரும்பொழுது வாயில் நேரலாகாது என்று உறுதியுடன் வருவானேல், அவன்மேல் உள்ள காதல் காரணமாகத் தன்னையும்

Koviloor Digital Library

மீறித் தன் நெஞ்சம் நெகிழக் கூடுமே என்று அஞ்சியிருந்தாள். இப்பொழுது அம்மகன் தனித்து வந்தமையின், தன் கணவன் அவனொடு வருவது தவிர்ந்ததாதலின், இனி வாயில் மறுக்கத்தடையேதுமில்லை என்று மகிழ்ந்தாளாதலின், 'சேர்ப்பனொடு வாரான், தான்வந்தனன் என் காதலோன்' என்றாள். தன் மகன் தனியே வந்தமைக்குக் காரணம், அவன் தன்மேல் கொண்ட காதல் என்பது அவள் கருத்தாம். விளையாடச் சென்ற மகனை மார்போடணைத்துத் தன் இல்லத்துட் புகுவது ஊடல் தீர்க்க விரும்பும் கணவன் இயல்பாதலின், தன் கணவன் அங்ஙனம் தன்மகனொடு புகுவான் என எதிர்பார்த்தாள் என்க.

மாலையென்றது இரவையும் உள்ளடக்கியதாகும். இரவும் பகலும் தலைவன் பரத்தையர் மனைக்கண் உறைந்தான் என்பது.

மேற்கோள் : ஊடல் தீர்க்கத் தலைவன் தன் மகனோடு வருதல் :

விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கு அவித்து ஒழியும் என் புலவி ...
— கலி. 75 : 27 – 28.

அணியோடு வந்து ஈங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகலம் நனைப்பதால்
— கலி. 79 : 7 – 8.

இப்பாட்டின் பிற தாழிசைகளையும் இறுதிப்பகுதியையும் காண்க.

உள்ளுறை : 'நாரை காலையிலிருந்து மாலைச் சேக்கும் துறைவன்' என்றது பரத்தையிடத்துவிட்ட வாயில்கள் செவ்வி பெறாது பகலெல்லாம் இருந்து இரவின் கண்ணும் அங்கே துயில்கின்றார் என்பதாம் (பழையவுரை)

Koviloor Digital Library

158

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மட நடை நாரை
கானல் அம் பெருந்துறைத் துணையொடு
கொட்கும்
தண்ணந் துறைவன் கண்டிகும்,
அம்மா மேனி எம் தோழியது துயரே.

கூற்று : பரத்தை புலந்துழிப் புலவி நீக்குவானாய், அஃது இடமாக வந்தமை அறிந்த தோழி, தலைமகற்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் ஒரு பரத்தையிடம் நேயம் கொண்டிருந்தான். அப்பரத்தை அவன்பால் ஊடினாள். அவ்வமையத்தைத் தனக்கு வாய்ப்பாகக் கொண்டு தலைவியின் ஊடலைத் தீர்க்க முயன்ற தலைவனுக்குத் தோழி கூறி வாயில் மறுத்தது.

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக, அதன் தாயைக் கண்டு ஆறுதல் கூறச் சென்ற மடப்பம் கொண்ட நடையை உடைய நாரை சோலைகளை உடைய அகன்ற அழகிய துறையின்கண் தன் துணையோடு சுற்றித்திரிதற்கு இடனான குளிர்ந்த கடற்றுறையின் தலைவனே! அழகிய மாந்தளிர் போன்ற மேனியைக் கொண்ட எம் தோழியாகிய நின் பரத்தையின் துயரையாம் கண்டோம். (அவள் துயரை விரைந்து சென்று தீர்ப்பாயாக).

உரை விளக்கம் : தோழி பரத்தையை 'எம் தோழி' என்றாள் தனக்கும் தலைவிக்கும் சமமான மதிப்பைத் தலைவன் பரத்தைக்கு அளித்தான் என்ற குறிப்பில். 'அம்மாமேனி' என்று பரத்தையின் மேனியைச் சுட்டினாள், தலைவன் அவளைத் தலைவியினும் காட்டில் பேரழகி என்று மதித்தொழுகுபவன் என்ற குறிப்பில்.

Koviloor Digital Library

'எம் தோழி' என்று பரத்தையைச் சுட்டியது ஊடற்குறிப்புடன் ஆகும். எம் தோழி என்றது தலைவியையும் உள்ளடக்கியாகும். 'எம் துயரம் கிடக்கட்டும். நுமக்கு மிக அணியளாகிய பரத்தையின் துயரைத் தீர்ப்பதுவே நும் தலையாய கடன். விரைந்து செல்க' என்று விலக்கினாள்.

'நீ இங்கு வந்ததற்கு நினக்கு எம்பால் உள்ள அன்பு காரணமாகாது. நினக்கு மிக அன்புடைய அம்மாமேனியெம் தோழி நின்னொடு ஊடியதனால், அவள் மனம் மாறும் காலம் வரையில் இடையீடு இன்றிக் காம இன்பம் நுகர்தற் பொருட்டே இங்கு வந்தனை' என்றாள் என்க.

வாயிலாக வந்தார் தோழியிடம், 'தலைவன் தலைவியிடம் காதலுடையான். எனவே அவள் உடம்பாடு பெற்றுத்தருக' என வேண்டியதாகக் கோடலே பொருந்துமேயன்றி, 'உன்னிடமும் தலைவியிடமும் காதலன்' என்று கூறினர் என்றல் பொருந்தாது. மேலும் 'வேறே' என்பதிலுள்ள ஏகாரம் ஈற்றசையாகக் கொள்ளத்தக்கதே. பழைய உரையாசிரியர்க்கு இஃதே கருத்து. அதனை வினாவாகக் கொண்டு கூறுவது வலிந்து கூறுவதேயாம். வேறு என்ற சொல்லால் பரத்தையரைச் சுட்டுவது பாடல் இயற்றியவர் கருத்தாயின், 'எனக்கோ, அனைக்கோ வேறோ' என ஒகாரமாகவே முடித்திருப்பார். அப்படியே ஓகாரமாக்கியிருந் தாலும் கூட, நான்காம் வேற்றுமை உருபு இன்றி **வேறோ** என்று கூறுவது **'வேறு ஒருவருக்கோ'** என்று பொருள்படுவது அரிதேயாகும். இதன் பொருத்தம் நோக்கிச் சிறந்ததைக் கொள்வது அறிஞர் கடன்.

அருஞ்சொற்பொருள் : கொட்கும் – சுற்றித் திரிகின்ற; அம் – அழகிய; மாமேனி – மாந்தளிர் போன்ற உடம்பு.

இலக்கணக்குறிப்பு : காணிய – செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கொட்கும் – செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

Koviloor Digital Library

உள்ளுறை : செம்மறுத்தூவி தெண்கழிப் பரக்கும் துறைவன் என்பது, 'அப்பரத்தையர்க்குக் கூறிவிட்ட மாற்றம் எவ்விடத்தும் பரந்து செல்கின்ற துறைவன்' என்பதனை உள்ளுறுத்தது.

இனி இதற்கு, ''இதன்கண், வெள்ளாங்குருகினை இழவுகண்டு அளவளாவச் சென்ற நாரை பதைத்தலானே உதிர்ந்த தூவி தெண்கழி நீரெல்லாம் பரவிக் கிடக்கும் என்றது, தன்பால் ஊடியிருந்தமையாலே அன்பை இழந்திருந்த பரத்தையை ஊடல் தீர்க்கச் சென்ற துறைவன் அவள் பின்னும் பிணங்குதல் கண்டு உளம் நடுங்கி அவளைத் தெளித்தற்குக் கூறிய வஞ்சகப் பொய்ம்மொழிகள் தலைவியின் பாங்ககாயினோர் வாயிலாய் அவள் நெஞ்சத்தே புகுந்து அவளை வருத்துகின்றன என்பது உள்ளுறையாகக் கொள்க.'' என்று விளக்கம் தருகிறார் பெருமழைப்புலவர்.

159

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
பசி தின, அல்கும் பனி நீர்ச் சேர்ப்ப!
நின் ஒன்று இரக்குவென் அல்லேன்,
தந்தனை சென்மோ – கொண்ட இவள் நலனே.

கூற்று : மறாமற் பொருட்டு உண்டிக் காலத்து வாயில் வேண்டி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தை வீட்டிலிருந்து மீண்டு வந்து தலைவியின் ஊடல் நீக்கிக் கூட விரும்பினான். தலைவி தன் வேண்டுகோளை மறாது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தினனாய், உணவுண்ணும் நேரத்தைத் தேர்ந்து வந்தான். அவனுக்குத் தோழி கூறியது இது.

Koviloor Digital Library

உரை : வெள்ளைக் கொக்கின் குஞ்சு இறந்ததாக, அதன் தாய்க்கு ஆறுதல் கூறுதற்பொருட்டு அதனைக் காணச் சென்ற மெல்லிய நடையினை உடைய நாரை, உணவு யாதும் உண்ணப்பெறாது, பசியால் வருந்தி உறைவதற்கு இடனான குளிர்ந்த கடற்கரை நாட்டின் தலைவ! இப்பொழுது யான் நினக்குரித்தான ஒன்றைத் தருமாறு நின்னை இரந்து நிற்பதாக இல்லை. என் தோழிக்கு உரியதாய், நின்னால் கவர்ந்து செல்லப்பட்ட அவள் நலனைத் திருப்பித் தந்த பின் நீ இவ்விடம் விட்டு அகல்க.

உரை விளக்கம் : 'நின் ஒன்று' என்பதற்கு, நின்னுடையது ஒன்றை என்று பொருள் கொள்க. 'யான் கேட்கப் போவது என் தலைவியினுடையதாய், நீ நின் வஞ்சமொழிகளால் அவளை மயக்கிக் கவர்ந்து சென்ற பெண்மை நலமே என்றாள். 'நின்னை இரந்து பின்னிற்கும் அளவுக்கு யாம் இழிந்தேமல்லேம்' என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : அல்கும் – தங்கும்; பனி – குளிர்ச்சி.

இலக்கணக்குறிப்பு : தின – தின்ன என்பதன் விகாரம்; தந்தனை – தந்து, முற்றெச்சம்; சென்மோ – 'மோ' முன்னிலையசைச் சொல்.

குறிப்புப் பொருள் : 'நாரை ..... சேர்ப்ப' என்றது நின் வாயிலாக நின் பரத்தை இல்லத்திற்குச் சென்றோர் நின்னைப் பார்த்திருந்து பசிப்பர்; அவருடன் இருந்து உணவுண்டு மகிழ்தற் பொருட்டு விரைந்து அங்குச் செல்க என்னும் உள்ளுறை கொண்டது. (பழையவுரை)

உள்ளுறை : இனி, "குருகினைக் காணச் சென்ற நாரை பசி நலியவும் ஆண்டே உறையும் என்றது, பரத்தையரை வயப்படுத்தும் கருமமே கண்ணாகிய நீ பசியை ஒரு பொருளென மதியாமல்

Koviloor Digital Library

அவர்பாலே தங்கும் இயல்புடையை" என்னும் குறிப்புப் பொருள் கொள்வார் பெருமழைப் புலவர்.

160

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் தலையும் நோய் மிகும் துறைவ!
பண்டையின் மிகப் பெரிது இனைஇ,
முயங்குமதி, பெரும! மயங்கினள் பெரிதே!

கூற்று : புலந்த காதற்பரத்தை புலவி தீராது தலைமகன் வாயில் வேண்டி வந்தான் என்றது அறிந்த தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையொருத்திபால் பெருநேயம் கொண்டிருந்தான். அவள் இவனுடன் ஊடினாள். அவள் ஊடலைத் தீர்க்காது விடுத்துத் தலைமகளை நாடி வந்து அவள் ஊடல் தீர்த்து அவளொடும் கூட விரும்பினான். அவனுக்குத் தலைமகள் சொல்லியது.

உரை : வெள்ளைக்கொக்கின் குஞ்சு இறந்ததாக, அதன் தாயைக் கண்டு ஆறுதல் கூறச் சென்ற மெல்லிய நடையைக் கொண்ட நாரை, இறந்த குஞ்சிற்கு வருந்தியதோடமையாது அதன் தாய்க்கு அதனினும் மிக வருந்துதற்கு இடமான கடற்கரை நாட்டின் தலைவனே! நின் காதற்பரத்தை பெரிதும் மயக்கமுற்றாள். ஆதலின் அவளை நீ முன்னினும் பேரன்புடன் முயங்கி இன்புறுத்துவாயாக.

உரை விளக்கம் : நொந்தது குருகின் பிள்ளைக் கெனவும், மேலும் நோய் மிகுந்தது அதன் தாய்க்கெனவும் கொள்க. தானும் ஒரு தாயாதலின், குஞ்சினை இழந்து வருந்திய குருகுக்கு நாரை மிக வருந்திற்று என்க. 'இனைஇ மயங்கினள் பெரிது' என்றும், 'பண்டையின் முயங்குமதி' என்றும் கூட்டிப் பொருள்கொள்க.

Koviloor Digital Library

பண்டையின் என்பதிலுள்ள இன் உருபினை ஒப்புப் பொருளிற் கொள்ள, பண்டு போலவே அவள் ஊடலைத் தீர்த்து அவளொடு முயங்கி அவள் வருத்தம் தீர்ப்பாய் என்னும் பொருளும், உறழ்ச்சிப் பொருளில் கொள்ள, 'முன்னினும் பேரன்புடையையாய் அவளை அணைத்து இன்புறுத்துவாய்' என்னும் பொருளும் தோன்றும். நின் பரத்தை நின்பால் என்னினும் மிகுதியான அன்புடையள் ஆதலினாலும், நீ தானும் என்பால் கொண்ட அன்பினும் அவள்பால் கொண்ட அன்பு மிகப் பெரிதாகலானும், அவள் ஊடலைத் தீர்ப்பதே நினக்குச் சிறந்தது. ஆகவே மீள்வாயாக! அன்பற்ற எம்மிடம் நுமக்கு என்ன உறவு? என ஊடி விலக்கினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : நொந்ததன் தலையும் – நொந்ததன் மேலும்; பண்டையின் – முன் போலவே, முன்னினும்; இனைஇ – வருத்தமுற்று.

இலக்கணக்குறிப்பு : முயங்குமதி – மதி முன்னிலை அசைச்சொல்.

உள்ளுறை : 'நாரை ...... துறைவ' என்றது, நின் ஆற்றாமைக்குப் பரிந்து வாயிலாய்ச் சென்றவர்கள் அவள் வருத்தம் கண்டு மிகவும் வருந்துகின்றார்கள். (பழையவுரை)

வெள்ளாங்குருகுப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

17. சிறுவெண் காக்கைப் பத்து

பாடல்தோறும் நெய்தற்குரிய கருப்பொருள்களுள் ஒன்றான சிறுவெண் காக்கை இடம்பெறுதல் பற்றி இப்பத்துக்கு இப்பெயர் அமைந்தது.

161

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
கருங்கோட்டுப் புன்னைத் தங்கும் துறைவற்குப்
பயந்து நுதல் அழியச் சாஅய்,
நயந்த நெஞ்சம் நோய்ப்பாலஃதே!

கூற்று : ஒருவழித் தணந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் தலைமகன் தலைமகளைச் சிறிது நாள் பிரிந்து தன்னூர்க்குச் சென்றான். அப்பொழுது பிரிவாற்றாது வருந்தின தலைவியைத் தோழி தேற்றினாள். அவளுக்குத் தலைவி சொல்லியது இது.

உரை : பெருங் கடற்கரையின் கண் வாழும் கடற் காக்கை கரிய கிளைகள் கொண்ட புன்னை மரத்தில் தங்குதற்கு இடமான கடல்துறைப் பகுதியின் தலைவன் பொருட்டுப் பசலையுற்று, நெற்றியின் ஒளி கெட்டழியுமாறு இளைத்து அவனை விரும்பிய நெஞ்சம் இப்படி நோயிற் கிடந்துழலவேண்டுவதே.

Koviloor Digital Library

உரை விளக்கம் : துறைவனை நயத்தலாகிய பெரிய பிழையைச் செய்த என் அறிவில்லாத நெஞ்சத்திற்கு இப்பொழுது அஃது அடையும் துயரம் தகுதியான தண்டனை என்றாள் தலைவி. தன்னுடைய பிழையைத் தன் நெஞ்சின்மேல் ஏற்றினாள். 'நுதல் பசந்து அழியச் சாஅய்' என்று மாறுக. தலைவனை நெஞ்சு நயந்த செயல் தன் நுசல் பசலையுறுமாறு மெலியக் காரணமாயிற்று என்றாள்.

சின்னாளில் வருவதாகக் கூறிச் சென்ற தலைவன் வாராமையால் வெறுப்புற்று இங்ஙனம் தன் நெஞ்சினை நொந்துரைத்தாள்.

சிறுவெண்காக்கையென்றது, ஏனைக் காக்கை போன்று கரிய நிறமுடையது எனினும், அதன் கழுத்துப்பகுதிக்குகீழ் சிறிதே வெண்ணிறம் கொண்டதாம். சிறுமை ஈண்டு வெண்மை நிறத்தின் மேற்றாம். இக்காக்கை வகை, தமிழகம், மலேசியா, சுமத்திரா,சாவகம் முதலிய தீவுப்பகுதிகளிலும் வாழ்கிறது.

வெண்காக்கை கரியகோட்டில் உறையும் என்பதில் உள்ள முரண்தொடை அழகைக் காண்க.

அருஞ்சொற்பொருள் : சிறுவெண் - சிறிதே வெண்மை நிறம் கொண்ட; கருங்கோடு - கரிய கிளை, பெரிய கிளை; பயந்து - பசந்து - ஒளியின்றி நிறமாறி; சாஅய் - மெலிவுற்று; நயந்த - விரும்பிய; நோய்ப்பாலஃது - துன்பத்திற்கண் இருத்தற்பாலது.

குறிப்பு : 'பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை' என்னும் இத்தொடர் குறுந்தொகை 246 இல் இடம்பெற்றது. அத்தொடரே இந்நூலில் பத்துச் செய்யுட்களில் ஆளப்பட்டிருத்தல் காண்க. 'சிறுகோட்டுப் பெரும்பழம்' என்றாற்போலச் சிறந்த முரண்தொடையாகும் இது.

Koviloor Digital Library

மேற்கோள் : சிறுவெண்காக்கை கடற்புறத்தே வாழ்வது :

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பெருந்தோடு
எறிதிரைத் திவலை ஈர்ம்புறம் நனையப்
பனிபுலந்து உறையும் பல்பூம் கானல்

– குறுந். 334.

மாயிரும் பரப்பகம் துணிய நோக்கிச்
சேயிறா எறிந்த சிறுவெண் காக்கை
பாய் இரும் பனிக்கழி துழைஇப் பைங்கால்
தான்வீழ் பெடைக்குப் பயிரிடூஉ சுரக்கும்

– நற். 31.

உள்ளுறை : சிறுவெண்காக்கை தனக்கு வேண்டியது முயலாது புன்னையின் கோட்டில் தங்குவது போலத் தலைவன் வரைவதற்கு வேண்டுவன செய்யாது தன்னூரில் தங்கினான்.

162

பெருங்கடற்கரையது சிறு வெண் காக்கை
நீத்து நீர் இருங் கழிஇரை தேர்ந்து உண்டு,
பூக் கமழ் பொதும்பர்ச் சேக்கும்
துறைவன் சொல்லோ பிற ஆயினவே!

கூற்று : மேலது.

உரை : பெரிய கடற்கரையில் வாழும் இயல்புடைய சிறுவெண் காக்கை ஆழமான நீரால் நிரம்பிய பெரிய கழியில் இரையைத் தேர்ந்து உண்டபின், பூமணம் கமழும் சோலையிலே உறைவதற்கு இடமான கடல்துறைக்குத் தலைவன் முன் சொன்ன சொற்கள் இன்று பொய்யாயின.

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'சொல்லோ பிறவாயின' என்றது, அங்ஙனம் சொன்னவை செயல் வடிவம் பெற்றில என்ற பொருளிலாகும். பிறவாதலாவது, சொன்னதற்கு மாறாவதாகும். ஈண்டுச் சொற்கள் என்றன தலைவன் களவுக்காலத்தே செய்த சூளுரையும், விரைவில் வந்து வரைவேன் என்ற வாக்குறுதியும் போல்வன. 'பிற ஆயினவே' என்பதில் உள்ள ஏகாரம் ஏமாற்ற உணர்வை வெளிப்படுத்தல் நோக்குக. 'இனி யான் இதற்கு யாது செய்வேன்?' என்றாளாம். இருங்கழியாவது பெரிய உப்பங்கழி. அதற்கு ஏற்பவே அது ஆழமாக இருந்தது என்பது பட, 'நீத்துநீர் இருங்கழி' என்றாள். அயிரை, கெடிறு போன்றவை சிறு வெண் காக்கை விரும்பியுண்ணும் மீன்கள் என்பர்.

அருஞ்சொற்பொருள் : நீத்து நீர் – ஆழமான நீர்; இருங்கழி – பெரிய கழி, கரிய கழி; பொதும்பர் – சோலை.

மேற்கோள் : சிறுவெண்காக்கை இரைதேர்ந்துண்டற்கு 161 ஆம் பாடற்குரிய மேற்கோள்களைக் காண்க.

உள்ளுறை : இதன்கண் காக்கை நீத்துநீர் இருங்கழி இரை தேர்ந்து உண்டு பூக்கமழ் பொதும்பர்ச் சேக்கும் என்றது தலைவன் தான் விரும்புகின்ற களவின்பம் வாய்த்த அளவிலே அமைதி உடையவனாய்த் தன் மனைக்கண் சென்று ஆண்டு நுகரும் பிற இன்பங்களிலே நெஞ்சம் போக்கி நம்மைப் பற்றிச் சிந்தியாமலேயே தங்கிவிடுகிறான் என்பது பெருமழைப்புலவரின் விளக்கமாகும்.

163

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
இருங் கழித் துவலை ஒலியின் துஞ்சும்
துறைவன் துறந்தென, துறந்து என்
இறை ஏர் முன் .கை நீங்கிய, வளையே.

Koviloor Digital Library

கூற்று : மேலது.

உரை : பெரிய கடற்கரையிலுள்ள சிறு வெண்காக்கை கரிய கழியின் நீர் துவலையாகத் தெறிப்பதனால் உண்டான ஒலியைக் கேட்டுக் கண்ணுறங்கும் துறைக்குத் தலைவன் என்னை நீத்துச் சென்றமையால் அப்பொழுதே என் இறைபொருந்திய அழகிய முன் கையில் அணிந்த வளைகள் கழன்றோடின.

உரை விளக்கம் : தலைவன் துறந்ததும் வளை நீங்கியதும் ஒரே நேரத்தில் நடந்தன என்பாள் 'துறந்தெனத் துறந்து' என்றாள். தலைவி சிறிதும் தலைவன் பிரிவைத் தாங்காள் என்பது. 'துஞ்சும்' என்பதற்குத் தங்கும் என்று பொருள் கொள்வாரும் உளர். நீர்த்துவலையின் ஒலி அதற்குத் தாலாட்டுப்போல் இனிமை செய்தலின் அது உறங்குதற்கு ஏதுவாயிற்று. இராப்பொழுதில் துஞ்சுவதாகக் கொள்க. துவலை ஒலியிற்றுஞ்சும் என்பதற்கு, 'நீர்த்துவலையோடு கூடிய பேரொலியைப் பொருளாக மதியாது இனிதே உறங்குதற்கு இடனான' என்று பெருமழைப்புலவர் விளக்கம் தருவார். 'இருங்கழித் துவலை யொலி' என்பதனை, 'துவலையை உடைய பெரிய கழியின் அலையொலியில் துஞ்சும் என்று பொருள் கொள்வதும் சிறப்பு.

அருஞ்சொற்பொருள் : துவலை – நீர்த்திவலை; துஞ்சும் – உறங்குகிற; துறந்தென – நீங்கியவுடனே.

மேற்கோள் : யாமத்து உடைதிரையொலியில் துஞ்சும்
மலிகடல்
சிறுகுடிப் பாக்கம்
– நற். 159.

குறிப்புப் பொருள் : காக்கை இருங்கழித்துவலை ஒலியிற்றுஞ்சும் என்றது, காக்கை தன்மீது துவலை வீசி ஒவென இரையும் பேரொலியையும் பொருளாக மதியாமல் இனிதே உறங்குமாறு போலத் தலைவனும் ஊரவர் கூறும் அம்பலும்

Koviloor Digital Library

அலரும் பொருளென மதியாமல் தன் மனையில் கவலையின்றி உறைகின்றான் என்னும் உள்ளுறைப்பொருள் காண்பார் பெருமழைப்புலவர்.

தன்னூரில் இனியனவாகக் கூறுவாரின் சொற்களைக் கேட்டு முயற்சியில்லாமல் தங்குவான் தலைவன் எனக் குறிப்புப் பொருள் காண்கிறார் பழைய உரையாசிரியர்.

164

பெருங் கடற்கரையது சிறுவெண்காக்கை
இருங் கழி மருங்கின் அயிரை ஆரும்
தண்ணந் துறைவன் தகுதி
நம்மோடு அமையாது, அலர் பயந்தன்றே!

கூற்று : தலைமகனுக்குப் புறத்தொழுக்கம் உளதாகிய வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் முன்னர்ச்சொன்ன சூளுரைக்கு மாறாகத் தலைவியைப் பிரிந்து பரத்தையர் தொடர்பு கொண்டபோது அதுபற்றி வருந்திய தலைமகள் தன் தோழிக்குச் சொல்லியது.

உரை : பெருங்கடற்கரையின்கண் வாழும் சிறிதே வெண்ணிறத்தைத் தன்னுடம்பிலே கொண்ட கடற்காக்கை, கரிய கழியிடத்தேயுள்ள சிறிய அயிரை மீனை விரும்பியுண்ணும் குளிர்ந்த துறையை உடைய துறைவனது புல்லிய ஒழுக்கம், நமக்குத் தீங்கு செய்ததோடு அமையாது அவனுக்கும் அலரைத் தந்தது.

உரை விளக்கம் : சிறிது வெண்ணிறம் கரிய கடற்காக்கையின் கழுத்துப்பகுதியில் அமைந்தது என்க. இருங்கழி கரிய கழியென்றதோடு பெரிய கழியுமாம். பெரிய கழியிடத்துச் சிறிய

Koviloor Digital Library

அயிரையை அது உண்டதாம். தலைவன் தகுதியென்றது, தகாத ஒழுக்கம் என்ற குறிப்புப் பொருள் தந்தமை நோக்குக. அவன் தன் தகுதிக்கொப்ப வாழவில்லை என்பது. நம்மோடமையாது என்பதற்கு நமக்கு மெலிவைத் தந்ததோடமையாது என்று பொருள் கொள்க.

அருஞ்சொற்பொருள் : இருங்கழி – கரிய கழி, பெரிய கழி; ஆரும் – மேயும், உண்ணும்; அலர் – பழிமொழி; பயந்தது – கொடுத்தது, தோற்றியது; அயிரை – ஒரு மீன் வகை; தகுதி – தீயொழுக்கம்.

உள்ளுறை : சிறுவெண்காக்கை அயிரையைத் தேர்ந்து உண்ணும் என்றது தலைவன் பரத்தையருள்ளும் இழிந்தாரை நுகர்வான் என்ற குறிப்புப்பொருள் தந்தது.

165

பெருங் கடற்கரையது சிறு வெண் காக்கை
அறு கழிச் சிறுமீன் ஆர மாந்தும்
துறைவன் சொல்லிய சொல் என்
இறை ஏர் எல் வளை கொண்டு நின்றதுவே.

கூற்று : மேலது.

உரை : பெரிய கடற்றுறையின்கண் வாழும் தன் உடலில் சிறிதே வெண்ணிறம் பொருந்திய காக்கை நீர் வற்றிய கழியின்கண் உள்ள சிறுமீன்களை வயிறு நிறைய உண்டற்கு இடனான துறையைத் தனக்குரியதாகக் கொண்ட நெய்தல் நிலத்தலைவன் சொல்லிய சூளுரை என் முன் கையிற் கிடந்த அழகிய ஒளிமிக்க வளையல்களைக் கொண்டு சென்றது.

Koviloor Digital Library

உரை விளக்கம் : சிறுவெண் காக்கை என்பதற்கு 161 ஆம் பாட்டின் உரையில் கூறிய விளக்கம் கொள்க.

சிறுமீன் என்றது சிறிய அளவில் அமைந்த மீன். அயிரைமீன் போன்றவை என்க. அறு கழியாவது நீர்அற்ற கழியாகும். ஆர என்பதனை வயிறார என்று கொள்க. ஆர – நிரம்ப. துறைவன் சொல்லிய சொல் என்பது, அவன் களவுக்காலத்தே நேர் இறை முன்கையைப் பற்றித் தெய்வத்தின் முன்னர்ச் சொல்லிய சூளுரை. அது 'நின்னிற் பிரியேன், பிரியின் உயிர் தரியேன்' என்பனவாம். 'அச்சொல்லை யான் உண்மையென நம்பியதன் பலனே இன்று அதே முன்கையில் அணிந்த ஒளிமிக்க வளையல்கள் கழன்றோடக் காரணமாயின' என்பாள், 'சொல்லிய சொல் .... வளை கொண்டு நின்றது' என்றாள். தலைவன் பரத்தைமை காரணமாக உடல் மெலிந்ததாகச் சொல்லாது சூளுரையினால் என்றது, அச்சொல் பொய்த்தமையால் என்க. 'என் உடல்மெலிவுக்கு அவன் சொல்லை நம்பிய என்பிழையே காரணம், அவன் செயலன்று' என்ற நயம் காண்க.

இனி, உடல்மெலிவுக்குத் தான் சொன்ன சூளுரையைத் தப்பியதனால், தலைவனைத் தெய்வம் ஒறுக்குமே என்னும் அச்சமே காரணம் என்பாரும் உளர்.

அருஞ்சொற்பொருள் : சிறுவெண் காக்கை – கடற்காக்கை; கழுத்தின் கீழ்ச் சிறு வெண்ணிறப்பகுதியுடையது; அறுகழி – நீர் வற்றிய கழி; சிறுமீன் – அயிரை; ஆர – நிரம்ப; சொல் – சூள்; இறை – முன்கை; ஏர் – அழகிய; எல் – விளக்கம்.

மேற்கோள் : தலைவன் சூள் செய்தல் :

நிற்றுறந்து அமைகுவனாயின் எற்றுறந்து
இரவலர் வாரா வைகல் பலவாகுக

– குறுந். 137.

Koviloor Digital Library

உள்ளுறை : சிறுவெண் காக்கை, பெரிய மீனைத் தேர்ந்துண்ணாது சிறுமீனை உண்ணுவது போலத் தலைவனும் பரத்தையருள்ளும் இழிந்தோரைத் தேர்ந்து நுகர்வான் என்பது.

இனி, பெரிய துறைக் கண் சிறிய மீனையே காக்கை பெற்றதுபோலப் பெரிய மதிக்கற்பாடு மிக்க தலைவன் பால் சிறுமையொழுக்கமே தங்கிற்று என்ற பொருளும் கொள்ளலாம்.

166

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
வரி வெண் தாலி வலை செத்து வெரூஉம்
மெல்லம் புலம்பன் தேறி,
நல்ல ஆயின, நல்லோள் கண்ணே.

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் பசப்பிற்கு வருந்திய தோழி அவனை இயற்பழித்துக் கூறியது.

கூற்று விளக்கம் : களவு நீட்டித்து, வரைந்து கொள்ள நினையாது ஒழுகிய தலைவன் ஒருநாள் தலைவியின் வீட்டருகே காத்து நிற்ப, தலைவியின் மேனி பசலையுற்றதற்கு வருந்திய தோழி, தலைவனைப் பழித்துரைத்தது.

உரை : பெரிய கடற்கரையில் வாழும் சிறு வெண்காக்கை வரி பொருந்திய வெண்ணிறச் சோழிகளை வலையெனப் பிறழவுணர்ந்து அஞ்சுவதற்கு இடனான மென்னிலமான நெய்தல் நிலத்தலைவன் சொற்களை உண்மையென நம்பி, நல்லியல்பு மிக்க என் தோழியின் கண்கள் தம் நலமிழந்தன.

உரை விளக்கம் : சோழியாவது பலகறை. பலகறையை அலைகள் கடற்கரையில் கொண்டுவந்து எறிந்தன. அவை நெருங்கி நிரல்படக் கிடந்தன. அவற்றைக் காண்கையில் பரதவர்

Koviloor Digital Library

வீசும் வலைச் சுற்றிற்கோத்தனபோல் தோன்றுதலின், ஆங்கு வலை கிடப்பதாக எண்ணிச் சிறுவெண் காக்கை அஞ்சிற்று. 'தேறி' என்றாள் தேறியதன் காரணமாக என்ற பொருளில். அங்ஙனம் தேறியதே தலைவியின் கண்கள் பசக்கக் காரணம் என்பாள், 'தேறி நல்லவாயின' என்றாள். நல்ல வாயின என்றது குறிப்புமொழி. நலம் இழந்தன என்றபடியாம். தலைமகன் சிறைப்புறத்தில் இருந்தமையின் அதுகேட்டு வரைவிற்கு முயல்வான் என்பது அவள் உட்கிடை. தலைவன் இயல்பைப் பழித்தல் போல் பேசுவது அவனுக்குக் கடமையை நினைவூட்டலை நோக்கமாகக் கொண்டதாகும்.

அருஞ்சொற்பொருள் : வரி – கோடுகள்; தாலி – பலகறை; சோழி; மனவு என்றும் சொல்ப; செத்து – கருதி; வெரூஉம் – அஞ்சும்; தேறி – தெளிந்து.

இலக்கணக்குறிப்பு : நல்லவாயின – குறிப்புமொழி.

உள்ளுறை : சிறுவெண்காக்கை திரையால் கரையில் எறியப்பட்ட பலகறைகளை வலையிற் சுற்றிக் கோத்த பலகறையாகக் கருதி அஞ்சும் என்றது, நாம் வரைதல் வேண்டிக் கூறிய சொற்களைத் தனக்கு வருத்தஞ் செய்வனவெனக் கருதித் தலைவன் அஞ்சுகின்றான் என்ற பொருள் பொதிந்தது.

167

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
இருங் கழி இனக் கெடிறு ஆரும் துறைவன்
நல்குவன் போலக் கூறி,
நல்கான் ஆயினும், தொல் கேளன்னே.

கூற்று : பரத்தையிற் பிரிந்த தலைமகன் விட, வாயிலாய் வந்தார்க்கு அவன் கொடுமை கூறித் தோழி இயற்பழித்த வழித் தலைமகள் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தை வீட்டிலிருந்து மீண்டு தன் மனைக்குவர விழைந்து சிலரைத் தூதுவராக அனுப்பினான். அவர்களிடம் தோழி, தலைவன் செய்த கொடுமைகளைக் கூறி அவன் இயல்பினைப் பழித்தாள். அது கேட்ட தலைவி அவளை மறுத்துத் தலைவன் பிழைசெய்தாலும் தன் கேளே என்று கூறினாள்.

உரை : பெருங்கடற்கரையின்கண் வாழும் சிறுவெண் காக்கை, கரிய கழியிடத்தே வாழும் கெடிற்றினத்தன் வயிரார உண்ணுதற்கு இடனான துறைவன், தான் அருளுடையவன் போல முன்பு பேசிப் பின் அதற்கு மாறாகத் துயர் செய்தனன் ஆயினும் அவன் நமக்குப் பல பிறவிகளிலும் உறவாகிய கிழமை உடையவனே யாவான்.

உரை விளக்கம் : இனக்கெடிறாவது கெடிற்றுமீனின் தொகுதியாகும்.

'நல்குவன் போலக் கூறி நல்கான்' என்றது தோழி இயற்பழித்துக் கூறியது. அதனைத் தலைவி கொண்டெடுத்துக் கூறினாள் என்க. களவுக் காலத்தே தன்னிடம் பேரருள் கொண்டவன் போல நடந்து கொண்டான். ஆனால் இப்பொழுது அது பொய்யென்று தெரிந்தமையால் 'நல்குவன் போலக் கூறி' என்றாள். அங்ஙனம் அவன் பொய்யனாக நடந்து கொண்டானேயாயினும் அவனைப் பிழை பொறுத்து ஏற்றுக்கோடல் தமக்கு அழகு என்பாள் 'நல்கான் ஆயினும் தொல்கேளன்னே' என்றாள். அங்ஙனம் ஏற்றுக் கொள்ளக் காரணம் என்னவெனில், அவன் பண்டு, பல பிறவிகளினும் தமக்குக் கேளாக இருந்தவன் என்பதாகும். அஃதாவது பயிலியது கெழீஇய நட்பு என்றாள் என்க. அவன் சிறுமை செய்து ஒழுகினாலும் நாம் பெருந்தன்மையோடு அவனை ஏற்றுக் கொள்வோம் எனப் பெருந்தகைப் பெண்டின் பெரும் பண்பை எடுத்துக் கூறினாளாம். கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகளாதலின் அங்ஙனம் சொன்னாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கெடிறு – ஒருவகை மீன்; நல்குதல் – அருளுதல்; தொல்கேள் – பழைய உறவினன்.

இலக்கணக்குறிப்பு : தொல் கேளன்னே – கேளனே என்பது விகாரப்பட்டுக் கேளன்னே என்று ஆயிற்று.

மேற்கோள் : காதலரிடையேயுள்ள உறவு பிறவித் தொடர்பு :

இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே
– குறுந். 49.

கணவன் பிழை பொறுத்தல் :

சேக்கை இனியார் பால் செல்வான்
மனையாளால்
காக்கை கடிந்தொழுகல் கூடுமோ கூடா
தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினும் கேள்வரை யேத்தி இறைஞ்சுவர்
– பரி. 20.

168

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
துறைபடி அம்பி அகமணை ஈனும்
தண்ணம் துறைவன் நல்கின்,
ஒண் நுதல் அரிவை பால் ஆரும்மே.

கூற்று : நொதுமலர் வரைவு வேண்டி விடுத்தமை அறிந்த தலைமகள் ஆற்றாளாய்ப் பசி அட நிற்புழி, 'இதற்குக் காரணம் என்?' என்று செவிலி வினவ, தோழி அறத்தொடு நின்றது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவி காளையொருவனொடு களவொழுக்கத்தில் நின்றபொழுது அயலோர் அவள் தமர்பால் பெண்கேட்டு வந்தனர். அப்பொழுது அதனைப் பொறாது உணவும் உறக்கமும் இன்றி மெலிந்தாள். அதுபற்றிச் செவிலி தோழியை வினவ, அவட்குத் தோழி அக்களவினை வெளிப்படுத்தியது.

உரை : பெரிய கடலின் கரையில் வாழும் சிறுவெண் காக்கை துறையில் இயங்காது வாளா கிடக்கும் (பழுதாகிப் போன) ஓடத்தின் உள்ளிடத்தில் முட்டையீனுதற்கிடமான குளிர்ந்த கடற்றுறைவன் அருள் செய்தால், ஒளியுடைய நெற்றியைக் கொண்ட இவள் பால் அருந்துவாள். இல்லையேல் இறந்துபடுவாள்.

உரை விளக்கம் : தலைவி கடற்கரைத்தலைவனொருவன் மேல் காதல் கொண்டனள் என்றும், அவன் அருள் செய்து இவளை மணந்துகொண்டாலன்றித் தலைவிக்கு வாழ்வில்லையென்றும் செவிலி அறியுமாறு சொல்லித் தன் தோழியின் காதல் இனிது நிறைவேற உதவினாள் தோழி என்க. துறையில் செயலின்றிக் கிடக்கும் ஓடம் என்பது விளங்கத் 'துறைபடி' என்று அடை கொடுத்தாள். அக மணையாவது, தோணியின் உள்ளிடத்திலே அமையப்பெற்ற கட்டை. அரிவாள் மணை என்ற வழக்கு இன்றும் உண்டு.

இனி, அகமனை என்று பாடம் கொண்டு, பரதவர் தம் பயன்பாட்டிற்கு அமைத்துக் கொண்ட குடில்போன்ற அமைப்பு எனினும் அமையும். அகமனை என்றதை மனையகம் என மாறுக. கூடு என்றலும் ஆம்.

'நல்கின் பாலாரும்மே' என்றாள், நல்காவிடின் எதனையும் உணவாகக் கொள்ளாது இறந்துபோவாள் என்னும் குறிப்பில். நோயிற் படுத்தோர் பிறவுணவு அருந்தாது பால்மட்டும் உண்டு உயிர்வாழ்வர் ஆதலின் உணவுண்ணும் என்னாது பாலாரும் என்றாள். அஃதாவது பாலையாவது உண்பாள் என்பது.

Koviloor Digital Library

'பாலும் உண்ணாள்' என்றும் 'பாலும் பலவென் உண்ணாள்' என்றும் சான்றோர் கூறக் காண்க.

அருஞ்சொற்பொருள் : அம்பி – ஓடம்; மணை – கட்டை; ஈனும் – முட்டையிடும்; நல்கின் – அருளினால்; அரிவை – பெண் என்னும் பொதுப் பொருளிற் கொள்க.

இலக்கணக்குறிப்பு : ஆரும்மே – உம்மை விகாரம்.

மேற்கோள் : காதல் வயப்பட்டோர் பாலும் உண்ணாமை :

அன்னாய் வாழி வேண்டு அன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனி பசந்தனள் என வினவுதி

– அகம். 48.

பழைய வண்டி முதலியவற்றில் பறவையினம் முட்டையிடல் :

கணங்கொள் உமணர் உயங்கு வயின் ஒழித்த
பண்ணழி பழம்பார் வெண்குருகு ஈனும்

– நற். 138.

உள்ளுறை : துறைபடி .... ஈனும் என்றது, யாவர்க்கும் எவ்விடத்தும் தீங்கு வாராத துறைவன் எனத் தலைவன் சிறப்பை உட்கொண்டது என்பது பழையவுரையாசிரியர் கருத்து.

169

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
ஒள் இணர் ஞாழல் முனையின், பொதி அவிழ்
புன்னை அம் பூஞ் சினைச் சேக்கும் துறைவன்
நெஞ்சத்து உண்மை அறிந்தும்,
என் செயப் பசக்கும் – தோழி – என் கண்ணே?

Koviloor Digital Library

கூற்று : காதற் பரத்தையை விட்டு மற்றொரு பரத்தையுடன் ஒழுகா நின்ற தலைமகன் வாயில் வேண்டி விடுத்துழி, வாயில் நேர்தல் வேண்டி, 'நின் கண் பசந்தது காண்' என்று முகம்புகு தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தைமை யொழுக்கம் காரணமாகப் புலந்திருந்த தலைவியிடம், தலைவன் மீண்டும் மனைக்கு வரத் தலைவியிடம் உடம்பாடு பெற முயன்ற தோழி, 'உன் கண்கள் பசந்தன' எனப் பேச்செடுத்தபொழுது தலைவி கூறியது இது.

உரை : தோழியே! பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண் காக்கை ஒள்ளிய பூங்கொத்துக்களைக் கொண்ட ஞாழல் மரத்தில் தங்குவதனை வெறுத்தால் அயலே உள்ள, அப்பொழுது மொட்டுக்கள் மலருவதும், மலர்கள் நிரம்பியதுமான கிளையில் தங்குதற்கு இடனான கடற்கரைத் தலைவன் நெஞ்சத்தின் மெய்யான இயல்பை நன்கு அறிந்திருந்தும் என் கண்கள் என்ன செய்யக் கருதிப் பசப்புறுகின்றன? (யானறியேன். நீயறிந்தாற் சொல்லுக.)

உரை விளக்கம் : ஒளியுடைய பூங்கொத்துக்களை உடைமையின் 'ஒள்ளிணர் ஞாழல்' என்றாள். 'பொன்னிணர்' என்றும் பாடம். இதன்பொருள் வெளிப்படை. இது கொண்டே ஞாழல் மலர் மகளிர் சுணங்கிற்கு உவமையாகக் கூறப்பட்டது. பொதியவிழ்தலாவது, மொட்டுக்கள் தம் இதழை அப்பொழுதுதான் விரிக்கின்ற நிலையாம். புதியனவாக மலர்ந்த பூக்களையுடைய என்பதனைப் 'பொதியவிழ்பூ' என்றது விளக்கிற்று. தலைவன் ஒருத்தியை விடுத்து மற்றொருத்தியை நாடிச் செல்பவன் என்று ஊடியவள் ஆதலின், அவன் அத்தகு தடுமாறும் நெஞ்சத்தவன் என்பதனை நன்கு அறிந்திருந்தும் எதனைச் சாதிக்க என் கண்கள் பசந்தன? என்று வினவினாள். அஃதாவது, பசந்து என்ன பயன் என்றும், அது பசந்தது கண்டு யார் இரங்கி எனக்கு அருள் செய்ய உள்ளார் என்றும் தலைவன் மீது உள்ள வெறுப்பினை வெளியிட்டாள் என்க.

Koviloor Digital Library

இனி, தலைவன் நெஞ்சில்தான் எப்பொழுதும் இருத்தலையறிந்தும் இக்கண்கள் அறிவின்றிப் பசந்தன என்று கூறியதாகக் கோடலும் பொருந்துவதே. அஃதாவது, தலைவன் எத்துணைப் பரத்தையரோடு உறவாடினாலும் அவன் நெஞ்சில் நிலையாக இருப்பவள் யானேயாதலின், அவனுடைய ஒழுக்கம் கண்டு பசப்பது இக்கண்களின் அறியாமையே என்று கூறியதாகக் கொள்க. துறைவன் என் நெஞ்சத்தில் உளன் என்பதனை இக்கண்கள் அறிந்தும் யாது செய்தற்காகப் பசந்தன என விளக்குவாரும் உண்டு. இங்ஙனம் கூறுவதால், அவள் வாயில் நேர உடம்பட்டாள் என்பது விளங்கும்.

அருஞ்சொற்பொருள் : ஞாழல் – புலிநகக் கொன்றை மரம்; ஒள்இணர் – ஒளிபொருந்திய பூங்கொத்து; முனைவு – வெறுப்பு; சேக்கும் – தங்குகிற; பொதி – அரும்பு; அவிழ் – மலர்கின்ற.

மேற்கோள் : ஞாழல் பொன்போல் ஒளிரும் என்பது :

பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறை

– அகம். 70.

உள்ளுறை : காக்கை ஞாழலை வெறுப்பின் புன்னையில் தங்கும் துறைவன் என்றது தலைவன் பரத்தையருள் ஒருத்தியொடு உறைதலை வெறுப்பின் இன்னொருத்தி மனைக்குச் செல்வான் என்பதை உள்ளுறுத்தது. இனி, "ஒருவன் தனக்கே உரிமை பூண்ட காமக் கிழத்தியும் ஒரோவழித் தன்னை ஒப்பவளாகலின் அவளைப் பொன்னிணர் ஞாழலோடு உவமித்தான். புதிதாகப் பேதைப் பருவம் கடந்து பெதும்பைப் பருவம் எய்தும் பரத்தையர் மகளிர் இருக்குமிடமெல்லாம் தேடிச் செல்வான் என்பாள் 'பொதியவிழ் புன்னையம் பூஞ்சினை' என்றாள்" என்று நுட்பமாக விளக்குவார் பெருமழைப் புலவர்.

Koviloor Digital Library

170

பெருங் கடற்கரையது சிறுவெண் காக்கை
இருங் கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
'நல்லன்' என்றி ஆயின்;
பல் இதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ?

கூற்று : தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதாகியவழி வேறுபட்ட தலைமகள், 'அவற்கு அவ்வாறு நிகழ்ச்சி இல்லை; நம்மேல் அன்புடையன்' என்று தெளிக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தமையால் தலைவி மனம் வருந்தி மெலிவுற்றாள். அஃதறிந்த தோழி தலைவன் அத்தகு தீயொழுக்கம் இல்லாதவன் என்றும் அன்புடையவன் என்றும் கூறினாள். அவட்குத் தலைவி இங்ஙனம் கூறினாள்.

உரை : பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண் காக்கை பெரிய கழிகளில் மலரும் நெய்தற் பூக்களை மிதித்துச் சிதைப்பதற்கு இடனான நம் காதலன் நீ சொல்வது போல் நல்லவன் என்றால், பல இதழ்களைக் கொண்ட, மையுண்ட என் கண்கள் பசத்தல் எக்காரணத்தாலோ?

உரை விளக்கம் : 'நல்லன்' என்றது தோழி சொன்னதைத் தலைவி கொண்டெடுத்துக் கூறியது. அவன் நல்லவன் என்றால் என் கண் பசக்குமோ? என்றாள் என்க. தன் கண்கள் காரணமின்றிப் பசத்தல் இல என்றாளாம். அக்காரணம் தலைவனுடைய பரத்தைமைப் பண்பாகும்.

மலரின் சிறப்பறியாத காக்கையாதலின் அதன்கண் தேனை உண்ணாது காலால் மிதித்தது என்ற கருத்தில், 'காக்கை .... நெய்தல் சிதைக்கும்' என்றாள். தன்னுடைய சிறப்புணராது தனக்குக் கேடு செய்யும் தலைவனைக் காக்கை என்று பழித்தாள் என்க. நெய்தலைப் பரத்தையர்க்கு உவமையாகக் கொள்ளலும் ஒன்று.

Koviloor Digital Library

சிறிதே வெண்மையுடைய கடற்காக்கை போலவே, தலைவனும் சிறிதே நற்பண்பு கொண்டு பெரிதும் கெட்டபண்புகளைக் கொண்டான் என்ற குறிப்பும் கொள்ளலாம். 'நல்லன் என்றியாயின்' என்றாள், அஃதுண்மையன்று என்பது பட. அஃதுண்மையெனில் தன் பல்லிதழ் உண்கண்கள் பசந்து பாழாகா என்பது அவள் தன் தோழிக்குணர்த்தியதாகும்.

அருஞ்சொற்பொருள் : என்றி – என்கின்றாய்; எவன் – என்ன காரணம் பற்றி.

இலக்கணக்குறிப்பு : மற்று – இடைச்சொல்.

மேற்கோள் : நெய்தலை நாரை மிதிப்பது :

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போல் நெய்தல்
– ஐங். 151.

உள்ளுறை : நெய்தலை நாரை மிதித்துச் சிதைக்கும் துறைவன் என்றது, பரத்தையர் பலரது நலன்களையும் நுகர்ந்து அவர்கள் நலனைச் சிதைப்பவன் என்னும் உள்ளுறை கொண்டது என்பர்.

சிறுவெண் காக்கைப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

18. தொண்டிப் பத்து

சேரரின் நகரமான தொண்டி இதன்கண் உள்ள பத்துப் பாடல்களிலும் இடம்பெறுவதனால் இது தொண்டிப் பத்தாயிற்று.

171

திரை இமிழ் இன் இசை அளைஇ, அயலது
முழவு இமிழ் இன் இசை மறுகு தொறு இசைக்கும்
தொண்டி அன்ன பணைத் தோள்,
ஒண் தொடி, அரிவை – என் நெஞ்சு
கொண்டோளே!

கூற்று : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் ஆயத்தோடு செல்லும் தலைமகளைக் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம் : பல்வகையானும் தம்முள் ஒத்த தலைவனையும் தலைவியையும் ஊழ் கூட்டுவித்ததாக இருவரும் ஓரிடத்தில் முதன்முதலிற் சந்தித்துக் கூடினர். கூட்டத்தின் இறுதியில் தலைவன் அவளைப் போகவிடுத்தலால் அவளும் தன் தோழியர் குழுவை அடைந்தாள். அப்போது தலைவன் தன் காதலியின் அருமையைத் தன்னுள்ளே வியந்து சொல்லியது.

உரை : என் நெஞ்சத்தை முழுமையாகக் கவர்ந்து கொண்ட இவள், கடலலையின் இனிய இசையோடு கூடி, அயலே உள்ள ஒவ்வொரு தெருக்கண்ணும் மத்தளத்தின் இனிய இசை முழங்குதற்கு இடமான தொண்டியென்ற பட்டினம் போன்ற பருத்த தோள்களையும் ஒளிமிக்க வளையல்களையும் உடையவளாவாள்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : அலைகள் இடையீடு சிறிதும் இன்றியும், ஒருவகை ஓசையொழுங்கோடும் முழங்குதலின் திரை இமிழ் இன்னிசை என்றான். 'அயலது ..... மறுகுதொறு(ம்)' என்றான் கடற்கரைக்கு மிக நெருக்கமாக அமைந்த பட்டினம் என்பது குறிக்க. தெருத்தோறும் முழவொலிக்கும் என்றான், அந்நகரம் விழாக்கள் அறாதது என்பதனால். இதனால் ஆடலும் பாடலும் நிறைந்த மகிழ்ச்சியான வாழ்வுடைமை சிறப்பிக்கப்பட்டது என்க. முழவின் முழக்கமும் கடல் முழக்கமும் ஒன்றற்கொன்று உவமிக்கப்படுவன என்பது பண்டைச் செய்யுட்களிற் பரக்கக் காண்பது. தொண்டியன்னவள் அரிவையென்றும் அவள் ஒண்டொடியும் பணைத்தோளும் உடையள் என்றும் கொள்க. தொண்டி நகரம் தன் அமைப்பாலும், செழிப்பாலும் பிறவற்றாலும் சிறந்தமை போலத் தலைவியும் பலர் புகழ் பண்புகட்கு இருப்பிடமானவள் என்க. கடல் முழக்கும் மத்தள ஒலியும் முறையே இயற்கையழகையும் செயற்கையழகையும் குறிக்கும் என்பாரும் உளர். 'தொண்டி மாந்தர் ஐம்புல இன்பங்களையும் நுகர்வதுபோல், யானும் இவள்பால் கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களையும் துய்த்தேன்' என்று தலைவன் குறித்தான் என்றும் கூறுவார் பெருமழைப்புலவர்.

அழகிய ஊர், நகரம், மலை, ஆறு முதலானவற்றைத் தலைவிக்கு உவமை கூறும் மரபு சங்க இலக்கியத்தில் சிறப்பாகக் காணத்தக்கது. புலவர் தாம் மதித்துப் போற்றிய மன்னர்களையும் தலைவர்களையும் நினைவு கூர்தற் பொருட்டு இந்த உத்தியைக் கையாண்டனர். இப்போக்கினைப் பிற்காலக் கோவை இலக்கியங்களிலும் பரக்கக் காணலாம். இத்தகைய உவமைகள் பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றை விளக்குவனவாக அமைகின்றன.

தொண்டிநகரம் யவனர்கட்கு நன்கு அறிமுகமான வணிகப்பட்டினம். பிளைனி, தாலமி, பெரிப்புளூசின் ஆசிரியர் ஆகியோர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். குறிஞ்சி, மருதம், நெய்தல் வளங்கள் நிரம்பிய நகரமாதலின், இதன் மன்னனை

Koviloor Digital Library

நாடன் என்பதா, ஊரன் என்பதா சேர்ப்பன் என்பதா என்று புலவர் மயங்கினார் (புறம். 49) குறுங்கோழியூர் கிழார் என்னும் புலவர்

'குலை யிறைஞ்சிய கோட்டாழை
அகன் வயல் மலை வேலி
நிலவு மணல் வியன் கானல்
தெண்கழிமிசைச் சுடர்ப்பூவின்
தண் தொண்டி'

– புறம். 17.

எனப் புகழ்ந்துள்ளார்.

இக்காலத்தில் தொண்டி ஆலப்புழையென வழங்கும். உ.வே.சா. இதனை அகலப்புழை என்பார்.

"பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணம் கெழு பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி"

– அகம். 60

'திண்டேர்ப் பொறையன் தொண்டி'

– அகம். 60.

– குறுந். 128.

வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்
தண்டிரைப் பரப்பின் தொண்டி

– அகம். 290.

– தொண்டி

முழுதுடன் விளைந்த வெண்ணெல்

– குறுந். 210.

Koviloor Digital Library

ஒண்டொடி மகளிர் வண் டலயரும்
தொண்டி

– குறுந். 236.

முதலான குறிப்புக்களால் இதன் பல இயல்புகள் தெரியவரும். தொண்டி நகர் பற்றி மேலும் அறிய இப்பத்திற்கு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை வரைந்த முன்னுரையைப் பயில்க.

அருஞ்சொற்பொருள் : திரை – அலை; இமிழ் – முழங்கும்; அளைஇ – கலந்து; அயல் – பக்கம்; முழவு – மத்தளம்; மறுகு – தெரு; பணை – பருத்த, மூங்கிலுமாம்; அரிவை – பெண் என்னும் பொதுவான பொருள். கொண்டோள் – கவர்ந்தவள்.

இலக்கணக்குறிப்பு : இமிழ் இன்னிசை – ஈரிடத்தும் வினைத்தொகை; அளைஇ – வினையெச்சம்; அன்ன – உவம உருபு.

மேற்கோள் : மகளிர்க்கு நகரம் உவமையாதல் :

பல்வேல் மத்தி கழாஅர் அன்ன எம்
இளமை சென்று தவத் தொல்லஃதே

– அகம். 6.

பழையவுரை : திரையின் ஒலியொடு கலந்து முழவு ஒலிக்கும் என்றது உடன் செல்கின்ற ஆயத்தார் மகிழ்ச்சியரவமும், உழையராய் எதிர் வருகின்றார் மகிழ்ச்சியும் கூறியவாறு.

172

ஒண் தொடி அரிவை கொண்டனள், நெஞ்சே!
வண்டு இமிர் பனித் துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக் கடல் ஒலித் திரை போல,
இரவி னானும் துயில் அறியேனே!

Koviloor Digital Library

கூற்று : 'கண் துயில்கின்றிலை; இதற்குக் காரணம் என்?' என்று வினவிய பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம் : இயற்கைப் புணர்ச்சியின் பின்னர்த் தலைவன் தான் அரிதிலே பிரிந்த தலைவியின் நினைவாக உறக்கமின்றி வருந்தினது கண்டு அதற்குக் காரணம் வினவிய தோழனுக்குத் தலைவன் சொல்லியது.

உரை : ஒளிபொருந்திய வளையணிந்த நங்கை என் நெஞ்சைக் கவர்ந்து கொண்டனள். வண்டுகள் ஒலித்தற்கு இடமான குளிர்ந்த துறைகளை உடைய தொண்டியின்கண், (கரையை மோதும்) பரந்துபட்ட கடலின் ஒலிமிக்க திரைகள் போல, யான் இரவுப் பொழுதிலும் உறங்குதலை அறியேன்.

உரை விளக்கம் : தலைவன் 'அரிவை கொண்டனள் நெஞ்சு' என்றான் வலிமை பொருந்திய தன்னுடைய நெஞ்சையும் அவள் வென்று கொண்ட சதுரப்பாட்டினை எண்ணி. வேறு யாரிடமும் தோல்வியுறாத தன்னைத் தோற்குமாறு செய்தமையை இங்ஙனம் குறித்தான் என்க. நெய்தலும் ஆம்பலும் காவியும் போலும் மலர்கள் நிறைந்த குளிர்ந்த துறையென்பான் 'வண்டு இமிர் பனித்துறை' என்றான். கடலலை இடையறாது ஒலித்தலின் இரவில் மட்டுமன்றிப் பகலிலும் துயிலாத தனக்கு அதனை உவமை கூறினான். இரவினானும் என்பதிலுள்ள உம்மையால், பகலிலும் துயிலாமை பெறப்பட்டது. அஃதாவது எப்பொழுதும் உறங்க இயலவில்லை என்க.

'இரவினானும்' என்றான் மாந்தர் மட்டுமல்லாது அனைத்து உயிர்களும் இனிதே உறங்கும் இரவுப் பொழுதிலும் தான் உறங்க இயலாமையைக் குறிக்கும் வகையில். 'துயிலேன்' என்னாது 'துயில் அறியேன்' என்றான், உறக்கம் என்ற ஒன்று இருப்பதனைத் தான் ஏறத்தாழ மறந்து விட்டமை தோன்ற. 'இந்த அவலத்திலிருந்து என்னை மீட்பது என் நண்பனாகிய நின் கடமை' என்றது குறிப்பு.

Koviloor Digital Library

'கண் துஞ்சாமை கிடக்கத் தன் நெஞ்சம் அவளைப்பற்றி இடையறாது அலைபாய்கின்றது என்பான் ஒலித்திரையை உவமித்தான்' என்ற பெருமழைப்புலவர் விளக்கம் நயம் மிக்கது.

அருஞ்சொற்பொருள் : அரிவை - இளம்பெண் எனப் பொதுப்பட நின்றது; இமிர் - ஒலிக்கும்; பனி - குளிர்ச்சி; ஆங்கண் - அவ்விடத்து; உரவு - பெரிய, பரந்த, வலிய.

இலக்கணக்குறிப்பு : இரவினானும் - உம்மை இறந்தது தழுவியது. பகலிலும் உறங்காமையைத் தழுவிற்று. இனி, எல்லாரும் துயிலும் இரவிலும் எனப் பொருள் விரித்து, உயர்வு சிறப்பும்மை என்பாரும் உளர். இதன்கண் இரவினான் என்பதிலுள்ள ஆன் பரணியாற்கொண்டான் என்பதிற்போல இடப்பொருள் தந்தது.

மேற்கோள் : காதலர் பிரிவில் துயிலறியாமைக்குக் கடலலை உவமையாதல் :

யாரணங் குற்றனை கடலே பூழியர்
. . . .
நள்ளென் யாமத்தும் கேட்குநின் குரலே
- குறுந். 163.

பிரிந்தவர் துயிலாமை :

'நனந்தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே'
- குறுந்.

துயில் துறந்தனவால் தோழியெம் கண்ணே'
- குறுந். 301.

Koviloor Digital Library

173

இரவினானும் இன் துயில் அறியாது
அரவு உறு துயரம் எய்துப - தொண்டித்
தண் நறு நெய்தல் நாறும்
பின்இருங் கூந்தல் அணங்குற்றோரே.

கூற்று : தலைமகன் குறிவழிச் சென்று தலைமகளைக் கண்ட பாங்கன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : இயற்கைப் புணர்ச்சிக்குப்பின், தன் தோழன் உதவியுடன் தன் காதலியைக் கூட விரும்பிய தலைவன் அவனுக்குத் தலைவியைச் சந்திக்கும் இடத்தினைச் சுட்டினான். அச்சுட்டிய இடத்திலே தலைவியைக் கண்ட பாங்கன் இங்ஙனம் தனக்குள்ளே சொல்லி வியந்தான்.

உரை : தொண்டிப் பட்டினத்தின்கண் வளரும் குளிர்ச்சியும் நறுமையும் கொண்ட நெய்தல் மலர்களால் மணம் கமழ்கின்ற பின்னப்பட்ட கரிய கூந்தலை உடைய இந்நங்கையின் விழியால் தாக்குண்டோர் அனைத்துயிர்களும் இனிய துயில்கொள்ளும் இரவிலும் கண் துயிலாது, தன் மணியை இந்த நாகம் போலத் துயர் அடைவது உறுதியாம்.

உரை விளக்கம் : கவலையற்றவரல்லாது பிறர் துஞ்சுதல் கூடாமையின் 'இன்துயில்' என்றான். இனி, கனவற்ற உறக்கம் என்றும் கூறலாம். இப்பேரழகியைக் கண்டார் யாவுரேனும் தம் வயமிழப்பது உறுதியாதலின், அவர் துயிலறியாது அல்லலுறுவதும் உறுதியெனவுணர்ந்தானாதலின், தலைவன் துயிலிழந்தது வியப்பன்று என்றான். அனைத்துயிரும் உறங்கும் இரவிலும் இவள் அழகால் தாக்குண்டோர் உறங்கார் என்பது 'இரவினானும்' என்பதில் உள்ள உம்மையால் விளக்கப்பட்டது. 'இன்துயில்' என்றான் எல்லா உயிர்க்கும் இனிமையளிக்கும் இரவு, இவள் அழகு வயப்பட்டோர்க்குத் துன்பமளிக்கவல்லது என்ற பொருளில்.

Koviloor Digital Library

அரவு தன் மணியை இழந்து அல்லலுறுவது போல் என்ற உவமை, அவர் அடையும் துயர்மிகுதி குறித்தது. பாங்கன் முதற்கண் தலைவனை அவன் பெருமையும் உரனும் இழந்தமைக்காகக் கழறியவன் எனவே, இப்பொழுது அவள் அழகை நேரிற் கண்ட பின்னர்த் தன் நண்பன் இவள் பொருட்டுத் துயர் மிக்கது இயல்பே என உணர்ந்து இவ்வாறு பாராட்டினான் என்க.

அருஞ்சொற்பொருள் : அரவு - பாம்பு; உறுதுயரம் - மணியிழப்பினால் அடைந்த துயரம்; பின் - பின்னிய; இரும் - கரிய; அணங்கு - வருத்தம்.

இலக்கணக்குறிப்பு : இருங்கூந்தல் - அன்மொழித்தொகை.

மேற்கோள் : பாம்பு மணி உமிழ்ந்து துயர் உறல் :

உருமுச் சிவந்து எறிந்த உரன்அழி பாம்பின்
திருமணி விளக்கின் துஞ்சுவை
- அகம். 92.

இருந்திக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்
அருமணி இழந்த நாகம் போன்றதும்
- சிலப். 13 : 57 - 58.

நன்மணி இழந்த நாகம் போன்று அவள்
தன்மகள் வாராத் தனித்துயர்உழப்ப
- மணி. 7 : 731-32

174

அணங்குடைப் பனித் துறைத் தொண்டி அன்ன
மணம் கமழ் பொழில் குறி நல்கினள் - நுணங்குஇழை
பொங்கு அரி பரந்த உண்கண்,
அம் கலிழ் மேனி - அசைஇய எமக்கே.

Koviloor Digital Library

கூற்று : குறிவழிச் சென்று தலைமகளைக் கண்டு வந்த பாங்கன், 'அவள் நின்றுழி நின்றாள்' என்று கூறியவழி, ஆண்டுச் செல்லக் கருதிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகளைக் கண்டு வருமாறு தலைவன் குறியிடத்திற்குத் தன் பாங்கனை அனுப்பினான். அவனும் சென்று மீண்டு, அவள் முன்னர் நின்ற இடத்தில் நிற்பதைத் தலைவனுக்குச் சொன்னான். அங்குச் செல்ல நினைத்த தலைவன் தன்னுள்ளே சொல்லிக் கொண்டது இது.

உரை : அவள் காரணமாக வருத்தமுற்ற எமக்கு, நுண்ணிய தொழிற்றிறத்துடன் செய்த அணிகளையும், அழகிய செவ்வரி படர்ந்த மையுண்ட கண்களையும், அழகு ஒழுகும் மேனியையும் உடைய தலைவி, தெய்வங்கள் தங்கும் குளிர்ந்த துறைகளைக் கொண்ட தொண்டியைப் போன்ற மணம் கமழும் பொழிலில் குறியிடம் நல்கினாள். (இனிப்போய்க் காண்பேன்.)

உரை விளக்கம் : துறைமுக நகரமான தொண்டி உள்நாட்டுப் பொருள்களும் வெளிநாட்டுப் பொருள்களும் நிறைந்ததாதலின் பல்வேறு மணமும் பொருந்தியவூராயிருந்தது. இங்ஙனமே தலைவி குறிசெய்த பொழிலும் பல்வேறு வகையான மலர்மணம் கமழ்ந்தது. எனவே, 'தொண்டி அன்ன மணம் கமழ் பொழில்' என்றான். அவள் சொன்ன குறியிடம் போலவே அவளும் சிறந்தாள் என்பது பட அவள் அணிகள், உண்கண், மேனி ஆயவற்றைப் புகழ்ந்தான். தொண்டியில் உள்ள குளிர்ந்த துறைகள் தீண்டி வருத்தும் தெய்வங்கள் கொண்டது எனின் இப்பொழிலிடத்துக் காணப்பட்டவள் கண்ணாலேயே வருத்தும் அணங்கு என்று நினைத்தான். மணத்தால் மட்டுமன்றி, அணங்குடைமையாலும் தொண்டியும் அப்பொழிலும் ஒப்புடையன என்றான். அவளை அவ்விடத்தில் காண்பது அரிது ஆதலான் அரியவளாகிய அவள் தனக்குக் காணும்படிக் கிடைத்த வாய்ப்பை எண்ணி, 'நல்கினள்' என்றான். 'அசைஇய எமக்கு' என்றான், அவளை மீண்டும் கண்டால் அவ்வருத்தம் தீரும் என்ற குறிப்பில்.

Koviloor Digital Library

தொண்டியைப் பொழிலுக்கு உவமையாக்குதற்கு மாறாகப் பெருமழைப்புலவர் தலைவிக்கே உவமையாக்கிக் கூறுவார். இவர், 'அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன நுணங்கிழை ...... மணங்கமழ் பொழில் குறி நல்கினள்' என இயைப்பார். இனி, 'வருத்தும் தெய்வத்தையும் அவ்வருத்தம் தீர்க்கும் பனித்துறையையும் ஒருங்கே உடைய தொண்டி என உவமையைச் சிறப்பித்தமையால், நோய்நோக்கும் அது தீர்க்கும் அருள்நோக்கும் ஒருங்கே உடைய தலைவி என்க' என்னும் இவர் விளக்கமும் பாராட்டத்தக்கது.

'தொண்டியன்ன மேனி என இயையும்; பொழிற்கு ஏற்பின் பொருள் சிறவாமை அறிக' என்றார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. செய்யுளில் சொற்கள் கிடந்தவாறே பொருள் கொள்வதே இயற்கையானதாகவும் பொருத்தமாகவும் தோன்றுகிறது. பொழிலுக்குத் தொண்டி உவமையானதன் பொருத்தத்தை உரை விளக்கப் பகுதியில் காண்க.

மணமும் அழகும் கொண்ட நகரம் போன்ற பொழிலிடையே பேரழகு வாய்ந்த தலைவியைக் கண்டான் என இயைவது பொருத்தமேயாம். நகரத்தைச் சிறப்பிக்க ஆண்டுள்ள மணங்களைச் சுட்டுவது புலவர் மேற்கொண்ட மரபு என்பதனைச் சிலம்பிலும், (சிலப். 13 : 115 – 132) காணலாம். பல்வேறு பூக்களால் மணம் கமழும் பொழிலுக்கு நகரத்தை ஒப்பிடுதலில் உள்ள பொருத்தம் இதனால் உணரப்படும்.

அருஞ்சொற்பொருள் : அணங்கு – தீண்டி வருத்தும் தெய்வம்; பனி – குளிர்ச்சி; நல்கினள் – அருளினள்; பொங்கு அரி – மிகுதியான செவ்வரிகள்; நுணங்கு – நுண்ணிய வேலைப்பாடு மிக்க; கலிழ் – ஒழுகும்; அசைஇய – வருத்தமுற்ற.

இலக்கணக்குறிப்பு : கலிழ் – கலுழ் என்றதன் திரிபு; பொங்கு அரி – வினைத்தொகை; அம்கலிழ்மேனி – அன்மொழித்தொகை.

Koviloor Digital Library

மேற்கோள் : *நீர்த்துறையில் அணங்குகள் உறைதல் :*
உண்டுறை அணங்கு இவள் உறை நோய் ஆயின்
– ஐங். 28.

நிலைக் கோட்டு வெள்ளை நால்செவிக் கிடாஅய்
நிலைத் துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி
– அகம். 156.

அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி
யாயும் ஆயமோடு அயரும்
– அகம். 240.

நுணங்குஇழை, உண்கண் மேனி, எமக்கு,
தொண்டியன்ன பொழில் குறி நல்கினள்
என இயைக்க.

175

எமக்கு நயந்து அருளினை ஆயின், பணைத்தோள்
நல் நுதல் அரிவையொடு மென்மெல இயலி,
வந்திசின் வாழியோ, மடந்தை! –
தொண்டி அன்ன நின் பண்பு பல கொண்டே.

கூற்று : பாங்கற் கூட்டம் கூடி நீங்கும் தலைமகன், 'இனி வருமிடத்து நின் தோழியொடும் வரவேண்டும்' எனத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : ஊழ்கூட்ட ஒருவரையொருவர் கண்டு காதலால் கலந்தபின், தலைவன் தன் தோழன் துணையுடன் தலைவியை மீண்டும் கூடினான். கூடி நீங்கும்போது, 'இனி இங்கு வரும்போது, உன் தோழியையும் அழைத்துவா' என அவன் சொல்லியது.

Koviloor Digital Library

உரை : இப்பொழுது எமக்கு அருள் செய்தாய் எனின், மடப்பமுடையாளே, இனி, தொண்டிபோலும் சிறப்புடைய நின் பலவாகிய பண்புகளை உடன்கொண்டு, பணைபோலும் தோள்களையும், அழகிய நுதலையும் கொண்ட நின் தோழியுடன் மெதுவாக அசைந்து நடந்து வருக! வாழி நீ நீடு!

உரை விளக்கம் : பாங்கற் கூட்டத்தின் பின்னர் தலைவியை இனித்தோழியின் உதவியோடு கண்டு அளவளாவ வேண்டுதலின், அவள் நல்லெண்ணம் வேண்டி, அவளையும் அழைத்து வரச் சொன்னான். தன் காதலிக்குச் சிறந்தாள் தோழியாதலின் அவளைத் தனக்கும் சிறந்தாளாய் எண்ணி, அவள் தோளையும் நுதலையும் பாராட்டினான். 'இயலி வந்திசின்' என்றான் அவள் அசைந்து நடப்பது மயிலின் நடைபோல் தோன்றினமையின்.

தலைவியின் நிழல் போன்றவளான தோழியைப் பாராட்டுவது தலைவியைப் பாராட்டுவதோடு ஒத்தலின், தோழியின் தோளையும் நுதலையும் புகழ்ந்தான் தலைவன். களவுக் காலக் கூட்டத்திற்கும், களவு கற்பாக மாறுதற்கும் அவள் துணை இன்றியமையாதது ஆதலின் அவள் நட்பும் அவனுக்கு இன்றியமையாதது என்க.

தலைவி மயில் போல் அசைந்து நடப்பது தனக்கு இன்ப மூட்டுதலின் 'இயலி வந்திசின்' என்றான்.

'தொண்டியன்ன நின் பண்பு பல கொண்டு' என்றான், எல்லாராலும் விரும்பப்படல், பேரழகுடைமை, சேய்மையில் உள்ளாராலும் அறியப்பட்ட சிறப்புடைமை, இடையறா இன்பத்திற்கு இருப்பிடமாதல், முதலான பண்புகள் தொண்டிக்குள்ளவாறு தன் காதலிக்கும் உள்ளமை கருதி.

அருஞ்சொற்பொருள் : இயலி – மயில்போல் அசைந்து; வந்திசின் – வருவாய்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : வந்திசின் - இசின் முன்னிலை அசைச்சொல்; வாழியோ - வியங்கோள் வினைமுற்று; ஓகாரம் அசை.

அருளினை ஆயின், அரிவையொடு, இயலி, பண்பு பல கொண்டு வந்திசின் என இயைத்துக் காண்க.

176

பண்பும் பாயலும் கொண்டனள் - தொண்டித்
தண்கமழ் புது மலர் நாறும் ஒண் தொடி,
ஐது அமைந்து அகன்ற அல்குல்
கொய் தளிர் மேனி! - கூறுமதி தவறே.

கூற்று : தலைமகளும் தோழியும் ஒருங்கு நின்றுழிச் சென்ற தலைமகன், 'இவள் என்னை இவை கோடற்குக் காரணம் என்?' என்று தோழியை வினாவியது.

கூற்று விளக்கம் : தலைவியும் தோழியும் ஒருங்கு நின்றபொழுது அங்குச் சென்ற தலைவன் தோழியைப் பார்த்து, தலைவி தன் பண்பையும் உறக்கத்தையும் கவர்ந்து கொண்டது எக்காரணம் பற்றி என வினாவியது.

உரை : மெல்லிதாகவும் அகன்றும் அமைந்த அல்குலையும், அப்போது கொய்யப்பட்ட தளிர்போலும் மேனியையும் உடையவளே! தொண்டிக்கண் உள்ள தண்ணிய மணம் கமழும் புதிய மலர்போலும் நறு நாற்றம் வீசும் ஒள்ளிய தொடியாள் என் பண்புகளையும், உறக்கத்தையும் கவர்ந்து கொண்டனள். இதற்கு யான் செய்த தவறென்னை? கூறுவாயாக!

உரை விளக்கம் : "தொண்டித் தண்கமழ் புதுமலர் நாறும் ஒண்டொடி" என்பது தலைவியையும், 'ஐதமைந்து அகன்ற அல்குல்

Koviloor Digital Library

கொய்தளிர் மேனி' என்றது அவள் தோழியையும் குறிப்பதாகக் கொள்க. மேனி என்பதனை 'மேனியே! கூறுமதி தவறே' என இணைத்து முடிக்க. உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் 'கொய்தளிர் மேனி' என்பது தலைவியைக் குறிக்கும் என்றார். அவ்வாறெனின் முன்னர் உள்ள ஒண்டொடி, அகன்ற அல்குல் என்பன அன்மொழித்தொகைகளாய்த் தோழியைக் குறிக்கும் என்பது அவர் கருத்துப் போலும்.

ஈழத்து உரையாசிரியர், பெருமழைப்புலவர் ஆகிய இருவரும், ஒண்டொடி, அல்குல், தளிர்மேனி என்பன அன்மொழித் தொகைகளாய்த் தலைவியையே குறித்தனவாகக் கொண்டு விளக்கமளித்தனர். இதற்கு மாறாக, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, இவை அனைத்தும் விளிக்கப்படும் தோழியைக் குறிப்பன வென்று கொண்டார்.

தான் தன் காதலியைத் தலைப்படா முன் கொண்டிருந்த ஆண்மை முதலிய பண்புகளையும், கவலையற்ற உறக்கத்தையும் அவளைக்கண்டு காதலித்த பின் இழந்தமையை, அவள் தனக்கு அளித்த ஒரு தண்டனையாகக் கொண்டு 'இப்படிக் கடும் தண்டனை பெற யான் உரியேனோ? அப்படி பெரிய குற்றம் யாது செய்தேன்?' என்று தோழியிடம் வினவினான். நின் உயிர்த்தோழியின் செயல்கட்குரிய காரணத்தை நீயறியாதிருத்தல் இயலாதாகலின் உன்னை வினவினேன் என்றான் என்க. காதலுலகில் தம் தனித்தன்மைகளை இழத்தலும், உறக்கம் இழத்தலும், உணவு மறுத்தலும் பிறவும் இயல்பானவை என்பதனை அறிக.

அருஞ்சொற்பொருள் : பாயல் – உறக்கம்; ஐது – மென்மை.

இலக்கணக்குறிப்பு : ஒண்டொடி, அல்குல், கொய்தளிர் மேனி என்பன அன்மொழித்தொகைகள். கூறுமதி – மதி முன்னிசை அசை.

Koviloor Digital Library

மேற்கோள் : தலைவன் தன் பண்புகளை இழத்தல் :
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் உரனவித் தன்றே
– குறுந். 95.

'ஒண்ணுதற் கோஒ டைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு
– திருக். 1088.

காதலர் துயில் மறத்தல் :
நனந் தலை உலகமும் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சாதேனே
– குறுந். 6.

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல்லாவே
– குறுந். 5.

கைவள் ஓரிக் கானம் தீண்டி
எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்
மையீர் ஓதி மாஅயோள்
– குறுந். 199.

கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெரும் குன்றத்து அமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை
– அகம். 4.

Koviloor Digital Library

177

தவறு இலர் ஆயினும், பனிப்ப மன்ற –
இவறு திரை திளைக்கும் இடு மணல் நெடுங்
கோட்டு
முண்டக நறுமலர் கமழும்
தொண்டி அன்னோள் தோள் உற்றோரே.

கூற்று : தலைமகளும் தோழியும் மருங்கு நின்றுழி 'இவள் என்னை வருத்துதற்குச் செய்த' தவறு என்? என்று வினாய தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியும் தோழியும் ஒன்றாக இருந்தபொழுது அங்கு வந்த தலைவன், தலைவி தன்னை வருத்துவதற்கு யாது காரணம் எனத் தோழியை வினவியபோது, தோழி அவனை நகையாடிச் சொல்லியது.

உரை : உலாவுகின்ற அலைகள் சென்று தழுவும் உயர்ந்த முகடுகளை உடைய மணல் திட்டுக்கள் நிறைந்த கடற்கரையிடத்துக் கழிமுள்ளிச் செடிகளின் நறிய மலர்கள் கமழ்தற்கு இடனான தொண்டியைப் போன்ற இவள் தோள்களை எதிர்ப்பட்டோர் தாம் தவறு யாதும் செய்யாதவர் எனினும் நடுங்குவர், என்பது தெளிவே.

உரை விளக்கம் : இடுமணலாவது, திரைகள் வாரிக் கொணர்ந்து இட்ட மணல். இதனை எக்கர் என வழங்குவர். இம்மணல் மேடுகளைக் கடற்றிரைகள் இடைவிடாது மேலேறி வந்து தழுவுதல் பற்றித் 'திரை திளைக்கும் இடுமணல்' என்றார். திளைத்தலாவது தழுவுதல். எக்கர் உயர்ந்த முகடுகளைக் கொண்டமையின் நெடுங்கோடு என்றனள்.

தொண்டி நகர் பல்வேறு செல்வங்களால் நிறைந்து உலகெலாம் புகழ்மேவ விளங்குவது போல் தலைவியும் கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும் பிறவும் ஆன பண்புகள் நிறைந்து,

Koviloor Digital Library

நெடுந்தொலைவிலுள்ளாரும் போற்றும் சிறப்புடைமையின் 'தொண்டியன்ன இவள்' என்றனள். 'தோள் உற்றோர்' என்றதற்கு இவள்பால் காதல் கொண்டவர் நின்னையேயன்றி வேறு யாவர் எனினும் என்று பொருள் கொள்க.

காதலியின் தோள்களை ஒருமுறை தழுவியவன் மீண்டும் மீண்டும் தழுவ விழைதலும், தழுவும் வாய்ப்பு அரிதாகியவிடத்துக் காதல் நோயுற்றுக் கலங்குதலும் இயற்கை. அத்தகு சூழல்களில், 'ஏன் இவள் தோளைத் தழுவினோம்? பெரியதவறு செய்து விட்டோம்!' என்று கழிவிரக்கப்படுவான். 'பின்னால் கழிபெரும்துன்பம் தருமென்பது அறியாது தழுவிய தவறு இன்று என்னை வருத்துகிறது', என்று தோழிபால் தலைவன் சொன்னபோது, 'நீ அப்படி தழுவுதலால் தவறு செய்யாவிடினும், கண்ணால் பார்த்தாலே பனிக்கச் செய்வன இவள் தோள்கள்' என்றாள் என்க. காதலியின் இடையும், விழியும், முலைகளும் காதலனுக்கு இடர் செய்ததனைச் சிலப்பதிகாரத்துக் கானல் வரியில் கண்டு கொள்க. இதனால் தலைவியின் தோளின் சிறப்பு மிகுத்துக் கூறப்பட்டது.

இனி, இவறு திரை என்பதற்கு உலாவுகின்ற திரை என உரை வகுத்தாரும், உலோபத்தை உடைய கடலலைகள் தழுவுகின்ற என உரை வகுத்தாரும், ஒன்றனையொன்று மேற்பட்டெழும் அலை என்று விளக்கினாரும் எனப் பல திறப்படுவர் அறிஞர்.

'இவறுதல்' உலோபத்தன்மைக்குரிய தமிழ்ச் சொல்லாதலின், பெருமழைப்புலவர் 'தாம் கொணரும் பொருளை வழங்காமல் இவறி மீண்டும் கொடுபோம் (உலோபத்தையுடைய) கடலலைகள் தழுவுகின்ற எக்கரால் ஆய நெடிய கடற்கரையின் கண்' என உரை வகுத்து, அதற்கு ஏற்பக் குறிப்புப் பொருள் விளக்கம் தருகின்றார். தலைவியின் தமர் தலைவனுக்கு எளிதில் மகட் கொடை நேரார்; அவர் குடி உயர்ந்தது; அவளைக் களவிற்கூடுதற்கு இடையூறுகள் பலவுள்ளன; தலைவி தலைவனுக்காக நெகிழ்ந்த நெஞ்சம் உடையவளே என்ற கருத்துக்களை உள்ளடக்கியனவாக,

Koviloor Digital Library

இப்பாட்டில் காணும் தொடர்களையும் சொற்களையும் காட்டுவது அவர்தம் ஆழ்ந்த புலமைக்குச் சான்றாம். அவருரையினைக் கற்றுணர்க.

பழையவுரைகாரர் 'நீரறா நிலத்து முண்டக நறுமலர் கமழும் தொண்டி அன்னோள் என்றது இவள் நாம் அணுகி நுகர்தற்கு அரியள் என்றவாறு' என்ற அளவே கூறினார்.

ஈழத்து உரையாசிரியர் 'இவறு திரை திளைக்கும்' என்பதற்கு, 'உலவுகின்ற திரை பல்முறை நெருங்குகின்ற .... நீண்ட கரை' என்று உரை வகுத்து, 'ஒருவாற்றானும் குறைவின்றிப் பிறர் பொருள் கவராது குறையுடையார் சிலர் குறை செய்ய அதனைக் கொள்ளாது அவர்க்கு இன்பம் செய்யும் தொண்டி போல்வாள்' எனக் குறிப்புப் பொருள் செய்தார்.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை இவறுதல் என்பதற்கு ஒன்றினை ஒன்று மேற்பட்டு எழுதல் எனப் பொருள் கொண்டார். இவறுதிரை திளைக்கும் நெடுமணல் நெடுங்கோடு என்றதற்கு இவர், 'நீர் அறாமையால் அலைவந்து கலக்க அதனால் அலைப்பு உண்டு கரை கெடாதவாறு புதுமணல் இடப்பட்டு உயர்ந்த கரையினை உடைய துறை' என்றும் விளக்கம் தந்தார்.

'நீர் இடையறாது சூழ்ந்த மணற்கோட்டில் நிற்கும் முண்டகம் மலர்ந்து நறுமணம் கமழ்வதுபோல, அரிய காவல் அமைந்த கடிமனைக்கண் பெருநலம் திகழத் தலைமகள் விளக்கமுறுவதும், அந்நறுமணம் கண்டோர் உள்ளத்தைக் கவற்றினும் கொள்ளற்கு அரிதாயது போல, இவள் நலத்தால் நீ பனித்து வருந்தினும் கொள்ளற்கு அரியள் எனத் தோழி உள்ளுறையால் அருமை செய்து அயர்வித்தமை காண்க' என்று கூறும் இவர், 'நறுமணம் கமழும் நெடுங்கோட்டு முண்டகம் ஒருகால் நெருங்கினும் முள்ளுடைமையால் கொளற்கு அரிதாமாறுபோல உடனுறையினும் என்னால் இவளை உடன்படுவித்தல் இயலாது' எனத் தோழி கூறுவதாகவும் விளக்குவார்.

Koviloor Digital Library

இனி, இவறுதல் பெருவிருப்பம் கொள்ளுதலும் ஆதலின் 'இவறுதிரை திளைக்கும் .... தொண்டி' என்றதற்கு அலைகள் பேராசை கொண்டு மேலும் மேலும் வந்து தழுவி இன்புறத்தக்க மணல் மேடுகளைக் கொண்டது தொண்டி என்று பொருள் கொள்ள இடமுண்டு. இதற்கு அலைகள் மேலும் மேலும் எழுந்து வந்து மணல் முகட்டைத் தழுவுவதுபோல, தலைவனும் தன் காதலியின் குவிந்த மார்பகங்களையும் தோள்களையும் தழுவி இன்புறப் பேராவல் கொண்டான் என்ற உள்ளுறை கொள்ள இடமுண்டு. அங்ஙனம் அவன் விரும்பினாலும், அவ்விருப்பம் எளிதில் நிறைவேறாது என்பதனை முள்ளுடைய முண்டகம் பற்றிய குறிப்பு விளக்கி நிற்கிறது.

இனி, இச்செய்யுளின் இரண்டாம் அடியில் உள்ள 'இவறுதிரை' என்பது 'இவருதிரை' என்பதன் திரிந்த வடிவம் எனக் கொள்ளவும் இடமுண்டு. 'தவறு' என்ற முதலடியின் முதற்சொல்லோடு எதுகை அமையும் பொருட்டு அம்மூவனார் இங்ஙனம் திரித்தாரோ என ஐயம் நிகழ்கின்றது. திரைகள் மேலேறுதலை 'மலிதிரை ஊர்ந்து தன் மண் கடல் வெளவலின்' (கலி. 104) என்பதால் அறியலாம்.

அருஞ்சொற்பொருள் : பனித்தல் – நடுங்கல்; மன்ற – தெளிவாக; இவறுதிரை – உலாவும் அலை; ஒன்றன்மேல் ஒன்றாக எழும் அலை; கோடு – முகடு; முண்டகம் – கழிமுள்ளி; தோள் – முலைகள், (இடக்கரடக்கல்)

இலக்கணக்குறிப்பு : மன்ற – தெளிவு குறித்த இடைச்சொல்.

Koviloor Digital Library

178

தோளும் கூந்தலும் பல பாராட்டி,
வாழ்தல் ஒல்லுமோ மற்றே – செங்கோற்
குட்டுவன் தொண்டி அன்ன
எற்கண்டு நயந்து, நீ நல்காக் காலே?

கூற்று : தலைமகன் தோழியை இரந்து குறையுறுவான் சொல்லியது.

கூற்று விளக்கம் : 'தலைமகன் தோழியிடம் தலைமகளைக் கண்டு அளவளாவும் தன் விருப்பத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டிக்கொண்டது.

உரை : தோழியே! செங்கோல் வேந்தன் குட்டுவன் என்பான் துறைமுகமான தொண்டி போன்ற என் இன்றைய நிலையைக் கண்டபின்னும் என்னை விரும்பி எனக்கு அருள் செய்யவில்லையென்றால், என் காதலியின் தோள்களையும், கூந்தலையும் அவள் இல்லாதபொழுது எனக்குள்ளேயே பலவாறு பாராட்டிக் கொண்டு, அதிலேயே நிறைவுபெற்று உயிர்வாழ்வேனோ?

உரை விளக்கம் : 'தலைவியைக் கண்டு காதலுறுதற்கு முன்பெல்லாம் குட்டுவன் தொண்டிபோல் பல சிறப்புக்களுடன் இருந்த நான், இப்போது அவளைப் பெறாத காரணத்தால் அச்சிறப்புக்களெல்லாம் இழந்து நிற்கும் நிலையைக் கண்டும் நீ இரங்கி எனக்கு உதவ மறுத்தால் யான் அவள் உறுப்பழகை உன்மத்தன்போலத் தனியே இருந்து பாராட்டிக் கொண்டு வாழமுடியாது' என்பது அவன் கருத்து என்க. ஓகாரம் வினாப்பொருட்டாய் எதிர்மறைப் பொருள் தந்தது.

தோழி தனக்காக இரங்குதல் வேண்டிக் குறையிரப்பாளாதலின், 'என் அவலநிலைகண்டு இரங்கி' என்பதற்கு ஏற்பத் தொண்டியின்

Koviloor Digital Library

அழகு இழந்த நிலை வருவித்து உரைக்கப்பட்டது. இவ்வாறன்றித் தன்னை அவள் தெளிதற்பொருட்டுத் தலைவன் தன் செப்பம் கூறும் நோக்குடன் 'செங்கோற் குட்டுவன் தொண்டியன்ன என்' என்றதாகக் கூறுவார் உளர். தொண்டியில் அறம் பிறழாதவன் என்று கூறுதலை நோக்கமாகக் கொண்டு தலைவன் இங்ஙனம் கூறியதாகக் கொள்வர். 'தொண்டிபோலிருந்த நான் இன்று இப்படியானதற்குக் காரணம் நின் தோழியின் தோள்களும், கூந்தலுமாதலின், அவற்றைத் தழுவியின்புறாது, வெற்றெனப் பாராட்டி யான் வாழமுடியுமோ? என் உயிர் வாழ்வு நின் கையில் உள்ளது. எனவே இரங்குக' என்றதாகக் கோடலே சிறப்பு.

எற்கண்டு நயந்து என்றதற்கு என்னைக்கண்டு நயந்து இரங்கி என்று பொருள் உரைக்க - அல்லது இரங்கி, நயந்து என்று கூறினும் பொருந்துவதே.

அருஞ்சொற்பொருள் : ஒல்லுமோ - பொருந்துமோ - ஓகாரம் எதிர்மறை.

மேற்கோள் : தொண்டி குட்டுவனுக்குரியது :

வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்
தெண்டிரைப் பரப்பின் தொண்டி
- அகம். 290.

179

நல்குமதி, வாழியோ! நளி நீர்ச் சேர்ப்ப! —
அலவன் தாக்கத் துறை இறாப் பிறழும்
இன் ஒலித் தொண்டி அற்றே,
நின் அலது இல்லா இவள் சிறு நுதலே.

கூற்று : குறியிடத்து வந்து புணர்ந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : முன்னமே முடிவு செய்த இடத்திற்கு வந்து தலைமகளைக் கூடி அளவளாவிப்பின் நீங்கிய தலைமகனைச் சந்தித்துத் தோழி விரைவில் தலைவியைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தியது.

உரை : பெரிய கடற்கரைக்கு உரிமையுடைய தலைவ! நின்னையன்றி உயிர்வாழ இயலாதவள் என்தோழி. இவளுடைய சிறிய நுதல் அலவன் தாக்கத்துறையில் உள்ள இறா மீன் பிறழுதற்குரிய இன்னொலிகள் நிறைந்த தொண்டி போன்றதாகும். (அது தன் பெருங்கவினை இழவாத வகையில் விரைந்து அவளை வரைந்து கொள்வாயாக).

உரை விளக்கம் : தலைவியின் நுதல் அழகிற்கு அழகிய நகரமான தொண்டியை உவமை கூறினாள், அந்நுதல் சேணாட்டிலும் அறிந்து புகழப்படுதல் நோக்கி. அந்நுதல் எப்பொழுதும் அழகுடன் விளங்குதற்கு நீ என்றும் அவளைப் பிரியாதிருப்பதொன்றே வழியாதலின் 'நல்குமதி' என்று இரந்தாள். ஈண்டு நல்குதல் விரைவில் வரைந்து கொள்வது. தொண்டியை இன்னொலியுடையதாகப் புகழ்ந்தது முழவுபோல முழங்கிக் கடலலை கரையில் மோதுதலாலும், பாணரும் கூத்தரும் விழா நாட்களில் தத்தம் கருவிகளை இயக்குதலாலும் ஆம். விழவு மலி மூதூர் ஆதலின் கருவிகளின் ஒலி மிகுவது இயல்பே. இவள் நின்னல்லது இல்லையாதலின், நீயல்லது இவள் நுதல் அழகையும் வாழவைப்பாரில்லை என்று வற்புறுத்தினாள் தோழியென்க. அலவன் தாக்கிய அளவில் இறாப் பிறழும் என்றது, இவ்வுறவு அலராயின் தலைவி வாழாள் என்ற குறிப்பில் என்பர்.

அருஞ்சொற்பொருள் : நல்கு – அருள்செய்; நளி நீர் – குளிர்ந்த நீர், பெரிய நீர், செறிந்த நீர்; அலவன் – நண்டு; இறா – ஒருவகை மீன்.

இலக்கணக்குறிப்பு : நல்குமதி – மதி முன்னிலை அசை; நளி – உரிச்சொல்; அற்று – அத்தன்மைத்து.

Koviloor Digital Library

180

சிறு நணி வரைந்தனை கொண்மோ - பெருநீர்
வலைவர் தந்த கொழுமீன் வல்சிப்
பறை தபு முது குருகு இருக்கும்
துறைகெழு தொண்டி அன்ன இவள் நலனே.

கூற்று : தாழ்ந்து வரையக் கருதிய தலைமகனைத் தோழி நெருங்கி, 'கடிதின் வரைய வேண்டும் எனச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவின்பத்தை மேலும் சில காலம் துய்க்க விரும்பிய தலைவன் சிலகாலம் கழித்து வரைவேன் என்றான். அதனை மறுத்து, விரைந்து வரையுமாறு தோழி வற்புறுத்தியது.

உரை : பரதவர் கடலினின்றும் வாரிக் கொணர்ந்த கொழுப்பு மிகுந்த இறாமீனை உணவாகக் கொள்ளற்கு, பறக்கும் ஆற்றலை இழந்த முதிய கொக்கு காத்திருக்கும் துறையை உடைய தொண்டிப்பட்டினம் போன்றது இவளது பெண்மை நலம். அது கெடுதற்கு முன்னர், விரைந்து இவளை மணந்து கொண்டு இனிது வாழ்க.

உரை விளக்கம் : 'வரைந்து கொண்ம்' என்றாள், அவளை மணந்து அவள் பெருநலத்தை நுகர்க என்ற பொருள்பட. அதனை விரைந்து கொள்கவென்றாள், காலம் தாழ்த்தின் கெட்டழியும் ஆதலான்.

வலிமையுடைய சிறகுகள் காலம் செல்லச் செல்ல வலியிழந்து பறக்க முடியாத நிலையெய்தினாற் போல, இன்று கண்டோர்க்கு எல்லாம் அணங்காகும் இவள் பேரழகும் நீ காலம் தாழ்த்தினால் ஒருநாள் அழியும் என்று எச்சரித்தாள். விரைவில் வரையவில்லையெனில் நொதுமலர் வரையக்கருதி வருவர் என்ற குறிப்பும் உண்டு. சான்றோர் வந்து காத்திருத்தலைக் காத்திருக்கும் கொக்கு உணர்த்தியதாகவும் கொள்ளலாம்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சிறுநணி – மிக விரைந்து; பெருநீர் – கடல்; தபு – கெட்ட; பறை – பறத்தல்; குருகு – கொக்கு; வலைவர் – பரதவர்.

இலக்கணக்குறிப்பு : நனி – உரிச்சொல்; வரைந்தனை – முற்றெச்சம்; கொண்மோ – முன்னிலை ஏவல்; பறை – தொழிற்பெயர்.

மேற்கோள் : நாரை பறக்கும் ஆற்றல் இழத்தல் :
பறை வலம் தப்பிய பைதல் நாரை
– குறுந். 125.

குறிப்பு : இதிலுள்ள பத்துச் செய்யுட்களும் சொல்வகையாலும் கிளவி வகையாலும் தொடர்ச்சியுற்றிருத்தல் காணலாம். சொல்வகையால் தொடர்ச்சி பெறுவது அந்தாதி எனப்படும். கிளவி வகையால் தொடர்ச்சி அமையப்பாடுவது கோவை எனப்படும். பிற்காலத்து எழுந்த இச்சிற்றிலக்கிய வகைகட்கு இத்தொண்டிப்பத்துத் தோற்றுவாய் செய்தது எனலாம். சேர நாட்டில் தொகுக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் பதிற்றுப்பத்தில் நான்காம் பத்தும் சொல்வகையால் தொடர்புற்றிருத்தலை நோக்குக.

தமிழில் எழுந்த முதற்காப்பியமான சிலப்பதிகாரம் சேர இளவரசால் இயற்றப்பட்டது. சேரமான் பெருமாள் நாயனார் ஆதிஉலாவையும், திருவாரூர் மும்மணிக் கோவையையும் பாடியருளினார். இவை இரண்டும் முறையே முதல் உலாவும் முதல் மும்மணிக்கோவையுமாகும். பத்துப்பத்தாகப் பாடும் மரபும் சேரநாட்டில் உருவானதே என்பதனைப் பதிற்றுப்பத்தாலும், ஐங்குறு நூற்றாலும் அறிகிறோம். இதனால், சேரநாடு புத்திலக்கியத் தோற்றத்திற்கு விதையூன்றிற்று என உணரமுடிகிறது.

உள்ளுறை : வலைவர் வலைவீசிக் கொணர்ந்த கொழுமீனாகிய உணவைத் தின்பதற்குப் பறப்பதற்கும் வலிமையில்லாத கிழக்கொக்குத் தக்க வேளை பார்த்திருப்பதுபோல, என் தோழியை மகட்பேசிக் கொள்ள ஏதிலார் பலர் வந்து காத்திருக்கின்றனர்.

தொண்டிப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

19. நெய்தற் பத்து

நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களுள் தலைமையானதான நெய்தல் பாடல் தொறும் இடம்பெறுதலின் இது நெய்தற் பத்தாயிற்று.

181

நெய்தல் உண்கண், நேர் இறைப் பணைத் தோள்
பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்
குப்பை வெண் மணல் குரவை நிறூஉம்
துறை கெழு கொண்கன் நல்கின்,
உறைவு இனிது, அம்ம! – இவ் அழுங்கல் ஊரே.

கூற்று : இக்களவொழுக்கம் நெடிது செல்லின், இவ்வூர்க் கண் அலர் பிறக்கும் என்று அஞ்சியிருந்த தலைவி, 'தலைமகன் வரைந்து கொள்ளத் துணிந்தான்' என்று கூறிய தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவு நீட்டிக்கப் பெற்றால் ஊரில் அலர் எழும் என்று தலைவி பெரிதும் கவலையுற்றாள். அப்பொழுது தலைவன் அவளை மணந்து கொள்ள முடிவு செய்து அதற்குரிய முயற்சியில் ஈடுபட்டுள்ளான் என்றறிந்த தோழி, அச்செய்தியைத் தலைவிபால் கூற, அதற்கு விடையாகத் தலைவி சொல்லியது இது.

உரை : தோழியே! யான் கூறுவதனைக் கேள். நெய்தல் மலர் போன்ற மையுண்ட கண்களும், நுண்ணிய இறைபொருந்திய, வளையலணிந்த பருத்த தோள்களும் உடையராய்ப் பொய்தல் ஆடிய பொய்யறியாத இளமகளிர், குவிந்த வெண்மணலில்

Koviloor Digital Library

குரவைக் கூத்து நிகழ்த்தி மகிழ்வதற்கு இடனான கடல்கெழு நாட்டின் தலைவன் நம்பால் அருள்உடையன் எனில், ஆரவாரம் மிக்க இவ்வூர் நமக்கு வாழ்வதற்கு இனிமையுடையதாகும்.

உரை விளக்கம் : பொய்தலாடிய மகளிர் என்றும், பொய்யா மகளிர் என்றும் தனித்தனியே கூட்டிப் பொருள் கொள்க. பொய்தலாவது விளையாட்டு. இதனைக் காமக்குறிப்பில்லாத விளையாட்டு என்பர். பொய்தல் என்பது அப்பெயர் கொண்டதொரு விளையாட்டு என்றும் கூறுப. காமக்குறிப்பில்லாத பேதை மகளிர் பலர் கூடி இவள் கணவன், இவள் மனைவி என்று தம்முட் கூறிக் கொண்டு சிறுவீடு கட்டிச் சோறாக்கியும், உண்டும் ஆடும் ஆட்டம் என்பாரும் உளர். இவ்வாட்டத்தை ஆடிய மகளிர் சலிப்படைந்தால் குரவையும் ஆடுவர் என்க. மறையெனல் அறியாத மாயமில் பருவத்தர் ஆதலின் பொய்தலாடிய மகளிர் பொய்யாமகளிர் எனப்பட்டனர். தாம் கண்டதை, கேட்டதைச் சிறிதும் மறையாது வெளிப்படக் கூறுவர் என்றபடி.

தன் ஊரை 'அழுங்கல் ஊர்' என்று வெறுத்துக் கூறினாள், அது தன் களவொழுக்கம் பற்றி அலர் தூற்றியமையால். தலைவன் வரைந்து கொண்டாலல்லது அலர்மொழி அடங்காது என்றும், அவ்வாறு அடங்கினால் மட்டுமே பிறர்க்குப் போல் தனக்கும் அது வாழ்வதற்கு இனிய ஊராகும் என்றும் கூறுவாள், 'கொண்கன் நல்கின் உறைவு இனிது' என்றாள். நல்குதலாவது தலைவன் தலைவியைக் காலத்தில் மணந்து கொள்வதாம்.

குரவையாவது பண்டைக் காலத்துக் கூத்து வகைகளுள் ஒன்று. இது வரிக்கூத்தின் ஓர் உறுப்பாகும். விநோதக் கூத்துக்கள் ஆறனுள் இஃது ஒன்றாகும். இக்கூத்தில் மகளிர் எழுவரோ, எண்மரோ, ஒன்பதின்மரோ பங்குபெறுவர். சமநிலையில் மண்டிலமாக நின்று கடகக்கை கோத்து நின்று ஆடுவர். தாம் விரும்பிய ஒருவரின் புகழ் குறித்துப் பாடிக் கொண்டே ஆடுவர். இக்கூத்துப்பற்றி மேலும் அறியச் சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர்

Koviloor Digital Library

குரவை, குன்றக்குரவை என்னும் பகுதிகளை அவற்றுக்குரிய உரையோடும் பயில்க.

அருஞ்சொற்பொருள் : பொய்தல் – விளையாட்டு; பொய்யா – குற்றமில்லாத; குப்பை – குவியல்; நிறூஉம் – நிறுத்தும்; நல்குதல் – அருளல்; உறைவு – வாழ்தல்; அழுங்குதல் – ஆரவாரித்தல்; பணை – பெருத்த.

இலக்கணக்குறிப்பு : உறைவு – தொழிற்பெயர்; அம்ம – கேட்பிக்கும் இடைச்சொல்; கெழு – கேழ் என்றதன் திரிபு.

மேற்கோள் : சிறார் பொய்தலாடுவது :

பொலந் தொடிப் புதல் வனும் பொய்தல் கற்றனன்
– நற். 166.

பொய்தல் மகளிர் கண்காண இகுத் தந்து
– பரி. 20 : 59.

குவளை உண்கண் இவளும் யானும்
. . . .
பொய்தல் ஆடிப் பொலிக என வந்து
நின்னகர்ப் பிழைத்த தவறோ
– அகம். 156.

குறிப்புப் பொருள் : பொய்தலாடிய மகளிர் பின்னும் மணற்கண் குரவையாடும் துறைவன் ஆதலின் களவின்கண் கூடி நமக்குத் தலையளி செய்த அவன் பின்பு வரைவு வழிக் கூடுதலை விரும்பினான் என்ற உள்ளுறை கொள்வார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

பழைய உரையாசிரியர் இச்செய்யுள் தலைவன் சிறைப்புறமாகத் தலைவி கூறியதாகக் கொண்டு, ‘மகளிர் குப்பை வெண்மணல் குரவை நிறூஉம் துறைகெழு கொண்கன் என்றது

Koviloor Digital Library

மகளிர்தம் காதலரொடு ஆடும் இவ்வூரிடத்துத் தனித்தல் அரிது என்பதாம்' என்று விளக்கினார்.

182

நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் –
அருந் திறற் கடவுள் அல்லன் –
பெருந் துறைக் கண்டு, இவள் அணங்கியோனே.

கூற்று : *தலைமகள் மெலிவு கண்டு, 'தெய்வத்தால் ஆயிற்று' எனத் தமர் நினைந்துழி, தோழி அறத்தொடு நின்றது.*

கூற்று விளக்கம் : பெற்றோரால் இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன் காதலனைக் காணப் பெறாமல் மெலிவுற்றாள். அவள் மெலிவுக்கு யாதோ ஒரு தெய்வமே காரணம் எனக் கருதி அத்தெய்வத்தை நோக்கிப் பூசை முதலியன நிகழ்த்தத் தமர் முயன்றபொழுது, தலைவி மெலிந்தமைக்கு ஒரு மானிடத் தலைவன் காரணம் எனக்கூறித் தோழி களவு வெளிப்படுத்தியது.

உரை : அன்னையே! நம்மூரின்கண்ணுள்ள பெரிய துறைக்கண்ணே இவளைக் கண்டு, இவள் இன்று இப்படி வருந்தி மெலிவதற்குக் காணரமானவன் நெய்தலின் நறிய மலர்களையும் செருந்தி மலர்களையும் விரவி அழகுறத் தொடுத்த மாலையால் நறுமணம் கமழும் மார்பினை உடைய மானுடப் பிறப்பினனாகிய தலைவன் ஒருவனேயன்றி, யாராலும் வெல்லுதற்கு அரிய பேராற்றல் கொண்ட தெய்வமாகான்.

உரை விளக்கம் : நீர்த்துறைக்கண் தெய்வங்கள் உறைவது உண்டு எனப் பண்டைத் தமிழர் நம்பினர். அத்தகு தெய்வ மொன்று தம் மகளை அணங்கியிருக்தல் கூடுமென நம்பித் தலைவியின் தமர் தெய்வக்கடன் இறுக்க முயன்றனர் ஆதலின்,

Koviloor Digital Library

அதனைத் தடுத்து நிறுத்தித் தலைவியின் காதல் நிறைவேறும் வகையில், 'இவளை அணங்கியோன் கடவுளல்லன், மகனே' என்றாள். அத்துடன், தன் தோழி அவன் மார்பினை, 'கைபுனை நறுந்தார் கமழும் மார்பு' எனச் சிறப்பித்தாள். ,அவன் கடவுள் அல்லன் என்பது தோன்ற. தெய்வமாயின் அது கைபுனைந்து இயற்றாத கவினுடையதாகும். தன் தோழியின் துயரைத் தீர்க்கும் மருந்தாவது அத்தலைவன் மார்பேயன்றித் தெய்வம் நோக்கிய பூசனையன்று என்றாள் தோழி.

இங்குச் சுட்டப்பட்ட அரும்பெறல் தெய்வம் நெய்தல் நிலத்தோர் வணங்கியதொரு தெய்வம் என்று கொள்வதே பொருத்தமாகும். 'இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இச்செய்யுள் வேலனை முன்னிறுத்திக் கூறியது' என்றனர். இக்கால அறிஞருள் ஒரு சாராரும் இக்கருத்தை ஏற்பர். பெருமழைப்புலவர், 'இனி அவன் அருந்திறல் முருகனையே ஒப்பானாயினும் முருகனல்லன், மகனேகாண் ....' என எழுதிச் சென்றார். ஆனால் இப்பாட்டில் வெறிபற்றிய குறிப்போ, கட்டுப்பற்றிய குறிப்போ பிறவோ இல்லை. முருகனுக்குரிய பெயர்களுள் ஒன்றோ அவனை அடையாளம் காட்டும் சொல்லோ இல்லை. மேலும் நெய்தல், செருந்தி என்னும் நெய்தல் நிலப்பூ மாலையே பேசப்படுதல் காண்க. இதனால், இங்குச் சுட்டப்பட்ட கடவுள் நெய்தல் நிலத்தவர் வழிபட்டதொரு தெய்வமே எனத் தெளியலாம். ஔவை சு. துரைசாமிப்பிள்ளைக்கும் இதுவே உடன்பாடாகும்.

அருஞ்சொற்பொருள் : விரைஇ – கலந்து; கைபுனை – அழகுறச் செய்யப்பட்ட, கையால் தொடுத்த; தார் – மார்பில் அணியும் மாலை; அருந்திறல் – யாவராலும் வெல்லுதற்கு அரிய பேராற்றல்; அணங்கியோன் – வருத்தியோன்.

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 63737
Date of purchases:
Call Number:

Koviloor Digital Library

183

(கணங்கொள் அருவிக் கான் கெழு நாடன்,
குறும்பொறை நாடன், நல்வயல் ஊரன்,)
தண் கடற் சேர்ப்பன் பிரிந்தென, பண்டையின்
கடும் பகல் வருதி – கையறு மாலை! –
கொடுங் கழி நெய்தலும் கூம்பக்
காலை வரினும், களைஞரோ இலரே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்துழி ஆற்றாளாகிய தலைமகள் மாலைக்குச் சொல்லியது. (முதலிரண்டு அடிகள் சில பிரதிகளில் காணப்படுகின்றன.)

கூற்று விளக்கம் : தலைவன் திருமணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்தற்பொருட்டுச் சில நாட்கள் பிரிந்திருந்தபொழுது பிரிவாற்றாத தலைவி, மாலைப் பொழுது கண்டு சொல்லியது.

உரை : தனித்துறைவார் செயலறுதற்குரிய மாலைப் பொழுதே! கூட்டமாகிய அருவிகளைக் கொண்ட குன்றமும் காடும் பொருந்திய நாடனும், குறும் பொறைகளைக் கொண்ட முல்லை நிலத் தலைவனும், வளமான வயல்கள் கொண்ட மருதநிலத்தலைவனும், குளிர்ந்த கடற்கரை நாடனும் ஆகிய என் காதலன், பிரிந்த அப்பொழுதே, வழக்கமான வேளையில் வருவாய்போலப் பிறர்க்குக் காட்டி, நீ நண்பகல் பொழுதிலேயே வந்துவிட்டனை. நீ இவ்வாறு வாராது, வளைந்த கழிகளில் நெய்தல் மலரும் கூம்பும்படியாகக் காலையிலேயே வருவையாயினும் நின்னைத் தடுப்பார் யாரோ?

உரை விளக்கம் : அருவிகளை மிகுதியாக உடைய கான் கெழு நாடன் என்றமையால், இது குறிஞ்சி என்று உய்த்துணரப்படும். குன்று என்று ஒருசொல் வருவித்துக் கொள்ளப்பட்டது.

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KA...

Koviloor Digital Library

குறும்பொறையாவது பொற்றைகல் – குறிஞ்சி நிலத்தை அடுத்துள்ள, இத்தகு கற்களைக் கொண்ட முல்லை நிலம். 'காட்ட, குறும்பொறை' (நற். 157) என்பதில் குறும்பொறை காட்டிலிருப்பதாகக் கூறல் காண்க. இன்னும் 'முல்லை வைந்நுனை' (அகம். 4) என்னும் முல்லைத்திணைப்பாட்டில் தலைவன் குறும்பொறை நாடன் என்படுவதும் காண்க. அகம். 88, 168, 248 ஆகிய பாடல்களில் மலை நாட்டுத் தலைவன் கானவன் எனப்படுவதும் நோக்குக. இந்நுட்பம் ஓராது, இச்செய்யுளில் வரும் 'கான் கெழு நாடன்' என்பதனை முல்லைத்தலைவனாகவும், 'குறும்பொறை நாடன்' என்பதனை மலைத் தலைவனாகவும் விளக்கினார் உளர்.

நானிலமும் கூறவே, இத்தலைவன் நாட்டில் நான்கு நிலங்களும் உள்ளன என்பது பெறப்படும். தலைவன் செல்வவளமும் பெருமையும் நானிலமுடைமையால் பெறப்படும்.

தலைவன் பிரியும் வேளையை ஆவலோடு எதிர்பார்த்திருந்து அவன் பிரிந்த அப்பொழுதே மாலை வந்தது என்பதனை, 'பிரிந்தென' என்னும் எச்சம் உணர்த்துகின்றது. கடும்பகல் என்பது பட்டப்பகல் என்றபடியாம். பகலிலேயே மாலை வந்தது என்பது, மாலைக்காலத் தனிமைத் துயர் முன்பே வந்துவிட்டது என்பது பற்றியாகும். அஃதாவது பிரிந்துறைவார்க்கு எல்லாப் பொழுதும் மாலைப்பொழுது என்றவாறாம். 'பண்டையின்' என்றது, நீ எப்பொழுதும் வருவை போலப் பிறர்க்கு வருகிறாய். ஆனால் எனக்கு மட்டும் முன்பே வந்துவிடுகின்றாய் என்னும் குறிப்புடையது.

குறிப்பு : என்னைப் பொறுத்த அளவில், நீ கடும்பகலிலேயே வந்து விடுகின்றாய் என்றாள், 'இனி நீ காலைப்பொழுதிலும் வருவைபோலும். அங்ஙனம் நீ வரும்பொழுது, நெய்தலும் கூம்பக் கூடும். (அது மாலையில் கூம்புவது) அப்படி நீ வரினும் நின்னைக் கேட்பார் யார்?' என்னும் பொருளில் 'களைஞரோ இலர்' என்றாள். காமநோயுற்றார்க்கு எல்லாம் மாலைப் பொழுதே என்பதனை,

Koviloor Digital Library

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
பொழுதிடைத் தெரியின் பொய்யே காமம்
– குறுந். 32.

என்பதனாலும் அறியலாம்.

மாலைப்பொழுது தனித்துறை மகளிர்க்குப்
பெருந்துயர் செய்வது என்பதனை,
மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும் காலையாவது
அறியார்
மாலை யென்மனார் மயங்கியோரே
– கலி. 199

என்பதனாலும் அறிக.

மாலையே! நீ இப்படி முறைமாறி வரக் காரணம் யாதெனில், அப்படி நீ வருவதனால் யான் துயருறும் பொழுது அதனைக் களையும் தகுதியும் உரிமையும் உடைய என் காதலர் இல்லாமையால் தான். அவர் என்னுடன் இருந்தால் உன்னை நான் மகிழ்ந்து வரவேற்றிருப்பேன் என்ற குறிப்புண்மையும் காண்க.

இச்செய்யுளில் உள்ள முதலிரண்டிகளும் பல ஏடுகளில் இல்லை. அவற்றை நீக்கினும் பாடற் பொருட்குச் சிதைவு ஒன்றுமில்லை. எனவே, அவ்விரண்டடிகளும் இடைச் செருகலாதல் தெளிவு.

அருஞ்சொற்பொருள் : கணம் – கூட்டம், தொகுதி; கான்கெழு நாடு – மலைநாடு; குறும்பொறைநாடு – முல்லைநிலம்; கடும்பகல் – நண்பகல்; கையறு மாலை – செயலறச் செய்யும் மாலை; களைஞர் – விலக்குவார்.

இலக்கணக்குறிப்பு : பிரிந்தென – செய்தென என்னும் எச்சம்; பண்டையின் – இன் உறழ்ச்சிப் பொருளில் வந்தது. வருதி – முன்னிலை ஒருமை வினைமுற்று.

Koviloor Digital Library

மேற்கோள் : பிரிந்துறைவார்க்கு விடியலும் பகலும் மாலையே என்பது :

சுடர்செல் வானம் சேப்பப் படர் கூர்ந்து
எவ்வறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலா விடியலும் மாலை
பகலும் மாலை துணையில் லோர்க்கே
– குறுந். 234.

நானிலமும் உடைமை மன்னர்க்குச் சிறப்பு என்பது :

நாடன் என்கோ ஊரன் என்கோ
பாடிமிழ் பனிக்கடல் சேர்ப்பன் என்கோ
யாங்ஙனம் மொழிகோ ஓங்குவாள் கோதையை
புனவர் தட்டை புடைப்பின் அயலது
இறங்கு கதிர் அலமரும் கழனியும்
பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங்கு எழுமே
– புறம். 49.

கானக்கோழி கதிர் குத்த
மனைக்கோழி தினைக் கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரை இறுப்பத்
தண்வைப்பின் நாடு குழீஇ
– பொருந. 222 – 26.

184

நெய்தல் இருங் கழி நெய்தல் நீக்கி
மீன் உண் குருகினம் கானல் அல்கும்
கடல் அணிந்தன்று, அவர் ஊரே;
கடலினும் பெரிது, எமக்கு அவருடை நட்பே.

Koviloor Digital Library

கூற்று : வாயில் வேண்டி வந்தார் தலைமகன் அன்புடைமை கூறிய வழி, வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் வீட்டிலிருந்து தலைமகள்பால் தூது அனுப்பி அவள் உடம்பாடு பெற முயன்றான். அத்தூதுவர் வந்து தலைமகன் தலைமகள் பால் பேரன்புடையான் என்பதுபடப் பேசினர். அவர்கட்கு அவள் சொல்லியது இது.

உரை : நெய்தல் நிலத்திலுள்ள கரிய கழியிடத்தே உள்ள நெய்தல் செடிகளை விலக்கிவிட்டு மீன்களைப் பிடித்து உண்ணும் கொக்குகளின் கூட்டம் கடற்கரைச் சோலையில் தங்குதற்கிடமான கடலால் அணி பெற்றுச் சிறந்தது எம் காதலர் ஊர். அவர்க்கும் எமக்கும் உள்ள நட்போ, அக்கடலினும் பன்மடங்கு பெரியதாகும்.

உரை விளக்கம் : நெய்தல் இரண்டனுள் முதலது நெய்தல் நிலத்தைக் குறிக்க, ஏனையது நெய்தற் செடியைக் குறித்தது. அதனைக் கொடியென்றும் கூறுவர். நீக்குதல் விலக்குதலாகலான், தம் அலகால் நெய்தலை விலக்கி மீனைக் குத்தி உண்டன குருகுகள் என்க. நெய்தல் மலரிடையே தங்குதலை ஒழித்துக் கரைக் கண்ணுள்ள நந்தவனத்தில் தங்குதற்கு இடனான என விளக்கினார் பெருமழைப்புலவர். இவர் குருகினம் என்ற பாடத்தை விடுத்துக் குருகு இளம் கானல்' என்று பாடங்கொண்டார். 'அவர் ஊர் கடலால் அழகுபெற்றது எனின் அவர்க்கு எம்பாலுள்ள காதல் அக்கடலை விடப்பெரிது. அதனால்தான் இத்துணை நாட்கள் எம்மை மறந்து பரத்தை இல்லில் உறைந்து வருகின்றார்' என்று அங்கதச் சுவைபட வாயிலாக வந்தாரிடம் கூறுவது சுவைமிக்கதாம். தலைவன் பேரன்பினன் என்று கூறி வாயில் வேண்டியவர்களைப் பார்த்து, 'தலைவன் என்பால் சிறிதும் அன்பிலன். அவன் பேரன்பினன் என்று நீவிர் கூறுவது முழுப்பொய். நீவிர் வந்த வழியே மீள்க' என்றாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : நெய்தல் – நெய்தல் நிலம்; நெய்தல் நீக்கி – நெய்தல் செடி அல்லது மலர்; குருகு – கொக்கு; அல்குதல் – தங்கல்.

மேற்கோள் : நட்பிற்குக் கடல் உவமை :

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
– குறுந். 2.

யாதனிற் பிரிவாம் மடந்தை
காதல் தானும் கடலினும் பெரிதே
– நற். 166.

உள்ளுறை : குருகுகள் நெய்தல்மலரை நீக்கி மீனை உண்டு கானலில் அல்கும் என்றது தலைவன் பொதுமகளிரின் ஊடல் நீக்கி இன்பம் நுகர்ந்து ஆண்டுத் தங்குவான் என்னும் உள்ளுறை கொண்டது. (பழையவுரை)

185

அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறு கெழு துவர்
வாய்,
அரம் போழ் அவ் வளைக் குறுமகள்
நரம்பு ஆர்த்தன்ன தீங் கிளவியளே.

கூற்று : 'ஆயமகளிருள் நின்னால் நயக்கப்பட்டாள் யாவள்?' என வினவிய தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : ஊழ்வலியால் தலைவியைக் கண்டு கூடிப் பிரிந்தவன், அதன்பின் அவளைக் காண முடியாது வருந்தினன். பின்னர் அவள் தோழி இன்னவள் என்றறிந்து அவளைக் கண்டு கூட்டத்திற்கு உதவுமாறு வேண்டினான். அவள், நின்னால் விரும்பப்பட்ட பெண் யாவள் எனக் கேட்க, அதற்கு அவன் இறுத்த விடை இது.

உரை : தோழியே! என்னால் காதலிக்கப்பட்ட இளமகள், அசையும் இதழ்களைக் கொண்ட நெய்தல் பூக்கள் பொருந்திய கொற்கைத் துறைமுகத்தின் விளக்கமுடைய முத்தையொத்த பற்களைக் கொண்டவள்; பவழம்போற் சிவந்த வாயையுடையவள்; அரத்தால் அறுத்து அமைக்கப்பட்ட வளையல்களை அணிந்தவள்; யாழ் நரம்பில் இருந்து எழும் இசைபோல் இனிய சொற்களை உடையவள் என அறிக.

உரை விளக்கம் : கொற்கை பழம்பெருமை வாய்ந்த தமிழ்நாட்டுத் துறைமுகங்களுள் ஒன்றாம். இது பாண்டியர்க் குரியது. பாண்டிநாட்டுக் கொற்கை முத்து உலகப் புகழ் பெற்றது. இம்முத்துப் பற்றிச் சங்க இலக்கியம் பரக்கப் பேசும். யவன ஆசிரியர்களும், இடைக்காலத்தில் பாண்டியநாடு போந்த மார்க்கோபோலோவும் இத்துறைமுகத்து முத்தின் பெருமையினைப் பேசுகின்றனர். தன் காதலியின் மேலுள்ள ஆழ்ந்த அன்பு புலப்படத் தலைவன் அவள் பற்களுக்குத் தென்கடல் முத்தையும், வாய்க்குக் கீழ்க்கடல் பவழத்தையும் உவமை கூறிச் சிறப்பித்தான். 'அரம்போழ் அவ்வளை' என்றமையான் அவ்வளை சங்கினாலானது என்பது பெறப்படும். அவள் குரலுக்கு யாழிசையை உவமை கூறினான் அவ்விசைக்கு ஈடு இல்லையென்னும் கருத்தில். நரம்பு என்றது யாழ் நரம்பைக் குறித்தது.

அருஞ்சொற்பொருள் : அலங்கு – அசைகின்ற; இயங்கு – ஒளிவிடுகிற; எயிறு – பல்; துவர் – சிவந்த; உறைக்கும் – ஒக்கும்; போழ்தல் – ஈர்தல், பிளத்தல்; ஆர்த்தல் – ஒலித்தல்; கிளவி – சொல்; நரம்பு – யாழ் நரம்பு.

Koviloor Digital Library

மேற்கோள் : கொற்கை முத்துக்குப் பெயர் பெற்றது :
மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கை அம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்
வாய்
– அகம். 27.

இவர் திரை தந்த ஈர்ங் கதிர் முத்தம்
கவர் நடைப் புரவி கால் வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
– அகம். 130.

வினை நவில் யானை விறற் போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்றுறை
அவிர் கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
– அகம். 201.

சொல்லுக்கு யாழ் இசை உவமை :
வடிப்புறு நரம்பின் தீவிய மொழிந்தே
– அகம். 142.

186

நாரை நல் இனம் கடுப்ப, மகளிர்
நீர் வார் கூந்தல் உளரும் துறைவ!
'பொங்குகழி நெய்தல் உறைப்ப, இத் துறைப்
பல் கால் வரூஉம் தேர்' என,
'செல்லாதீமோ' என்றனள் யாயே.

கூற்று : பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவிக்கும் தலைவனுக்கும் இடையே களவு உறவு நிகழுங்கால், தலைவியின் வேறுபாடுகள் கண்டு வீட்டில் வைத்துக் காவல் செய்தாள் தாய். அப்பொழுது பகற்பொழுதில் வந்து தலைவன் தலைவி வீட்டருகே நின்றான். அப்போது தோழி அவனைக் கண்டு விரைவில் மணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தியது.

உரை : நாரையின் நல்ல கூட்டத்தைப் போல மகளிர் தம் நனைந்த கூந்தலை உலர்த்துவதற்கு இடமான துறைவனே! நீரால் பொங்கி வழியும் கழியில் மலர்ந்த நெய்தல் செடிகள் நீர்த்துளிகளைக் கரைக்கண்ணே சிதறும் இத்துறைக்கு ஒருதேர் பலகாலும் வந்து செல்வதனைக் கூறி 'அங்கே செல்லாதீர்' என அறிவுறுத்தினள் யாய். (இனி நீ ஈண்டு வருதல் ஆகாது.)

உரை விளக்கம் : நீரால் நனைந்த நாரைகள், தம் அலகுகளால் தம் சிறகைக் கோதி உலர்த்துவது போலப் பெண்கள் தம் நீர் ஒழுகும் கூந்தலை உலர்த்தினர். மகளிரும் நாரைகள் போல் குழுவாக நின்று உலர்த்தினர் என்க. கழிக்கரையிடத்தே வளரும் நெய்தல், தலைவன் தேர்க்காலிற்பட்டு நீர் சிதறிற்று என்க. 'பல்கால் வரூஉம் தேர்' என அன்னை அறிந்துள்ளாள் ஆதலின் இனி நீ வருதலைத் தவிர்க என்றாளாம். அத்துடன் தலைவி இற்செறிக்கப்பட்டுள்ளாள் என்பதனை, 'செல்லாதீம்' என்று அவள் அறிவுறுத்த சொற்களால் அவன் உணரச் செய்தாள். விரைந்து வரைக என்பது குறிப்பாகக் கொள்க.

அருஞ்சொற்பொருள் : கடுப்ப – ஒப்ப; வார் – ஒழுகும்; உளரும் – கோதுகிற.

இலக்கணக்குறிப்பு : கடுப்ப – உவம உருபு; செல்லாதீம் – முன்னிலைப் பன்மை எதிர்மறை வினைமுற்று.

Koviloor Digital Library

மேற்கோள் : அன்னை தலைவியை இற்செறித்தல் :

பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக ஊரிற்றுஞ்சலோ இலளே

– குறுந். 272.

தேர்வந்து போனது பற்றி அன்னை அலைத்தல்:

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாள் தனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப அதற்கொண்டு
ஒரும் அலைக்கும் அன்னை

– குறுந். 246.

உள்ளுறை : நீராடியதனால் நாரைகளைப் போல மகளிர் தம் கூந்தலின் ஈரம் கெடப் புலர்த்தும் துறைவ என்றது, உன்னோடு உண்டான நட்பினால் இவளுக்குத் துன்பம் வாராதவாறு மணந்து கொள்க என்றதை உள்ளுறுத்தது. (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை)

'மகளிர் நனைந்த தம்முடைய கூந்தலை நன்கு கோதி அதன்கண் ஈரம்புலர்த்துமாறு, எம்முடைய சுற்றத்தாரும் தலைவியின் மெய்வேறுபாடு கண்டு ஐயுற்று அவளை ஆராய்ந்து ஏதம் நிகழாமல் இற்செறித்தனர்.' (பெருமழைப்புலவர்)

187

நொதுமலாளர் கொள்ளார் இவையே;
எம்மொடு வந்து கடல் ஆடு மகளிரும்
நெய்தல் அம் பகைத் தழைப் பாவை புனையார்;
உடலகம் கொள்வார் இன்மையின்,
தொடலைக்கு உற்ற சில பூவினரே.

Koviloor Digital Library

கூற்று : தோழி கையுறை மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் தன் அன்பின் அடையாளமாகத் தழையுடை புனைந்து கொணர்ந்தான். அதனைத் தோழி வாயிலாகத் தலைவிக்களிக்க முயன்றான். அதனை ஏற்க மறுக்கும் தோழி கூறியது இது.

உரை : தலைவ! நின்னையல்லால் அயலவர் இப்பூவைப் பறியார்; எம்மோடு வந்து இங்குக் கடலாட்டயரும் எம் தோழிமாரும் ஒன்றோடு ஒன்று மாறுபடத் தொடுக்கப்பட்ட இந்நெய்தல் தழைமாலை கொண்டு தாம் மணலில் செய்த பாவைக்கும் அணிய விழையார். இவை அனைத்தையும் பயன்படுத்துவார் யாரும் இல்லை. மாலை தொடுப்பார் கூடச் சில பூக்களை மட்டுமே கொள்வர். (எனவே இவை எமக்குப் பயன்படா.)

உரை விளக்கம் : 'இவையே' எனத் தோழியால் சுட்டப்பட்டவை தலைவன் கொணர்ந்த பூக்களும் தழைகளும் ஆகும். நொதுமலாளர் என்பார் பகையாவாரும் உறவாவாரும் அல்லாத பிறர். இங்குத் தலைவனைத் தவிர்த்த பிற மாந்தர் என்னும் பொருட்டு. யாவராலும் விரும்பப் படாத மலரை இங்கு ஏன் கொணர்ந்தனை என அத்தழையின் இழிபினைச் சுட்டுவாளாய் 'நொதுமலாளர் கொள்ளார்' என்றாள். கடல் விளையாட்டயரும் இளம்பெண்கள் தம் விளையாட்டுப் பொம்மைக்கும் கூட இம்மலர்களையும் தழையையும் அணியார் என்று மேலும் இக்கையுறையின் இழிவைச் சொல்லுவாள், 'மகளிரும் .... பாவை புனையார்' என்றாள்.

'உடலகம் கொள்வோர் இன்மையின்' என்றாள் 'நீ கொணர்ந்த அனைத்தையும் பயன்படுத்துவார் யாரும் இல்லை' என்ற பொருளில். அஃதாவது சிலவற்றை மட்டுமே பயன்படுத்துவர் என்றபடி. அதனாலேயே, மாலை தொடுப்போர் கூடச் சில பூக்களை மட்டுமே கொள்வர் என்பாளாய், 'தொடலைக்கு உற்ற சில பூவினரே' என்றாள்.

Koviloor Digital Library

இங்ஙனம் தலைவன் கொணர்ந்த கையுறையை ஏலாமைக்குப் பல ஏதுக்கள் உண்டெனக் கூறினாள்.

இச்செய்யுட்கு அறிஞர் கூறும் விளக்கங்கள் வேறுபடுகின்றன. அவை ஈண்டுக் கூறப்படும்.

'நொதுமலாளர் கொள்ளார் இவையே' என்பதற்கு, 'நீயல்லாதாரில் இப்பூப்பறிப்பார் இல்லை' என்று விளக்கம் தருகிறார் ஈழத்து உரையாசிரியர். இது பழைய உரையாசிரியரைத் தழுவியதாம்.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'இதனை யாம் ஏற்பின் நொதுமலாளரும் ஆராய்தற்கு இடனாம்' என்றார்.

பெருமழைப்புலவர் தரும் விளக்கம் வருமாறு, 'இவற்றை யாங்கள் புனைந்து கொள்ளின் இவை யாங்களே கொய்து புனைந்து கொண்டன என்று ஏனையோர் மனங்கொள்ள மாட்டார். எம்மை ஒருதலையாக ஐயுறுவர்' என்றார் அவர். பல்வேறு வகையான தழைகளால் தொகுக்கப்பட்டது இத்தழையாடை என்பது இவர் கருத்து. பகைத்தழை என்பதற்கு இப்பொருள் கொண்டார் இவர். அஃதாவது, நெய்தலை மட்டுமே தொடுத்து உடுப்பவர் வெவ்வேறு வகைத் தழைகளைத் தொடுத்து அமைத்தவொன்றை உடுத்தினால் பிறர் ஐயுறுவர் என்பது. ஔவை சு. துரைசாமிப் பிள்ளைக்கும் இதுவே கருத்தென்பது அவர் உரையால் விளங்கும்.

ஆனால், பகைத்தழை என்பதற்கு இச்சான்றோர் கொள்ளும் பொருள் அமைவுடைத்தாகத் தெரியவில்லை. தழைகள் ஒன்றோடொன்று மாறுபடும்படியாகத் தொகுக்கப் படுவது பற்றியது இப்பெயர். இச்செய்யுளில் சொல்லப்பட்டது நெய்தல் ஒன்றாலேயே தொகுக்கப்பட்டதேயாம். எதிர் எதிராக வைத்து மலர்களையோ தழைகளையோ தொடுப்பது மாலை தொடுப்பார் கையாளும் உத்தியாகும்.

Koviloor Digital Library

'கொடுங்கழி நிவந்த நெடுங்கால் நெய்தல்
அம்பகை நெறித்தழை

– நற். 96

என்ற பகுதிக்குப் பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், 'வளைந்த தண்டுயர்ந்த நீண்ட காம்புடைய நெய்தலின் அழகிய ஒன்றோடொன்று மாறுபடத் தொடுத்த நெரிப்புடைய தழையை' என்று விளக்குவது காண்க. ஈழத்து உரையாசிரியரும் 'மகளிரும் ஒன்றற்கொன்று மாறாகிய நெய்தற்றழையால் பாவை தானும் புனையமாட்டார்' என்றே இச்செய்யுட்கண் விளக்கமளித்தார். 'அயவெள்ளாம்பல் அம்பகை நெறித்தழை' (குறுந். 293) என்பதற்கு உ.வே.சாமிநாதையர் நீரில் வளர்ந்த வெள்ளாம்பலினது அழகிய மாறுபட்ட முழுநெறியை உடைய தழையுடை' என்று விளக்கமளித்தார். இங்கெல்லாம், வேறு ஒன்றை இடைமடுத்தல் பற்றிய குறிப்பின்மையை நோக்குக.

பெருமழைப்புலவர் பகைத்தழை என்பதற்கு வேறொரு நயவுரையும் தருவார். 'நெய்தலம் பகைத்தழை யென்றது, இத்தழை இந்நிலத்தில்லை ஆதலின் ஐயுறற்கேதுவாம் என்று மறுத்தது' என்கின்றார். இவை வேண்டா கூறியனவாகவே தோன்றுகின்றன.

தோழியின் குறிப்பாவது, அரிதிற் கிடைக்கும் எத்துணையோ மலர்களும் தழைகளும் இருப்ப, எம்மூரில் விளையாட்டு மகளிர் தம் பாவைக்குக் கூடச் சூட விரும்பாத மிக மிக எளிதிற் கிடைக்கத்தக்க, மாலை தொடுப்பார் கூட ஒன்றிரண்டையே இடையே தொடுப்பதல்லது, முழுதும் அதுவே கொண்டு தொடுக்காத இந்தத் தழையாடையை யாம் கொள்ளோம் என்பதாகவே கொள்ளத்தக்கது.

அருஞ்சொற்பொருள் : நொதுமலாளர் – உறவினரும் பகைஞரும் அல்லாத மாந்தர்; பகைத்தழை – ஒன்றோடொன்று மாறுபடத் தொகுக்கப்பட்ட தழையுடை; பாவை விளையாட்டுப் பாவை; உடலம் – முழுமையும்; தொடலை – மாலை.

Koviloor Digital Library

188

இருங் கழிச் சேயிறா இனப் புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கை அம் பெருந் துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகை பெரிது உடைய, காதலி கண்ணே!

கூற்று : விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவி இல்வாழ்க்கைச் சிறப்புக் கண்டு மகிழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : பரத்தை வீட்டிலிருந்து திரும்பிய தலைவன் தன் இல்லில் நுழைந்தபோது தன் மனைவி தான் இல்லாத நிலையிலும் இல்லறத்தைச் சிறப்பாக நடத்தியது கண்டு மகிழ்ந்து சொல்லியது.

உரை : பறவையினம் பெரிய கழிகளில் உள்ள செந்நிறம் கொண்ட இறா என்னும் வகை மீன்களைக் கவர்ந்து உண்ணுதற்கு இடனான கொற்கைக் கோமானாகிய பாண்டியனின் கொற்கைப் பட்டினத்தில் அமைந்த அழகிய நீராடு துறையின்கண் வைகறைப் பொழுதில் மலரும் நெய்தல் மலரைப் போன்று மிக்க அழகுடையன என் காதலியின் கண்கள்.

உரை விளக்கம் : சேயிறாவாவது, கருநிற இறாவினும் வேறான இறா வகை. இனப்புள் என்பதனைப் புள்இனம் என மாறிக் கூட்டுக. ஆர்தல் நிறைதலும் ஆதலின், வயிறு நிறைய உண்டன என்பானாய், 'இனப்புள் ஆரும்' என்றான். இதனால் மீன் வளத்தின் மிகுதி குறிக்கப்பட்டது என்க. முன்னாள் மாலை கூம்பிய நெய்தல் பொறுமையாகக் காத்திருந்து, மறுநாள் கதிரவன் தோன்றிய பின் மலர்கிற தன்மை போலவே, பன்னாள் தன் பிரிவைத் தாங்கி, தான் திரும்பியதும் கண்களை அகல விழித்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாளாதலின் 'தகை பெரிதுடைய' என்றான். 'காதலி கண்ணே' என்றான், தான் பரத்தையரோடு

Koviloor Digital Library

உறவுடையனாயினும், தான் மனைவியையே தன் நெஞ்சமர் காதலியாகக் கருதியமை தோன்ற.

இயல்பாகவே அழகுடைய கண்கள் தன் கணவன் விருந்தொடு புகுந்தபொழுது மலர்ந்து மேலும் அழகியவாய்த் தோன்றினவாம்.

அருஞ்சொற்பொருள் : இருங்கழி – பெரிய கழி, கரிய கழியுமாம்; புள் – பறவைகள்; ஆரும் – உண்ணும்; கொற்கைக்கோமான் – பாண்டியன்; தகை – அழகு.

இலக்கணக்குறிப்பு : சேயிறா – பண்புத்தொகை.

மேற்கோள் : விருந்தினர் வரத் தலைவி மகிழ்தல் :

அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே
– நற். 142.

விருந்தினர் வந்தமையின் ஊட இயலாத தலைவி:

நன்மனை நனிவிருந்தயரும்
கைதூவு இன்மையின் எய்தாமாறே
– நற். 280.

குறிப்புப் பொருள் : தலைவியின் இல்லில் விருந்தினர் யாரும் தடையின்றி நுழைந்து உணவுண்டு மகிழ்ந்தனர் என்னும் குறிப்புப் பொருள் உணர்த்தும் வகையில் பறவையினம் குழுமியிருந்து பெரிய கழிகளில் இறா மீனை உண்ணும் துறை எனப்பட்டது. (பெருமழைப்புலவர்)

Koviloor Digital Library

189

புன்னை நுண் தாது உறைத்தரு நெய்தல்
பொன் படு மணியின் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென,
நல்ல ஆயின - தோழி! - என் கண்ணே

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவான் வந்துழிக் கண்டு உவகையொடு வந்த தோழி, 'நின் கண் மலர்ச்சிக்குக் காரணம் என்?' என்று வினாவிய தலைவிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டிய பொருளை ஈட்டிக் கொண்டு வரைய வந்த தலைவனைக் கண்டு உவகையோடு வந்தாள் தோழி. தன் உவகைக்குக் காரணம் வினவிய தலைவிக்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே! புன்னை மலர்களின் நுண்ணிய பூந்துகள் வீழப்பெற்ற நெய்தல் மலர் பொன்னோடு பொருந்திய நீலமணி போல அழகுபெறத் தோன்றும் மென்புலத்தின் தலைவன் வந்தனனாதலின் என் கண்கள் அழகு பெற்றன.

உரை விளக்கம் : புன்னை கழிக்கரையில் நின்றமையின், தன் கீழிருந்த நெய்தல் மலர்கள் மீது தன் நுண்பொடியைத் தூவிற்று என்க. ஈண்டு மணியென்றது நீல மணியை. ஈண்டு நெய்தல் என்றது நெய்தல் நிலத்தின் வெள்ளிய மணற்பரப்பு என்றும், மணி யென்றது முத்து என்றும் கொண்டு பொன்னழுத்தப்பட்ட வெள்ளிய முத்துப் போல நெய்தற்பரப்புத் தோன்றிற்று என விளக்குவாரும் உளர். அஃதாவது, மணி (முத்து) என்றது மணற்கு உவமையென்றனர். புன்னைமரம் நிற்குமிடம் எல்லாம் பொன்னிறத்ததாகவும், இடைவெளியெல்லாம் முத்துக்குவியல் போன்றும் தோன்றலின் பொன்னால் விளிம்பு கட்டி முத்துப் பதித்தவோர் அருங்கலம் போன்று தோன்றும் என்பர். பெருமழைப்புலவரின் இவ்விளக்கம்

Koviloor Digital Library

அரியதெனினும், வலிந்ததாகவே தோன்றுகின்றது. பொன்படுமணி என்பது மகரந்தம் விழுந்த நீல நிற நெய்தல் என்று நேராகவே பொருந்துவது காண்க.

'புலம்பன் வந்தெனக் கண் நல்லவாயின' என்றது, அவன் பிரிந்தெனத் தாம் அழகு இழந்தமையைச் சுட்டி நின்றது. 'என் கண்ணே' எனத் தோழி கூறினும், தலைவியின் கண்கள் அழகுபெற்றமையையே அவள் சுட்டியதாகக் கொள்க. எனவே, தலைவி கண்கள் அழகொடு விளங்குதலும் அழகு இழத்தலும் அவள் தரத்தனவல்ல என்றும், தலைவன் தலைவியுடன் இருத்தலையும் நீங்கலையும் பொறுத்தனவென்றும் உணர்த்தினாள். தலைவியின் கண்கள் தலைவன் தலைவியுடன் இருந்தபொழுது அழகு மிகுந்தும் அவன் பிரிந்தபொழுது அழகு குன்றியும் இருந்தன என்பதனைத் தன் கண்கள் மேல் ஏற்றிக் கூறினாள் தோழி என்க. தலைவன் பிரிந்தமையால் அழகிழந்த தலைவியின் கண்கள், அவன் வரைவொடு வந்தமையின் தம் தொன்னிலையை அடைவது உறுதியென்பாளாய், 'நல்ல ஆயின' என இறந்தகால வாய்பாட்டாற் கூறினாள். அன்றியும், அவன் வந்தபொழுதே அழகு பெற்றவை மணம் கூடிய பிறகு மேலும் பொலிவு பெறும் என்றாளாயிற்று. தோழியும் தலைவியும் இருதலைப்புள்ளின் ஒருயிர் போன்ற கேண்மையுடையார் எனினும் அமையும். அஃதாவது, "பண்டு நின் மெலிவு கண்டு என் கண்களும் துன்பத்தாலே பொலிவிழந்திருந்தன என்பது தோன்ற நல்ல ஆயின என்று ஆக்கச் சொல் கொடுத்துக் கூறினாள்" என்பார் பெருமழைப்புலவர்.

அருஞ்சொற்பொருள் : நுண்தாது – நுண்ணிய பூந்துகள்; உறைத்த – வீழ்ந்த; மணி – நீலமணி; முத்தென்றலும் ஒன்று; பொற்ப – அழகுற.

மேற்கோள் : பொன்னும் புன்னைத் தாதும் :

படப்பை நின்ற முடத்தாள் புன்னைப்
பொன்னேர் நுண்தாது

– அகம். 180 : 13 – 14.

Koviloor Digital Library

புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு
– அகம். 230 : 6 – 7.

நெய்தல் மலரில் புன்னைத் தாது :
மணியேர் நெய்தல் மாமலர் நிறையப்
பொன்னேர் நுண்தாது புன்னைத் தாஅம்
– நற். 78 : 2 – 3.

உள்ளுறை : புன்னை நுண் தாது .... தோன்றும் என்றது, நின் குடிப்பிறப்பும் அழகும் பண்டையினும் சிறப்பதற்குக் காரணமாயிற்று என்று வரைதற்கு வேண்டிய பொருளோடு தலைவன் வந்தமையைக் கூறியவாறாகும்.

190

தண் நறு நெய்தல் தளை அவிழ் வான் பூ
வெண் நெல் அரிநர் மாற்றினர்அறுக்கும்
மெல்லம் புலம்பன் மன்ற – எம்
பல் இதழ் உண்கண் பனி செய்தோனே.

கூற்று : தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவி ஒரு காளையொடு காதலால் பிணைப்புண்டு, அவன் பிரிவால் உடல் மெலிந்ததனை அறியாது, தலைவியின் தமர் அவள் மெலிவுக்குத் தெய்வக் குற்றமே காரணம் எனக் கருதிப் பூசை முதலியன செய்ய ஏற்பாடு செய்தமையறிந்த தோழி, தன் தாய்க்கு உண்மையை வெளிப்படுத்தித் தலைவியின் கற்பைக் காத்தது.

உரை : அன்னையே! குளிர்ச்சியும் நறிய மணமும் கொண்ட இதழ்கள் நெகிழப் பெற்ற மலர்ந்த ஒளிமிக்க நெய்தற்பூவை, வெண்ணெல்லை அறுவடை செய்யும் வினைஞர் விலக்கிவிட்டு,

Koviloor Digital Library

நெல்லை மட்டும் அறுத்தற்கு இடனான நெய்தல் நிலத்தின் தலைவனே தெளிவாக எம் பல இதழ்களை உடைய குவளை மலர் போலும் மையுண்ட கண்கள் நீரால் நிரம்பி வழியக் காரணமானவன். (எந்தத் தெய்வமும் அன்று).

உரை விளக்கம் : நெய்தற் பூவையும் வெண்ணெல்லையும் ஒரே வயலிற் கொண்ட ஊர் என்றது, இரு திணை வளமும் ஒருங்கே அமைந்த தலைவனே தலைவியை விரும்பும் தலைவன் என்று அறிவித்தற் பொருட்டாம்.

நெய்தற்பூவை வினைஞர் அறுக்காமல் விட்டதற்கு அப்பூவின் தண்மையும் நறுமையும் ஒண்மையும் அவர்களைக் கவர்ந்தமை காரணமாகும். தன்னையடைந்தவர்க்கு நன்மை செய்வது தலைவன் இயல்பேயன்றிப் பிறர் வாடும்படியான தீமை செய்யலன் என்பதனை 'நெய்தல் .... வான்பூ .... மாற்றினர் அறுக்கும்' என்பது விளக்கும். பனி செய்தலாவது நீர் நிரம்புதல். பனி, நடுக்கமும் ஆம். தலைவன் புணர்ந்து நீங்கி வாராமையின் உளம் நடுங்கவும், அந்நடுக்கமே கண்ணீராய் வெளிப்பட்டது என்க. 'அவனால் யாம் கண்ணீர் வழிய நின்றாலும், அக்கண்ணீரைத் துடைப்பானும் அவனே. ஆதலின் அவனுக்கே இவளைக் கொடுக்க என்று அன்னையைக் குறிப்பால் வேண்டினாள் தோழி. எனவே 'தெய்வத்திற்குப் பலி நேர்தலை விலக்குக' என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : தண் – குளிர்ந்த; நறு – நறுமணம் மிக்க; தளை – கட்டு; மாற்றினர் – மாற்றி, விலக்கிவிட்டு; பனி செய்தல் – கண்ணீர் நிரம்பச் செய்தல்.

இலக்கணக்குறிப்பு : மாற்றினர் – மாற்றி, முற்றெச்சம்; மன்ற – தெளிவுப் பொருள் தரும் இடைச்சொல்.

உள்ளுறை : வெண்ணெல் அரிநர் அந்நெல்லோடு விரவிய நெய்தற் பூவை விட்டு நெல்லை மட்டும் அரிவர் என்றது, ஆயமகளிராகிய எம்மொடு இவள் விளையாடும்பொழுது ஆண்டு

Koviloor Digital Library

வந்த தலைவன் வேறு யாரையும் நோக்காது இவளையே நோக்கிக் காதலித்தான். அவனை இவளும் காதலித்தாள் என்ற உள்ளுறைப் பொருள் கொண்டது என்பர்.

அரிவோர் நெய்தற்பூவை நீக்கி வெண்ணெல் அரியும் என்றது தனக்கு அடுத்தது செய்தலன்றிப் பிறர்க்கு வருத்தம் செய்யான் எனத் தலைமகன் குணம் கூறியவாறாம். (பழையவுரை)

நெய்தற் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

20. வளைப்பத்து

பாடல்தோறும் வளையென்னும் மகளிர் அணி சுட்டப்படுதலின் இப்பத்துப்பாடல்களின் தொகுதி வளைப்பத்து எனப் பெயர் பெற்றது.

191

கடற் கோடு செறிந்த, மயிர் வார் முன் கை,
கழிப் பூத் தொடர்ந்த இரும் பல் கூந்தல்,
கானல் ஞாழற் கவின் பெறும் தழையள்
வரையர மகளிரின் அரியள் – என்
நிறையரு நெஞ்சம் கொண்டு ஒளித்தோளே.

கூற்று : 'நின்னால் காணப்பட்டவள் எவ்விடத்து எத்தன்மையள்?' என்று வினாவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம் : ஊழ்வலியால் தலைமகளைக் கண்டு காதலுற்றுப் பிரிந்த தலைமகன், பின்னர் அவளைக் காணும் வாய்ப்புப் பெறாது வருந்திய பொழுது, 'நின்னைக் கவர்ந்த இளையோள் எத்தன்மையள்? அவளது வாழிடம் யாது? என வினவினான் அவனுடைய பாங்கன். அவனுக்கு விடையாகத் தலைவன் கூறியது இதுவாகும்.

உரை : மயிரொழுங்குடைய முன்கையில் கடலில் வாழும் சங்கினை அறுத்துச் செய்த வளையலை அணிந்தவளும், உப்பங்கழியில் மலர்ந்த பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த கரிய, அடர்ந்த கூந்தலையுடையவளும், கடற்கரைச்

Koviloor Digital Library

சோலையில் நிற்கும் ஞாழல் மரத்தின் அழகிய தழையால் செய்யப்பட்ட தழையுடையினை அணிந்தவளுமாகிய அவள், மலையில் வாழும் தெய்வ மகளிர் போல எய்துவதற்கு அரியவளாவாள். அவளே திண்மையால் பிறர் அழிப்பதற்கு அரிய என் நெஞ்சினையும் கவர்ந்துகொண்டு மறைந்தொழிந்தவள்.

உரை விளக்கம் : தலைவன் தலைமகளின் கையழகிலும், கூந்தலழகிலும், இடைவனப்பிலும் தன் நெஞ்சத்தைப் போக்கினமையால், அவற்றை விதந்து கூறினான் என்க. கோடு என்பது ஈண்டு ஆகுபெயராய், அதனை அறுத்துச் செய்த வளையலைக் குறித்தது. 'கோடு ஈர் இலங்கு வளை' என்றார் பிறரும். (குறுந். 31.)

மயிரொழுங்கு அழகை மிகுவித்தலின் 'மயிர்வார் முன் கை' என்றான். 'கழிப்பூ' என வாளா கூறினும், நெய்தற் பூவைக் குறிப்பால் உணர்த்திற்று. கருமையும் அடர்த்தியும் தலை மயிரின் சிறப்பையும், அஃதுடையாரின் இளமைச் செவ்வியையும் உணர்த்துவனவாதலின் 'இரும் பல் கூந்தல்' என்றான். 'கவின்பெறு தழையள்' என்றான், தன் காதலியின் தழையுடை அவள் அல்குலில் அணிந்தமையான் தனித்ததோர் அழகு பெற்றது என்ற பொருளில். இயற்கைப் புணர்ச்சியின்பின் தன்னைப் பிரிந்து தோழியரோடு கூடியவளை, தான் மீண்டும் காணவியலாமை கருதியும், அவளின் பேரழகு கருதியும், வரையர மகளிரோடு அவளை ஒப்பிட்டான்.

தன்னுடைய திண்மையான நெஞ்சினை முன்னர் யாரும் கவர இயலவில்லை என்றும், முதன்முறையாக அதனையும் கவர்ந்த பேரழகி அவளே என்றும் கூறுவான், 'நிறை யரு நெஞ்சம்' எனத் தன் உள்ளத்தைச் சிறப்பித்தான். 'நெஞ்சம் கொண்டு ஒளித்தோள்' என்றான், தன்னெஞ்சம் இன்னமும் அவளிடத்ததே என்னும் குறிப்பில்.

'வளையார் முன்கை' என்றும் பாடம். இதற்குக் 'கடற்கரைக்கண் திரையால் கொணரப்பட்ட சங்கினால் செய்யப்பட்ட வளையலையுடைய முன்கை எனப் பொருள் கொள்க.

Koviloor Digital Library

'என் அருநிறை நெஞ்சம்' என மாற்றி, என்னுடைய அழித்தற்கரிய நிறையை அழித்து என்னுடைய நெஞ்சத்தையும் கவர்ந்த என்று பொருள் கொள்வார் பெருமழைப்புலவர். அருநிறையும், நெஞ்சமும் என உம்மையை விரித்தார் அவர். மேலும், அரு நெஞ்சம், அருநிறையென ஈரிடத்தும் கூட்டுவார்.

நிறுப்ப நில்லா என் நெஞ்சினைத் தன் வயமாக்கி, மீள என்பால் வாராவகைப் பிணித்துக் கொண்டாள் என உரைப்பார் ஔவை. சு. துரை சாமிப்பிள்ளை.

அருஞ்சொற்பொருள் : கோடு – சங்கு; இரும் – கரிய; பல் கூந்தல் – அடர்த்தியான கூந்தல்; ஞாழல் – சுரபுன்னை மரம்; தழை – தழையுடை; அரமகளிர் – தெய்வ மகளிர்.

இலக்கணக்குறிப்பு : தோடு – ஆகுபெயர், வளையலைக் குறித்தது. தழை – ஆகுபெயர், தழையுடையைக் குறித்தது.

மேற்கோள் : தலைவிக்கு வரையரமகளிர் உவமையாதல் :
'நெடுவரைக் கவாஅன், சூரர மகளிரின்
பெறற்கு அரியோளே!
– அகம். 162.

192

கோடு புலம் கொட்ப, கடல் எழுந்து முழங்க,
பாடு இமிழ் பனித் துறை ஓடு கலம் உகைக்கும்
துறைவன் பிரிந்தென, நெகிழ்ந்தன,
வீங்கின மாதோ – தோழி! – என் வளையே!

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வந்துழித் தலைவி முனிந்து கூறுவாள் போலத் தன் மெலிவு நீங்கினமை தோழிக்குச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டிய செல்வம் ஈட்டுதற் பொருட்டுத் தலைமகன் சின்னாள் பிரிந்து சென்று மீண்டான். அவன் மீண்டமை குறித்த தன் மகிழ்ச்சியைத் தன் தோழியிடம், வெறுப்புடையவள் போன்ற குறிப்புத் தோன்றத் தலைவி கூறியது இது.

உரை : தோழியே! சங்குகள் கடற்கரைக் கண் வந்து உலவ, கடலில் அலைகள் எழுந்து ஆரவாரிப்ப, ஒலி மிகுந்த குளிர்ந்த துறையின்கண் கலங்கள் ஓடுமாறு செலுத்தும் துறை கெழு நாடனாகிய தலைவன் பிரிந்த பொழுதே நெகிழ்ந்து ஓடிய என் வளைகள் இப்பொழுது மீண்டும் செறிவுற்றன. (என்னே இவ்வளையல்களின் பண்பு!)

உரை விளக்கம் : கடல் அலைகள் எழுச்சியுற்று ஆரவாரித்தமையின் அவ்வலைகளால் எற்றுண்ட சங்குகள் கடல் மணலில் சுற்றிச் சுழன்றனவாதலின், 'கோடுபுலம் கொட்பக் கடல் எழுந்து முழங்க' என்றாள். கடல் எழுந்து முழங்கியது காரணம்; சங்குகள் உலாவியது காரியமாம். குளிர்ந்த துறையின்கண் கலங்களை உகைத்தோர் பரதவர் எனக் கொள்க.

'பிரிந்தென நெகிழ்ந்தன' என்றாள் தலைவன் பிரிவும் வளை நெகிழ்வும் உடன் நிகழ்ந்தமை தோன்ற. 'நெகிழ்ந்தன வீங்கின' என்றாள், பண்டு அவன் பிரிந்தமையின் நீங்கினவை இப்பொழுது அவன் மீளவும் செறிந்தன என்னும் கருத்தில். அஃதாவது, தன் அழகு தன்னோடு இருத்தல் வேண்டுமெனில், தலைவன் எப்பொழுதும் தன்னுடன் இருத்தல்வேண்டும் என்பது. அங்ஙனமிருக்கத் தலைவன் தன்னைப் பிரிந்து சென்றது தவறு என்றாளாம். திருமணத்திற்குப் பின், அவன் தன்னைப் பிரிதலை எக்காலும் எண்ணலாகாது என்பது குறிப்பு. உடல் மெலிந்ததையும், அது பின்னர்ப் பூரித்ததையும் வளையின் நெகிழ்வும் அதன் செறிவும் காட்டின. 'பிரிந்தென நெகிழ்ந்தன' என்றதற்கு ஏற்ப 'வந்தென வீங்கின' எனச் சொல் வருவித்து உரைத்துக் கொள்க.

Koviloor Digital Library

வளையல்களைத் தலைவி முனிந்தமைக்குக் காரணம் யாதெனில், தலைவியின் நிலையை அவை உடனுக்குடன் ஊரறியப் பறைசாற்றுவது என்க. நம் மறைபுலப்படுத்துவது தவிர இவ்வளையல்கட்கு வேறு வேலை இல்லையோ? என்று சினந்தாள்போல் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : கோடு – சங்கு; புலம் – கடற்கரை; கொட்ப – சுழல; கடல் – கடல் அலை; பாடு – முழக்கம்; இமிழ் – ஒலி செய்தல்; பனி – குளிர்ச்சி மிக்க; கலம் – மரக்கலம்; உகைக்கும் – செலுத்தும்; வீங்கின – செறிந்தன, இறுகின.

இலக்கணக்குறிப்பு : கொட்ப, முழங்க – செயவென் எச்சங்கள்; பிரிந்தென – செய்தென என்னும் எச்சம்; மாது, ஓ – அசைகள்.

குறிப்புப் பொருள் : 'கோடுபுலம் கொட்ப .... துறைவன்' என்றது, மணம்பேசிவந்த அயலவர் நீங்கிச் செல்ல, நம் உறவினர் யாவரும் மகிழ, அலர் கூறும் ஊரவர் சிதைய அவர் வந்தனர் என்னும் கருத்தை உட்கொண்டது.

இனி, 'பரதவர், கடல் கோடு புலம் கொட்ப எழுந்து முழங்கவும், அதனானே அலைகள் ஆரவாரிக்கும் பனித்துறையிலே மரக்கலத்தை அஞ்சாமல் செலுத்தினாற் போன்று, நம்பெருமானும், அலர் தூற்றிய நொதுமலர் மனச் சுழற்சி எய்தவும், நம் சுற்றத்தார் மகிழ்ச்சி பொங்கித் தன்னை எதிர்கொண்டழைக்கவும் 'நம்மில்லத்தே இன்னியங்கள் முழங்கவும் வரைவொடு புகுந்தான்' என்று உள்ளுறை விரிப்பார் பெருமழைப்புலவர்.

Koviloor Digital Library

193

வலம்புரி உழுத வார் மணல் அடைகரை
இலங்கு கதிர் முத்தம் இருள் கெட இமைக்கும்
துறை கெழு கொண்க! நீ தந்த
அறை புனல் வால் வளை நல்லவோ தாமே?

கூற்று : வரையாது வந்து ஒழுகும் தலைமகன் தலைமகட்கு வளை கொண்டு வந்து கொடுத்துழி, 'பண்டைவளை போலாவாய், மெலிந்துழி நீங்கா நலனுடையவோ இவை?' எனத் தலைமகள் மெலிவு சொல்லித் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைமகன் வரைந்து கொள்ளும் கருத்தில்லாமல் தொடர்ந்து வந்து தலைவியைத் தலைக்கூடிச் சென்றான். ஒருநாள் தலைவியை மகிழ்விக்க எண்ணி வளையல்களைக் கையுறையாகக் கொண்டுவந்தான். அப்பொழுது தோழி, அவன் களவு நீட்டித்தால் தலைவி வாடி மெலிவுற்றாள் என்பதனை அவன் உணரும் வண்ணம், அவனைப் பார்த்து, 'தலைவ, இவ்வளையல்கள் தலைவி உடல் மெலிந்தாலும் கழன்று வீழாத இயல்புடையனவோ?' என வினவினாள்.

உரை : வலம்புரிச் சங்குகள் உழுத நீண்ட மணற்பரப்பினை உடைய கடற்கரையில், விளக்கமும் ஒளியும் கொண்ட முத்துக்கள் இரவின் இருள் அகன்றொழியும் வண்ணம் ஒளிரும் கடற்றுறை பொருந்திய நெய்தல் நிலத்தலைவ! நீ இப்பொழுது என் தோழிக்குக் கையுறையாகத் தந்த முழங்கும் கடலில் பிறந்த சங்கினை அறுத்துச் செய்த வெண்ணிற வளையல்கள், அவள் பண்டே அணிந்துள்ள வளையல்களைக் காட்டிலும் நல்லனவோ?

உரை விளக்கம் : வலம்புரிச் சங்குகள் அரியவை; விலையுடையவை; அரிதில் மூழ்கியெடுக்கத் தக்க வலம்புரிகள், தலைவன் நாட்டில் தாமே கடற்கரைக்கு ஊர்ந்து வந்து ஒளி முத்துக்களை ஈன்றன என்பாள், 'வலம்புரி .... துறைகெழு கொண்க!' என்றாள்.

Koviloor Digital Library

'இருள்கெட இமைக்கும்' என்றதால், அக்காலம் இரவு என்பது பெறப்பட்டது. நன்மையாவது பயன்படும் தன்மையாம். 'நீ தந்த .... வளை நல்லவோ?' என்றாள், 'நின் செயலால் வாடிமெலிந்த இவள் இதனை அணிவதால் யாது நன்மை?' என்னும் பொருளில். வினா எதிர்மறைப் பொருள் தந்தது. 'அவட்குத் தேவையானது நீ செய்யும் வதுவையேயன்றி வளையன்று!' என்பது குறிப்பாகும். 'பண்டே இவள் வளையல் அணிந்துள்ளாள். அது கழன்றோடி விட்டது. நீ இப்பொழுது தரும் வளை அங்ஙனம் கழன்று ஓடாது நிலைத்திருக்குமா?' என்று நகைத்துரைத்தாள் என்க. 'அறைபுனல் வால்வளை' என்றதற்கு, ஒலிக்கின்ற நீரோட்டம் அமைந்த வெள்ளிய வளை என்று பொருள் செய்தலும் ஒன்று. நீரோட்டமென்பது நன்கு கடைந்து செய்யப்பட்ட வளையில் தோன்றும் ஒளிநலமாம். முத்து முதலியவற்றில் இந்நீரோட்டம் உண்டென்பர் அறிஞர்.

அருஞ்சொற்பொருள் : வலம்புரி – உயர்வகைச் சங்கு; வார் – நீண்ட; இமைத்தல் – ஒளிர்தல்; அறைபுனல் – ஒலிக்கும் கடல்; கொண்கன் – கடற்கரைத் தலைவன்; வால் – வெண்மையான.

இலக்கணக்குறிப்பு : அடைகரை, இலங்குகதிர், அறைபுனல் என்பவை வினைத்தொகைகள். அறைபுனல் – கடலைக் குறித்தலின் அன்மொழித் தொகையுமாம். நல்லவோ? – ஓகாரம் எதிர்மறை.

மேற்கோள் : வலம்புரி மணல் உழுதல் :

'துறைமேய் வலம்புரி தோய்ந்து மணல் உழுத
தோற்றம்'

– சிலம்பு. 7 : 8.

உள்ளுறை : வலம்புரி – தலைவன்; அடைகரை – தலைவி; முத்து – தலைவனின் அருள்; இருள் – தலைவியின் துயர். இங்ஙனம் கொண்டு, 'நீ களவு மணம் செய்து கொண்டமையால் அலர் மொழிகளால் அல்லற் படும் நிலைமையாகிய பெரிய இருள் கெட்டொழியும்படி, தலைவியை வதுவையில் கொள்க' எனப் பொருள் விரிக்க.

Koviloor Digital Library

'முத்தம் இருள்கெட இமைக்கும் துறைகெழு கொண்க' என்றது, 'இவளுக்கு வரும் தீங்கை விரைவில் நீக்கி வரைந்து கொண்டு இவளை ஒளிபெறச் செய்ய வேண்டும்' என்ற கருத்தையும் உள்ளடக்கியது என்க.

194

கடற் கோடு அறுத்த, அரம் போழ் அவ் வளை
ஒண் தொடி மடவரல் கண்டிகும்; கொண்க!
நல் நுதல் இன்று மால் செய்தென,
கொன் ஒன்று கடுத்தனள், அன்னை அது
நிலையே.

கூற்று : பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு மனைக்கண் நிகழ்ந்தது கூறி, செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியை வரைந்து கொள்ள முயலாது களவினை நீட்டித்தான். அவன் ஒரு நாள் பகற் பொழுதில் தலைவியைச் சந்தித்து மீளும் பொழுது, தோழி அவனை நெருங்கித் தலைவியின் இல்லத்தில் நிகழ்ந்தது கூறித் தலைவியை விரைவில் மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தியது.

உரை : கொண்கனே! கடலில் தோன்றிய சங்கினை அறுத்து வாளால் பிளந்து உருவாக்கிய அழகிய வளைகளையும் பிற தொடிகளையும் அணிந்த மடப்பம் பொருந்திய என் தோழியின் நிலையைப் பார்! அவளுடைய நல்ல நுதல் இன்று ஒளியிழந்து வேறுபட்டமையால் அன்னை அதற்கு வேறு காரணம் உண்டுகொல் என்று ஐயுற்றனள். இஃது எம் மனைக் கண் நிகழ்ந்தது. (நீ இதற்கு ஏற்பன செய்ய முயல்க.)

Koviloor Digital Library

உரை விளக்கம் : தலைவியின் நெற்றி முன்னர் என்றும் இல்லா வகையில் மாறுபட்டு அன்னைக்கு மன மயக்கம் செய்தமையின் 'நுதல் இன்று மால் செய்தென' என்றாள். அன்னை காரணம் ஆராயத்தொடங்கினளாதலின் இனி இல்லின்கண் செறித்துக் காவல் செய்வது உறுதி என்பதுபடக் 'கொன்னொன்று கடுத்தனள்' என்றாள். 'கொன்' அச்சப்பொருள் கொண்ட சொல். 'என் மகட்கு யாது நேருமோ' எனத் தாய் அஞ்சுவது இயல்பாதலின் இங்ஙனம் கூறினாள். 'இது இப்பொழுதுள்ள நிலை; இனி நிலைமை என்ன வாகுமோ!' என அச்சத்தை வெளிப்படுத்தி வரைவு முடுக்கினாள் தோழி என்க.

அருஞ்சொற்பொருள் : போழ் அவ்வளை – போழ்தலாவது பிளத்தல்; மடவரல் – பொருந்தியவள்; கொண்கன் – கடற்கரை நாட்டுத் தலைவன்; மாஅல் – மயக்கம்; கொன் – அச்சம்; கடுத்தனள் – ஐயுற்றனள்.

இலக்கணக்குறிப்பு : கண்டிகும் – முன்னிலை வினை; இகும் – முன்னிலை அசை; கடுத்தனள் – கடியென்னும் உரிச் சொல்லடியாகத் தோன்றிய வினைமுற்று.

மேற்கோள் : சங்கினை அறுத்து வளை செய்தல் :

'என் கைக் கோடீர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குகரிசில்'

– குறுந். 31.

அரத்தால் போழ்ந்து வளை செய்தல் :

'வேளாப் பார்ப்பான் வாளரம் துமித்த வளை'

– அகம். 24.

Koviloor Digital Library

195

வளை படு முத்தம் பரதவர் பகரும்
கடல் கெழு கொண்கன் காதல் மடமகள்
கெடல் அருந் துயரம் நல்கி,
படல் இன் பாயல் வௌவியோளே.

கூற்று : வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிந்த தலைமகன் தனித்து உறைய ஆற்றானாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைமகளை மணம் செய்துகொள்ளத் தேவையான பொருளை ஈட்டப் பிரிந்து சென்றான். அப்பொழுது, அவளைப் பிரிந்த துயரம் தாளாமல் இங்ஙனம் தனக்குள் கூறி வருந்தினான்.

உரை : சங்குகள் ஈன்ற முத்துக்களைப் பரதவர்கள் விலை கூறி விற்றற்கு இடமான கடற்கரைக்குத் தலைவன் பெற்றெடுத்த அன்புக்குரிய இளமகள் தீர்தற்கு அரிய துன்பத்தினை எமக்கு நல்கினாள். நாம் இனிதே படுக்கையிற் கிடந்து உறங்கும் தன்மையை அவள் கவர்ந்து கொண்டனள்.

உரை விளக்கம் : சிப்பியிற் பிறக்கும் முத்தினும் சங்கிற் பிறந்த முத்துச் சிறந்தது என்பர். எனவே, பரதவரின் செல்வ வளம் பாராட்டுபவன் ‘வளைபடு முத்தம் பரதவர் பகரும்’ என்றான். பகர்தலாவது, பிற நிலத்தவர்க்கு விற்றலாம். தன் காதலி பெறுதற்கு அரியவள் என்பதுபடக் ‘கொண்கன் காதல் மடமகள்’ என்றான். கெடலரும் துயரமாவது, துயரத்தை அவனுக்கு நல்கிய அவளாலன்றிப் பிற யாராலும் தீர்க்கமுடியாத துயரமாகும். ‘மடவரல் தன்னோய்க்குத் தானே மருந்து’ என்றார் பிறரும். அவளைப் பிரிந்த ஏக்கத்தால் உறக்கம் இழந்தானாதலின், அவள் தன் உறக்கத்தைக் கவர்ந்ததாகக் கூறினான். இனி, அவளை மணத்திற் பெற்று இடையறாத இன்பம் துய்த்துப்பின் உறங்குவதல்லது வேறு பணியில்லை என உறுதிபூண்டான் எனலுமாம்.

Koviloor Digital Library

"சங்கென்றது வலம்புரிச் சங்கினை என்க. இது தலைவியின் குடியுயர்வு கூறியது என்க. பகருதல் – விலைக்கு விற்றல். எனவே, தலைவிக்கு முலைவிலையாகப் பொருள் பெற்றுக் கொண்டே அவளை வழங்கும் வழக்கமுடையர் என அவர் மரபு நினைத்தவாறு. எனவே நாம் சிறந்த பொருளை வழங்கி அவளைப் பெறுதல் முறையே.... இவ்வாறு பொருட்புறத்தே தோன்றுவன இறைச்சிப் பொருள் என்க" என்பார் பெருமழைப்புலவர்.

'வளைபடு முத்தத்தை விலைப்பொருள் கொண்டு விற்கும் பரதவர் தலைவன் மகளாதலால் தம் குலநடைக்கேற்பத் தானும் என்பால் துயிலைக் கொண்டு அதற்கு ஈடாகக் கெடலரும் துயரம் நல்கினள் என்ற நயமுணர்க' என்று விளக்கம் தருவார் அவர்.

அருஞ்சொற்பொருள் : வளை – சங்கு; படு – தோன்றுகிற; கெடலரும் – தீர்த்தற்கு அரிய; பாயல் – உறக்கம்; படல் – கண்படல்; வெளவியோள் – கவர்ந்து கொண்டோள்.

இலக்கணக்குறிப்பு : கெழு – கேழ் என்னும் உரிச்சொற்றிரிபு.

மேற்கோள் : பாயலை வெளவுதல் :
பண்பும் பாயலும் கொண்டனள்
– ஐங். 176.

குறிப்புப் பொருள் : 'பெறுதற்கரிய முத்தைப் பரதவர் விற்கும் கடல்கெழு கொண்கன் என்றது, அவர்கள் தாராரல்லர்; யாம் அவர்களுக்கு வேண்டுவன கொடுத்துக் கொள்ள மாட்டாது வருந்துகின்றோம் என்பதாம்.' (பழையவுரை).

Koviloor Digital Library

196

கோடு ஈர் எல் வளை, கொழும் பல் கூந்தல்,
ஆய் தொடி, மடவரல் வேண்டுதி ஆயின் –
தெண் கழிச் சேயிறாப் படூஉம்
தண் கடற் சேர்ப்ப! வரைந்தனை கொண்மோ.

கூற்று : குறை மறுக்கப்பட்ட தலைமகன் பின்னும் குறைவேண்டிய வழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தோழியின் உதவியோடு தலைமகளைக் கூடக் கருதிய தலைமகன் அவளை உதவுமாறு வேண்டினான். அதற்கு உடம்படாத தோழியிடம் அவன் மீண்டும் குறையிரந்த போது அவனுக்கு அவள் கூறிய மறுமொழி இது.

உரை : தெள்ளிய நீரைக் கொண்ட உப்பங்கழிகளில் செந்நிற இறால் மீன்கள் அகப்படும் குளிர்ந்த கடற்கரைக்குத் தலைவனே! கடற் சங்கினை அறுத்துச் செய்த ஒளிமிக்க வளைகளையும், கொழுவிய அடர்ந்த கூந்தலையும், ஆய்ந்து எடுக்கப்பட்ட குறுந்தொடிகளையும் உடைய இள நங்கையை நீ விரும்புவது உண்மையாயின், அவளை உடன் மணந்து கொள்வாயாக!

உரை விளக்கம் : 'கோடு ஈர் .... வேண்டுதி ஆயின்' என்றாள், 'நீ உண்மையிலேயே அவளை விரும்பினை யாயின்' என்னும் பொருள்பட. அவளை வரைந்து கொள்ளல் தவிர வேறு வழியில்லை என்ற கருத்துப்பட 'வரைந்தனை கொண்மோ' என்றாள்.

வாளால் போழ்ந்து வளை செய்யப்படுதலாலும், இயல்பாகவே ஒளியுடைமையானும் 'கோடீர் எல் வளை' என்றாள். அடர்த்தி உடைய தலைமயிரைப் 'பல் கூந்தல்' எனச் சிறப்பித்தாள். ஆய்தொடி, தான் கொண்டுள்ள பல தொடிகளுள்ளும் ஆய்ந்து

Koviloor Digital Library

எடுத்து அணிந்த தொடியாம். அழகிய தொடி எனலும் ஒன்று. வளையும் தொடியும் நுண்ணிய வேறுபாடுடைய அணி வகைகளாம்.

அருஞ்சொற்பொருள் : எல் - ஒளியுடைய; கொழும் - செழிப்பான; சேயிறா - செந்நிறமுடைய இறால் மீன்; படூஉம் - அகப்படும்.

இலக்கணக்குறிப்பு : வரைந்தனை - (வரைந்து) முற்றெச்சம்; கொண்மோ - 'மோ' முன்னிலை அசைச்சொல்.

உள்ளுறை : 'தெண்கழிச் சேயிறாப்படூஉம் சேர்ப்ப' என்றது, தான் நினைத்ததனை அகப்படுத்தும் ஆற்றலுள்ளவன் தலைவன் என்பதனை உள்ளுறுத்ததாகும். கழியின்கண் சேயிறாவைப் பிடிக்க விழையும் பரதவர் அதற்குரிய வலை முதலியன வீசி அம்மீனைப் பிடிப்பர். அது போன்று தலைவனும் சான்றோரைத் தலைவியின் தமர்பால் போக்கித் திருமணத்தில் அவளைக் கொள்ள வேண்டும் என்பது.

197

இலங்கு வளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி,
முகம் புதை கதுப்பினள், இறைஞ்சி நின்றோளே-
புலம்பு கொள் மாலை மறைய -
நலம் கேழ் ஆகம் நல்குவள் எனக்கே.

கூற்று : தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் தலைவியது நிலைமை கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம் : ஊழ்வலியால் தலைமகளைத் தலைமகன் கூடிப் பிரிந்தபின், தலைவி தானே கூறிய குறியிடத்திலே வந்து தலைவனுக்காகக் காத்து நின்றாள். அவளைக் கண்ணுற்ற தலைமகன் இங்ஙனம் தன்னுள்ளே கூறி மகிழ்ந்தான்.

Koviloor Digital Library

உரை : ஒளியுமிழும் தன் கைவளைகள் ஒலிக்க நண்டுகளை அலைத்து மகிழ்வாளாய், தன் கூந்தலைக் கொண்டு தன் முகத்தை மறைத்து நாணி இறைஞ்சி நிற்கும் என் காதலி, இத்தனிமை மிகு மாலைப்பொழுது மறைந்தவுடன் இன்பத்திற்கு இருப்பிடமான தன் மார்பகத்தினை எனக்கு வழங்குவாள்.

உரை விளக்கம் : 'அலவன் ஆட்டி .... இறைஞ்சி நின்றோள்' என்றான், கடற்கரையில் நண்டுகளை அலைத்து விளையாடுவதுபோல் பிறர்க்குக் காட்டித் தலைவன் வரவினை ஆவலுடன் எதிர்பார்த்து நின்று அவன் வரவை உணர்ந்தாளாதலின். இறைஞ்சியதற்குக் காரணம் பெண்மைக்கே உரிய காதல் கெழுமிய நாணமாகும். 'புலம்புகொள் மாலை' என்றான், மாலைப்பொழுது பிரிந்திருக்கும் காதலர்க்குத் தனிமையை மிகுத்துத் துயரம் செய்யும் பொழுது என்பதால். தனித்துக் கூட விழையும் காதலர்க்குக் கதிரவனொளி இடையூறாதலின், 'மாலை மறைய' என்றான். அதன் மறைவை ஆவலுடன் எதிர்பார்த்தான் என்க. தலைவி, தான் குறித்தவாறே குறியிடம் வந்தமை, தன்னைச் சேய்மையிற் கண்டவுடனே நாணி முகம் புதைத்தமை ஆகியன கொண்டு தன்னைக் கூடி முயங்குவது உறுதி எனவுணர்ந்தானாதலின், 'ஆகம் நல்குவள் எனக்கே' என்றான்.

'கதுப்பினள் ஆயத்து நின்றோளே' என்பதும் பாடம். இதற்கு, இப்பொழுது தன் தோழியரோடு கூடி விளையாடும் என் காதலி, பொழுது சாய்ந்ததும் தன் நலம் பொருந்திய மார்பினை எனக்கு நல்குவாள் எனப் பொருள் கொள்க. 'இறைஞ்சி நின்றோள்' என்ற பாடத்திற்குள்ள அத்துணைப் பொருட் சிறப்பு இப்பாடத்திற்கு இல்லையாதலை உணர்க.

அருஞ்சொற்பொருள் : இலங்கு – ஒளிவிடுகின்ற; தெளிர்ப்ப – ஆரவாரிக்க; கதுப்பு – தலைமுடி; இறைஞ்சி – தலையைத் தாழ்த்தி; புலம்பு – தனிமை.

Koviloor Digital Library

மேற்கோள் : தலைவி அலவானட்டல் :

'நன்னர் மாலை நெருநை நின்னொடு
சில விளங்கு எல்வளை ஞெகிழ
அலவன் ஆட்டுவோள் சிலம்பு
ஞெமிர்ந்தெனவே'

– நற். 363.

198

வளை அணி முன் கை, வால் எயிற்று அமர்
நகை,
இளையர் ஆடும் தளை அவிழ் கானல்,
குறுந் துறை வினவி நின்ற
நெடுந் தோள் அண்ணற் கண்டிகும் யாமே.

கூற்று : பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கி, பின்பு ஆற்றாமையே வாயிலாக வந்த தலைமகனை எதிர்ப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பரத்தையர் இல்லில் நெடுநாள் தங்கி இன்பம் நுகர்ந்தான். ஆயினும் தன் மனைவியைப் பிரிந்த ஏக்கம் அவனைப் பற்றியது. அவ்வேக்கமே துணையாகத் தலைவியை மீண்டும் கூடும் விருப்புடன் அவன் வந்த போது, அவனை எதிர்ப்பட்ட தோழி, உவப்புடன் தலைமகள்பால் இங்ஙனம் கூறி அவனொடு கூட்டுவித்தாள்.

உரை : வளையணிந்த முன்கையையும், வெண்ணிறப் பற்கள் விளங்கும் முறுவலையும் கொண்ட இளம் பெண்கள் விளையாடி மகிழும் சிறப்புடையதும், இதழ்விரியும் மலர்கள் மிகுந்ததுமாகிய கடற்கரைச் சோலியிடத்தே நம் சிறிய துறை யாண்டுளது என வினவி நின்ற நெடிது உயர்ந்த தோள்களை உடைய நம் தலைவரை யாம் மீண்டும் இங்கே கண்டோம்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : 'வளையணி முன்கை .... இளையர்' எனக் குறிக்கப்பட்டோர், களவுக் காலத்தில் தலைமகளோடு விளையாட்டயர்ந்த ஆயத்தோர் என்க. களவுக் காலத்தில் தலைமகன் தன் காதலியைக் குறியிடத்திற் காண வந்து, ஆய மகளிரை வினவி நின்ற பழைய இனிய நிகழ்வினை இப்பொழுது நினைவூட்டி, அவனொடு தலைமகளைக் கூட்ட நினைத்தாள் தோழி என்க. அன்று குறுந்துறை வினவி நின்றபொழுது அவள்பால் கொண்டிருந்த அன்பிற் சிறிதும் குறையில்லனாய் இன்றும் அவளைக் கூடும் விருப்புடன் தானே மீண்டான் என்பதுபட, அவனை 'நெடுந்தோள் அண்ணல்' எனப் பாராட்டினாள். 'கண்டிகும் யாமே' என்றாள் அவன் குறை முடிக்கத் தான் உடம்பட்டமை தோன்ற. கண்டார் இகழ்வனவற்றைக் காதலன் செய்யினும், கொண்டானையல்லால் அறியாதவர் கற்புடை மாதராதலின், தவறுணர்ந்து மீண்ட கணவனை எதிர் கொண்டு மகிழ்தல் கடன் என்பது தோழியின் கருத்தாம்.

அருஞ்சொற்பொருள் : தளை அவிழ் - மலர்கின்ற; கானல் - கடற்கரைச் சோலை; இளையர் - இளம் பெண்டிர்; குறுந்துறை - சிறிய நீராடும் துறை; கண்டிகும் - கண்டோம்.

மேற்கோள் : பெண்கள் கானலில் விளையாடல் :

எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டளை கெண்டி
ஞாழல் ஓங்கு சினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ் கயிற்று ஊசல் தூங்கி
. . . .

- அகம். 20.

இறைச்சி : 'தளையவிழ் கானல்' என்றாள் அவனைக் கண்டுழி நின் நெஞ்சம் கட்டவிழ்ந்து அவன் மேலதாயிற்று என்று நினைவூட்டற்கு (பெருமழைப்புலவர்).

Koviloor Digital Library

199

கானல் அம் பெருந் துறைக் கலிதிரை திளைக்கும்
வான் உயர் நெடு மணல் ஏறி, ஆனாது
காண்கம் வம்மோ - தோழி!
செறி வளை நெகிழ்த்தோன் எறி கடல் நாடே!

கூற்று : தலைமகன் ஒருவழித் தணந்துழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்கும் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் தலைமகன் ஊரலர் நீங்கும்பொருட்டுச் சில நாள் தன்னூரில் தங்கினானாக, அப்பிரிவினைப் பொறுக்கலாற்றாது தலைமகள் வருந்தியது கண்டு, அவளை ஆற்றுவிக்கும் தோழி கூறியது.

உரை : தோழியே! உன் செறிவுற்ற வளைகள் கழன்று வீழுமாறு செய்த தலைவனுடைய எறியும் அலைகளைக் கொண்ட நாட்டினைக் கடற்கரைச் சோலைக்கண் அமைந்த அழகிய துறையில் ஆரவாரிக்கும் திரைகள் வந்து தழுவி நீங்கும் வானளாவிய நெடிய மணல் மேட்டின் மேல் எறி நின்று இடையறாது கண்டு மகிழ்வோம். என்னுடன் வருக.

உரை விளக்கம் : செறிவளை நெகிழ்த்தோன் என்றாள் அவன் பிரிவினால் தலைவி மெலிந்தாள் ஆதலின். 'ஆனாது காண்கம்' என்றாள் அவ்வாறு காண்பது தலைவிக்குத் தலைவனையே காண்பது போன்றதோர் ஆர்வம் மிகவளிக்கும் ஆதலின். வானுயர் நெடுமணல் தலைவியின் ஊரகத்தது. அதன்மேல் ஏறி நின்று தலைவன் நாட்டைக் காணலாகும் என்றது, அவர்கள் கண்ணுக்குப் புலனாகும் இடத்தவனே அவன் ஆதலின், அவன் வருவது எளிது என்பது பற்றியாகும். அங்ஙனம் அண்மையிலிருந்தும் அவன் வரவில்லை என்பது குறிப்பு. 'கலிதிரை திளைக்கும் வான் உயர் நெடு மணல்' என்றாள் தலைவியின் நலனுண்டு துறந்த தலைவன், மீண்டும் வந்து

Koviloor Digital Library

அவளைத் தழுவி முத்தமிட்டுத் திளைத்தலை நினைத்திலன் என்னும் குறிப்பில்.

அருஞ்சொற்பொருள் : கலிதிரை – ஆரவாரிக்கும் அலை; திளைக்கும் – தழுவும்; ஆனாது – இடைவிடாது; காண்கம் – காண்போம்; எறிகடல் – அலை எறியும் கடல்.

இலக்கணக்குறிப்பு : காண்கம் – தன்மைப் பன்மை வினைமுற்று; வம்மோ – மோ – முன்னிலை அசை.

மேற்கோள் : மணல் முகட்டின் மேலேறிக் கானல் :
குன்றின் தோன்றும் குவவுமணல் ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ –
– நற். 235.

தலைவன் நாட்டுக் குன்றம் கண்டு ஆறுதல் பெறல் :
கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்தின் தோன்றி
மாலை மறையும் அவர் மணிநெடும் குன்றே
– குறுந். 240.

அன்னாய் வாழி வேண்டன்னை நம் படப்பைப்
புலவுச்சேர் துறுகல்லேறி அவர் நாட்டுப்
பூக்கெழு குன்றம் நோக்கி நின்று
மணிபுரை வயங்கிழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்தவள் உற்ற நோயே
– ஐங். 210.

Koviloor Digital Library

200

இலங்கு வீங்கு எல் வளை! ஆய்நுதல் கவின,
பொலந்தேர்க் கொண்கன் வந்தனன் இனியே;
விலங்கு அரி நெடுங் கண் ஞெகிழ்மதி;
நலம் கவர் பசலையை நகுகம் நாமே!

கூற்று : உடன்போக்குத் துணிந்தவழி, அதற்கு இரவின்கண் தலைமகன் வந்தது அறிந்த தோழி, தலைமகளைப் பாயல் உணர்த்திச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகளின் தமர் அவள் மேனி வேறுபாடு கண்டு இற்செறித்தவழித் தலைவன் தலைவியை வழக்கம்போற் கண்டு அளவளாவும் வாய்ப்பை இழந்தான். இதனால் தலைவியின் கற்பைக் காக்கக் கடமை பூண்ட தோழி, தலைவியைத் தலைவனோடு உடன்போக்கில் அனுப்ப முடிவு செய்தாள். அதற்கு உடம்பட்ட தலைவன் இரவில் வந்தபொழுது தலைவியைத் துயிலெழுப்பிய தோழி அவட்கு மகிழ்ந்து சொல்லியது.

உரை : விளக்கமும், செறிவும் ஒளியும் உடைய வளையலை யணிந்த என் தோழியே! தன் இயல்பான அழகு அழியப் பெற்ற நெற்றி, மீண்டும் அழகுபெறுமாறு, பொற்றேர் ஊரும் நம் தலைவன் வந்தனன்! செவ்வரிகள் குறுக்கே கிடக்கும் நின் நெடிய கண்களைத் திறந்து எழுக. நின் நலத்தினைக் கவர்ந்து சென்ற பசலை நோயை இகழ்ந்து சிரிப்போம் வருக.

உரை விளக்கம் : தலைவி அணிந்திருந்த வளைகள் வெண்சங்காலானவை என்பது தோன்ற, 'இலங்குவளை' என்றும் எல்வளை என்றும் குறித்தாள் தோழி. அப்போது தலைவியின் வளைகள் நெகிழ்ந்திருந்தனவெனினும், இனி அவை செறிதல் உறுதியாதலின் 'வீங்கு வளை' என விளித்தாள். இனி, வீங்கு என்பதனை மிகுதி செய்யும் அடையாக்கி, மிக்க ஒளி உடைய

Koviloor Digital Library

வளையல் என்று பொருள் உரைத்தலும் பொருந்தும். ஆய்தல் குறைதலாதலின், தலைவன் பிரிவாலும் இற்செறிப்பாலும் ஒளி மழுங்கிய தலைவியின் நெற்றியை ஆய்நுதல் என்றாள். அதன் கவின் தலைவன் நீங்கத் தானும் நீங்கிச் சென்றதாதலின், இப்பொழுது அவன் உடன் கொண்டேகத் தேரொடு வந்தமையால் இனி அக்கவின் உடன் மீளல் ஒருதலையென்பதுபடக் 'கவின .... கொண்கன் வந்தனன்' என்றாள். 'நம் உள்ளம் நெகிழும் வண்ணம் நம் தலைவர் வந்தார். நீ இனி நின் கண்கள் நெகிழ்க!' என்றாள். நெகிழ்தலாவது, மூடியவை மலர்தல். இது காறும் தலைவியின் உடம்பைத் தனக்கு நிலையான இடமாகக் கொண்டு இறுமாந்திருந்த பசலை ஓடுவதனைக் கண்டு அதனை எள்ளி நகையாடுவோம் என்பாள், 'பசலையை நகுகம் நாமே!' என்றாள். இதனால், இனி நின் கவின் நினக்குரித்தாக, நம் காதலர் தம்மூர்க்கண் நின்னை மணந்து என்றும் பிரிவரிதாகிய காதலொடு வாழ்வார் என்று மகிழ்ந்துரைத்தாளாயிற்று. எல்வளை! பொற்றேர்க் கொண்கன் வந்தனன்; பசலையை நகுகம்; கண் ஞெகிழ்தி என இயைத்துப் பொருள் காண்க.

அருஞ்சொற்பொருள் : இலங்கு – ஒளிரும்; எல் – விளக்கம்; பொலந்தேர் – பொன்னால் ஆன தேர்; கொண்கன் – நெய்தற் றலைவன்; விலங்குதல் – குறுக்கே கிடத்தல்; ஞெகிழ்மதி – திறப்பாய்; நகுகம் – எள்ளிச் சிரிப்போம்.

இலக்கணக்குறிப்பு : எல் வளை – அன்மொழித் தொகை; பொலந்தேர் – பொன் 'பொலம்' ஆனது செய்யுள் விகாரம்; மதி – முன்னிலை அசை; நகுகம் – தன்மைப் பன்மை வினைமுற்று.

வளைப் பத்து முற்றிற்று

நெய்தல் முற்றிற்று

அம்மூவனார்

Koviloor Digital Library

மூன்றாவது
குறிஞ்சி

(கபிலர்)

21. அன்னாய் வாழிப் பத்து

இதன்கண் உள்ள அனைத்துச் செய்யுட்களும் 'அன்னாய் வாழி' என்றே தொடங்குதலான் அன்னாய் வாழிப் பத்து எனப்பட்டது.

201

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! என்னை –
தானும் மலைந்தான்; எமக்கும் தழை ஆயின;
பொன் வீ மணி அரும்பினவே –
என்ன மரங் கொல், அவர் சாரலவ்வே!

கூற்று : நொதுமலர் வரைவின்கண் செவிலி கேட்குமாற்றால் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நிலை குறித்துச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகள் ஒரு காளையைக் காதலித்துக் கற்புக் கடம் பூண்டது அறியாது அயலவர் பெண் கேட்டு வந்தனர். அதனை உணர்ந்த தலைவி தன் நிலையைத் தன் தாய்க்கு உணர்த்தும் குறிப்புடன் தோழிக்குச் சொல்லியது.

Koviloor Digital Library

உரை : அன்னையே! என் சொல்லை விரும்பிக்கேள். நீ நீடூழி வாழ்க! அன்னையே! என் காதலனது மலைச் சாரலில் உள்ள மரங்கள் பொன்னிற மலர்களையும் மணிபோலும் அரும்புகளையும் உடையன. என் தலைவனும் அவற்றை விரும்பி அணிந்தான். அம்மரத்தின் தழைகள் எமக்கும் உடுத்துக்கொள்ளும் தழையைத் தந்தன. இம்மரங்கள் எவ்வகையின வென்றறிவாயெனில் கூறுக.

உரை விளக்கம் : பெண்கேட்டு வந்தாரும் அவர்க்கு உடம்பட்ட அன்னையும் தன்னிலையை உணர்தலை நோக்கமாகக் கொண்டாளாதலின், தலைவனை 'என் ஐ' என்று கூறிப் பின்னும் 'அவர்' எனத் தனக்கு அவன்பாலுள்ள மதிப்புத் தோன்ற ஒருவரைக் கூறும் பன்மைச் சொல்லானும் சுட்டினாள். அவன் கையுறையாகத் தந்த அவன் நாட்டுத் தழையை ஏற்றுக் கொண்டதனை அறிவிக்க 'எமக்கும் தழையாயின' என்றாள். தன் காதலன் நாட்டு மரமாதலின் அதன் மலரையும் அரும்பையும் பொன்னென்றும் மணியென்றும் புகழ்ந்தாள். அம்மரங்கள் இன்னவை எனத்தான் நன்கு அறிந்தவளேனும், என்ன மரம்கொல் என வினவினாள், அவை புதியன என்பது படவும், தம் நாட்டகத்து இல்லாதன என்பது தோன்றவும். 'நொதுமலர் வரைவைத் தடுத்தல் நின் கடன்' எனத் தன் தோழியை வற்புறுத்தியபடியாம். அம்மரமாவது வேங்கையாம்.

வேங்கைப்பூ அரும்பான நிலையில் மாணிக்கம் போன்றிருந்தது. அதுவே மலர்ந்த நிலையில் பொன்னிறம் பெற்றது என்க.

தலைவி தன் தோழியை 'அன்னை' என்றும் தலைவனை 'என்னை' என்றும் சுட்டுவது தொன்னெறி மரபு என்பார் தொல்காப்பியர். (பொருள். 246).

'என்னை தானும் மலைந்தான்' என ஒருமையிற் கூறிப்பின் 'அவர் சாரல்' என்றது அவன் மலையிலுள்ளார் யாவரையும் உளப்படுத்திய வகையில் என்பார் பெருமழைப்புலவர். எனவே இது ஒருமைப் பன்மை மயக்கம் அன்றென்பது.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : என்னை - என் + ஐ - என் காதலன்; மலைந்தான் - அணிந்தான்; தழை - தழையாடை; மணி - மாணிக்கம், இரத்தினம்; என்ன - எவ்வகை; வீ - மலர்.

இலக்கணக்குறிப்பு : தழை - தழையுடையைக் குறித்தலால் ஆகுபெயர்; கொல் - அசைநிலை, ஐயப்பொருள் தருவது.

மேற்கோள் : வேங்கையின் வீயும் அரும்பும் :
மன்ற வேங்கை மணநாட் பூத்த
மணியேர் அரும்பின் பொன்வீ தாஅய்
- அகம். 232.

202

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் ஊர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற -
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே.

கூற்று : தலைமகன் வரைதல் வேண்டித் தானே வருகின்றமை கண்ட தோழி உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குக் காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியை மணந்து கொள்வது காரணமாகத் தேரூர்ந்து வருதலைக் கண்ட தோழி அதனைத் தலைவிக்கு மகிழ்ந்து அறிவித்தது.

உரை : அன்னையே! நீ வாழ்க! யான் கூறுவதனை விரும்பிக்கேள். அன்னாய்! நம் காதலனாகிய நெடிய மலைநாட்டுக்குத் தலைவன் தேரை ஈர்த்து வரும் குதிரைகளும் நம்மூர் அந்தணச் சிறார் போலவே தாமும் குடுமித் தலையை உடையவாயின. அதனைக் காண்பாயாக.

Koviloor Digital Library

உரை விளக்கம் : பார்ப்பனச் சிறார் முன்குடுமி கொண்டிருந்தனராதலின் அன்னார் குடுமியைத் தலைவன் குதிரையின் தலையாட்ட அணிக்கு உவமை கூறினாள்.

தாமும் என்ற பன்மைக் குறிப்பால் தலைவன் ஒன்றுக்கு மேற்பட்ட குதிரைகள் பூட்டிய தேரில் வந்தமை பெறப்பட்டது. தலைய என்னும் பன்மைக் குறிப்பையும் காண்க. 'நெடுமலை நாடன்' என்றாள், அவன் மலை போலவே தானும் நெடுந்தகையாயினன் என்ற குறிப்பில். அன்றியும் அவன் செல்வ வளத்தைச் சுட்டியதுமாம். வற்புறுத்தல் இன்றித் தானே வந்தான், ஆதலான் அவன் நெடுந்தகையானான் என்க.

பார்ப்பனச் சிறார் குடுமித் தலையர் என்பதனை 'இனிக் குடுமியும் குசையும் கூறிற்றிலன், அது முன்னரும் பின்னரும் வருதலான்' என்ற பேராசிரியர் உரையால் அறிக. (தொல். மரபு. 70).

குடுமியை உளையோடு உவமித்தலைப் 'புல்லுளைக் குடுமிப் புதல்வன்' என்றதனாலும் அறிக. (புறம். 273).

'மானுளை அன்ன குடுமி' (புறம். 310) என்பதும் காண்க.

அருஞ்சொற்பொருள் : குறுமக - இளஞ்சிறார்; மா - குதிரைகள்.

இலக்கணக்குறிப்பு : மன்ற - அசை, தெளிவுப் பொருள் தந்தது.

மேற்கோள் : தலைவன் பல குதிரைகள் பூட்டிய தேரில் வருதல் :

நிரல் இயைந்து ஒன்றிய செலவின்
செந்தினைக்
குரல் வார்ந் தன்ன குவவுத் தலை நல்நான்கு
வீங்கு சுவல் மொசியத் தாங்கு நுகம் தழீஇ
- அகம். 400.

Koviloor Digital Library

203

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைத்
தேன் மயங்கு பாலினும் இனிய – அவர் நாட்டு
உவலைக் கூவற் கீழ
மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே.

கூற்று : உடன் போய் மீண்ட தலைமகள், 'நீ சென்ற நாட்டு நீர் இனிய அல்ல; நீ எங்ஙனம் நுகர்ந்தாய்?' எனக் கேட்ட தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம் : தலைவி தன் காதலனொடு உடன் போக்கிலீடுபட்டுப்பின் தன்னூர் மீண்டபோது, அவள் காதலன் ஊரில் கிடைக்கும் நீரின் நுகரலாகாச் சிறுமைபற்றித் தோழி வினவிய போது தலைவி அவட்குச் சொன்னது.

உரை : அன்னையே! நீ வாழி! யான் சொல்வதனை விரும்பிக் கேள். அன்னையே! நம் காதலர் நாட்டில் உள்ள உதிர்ந்த தழையால் மூடப்பட்ட கிணறுகளின் அடியில், விலங்குகளால் உண்ணப்பட்டு எஞ்சி நிற்கும் கலங்கிய சின்னீரும் நம்முடைய வீட்டின் புறத்தே உள்ள தோட்டத்தில் கிடைக்கும் இனிய தேனொடு கலந்த ஆவின் பாலினும் மிக்க இனிமையுடையதாகும்.

உரை விளக்கம் : ஆவின் பாலும், படப்பைத் தேனும் தம்மளவில் தனித்தனியே இனியன. அவை இரண்டும் கலந்த கலவையின் சுவை பன்மடங்கு சிறக்கும். அதனை அன்பே உருவான தாய் மோழமை கூறி ஊட்டும் பொழுது அதன் சுவை இன்னும் சிறந்ததாம். இங்ஙனம் தாயூட்டத் தன் வளமனைக்கண் உண்ட தேன் கலந்த பாலைவிட்த் தன் காதலன் நாட்டில் மானுண்டு எஞ்சிய அழுகற் சின்னீர் பெரிதும் இனிதாயிற்று என்றாள் தலைவி. இஃது அவளது காதற் சிறப்புணர்த்தியவாறு கண்டு கொள்க.

Koviloor Digital Library

இதனால், தன் தந்தை வீட்டு வளமையினும் தன் காதலன் வீட்டு வறுமை தனக்குச் சிறந்தமையை விளக்கிய தலைவியின் கற்புள்ளத்தின் மாண்பு விளங்கும்.

கலிழி நீர் உண்ணத்தக்கதன்று. மேலும் விலங்குகள் பலவும் புகுந்து உண்டபின் எஞ்சி நின்ற கலங்கல் நீர் தீ நாற்றம் மிக்குப் பெரிதும் வெறுப்பூட்டுவதென்பது தெளிவு. இத்தகைய நீரேயாயினும், தன் காதலன் உள்ளத்தில் தனக்காக ஊறும் அன்பு நீர்ப்பெருக்கத்தால் அவட்குத் தேன் கலந்த பாலினும் பெரிதும் இனிதாயிற்றாம்.

தலைவனோடு இருந்து விருந்தோம்பி நல்லறம் செய்து எஞ்சியது உண்ணலின் தந்தை மனையில் தன் உடலாக்கம் ஒன்றே கருதிப் பருகும் தேன்பாலினும் கலிழி நீர் இனிதாயிற்று என்பார் பெருமழைப்புலவர்.

அருஞ்சொற்பொருள் : படப்பை – தோட்டம்; உவலை – தழை; கூவல் – கிணறு; மான் – விலங்குகட்குப் பொதுப் பெயர்; எஞ்சிய – மிஞ்சி நின்ற; கலிழி நீர் – கலங்கிய நீர்.

இலக்கணக்குறிப்பு : கலிழி – கலுழி என்பதன் திரிபு; தேன் மயங்கு – தேனொடு மயங்கிய – மூன்றாம் வேற்றுமைத் தொகை.

மேற்கோள் : கலங்கல் நீரைக் காதலியொடு உண்ணக் காதலன் விழைதல் :

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மோடு உணீஇயர்
வருகதில் அம்ம தானே

– குறுந். 50.

Koviloor Digital Library

காதலன் வீட்டு வறுமையும் இனிதாதல் :
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
– நற். 110.

விலங்குகள் உண்ட நீர் கலங்கியிருத்தல் :
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத்து ஆயினும்
– புறம். 204.

204

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! அஃது
எவன்கொல்? –
வரையரமகளிரின் நிரையுடன் குழீஇ,
பெயர்வுழிப் பெயர்வுழித் தவிராது நோக்கி,
நல்லள் நல்லள் என்ப;
தீயேன்தில்ல, மலை கிழவோற்கே!

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைபுறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் திருமண நினைவின்றிக் களவு நீட்டித்தான். அவன் தலைவி வீட்டின் புறத்தே நிற்கும் பொழுது அவன் கேட்டு வரைவொடு வருமாறு தலைமகள் தோழிக்குச் சொல்லுவாள் போன்று சொல்லியது.

உரை : அன்னையே! நீ வாழி! என் சொல்லை விரும்பிக்கேள். அன்னையே! மலையில் வாழும் சூரர மகளிர்போல, ஊர்மகளிர் பலரும் கூடி நின்று நாம் இயங்கும் இடமெல்லாம் இடைவிடாமல் என்னையே நோக்கி நோக்கி 'இவள் நல்லள், இவள் நல்லள்' என்று பாராட்டுகின்றனர். ஆனால் நம் காதலனாகிய மலை

Koviloor Digital Library

கிழவோனுக்கு மட்டும் யான் தீயளாயினேன். இதற்கு யாது காரணமோ? யான் அறியேனே!

உரை விளக்கம் : பொதுவாக மகளிர் பிற பெண்களைப் பாராட்டுவது இயல்பன்று. ஆனால் இவ்வூர் மகளிரோ அவ்வியல்புக்கு மாறாக என்னை நல்லள் எனப் பாராட்டவும், என்னைப் பாராட்டிக் காதல் கொண்டவன், இப்பொழுது என்னைத் தீயோளாகக் கருதியொழுகுகின்றான். இது என் தீயூழே என்று நொந்து கொண்டாள் ஆதலின், 'நல்லள் நல்லள் என்ப, தீயேன்தில்ல மலைகிழவோற்கு' என்றாள். தன்னைப் பாராட்டும் பெண்கள் வரையர மகளிர் போல்வார் என்றது, தெய்வ மகளிர் போன்றோராலேயே தான் பாராட்டப்படுவதனைக் குறிக்கவென்க. இத்தகைய என்னைத் தலைவர் வெறுக்குமாறு யான் செய்த பிழையாது' என மயங்கினாள் என்க.

தலைவனொடு கூடி முயங்கியமையால் தான் புத்தழகு கொண்டு விளங்குவதனால், மகளிர் பலரும் ஐயுற்றுத் தவிராது நோக்குகின்றனர் என்றாள். 'நல்லள்' என்றது, பொல்லாதவள் – களவொழுக்கமுடையவள் என்னும் பொருளில் என்பதும் ஒரு கருத்து. களவொழுக்கம் வெளிப்பட்டுவிட்டது என்பது அவள் உட்கிடையாகும்.

அருஞ்சொற்பொருள் : வரையரமகளிர் – தெய்வ மகளிர், சூரர மகளிர்; நிரையுடன் குழீஇ – கூட்டம் கூடி; பெயர்வுழிப் பெயர்வுழி – இயங்கும் தோறும்; தவிராது – தவறாமல்.

இலக்கணக்குறிப்பு : பெயர்வுழிப் பெயர்வுழி – அடுக்குத் தொடர், இடைவிடாமைப் பொருட்டு; நல்லள் நல்லள் – அடுக்குத் தொடர்; தில்ல – ஒழியிசை.

மேற்கோள் : மகளிர் குழுமி நின்று நோக்கல் :

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற
– நற். 149.

Koviloor Digital Library

205

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! என் தோழி
நனி நாண் உடையள்; நின்னும் அஞ்சும்;
ஒலி வெள் அருவி ஓங்கு மலை நாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
தவ நனி வெய்யள்; நோகோ, யானே.

கூற்று : நொதுமலர் வரைவு வேண்டி விட்டுழித் தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, இவள் இவ்வாறு ஆதற்குக் காரணம் என்னை? என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவி காளையொருவனைக் காதலித்துக் கற்புக் கடம் பூண்டாள். அதனையறியாத அயலோர், பெண்வேண்டிச் சான்றோரை விடுத்தனர். அது கண்ட தலைவி வருத்தமுற்றனள். அதற்குச் செவிலி காரணம் வினவியபொழுது தோழி மறைவெளிப்படுத்துமுகமாகச் சொல்லியது இது.

உரை : அன்னையே! நீ வாழ்க! என் சொல்லைக் கேள்! அன்னையே! என் தோழி மிகவும் நாணமுடையவள்; மேலும் நின்னையும் பெரிதும் அஞ்சுகின்றனள்; ஒலியொடு வீழும் வெள்ளிய அருவியினையுடைய உயர்ந்த மலைநாட்டிற்குத் தலைவன் இவள் காதலன்; அவனது அகன்ற மார்பிடத்தே கிடந்து துயிலுதலை இவள் மிக விரும்புகின்றனள்; இவள் நிலைக்காக யானும் நோகின்றேன். யான் செய்யவல்லது பிறிது யாது?

உரை விளக்கம் : நொதுமலர் வரைவிற்குத் தாய் உடம்பட்டாளாயின் தலைவியின் கற்புக்கு நேரும் ஏதம் நோக்கி மறை வெளிப்படுத்தாள் தோழி. தலைவியால் காதலிக்கப்படுவான் தம் குடும்பத்திற்கு ஏற்ற தகுதியுடையான் என்பது தோன்ற அவனை, 'ஒலி வெள்ளருவி ஓங்குமலை நாடன்' என்றாள். அவனுடைய அகன்ற மார்பினைப் பலகாலும் தழுவி, அம்மார்பிலே கிடந்து

Koviloor Digital Library

துயின்ற பழக்கமுடையவள் அவள் என்பது பட, 'மார்பிற்பாயல் தவ நனி வெய்யள்' என மிகுதிப் பொருள்தரும் உரிச்சொற்களை உடன் கூறினாள் என்க. அவனையன்றிப் பிறரை மணக்க அவள் ஒருகாலும் உடம்படாள் என்பது குறிப்பு.

'நின்னும் அஞ்சும்' என்றாள், நின்பால் கொண்ட பேரச்சம் காரணமாக உண்மையை ஒப்புக்கொள்ளாது தன் மனத்துள்ளேயே மறைத்து வைத்து மறுகுகின்றாள் என்ற கருத்தில். 'மலர்ந்த மார்பு' என்று தலைவன் மார்பைக் குறித்தது தலைவி அம்மார்பின்மேற் கொண்ட பேராவலை வெளிப்படுத்த என்க.

'யான் நோகு' என்றாள், தன் தோழியின் துன்பத்தைப் பொறுக்கலாற்றாமையையும், அவளை ஆற்றுவித்தலில் தனக்குள்ள அருமைப் பாட்டையும் கருதி.

இனி, 'துஞ்சிய வெய்யள்' என்றும் பாடம். இதற்கு 'மலை நாடனுடைய அகன்ற மார்பின்கண் கிடந்து பெறும் இனிய உறக்கத்தைப் பெறுதற்கு விரும்பினள்' என்று பொருள் செய்வர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையும் பெருமழைப்புலவரும். துஞ்சிய என்பதனைச் செய்யிய என்னும் வாய்பாட்டு எச்சமாகக் கொண்டனர். ஈழத்துரையாசிரியர் துஞ்சுகின்ற விருப்பினையுடையள் என்றார்.

அருஞ்சொற்பொருள் : நனிநாண் – மிக்க நாண்; ஓங்குமலை – உயர்ந்த மலை; மலர்ந்த – அகன்ற; பாயல் – படுக்கை; வெய்யள் – விருப்பமுடையாள்; நோகு – வருந்துகின்றேன்.

இலக்கணக்குறிப்பு : நனி, தவ – உரிச்சொற்கள்; நின்னும் – உம்மை, சிறப்பு; நோகு – தன்மை ஒருமை வினைமுற்று.

மேற்கோள் : தலைவன் மார்பில் துஞ்சுதல் :

அணித்துறை யூரன் மார்பே
பனித்துயில் கொள்ளும் இன் சாயற்றே
– ஐங். 14.

Koviloor Digital Library

தலைவன் மார்பைத் தலைவி விரும்புதல் :
மகிழ்நன் மார்பே வெய்யையால் நீ
– குறுந். 73.

தலைவி அன்னையை அஞ்சல் :
– யாக்கை
இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
காமநோய் எனச் செப்பாதீமே
– அகம். 52.

குறிப்புப் பொருள் : ''ஒலிவெள்ளருவியென்றது மண்தேய்த்த பெரும்புகழையும், ஓங்குமலைநாடன் என்றது, உயர்குடிப் பிறப்பையும், திருவாளன் என்பதையும் குறிப்பாக உணர்த்தின. இவை இறைச்சி'' என்றார் பெருமழைப்புலவர்.

206

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை!
உவக்காண்–
மாரிக் குன்றத்துக் காப்பாள் அன்னன்;
தூவலின் நனைந்த தொடலை ஒள் வாள்,
பாசி சூழ்ந்த பெருங் கழல்,
தண் பனி வைகிய வரிக் கச்சினனே!

கூற்று : இரவுக் குறிக்கண் தலைமகன் வந்து குறியிடத்து நின்றமை அறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தான் குறித்த இடத்தில் வந்து தலைவியின் வரவுக்காகக் காத்து நின்றானாக, அதனைக் கண்ட தோழி, தலைவிக்கு அவன் நின்ற நிலைமையை அறிவித்தது.

Koviloor Digital Library

உரை : அன்னையே! நீ வாழி! யான் சொல்வதைக் கேள். அன்னையே! மழைத்துளியிலே நனைந்ததும் மாலை போல் தோளிலிருந்து தொங்குவதுமாகிய ஒளி உமிழும் வாளையும், நீர்ப்பாசியால் சுற்றப்பட்டமையால் பசிய வண்ணம் கொண்ட வீரக்கழலையும், குளிர்ந்த நீர்த்துளி தங்கியதும் வரிந்து கட்டப்பட்டதுமான கச்சையையும் உடையவனாய், மாரிக்காலத்திலே குன்றத்தைக் காத்து நிற்கும் காவலாளிபோல்வானை உவ்விடத்தே காண்பாயாக!

உரை விளக்கம் : இரவுக்குறி வந்த தலைவன், தலைவியின் இருப்பிடத்திற்குச் சேய்மைக் கண்ணும், மிக அண்மையிலும் இன்றி, இடைப்பட்ட ஓரிடத்தில் தலைவிக்காகக் காத்திருந்தமையைத் தம் இல்லிலிருந்தே தோழி கண்டாளாதலின் 'உவக்காண்' என்று இடைச் சுட்டால் குறிப்பிட்டாள். தோளில் கோத்த வாளும், காலில் அணிந்த கழலும், இடையில் வரிந்து கட்டிய கச்சையும் அவனை ஒரு காவலாளி போல் காட்டினவாதலின் காப்பாளன்னன் என்றாள்.

மாரிக்காலமாதலின், அவன் வரும் வழியில் இருந்த நீர்நிலைகளில் படர்ந்திருந்த நீர்ப்பாசி அவன் கழலைச் சுற்றிக் கிடந்தது. உறையிலிடப்பட்ட வாள் மழையினால் நனைந்து தோளிலிருந்து தொங்கியது ஆதலின் மாலைபோலக் காட்சியளித்தது. அதனால் 'தொடலை ஒள்வாள்' என்றாள்.

இறுகக்கட்டிய கச்சையில் நீர் தங்கியிருத்தல் இயல்பாதலின் 'தண்பனி வைகிய' என்று அடை கொடுத்தாள். வரிக்கச்சென்றாள் வரிந்து கட்டப்பட்ட தென்னும் பொருளில். இன்னும் வரிகளைக் கொண்ட கச்சு எனினும் பொருந்தும். ஈண்டு வரியென்பது மடிப்பினையாகும்.

குன்றத்தைக் காத்தலாவது ஆண்டுள்ள குடிகளைக் காத்தல் என்க. பொறுப்புமிக்க காவலாளி, மழைத்துளியைப் பொருட்படுத்தானாதலின், நனைந்து கொண்டே வைத்த கண் வாங்காது நின்ற அவனைக் 'காப்பாள் அன்னன்' என்றாள்.

Koviloor Digital Library

இனி, மாரிக்குளத்து என்றும் பாடம். மாரிக்காலத்தில் நீர்நிலைகள் நீரால் நிரம்பிக் கரைகள் உடையாமல் காக்க வேண்டுதலின் இப்பொருளும் சிறப்பாகவே தோன்றுகின்றது. அதற்கு ஏற்பவே, காலிலணிந்த கழலில் நீர்ப்பாசியைக் காட்டினாள் என்க. 'சிறுகோட்டுப் பெருங்குளம் காவலன்போல' (அகம். 252) எனப் பிறரும் கூறுப.

'பெய்யும் மழையையும் பொருட்படுத்தாது உனக்காகக் காத்திருக்கும் தலைவனைப்பார்' என்று அவன் அன்பின் ஆழத்தையும், அஞ்சாமை மிக்க தோற்றத்தையும் பெருமிதம் தோன்றக் கூறிய திறம் சிறப்புக்குரியதாகும்.

அருஞ்சொற்பொருள் : உவக்காண் - உங்கே பார்; மாரி - மழை; காப்பாள் - காவலன்; தூவல் - தூற்றல்; தொடலை - மாலை; பனி - குளிர்ச்சி; வைகிய - தங்கிய.

இலக்கணக்குறிப்பு : தூவலின் - 'இன்' மூன்றாம் வேற்றுமைப் பொருள்பட நின்றது; தொடலை ஒள்வாள் - உவமத்தொகை.

மேற்கோள் : குளத்தைக் காவலர் காத்தல் :

தொழின்மழை பொழிந்த பானாள் கங்குல்
எறிதிரைத் திவலை தூஉம் சிறுகோட்டுப்
பெருங்குளக் காவலன் போல

- அகம். 252.

வீர ராயினார் மழைத்துளியைப்
பொருட்படுத்தாமை :

முடலை யாக்கை முழுவலி மாக்கள்
வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ் சிறந்து
துவலைத் தண்டுளி பேணார் பகலிறந்து
இருகோட்டு அறுவையர் வேண்டுவயின் திரிதர

- நெடுநல். 32-35.

Koviloor Digital Library

வாளும் தொடலையும் :
கல்லும் மரனும் துணிக்கும் கூர்மைத்
தொடலை வாளர் ......
- மதுரைக். 635 - 636.

வாள் தோளிலிருந்து தொங்குதல் :
விரவுவரிக் கச்சின் வெண்கை ஒள்வாள்
வரையூர் பாம்பின் பூண்டு புடை தூங்க
- பெரும்பாண். 71-72.

கச்சு வரியுடைத்தாதல் :
இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவு வரிக் கச்சின் பூண்ட மங்கையர்
- முல்லை. 46-47.

207

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நன்றும்
உணங்கல கொல்லோ, நின் தினையே?
உவக்காண்-
நிணம் பொதி வழுக்கின் தோன்றும்,
மழை தலைவைத்து, அவர் மணி நெடுங்குன்றே.

கூற்று : 'மழையின்மையால் தினை உணங்கும்; விளையமாட்டா; புனங்காப்பச் சென்று அவரை எதிர்ப்படலாம் என்று எண்ணியிருந்த இது கூடாதாயிற்று' என வெறுத்திருந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : மழையின்மையால் தினைப்புனம் கரியும் நிலையெய்திற்று. இதனால் தினைப்புனத்தைக் காவல் செய்யும் தேவையேற்படாது. படாதொழியவே இனிநாம் தினைக்காப்பைத் தலைக்கீடாகக் கொண்டு அங்கே செல்லவும், தலைவனைச்

Koviloor Digital Library

சந்திக்கவும் கூடாதே என்று தலைவி கவலையுற்றாள். அப்போது தோழி, தலைவர் குன்றின்மேல் மழைமுகில் சூழ்ந்திருத்தலைக் காட்டி, 'இனி நாம் தினைப்புனம் காக்கச் செல்லுதல் ஒருதலை' என்று ஆறுதல் மொழி சொன்னாள்.

உரை : அன்னையே! நீ வாழி! யான் சொல்வது கேள். அன்னையே! இனி நின் தினைப்புனம் மிகவும் உலர்ந்து போகாதல்லவோ? உதோ பார்! நம் காதலரின் நீல மணி போன்ற நெடுமலை மழைமேகத்தை அணிந்தது காண்! அம்மலை, மழைமேகத்தால் சூழப்பட்டு, நிணத்தால் மூடப்பட்டிருக்கும் ஊன்போலத் தோன்றுகின்றது!. (நின் தினை தழைத்தல் உறுதி)

உரை விளக்கம் : 'நின்தினை உணங்கல கொல்லோ' என்றது இனி நீ கவன்றவாறு உணங்காது அன்றோ என்று பொருள் தந்தது.

இனி, 'உணங்குவ கொல்லோ' எனப் பாடம் கொண்டு உணங்காது என்று பொருள் கொண்டார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. உணங்குமோ என்று கவன்றாள் தலைவி ஆதலின், அது உணங்காமைக்குக் காரணம் கூறுவாள் மலையின்மீது மேகம் சூழ்ந்தது காட்டுவாள் ஆதலின், இது பொருத்தமாகவே தோன்றுகின்றது.

தினை உணங்காவிடில் பயிர் தழைத்து விளைவு பெருகும். தினை முற்றும் எனவே காவற்குச் செல்வோம். அங்ஙனம் சென்றால் தலைவரைக் கண்டு அளவளாவுதலில் தடையில்லை என்று தேற்றினாள் என்க.

நிணமாவது வெண்ணிறக் கொழுப்பாதலின், கரிய குன்றின்மேல் வெண்மேகம் சூழ்ந்து கொழுப்பால் மூடப்பட்ட நிணம் போல மலை தோன்றுமாயிற்று. மணிக்குன்று என்றும் நெடுங்குன்று என்றும் கூட்டிக்கொள்க. மணி என்பதனை மலையின் நிறத்திற்குரிய நிறப்பண்பு எனக்கொள்க. இனி மணிகள் நிறைந்த குன்றுமாம்.

Koviloor Digital Library

இனி, 'நன்றும் உணங்கல கொல்லோ' என்றதற்கு, 'நின்னுடைய தினைப் பயிர் பெரிதும் உலர்ந்துவிட்டனவுமல்ல' என்று உரைகூறி விளக்கவுரையில், 'நன்னும் உணங்கல என்றது இவை பயன்படா எனக் கைவிடப்படும் அளவிற்குக் கரிந்துவிடவில்லை என்றவாறு. மழை பெய்யின் இத்தினை நன்கு மீண்டும் தழைக்கும் என்பதுபட நின்றது' என்பார் பெருமழைப்புலவர்.

'நீ கவலுவதுபோல் நின்தினை காய்ந்து போதற்கு இனிப் பெரும்பாலும் வாய்ப்பு இல்லை' என நன்றும் என்பதனைக் காய்தற்குரிய வாய்ப்பின் மேலேற்றிப் பொருள் செய்தலே பொருத்தம் எனத் தோன்றுகிறது. 'உணங்கல கொல்லோ?' என்பதற்கு உணங்கிவிடமாட்டாபோல் தோன்றுகிறது அல்லவா? எனப்பொருள் செய்க. காரணம் அவர்குன்று மழைமேகத்தைக் கொண்டிருத்தலாகும்.

அருஞ்சொற்பொருள் : உணங்குதல் – உலர்தல்; நன்றும் – மிகுதியாக; நிணம் – கொழுப்பு; வழுக்கு – ஊன்; மழை – மேகம்; மணி – நீலமணி போன்ற, மணிகளைக் கொண்ட.

இலக்கணக்குறிப்பு : அவர் – பண்டறி சுட்டு; வழுக்கின் – இன் – ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்புப்பொருள்.

மேற்கோள் : ஊனைக் கொழுப்பு மூடியிருத்தல் :

நெருப்புச் சினம் தணிந்த
நிணம் தயங்கு கொழுங்குறை
– புறம். 125.

குன்றம் மணிபோன்றிருத்தல் :

வெண்டலை மாமழை சூடித்
தோன்ற லானாது அவர் மணிநெடுங்குன்றே
– ஐங். 209.

Koviloor Digital Library

மணிநிறங் கொண்ட மாமலை ....
— ஐங். 224.

மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
— சிறுபாண். 1.

மலை மணிகளையுடைத்தாதல் :
மாமலை பயந்த காமருமணியும்
— புறம். 218 : 2.

மலை பயந்த மணியும் கடறு பயந்த பொன்னும்
— புறம். 377 : 16.

208

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! கானவர்
கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன் மலிபுது வீ தாஅம் அவர் நாட்டு,
மணி நிற மால் வரை மறைதொறு, இவள்
அறை மலர் நெடுங் கண் ஆர்ந்தன பனியே.

கூற்று : செவிலிக்கு அறத்தொடு நின்ற தோழி, அவளால் வரைவு மாட்சிமைப் பட்ட பின்பு, 'இவள் இவ்வாறு பட்ட வருத்தம் எல்லாம் நின்னின் தீர்ந்தது' என்பது குறிப்பின் தோன்ற அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தோழி தலைவியின் காதலைச் செவிலிக்கு வெளிப்படுத்தினாள். செவிலியின் உதவியால் திருமணம் கைகூடும் நிலை உருவாயிற்று. அதனால் மகிழ்ந்த தோழி, தன் தாயைப் பாராட்டிச் சொல்லியது.

Koviloor Digital Library

உரை : அன்னையே! நீ வாழி! என் சொல்லை விரும்பிக்கேள். அன்னையே! கானவர் கிழங்கிற்காக அகழ்ந்த குழிகள் நிறையுமாறு வேங்கை மரத்தின் பொன்னிறம் மிகுந்த பூக்கள் பரந்து கிடத்தற்கு இடமான அவர் நாட்டிலிருக்கும் நீலமணியின் நிறம் கொண்ட பெருமலை, அவள் கண்ணிலிருந்து மறையும் தோறும் சுனையில் மலர்ந்ததுள்ள குவளை போன்ற என்தோழியின் நெடிய கண்கள் நீரால் நிரம்புகின்றன காண்.

உரை விளக்கம் : கானவர் வள்ளிக் கிழங்கும் கவலைக் கிழங்கும் தோண்டியெடுப்பது வழக்கமாதலின் அங்ஙனம் தோண்டியமையால் உண்டான குழிகள் நிறையுமாறு வேங்கை மலர்கள் நிறைந்தன என்றாள். அம்மலர்கள் பொன்னிறத்தன வாதலின் 'பொன்மலி புதுவீ' என்று சிறப்பித்தாள். பொன்னின் நிறம் மிகுந்தது என்பதனைப் 'பொன்மலி' என்றாள்.

மாரிக்காலத்தே மழைமுகில் படிதலால் மலை மறைவது இயல்பாம். தான் நோக்கி நோக்கி மகிழ்ந்த தலைவன் மலையை மழைமேகம் மறைத்த பொழுது, அவள் வருத்தமுற்று அழுதாளாம். அம்மலையைக் கண்டபோது, அம்மலைக்குரிய தன் காதலனைத் தழுவும் இன்பத்தை அடைந்தவளாதலின், அது மறைந்த பொழுது அவன் தழுவலை இழந்தாளாக வருந்தினாள் என்க.

'அறைமலர்' என்ற குறிப்பால், அது குவளை மலராயிற்று. நெடுஞ்சுனையில் பூத்தது நெடுமலரானதால், அவள் நெடுங்கண்ணுக்கு உவமையாயிற்று.

'மணிநிற மால்வரை' என்றதனை 'மணிநிற வரை', என்றும் 'மால்நிற வரை' என்றும் தனித்தனிக் கூட்டி, நீலமணிபோலும் பெரியவரை என்றும், திருமால்போன்ற நீல வண்ண மலையென்றும் பொருள் காண்க. தன்னை மயக்கிய தலைவன் மலையாதலின் தலைவிக்கு அது மால் வரையுமாம். மால் – மயக்கம்.

மலை மறையும் தொறும் வருந்தினாள் எனின், அது தோன்றும் தொறும் மகிழ்ந்தாளாயிற்று.

Koviloor Digital Library

காதலன் மலையிலிருந்து ஒழுகும் அருவியில் நீராடலும், அம்மலையிலிருந்து வரும் காந்தளை அணைத்தலும், அம்மலையிலிருந்து வரும் காற்றில் திளைத்தலும் காதலிக்கு உகந்தனவாம். இஃதோர் உளவியற் கூறுபாடாகும். மணிநிற மால்வரை மறைதொறும் இவள் அறைமலர் நெடுங்கண் பனியார்ந்தது வரைவு மாட்சிமைப்படுதற்கு முன்னைய நிலையாம். நின் உதவியால் அந்தத் துயரம் இனி இல்லையாயிற்று என்று தாயை வாழ்த்தினாள் என்க. இனி அறைமலர் என்ற பாடத்தினும் வேறாக, அணிமலர் என்று பாடம் கோடலும் ஒன்று. இப்பாடம் எதுகைச் சிறப்பு மிக்கது ஆதலின் அமைவுடைத்தென்க.

அருஞ்சொற்பொருள் : கானவர் - வேடர்; காட்டு வாழ்வினர்; கிழங்கு - வள்ளி, கவலை முதலியன; நெடுங்குழி - ஆழமான குழி; மல்க - நிறைய; வீ - பூ; தாஅம் - பரவும்.

மேற்கோள் : கிழங்கு அகழ்ந்த குழியில் மலர் நிறைவது :

கவலை கெண்டிய அகல்வாய்ச் சிறு குழி
கொன்றை ஒள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்செய் பேழை மூய் திறந்தன்ன

- குறுந். 233.

காதலன் மலையைக் கண்டு நலம் பெறும் காதலி :

அவர் நாட்டுக் குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே

- குறுந். 249.

மலையைக் காண்டலால் உயிர் வாழ்தல் :

உள்ளார் ஆயினும் உளனே.
அவர் நாட்டு .... நெடும் பெரும்
குன்றத்துப் பாடின் அருவி சூடி
வான்தோய் சிம்யம் தோன்றலானே

- அகம். 378.

Koviloor Digital Library

உள்ளுறை : கிழங்கு அகழ் குழி நிறைய வேங்கை மலர் பரக்கும் என்றது கொள்வார்க்குப் பயன்பட்டுத் தமக்குவந்த குறையைத் தம் புகழ் நிறைக்கும் பெருமை உடையார் என்பதாம்.

'தலைவன் நம் குடியினின்றும் தலைவியைக் களவிற் கைக்கொண்டமையால் உண்டாய அலர்மொழியை நீ உட்பட நம் சுற்றத்தார் வரைவு உடன்பட்டுச் செய்த இத்திருமணமாகிய நற்செயல் மாற்றிப் பெரும்புகழ் ஆகிவிட்டது.'

— பெருமழைப்புலவர்.

'தலைமகனது நட்பின் பொருட்டு இவள் எய்திய வருத்தமெல்லாம் நின் முயற்சியால் வரைவு மாட்சிமைப்படுதலின் இன்பமாய் நிறைவதாயிற்று.'

— ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

209

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நீ மற்று
யான் அவர் மறத்தல் வேண்டுதி ஆயின்,
கொண்டல் அவரைப்பூவின் அன்ன
வெண் தலை மா மழை சூடி,
தோன்றல் ஆனாது, அவர் மணி நெடுங் குன்றே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிவின்கண் அவனை நினைவு விடாது ஆற்றாளாகிய வழி, 'சிறிது மறந்து ஆற்ற வேண்டும்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் வரைவுக்கு ஆவன செய்யப் பிரிந்தான். தலைவி அவனை இடைவிடாது நினைத்தலின் ஆற்றாமை கொண்டாள். அப்போது அவள்தோழி, சின்னாள் அவனை மறக்க வேண்டும் என்று அறிவுறுத்தியபொழுது தலைவி சொல்லியது.

Koviloor Digital Library

உரை : அன்னையே! நீ வாழி! என் சொல்லை விரும்பிக்கேள்! யான் நம் காதலரை மறக்கவேண்டுமென விரும்புவையாயின், யாங்ஙனம் கூடும்? யான் அதற்கு முயல்வேனாயின், நம் காதலரின் நீல மணிபோலும் நெடிய மலை, கொண்டலால் மலரும் அவரைப்பூப் போலும் நிறமுடைய வெண்ணிற முகட்டினையும், கரிய உடலையும் உடைய மழை முகிலைச் சூடிக்கொண்டு இடைவிடாது என் கண்முன்னே தோன்றுகின்றது. (யான் செய்வது யாது?)

உரை விளக்கம் : தோழி தலைவனை மறக்குமாறு வேண்டியது என்பது அவன் வரும்வரையில் ஆற்றியிருத்தலை யாகும். தான் அவள் அறிவுரைப்படி நடக்க முற்பட்டபோதும், தன் முயற்சி கடை போகாமைக்குத் தலைவன் மலை அவள் கண்ணுக்குப் புலப்படுதலே காரணம் என்பாளாய், 'அவர் மணி நெடுங்குன்று தோன்றல் ஆனாது' என்றாள். அது தோன்றுதலாவது கண்ணிலும் மனத்திலுமாம்.

அவரைப்பூப்போலும் வெண்ணிற முகில் சூடுவதால், அம்மலை தவிராது கட்புலனாயிற்று என்றாள். அவனை நினைத்தலின் அவன் மலையும், அம்மலையைக் காண்டலின் அவனும் அவள் மனத்தில் தோன்றித் தோன்றி அலைக்கழிக்கும் பொழுது சிறிதுபோதும் அவனை மறந்திருத்தல் தனக்குக் கூடாதது எனத் தன் இயலாமையைப் புலப்படுத்தினாள் தலைவி.

மணி நெடுங்குன்று என்பதற்கு 207 ஆம் பாடற்குரைத்தாங்குப் பொருள் கொள்க.

பனிக்கால வரவினை அவரை பூத்தல் கொண்டு உணர்த்தினாள். 'பெரும் புனக் குறவன் சிறுதினை மறு கால், கொழுங்கொடி அவரை பூக்கும் அரும் பனி அற்சிரம்' (குறுந். 82) என்பது காண்க.

மலை தன் பார்வையிலிருந்து மறையாமைக்கு அதன் நெடுமையும், வெண்மேகம் சூடிய நிலையும் காரணம் என்பாள்

Koviloor Digital Library

'வெண்டலை மாமழை சூடி, என்றும் 'நெடுங்குன்று' என்றும் சுட்டினாள்.

'அவர் மணிநெடுங்குன்று தோன்றும் போதெல்லாம் மாமழை சூடித் தோன்றுதல் போன்றே எம்பெருமான் என் நெஞ்சத்தே தோன்றும்போதெல்லாம் அத்தலை நாள் செய்த தண்ணளியோடு தோன்றுகின்றான். அத்தண்ணளி ததும்பிய திருமுகத்தை யான் மறந்து அமைதல் எங்ஙனம் என்றவாறு' என்ற பெருமழைப்புலவர் விளக்கம் விழுமியது.

பழையவுரை : வெண்டலை மாமழை சூடித் தோன்றல் ஆனாது என்றது, மழைபெய்தற்குக் கால்வீழ்ந்த இருட்சியால் மறையப்பெறாது விளங்கித் தோன்றுதலை நோக்கி எனக்கொள்க.

அருஞ்சொற்பொருள் : கொண்டல் - கீழைக்காற்று; வெண்தலை - வெண்ணிற முகடு; மாமழை - பெரிய முகில்; ஆனாது - தவிராது; (இடைவிடாமைப் பொருட்டு).

இலக்கணக்குறிப்பு : வேண்டுதி - முன்னிலை வினைமுற்று; மற்று - வினைமாற்றில் வந்தது.

மேற்கோள் : தலைவன் மலை அவன்பற்றிய நினைவைத் தோற்றுவித்தற்கு இப்பத்தின் 207, 208 செய்யுட்களைச் சான்றாகக் கொள்க.

210

அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! நம்
படப்பைப்
புலவுச்சேர் துறுகல் ஏறி, அவர் நாட்டுப்
பூக்கெழு குன்றம் நோக்கி நின்று,
மணிபுரை வயங்கு இழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து, அவள் உற்ற நோயே.

Koviloor Digital Library

கூற்று : காப்பு மிகுதிக்கண் தலைமகள் மெலிவு கண்டு, 'தெய்வத்தினான் ஆயிற்று' என்று வெறியெடுப்புழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவியின் தமர், தலைவியை இற்செறித்துக் காவல்பூண்டபோது அவள் பெரிதும் மெலிவுற்றாள். அம்மெலிவிற்குத் தெய்வக்குறையே காரணம் எனப் பிறழவுணர்ந்து வெறியெடுக்கத் தமர் முயன்ற போது, தோழி இங்ஙனம் அறத்தொடு நின்றாள்.

உரை : அன்னையே! நீ வாழி! யான் கூறுவதனை விரும்பிக் கேள் அன்னையே! நம் தோட்டத்தின்கண் உள்ள புலால்மணம் வீசும் குண்டுக்கல்மீது ஏறி நின்று, அவர் நாட்டகத்துள்ள பூக்கள் நெருங்கியதும் நீலமணியையொத்ததும் ஆனகுன்றத்தை நோக்கினாள் எனில், என்தோழி, தன் ஒளிமிக்க அணிகள் நெகிழாது, அவை நின்ற நிலையிலேயே நிற்பதற்கு ஏதுவாக அவளை வாட்டும் பிரிவுத்துயரம் தணிதற்கும் உரியதாகும். (வேறு வழியறியேன்).

உரை விளக்கம் : தலைவி மெலிவுக்குத் தெய்வக் குற்றம் காரணம் என்று உட்கொண்டு வெறியெடுக்க முற்பட்டனர் தமர் ஆதலின், அதனைத் தடுத்து, உண்மையை வெளிப்படுப்பாளாய், அவள் உற்ற நோய்க்கு அவள் ஒரு மலை நாட்டுத் தலைவன் மேற்கொண்ட காதலே காரணம் என்பதனை இங்ஙனம் கூறினாள் தோழியென்க. அத்தலைவனுக்கே அவளை மணத்திற் கொடுத்தலே இவள் நோய்க்குரிய தீர்வாகும் என்றாளாம்.

'வயங்கிழை நிலைபெற' என்றாள் இப்பொழுது அவை நெகிழ்ந்தமை தோன்ற. 'தணிதற்கும் உரித்து, என்றாள்', குன்றத்தை நோக்கி நின்று காண்டலாலே ஒருவேளை அவள் நோய் தணியலாம் என்ற கருத்தில். அது உறுதியாக நீங்கிட, அவளை அவனுக்குத் தருதலே தீர்வு என்பது கருத்தாகக் கொள்க.

Koviloor Digital Library

பூக்கெழு குன்றம், மணிபுரை குன்றம் எனத் தனித்தனிக் கூட்டிப் பொருள் செய்க. நம்படப்பையிலுள்ள புலவு சேர்துறுகல் ஏறி நின்று அவர் நாட்டுப் பூக்கெழு குன்றம் காணச் சொன்னதில் உள்ள முரண்தொடையின்பம் காண்க. துறுகல்லின் புலவு நாற்றத்தினைத் தலைவி படும் துயரத்தினோடு ஒப்பிடுக. அப்புலவு நாற்றம் (துயரம்) அவர் குன்றத்தின் மலர் மணத்தால் தீரும் என்ற குறிப்பையும் கண்டு தெளிக. தலைவன் தந்த நோய்க்குத் தலைவனே தீர்வாவானேயன்றி, வெறியாட்டு முதலியன தீர்வாகா என உரைத்து அறத்தொடு நின்றாள் தோழி என்க.

படப்பையில் உள்ள துறுகல்லின் புலவு நாற்றம் ஆடு முதலியனவற்றைப் பலியிட்டதால் உண்டானதாகக் கூறலும் சாலும். குன்றத்தைக் கண்ட அளவிலேயே தலைவி துயரம் தீர்வாளாயின், அவனோடு என்றும் ஒன்றி வாழும் பொழுது அவள் வாழ்வில் தோன்றும் இன்பப் பெருக்கம் பெரிதாய் இருக்கும் என்று அறிவுறுத்திய திறம் போற்றற்குரியதாகும்.

அருஞ்சொற்பொருள் : புலவு – புலால் நாற்றம்; துறுகல் – குண்டுக்கல்; வயங்கு இழை – ஒளிமிக்க அணி.

மேற்கோள் : தலைவன் குன்றம் நோக்கி இழந்த அழகை மீண்டும் பெறல் :

'அவர் நாட்டுக் குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே'

– குறுந். 249.

தலைவன் குன்றம் கண்டு தலைவி உவத்தல் :

செலவுடன் விடுகோ தோழி பலவுடன்
....
....
பெருங்களிறு பிளிறும் சோலை அவர்
சேண் நெடுங் குன்றம் காணிய நீயே

– நற். 222.

Koviloor Digital Library

இறைச்சி : தலைவன் குன்றத்தினைப் பூக்கெழுகுன்றம் என்றும் மணிபுரை குன்றம் என்றும் உயர்த்துக் கூறியது உருவும் திருவும் சிறந்தான் ஒரு தலைவன் இவளுக்கு இருக்கின்றான் என்னும் இறைச்சிப் பொருள் கொண்டதாகும் என்பது பெருமழைப்புலவர் கருத்து.

புலவுச்சேர்துறுகல் என்றது, யாவும் தெய்வத்தினால் ஆயின என்று மறி முதலாயின கொன்று புலவு நாறும் நம் குன்று என்பதாம். (பழையவுரை).

அன்னாய் வாழிப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

22. அன்னாய்ப் பத்து

'அன்னாய்' என்னும் விளிச்சொல் செய்யுள் தோறும் இடம் பெற்ற பத்துச் செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.

211

நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன
வயலை அம் சிலம்பின் தலையது
செயலை அம் பகைத்தழை வாடும் – அன்னாய்!

கூற்று : *தலைமகன் ஆற்றாமை கண்டு, கையுறை ஏற்ற தோழி தலைமகன் தழை ஏற்க வேண்டிக் கூறியது.*

கூற்று விளக்கம் : *தலைமகன் தோழியின் துணையுடன் தலைமகளைக் கூட விரும்பினான்; ஆற்றாமை மிக்கவனாய்த் தழையுடை செய்து கையுறையாகக் கொணர்ந்தான். அதனைப் பெற்றுக் கொண்ட தோழி, அதனை ஏற்றுக் கொள்ளுமாறு தலைவியை வற்புறுத்துவளாய்ச் சொல்லியது இது.*

உரை : *அன்னையே! நெய்யைப் பெய்து பிசைந்து கலந்து உழுத்த மாவினை நூற்றுப் பரப்பி வைத்தாற்போலப் படர்ந்துள்ள வயலைக் கொடிகள் மிகுந்த அழகிய மலையின் உச்சியில் வளரும் அழகிய அசோக மரத்தின் ஒன்றற்கொன்று மாறாகிய மாறுபட்ட இத்தழை, எளிதில் வாடிவிடும் இயல்பினதாகும். (எனவே, காலம் தாழ்க்காது ஏற்று அணிவாயாக!)*

உரை விளக்கம் : *உழுந்து ஈண்டு அதன் மாவினைக் குறித்தது. உழுத்த மாவினை நெய்யொடு கலந்து பிசைந்து கையால்*

Koviloor Digital Library

திரித்துப் பரப்பியதுபோல் வயலைக் கொடி தோற்றமளித்தலின் 'உழுந்து நூற்றன்ன' என்றாள். இதனை இக்காலத்தார் வடகம் என்பர். இங்குக் கூறப்பட்ட வயலை வெள்ளை வயலையாகும். வயலைக்கொடி மலைக்கு அழகு சேர்த்தலின் 'வயலையம் சிலம்பு' என மலையைச் சிறப்பித்தாள். அசோகின் தழையைப் 'பகைத்தழை' என்றாள், அதன் இலைகள் ஒன்றற்கொன்று எதிராக அமைதலின். இதற்கு, 'மாறுபாட்டிற்குக் காரணமான தழை' என்று பொருள் கூறுவாரும் உளர். 'பகைத்தழை வாடும்' என்றாள், அது வாடுதற்கு முன்பே தலைவி அதனை அணிந்து மகிழவேண்டும் என்ற பொருள்பட. தழை வாடும் என்றது அதனைத் தலைவி ஏற்று அணியாது புறக்கணிப்பின் தலைவன் வருந்துவான் என்னும் குறிப்பினதாகும். தலைவன் தன் அன்பின் அடையாளமாகக் கொணர்ந்ததாதலின், அக்கையுறை மதிப்பிற்குரியது என்பதும், புறக்க்ணிக்கற்பாலது அன்று என்பதும் தோழியின் கருத்தாகும்.

'உழுந்து நூறு' என்றதனை உழுந்தின்மணி என விளக்குவார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. "உழுந்து நூறு என்றது, உழுந்தின் காயை உலர்த்தித் துவைத்து எடுத்து நூறப்பட்டது. நூறப்பட்டது நூறு. மணியினை நெய்பெய்து மயக்கியவழி நிறமும் ஒளியும் பெறுதலின், நெய்யோடு மயக்கிய என்றும் ...." என்று இவர் விளக்குதலின் நூறுதல் என்பதற்குக் காய்ந்த உழுந்த நெற்றுக்களை அடித்து மணிகளைத் திரட்டி அவற்றைப் பரப்பினாற்போல வயலைக் கொடி மலையில் படர்ந்தது என்பது இவர் கருத்து என்பது விளங்கும். இதற்கு ஏற்பவே இவர் இதனைச் செந்நிற வயலை என்றார்.

ஆனால், பஞ்சினை நூற்றல்போல நூற்கவேண்டுமேல் அம்மணிகளை நன்கு அடித்து நொறுக்கி மாவாக்கியே அங்ஙனம் செய்தல் கூடும். முறுக்குப் பிழிதல் போலப் பிழிதலையே இங்கு நூற்றல் கொள்ளப்படவேண்டும். வெள்ளிய நிறம், நெய்யூட்டியதனால் ஏறிய பளபளப்பு, தரையில் வலைபின்னியதுபோல் படர்ந்து கிடக்கும் பாங்கு ஆகியவைகொண்டு காண்கையில், பெருமழைப்புலவர் கூறுவதே மிகப்பொருத்தமானதாக அமையும்.

Koviloor Digital Library

இங்கு நூறுதலை அடித்துப் பொடிப்பொடியாக ஆக்குதலாகக் கோடலே பொருத்தமானது. காய்ந்த காயைக் கம்பால் அடித்து மணியை வெளிப்படுத்தலை உதிர்த்தல் என்னலாமேயன்றி நூறல் எனல் ஆகாதென்க.

ஈழத்து உரையாசிரியர், 'நெய்யொடு கலக்கப்பட்ட உழுந்தைத் திரித்தாற் போன்ற வசலைக் கொடிகள்' என்று உரையெழுதி 'உழுந்து நூற்றன்ன என்பதற்கு இப்பொருளாதல் "மணி நூற்றனைய வைம்பால்" என்பதனாலுணரப்படும் என்பார். பெருமழைப்புலவர் கருத்தொடு இக்கருத்து ஒத்திருத்தலை நோக்குக.

இதிற்காணும் 'பகைத்தழை' என்ற தொடரை விளக்குவதில் அறிஞர் வேறுபடுவர். பெருமழைப்புலவர் 'மாறுபாட்டிற்குக் காரணமான இத்தழை' என்று உரைகூறிய இவர் 'பகைத்தழை என்றது, நின்னால் வாய்மையாக விரும்பப்படுவதாய் இருந்தும் பகைபோலக் காணப்படும் தழை என்றவாறு' என விளக்கமும் தந்தார். ஈழத்தறிஞரும், 'மாறுபட்ட தழை' என உரை கூறி, 'பகையைத்தரு தழை' என மேலும் விளக்கினார். இதற்கு அரணாக 'ஏறும்பழிதழை ஏற்பின்' என்ற திருக்கோவையார் (113) மேற்கோளைக் காட்டினார். பகைக்குக் காரணமானதைக் காரியமாக்கிக் கூறியதாக இவர் கொள்வார். இக்கருத்துக்கள் நயமுடையனவேயெனினும், சங்க நூல்களில் பகைத்தழை, பகைமலர் என்பன ஒன்றோடொன்று நிறத்தாலும் அமைப்பாலும் மாறுபடத் தொடுக்கப்பட்ட என்ற பொருளிலேயே ஆளப்பட்டுள்ளமை தெளிவாம்.

அருஞ்சொற்பொருள் : மயக்கிய – கலந்து பிசைந்த; நூற்றல் – நூல் திரித்தல் போல் கையால் திரித்தல்; சிலம்பு – மலை.

இலக்கணக்குறிப்பு : உழுந்து – உழுத்தமாவிற்கு ஆயிற்று, ஆகுபெயர்.

Koviloor Digital Library

மேற்கோள் : தழையைப் பகைத்தழை என்றல் :
'நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார்'
- ஐங். 187.

'தொன்றுதாம் உடுத்த அம்பகைத் தெரியல்'
- புறம். 280.

அயவெள் ளாம்பல் அம்பகை நெறித்தழை'
- குறுந். 293.

'அம்பகை நெறித் தழை அணிபெறத் தைஇ'
- நற். 96.

212

சாத்த மரத்த பூழில் எழு புகை
கூட்டு விரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ, நாம் அகல்வு? - அன்னாய்!

கூற்று : வரைவு எதிர் கொள்ளார் தமர் அவண் மறுத்தவழி, தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படி வேண்டும் பொழுது, தலைவியின் பெற்றோரும் பிற உறவினரும் மறுத்தனர். அப்பொழுது, அவனுக்கும் தலைவிக்கும் இடையே ஊழால் ஏற்பட்ட காதலுறவு உண்டு என்பதனைத் தோழி செவிலிக்கு அறிவிப்பாளாய்ச் சொல்லியது.

உரை : அன்னையே! சந்தன மரங்களுக்கு இடையே உள்ள நிலத்தில் சுட்டு எரிக்கப்படும் அகில் கட்டையின் நறிய புகை, சந்தனப் பூக்களின் நறுமணத்தோடு சேர்ந்து, ஒரு புதுக்கலவை

Koviloor Digital Library

மணமாகப் பரவுதற்கு இடனான மலைநாடன் அறப்பண்புகள் நிறைந்த சான்றோனாக இருக்கவும், அவனை நாம் விலக்குதற்குக் காரணம் என்னை?

உரை விளக்கம் : பூழிலாவது விலையுடைய அகிற் கட்டையாகும். சந்தன மரங்களிடையே உள்ள நிலப்பகுதியில், அங்கு வாழ்வார் அகிற் கட்டையை விறகாகப் பயன்படுத்தி உணவு சமைத்தனர் என்க. பிறர்க்காயின் அஃது அரியபொருள். தலைவன் நாட்டு எளிய குறமாந்தர்க்கோ எளிய விறகு என்பது அவள் குறிப்பு. 'குறத்தி மாட்டிய வறன் கடைக்கொள்ளி ஆரமாதலின் அம்புகை அயலது சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும் பறம்பு' என்றார் கபிலரும். (புறம். 102.) தலைவன் நாட்டின் செல்வ மிகுதியை, அந்நாட்டு மக்கள் அகிலை விறகாகப் பயன்படுத்துவது கொண்டு விளக்கினாள் தோழி.

அகிலின் நறிய புகை ஆண்டு முன்பே பரவியிருந்த சந்தனப்பூவின் மணத்தோடு கலந்து மணந்ததனைக் கூட்டு விரை என்றாள். செல்வ வளத்தோடு பண்பு வளமும் உடையவன் தலைவன் என்பாளாய், 'அறவன்' என்று அவனைப் புகழ்ந்தாள். தன்னுடைய தமர், அவன் பெருமை கருதாது மறுத்தது அறிவுடைமையாகாது என்பாள் 'நாமகல்வு எவனோ?' என்று வியப்பொடும் வினவினாள். இதனால், 'பொருட் செல்வமும், அன்பு, அருள், நடுநிலைமை, வண்மை முதலான பண்புச் செல்வமும் கொண்ட தலைவனை மருகனாக ஏற்பது நமக்குப் பெருமை சேர்க்கும்' என்று செவிலிக்குக் கூறி அறத்தொடு நின்றாள் தோழியென்றறிக.

'சாந்த மரத்த' என்றும் பாடம். அது வலித்தல் விகாரமாகிச் 'சாத்த' என்றாயிற்று. பூழில் அகிலாதலைப் பதிற்றுப்பத்தாலும் (87 : 2) அறிக. இச்செய்யுளிலும் சந்தனமும் அகிலும் இணைத்துப் பேசப்படுதலை, 'சாந்தம் பூழிலொடு பொங்கு திரை சுமந்து' என்பதால் அறிக. தலைவனை, 'ஒண்செங்காந்தள் அவிழும் நாடன் அறவன் (குறுந். 284) எனப் பிறரும் கூறுவது காண்க.

Koviloor Digital Library

சந்தனப்பூ நாற்றம் என்பதற்கு மாறாக, 'சந்தனப்புகை நாற்றம்' என்றார் ஈழத்து உரையாசிரியர். இதனால், ஆண்டுக் கேட்பாரற்றுக் கிடந்த சந்தன மரத்துண்டுகளும் அகிலோடு சேர்ந்து எரிக்கப்பட்டமை புலப்படும்.

தனக்கு வந்த வருத்தம் பாராது தனக்குத் துணையாகினார் நலத்தொடும் கூடி, எல்லோர்க்கும் பயன்பட ஒழுகும் ஒழுக்க முடையான் தலைவன் என இறைச்சிப் பொருள் காட்டினார் இவ்வறிஞர். இது மிக நயமுடைய உரை. இது பழைய உரைக் கருத்தைத் தழுவியது. 'தனக்கு வந்த வருத்தம் பாராது தனக்குத் துணையாயினார் நலத்தோடும் கூடி எல்லார்க்கும் பயன்பட ஒழுகும் ஒழுக்கத்தை உடையவன் என்பதாம்' என்பது அவ்வுரை.

அருஞ்சொற்பொருள் : சாத்தமரத்த – சந்தன மரங்களின் இடைவெளி நிலத்திலுள்ள; பூழில் – அகில்; கூட்டுவிரை – கலந்த நறுமணம்; அகல்வு – மறுத்தல்; எவன் – என்ன காரணம் பற்றி.

இலக்கணக்குறிப்பு : சாத்த – சாந்த என்றது வலித்தல் விகாரம்; மரத்த – அகரம் பன்மை உருபு; அகல்வு – அகற்சி, நீக்கல் ... தொழிற் பெயர்.

குறிப்புப் பொருள் : பழைய உரையாசிரியரின் கருத்து முன்னர்ச் சுட்டப்பட்டது.

இனி, துரைசாமிப்பிள்ளை, 'சந்தனச் சோலையிடையே எரிக்கப்பட்ட அகிற்புகை சந்தனத்தின் மணம் கலந்து கமழும் என்றது, மலைச்சாரலில் மத களிறுவென்று வந்தவன் அது கண்டு வெருவிய எம்மைத் தலையளித்த உரவோன் ஆவான்' என உள்ளுறை காண்பார்.

பெருமழைப்புலவர், 'இதன்கண், சாந்தமரப் பொழில் என்றது தலைவியின் குடியை; அகில் என்றது உயர்குடித் தோன்றலாகிய தலைவனை; புகையென்றது. அவன் உள்ளத்தே பொங்கியெழுந்த காதலுணர்ச்சியை; சந்தன மலர் என்றது தலைவியை;

Koviloor Digital Library

அதன் மணம் என்றது தலைவியின் நெஞ்சத்தே கிளர்ந்து எழும் காதலுணர்ச்சியை; கூட்டு மணம் கமழும் என்றது, தலைவன் விடுத்த சான்றோர் அவ்விருவர்க்கும் மணம் பேசிவந்த திருமணச் செய்தியை என்க' என விரிவான பொருள் காண்பது மகிழ்ச்சிக்குரியதாம். கூட்டு விரை கமழும் என்றது, இருவர் மனமும் ஒன்றுபட்டமையைக் குறிப்பால் சுட்டும் என்பதும் அவர் கருத்து.

213

நறு வடி மாஅத்து மூக்கு இறுபு உதிர்ந்த
ஈர்ந் தண் பெரு வடு, பாலையில் குறவர்,
உறை வீழ் ஆலியின், தொகுக்கும் சாரல்
மீமிசை நல் நாட்டவர் வரின்,
யான் உயிர் வாழ்தல் கூடும் – அன்னாய்!

கூற்று : வரைவொடு வருதலைத் துணிந்தான் என்பது தோழி கூறக்கேட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைவன் தன்னை விரைவில் மணம் செய்து கொள்ள வேண்டுமென விரும்பினாள், தலைவி. அவன் குறித்த காலத்தில் வாராமையால் வருந்தியவள் தோழி வாயிலாகத் தலைவன் திருமணத்திற்குரிய ஏற்பாட்டுடன் வருதலைக் கேட்டு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே! நறுமணம் மிக்க வடுக்களைக் கொண்ட மாமரத்தினின்றும், காம்பு இற்று வீழ்ந்த ஈரமான, குளிர்ந்த பெரிய வடுக்களை, பாலை நிலக் குறவர்கள் மழைத்துளியுடன் வீழும் ஆலங்கட்டிகளைத் தொகுப்பதுபோல் தொகுத்து வைத்தற்கு இடனான உயர்ந்த சிகரங்களையும் பக்கமலைகளையும் உடைய வளமான நாட்டினையுடைய தலைவர் வரைவொடு வரின் யான் உயிர் வாழ்தல் கூடும். (இன்றேல் இறத்தல் திண்ணம்.)

Koviloor Digital Library

உரை விளக்கம் : நறுமணம் மிக்க மாம்பிஞ்சுகள் பாலை வெப்பத்தால் காம்பு இற்று வீழ்ந்தன. அவை அங்ஙனம் வீழ்ந்து கேடுறத் தகுதியுடையன அல்ல என்பாளாய், 'ஈர்ந்தண் பெருவடு' என அடைகொடுத்துச் சிறப்பித்தாள். மழையொடு சேர்ந்து விழும் ஆலங்கட்டியை மாந்தர் தொகுப்பது இயல்பு. அவ்வண்ணமே உதிர்ந்த மாவடுக்களைக் குறவர் தொகுத்தனர் என்க. தலைவன் மிக உயர்ந்தவன் என்பதனைக் குறிப்பால் உணர்த்துவாளாய், அவன் நாட்டை 'மீ மிசை நல்நாடு' என்றாள். 'வரின் உயிர் வாழ்தல் கூடும்' என்றாள் வாராராயின் இறந்துபடுதல் உறுதி என்பது தோன்ற.

அருஞ்சொற்பொருள் : வடி – மாம்பிஞ்சு; மூக்கு – காம்பு; இறுபு – இற்று; உறை – மழைத்துளி; மீமிசை – உயர்ந்த உச்சி.

இலக்கணக்குறிப்பு : இறுபு – செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; மீமிசை – ஒரு பொருட் பன்மொழி.

மேற்கோள் : பழம் மூக்கு இற்று விழுதல் :

– விளவின்
ஆட்டொழி பந்தின் கோட்டு மூக்கிறுபு
– நற். 24.

வடி என்பது மாவடு என்பது :
நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
நெடுநீர்ப்பொய்கைத் துடுமென விழூஉம்
– ஐங். 61.

நறுவடிப் பைங்கண் மாஅத்து அந்தளிர்
– குறுந். 331.

பெண்ணை தேனுடை அழிபழம் ....
மூக்கிறுபு அள்ளல் இருஞ்சேறு ஆழப்பட்டென
– நற். 372.

Koviloor Digital Library

உள்ளுறை : 1. மாவினின்றும் தாமாக உதிர்ந்த மாவடுக்களைக் குறவர் ஆலிபோலத் தொகுத்துக் கொள்ளும் நாட்டவர் ஆதலின், என்னின் நீங்கித் தானாகச் சென்று வீழ்ந்த நெஞ்சினைப் பெரும் பேறாக ஏற்றுக் கொள்வர். (ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை)

2. இற்று வீழும் வடியினைக் குறவர் தொகுப்பர் என்றது, பாலை நிலத்தின்கண் வெம்பி வீழும் வடுக்களைத் தொகுக்கும் குறவர் போன்று நம் பெருமானும் யான் துயரத்தாலே நைந்து இறந்துபடும் எல்லைவரை வாளாவிருந்து அவ்வெல்லைக்கண் வரைதற்கு வரமுயல்வானாயினை எனத் தலைவனைப் பழித்தபடியாம் (பெருமழைப் புலவர்).

3. மாவின் மூக்கு இற்று உதிர்ந்த வடுக்களை ஆலிபோலத் தொகுக்கும் நாட்டையுடையார் என்றது, விரும்புவனவற்றைப் பெறுதற்கு வேண்டும் முயற்சிகளைத் தாமாக மேற்கொள்ளாது, பெற்ற பொழுது அதனைப் பேணும் இயல்புடையார் தலைவர் என்ற பொருள் தரும் என்பார் பழைய உரைகாரர்.

214

சாரற் பலவின் கொழுந் துணர் நறும் பழம்
இருங் கல் விடர் அளை வீழ்ந்தென, வெற்பில்
பெருந்தேன் இறாஅல் சிதறும் நாடன்,
பேர் அமர் மழைக்கண் கலிழ, தன்
சீருடை நல் நாட்டுச் செல்லும் – அன்னாய்!

கூற்று : தலைமகன், 'ஒருவழித் தணப்பல்' என்று கூறியவதனை அவன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைக் களவிற் கூடி இன்புற்றபின், சின்னாள் கழித்து வருவதாகத் தோழியிடம் கூறித்

Koviloor Digital Library

தலைமகளை ஆற்றுவிக்குமாறு வேண்டினான். அவன் அங்ஙனம் பிரிதலைத் தான் விரும்பவில்லை என்பதனை அவன் அறியும் வண்ணம் அவன் சிறைப்புறத்தே நிற்கையில் தலைவியிடம் அவள் சொல்லியது.

உரை : தோழி! மலைச் சாரலின்கண் நிற்கின்ற பலா மரத்தின் செழுமை மிகுந்த கொத்தில் உள்ள இனிய பழம், கரிய மலைப் பிளவின் கண் உள்ள முழைஞ்சில் வீழ்ந்தமையால், ஆங்கு உள்ள பெரிய தேனடை சிதைந்து விழுதற்கு இடமான நாட்டையுடைய நம் தலைமகன், நின்னுடைய பெரிய அமர்த்த கண்கள் துயரால் கலங்கி நீர் வாரும்படியாக நம்மை நீத்துத் தம் சிறப்புக்களையுடைய நாட்டிற்குச் செல்வாராம். (இதனை நீ அறிவாயாக!)

உரை விளக்கம் : சாரலின்கண் உள்ள பலாப்பழத்தினை, 'கொழுந்துணர் நறும்பழம்' எனச் சிறப்பித்தாள், அத்தகு பழம் யாருக்கும் பயன்படாது இருள் சூழ்ந்த மலைப்பிளவில் வீழ்ந்து சிதையும் என்பது பற்றி. தான் பயன்படாது சிதைவதோடமை யாது, பெரிய தேனடையும் யாருக்கும் பயன்படாது சிதைத்தலைக் கருதிப் 'பெருந்தேன் இறாஅல் கீறும்' என்றாள். பெரியனவும், குளிர்ந்தனவும், குழைகளோடு மாறுபடுவனவுமான கண்கள் கலுழ்ந்து வாடுதற்குத் தகுதியுடையன அல்ல எனக் குறிப்பாளாய், 'பேரமர் மழைக்கண் கலிழ' என்றாள். தலைவியின் சீரைச் சிறிதும் கருதாது தன்னுடைய நாட்டின் சீரையே எண்ணினான் தலைவன் என்னும் குறிப்பில், 'தன் சீருடை நன்னாட்டுச் செல்லும்' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : துணர் – கொத்து; இருங்கல் விடர் – பெரிய அல்லது கரிய மலைப்பிளவு; அளை – முழைஞ்சு; வெற்பு – மலை; கீறுதல் – சிதைத்தல்; கலிழ – கலங்க.

மேற்கோள் : பலாப்பழம் விடரளையில் வீழ்தல் :

'பலவின், மாச்சினை துறந்த கோண்முதிர் பெரும்பழம்
விடரளை வீழ்ந்தாங்கு'

– நற். 116.

Koviloor Digital Library

உள்ளுறை : பலாப்பழம் விடரளையில் வீழ்வதோடு ஆண்டுள்ள தேனடையையும் சிதைத்தது என்பது, தலைவன் தன் பிரிவினால் தலைவியின் இயற்கை நலத்தையும் சிதைக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் தருகின்றது. 'பலாப்பழமும் தேனும் கலந்தவிடத்துப் பெருஞ்சுவை நல்குவதாகும். ஆயினும் பலாப்பழம் அங்ஙனம் தேனடையோடு இனிதுறக்கலவாமல் தனது வீழ்ச்சியாலே அத்தேனடையின்கண் இயற்கையினமைந்த தேனையும் கெடுத்தொழிந்து மேலும் தானும் வீணாகினாற்போலத் தலைவன் நின்னொடு கலந்தலுமின்றி நின்னலத்தையும் சிதைத்துத் தானும் பயன்பெறானாய்த் தன் நாட்டிற்குச் செல்கின்றான்' என விரிப்பார் பெருமழைப்புலவர்.

பலவின் பழம் பிறர்க்குப் பயன்படாது கல்லளையில் வீழ்கின்றுழி அவ்விடத்துளதாகிய தேனிறாலினையும் சிதைக்கு மென்றது தன்னால் பெற்ற நலம் எங்கள் இயற்கை நலத்தினையும் சிதைக்கின்றதென்பதாம். (பழையவுரை)

215

கட்டளை அன்ன மணி நிறத் தும்பி,
இட்டிய குயின்ற துளை வயின் செலீஇயர்,
தட்டைத் தண்ணுமைப் பின்னர் இயவர்
தீம் குழல் ஆம்பலின், இனிய இமிரும்
புதல் மலர் மாலையும் பிரிவோர்
அதனினும் கொடிய செய்குவர் – அன்னாய்!

கூற்று : இரவுக்குறி நயந்த தலைமகள், பகற்குறிக்கண் வந்து நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : பகற்பொழுதில் மட்டும் வந்து தலைவியைக் கூடி இன்புற்று வந்தான் தலைமகன். தலைவி, இரவுக் குறியிலும் அவன் வந்து கூடும் விருப்பம் கொண்டாள்.

Koviloor Digital Library

அவ்விருப்பத்தைத் தலைவன் கேட்கும் வகையில், ஒருநாள் பகற்பொழுதில் வந்து கூடிப்பிரிந்து சென்று சிறைப்புறத்தே அவன் நிற்கும்பொழுது தோழிக்குக் கூறுவாளாய் இங்ஙனம் மொழிந்தாள்.

உரை : கட்டளைக் கல்போலும் கரிய நிறத்தைக் கொண்ட தும்பி, ஒடுக்கமாக இயற்றப்பட்ட நீராடும்துறையிடத்தே சென்று தட்டை என்னும் தண்ணுமைக் கருவி வாசிப்பவர் பின்னே நின்று வாச்சியக்காரர் ஊதும் ஆம்பல் என்னும் குழல் இசையினும் இனிதாக ஊதுவதற்கு இடனான, புதல்கள் மலர்கள் நிறைந்து காணப்படும் மாலைப் பொழுதிலும் பிரிபவர், அப்படிப் பிரிதலினும் மிகக் கொடிய செயல்களையும் துணிந்து செய்யக் கூடியவராவார்.

உரை விளக்கம் : பொன்னுரைக்கும் கட்டளைக் கல்லைத் தும்பிக்கு உவமை கூறியது, அதன் ஆழ்ந்த கருநிறத்தையும், இடையிடையே அதன் சிறகுகளில் உள்ள பொன்னிறக் கோடுகளையும் கருதியாம். மக்கள் நீராடி மகிழும் துறையில் அந்நாளில் இத்தகு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றனவென்பது எண்ணத்தக்கது. தட்டைத்தண்ணுமை என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய், தட்டை எனப் பெயர்கொண்ட தண்ணுமையைக் குறித்தது. இனி இதனை, தட்டையும் தண்ணுமையும் என இரு கருவிகளாகக் கொள்வார் உளர். இங்குச் சொல்லும் தட்டை, கிளிகடி கருவியினும் வேறானது. தட்டைத் தண்ணுமைப் பின்னர் என்றது அத்தோற்கருவியாளர்க்குப் பின்னர் நின்று எனக் கொள்வதினும், தட்டைத் தண்ணுமையின் தாளத்தைப் பின்பற்றி என்று பொருள்கோடல் சிறப்பு. ஏனெனில் குழலோனும் முழக்குவோனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு தொழிற்படுவதுதான் இயல்பாகும் என்க.

தீங்குழல் ஆம்பல் என்பதில் உள்ள ஆம்பல் என்பது பண்ணின் வகை என்றும் குழல்வகை என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன. 'இனிய வேய்ங்குழலிடத்து எழும் ஆம்பற் பண்ணினும்' என்பார் ஈழத்து உரையாசிரியர். 'தீவிய குழலாகிய ஆம்பலினும்' என்கிறார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

'ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி' 'கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழி' என்னும் ஆய்ச்சியர் குரவைப் பகுதிகட்குரிய உரை 'ஆம்பல் முதலானவை சில கருவி; ஆம்பல் பண்ணுமாம்' என்பதாகும்.

'மாலையும் பிரிவோர்' என்றாள் காதலர் பிரிதற்கு அரிய பொழுதில் பிரிந்தார் என்பதுபட. வினைமேற்சென்றோர் மீண்டு வருங்காலம் அதுவாகலானும், அடுத்துவருவது இரவாதலின் புணர்ந்தோர் பிரிவது அரிதாகலானும், மாலையும் என உம்மை கொடுத்தாள் என்க. யாரும் பிரியக்கருதாத காலத்தில் பிரிபவர் கொடிய கல்நெஞ்சராதலின், இத்தகையவர் இன்னும் இதன்மேலும் கொடுமையான செயல்களைச் செய்து பிறரைத் துன்புறுத்தத் தயங்கார் என்பதுபட, 'அதனினும் கொடிய செய்குவர்' என்றாள். அது எனச் சுட்டியது, பிரிவரிய மாலையிலும் பிரிந்த செயலை.

அருஞ்சொற்பொருள் : குயின்ற – செய்யப்பட்ட; தட்டை – ஒரு தோற்கருவி; இயவர் – வாத்தியக்காரர்; இமிரும் – ஒலிக்கும்.

இலக்கணக்குறிப்பு : செலீ இயர் – இயர் ஈற்று வினையெச்சம்; ஆம்பலின் – 'இன்' ஐந்தன் உருபு.

216

குறுங்கை இரும் புலிக் கோள் வல் ஏற்றை,
நெடும் புதல் கானத்து மடப் பிடி ஈன்ற
நடுங்கு நடைக் குழவி கொளீஇய, பலவின்
பழம் தூங்கு கொழு நிழல் ஒளிக்கும் நாடற்கு,
கொய்தரு தளிரின் வாடி, நின்
மெய் பிறிதாதல் எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : வரைவு நீட ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி கூறியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைமகன் களவொழுக்கத்தை நீட்டித்தான். அவன் வரைவிற்கு யாதொரு ஏற்பாடும் செய்யாமை கண்டு தலைவி வருந்தினாள். ஒருநாள் தலைமகன் சிறைப்புறத்தில் நிற்கையில், அவன் கேட்டுத் தெளிவு பெற்றுத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் வகையில், தோழி தலைமகட்குச் சொல்லியது இது.

உரை : தோழியே! குறிய முன்னங் கால்களை உடைய, கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலி நெடிது வளர்ந்த புதல்கள் நிறைந்த காட்டின்கண் இளம் பிடி யானை ஈன்ற நடுங்கும் நடையுடைய இளங்கன்றினைப் பற்றித் தின்னுதற் பொருட்டுப் பழக்குலைகள் தொங்கும் பலா மரத்தின் செறிந்த நிழலின்கண் பதுங்கியிருத்தற்கு இடனான நாடன் பொருட்டு நீ கொய்யப்பட்ட தளிர்போல வாட்டமுற்று மேனி மாறுபடுதல் என்ன காரணம் பற்றி?

உரை விளக்கம் : புலியின் முன்னங் கால்களைக் கையென வழங்கல் மரபு. அக்கால்களை அவ்விலங்கு கைபோல் பயன்படுத்தும் இயல்பினதாகும். 'கோள்வல் ஏற்றை' என்றாள், அது பிற விலங்குகளைப் பற்றும் வன்மை நோக்கி. மடப்பிடி மறைவான இடத்தில் கன்றினை ஈன்றது என்பாள் 'நெடும்புதல் கானத்து' என்றாள். இளந்தளிர் கொய்த சிறிது நேரத்தில் வாடிவிடும் தன்மையாதலின், அதனைத் தலைவன் பிரிந்த சிறிது பொழுதிலேயே மேனி வாட்டமுறும் தலைவிக்கு உவமை கூறினாள்.

தன் கடமையை உணர்ந்து விரைவில் தலைவியை வரைந்து கொள்ளக் கருதாது காலம் தாழ்த்தி வந்த தலைவன் சிறைப்புறத்தே நின்றானாதலின், அவன் கேட்டுத் திருந்துமாறு, 'பிறர் துன்பம் கண்டு வருந்தும் உயர்பண்பு சிறிதுமற்றவனாய்த் தன்னலம் ஒன்றே நோக்கும் தலைவன் பொருட்டு ஊணும் உறக்கமும் இன்றி மேனி வாட்டம் கொள்வது பயனற்றது' என்பாள் 'நாடற்கு மெய்பிறிதாதல் எவன்கொல்?' என்றாள். அங்ஙனம் வாடுவது எப்பயனும் விளைக்காது என்பது கருத்து.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : இரும்புலி - பெரிய புலி; கரிய புலியுமாம். கோள் - பற்றுதல்; ஏற்றை - புலி முதலிய விலங்குகளின் ஆண்பாலுக்குரிய சொல்; புதல் - புதர்; கொளீஇய - பற்றுதற் பொருட்டு; தூங்கு - தொங்கு.

இலக்கணக்குறிப்பு : கொளீஇய - செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

மேற்கோள் : புலியின் கொளல் வன்மை :

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
- குறுந். 141.

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
- நற். 36.

உள்ளுறை : புலியேற்றை, பிடியீன்ற குழவியைக் கொள்ள வேண்டிக் காலம் பார்த்து மறைந்திருக்கும் நாடன் என்றது தலைவன் தன் வஞ்சனையாலே தலைவியின் பெண்மையை வெளவிய தன்மையை உள்ளுறையாகக் கொண்டது. "முகிழ்த்துள்ள இளமை மிக்க பெண்மைப் பெருநலத்தைச் செவ்வி பெறும் பொழுதெல்லாம் பற்றி நுகர்தற்பொருட்டே இனிய வஞ்சக மொழிகளைப் போர்வையாகக் கொண்டு இக்களவொழுக்கத்தினூடே மறைந்திருக்கின்றானல்லது வரைந்து கொண்டு அறவாழ்வு நடாத்துதலில் கருத்திலன் காண்; அவன் பொருட்டு நீ வருந்துதலாற் பயனில்லை" என விளக்குவார் பெருமழைப் புலவர். புலியேற்றை தலைவனுக்கும், நெடும்புதல்கானம் தலைவியின் குடிக்கும், மடப்பிடி தலைவிக்கும், அஃதீன்ற குழவி தலைவியின்பால் பருவம் கொண்டுள்ள பெண்மை நலத்திற்கும், பழம் அவன் இனிய வஞ்சக மொழிக்கும், ஒளித்தல் களவொழுக்கத்தே கரந்து திரிதற்கும் உவமைகளாக அமைந்தன என்பார் இவர்.

'புலியேற்றை மடப்பிடியின் கன்றினைக் கோடற்குப் பலவின் கொழுநிழற்கண் ஒளித்திருக்கும் என்றதனால், தலைமகன் நின்

Koviloor Digital Library

பெண்மை நலம் கவர்தலைக் கருதிக் களவே விரும்பி ஒழுகுகின்றான்' என உள்ளுறை கொள்வார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. இது பழைய உரையைத் தழுவிய விளக்கமாகும்.

217

பெரு வரை வேங்கைப் பொன் மருள் நறு வீ
மான் இனப் பெரும் கிளை மேயல் ஆரும்
கானக நாடன் வரவும் இவள்
மேனி பசப்பது எவன்கொல் - அன்னாய்!

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீட்சியுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : வரைதற்கு வேண்டுவன செய்தற் பொருட்டுச் சில காலம் தலைவன் பிரிந்திருந்தபொழுது தலைவி ஆற்றாது வருந்தினாள். தலைவன் குறித்தவாறு மணத்திற்குரிய ஏற்பாடுகளோடு வந்தமையை அறிந்த தோழி இங்ஙனம் கூறி அவளை மகிழ்வித்தாள்.

உரை : தோழி! உயர்ந்த மலையகத்தே உள்ள வேங்கை மரத்தின் பொன்னிறமான நறிய மலர்களை மானினங்களின் திரள்கள் மேய்ந்து மகிழும் கானக நாட்டின் தலைவன் வரைதற்கு ஆயத்தமாய் வரவும் நீ நின் மேனி பசப்பூர நிற்பது என்ன காரணம் பற்றி? (பசத்தற்குக் காரணம் இல்லையென்றபடி).

உரை விளக்கம் : காட்டகத்தே மான்கள் கூட்டமாய்த் திரியும் இயல்பினவாதலின் 'மான் இனப் பெருங்கிளை' என்றாள். தலைவன் பிரிந்தால் தலைவியின் மேனி பசப்பது இயல்பே. ஆயின், ஈண்டுத் தலைவன் வரும் போது அஃதறியாது பசந்தாளாதலின், 'கானக நாடன் வரவும் இவண் மேனி பசப்பது எவன்கொல்?' எனக் கேட்டாள் என்க.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பொன் மருள் - பொன்போன்ற; வீ - மலர்; கிளை - கூட்டம்; எவன்கொல் - என்ன காரணம் பற்றி.

இலக்கணக்குறிப்பு : மருள் - உவம உருபு; மேயல் - தொழிற் பெயர்; கொல் - அசைச்சொல்.

மேற்கோள் : வேங்கைப்பூ பொன்போன்றது :
கருங்கால் வேங்கை மலரின் நாளும்
பொன்னன்ன வீ சுமந்து
- புறம். 137.

உள்ளுறை : வேங்கைப் பூவை மானின் பெருந்திரள் மேய்ந்து இன்புறும் என்பது இனித் தலைவனும் தலைவியும் மணந்து கொண்டு இல்லறம் நிகழ்த்தும்பொழுது அவர்களின் கிளையாகிய பலரும் தலைவன் மனையில் உள்ள பெருஞ்செல்வத்தை நுகர்வர் என்பதனை உள்ளுறுத்ததாகும்.

218

நுண் ஏர் புருவத்த கண்ணும் ஆடும்;
மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்;
களிறு கோட் பிழைத்த கதம் சிறந்து எழு புலி
எழுதரு மழையின் குழுமும்
பெருங் கல் நாடன் வரும்கொல்? - அன்னாய்!

கூற்று : தலைமகன் வரைவு வேண்டிவிடத்தமர் மறுத்துழி அதுகேட்டு, 'இஃது என்னாம் கொல்?' என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி தனக்கு நற்குறி செய்யக் கண்டு, 'கடிதின் வந்து வரைவான்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம் : மகட்கொடை வேண்டித் தலைவன் அனுப்பிய பெரியோர்க்குத் தலைமகளின் தமர் உடம்படாமை

Koviloor Digital Library

கண்டு வருந்தினாள் தலைமகள். அப்போது நல்லது நடக்கும் என்பதனை அறிவிக்கும் நன்னிமித்தங்கள் தனக்குத் தோன்றியமையைக் கூறித் தலைமகளை ஆற்றுவிப்பாளாய் இங்ஙனம் கூறினாள் தோழி.

உரை : தோழியே! நுண்ணிய அழகுடைய என் கண்ணும் துடிக்கின்றது. அத்துடன், மயிர் ஒழுங்குடைய என் முன்கையில் அணியப் பெற்ற வளையல்களும் செறிகின்றன. இந்நிமித்தங்கள், தான் கொள்ளக் கருதிய களிற்றி யானை தப்பியமையால், சினம் மிக்கு எழுந்த புலி மழைபொழிதற்குத் திரண்டெழுந்த முகில் முழங்குவதுபோல் முழங்கும் நாட்டின் தலைவன் நின்னை வரைந்து கொள்ள வருவான் என அறிவிக்கின்றனவோ?

உரை விளக்கம் : தோழி 'கண்ணும் ஆடும்' என்று வாளா கூறினும் இடக்கண் என்று கொள்க. பெண்கட்கு இடக்கண்ணும் ஆண்கட்கு வலக்கண்ணும் துடித்தல் நன்னிமித்தம் என்பது தமிழர் நம்பிக்கை. வளை செறிதல் என்றது உடல் பூரித்தலைக் குறித்தது. இஃதும் நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது. தான் குறிவைத்த இரை தப்பியமையால், இயல்பாகவே சினமுடைய புலி, மேலும் சினம் சிறந்து நின்றது என்பாள் 'கதம் சிறந்து' என்றாள். சிறத்தலாவது மிகுதலாம். 'நாடன் வரும் கொல்' என்று ஐய வாய்பாட்டால் கூறினாளேனும் தலைவன் மீண்டும் பெண்கேட்டு வந்து தலைவியை மணந்து கொள்வது ஒருதலை என்பது அவள் உளக்கருத்தாகும்.

அருஞ்சொற்பொருள் : ஏர் – அழகு; ஆடும் – துடிக்கும்; செறூஉம் – இறுகும்; கதம் – சினம்; சிறந்து – மிகுந்து; மழை – முகில்; குழுமும் – முழங்கும்.

இலக்கணக்குறிப்பு : கண்ணும் ஆடும் – சினையாகு பெயர் – புருவத்திற்கு ஆயிற்று.

Koviloor Digital Library

மேற்கோள் : பெண்டிர்க்கு இடக்கண் துடித்தல் நன்னிமித்தமாதல் :

மனைவயிற் பல்லியும் பாங்கொத்து இசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே'

– பாலைக்கலி. செய். 10.

பூங்கண் இடமாடும் கனவும் திருந்தின
ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம்நினைப்ப
வீங்கிய மென்தோள் கவினிப் பிணிதீரப்
பாங்கொத்துப் பல்லி படும்

– ஐந்.எழு. 71.

சுரிவளை பொலிந்த தோளும் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி

– குறுந். 240.

புலியின் சினம் :

களிற்றிரை பிழைத்தலின் கயவாய் வேங்கை
காய்சினம் சிறந்து குழுமலின் வெரீஇ

– அகம். 221.

உள்ளுறை : களிறு கோள் பிழைத்தமையால் சினம் சிறந்து எழுபுலி முழங்கும் என்றது, நம் சுற்றத்தார் மகட்கொடை மறுத்தலினால் தலைவன் முன்னினும் ஊக்கம் சிறந்து நின்னைப் பெறும் முயற்சியில் வெற்றிபெறுவான் என்ற உள்ளுறைப்பொருள் கொண்டதாகும். (பெருமழைப்புலவர்)

தன்னாற் கொள்ளப்பட்ட களிறு தப்பினதற்குப் புலி கதம் சிறந்து குழுமும் என்றது நினைத்தனவற்றிற்குக் குறைவரின் அதற்கு வெகுண்டு முடிப்பான். (பழையவுரை)

Koviloor Digital Library

219

கருங் கால் வேங்கை மாத் தகட்டு ஒள் வீ
இருங் கல் வியல் அறை வரிப்பத் தாஅம்
நல் மலை நாடன் பிரிந்தென,
ஒள் நுதல் பசப்பது எவன்கொல்? – அன்னாய்!

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த அணுமைக் கண்ணே ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டும் பொருள் ஈட்டுதற் பொருட்டுத் தலைமகன் பிரிந்து சில நாட்களே ஆயின. ஆயினும் பிரிவாற்றாது கலங்கினாள் தலைவி. அவட்குத் தோழி கூறியது இது.

உரை : தோழி! கரிய அடி மரத்தைக் கொண்ட வேங்கையின் பெரிய இதழ்களையுடைய ஒளி பொருந்திய மலர்கள், கரிய மலையின் அகன்ற பாறைகள் அழகுறும்படிப் பரந்து கிடக்கும் நல்ல மலை நாடனாகிய நம் காதலர் பிரிந்த அளவிலேயே நின் ஒளியுடைய நெற்றி பசலையுறுவது என்னை?

உரை விளக்கம் : வேங்கையின் மலர்களை 'ஒள்வீ' எனச் சிறப்பித்தாள் அவை பொன்னிறத்துடன் பொலிதல் பற்றி. 'நாடன் பிரிந்தென .... பசப்பது எவன்?' என்றாள் பிரிந்த அப்பொழுதிலேயே மேனி வாட்டமுற்றாள் எனக் குறிக்கவும் அது விரும்பத்தக்கதன்று எனக் கழறவும் என்க. மணத்துக்குரிய பொருள்தேடவே தலைவன் பிரிந்தமை கருதித் தலைவி பொறுமையாகக் காத்திருக்க வேண்டுமேயன்றிப் பசத்தல் ஆகாது என்பாள், 'பிரிந்தென ..... எவன்கொல்?' என்றாள். மணந்து கொண்ட பின், பொருளீட்டல் முதலிய கடமைகள் பொருட்டு நீண்டநாள் பிரிவைத் தாங்கவேண்டுமே; அதனை நீ செய்யவல்லையோ? என்ற குறிப்பும் இதில் உண்டு.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கால் – அடிப்பகுதி; மாத்தகடு – பெரிய இதழ்; வீ – மலர்; வியல் அறை – அகன்ற பாறை; வரிப்ப – அழகுபெற; தாஅம் – பரக்கும்.

மேற்கோள் : வேங்கை மரம் கரிய அடியை உடைத்தாதல் :
அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை
– குறுந். 26.

'அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட்டு ஒள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறம் கடுக்கும்'
– புறம். 202.

வேங்கை மலர் பாறையில் உகுதல் :
கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் நாடன்
– குறுந். 47.

உள்ளுறை : வேங்கை மலர் பாறையின்மேல் பரக்கும் நாடன் என்றது 'நம் பொல்லாமை மிக்க ஒழுக்கத்தைத் தன் நல்லொழுக்கத்தால் மறைப்பான் தலைவன்' என உள்ளுறுத்ததாகும். இனி, 'சிறந்த குடியிலே பிறந்த நம் பெருமானுடைய செயல்கள் அனைத்தும் பெருமை மிக்க நம் குடியின் சிறப்பை உயர்த்துவனவாம்' என்பது இதன் கண்ணுள்ள உள்ளுறை தரும் குறிப்புப் பொருள் என்பார் பெருமழைப்புலவர்.

220

அலங்குமழை பொழிந்த அகன்கண் அருவி
ஆடுகழை அடுக்கத்து இழிதரு நாடன்
பெருவரை அன்ன திருவிறல் வியல் மார்பு
முயங்காது கழிந்த நாள், இவள்
மயங்கு இதழ் மழைக்கண் கலிழும் – அன்னாய்!

Koviloor Digital Library

கூற்று : நொதுமலர் வரைவின்கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைவி மலை நாடனொருவன் மேற் காதல் கொண்டு கற்புக்கடம் பூண்டவள் என்பது அறியாத பிறர் அவளை மணம் புரிதலை விரும்பி வந்தனர். அதனையறிந்த தோழி, செவிலிக்கு உண்மையை வெளிப்படுத்தும் முகமாகச் சொல்லியது இது.

உரை : அன்னையே! அசையும் முகில்கள் பொழிந்த மழையினால் உண்டான பெரிய அருவிகள், அசையும் மூங்கில்கள் அடர்ந்த பக்க மலைகளின் மேல் விழுதற்கு இடனான மலை நாடனுடைய பெரிய மலைபோன்ற, பலராலும் விரும்பப்படும் அழகும் வெற்றியும் உடைய மார்பினைத் தழுவாமல் கழியும் ஒவ்வொரு நாளும் இவளுடைய மயங்கிய இதழ்போலும் குளிர்ந்த கண்கள் கண்ணீரைச் சொரியும். (இதனை உணர்ந்து செயல்படுக.)

உரை விளக்கம் : முகில்கள் பொழிந்த மழையின் மிகுதியால் அருவிகள் அகன்றனவாய் வீழ்ந்தமையின் 'அகன்கண் அருவி' எனச் சிறப்பித்தாள். தலைவியின் அன்பிற்கு உரிய காதலன் பெரும் தகுதியாளன் என்பது தோன்ற, 'பெருவரை யன்ன திருவிறல் மார்பன்' எனச் சிறப்பித்தாள். 'முயங்காது கழிந்த நாள்' என்பது, அணையாது வீணே கழிந்த நாள் என்னும் பொருட்டு. தலைவி பலகாலும் அவன் மார்பை முயங்கி இன்புற்றாள் என்பது தோன்ற இங்ஙனம் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : அலங்கு - அசைகின்ற; கழை - மூங்கில்; அடுக்கம் - பக்கமலை; திரு - அழகு; விறல் - வெற்றி; வியன் - அகன்ற; மழைக்கண் - குளிர்ந்த கண்கள்.

இலக்கணக்குறிப்பு : அலங்குசினை, மயங்கு மழை, ஆடுகழை - வினைத்தொகைகள்.

Koviloor Digital Library

உள்ளுறை : அசைகின்ற முகில்கள் தாமே திரண்டு வந்து மழை பொழிந்தமையால் உண்டான பேரருவி பக்கமலைகளின் மிசை வீழுமாறுபோலே ஊழ்வலியால் நம்பெருமகள்பால் வந்துஅவள்பால் காதல் கூர்ந்து இடையறாது பேரருள் சுரக்கும் நம்பியாகிய நாடன் என்பது குறிப்பால் விளங்குகிறது என்பார் பெருமழைப்புலவர்.

'இவள்மேல் வைத்த தண்ணளி நம்மிடத்தும் வந்து இடையறாது ஒழுகும் தன்மையான்' என்பது இதன் கண்ணுள்ள உள்ளுறைப்பொருள் என்பார் ஈழத்து உரையாசிரியர்.

இனி, தலைவன் புரிந்த தலையளியால் உயிர் வாழ்கிறாள் என்றும், எனவே நொதுமலர்க்கு வரைவுடன்படின் உயிர்வாழாள் என்றும் உள்ளுறுத்தவாறு என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

அன்னாய்ப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

23. அம்ம வாழிப் பத்து

பாடல்தோறும் 'அம்மவாழி தோழி' என்னும் தொடர் பயின்று வருதலால் இது அம்மவாழிப் பத்தாயிற்று.

221

அம்ம வாழி, தோழி! காதலர்
பாவை அன்ன என் ஆய் கவின் தொலைய,
நல் மா மேனி பசப்ப,
'செல்வல்' எனப - தம் மலை கெழு நாட்டே.

கூற்று : 'ஒருவழித் தணந்து வரைதற்கு வேண்டுவன முடித்து வருவல்' என்று தலைமகன் கூறக்கேட்ட தலைமகள் அவன் சிறைப்புறத்தானாய்க் கேட்பத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக்காலத்தில் சில காலம் பிரிந்து சென்று திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மீள்வதாகத் தலைவன் கூறக்கேட்ட தலைவி, தன் இல்லத்தைச் சூழ்ந்த வேலியருகே தலைவன் நிற்கையில், அவன் கேட்கும் வகையில் தோழியிடம் கூறியது இது.

உரை : தோழியே! நீ வாழ்க. யான் கூறுவதனைக் கேட்பாய்! நம் தலைவர், அழகிய பாவையையொத்த என்னுடைய, பலராலும் ஆராயப்பட்ட அழகு என்னை விட்டு நீங்குமாறும், நன்மை அமைந்த என் மாமை நிறம் கொண்ட மேனி பசலையுறுமாறும் தம்முடைய மலைகள் நிறைந்த நாட்டுக்குச் செல்வதாகக் கூறுகின்றார். (யான் எங்ஙனம் பிரிவினைப் பொறுத்து அமைவேன்?).

Koviloor Digital Library

உரை விளக்கம் : தன்னை அயலார் யாவரும் பலகால் நோக்கி, கலைஞன் ஒருவன் பெண்மைக்குரிய அழகெல்லாம் தோன்றத் திறம்பட உருவாக்கிய பதுமை போன்றவள் எனப்பாராட்டியமையின் 'பாவையன்ன என் ஆய்கவின்' என்றாள். ஈண்டுப் பாவை என்றது கொல்லிப்பாவை என்பதும் பொருந்தும். 'ஆய்கவின்' என்றாள், இத்துணைப் பேரழகு இவட்கு வாய்த்ததுதான் எவ்வாறோ?' எனப்பலரும் வியந்தமையால். மாமேனியாவது, மாந்தளிர் போலும் நிறமும் ஒளியும் மிக்க மேனியாம். பிரிவினால் தன் இத்தகு மேனிநலம் கெட்டழிவது உறுதியென்பாளாய், 'நன்மாமேனி பசப்ப' என்றாள். தன் பெரும் கவினும், மேனி ஒளியும் கெடும் என்பதனைத் தலைவர் நன்கு அறிந்தும், அதுபற்றியெண்ணாது தம் மலைகெழுநாட்டுக்குச் செல்வாராம் என்றாள், சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்டுத் தான் சென்று பலநாள் நீட்டியாது விரைவில் தன்னை மணத்திற் கொள்ள வேண்டும் என்னும் குறிப்பில்.

அருஞ்சொற்பொருள் : பாவை – கல் மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட அழகிய பெண்ணுருவம், கொல்லிப்பாவை; கவின் – அழகு; மா – மாந்தளிர்; செல்வல் – செல்வேன்; கெழு – பொருந்திய.

இலக்கணக்குறிப்பு : அம்ம – கேட்பிக்கும் இடைச்சொல்; மா – மாந்தளிரைக் குறித்தலின் ஆகுபெயர்; செல்வல் – தன்மை ஒருமை வினைமுற்று.

மேற்கோள் : பெண்ணைப் பாவையோடு ஒப்பிடல் :

பாவை யன்ன நல்லோள் கணவன்
– பதிற். 61.

பாவையின் அழகு அழியாமை :

கால்பொருது இடிப்பினும் உரும் உடன்று எறியினும்
ஊறு பல தோன்றினும் பெருநிலம் கிளரினும்
திருநல உருவின் மாயா இயற்கைப் பாவை
– நற். 21.

Koviloor Digital Library

222

அம்ம வாழி, தோழி! நம் ஊர்
நளிந்து வந்து உறையும் நறுந் தண் மார்பன்
இன்னினி வாராமாறு கொல் -
சில் நிரை ஓதி! என் நுதல் பசப்பதுவே?

கூற்று : குறி இரண்டற்கண்ணும் வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வந்து, சிறைப்புறத்து நின்றுழி, 'நின் நுதல் பசத்தற்குக் காரணம் என்னை?' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : பகற்பொழுதிலும் இரவு வேளையிலும் வந்து தலைவியைக் கண்டு அளவளாவுதலை வழக்கமாகக் கொண்ட தலைமகன், பின்னர் இடையீடுபட்டு வரலாயினன். அங்ஙனம் வந்து தன் வீட்டின் அயலே அவன் நின்ற பொழுது, தன் தோழி கேட்டதற்கு விடையாகத் தலைவி கூறியது இது.

உரை : தோழியே, என் சொல்லைக்கேள். நம் ஊரின்கண் இடையீடின்றி அடுத்தடுத்து வந்து நம்முடன் உறைந்து செல்லும் வழக்கமுடைய, நறியதும் குளிர்ந்ததும் ஆகிய மலர்மாலையை அணிந்த நம் காதலர் இப்பொழுது அங்ஙனம் வாராமையினால் தான் சிலவாகிய நிரைத்த கூந்தலை உடைய என் நுதல் பசந்ததோ?

உரை விளக்கம் : இரவினும் பகலினும் தலைவன் அடுத்தடுத்து வந்து நம்மொடு தங்கினபோதும் நின்நுதல் பசப்பது ஏன் என வினவினாள் தோழி ஆதலின், அவன் அங்ஙனம் வரினும், என்றோ ஓரிரு நாட்களில் அவன் வாராமையே தன் நுதல் பசப்பிற்குக் காரணம் என்றாள். அஃதாவது, சின்னாள் பிரிவையும் தான் தாங்குவது அரிது என்றாள் என்க.

'நறும்தண் மார்பன்' என்று தலைவனைச் சிறப்பித்தது அவனுடைய மார்பினைத் தான் தழுவி இன்புற்றதனைக் குறிப்பால் உணர்த்திற்று. அத்தகு மார்பினை இடைவிடாது தழுவத் தான் விழைந்தாள் என்க.

Koviloor Digital Library

'சில்நிரை ஓதி' என்பதனைத் தோழிக்கு ஏற்றி, உரைப்பினும் பொருந்தும். சிலவாகியதும், நிரைத்ததும் ஆகிய கூந்தலை உடைய தோழியே! என்றாள் என்க. 'இன்னினி' என்றது, சிலபொழுது இடையிட்டுவரும் பொழுதே நுதல் பசந்தது எனில், தலைவன் பிரிந்து பலநாள் தன்னூர்க்கண் தங்கநேரின் யான் என்னாகுவேன் என்னும் மனக்கவலையைப் புலப்படுத்திற்று என்க. மார்வன் என்பதும் பாடம்.

அருஞ்சொற்பொருள் : நளிந்து – செறிந்து; அடுத்தடுத்து; உறையும் – தங்கும்; இன்இனி – இப்பொழுதே; வாராமாறு – வாராமையின்; நிரை – பந்தி; ஒழுங்குபட்ட; ஓதி – கூந்தல்.

இலக்கணக்குறிப்பு : நளி – செறிவுப் பொருள் தரும் உரிச்சொல்; மாறு – ஏதுப்பொருள் தரும் இடைச்சொல்; கொல் – அசைநிலை.

மேற்கோள் : தலைவன் இல்லாத போது தலைவி நுதல் பசப்புறல் :

நன்மலை நாடன் பிரிந்தென
ஒண்ணுதல் பசப்பது எவன்கொல் அன்னாய்
– ஐங். 219.

223

அம்ம வாழி, தோழி! நம் மலை
வரை ஆம் இழிய, கோடல் நீட,
காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும்
தண் பனி வடந்தை அற்சிரம்
முந்து வந்தனர் – நம் காத லோரே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வருகின்றமை அறிந்த தோழி தலைமகட்கு மகிழ்ந்து சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : பனிப்பருவத்தின்கண் வந்து வரைந்து கொள்வதாக உறுதியளித்துச் சென்ற தலைவன், அப்பருவம் வருதற்கு முன்பே அவன் விரைந்து வந்தமையைக் கண்டு மகிழ்ந்து தோழி தலைவிக்குக் கூறியது.

உரை : தோழியே! நீ வாழ்க! யான் சொல்வதனைக் கேள்! நம்முடைய மலையினின்று அருவிகள் ஒழுகவும், காந்தள் மலர்கள் மலர்ந்து விளங்கவும், காதலரைப் பிரிந்தோர் செயலற்று வருந்தவும் வீசும் தண்ணிய, நடுக்கத்தைத் தரும் வாடைக் காற்று வீசுதற்கு உரிய பனிக்காலம் வருதற்கு முன்பே நம் காதலர் வந்தார். (இனி, நின் வருத்தம் நீங்கி மகிழ்ந்திருப்பாயாக!)

உரை விளக்கம் : பனிக்காலம் வந்தால் அற்கு முற்பட்ட கூதிர்ப்பருவத்தில் ஒழுகிய அருவிகள் நின்றுவிடுவது இயல்பு. ஆனால் தலைவன் அந்நீர் ஒழுக்கு நிற்பதற்கு முன்பே வந்து விட்டான் என்பது தோன்ற 'வரை ஆம் இழிய' என்றாள். பனிப்பருவத்தே காந்தள் முதலிய மலர்கள் கருகிவிடுவது இயல்பு. ஆனால் தலைவன் அப்பருவத்திற்கு முன்பே வந்தமை தோன்றக் 'கோடல் நீட' என்றாள். பனியும் வாடையும் பிரிந்துறைவார்க்குத் தனிமையை மிகுவித்து வாட்டுவனவாதலின், 'நீ அங்ஙனம் நடுங்குதற்கு இடமில்லையாகும்படித் தலைவர் வந்தார்' என்று மகிழ்ந்து கூறினாள் என்க. 'தலைவர் நின்பால் கொண்ட பேரன்பு இத்தகையது' என்பது குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : ஆம் – நீர்; இழிய – ஒழுக; வடந்தை – வாடை; கோடல் – காந்தள் மலர்; நீட – நீண்டு வளர்ந்து சிறக்க, அடர்ந்து வளர; கையற – செயலற; நலிதல் – துயருறுத்தல்; பனி – நடுக்கம்; அச்சிரம் – பனிக்காலம்.

இலக்கணக்குறிப்பு : இழிய, நீட – செய என்னும் வாய்பாட்டு எச்சங்கள்; கையற – ஏதுப்பொருள் தரும் செயவென் எச்சம்.

Koviloor Digital Library

மேற்கோள் : பனிக்காலம் தனித்துறைவோர்க்குத் தாங்க இயலாதது :

யாங்குச் செய்வாங்கொல் தோழி ஈங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர
முன்னர்த் தோன்றும் பனிக்கடு நாளே

– குறுந். 380.

வருவேம் என்ற பருவம் உதுக்காண்
தனியோர் இரங்கும் பனிகூர் மாலை

– குறுந். 358.

224

அம்ம வாழி, தோழி! நம் மலை,
மணி நிறம் கொண்ட மா மலை வெற்பில்
துணி நீர் அருவி நம்மோடு ஆடல்
எளிய மன்னால், அவர்க்கு; இனி,
அரிய ஆகுதல் மருண்டனென், யானே.

கூற்று : இற்செறிப்பு உணர்ந்த தலைமகள் ஆற்றாளாய், தலைமகன் சிறைப்புறத்தானாகத், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தன் மேனி வேறுபாடு கண்ட தன் தமர் அவளை இல்லின்கண் காவலோடு செறிப்பர் என உணர்ந்த தலைவி, தலைவனோடு அருவியாடித் திளைக்கும் வாய்ப்பு அரியதாகும் என்ற அச்சத்தினைத், தலைவன் கேட்கும் வகையில் தோழிக்குச் சொல்லியது.

உரை : தோழியே, நீ நீடு வாழ்க! யான் கூறுவதனைக் கேள். நமது மலைநாட்டின்கண் உள்ள, நீலமணிபோல் ஒளிவிடும் பக்க மலையினின்றும் வீழும் தெளிந்த அருவி நீரில் முன்பெல்லாம் நம்மோடு கூடி ஆடித் திளைத்தல் நம் காதலர்க்கு எளிதாயிருந்தது. இப்பொழுது அது அரிதாயிருக்குமென்று மனம் சுழல்கின்றேன்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : கரிய நிறம் கொண்ட மலையை நீல மணிபோன்ற மலையென்றாள். அருவி நீர் தூய்மையும் ஒளியும் உடையதாதலின் 'துணிநீர் அருவி' என்றாள்.

'எளியமன்' என்றதாலும் 'இனி' என்றதாலும், பண்டு என்னும் சொல் வருவித்துரைக்கப்பட்டது. இனி அரியவாகுதல் மருண்டனென்' என்றது, தன்னைத்தமர் இற்செறித்தமையைக் குறிப்பால் உணர்த்தியாதாம். தலைவன் தன்னொடு பிரியாது வாழுமாறு விரைவில் மணந்துகொள்ள முன்வரல் வேண்டும் என வற்புறுத்தியவாறு.

அருஞ்சொற்பொருள் : மணி நிறம் – நீலமணியின் நிறம்; வெற்பு – பக்க மலை; துணிதல் – தெளிந்திருத்தல்; மருண்டனென் – மயங்கினேன்.

இலக்கணக்குறிப்பு : எளியமன் – மன் கழிவுப் பொருள் உணர்த்தும் இடைச்சொல்; ஆல் – அசைச்சொல்.

மேற்கோள் : தலைமக்கள் அருவியாடுதல் :

ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅன் பகலே
பாடின் அருவி ஆடுதல் இனிதே
– குறுந். 353.

பெருங்கல் நாடனொடு . . . .
பெருவரை அடுக்கடுத்து அருவி ஆடி
– நற். 259.

Koviloor Digital Library

225

அம்ம வாழி, தோழி! பைஞ் சுனைப்
பாசடை நிவந்த பனி மலர்க் குவளை
உள்ளகம் கமழும் கூந்தல் மெல்லியல்
ஏர் திகழ் ஒள் நுதல் பசத்தல்
ஓரார் கொல் – நம் காதலோரே?

கூற்று : மெலிவு கூறி வரைவு கடாவக் கேட்ட தலைமகன் தான் வரைதற் பொருட்டால் ஒருவழித் தணந்து நீட்டித்தானாக, ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவியின் உடல் மெலிவினைக் கூறி விரைவில் மணந்து கொள்ளுமாறு வற்புறுத்தினாள் தோழி. அது கொண்டு தலைவன் தன்னூர் சென்று வரைவுக்குரியன செய்வதில் காலம் தாழ்த்தது கண்டு தலைவி வருந்தினாள். அப்போது தோழி அவட்குச் சொல்லியது.

உரை : தோழியே, நீ நீடு வாழி! யான் சொல்வதைக் கேள். பசிய சுனையின் கண்ணே பசிய இலைகட்கு இடையே உயர்ந்து தோன்றும் குளிர்ந்த குவளை மலரின் உள்ளகம் போல் நறுமணம் கமழும் கூந்தலை உடைய மென்மைப் பண்புடைய நின் அழகு விளங்கும் ஒளிபொருந்திய நெற்றி பசப்புறுதலை நம் காதலர் எண்ணிப் பாராரோ? (எண்ணாதிரார் நின் கவலை ஒழிக!)

உரை விளக்கம் : எந்நேரமும் நீர் வற்றாது பசியதாயிருத்தலின் 'பைஞ்சுனை' எனச் சிறப்பித்தாள். நீர் நிரம்பிய சுனையகத்ததாதலின் குவளையின் இலைகள் பசுமை மாறாதிருந்தன என்பாள் 'பாசடை நிவந்த' என்றாள். தண்ணிய நீரிடையே வாழ்தலின் குவளை மலர் எப்பொழுதும் குளிர்ந்திருத்தல் பற்றிப் 'பனி மலர்' என்றாள். குவளையின் உள்ளிதழ்கள் நறுமணத்தைப் பொதிந்து வைத்திருத்தலின் 'உள்ளகம் கமழும் கூந்தல்' என்றாள். அவள் கூந்தலில் அம்மலர்களைச்

Koviloor Digital Library

சூடியமையால் கூந்தல் அம்மணத்தை வீசிற்று என்றுமாம். தலைவன், தன் காதலியின் மென்மைத் தன்மையிலும், நெற்றியின் அழகிலும் மனம் போக்கியவனாதலின், அம்மென்மையும், அழகும் கெட்டொழியுமாறு காலம் தாழ்த்தியிரான் என அவட்கு உறுதியளித்து வற்புறுத்தினாள் என்க.

'நின் மணமிக்க கூந்தலைத் தீண்டியும் அதில் மலர் சூட்டியும், அதனைப்பாயலாகக் கொண்டும் அதன் நலன் நுகர்ந்தவனாதலாலும், நின் பேரழகினையும் பெண்மை நலத்தையும் நன்கு உணர்ந்தவன் ஆதலாலும் அவற்றை மறந்து நெடிது நாள் கடத்தாமல் விரைவில் வருவான்' என்று ஆறுதல் கூறும் வகையில் 'ஓரார்கொல் நம் காதலோரே' என்றாள். 'நம் காதலோர்' என்றது, நம்பால் பெருங்காதல் கொண்டவர் என்ற குறிப்பிலாம்.

அருஞ்சொற்பொருள் : பாசடை – பசிய இலை; நிவந்த – உயர்ந்து தோன்றுகிற; பனி – குளிர்ச்சி; ஏர் – அழகு; ஒண்ணுதல் – ஒளிவிடும் நெற்றி; ஓர்தல் – எண்ணுதல்.

மேற்கோள் : நீர் மலர்கள் இலைகட்கு இடையே நிவந்து தோன்றல் :

பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்

– குறுந். 9.

தன் காதலியின் நுதல் பசக்க ஒருப்படான் தலைவன் என்பது :

தம்மின் றமையா நம்நயந்து அருளி
நறு நுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறியலரே

– நற். 1.

Koviloor Digital Library

226

அம்ம வாழி, தோழி! நம் மலை
நறுந்தண் சிலம்பின் நாறு குலைக் காந்தள்
கொங்கு உண் வண்டின் பெயர்ந்து புறமாறி, நின்
வன்புடை விறற் கவின் கொண்ட
அன்பிலாளன் வந்தனன், இனியே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் நீட்டித்து வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டிய பொருள் தேடச் சென்று காலம் நீட்டித்து வந்த தலைவனின் வரவு கண்ட தோழி தலைமகட்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழியே, நீ நீடு வாழி! யான் கூறுவதனைக் கேள். நம் மலையின் கண்ணுள்ள நறுமையும் தண்மையும் கொண்ட பக்க மலையில் வளரும் மணம் நாறும் மலர்களின் கொத்துக்களை உடைய காந்தளின் தேனை உண்ணும் வண்டினைப் போலப் பெயர்ந்து, மனம் வேறுபட்டுச் சென்று நின் வலியுடையதும் பிறர் அழகை வென்று மேம்பட்டதுமான கவினைக் கவர்ந்து கொண்ட அன்பில்லாதவன் இப்பொழுது வந்தனன். (நின் துயரம் நீங்குக).

உரை விளக்கம் : காந்தள் குறிஞ்சி நிலத்திற்குச் சிறப்பாக உரியதாதலின், 'சிலம்பின் நாறு குலைக் காந்தள்' என்றாள். வண்டு காந்தளின் கொங்கினை உண்டு, பின் அக்காந்தளின் நிலைபற்றிச் சிறிதும் கவலையின்றி, இடம் பெயர்ந்து சென்றாற்போலத், தலைவனும் தலைவியின் நலம் நுகர்ந்து பிரிந்து சென்றான் என்று கூறுவாளாய், 'கொங்குண் வண்டின் பெயர்ந்து புறம் மாறி' என்றாள். புறம் மாறுதலாவது இடம் பெயர்தல். மனம் வேறுபட்டு என்பாரும் உளர்.

Koviloor Digital Library

வன்மையும், வெற்றியும் உடைய தலைவியின் அழகு, தலைவனின் நெடுநாட்பிரிவினால் கெட்டழிந்தமையின், அதன் முன்னைய நிலை கருதி, 'வன்புடை விறற் கவின்' என்றாள். அத்தகைய பேரழகு கெடுதற்கு ஏதுவாகத் தலைவன் நெடுநாள் பிரிந்திருந்தான் என்பது கருதி, அவனை 'அன்பிலாளன்' என்றாள்.

இனி, 'கொங்குண் வண்டின் பெயர்ந்து புறம் மாறி நின் வன்புடை விறற் கவின் கொண்ட அன்பிலாளன்' என்றது, தலைவியின் கூற்றைக் கொண்டு கூறியது என்றும், 'நின்னால் பழி கூறப்பட்டவன் உண்மையில் அப்பழிக்குரியவன் அல்லன். அவன் காலம் தாழ்த்தமைக்குக் காரணம் அவன் நின்னை மறந்து புறம் மாறியதும் அன்பில்லாமையும் அல்ல, வினை முடியாமையே என்று உண்மையுணர்த்தினாள் என்றும் கூறுவார் பெருமழைப்புலவர்.

அருஞ்சொற்பொருள் : கொங்கு – தேன்; புறம்மாறி – இடம் பெயர்ந்து; மனம் வேறுபட்டு; வன்பு – உறுதி; விறல் – வெற்றி; கவின் – அழகு; இனி – இப்பொழுது.

இலக்கணக்குறிப்பு : வண்டின் – இன் ஐந்தாம் வேற்றுமை உருபு, ஒப்புப் பொருட்கண் வந்தது.

மேற்கோள் : மலை நிலம் காந்தளை உடையது :

சிலம்புடன் கமழும் அலங்கு குலைக் காந்தள்
– குறுந். 239.

காந்தள், கமழ்குலை யவிழ்ந்த நயவருசாரல்
– நற். 313.

தலைவன் வண்டு போன்றவன் :

மகிழ்நன் மாண்குணம் வண்டு கொண்டன கொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டான்
கொல்
– ஐங். 90.

Koviloor Digital Library

வண்டு ஒருமலரை விடுத்து வேறொரு
மலரை நாடுவது : – வண்டினம்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர
– அகம். 71.

227

அம்ம வாழி, தோழி! நாளும்,
நல் நுதல் பசப்பவும், நறுந் தோள் ஞெகிழவும்,
'ஆற்றலம் யாம்' என மதிப்பக் கூறி,
நப் பிரிந்து உறைந்தோர் மன்ற; நீ
விட்டனையோ – அவர் உற்ற சூளே?

கூற்று : ஒருவழித் தணந்து வந்த தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக்காலத்தில் தலைமகன் சிலகாலம் பிரிந்திருந்து மீண்டும் வந்து தலைவியின் இல்லத்தருகே நின்ற பொழுது, அவன் கேட்கும் வண்ணம் தோழி தலைவிக்கு இங்ஙனம் கூறினாள்.

உரை : தோழி! நீ நீடு வாழி! யான் சொல்வதனைக் கேள். 'உம்முடைய அழகிய நுதல் பசலையால் நாளும் நிறம் மாறுமாறும், நறுமணம் மிக்க தோள்கள் மெலிவெய்துமாறும் நும்மைப் பிரிந்திருத்தலை யாம் ஆற்றேம்' என்று நாம் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கூறிப் பின்னர் அதற்கு மாறாக நம்மைப் பிரிந்து வேறிடத்தில் வாழ்ந்தவர் நம் தலைவர். (தெளிவாக அவர் நம்பால் அன்பிலர்). அத்தகையவரின் சூள்மொழியினை மெய்யெனக் கொள்ளாது விட்டனையோ?

Koviloor Digital Library

உரை விளக்கம் : தலைவன் தலைவியைத் தெளிவித்தற் பொருட்டு அவள் கையைப்பற்றித் தெய்வத்தின் முன்னர்ச் சூள் உரைத்தல் வழக்கமாதலின், அவ்வாறு தலைவன் செய்த சூளை நம்பாது தலைவி புறக்கணித்து விட்டாளோ என ஐயுற்று, 'நீ விட்டனையோ அவர் உற்ற சூளே?' என வினவினாள். தலைவன் வரக் காலந்தாழ்த்தமையால் தலைவி பெரிதும் வருந்தினாளாதலின், 'தலைவன் சொல்லை நம்பி நீ காத்திருத்தல் கடன். ஆனால் நீ வருந்துவதனைப் பார்த்தால், ஒருவேளை அவன் சூளுறவினில் நீ முன்பு கொண்ட நம்பிக்கையை இப்பொழுது கைவிட்டனையோ என ஐயுற வேண்டியுள்ளது' என்ற பொருள்பட வினவினாளாகக் கொள்க. இதனால், சிறைப்புறம் நிற்கும் தலைவன், தன் சொல்லை நம்பியவள், இப்பொழுது நம்புதலை விட்டுவிட்டனளோ எனக் கருதி, மனம் வருந்தி, விரைவில் மணத்துக்கு ஏற்பாடு செய்வான் என்பது அவள் கருத்தாகக் கொள்க. 'நுதல் பசத்தலையும், தோள் நெகிழ்தலையும் ஆற்றலம் யாம்' என மதிக்கும்படியாகக் கூறிய தலைவன், மணத்திற்கு ஆவன செய்வதில் தாழ்த்தனனாதலின், தலைவி ஐயுறற்கு இடமேற்பட்டதாம். தலைவன் சார்பாகத் தோழிபேசியது தலைவனைத் தெருட்டுதலை நோக்கமாகக் கொண்டதாகும்.

இனி இதற்கு வேறு பொருளும் தோன்றும். 'மதிப்பக்கூறி, நம் பிரிந்து உறைந்தோர் மன்ற' எனக் கூறி 'நீ விட்டனையோ அவர் உற்ற சூளே?' என வினவியதால், 'முன்னர் நாம் மதிக்குமாறு சூளுரைத்துவிட்டுப் பின் அதனைக் கடைப்பிடியாது பிரிந்து உறைந்தவன் தலைவனாதலின், இன்னுமா அவன் உற்ற சூளை நம்பியிருக்கின்றனை?' என்று, அவன் சொல்லில் தனக்கு நம்பிக்கை போய்விட்டது என்பது பட வினவினாள் என்றும் கொள்ளலாம்.

இனி, 'நின் நல்ல நுதல் ஒளியிழந்து விட்டது; நறுந்தோளும் நெகிழ்ந்து விட்டது. இந்நிலையிலும் இன்னும் நீ 'ஆற்றலம் யாம்' என்று கூறிய சொற்களை நம்புகின்றனை' எனக் கூறலும் உண்டு.

Koviloor Digital Library

'நாளும், நன்னுதல் பசப்பவும், நறுந்தோள் நெகிழவும் ஆற்றலம் யாம்' என்பதனைத் தலைவன் சொன்னதைக் கொண்டெடுத்துச் சொன்னதாகவும் கொள்ளலாம். ஏற்றது கொள்க.

அருஞ்சொற்பொருள் : ஆற்றலம் – பொறுக்க மாட்டேம்; நப்பிரிந்து – நம்மைப் பிரிந்து; மன்ற – தெளிவாக; விட்டனையோ – கைவிட்டனையோ? இன்னும் விட்டிலையோ? சூள் – உறுதிமொழி.

மேற்கோள் : தலைவன் சூள் உரைத்தல் :

எக்கர் நண்ணிய எம்மூர் வியன் துறை
நேர் இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோடு உற்ற சூளே

– குறுந். 53.

228

அம்ம வாழி, தோழி! நம் ஊர்
நிரந்து இலங்கு அருவிய நெடு மலை நாடன்
இரந்து குறையுறாஅன் பெயரின்,
என் ஆவது கொல் – நம் இன் உயிர் நிலையே?

கூற்று : தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, அவர் கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லுவாளாய், தோழி அறத்தொடுநின்றது.

கூற்று விளக்கம் : தலைமகன் தலைமகளின் தமர்பால் பெண்கேட்டுத் தூதனுப்பியபொழுது அவர்கள் உடம்படவில்லை. இந்நிலையில், தலைவியின் கற்பிற்குச் சிதைவு வராமற் காக்கும் பொருட்டுத் தோழி, தலைவிக்குக் கூறுவாள் போல், தலைவியின் தமர் கேட்குமாறு சொல்லியது இது.

Koviloor Digital Library

உரை : தோழியே! நீ வாழி! யான் கூறுவதனைக் கேள். ஒளிமிக்க அருவி இடைவிடாது ஒழுகுதற்கு இடமான நெடிதுயர்ந்த மலைகளைக் கொண்ட நாட்டின் தலைவன் நம் சுற்றத்தாரை வேண்டித் தன் குறையை முடித்துக்கொள்ளாது (ஏமாற்றத்துடன்) நம்மூரை விட்டு நீங்கினானெனின், நம்முடைய இனிய உயிரின் நிலை என்னாகுமோ?

உரை விளக்கம் : இடைவிடாது அருவிகள் வீழும் நெடுமலை நாடன் என்றது, தலைவன் தலைவியை மணந்து கொள்ளுதற்கு ஏற்ற தகுதிகள் அனைத்தும் உடையவன் என்னும் குறிப்பினதாகும். அவனுக்கு மகட்கொடை நேர்வது நம் குடிக்கு நன்மையும் புகழும் தரும் எனத் தலைவியின் தமருக்குக் குறிப்பினால் உணர்த்தினாள் தோழி என்க.

தலைவன் தன் குறை மறுக்கப்பட்டு ஏமாற்றத்துடன் திரும்ப நேரின் உயிர் வாழான் என்பதும் அவன் உயிர் வாழான் எனின் அவனைத்தவிர உயிர் வேறு இல்லாத தலைவிக்கும், அவளோடு இருதலைப்புள்ளின் ஓருயிர் போல் உறவுடைய தனக்கும் வாழ்வில்லை என்பதும் தோன்ற 'இரந்து குறையுறாஅன் பெயரின் என்னாவது கொல் நம் இன்னுயிர் நிலை?' என்றாள். உயிரினும் சிறந்தது கற்பாதலின், அக்கற்பிற்குச் சிதைவு வந்தவிடத்து, உயிர் விடுதலல்லது வேறு வழியில்லை எனத் தமர் உணருமாறு கூறிய தோழியின் அறிவு சிறப்புடைத்து.

அருஞ்சொற்பொருள் : நிரந்து – இடைவிடாது; இலங்குதல் – ஒளிவிடல்; பெயரின் – நீங்கினால்.

இலக்கணக்குறிப்பு : குறையுறாஅன் – முற்றெச்சம்; பெயரின் – செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கொல் – இடைச்சொல், ஐயப்பொருட்டு.

Koviloor Digital Library

229

அம்ம வாழி, தோழி! நாம் அழப்
பல்நாள் பிரிந்த அறனிலாளன்
வந்தனனோ, மற்று இரவில்?
பொன்போல் விறற் கவின் கொள்ளும், நின்
நுதலே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டான் என்பது கேட்டு, தலைமகட்கு எய்திய கவினைத் தோழி, தான் அறியாதாள் போன்று, அவளை வினாவியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு ஆகும் பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வந்தான் எனக் கேட்ட தலைவி பெருமகிழ்ச்சியுற்றாளாக, அவள் மேனி வாட்டம் நீங்கிப் புத்தழகு பெற்றாள். அவள் தோழி, அதனை அறியாதாள் போலக் காட்டி, 'நின் நுதல் பெற்ற அழகுக்குக் காரணம் யாது? நின் காதலன் நேற்றிரவு வந்து உன்னைக் கூடித் தலையளி செய்தானோ?' எனக் கேட்டது.

உரை : தோழியே! நீ வாழ்க. யான் கூறுவதனைக் கேள். நாம் இருவரும் அழுது புலம்புமாறு நம்மைப் பலநாள் பிரிந்திருந்த அறமற்றவனாகிய நம் காதலன் நேற்று இரவில் வந்தானோ? நின் நுதல் பொன்னைப்போன்றதொரு பேரழகினைப் பெற்றுள்ளதே!

உரை விளக்கம் : தலைவனை அறனிலாளன் என்றாள் அவன் அன்பின்றி நெடுநாள் பிரிந்திருந்தான் என்பதுபட. அறத்திற் சிறந்தது அன்பறம் என்க. அந்நெடுநாட்பிரிவு தம் இடைவிடாத அழுகைக்குக் காரணமாயிற்று என்பாள் 'நாம் அழ' என்றாள். தம் அழகைப் பொருட்படுத்தாதான் ஆதலின் அறனிலாளன் என்றாள். 'தற்சேர்ந்தார் புன்கண் அஞ்சும் பண்பே சான்றோர் இயல்பாகவும், இவன் வன்னெஞ்சனாய் நாம் அழுதற்குக் காரணமானான் என்றாள். 'வந்தனனோ ... இரவில்?' என்றாள், முன்னை நாளில்

Koviloor Digital Library

தலைவிபால் காணாத மேனியழகை மறுநாள் காலையிற் கண்டாளாதலின். 'இரவில் வந்தானோ' என்றது, 'நின்னைக் கூடி இன்புற்றானோ?' என்னும் பொருளிலாகும்.

'விறற்கவின்' என்றாள் ஈடில்லாத பெருங்கவின் என்ற பொருளில். அவள் கவின் பிற பெண்டிர்க்குரிய கவினை வெற்றி கொண்டது என்பது பொருள். நுதல் பொலிவுற்றது என்றாளேனும் உடல் முழுதும் பொன்போல் மின்னிற்று எனக் கொள்க.

அருஞ்சொற்பொருள் : அறனிலாளன் – அறப்பண்பு அற்றவன், அன்பு அற்றவன்; விறல் – வெற்றி; நுதல் – நெற்றி.

மேற்கோள் : தலைவனை அறனிலாளன் எனத் தலைவி, தாய் ஆகியோர் பழித்தல் :

<u>தாய் கூற்று</u>

–'என் பொலந் தொடிக் குறுமகள்
அறனிலாளனொடு இறந்தனள் இனி'

– அகம். 219.

பிணர் அழி பெருங்கை புரண்ட கூவல்
தெண்கண் உவரிக் குறைக்குட முகவை
அறனிலாளன் தோண்ட

– அகம். 207.

<u>தலைவி கூற்று</u>

– யான் இன்று
அறனி லாளன் கண்ட பொழுதில்

– ஐங். 118.

அறனிலாளன் புகழ எற்
பெறினும் வல்லேன்மன் தோழி யானே

– நற். 275.

Koviloor Digital Library

230

அம்ம வாழி, தோழி! நம்மொடு
சிறு தினைக் காவலன் ஆகி, பெரிதும் நின்
மென் தோள் ஞெகிழவும், திரு நுதல் பசப்பவும்,
பொன் போல் விறற் கவின் தொலைத்த
குன்ற நாடற்கு அயர்வர் - நன் மணனே.

கூற்று : தலைமகன் வரைவு வேண்டித் தமரை விடுத்துழி, 'மறுப்பர் கொல்லோ?' என்று அச்சம் உறுகின்ற தலைவிக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியொடு காதல் உறவு கொண்ட தலைவன், அவளுக்குக் கூறிய உறுதிமொழிப்படி, தன் தமரை மகட் கொடை வேண்டித் தலைவியின் தமர்பால் அனுப்பியபொழுது, தன் தமர் அதற்கு உடம்பட மறுப்பரோ என ஐயுற்று வருந்தினாள் தலைவி. அப்பொழுது, அவர் உடம்பட்டமையைத் தோழி அவட்குச் சொல்லி மகிழ்ந்தது.

உரை : தோழியே, நீ வாழ்க! யான் கூறுவதனைக் கேட்பாயாக. நம் தினைப்புனத்தை நாம் காவல் செய்தபோது, நம்மொடும் கூடிப் பன்னாள் அத்தொழிற்கு உதவிப் பின்னர்ப் பெரிதும் உன்னுடைய மென்மையான தோள் இளைத்து வாடவும், அழகிய நெற்றி பசலையால் அழகிழக்கவும், பொன்னென ஒளிவிட்ட நின் வெற்றி பொருந்திய அழகு தொலையவும் நெடுநாள் பிரிந்து ஒழுகிய மலை நாடனாகிய நம் காதலனுக்கு நம் தமர் கொடை நேர்ந்து நின் திருமணத்தை நிகழ்த்த உடம்பட்டனர். (இனி நீ நின் கவலையை விட்டொழிப்பாயாக!)

உரை விளக்கம் : 'தினைப்புனத்தில் நின்னைக் கண்டு, பன்னாள் பழகி, அதனால் நின் மேனிக்கு அழகு கூட்டிய தலைவனே, பின்னர் நெடுநாள் இங்கு வாராமையை மேற்கொண்டு நின் பேரழகினை அழித்தான். அந்தக் குன்ற நாடன் இனி நின்

Koviloor Digital Library

விருப்பின்படியே நின்னை மணந்து, தொலைந்த நின் கவினை மீண்டும் தளிர்க்கச் செய்வான்' என்று ஆறுதல் கூறினாள் தோழி என்க. 'குன்ற நாடன்' என்றது அவன் செல்வச் சிறப்பு நோக்கியாகும்.

'நன்மணன் அயர்வர்' என்றாள் அஃது உறுதியென்பது தோன்ற. 'மறுப்பரோ என நீ அஞ்சிய அச்சத்தை இனி நீக்குக!' என்பது குறிப்பெச்சமாம்.

அருஞ்சொற்பொருள் : சிறுதினை – தினை வகை; விறற்கவின் – ஈடற்ற பேரழகு; அயர்வர் – கொண்டாடுவர்; நிகழ்த்துவர்; நன்மணன் – வதுவை மணம்; நாடறி மணம்.

இலக்கணக்குறிப்பு : மணன் – மணம் என்றதன் போலி; ஞெகிழ்வு – நெகிழ்வு என்பதன் முதற் போலி.

மேற்கோள் : திருமணத்தை நன்மணம் என்றல் :

நேரிறை முன்கை பற்றி நுமர் தர
நாடறி நன்மணம் அயர்கம்

– குறிஞ்சிப். 231 – 232.

அம்ம வாழிப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

24. தெய்யோப் பத்து

தெய்யோ என்னும் சொல்லைக் கொண்டு முடியும் பத்துச் செய்யுட்களின் தொகுதி தெய்யோப் பத்தாயிற்று.

231

யாங்கு வல்லுநையோ - ஓங்கல் வெற்ப!
இரும் பல் கூந்தல் திருந்துஇழை அரிவை
திதலை மாமை தேயப்
பசலை பாயப் பிரிவு? - தெய்யோ!

கூற்று : ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் சிறிது காலம் பிரிந்து சென்று மீண்டு வந்த தலைவனிடம் தோழி சொல்லியது.

உரை : உயர்ந்த மலைக்குத் தலைவனே! கருநிறம் கொண்ட பலவாகிய கூந்தலையும், திருத்தமுறச் செய்யப்பட்ட அணிகளையும் உடைய என் தோழியின் தேமலையுடைய அழகு கெட்டொழியும் வண்ணம் அவள் மேனியில் பசலையூரும்வகையில் பிரிந்து செல்லுதலை நீ எங்ஙனம் வல்லாய்? கூறுவாயாக.

உரை விளக்கம் : தலைமகன் உயர்ந்த மலைக்குத் தலைவனாயிருந்த போதும், அவ்வாறே உயர்குடித் தோன்றலென்பதற் கேற்பப் புணர்ந்தாரைப் பிரியாத பண்பினை மேற்கொள்ளாது, தலைவியைப் பிரிந்து சென்றமையைக் கருதி,

Koviloor Digital Library

'நினக்கு இயல்பல்லாத கொடுமைப் பண்பினை யாண்டுக் கற்றனை?' என வியப்பாளாய், 'யாங்கு வல்லுநையோ ஓங்கல் வெற்ப?' என வினவினாள். 'மாமை தேய, பசலை பாயப் பிரிவு' என்றது, அவன் பிரிவு மாமை தேயவும் பசலை பாயவும் ஏதுவானது பற்றியென்க.

அருஞ்சொற்பொருள் : யாங்கு – எவ்வாறு; வெற்பு – மலை; இருமை – கருமை; பல் கூந்தல் – அடர்ந்த கூந்தல்; திதலை – தேமல்; மாமை – மாந்தளிர் நிற அழகு.

இலக்கணக்குறிப்பு : தெய்யோ – தெய்ய என்னும் அசையின் ஈறு திரிந்த வடிவம்.

மேற்கோள் : மகளிர் கூந்தலைச் சுட்டிப் புகழும் முறை :

இரும்பல் கூந்தற் கொடிச்சி – ஐங். 281.

இரும்பல் கூந்தல் சேயிழை மடந்தை
– அகம். 273.

பல்லிரும் கூந்தல் – குறுந். 19.

232

போது ஆர் கூந்தல் இயல் அணி அழுங்க
ஏதிலாட்டியை நீ பிரிந்ததற்கே,
அழல் அவிர் மணிப் பூண் நனையப்
பெயல் ஆனா, என் கண்ணே – தெய்யோ!

கூற்று : ஒருவழித் தணந்து வந்த தலைமகன், 'நான் பிரிந்த நாட்கண் நீர் என் செய்தீர்?' எனக் கேட்க, தோழி அவற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் தலைவன் சில நாட்கள் பிரிந்து தன்னூரில் இருந்து பின் மீண்டு வந்தபொழுது தோழியிடம்

Koviloor Digital Library

'நான் பிரிந்திருந்த நாட்களில் நீவிர் யாது செய்திருந்தீர்?' எனக் கேட்க அதற்குத் தோழி விடையிறுத்தது.

உரை : தலைவ! மலர்கள் சூடிய கூந்தலை உடைய என் தோழியின் இயற்கையான அழகு இரங்கும் வண்ணம், அவள் நினக்கு அயன்மை உடையாள் போல நீ கருதிப் பிரிந்தமைக்கு, அழல்போல ஒளிவிடும் மணிகள் பதிக்கப்பட்ட என் பூண்கள் நனையுமாறு என் கண்கள் இடையீடின்றி நீரைச் சொரிந்தவண்ணம் இருந்தன (இது நின் தகுதிக்குப் பெருமை தருவதொன்றோ?)

உரை விளக்கம் : இயலணியாவது, ஆடை அணிகலன்கள் முதலியனவற்றாலாய செயற்கை அழகன்றித் தனக்கே இயல்பாக அமைந்த அழகாகும். இதனையே 'செய்யாக் கோலம்' என்றார் பிறரும். அத்தகு அணி அழுங்குதலாவது, வருந்துதல். இங்ஙனம் உயிரில்லாத பொருள்கள் கேட்பது போலவும் சொல்வது போலவும் வருந்துவது போலவும் பிறவாறும் சொல்வது கவிதை மரபு. இங்கு, அவள் அழகு அழிதல் சுட்டப்பட்டது. 'ஏதிலாட்டி' என்றாள், அவளே அவனுக்கு நெஞ்சில் நிறைந்த காதலியாகவும், அவளை முன்பின் அறியாத யாரோ ஒருத்திபோலக் கருதி அவன் அன்பின்றிப் பிரிந்தான் என்னும் கருத்தில். அவன் அப்படி அன்பின்றிப் பிரிந்தது தனக்கே பெருந்துன்பமளித்தது எனின் அவட்கு எத்துணைப் பெருந்துயர் அளித்திருக்கும் என்று வினவுவாளாய், 'அழல் அவிர் மணிப்பூண் நனையப் பெயல் ஆனா என் கண்' என்றாள். துயரம் இடையீடின்றி வருத்தியதால் கண்ணீரும் இடையறாது வழிந்தது என்பாள். 'பெயல் ஆனா' என்றாள். இதனால், தலைவியின் துயரையே தன் துயரமாகக் கூறினாள் என்க. பொன்னில் மணியழுத்திச் சமைத்த பூணை மணிப்பூண் என்றாள். மணியின் மிக்கொளிக்கு நெருப்பு உவமையாயிற்று.

இனி மணிப்பூண் அழகிய பூணுமாம். இயலணி என்பதனை இயல், அணி எனப்பிரித்து இயற்கையழகும் செயற்கையழகும்

Koviloor Digital Library

கெட்டழியும்படி என்பாரும் உளர். இனி, இயலும், அணியும் என்பதும் ஒன்று. சிவந்த மணிகள் இழைத்த பூண்களை அழலவிர் மணிப்பூண் என்றாள் என்க.

இயல் அழுங்குதலாவது, 'புறஞ்செயச் சிதைத்தல், புலம்பித் தோன்றல், கலங்கி மொழிதல், கையறவு உரைத்தல்' முதலியனவும், கண் துயில் மறுத்தலும், கனவொடு மயங்கலும் பிறவும் என விளக்குவர். அணி அழுங்குதலாவது பூவும் சாந்தும் பூணும் துகிலும் வெறுத்தலும் தொடியும் வளையும் நெகிழ நிற்றலும் பிறவும் செய்து ஒழுகல் என்பர்.

இனி, 'ஏதிலாளனை' என்றும் பாடம். இதற்கு 'ஏதிலாளனாய்' (ஏதிலாளன் போல) நீ பிரிந்ததற்கு எனப் பொருள் உரைக்க.

அருஞ்சொற்பொருள் : போது – பூக்கள்; ஆர் – பொருந்திய; இயல் – இயற்கை, தன்மை, இயற்கையழகு; அணி – அழகு; அழுங்க – இரங்க, கெட்டொழிய; ஏதிலாட்டி – உறவில்லாத அயலவள்; அழல் – தீ; அவிர் – ஒளிரும்; மணி – மாணிக்கம், அழகு; பூண் – அணிகலன்; ஆனா – அமையா.

இலக்கணக்குறிப்பு : இயல் அணி .... இயலும் அணியும் – உம்மைத் தொகை; கூந்தல் – கூந்தலை உடையாள் .... அன்மொழித் தொகை; அழல் அவிர் – உவமைத்தொகை; தெய்யோ – தெய்ய என்னும் முன்னிலை அசை ஈறு திரிந்தது.

233

வருவை அல்லை; வாடை நனி கொடிதே –
அருவரை மருங்கின் ஆய்மணி வரன்றி,
ஒல்லென இழிதரும் அருவி நின்
கல்லுடை நாட்டுச் செல்லல் – தெய்யோ!

Koviloor Digital Library

கூற்று : ஒருவழித் தணந்து வரைய வேண்டுமென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக்காலத்தில் சின்னாள் பிரிந்து சென்று தலைவியைத் திருமணத்திற் கொள்வதாகக் கூறிய தலைவனுக்கு, அவன் தன் நாட்டுக்குச் செல்ல வேண்டாவெனத் தோழி கூறியது.

உரை : ஐய! ஏறற்கு அரிய மலையின்கண் இருந்து, அழகிய மாணிக்கக் கற்களை வாரிக்கொண்டு பேராரவாரத்துடன் வீழும் அருவிகளைக் கொண்ட நினது மலைநாட்டிற்குச் செல்லாதொழிக. அங்ஙனம் செல்லின் நீ மீண்டு உரிய காலத்தில் வருவாயல்லை. இப்பொழுது (குளிர்ச்சிமிக்க) வாடைக் காற்றோ மிகக் கொடியதாய் வீசுகின்றது.

உரை விளக்கம் : தலைவன் மலை கடத்தற்கும், அணுகுதற்கும், ஏறுவதற்கும் அரியதாதலின் அருவரை என்றாள். 'ஆய்மணி' என்பதனை அழகிய மணியென்று விளக்குவதோடு, மணி வல்லுநரால் தரம் ஆயப்படும் மணி என்றும் விளக்கலாம். அன்றியும் நுண்ணியமணிகள் என்றும் கூறலாம். 'வருவையல்லை' என்றதற்கு நீ எப்போதும் வருவாயல்லை என்று பொருள் கொள்வாரும் உளர். எனினும் 'நீ கூறுமாறு விரைவில் வருவாயல்லை' என்று பொருள் கொள்ளல் சிறப்பு. அப்படி நீ வாராதொழியின், தனித்திருக்கும் இவள் தண்ணென வீசி நலியும் வாடைக் காற்றின் கொடுமை தாங்காது இறந்து படுவாள் என்னும் குறிப்பில் 'வாடை மிகக் கொடியதாயிருந்தது' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : நனி – மிகவும்; அருவரை – ஏறற்கு அரிய மலை, கடத்தற்கு அரிய மலை; மருங்கு – பக்கம்; ஆய் – அழகிய, ஆராயப்படும், நுண்ணிய; வரன்றி – வாரி.

இலக்கணக்குறிப்பு : நனி – உரிச்சொல்; ஒல்லென – ஒல், ஒலிக் குறிப்புச் சொல்; அருவி .... நாடு – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. செல்லல் – முன்னிலை வினைமுற்று.

Koviloor Digital Library

குறிப்புப் பொருள் : 'ஆய்மணி வரன்றி ஒல்லென இழிதரும் நாடு' என்றது செல்லின் வரைதற்கு வேண்டுவன கொண்டுவருக என்ற குறிப்பிலென்பார் பழைய உரைகாரர்.

234

'மின் அவிர் வயங்கு இழை ஞெகிழச் சாஅய்,
நன்னுதல் பசத்தல் யாவது?' – துன்னிக்
கனவில் காணும் இவளே
நனவில் காணாள், நின் மார்பே தெய்யோ!

கூற்று : இடைவிடாது வந்தொழுகாநின்றே களவு நீடாமல் வரைதற்கு முயல்கின்ற தலைமகன் தலைமகள் வேறுபாடுகண்டு, 'இதற்குக் காரணம் என்?' என்று வினாவியவழி, 'நின்னைக் கனவில் கண்டு விழித்துக் காணாளாய் வந்தது' எனத் தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைவன் இடைவிடாது தலைவியைக் கண்டு அளவளாவிச் சென்றான். விரைவில் வரையவும் முயன்றான். ஆயினும் தலைவி வாட்டமுற்றாள். அதற்குக் காரணம் வினவிய தலைவனுக்குத் தோழி கூறியது இது.

உரை : ஐய! என் தோழியாகிய நின் காதலி, மின்னல் என ஒளிவிட்டு விளங்கும் தன் அணிகள் நெகிழ்ந்து வீழுமாறு உடல் மெலிந்து தன் நெற்றி பசலையூர நிற்கின்றாள். அதற்குக் காரணமாவது, அவள் தான் காணும் கனவில் நின் மார்பை நெருங்கிப் புல்லிப் பின் கண் விழித்தபொழுது அம்மார்பினைக் கண்ணால் காண முடியாமையே வேறொன்றுமில்லை.

உரை விளக்கம் : தலைவன் வாராமையால் மேனி பசத்தல் இயல்பேயாயினும், அவன் நாடொறும் வந்து தலையளி செய்யும் போதும் பசத்தற்குக் காரணம் யாதென வியந்து வினவினான் தலைவன்.

Koviloor Digital Library

அதற்குக் காரணம் கூறுவாள், அவள் நின்னைப் பகற்பொழுதில் நாடொறும் கண்டாலும், இரவிலும் கூடியின்புற விரும்புகின்றாள். நீ இரவில் வாராமையின் நின்னை முயங்குவதாகக் கனாக் கண்டு இன்புறுகின்றாள். அவ்வின்பமும் நிலையற்றதாகி அவள் விழித்ததும் மறைந்து விடுகிறது. இதனாலேயே மேனி பசந்தனள் என்று காரணம் கூறும் நயம் அழகிது.

இதனால், இவள் பகலும் இரவும் உன்னுடன் கூடியின்புறுதலையே விரும்புகின்றாள். எனவே, நீ இவளை நின் திட்டப்படியே மிக விரைவில் வரைந்து கொள்வாய் என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : மின் – மின்னல்; அவிர் – ஒளிரும்; வயங்கல் – விளக்கம்; துன்னி – நெருங்கி.

மேற்கோள் : தலைவி தலைவனைக் கனவில் காணல் :

கேட்டிசின் வாழி தோழி! அல்கல்,
பொய் வலாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகை பொய்க்கனா மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந் தனனே

– குறுந். 30.

துஞ்சுங்கால் தோள் மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து

(திருக். 1218)

235

கையற வீழ்ந்த மை இல் வானமொடு
அரிது காதலர்ப் பொழுதே; அதனால்,
தெரி இழை தெளிர்ப்ப முயங்கி,
பிரியலம் என்கமோ? எழுகமோ? – தெய்யோ.

Koviloor Digital Library

கூற்று : உடன்போக்கு நேர்வித்த பின்பு தலைமகன் உடன்கொண்டு போவான் இடையாமத்து வந்துழி, தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : இற்செறிப்பு முதலிய இடையூறுகளால், தலைவி தன் காதல் நிறைவேறத் தடையேற்பட்டது கண்டு வெறுத்துத் தலைவனுடன் உடன்போக்கிலீடுபடத்துணிந்தாள். அவள் தோழியும் அதற்கு உதவினாள். அவளை அழைத்துச் செல்ல நடுநிசியில் தலைவன் வந்தபொழுது தலைவிக்குத் தோழி கூறியது இது.

உரை : முன்னர் யாம் கையறுமாறு மழையைப் பெய்த வானம் இப்பொழுது கருமையற்று நிற்கிறது; அதனொடு, காதலர் இங்கு வந்த பொழுதும் இனிமேல் வாய்ப்பதற்கு அரிதாகவுள்ளது. அதனால் நம் தேர்ந்தெடுத்த அணிகலன்கள் ஒலிக்குமாறு தலைவரை முயங்கி, 'இனிப் பிரியேம்' என்று கூறுவோமா? உடன் அவரொடு செல்லவொருப்படுவோமா?

உரை விளக்கம் : உடன்போக்கினை மேற்கொள்ள முடிவு செய்த காதலர்க்கு அப்பொழுது பெய்த மழை இடையூறு செய்தது. அதனால் முன் பெய்த மழையக் 'கையற வீழ்ந்த வானம்' என்றாள். 'கையற வீழ்ந்த வானம்', 'மையில் வானம்' என இருவழியும் ஒட்டுக. நீர் அற்ற மேகம் வெண்ணிறத்தது ஆதலானும், அம்மேகம் உடன்போக்கிற்கு உதவுமாகலானும் அதனைக் குற்றமற்ற வானம் என்றாளாம். அன்றியும், கருமையற்ற வானம் எனலுமாம். 'வானமொடு காதலர்ப்பொழுது அரிது' என்றாள், காதலர் வந்துள்ள நேரம் மிகவும் வாய்ப்பானது; முன்பு நமக்கு வாயாதிருந்து இப்பொழுது வாய்த்தது என்னும் பொருளில். எனவே உடன் புறப்பட்டு 'இனிப்பிரியத் தேவையில்லை' என்று மகிழ்ந்து அவரை முயங்கி எழுவோமா? என ஆர்வமொடு வினவினாள் தோழி. என்பமோ, எழுகமோ என்னும் ஓகார வினாக்கள் என்கம், எழுகம் என்று பொருள் தந்தன.

Koviloor Digital Library

இனி, 'கையுற' என்று பாடம் கொண்டு, தம் தொழில் பொருந்தத் தோன்றிய முகில்கள் ஒரு சிறிதும் இல்லாத தூய வானம் என விளக்குவார் பெருமழைப்புலவர். கூதிர்ப்பருவத்தில் இடையறாது மழைத்துளி வீழ்வது இயல்பாதலின், இப்பொழுது வானம் தூய்தாய் இருத்தலின் உடன் போக்கிற்கு ஏற்றது என்பதுபட விளக்குவார் இவர்.

'நம் செயல் மாட்சிமையடையும்படியாகிய காலம் என்பாள், வானமொடு பொழுது என்றும், குற்றேவல் மகளாதலின் அவளை ஏவாதும் வினவினாள். அரிது என்பது முயங்கியிருத்தற்குத் தகாத காலமென்றும் எழுதற்குத் தகுந்த காலமென்றும் பொருள்பட நின்றது' என்பார், ஈழத்து உரையாளர். இவர் 'அரிது' என்பதனை முயக்கத்தோடு பொருத்தி உரை செய்தார். போக்குடன்பட்ட நிலையில், தலைவன் வாய்ப்பான நேரத்தில் வந்தமைக்கு மகிழ்ந்து, அவனை அணைத்து நின்று, இனிப்பிரிய வாய்ப்பில்லாத வகையில் உடன்புறப்படுவோமா? என வினவினாள் என்றலே ஏற்புடைத்தாம். இதற்கு, வானம் அரிய வாய்ப்பாக மையில்லாது அமைந்தாற் போலத் தலைவன் வந்த பொழுதும் (யாமம்) வாய்ப்பரியதாக அமைந்தது என்று பொருள்கோடலே சிறப்பு.

இனி, 'கையற' என்பதற்கு, முற்றவும் திரண்டு சென்று ஒரு பக்கத்தே ஒடுங்குதல் என்று பொருள் செய்வார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

'வானம் முகிலினமின்றியிருத்தலும், களவின்கண் புறத்தார்க்குப் புலனாகி அலராதற்கு அஞ்சித் தலைமகன் பிரிந்து ஒழுகுவதால் இடையீடின்றிய கூட்டமும் ஒரொரு காலத்தில் அரிதாகலின், வானமொடு அரிதே காதலர்ப் பொழுதே என்றாள். உடன்போக்குத் துணிந்தார்க்கு மையுறை வானம் ஆகாமையின் மையில் வானமொடு என்றாள்' என்பார் இவர்.

அருஞ்சொற்பொருள் : கையற – செயலற; ஒரு பக்கத்தே முழுமையாக ஒடுங்க; மை – கருமை, மேகம், குற்றம்; தெளிர்ப்ப –

Koviloor Digital Library

ஒலிக்க; என்கமோ – என்று சொல்வோமோ; எழுகமோ – எழுந்து போவோமா.

மேற்கோள் : வானம் மையற இருத்தல் :
மையற விளங்கிய மணிநிற விசும்பில்
– நற். 231.

236

அன்னையும் அறிந்தனள்; அலரும் ஆயின்று;
நல் மனை நெடு நகர் புலம்பு கொள உறுதரும்,
இன்னா வாடையும் மலையும்;
நும் ஊர்ச் செல்கம்; எழுகமோ? – தெய்யோ!

கூற்று : களவொழுக்கம் வெளிப்பட்டமையும் தம் மெலிவும் உணர்த்தி, தோழி உடன்போக்கு நயந்தாள் போன்று, வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைவன் களவு நீட்டித்தான். இந்நிலையில் களவினை ஊரவர் அறிந்தமையால் தலைவிக்கும் தனக்கும் உற்ற வருத்தத்தைக் கூறி அவனை வரைவுக்குத் தூண்டும் கருத்தில் தோழி கூறியது இது.

உரை : ஐய! நம் களவுக் கூட்டத்தினை எம் தாய் நன்கு அறிந்துள்ளாள்; அன்றியும் அதனை ஊரவரும் அறிந்துளர்; மேலும், எங்கள் வளம் மிகுந்த இனிய நெடிய இல்லத்தில் யாம் இருப்பவும், அஃதும் தனிமைப்பட்டு இன்னாதாகும் வகையில் வாடைக்காற்றும் எம்மை அலைக்கின்றது. (இத்துயரிலிருந்து உய்யும் வண்ணம்) இனி யாங்கள் நும்மூர்க்குச் செல்ல எழலாமோ?

உரை விளக்கம் : 'அன்னையும் அறிந்தனள்' எனக் கூறியது, 'யாரிடமிருந்து விழிப்புணர்வோடு களவினை மறைத்தோமோ

Koviloor Digital Library

அவளும் இப்பொழுது அறிந்து விட்டாள்' என்றற்காம். இதனால், 'இனி யாம் இற்செறிக்கப்பட்டு நுமக்குக் காண்டற்கு அரியராவோம்' என்றாளாம். 'அன்னையறிந்ததோடு ஊரவரும் அறிந்தமையான் இனிப்பகலும் இரவும் நின்னைக் காண்டலும், நம் உறவு நீட்டித்திருத்தலும் அரிது' என்பாளாய், 'அலரும் ஆயிற்று' என்றாள். உம்மையால், இனிக் களவையும் ஆம் என்றாளாயிற்று. இதுகாறும் எங்கட்கு இனிமையே செய்த எம் நெடிய இல்லம் இப்பொழுது தனிமை தருவதாயிற்று. போதாக்குறைக்குத் தனித்துறைவாரை நலியும் வாடையும் கடிய வீசுகிறது என்பாள், 'நெடுநகர்ப் புலம்புகொள உறுதரும், இன்னா வாடை' என்றாள். 'நும்மூர்ச் செல்கமோ?' என்றாள், இனி இங்கு இருத்தற்கு வாய்ப்புச் சிறிதும் இல்லை என்னும் பொருளில்.

எனவே, 'நீ விரைவில் வரைந்து கொள்ளக் கடவை' என்று தோழி வற்புறுத்தினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : ஆயின்று - ஆய்விட்டது; நெடுநகர் - பெரிய இல்லம் ; மனை - வீடு இருக்கும் இடம்; புலம்பு - தனிமை; மலையும் - மலைவுறச் செய்யும்; அலையும் என்னும் பாடத்திற்கு அலைக்கும் எனப் பொருள்கொள்க.

இலக்கணக்குறிப்பு : செல்கம் - செல்வேமாய் ... முற்றெச்சம்; உம்மைகள் எண்ணுப் பொருளன.

மேற்கோள் : அன்னையின் கடுமை :

நிரைய நெஞ்சத்து அன்ன
- நற். 236.

வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
- அகம். 122.

மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென்
- நற். 149.

Koviloor Digital Library

தலைவியை உடன்போக்கில் தோழி விடுத்தல் :
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவு அயர்ந்திசினால் யானே.

– நற். 149.

237

காமம் கடவ, உள்ளம் இனைப்ப,
யாம் வந்து காண்பது ஓர் பருவம் ஆயின்,
ஓங்கித் தோன்றும் உயர் வரைக்கு
யாங்கு எனப்படுவது, நும் ஊர்? – தெய்யோ!

கூற்று : அல்ல குறிப்பட்டு நீங்கிய தலைமகனை வந்திலனாகக் கொண்டு, அவன் பின்பு வந்துழி, அவற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியைச் சந்திக்கத் தான் குறிப்பிட்ட இடத்தை, இராப்போதில் அடையாளம் காண இயலாது தலைவன் வறிதே திரும்பினான். அஃதறியாத தோழி அவன் சொன்னபடி வரவில்லை என்று கருதி, அவன் வாராமையால் தலைவி பட்ட துயரைக் குறிப்பால் உணர்த்தி வரைவு முடுக்கியது.

உரை : ஐய! எம்மைக் காமம் தூண்ட, அது காரணத்தால் உள்ளம் வருந்தும் காலம் வந்து எம்மை வருத்தினால், அப்போது யாம் வந்து உன்னைக் காண்பதாயின், பிறமலைகளை விஞ்சி மிக உயர்ந்து தோன்றும் நின் மலைக்கு எப்பக்கத்தில் இருப்பது நும் ஊர்? அதனை எமக்குத் தெளிய உரைப்பாய்.

உரை விளக்கம் : தலைவன் வாராது ஒழியின், அது காரணத்தால் தலைவிக்குக் காம வேட்கைமிகுமாயின் அதனைத் தணிக்கும் வாயில் அவனைத் தழுவுதலன்றி பிறிதின்மையின் அவள்

Koviloor Digital Library

பெரிதும் இனைந்து உருகுவாள் என்பாளாய், 'காமம் கடவ, உள்ளம் இனைப்ப' என்றாள்.

காமம் தன்வரைத்து நிற்கும் இயல்பினது அன்று ஆதலான் 'காமம் கடவ' என்றாள். காமம் என்புற நலிந்து, அஃதுடையாரைச் சாக்காட்டின் எல்லைக்கும் உந்தித்தள்ளக் கூடியதாதலின், 'காமம் இவளை அங்ஙனம் நலியும் அளவில் மிகுமாயின், பெண்மைக்கு இயல்பல்லாததாயினும், அவளே நின்னைக் காணவரல் வேண்டுமேல், நின் ஊர் யாண்டுள்ளது என்பதும் யாம் அறியோம். நின் ஊர் யாது என்பதும் அறியாது பெருங்காதல் கொண்டவள் என்தோழி. அவளைக் காக்கவேண்டும். கடமை என்னுடையதாதலின் நின் ஊர். அந்த நெடுமலைக்கு எப்பக்கம் உள்ளது? கூறுக!' என்றாள். 'நீ அவள் இயல்பறிந்து வந்து அவட்கு அளிசெய்யும் கடப்பாடுடையை ஆனால் நீ அக்கடட்பாட்டை உணர்ந்தவனாகத் தோன்றவில்லை. இந்நிலையில் யாம் நின்னைத்தேடி வருதலினும் வேறு வழி தெரிந்திலேன் என்றாளாம். இன்னும், 'ஊர்பேர் அறியாத நின்னைக் காதலித்து என்தோழி இடருற்றாள்' என இடித்துரைத்தாள் எனலுமாம்.

'காண்பதோர் பருவம் ஆயின்' என்றது, அவள் அந்நிலைக்கு ஆளாவாள் போல் உணர்கிறேன். அங்ஙனம் ஆகுமாறு விட்டுவிடாதே' என்னும் கருத்தில் என்க.

அருஞ்சொற்பொருள் : கடவ – செலுத்த, தூண்ட; இனைப்ப – வருந்த; பருவம் – காலம்; சூழ்நிலை; ஆயின் – ஏற்பட்டால்; யாங்கு – எப்பக்கம்.

இலக்கணக்குறிப்பு : கடவ, இனைப்ப – செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

மேற்கோள் : காமம் தாங்குதற்கு அரியது :
கடவரை நிற்குமோ காமம்?
– பரி. 20 : 94.

Koviloor Digital Library

காமம் என்புற நலியும்; தலைவி காமத்திற்கு உதவல் தலைவன் கடமை :

கண் தர வந்த கா ஒள்ளெரி
என்புற நலியினும் அவரொடு பேணிச்
சென்று நாம் முயங்கற்கு அருங்காட்சியமே
வந்தஞர் களை தலை அவர் ஆற்றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக்கோழித் தனிப்போர் போல
விளிந்தாங்கு விளியி னல்லது
களைவோ ரில்லை யான் உற்ற நோயே
- குறுந். 305.

காம மிகுதிக்கண் தலைவி தலைவன் ஊர் செல்ல எண்ணுவதாகக் கூறுவது :

வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந்திசினால் யானே பல புலந்து
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்த்
தோளும் தொல்கவின் தொலைய நாளும்
பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி
மருந்து பிறிதின்மையின் இருந்து வினையிலனே
- குறுந். 147.

அகநானூறு எட்டாம் பாடலையும் காண்க.

238

வார் கோட்டு வயத் தகர் வாராது மாறினும்,
குரு மயிர்ப் புருவை நசையின் அல்கும்
மாஅல் அருவித் தண் பெருஞ் சிலம்ப!
நீ இவண் வரூஉம் காலை,
மேவரும் மாதோ, இவள் நலனே - தெய்யோ!

Koviloor Digital Library

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகனுக்கு, 'இவள் கவின் நீ வந்த காலத்து வருதலால், நீ போன காலத்து அதன் தொலைவு உனக்கு அறியப்படாது, எனத் தோழி சொல்லி வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : திருமணத்தை ஒத்திப்போட்டுத் தொடர்ந்து களவிலீடுபட்ட தலைமகனைச் சந்தித்த தோழி, தலைவியின் அழகு, அவன் நீங்கும் பொழுது தானும் நீங்கி, அவன் மீளும்பொழுது தானும் மீளுவதால், அவன் பிரிந்தபொழுது அவள் அழகு அழியும் நிலையை அவன் அறியவில்லை என்று கூறி, விரைவில் திருமணம் செய்து கொள்ளத் தூண்டியது.

உரை : தன் காதலனாகிய நீண்ட கொம்புகளை உடைய வலிய ஆட்டுக்கடாய், தன்பால் வருதலைத் தவிர்த்துப் பிற யாடுகளை விரும்பிப் போய்விட்டாலும், நிறம் மிகுந்த மயிர்த்தொகுதியை உடைய அதன் மறி, அது தன்னை நாடி வரும் என்ற ஆசையினால் உயிர் தாங்கியிருக்கும் பெரிய அருவியொழுகும் மலைநாட்டுத் தலைவ! நீ இங்கு மீண்டு வரும் நாளில் இவளை முன்னர் நீங்கிச் சென்ற அழகு மீண்டும் அவளைச் சேர்கிறது, என்பதனை அறிவாயாக.

உரை விளக்கம் : மலையாடுகட்கு நீண்டுயர்ந்த கொம்புகளும் எதிரிகளைத் தாக்கும் வன்மையும் இருத்தலால், 'வார்கோட்டு வயத்தகர்' என்றாள். வாராது மாறலாவது வழக்கம்போல வந்து புணர்ந்து இன்புறுதலைத் தவிர்த்து, பிற பெண்ணாடுகளோடு உறவு கொண்டு, முன்னர்த்தான் புணர்ந்து இன்புற்ற மறியை அறவே மறந்து விடலாகும். அன்பின்றிப் பிரியினும் என்றவாறு. 'நசையின் அல்கும்' என்றாள், கடாய் தன்னை நீத்துச் சென்ற போதும், என்றாவது ஒருநாள் மீண்டும் தன்னை வந்தடையக் கூடும் என்ற நம்பிக்கையில் உயிர்தாங்கியிருத்தல் பற்றி. 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்னும் சிலம்பு அடியை எண்ணுக. 'ஆசையின் அல்கும்' என்றும் பாடம்.

Koviloor Digital Library

'குருமயிர்ப்புருவை' என்றாள் அடர்த்தியான மயிர்கொண்டு நிறம் விளங்க இருத்தல்பற்றி. காண்பதற்கு இனிய கவின் மிகு வனப்புடையதாயினும், அதன் காதலன் அதனை வெறுத்துச் சென்றதை இதனால் குறிப்பால் உணர்த்தினாள். மலையின் பெருமைக்கு ஏற்ப அதன்கண்ணிருந்து ஒழுகும் அருவியும் பெரிதாயிருத்தலை 'மாஅல் அருவித் தண் பெரும் சிலம்பு' எனப்பாராட்டினாள். 'ஆல் அருவியெனப் பாடங்கொண்டு ஆரவாரிக்கும் அருவியென்பாரும் உளர். 'இவள் நலன் நீ இவண் வருங்காலை மேவரும்' என்றது, அது 'நீ பிரிந்த பொழுது தானும் நீங்கி நின்னோடே வந்தது. அதனை நீ அறிந்திலை' என்ற குறிப்புடையது. இதனால், 'இவள் அழகு என்றும் இவட்குரியதாகல் வேண்டில், நீ இவளை என்றும் பிரியாது வாழ்தல் வேண்டும். அதற்கு உடனே வரைந்து எய்தல் கடன் என்றாளாயிற்று.

அருஞ்சொற்பொருள் : வார் – நீண்ட; கோடு – கொம்பு; குருமயிர் – நிறம் விளங்கும் மயிர்; புருவை – பெண்ணாடு; அல்குதல் – உயிர்தாங்குவது; மால் – பெரிய; தண் – குளிர்ந்த; சிலம்பு – மலை; மேவரும் – பொருந்தும்.

இலக்கணக்குறிப்பு : மால் அருவி – பண்புத்தொகை; ஆல் அருவி என்பது பாடமாயின் வினைத்தொகை; நசையின் – 'இன்' இடைச் சொல், மூன்றாம் வேற்றுமைப் பொருள் தந்தது; மாதோ – அசைச்சொல்.

மேற்கோள் : தலைவியின் நலம் தலைவன் பிரியப் பிரிந்து, மீள மீளுவது :

'வந்தனனோ மற்று இரவில்
பொன்போல் விறற்கவின் கொள்ளும் நின்
நுதலே'
– ஐங். 229.

குன்று கெழு நாடன் தானும்
வந்தனன் வந்தன்று தோழியென் நலனே
– ஐங். 263.

Koviloor Digital Library

உள்ளுறை : வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும் பின் அது வரக்கூடும் என்னும் ஆசையாலே புருவை நசையின் அல்கும் என்றது, நீ நின் வரவுகளில் குறித்த வண்ணமே வாராது மாறி நீடித்தாலும் நின்னைக் காணலாம் என்னும் ஆசையாலே தலைவி உயிர் வாழ்கிறாள் என்னும் உள்ளுறை கொண்டது.

239

சுரும்பு உணக் களித்த புகர் முக வேழம்
இரும் பிணர்த் துறுகல் பிடிசெத்துத் தழூஉம் நின்
குன்று கெழு நல் நாட்டுச் சென்ற பின்றை,
நேர் இறைப் பணைத்தோள் ஞெகிழ
வாராய் ஆயின், வாழேம் - தெய்யோ!

கூற்று : 'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : களவுக்காலத்தில், திருமணத்திற்கு வேண்டும் பொருளீட்டற் பொருட்டுப் பிரிந்து செல்ல விரும்புவதாகத் தலைவன் கூறக்கேட்ட தோழி அவனுக்குக் கூறியது.

உரை : தலைவ! வண்டுகள் வந்து மொய்த்து உண்டு மகிழுமாறு மதநீர் ஒழுக நின்ற, புள்ளிகளை முகத்தே கொண்ட வேழம், (தன் களிப்பு மிகுதியால்) பெரிய (கரிய) சருச்சரையை உடைய குண்டுக் கல்லைத் தன் பிடியென்று பிறழ வுணர்ந்து தழுவும் குன்றுகள் பொருந்திய நின் நல்ல நாட்டுக்கு நீ சென்ற பின்னர், இங்குள்ள என்தோழியின் நேரிய கோடுகள் கொண்ட மூங்கில் போன்ற மெல்லிய தோள்கள் நெகிழுமாறு, நீ சொன்ன காலத்தில் வரத்தவறினால், யாம் உயிர் வாழ்தல் அரிது.

உரை விளக்கம் : களிப்பாவது மதம் கொள்ளுதல். மதம் கொண்ட யானை மதநீர் ஒழுக நிற்றல் இயல்பு, அதன் நறுமணத்தால்

Koviloor Digital Library

ஈர்க்கப்பட்டு வண்டுகள் மொய்த்தல் இயல்பாதலின் 'சுரும்புணக்களித்த' என்றாள். நெற்றியிலும், துதிக்கையிலும் புள்ளிகளை உடைமை யானைக்கு அழகாகும். காளை மாடுகட்கு நெற்றிச் சுட்டியும், நெடுவாலும், வெண்குளம்புகளும் அழகுக்குக் காரணமாதல் போலக் கொள்க. களிறு தன் காம மயக்கம் காரணமாகக் குண்டுக்கல்லைப் பிடியெனக் கருதித் தழுவிற்று என்க. நின் வாராமை உடல் மெலிவிற்குக் காரணமாகி, அவ் வாராமை நீட்டிக்குமாயின் அவளும் நானும் இறந்து படக் காரணமாகும் என்று உணர்வாயாக என்றாள். இதனால், தோழிக்கும் தனக்குமுள்ள உயிர் நட்பினை உணர்த்தினாள் என்றும், தலைவிக்குத் தலைவனைத் தவிர உயிர் பிறிதில்லை என்றும் உணர்த்தினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : சுரும்பு – வண்டு; களித்த – மதம் கொண்ட; புகர் – புள்ளி; வேழம் – களிறு; இரும் – பெரிய, கரிய; பிணர் – செறும்பு, சருச்சரை; துறுகல் – குண்டுக்கல்; பிடி – பெண் யானை; செத்து – கருதி; பின்றை – பின்னர்; பணை – மூங்கில் போன்ற, பருத்த; ஞெகிழ – நெகிழ, இளைக்க.

இலக்கணக்குறிப்பு : ஞெகிழ – நெகிழ என்பதன் போலி; உண – உண்ண ... தொகுத்தல் விகாரம்.

மேற்கோள் : யானை மதம் கொண்ட போது சுரும்பு மொய்த்தல் :

வரிஞிமிர் ஆர்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக் களிற்று ஒருத்தல்
– அகம். 78.

துறுகல் யானைபோல் தோன்றல் :

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த்துறுகல்
பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
– குறுந். 13.

Koviloor Digital Library

உதுக்காண் பிடிதுஞ்சுவன்ன அறைமேல் நுங்கின்
தடிகண் புரையும் குறுஞ்சுனை
– கலி. 108.

உள்ளுறை : மதவேழம் தகுதியில்லாத துறுகல்லை இரும் பிணருடைமை பற்றிப் பிடியெனக் கருதித் தழுவும் நாடனாதலின், நின் தலைமைக்குத் தகுதியில்லாத வேறு ஒருத்தியைப் பெண்மை நலமுடைமை கருதி நீ வரையவும் கூடும்' என்று உள்ளுறை காண்பர். இன்னும், 'வேழம் துறுகல்லைப் பிடியென்று கருதித் தழுவும் நாடாதலால், நீ தானும் அக்களிறு போன்று காம வேகத்தால் காமக் கிழத்தியரைச் சேர்ந்து எம்பெருமாட்டியை மறந்து ஆண்டே உறைதலும் கூடும். ஆடவர் செய்தி அறியுநர் யாரே' என்று நகையாடிக் கூறியதாக மொழிவார் பெருமழைப் புலவர்.

240

அறியேம் அல்லேம்; அறிந்தனம் மாதோ -
பொறி வரிச் சிறைய வண்டினம் மொய்ப்பச்
சாந்தம் நாறும் நறியோள்
கூந்தல் நாறும் நின் மார்பே – தெய்யோ!

கூற்று : தலைமகற்குப் புறத்தொழுக்கம் உளதானமை அறிந்து தலைமகள் புலந்துழி, அவன் அதனை 'இல்லை' என்று மறைத்தானாக, தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனுக்குப் பரத்தையரோடு உறவு உள்ளதாக உணர்ந்த தலைவி அதன் காரணமாகப் புலவி கூர்ந்து ஊடிய பொழுது அவன் அதனை மறுத்தான். அவனுக்குத் தோழி சொல்லியது இது.

உரை : பெரும! நினக்குப் புறப்பெண்டிரோடு உறவு உள்ளமை யாம் அறியாததன்று; அதனை யாம் தெளிவாகவே உணர்ந்துள்ளோம்.

Koviloor Digital Library

யாங்ஙனம் எனில், பொறிகளும் வரிகளும் கொண்ட சிறகுகளை உடைய வண்டினம் மொய்க்குமாறு சந்தனத்தின் நறுமணம் கமழும் நின் காதலியின் கூந்தல் மணம் நின் மார்பிற் கமழ்கின்றது.

உரை விளக்கம் : தலைவன் தன் பரத்தமைப் பண்பினைத் தலைவி அறியாள் எனக் கருதிப் பொய் புகன்றானாதலின், அவன் தீயொழுக்கத்தினைத் தாம் தெளிவாகவே அறிந்துள்ளமை தோன்ற, 'அறியேம் அல்லேம்' என்றதோடமையாது 'அறிந்தனம்' என்று பின்பும் கூறினாள். 'காணேம் அல்லேம், கண்டனம் கடத்திடை' என்றவாறு கொள்க.

ஆடவரைக் கவர்தற் பொருட்டுப் பரத்தையர் தம்மைத் தூயராகவும் நறியராகவும் காட்டுவது வழக்கம். எனவே 'சாந்தம் நாறும் நறியோள்' என்றாள். இங்ஙனம் பாராட்டிக் கூறியது இகழ்ச்சிக் குறிப்பு என்க.

பரத்தையர் ஆடவர் பலராலும் நச்சப்படுபவர் என்பது படப் 'பொறிவரிச் சிறைய வண்டினம் மொய்ப்ப' என்றாள். பரத்தை தலைவன் மார்பில் துஞ்சினாள் என்பதனை, அவன் மார்பே வெளிப்படுத்திற்று என்பாள், 'நறியோள் கூந்தல் நாறும் நின் மார்பு' என்றாள். இதனால், தலைவியின் கூந்தலால் மணம் கமழ வேண்டிய நின் மார்பு இழிந்த பரத்தையின் கூந்தல் மணம் கமழ்கிறது. இது நின் பெருமைக்கு அழகோ என்னும் பொருள் தோன்றுவது காண்க.

திணை மயக்குறுதலுள், இது குறிஞ்சியில் மருதம் மயங்கியதற்கு மேற்கோள். (தொல். அகத். 12. நச்.)

அருஞ்சொற்பொருள் : பொறி – புள்ளி; சிறை – சிறகுகள்; சாந்தம் – சந்தனம்.

இலக்கணக்குறிப்பு : பொறிவரி – பொறியும் வரியும் ... உம்மைத் தொகை; மாதோ – அசை.

Koviloor Digital Library

மேற்கோள் : பரத்தையர் நறுமணம் கமழ்தல் :
தூயர் நறியர் நின் பெண்டிர்
பேஎய் அனையோம் யாம்சேய் பயந்தனமே.
– ஐங். 70.

நறும் பல்கூந்தல் குறுந்தொடி மடந்தை
– அகம். 36

பரத்தையின் தோள் சந்தனம் கமழ்தல் :
தண் நறும் சாந்தம் கமழும் தோள் மணந்து
இன்னும் பிறள் வயினானே
– அகம். 186.

தெய்யோப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

25. வெறிப் பத்து

தலைமகளின் மெலிவிற்குக் காரணம் அறிய வேலனைத் தருவித்து வெறியெடுத்தல் தொடர்பான பத்துச் செய்யுட்களின் தொகுதி இப்பெயர் பெற்றது.

241

நம் உறு துயரம் நோக்கி, அன்னை
வேலற் றந்தனள் ஆயின், அவ் வேலன்
வெறி கமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல? – செறி எயிற்றோயே!

கூற்று : இற்செறித்த வழித் தலைமகட்கு எய்திய மெலிவு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று?' என்று வேலனைக் கேட்பத் துணிந்துழி, அறத்தொடு நிலை துணிந்த தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியிடம் கண்ட மேனி வேறுபாட்டினால், அவளைத் தாய் இற்செறித்தாள். இந்த மெலிவிற்குக் காரணம் அறிய, வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்த எண்ணினாள். அதனை அறிந்த தோழி, அவளுக்கு உண்மையை உணர்த்த விரும்பினாள். எனவே, செவிலி கேட்கும்படி, தலைவியை இங்ஙனம் வினவினாள்.

உரை : செறிந்த பற்களை உடையவளே! நாம் இப்பொழுது அடைந்துள்ள மிக்க துயரத்தைக் கண்ணுற்று அதன் உண்மைக் காரணம் அறிதற்பொருட்டு அன்னை வேலனை நம் இல்லத்திற்கு அழைப்பாளாயின், அவ்வேலன் நாம் நறுமணம்

Koviloor Digital Library

கமழும் மலைநாட்டுத் தலைவனுடன் கொண்டுள்ள காதற் கேண்மையை அறிந்து கூறவல்லனோ? (வல்லானல்லன்).

உரை விளக்கம் : 'அவ்வேலன் வெறிகமழ் நாடன் கேண்மை அறியுமோ?' என்றாள் அவன் அறியான் என்பது விளங்க. அவன் எல்லாவற்றிற்கும் முருகணங்கே காரணம் என்றும், வெறியாடுதலன்றி வேறு தீர்வில்லை என்றும் கூறும் வழக்கமுடையன் என்பது விளங்க 'அவ்வேலன்' என இகழ்ச்சிக் குறிப்புடன் சுட்டினாள். இல்லாததையே சொல்லி வயிறு வளர்க்கும் வேலனை அழைக்கும் அன்னையின் அறியாமைக்கு இரங்கினாள் என்க. 'அறியுமோதில்ல?' என்றதில் 'தில்' விழைவுப் பொருட்டாகலின், அங்ஙனம் கூற அவன் திறனுடையானெனில் நமக்கு எத்துணை நன்மை செய்தவனாவான் என்ற பொருள் தோன்றக் காண்க. வெறியாட வந்த வேலன் வெறிகமழ் நாடனான தலைவன் நம்முடன் கொண்ட உறவை அறியானாயின் வியப்பன்றோ என்னும் நயமுண்மையும் காண்க. 'நம் உறுதுயரம்' என்றாள், இப்பொழுதே மிக்க துயரமுற்றுள்ள நமக்கு அன்னையின் அறியாமைச் செயல் மேலும் துயரம் விளைவிக்குமேயன்றி வேறு நன்மை விளையாதென்பதனை அவள் அறியாளே என்ற பொருள்பட.

அருஞ்சொற்பொருள் : உறுதுயர் – மிக்க துயர்; தந்தனள் – அழைத்து வந்தனள்; வெறி – நறுமணம்; கேண்மை – நட்பு; செறி – நெருக்கமான; எயிறு – பற்கள்.

இலக்கணக்குறிப்பு : உறு – மிகுதிப்பொருள் தந்த உரிச்சொல்.

மேற்கோள் : வெறியாடுதல் பற்றித் தோழியும் தலைவியும் கவலுதல் :

கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிறப்புணர்பு இரீஇ
முருகன் ஆரணங்கு என்றலின் அது செத்து
. . . .
பொறியமை யாவையின் தூங்கல் வேண்டின்
என் ஆம் கொல்லோ?

– அகம். 98 : 8 – 21.

Koviloor Digital Library

அறிவர் உறுவிய அல்லல் கண்டு அருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
'செடிதொடி உற்ற செல்லலும் பிறிது' எனக்
கான்கெழு நாடன் கேட்பின்
யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிதே
– 26 – 30.

242

அறியாமையின், 'வெறி' என மயங்கி,
அன்னையும் அருந் துயர் உழந்தனள்; அதனால்,
எய்யாது விடுதலோ கொடிதே – நிரை இதழ்
ஆய் மலர் உண்கண் பசப்ப,
சேய் மலை நாடன் செய்த நோயே.

கூற்று : தலைமகள் அறத்தொடு நிலை நயப்ப வேண்டித் தோழி அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் மெலிவு கண்டு தாய் அதற்கு உய்தியாக வெறியாட்டு நிகழ்த்த முயலுதல் கண்ட தோழி இனி நம் களவு உறவினைத் தாய்க்கு உணர்த்துவதே நல்லது என்று தலைவியைத் தெருட்டுதற்பொருட்டு அவளுக்குக் கூறியது.

உரை : தோழியே! நம் அனையும் நாம் உறும் பெரிய துன்பத்திற்குரிய உண்மைக் காரணம் அறியாதவளாய், அது தீர்த்தற்பொருட்டுத் தானும் பெருந்துயர் அடைகின்றனள். எனவே, நின் நிரல்பட்ட இதழ்களைக் கொண்ட தாமரை மலர்போலும் அழகிய மையுண்ட கண்கள் பசலையூரப்பெற்றுச் சிறப்பிழக்குமாறு உயர்ந்த மலைக்கு உரிமையுடைய நம் காதலன் செய்ததே இந்நோய் என்னும் உண்மையை நாம் மறைத்து அவள் அறியாது விடுதல் நமக்குத் தீமையாகவேமுடியும்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : நம் நோய்க்குரிய உண்மையான காரணம் இப்பருவத்தில் காதலாக இருத்தல் சாலும் என்பதனை அறியாமையால் மயங்கினள் ஆதலின் 'அறியாமையின் ..... மயங்கி' என்றாள். 'வெறியென மயங்கி' என்றது, வெறியாட்டயர்தற்குக் காரணமான முருகணங்கு என்பதாம். 'அருந்துயர்' என்றாள். தாய், தன் மகளின் துயரத்திற்கு யாது காரணமோ எனப் பல்வேறு காரணங்களையும் எண்ணி எண்ணித் துயருற்றமையைக் குறிக்க. நின் உண்கண் பசலையெய்துமாறு காதல் செய்து பிரிந்தவன் ஒரு பெரிய மலைநாடன் என்பதனை அறியாள் தாய் என்று கூறினாளேனும், சேய் என்பது முருகனுக்கும் பெயராதலின் முருகன் குடிகொண்ட மலை நாடன் என்றும் பொருள்பட நின்றல் நயமுடைத்து. எனவே, நோய் தந்தவன் ஒரு சேய்மலை நாடன் (உயர்ந்த மலையின் தலைவன்) என்பது உணராது, நின் துயரம் சேயால் வந்தது என்று பிழைபட உணர்ந்தாள் என்று கூறியவாறு. வேலன் பெரிதும் முருகன் அணங்கு என்றே கூறுவான் என்பது குறிப்பு. அன்றியும், நம் காதலனும் முருகனை ஒத்தவன் என்று குறித்தாளுமாம். இனிச் சேய்மலை என்றதற்கு, சேய்மைக் கண்ணும் தோன்றும் மலை என அதன் உயர்ச்சியைச் சுட்டி, அதன் வழியே தலைவன் புகழும் சேய்மைக் கண் அறியப்பட்டது எனக் கூறினாள் எனினும் அமையும்.

அருஞ்சொற்பொருள் : எய்யாது - அறியாது; நிரை இதழ் - வரிசையாக அமைந்த இதழ்; ஆய்மலர் - அழகிய மலர்; உண்கண் - மையுண்ட கண்; சேய்மலை - உயர்ந்த மலை, முருகனுக்குரிய மலை.

இலக்கணக்குறிப்பு : வெறி - வெறிக்குக் காரணமான தெய்வக் குற்றம் - ஆகுபெயர்.

Koviloor Digital Library

மேற்கோள் : மகள் துயர்க்குக் காரணம் அறியாது தாய் துயருறுதல் :

அன்னாய் வாழி வேண்டன்னை ஒண்ணுதல்
ஒலிமென் கூந்தல் என் தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவரும் கடுநோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்
பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும்
வேறுபல் உருவின் கடவுட் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி

– குறிஞ்சி. 1–8.

243

கறி வளர் சிலம்பிற் கடவுட் பேணி,
அறியா வேலன், 'வெறி' எனக் கூறும்;
அது மனம் கொள்குவை, அனை! – இவள்
புது மலர் மழைக் கண் புலம்பிய நோய்க்கே.

கூற்று : தாயுழை அறியாமை கூறித் தோழி வெறி விலக்கியது.

கூற்று விளக்கம் : தலைவியின் வாட்டத்தைத் தீர்ப்பதற்கு வெறியாடல் செய்ய முயன்ற தாயின் அறியாமையை எடுத்துக்காட்டித் தோழி களவினை வெளிப்படுத்தியது.

உரை : அன்னையே! இவளுடைய புதிதாக மலர்ந்த குளிர்ச்சியை உடைய கண்கள் தனிமையுற்று வருந்துதற்குக் காரணமான நோய்க்குரிய அடிப்படை யாதென வினவினால், உண்மையறியும் ஆற்றலில்லாத வேலன் மிளகுக்கொடி வளரும் மலையில் குடி கொண்ட முருகக் கடவுளை வேண்டி வெறியாட்டு நிகழ்த்தி நின் வினாவுக்கு விடையாக முருகணங்கு என்று கூறுவான்.

Koviloor Digital Library

அதனை நீயும் உண்மையென்று ஏற்றுக் கொள்வாய். (இது தகாது என அறிக.).

உரை விளக்கம் : 'கறிவளர் சிலம்பிற் கடவுள்' என்றாள் முருகன் மலையுறை கடவுளாதலின். 'சேயோன் மேய மை வரை உலகம்' என்றார் தொல்காப்பியரும். ஈங்குப் பேணி என்றது வெறியாட்டு நிகழ்ச்சியை. 'அறியா வேலன்' எனப் பழித்தது அவன் எத்துயருக்கும் முருகனே காரணம் என்று கூறலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தமை கருதி. 'வெறி' எனக் கூறப்பட்டது. வெறியாட்டினால் மட்டுமே தலைவியின் துயரைத் தீர்க்க இயலும் என்ற அவன் கூற்றினை உட்கொண்டது. 'அது மனம் கொள்குவை' என்றாள். 'நீ உன் அறியாமை மிகுதியாலும், உன் மகளுடைய துயரம் தீரவேண்டுமே என்ற ஆர்வ மிகுதியாலும் அவன் கூற்றினை மெய்யென்று கருதுவை' என்னும் பொருளில். உடம்பின் வாட்டமும், மனத்தை அலைக்கழிக்கும் துயரமும் கண்களில் வெளிப்படுதல் இயல்பாதலின் 'மழைக்கண் புலம்பு நோய்' என்று குறித்தாள் என்க.

இனி, இச்செய்யுளில் வரும் 'கறிவளர் சிலம்பிற் கடவுட்பேணி அறியா வேலன் வெறி எனக் கூறும்' என்ற பகுதிக்கு, 'கறிக்கொடி வளரா நிற்கும் சிலம்பிடத்துக் கடவுளாற் பாதுகாத்தலறியாத வெறியாட்டாளன் வெறியானறிய வேண்டுமெனக் கூறுகின்ற அதை' என்று விளக்குவார் ஈழத்து உரையாளர்.

வேலனாகிய வெறியாட்டாளன் தலைவியின் துயருக்குக் காரணம் முருகனே என்று கூறி நம்பச் செய்து, அவனுக்குப் பூசை செய்து வேண்டினாலன்றி நோய் தீராது என்று கூறலையே வழக்கமாகக் கொண்டவனாதல் அறியப்படுதலின், 'கடவுட்பேணி யறியா வேலன்' என இயைத்துப் பொருள் கூறுவது அத்துணைச் சிறப்பாகாது என்க. ஈண்டு அறியா என்ற அடை அவன் அறியாமையைச் சுட்டியதே என்க. இவ்வுரையாசிரியர், தலைவியின் நோய்க்குக் காரணம் யாது என அறியமாட்டாதவன்

Koviloor Digital Library

என்பதனை விடுத்து 'ஒருவாற்றானும் அறியப்படாத கடவுளை வெறியானறிய விரும்பிக் கூறும்' என்று பொருள் கூறுவார். தோழியின் கூற்று கடவுளை அறிவது பற்றியதன்று என்றும், தலைவியின் துயர்க்குக் காரணம் யாதென்றறியும் அதுவே என்றும் அறிக.

''வெறியெனக் கூறுவது மனம் கொள்குவை' எனவே, யாம் குறிப்பாலும் வெளிப்படையாலும் உணர்த்துவன வற்றையாதல், அறிவிலார்பால் ஒன்று கேட்டறிதல் அறிவுடைமை யன்று என்பதையாதல் நின் மனத்துட் கொள்ளாய் ஆயினை எனச் செவிலி மேல் அறியாமை கூறியவாறு அறிக'' என்ற ஔவை சு. துரைசாமிப் பிள்ளையின் நுட்பவுரை பாராட்டிற்குரியது.

அருஞ்சொற்பொருள் : கறி – மிளகுக்கொடி; சிலம்பு – மலை; சிலம்பிற் கடவுள் – மலையுறை கடவுளாம் முருகன்; பேணி – வழிபட்டு; மழைக்கண் – குளிர்ந்த கண்கள்; புலம்பு – தனிமை.

இலக்கணக்குறிப்பு : அனை – அன்னை என்பதன் தொகுத்தல் விகாரம்.

மேற்கோள் : அன்னையின் அறியாமையைச் சுட்டிக் கூறல் :

அறியா தயர்ந்த அன்னைக்கு வெறியென
வேலன் உரைக்கும் என்ப
– நற். 273.

வேலன் உண்மையறியாதவன் :

வெறியென உணர்ந்த வேலன் நோய்
மருந்தறியான்
ஆகுதல் அன்னை காணிய
– குறுந். 360.

Koviloor Digital Library

244

அம்ம வாழி, தோழி! பல மலர்
நறுந் தண் சோலை நாடு கெழு நெடுந்தகை
குன்றம் பாடான் ஆயின்,
என் பயம் செய்யுமோ - வேலற்கு வெறியே?

கூற்று : வெறியாடல் துணிந்துழி, விலக்கலுறும் தோழி செவிலி கேட்குமாற்றால் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் மேனி வேறுபாடு கண்டு வருந்திய தாய் அந்நோயின் உண்மைக் காரணம் அறியாளாய் வெறியாடலுக்கு ஏற்பாடு செய்தமை கண்ட தோழி, அவள் அவ்வீண் முயற்சியைக் கைவிட்டு உண்மை உணரும் பொருட்டு அவள் கேட்கும் வண்ணம் தலைவிக்குக் கூறியது இது.

உரை : தோழியே! யான் கூறுவதனைக் கேள்! வெறியாடல் நிகழ்த்த முயலும் வேலன், பல்வேறு மலர்கள் மலிந்த நறுமணம் மிகுந்த குளிர் சோலைகள் நிறைந்த நாட்டுக்குத் தலைவனாகிய நெடுந்தகையின் குன்றத்தைப் புகழ்ந்து பாடானாயின், அவன் எடுக்கும் வெறி என்ன பயனைச் செய்யும்? (ஒரு பயனும் செய்யாது).

உரை விளக்கம் : 'பன்மலர் நறுந்தண் சோலை நாடு' என்று தலைவன் நாட்டையும், 'நெடுந்தகை' என்று தலைவனையும் பாராட்டியமையின், தலைவியின் துயருக்குக் காரணம் தலைவனின் பிரிவேயன்றி முருகணங்கு அன்று எனச் செவிலிக்கு அறிவித்தாளாயிற்று. வேலன் மெய்கூறும் தன்மையனாயின் தலைமகன் குன்றத்தினைப் பாடுதல் வேண்டும். இல்லையேல் ஒரு பயனும் இல்லை. வெறியாட்டாளன் முருகனுக்குரிய பல மலைகளையும் ஏத்திப்பாடுகையில், தலைவனுடைய ஆளுகைக்குட் பட்ட மலையையும் பாடினால், நின் நோய் ஓரளவு தணியக் கூடும். அப்போது நோய் தணித்த பெருமை வேலனுக்குச் சாரும்.

Koviloor Digital Library

அது செய்யானாயின் பயனில்லையென்பாளாய், 'நெடுந்தகை குன்றம் பாடானாயின் என்பயம் செய்யுமோ வேலற்கவ்வெறியே?' என வினவினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : பயம் - பயன், நன்மை; அம்ம - இடைச்சொல், கேட்பிக்கும் பொருளது.

இலக்கணக்குறிப்பு : என் பயம் செய்யுமோ - ஓகாரம் எதிர்மறை. ஒரு பயனும் செய்யாது என்பது பொருள்.

மேற்கோள் : தலைவன் குன்றத்தைப்பாடுவது தலைவிக்கு மகிழ்ச்சியூட்டும் :

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே
- குறுந். 23.

அகவலர் தலைவன் குன்றத்தைப் பாடுவது :

'யாம இரவின் நெடுங்கடை நின்று
தேம் முதிர் சிமையக் குன்றம் பாடும்'
- அகம். 208.

245

பொய்யா மரபின் ஊர் முது வேலன்
கழங்கு மெய்ப் படுத்து, கன்னம் தூக்கி,
'முருகு' என மொழியும் ஆயின்,
கெழுதகைகொல் - இவள் அணங்கியோற்கே?

Koviloor Digital Library

கூற்று : தலைமகன் சிறைப்புறத்தானாக, வெறி அறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைவியின் வேறுபாடு கண்டு வருந்திய தாய் வேலனைத் தருவித்து வெறியாட முனைந்தாள். அதனை அறிந்த தோழி அதனைத் தலைவனுக்கு உணர்த்தி வரைவு கடாவும் நோக்கில், அவன் சிறைப்புறத்தே காத்திருக்கையில் அவன் காதிற்படும்படி தனக்குத்தானே சொல்லியது இது.

உரை : பொய்த்தல் இல்லாத மரபினை உடைய, ஊர்க்கண் வாழும் ஆண்டுமுதிர்ந்த வேலன் கழங்கை மெய்யின்கண் அணிந்து, பாவையைத் தூக்கி, இவள் நோய்க்குக் காரணம் முருகனே என்னுமாயின், இவளைக் கூடி முயங்கிப் பிரிந்து அதனால் இவளை மெலியச் செய்த தலைவனுக்கும் அவன் சொன்னது உரிமையுடையதாமோ?

உரை விளக்கம் : ஊரின்கண் வாழும் அகவை முதிர்ந்த வேலனைக் கொண்டு அன்னை வெறியெடுக்கத் துணிந்தாள் என்பதனையும், அப்பொழுது அவ்வேலன் வழக்கப்படியே உரிய சடங்குகளைச் செய்து வெறியாடி இவள் நோய்க்கு முருகனுடைய அணங்குதலே காரணம் என்று பொய் சொல்வான் என்பதனையும் சிறைப்புறத்தே நிற்கும் தலைவன் உணர்ந்து வரைவுக்கு ஆகுவன செய்ய வேண்டும் என்பது தோழியின் குறிப்பாம். அவ்வாறு அவன் சொன்னால், அச்சொல் தலைவனுக்கும் பொருந்துமா? என்று கேட்டது, எற்றுக்கெனின் 'அவனல்லவோ தலைவியின் நோய்க்குக் காரணமானவன்? அந்நோய் தீர்க்கும் கடனும் அவனுடையதன்றோ? அவன் வாளாவிருப்பதனாலன்றோ அன்னை வேண்டாத வெறியாட்டின் பொருட்டு அவமே துயரப்படுகின்றாள்?' என்னும் குறிப்புடையதாகும்.

'பொய்யாமரபின் .... வேலன்' என்றது குறிப்பு மொழியாய் அவன் பொய்யன் என்ற பொருள் தந்தது. அன்றியும் அன்னையின் மதிப்பீட்டில் அவன் பொய்யாத மரபினன் என்றுமாம்.

Koviloor Digital Library

ஊர் முதுவேலன் என்பதற்கு ஊர்க்கண் வாழும் முதுமையுடைய வேலன் என்று பொருள் கூறி, முதுமையை அவன் குடிமேலேற்றிக் கூறுவார் ஔவை துரைசாமிப் பிள்ளை. கழங்கு மெய்ப்படுத்து என்பதற்கு, 'கழங்கு நிறுத்தி, அதன்கண் தான் வழிபடும் தெய்வம் வரப்பண்ணி' என்று உரைவகுத்துப் பின்னும் விளக்கவுரையில் 'கழற்காய்களை முருகன்முன் வைத்து அள்ளியெடுக்குங்கால் கண்டு கூறும் ஒருவகைக் குறி' என்று மொழிவார்.

இது பொருத்தமானதெனின் ஒற்றையாக வந்தால் ஒரு பொருளும் இரட்டையாக வந்தால் ஒரு பொருளும் கொள்ளும் நாட்டு வழக்காற்றொடு ஒத்ததாகக் கொள்ளலாம்.

ஈழத்து உரையாசிரியர் கழங்கு மெய்ப்படுத்து என்பதற்குக் 'கழற்காயை மெய்யிலணிந்து' என்றும், கன்னந்தூக்கி என்பதற்கு மருந்தைத் தூக்கிக் கொண்டு' என்றும் பொருள் தருகிறார். 'கன்னந்தூக்கி' என்பதற்கு, 'கழங்கு நிறுத்தி .... பின்னர் அதற்குக் கன்னத்தை அணிந்து வெறியாடி' என்று விளக்கம் தருகிறார். ஔவை சு. துரைசாமிப் பிள்ளை கன்னம் என்பது, நோய் தணிதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத் தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்து, என்கிறார். இது பொன்னாலும் செய்யப்படும் என்பதற்குப் 'பொன்செய் கன்னம் பொலிய' (அகம். 137) என்று மேற்கோளும் காட்டுகின்றார். ஈழத்து உரையாளர் மருந்து என்று உரையிற் கூறி, விளக்கத்தில் பழைய உரையாசிரியரைத் தழுவி, 'கன்னம் என்பது நோய் தணித்தற்குச் செய்து கொடுக்கும் ஓர் படிவம்' என்று பொருள் தருகின்றார். இன்னும் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், கழங்கு மெய்ப்படுத்தலாவது 'இது தெய்வத்தானாயிற்றோ பிறிதொன்றினானாயிற்றோ எனத் தெய்வம் பராவி அக்கழற்காய்களை எண்ணிப்பார்த்தல் என்றும், கழற்காய்களைத் தொகுத்து அவற்றிற்கு மஞ்சட்காப்புக் கட்டி ''இம்மையல் தீருங்காறும் இக்காப்பினை அணிந்திருக்க' எனக் கட்டுவது கன்னம் என்றும் கூறுப' என்று விளக்கிச் சொல்கின்றார்.

Koviloor Digital Library

இனி, பெருமழைப்புலவர் அவர்கள் ''கழங்குகளாலே ஆராய்ந்து உண்மையினைக் கண்டு வெளிப்படுத்துக் கன்னத்தைக் கையில் தூக்கிக் கொண்டு'' என்று விளக்கம் கூறியுள்ளார். ''கழங்குகளைப் பரப்பி எண்ணி ஒற்றையாயின் இன்னது என்றும் இரட்டையாயின் இன்னது என்றும் துணிந்து கூறுதல் என்க'' என்று இவர் கூறுவது பொருத்தமானது என்றே தோன்றுகிறது. தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்களில் நெல்லையோ, சோளத்தையோ இங்ஙனம் எண்ணுவதும் துடைப்பத்திலுள்ள ஈர்க்குகளில் ஒரு பகுதியைத் தனியே பிரித்து அதனை எண்ணிச் சொல்லலும் உண்டு என்பதனை இவ்வுரையாளரே நேரில் கண்டுள்ளார். இவரும் கன்னம் என்பதனைத் தாயத்து என்றே விளக்குகின்றார். பழைய உரையாளர் கூறும் **படிமம்** என்பது, பொற்றகட்டில் தெய்வ உருவத்தைக் கீறுவதாகலாமோ என்ற ஐயம் நிகழ்கின்றது. தற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடு செய்வோர் மாவினால் ஒரு பாவையைச் செய்து அதனைக்கொண்டு சில மந்திரச் சடங்குகளைச் செய்வர். கழிப்பு விடுதல், கழிப்புக் கழித்தல் என்று இதனை வழங்குவர். முருகு என வேலன் மொழிவது தலைவனுக்கு உரிமையாகுமோ என்றது, நம் தலைவன் பெயர் முருகன் என்பதாயின் அவன் கூறுவது மெய்யாகலாம் என்பது பொருளாகக் கொள்க. இதனால், தலைவியின் நோய்க்குத் தலைவனே பொறுப்பு என்பது விளக்கப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : கழங்கு – கழற்சிக்காய்; கன்னம் – படிமம், மந்திரத்தாயத்து; கெழுதகை – உரிமை; அணங்கியோன் – துன்புறுத்தியோன், தலைவன்.

இலக்கணக்குறிப்பு : அணங்கியோன் – வினையாலணையும் பெயர்; கொல் – அசைநிலை.

மேற்கோள் : வேலனின் கழங்குக் குறியை மெய்யாக் கோடல்:
பொய்ப்படுபறியாக் கழங்கே

– ஐங். 250.

Koviloor Digital Library

246

வெறி செறித்தனனே, வேலன் - கறிய
கல் முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து,
மன்றில் பையுள் தீரும்
குன்ற நாடன் உறீஇய நோயே.

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாய் நின்றுழி, அவன் கேட்குமாற்றால் வெறி நிகழா நின்றமை தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் வரைதற் கருத்தில்லாது தொடர்ந்து களவிற் கூடி மகிழ்ந்த பொழுது, ஒரு நாள் தலைவி இல்லின் புறத்தே நின்றான். அப்போது தம் வீட்டில் வெறியாட்டு நிகழ்ச்சி நடந்தது. அதனைத் தலைவன் கேட்கும் வகையில் தலைமகட்குத் தோழி தெரியப்படுத்தியது.

உரை : மலையிடத்தே புன்செய்க் கொல்லையில் தினைப்பயிரை வளர்த்த குறவர் விலங்குகள் புகுந்து அழிவு செய்யா வண்ணம் கழற்சிக் காயினைக் கண்ணாகப் பொருத்தி மெய்யான பெண்புலி போலச் செய்தமைத்த பொய்ப்புலியை, மிளகுக் கொடி படரும் கற்குகையினுள் வாழும் வலிய புலியின் ஏறு கூடிப் புனத்திடையே உள்ள மன்றில் கிடந்து தன் வருத்தம் நீங்குதற்கு இடமான மலையை உடைய நாடனாகிய தலைமகனால் உண்டாகிய நோயின்பொருட்டு வேலன் வெறியாட்டு நிகழ்த்துதற்கு உரியனவற்றை முறைப்படி செய்தான். (இனி நாம் செய்வது யாது?).

உரை விளக்கம் : இச்செய்யுளின் மூன்றாம் அடி, உ.வே.சாமிநாதையர் பதிப்பில் விடுபட்டுள்ளது. இஃதன்றியும் இச்செய்யுட்குப் பொருள் செய்ய இயலும். ஈழத்துரையாசிரியர் இவ்வாறே செய்துள்ளார். எனினும் ஒளவை சு. துரைசாமிப்

Koviloor Digital Library

பிள்ளையின் உரையில், சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியாரின் பிரதியையொட்டி மூன்றாமடியை நிரப்பி உரை கண்டார். இப்புதிய பாடத்தினையே பெருமழைப்புலவரும் தழுவியுள்ளார். அஃது இச்செய்யுளில் வரும் சூழலுக்கு முற்றும் பொருந்துவதனால் இவ்வுரையிலும் அவ்வடியை உட்படுத்தி விளக்கம் தரப்பட்டது.

'வேலன் வெறி செறித்தனன்' என்றாள், தலைவியின் நோய்க்கு வெறியாடுதலே பொருந்திய தீர்வு என அன்னைக்கு அவன் அறிவுறுத்தி வற்புறுத்தியமையைப் புலப்படுத்த.

தினைப்புனத்தை அழிக்க வரும் மான் முதலான விலங்குகட்கு அச்சமூட்டுதற் பொருட்டுப் பெண்புலியின் பொம்மையைச் செய்து, அதன் கண்ணாகக் கழற்சிக் காயை அமைத்திருந்தமை புலப்படக் 'கழங்கு மெய்ப்பட' என்றாள். 'மெய்ம்மை அன்ன பெண்பால்' என்றது, பொய்யான அவ்வுருவம் மெய்யான புலிபோல் காட்சியளித்ததை விளக்குதற்காகும். காம வயப்பட்ட ஆண்புலி அதனை மெய்யாகவே உணர்ந்தது என்பதனால் அதன் காமவேட்கை மிகுதி சுட்டப்பட்டது. எனினும், அஃது அவ்வாறு மயங்க அதன் மெய் போன்ற தோற்றமும் அடிப்படையென்னலாம். மன்று என்றது தினைக் கொல்லையின் நடுவாகும். பையுள் தீரும் என்றது, ஆண்புலி தன் காம வேட்கை தீர்ந்து நிறைவடைந்தது என்ற குறிப்பிற்று.

அருஞ்சொற்பொருள் : செறித்தனன் - நெருக்கினான்; கறிய - மிளகுக் கொடிகளைக் கொண்ட; கன்முகை - கற்குகை; வயம் - வலிமை; உறீஇய - உறுவித்த, அடைவித்த.

உள்ளுறை : வயப்புலி பொய்யாகச் செய்து வைத்த பெண்புலி உருவினைப் புணர்ந்து வேட்கை தீரும் என்றது தலைமகன் வரைந்து கொண்டு மெய்யான இன்பத்தை நுகரக் கருதாது, களவிற்புணர்ச்சியிலேயே நிறைவடைகின்றான் என்றதை உள்ளுறுத்தது.

Koviloor Digital Library

247

அன்னை தந்தது ஆகுவது அறிவென்;
பொன் நகர் வரைப்பில் கன்னம் தூக்கி,
'முருகு' என மொழியும் ஆயின்,
அரு வரை நாடன் பெயர்கொலோ அதுவே?

கூற்று : வெறி விலக்கலுறும் தோழி தமர் கேட்பத் தலைமகளை வினவுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் பிரிவினால் தலைவி வேறுபட்டது கண்டு வருந்திய தாய் வேலனைத் தருவித்து வெறியாட்டயர்ந்து தன் மகளின் துயர் தீர்க்க முயன்றாள். அதனை விலக்கி உண்மையை யாவர்க்கும் புலப்படுத்த விரும்பிய தோழி, உறவினர் பலரும் கேட்குமாறு, தலைவியை இங்ஙனம் வினவினாள்.

உரை : அன்னை வெறியாட்டயர்தற் பொருட்டு வேலனையழைத்த தன்மையை யான் அறிவேன். வேலன் அழகிய நம் மனையிடத்தே அமைந்த களத்தில் வெறியாடிப் படிமத்தை எடுத்து நின்று இவள் நோய்க்குக் காரணம் முருகனே என்பானாயின், அப்பெயர் அரிய மலைநாடனது பெயராகுமோ?

உரை விளக்கம் : அன்னை வேலனை அழைத்த தன்மை எனக் குறித்தது அவளது அறியாமையைச் சுட்டியது என்க. 'யான் அதனை அறிவேன்' என்றாள், வேலன் யாண்டும் எதற்கும் முருகனையே காரணமாகக் கூறி ஏமாற்றும் தன்மையைத் தான் நன்கு அறிந்தமையை விளக்க. 'பொன்னகர்' என்று தலைவியின் மனையைச் சிறப்பித்தாள் அவள் பிறந்த குடியின் செல்வ வளத்தினை விளக்க. 'முருகென மொழியுமாயின்' என்றாள் வேலன் முருகு என மொழிதல் ஒருதலையாதலான். 'அருவரை நாடன் பெயர்கொலோ அதுவே' என்றாள், அருவரை நாடனாகிய நம் காதலன் பெயராக அஃது இருப்பின் (முருகு என்னும் பெயர்)

Koviloor Digital Library

வேலன் சொன்னது தகும் என்ற கருத்தில். தலைவியின் நோய் முருகனால் வந்ததன்று, ஒரு மானுடத் தலைவனால் வந்தது எனத் தாய் உணர வேண்டி 'கெழுதகைகொல் இவள் அணங்கியோற்கு' என்று முன்னும் வந்ததோடு (செய். 245) இதனை ஒப்பிடுக. இதனால், தலைவியுற்ற துயர்க்கு மருந்து அவளை அவள் காதலனொடு இணைத்து வைப்பதொன்றே என உணர்த்தினாள் என்க. இச்செய்யுளில் வரும் கன்னம் என்பதற்குப் படிமக்கலம் எனப் பொருள் செய்வார் ஈழத்து உரையாளர். பொன்னகர் வரைப்பு என்பதனைப் பெருமழைப் புலவர் அழகிய மனைப்படப்பை என்று விளக்குவார். நகர் என்பது மாளிகை வீடாதலின் மனைப்படப்பையென்றல் பொருந்தாமை அறிக.

அருஞ்சொற்பொருள் : பொன் – அழகு, செல்வம்; நகர் – மாளிகை; வரை – மலை.

248

பெய்ம்மணல் முற்றம் கவின் பெற இயற்றி,
மலை வான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவது என்றால்,
நன்றால் அம்ம, நின்ற இவள் நலனே!

கூற்று : 'தலைமகள் வேறுபாடு கழங்கினான் தெரியும்' என்று வேலன் கூறியவழி, அதனைப் 'பொய்' என இகழ்ந்த தோழி, வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைமகள் தலைவன் பிரிவாற்றாது மெலிந்தாள். வேலனிடம் அவள் மெலிவிற்குக் காரணம் வினவிய தாய்க்கு, அவள் மெலிவிற்கு முருகணங்கே காரணம் என்றான். அச்சூழலில் உண்மையுணர்ந்த தோழி, நிகழவிருந்த வெறியாட்டினைத் தடுத்துத் தன் தாய்க்கு மறைவெளிப்படுத்தியது.

Koviloor Digital Library

உரை : கொண்டுவரப்பட்ட மணல் நிரம்பிய முற்றத்தினை மலர் மாலைகள் முதலியவற்றால் மேலும் அழகுறுத்தி, அங்கே, மாறுபாட்டுடன் போரிடற்பொருட்டு முருகக் கடவுள் ஏந்திய வேலினைத் தன் கையிலேந்தி வெறியாட்டாளன், கழங்கினை இட்டு அறிந்து கூறுவதொன்றாயின், இவள்பால் அமைந்த கற்பின்திறம் நன்று. (அவள் திறம் வெறும் கழங்கினால் அறியத் தக்க சிறுமையுடையதன்று).

உரை விளக்கம் : வெறியாடும் களம் மணலாலும் மலர்மாலைகளாலும் பிறவற்றாலும் அழகுறுத்தப்படுதல் வழக்கமாதலின் 'பெய்மணல் முற்றம் கவின்பெற இயற்றி' என்றாள். 'தருமணல்' என்றும் கூறுப. இங்குக் கவின்பெற இயற்றப்படுவது வெறிக் களமாம். முருகன் ஏந்திய வேலையே வெறியாட்டாளன் ஏந்தியாடுகிறான் என்பது நம்பிக்கை ஆதலின், 'சினைஇய மலைவான் கொண்ட' என்று வேலைச்சிறப்பித்தாள். முருகன் என்ற ஒரு சொல் வருவித்துரைக்கப்பட்டது. தலைவியின் கற்பு வெறும் கழங்குக் குறியால் அறிந்து சொல்லத்தக்க அத்துணைச் சிறுமைத்தன்று என்பாளாய், 'கழங்கினால் அறிகுவதென்றால்' என்றாள். அவ்வாறு அவனால் அறிந்து கூறப்படுமானால் அதுவும் நன்று என்றாள். இஃது ஓர் இகழ்ச்சிக் குறிப்பாம். இதனால், வேலனால் மதிப்பிடத்தக்க சிறுமையுடையதன்று கற்பு என்பதே விளக்கப்பட்டதென்க. தலைவியின் மேனி வேறுபாட்டை நீக்குவதற்கு என மேற்கொள்ளப்பட்ட இவ்வெறியாட்டு, இவளுடைய கற்பிற்கு வைத்த சோதனை. இதற்கு இத்துணை அல்லற்பட வேண்டா. இவளைக் கவர்ந்த தலைவனுக்கே மணமுடித்துக் கொடுத்தல் தவிரப் பிற தீர்வு இல்லை என்பது தோழியின் கருத்தாகக் கொள்க.

இச்செய்யுளின்கண் உள்ள 'மலைவான் கொண்ட சினைஇய வேலன்' என்னும் பகுதிக்கு அறிஞர் வெவ்வேறு பொருள் கூறுப.

மலைவான் – என்பதனை உ.வே.சாமிநாதையர் மாறுபாட்டினால் என விளக்குவார்.

Koviloor Digital Library

பெருமழைப்புலவர், மலைவான் என்பதனை வானீற்று வினையெச்சமாகக் கொண்டு, 'போரிடற்பொருட்டு முருகன் கைக்கொண்ட சினந்த வேலினை ஏந்திய இவ்வேன்மகன்' என விளக்கினார். சினத்தை இவர் வேல்மீது ஏற்றினார். மேலும், மலைதலுக்கு அணிதல் என்னும் பொருளும் உண்டாதலின் 'தன்னை அணிந்து கொள்ளற்பொருட்டே கைக்கொண்ட வேலை உடைய இவ்வேலன்' என்று இரண்டாவது விளக்கமும் தருவார். 'சினைஇய வேலன்' என்பதில், சினத்தை வேலனுக்கு அடையாக்கி, காரணம் யாதுமின்றியே சினக்கும் வேலன் என்று இகழ்ந்ததாகவும் சொல்வார். அவ்வாறு வேலன் சினம் கொண்டாற்போலக் காட்டுவது வெறியாட்டில் வழக்கமாகும்.

இனி, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, மலைவான் என்னும் சொல்லை மலை, வான் என இருபெயர்ச் சொற்களாக அடையாளம் கண்டு உம்மைத் தொகையாக்குவார். அஃதாவது மலையையும் வானையும் வென்று கொண்ட சினத்தை உடைய முருகனுடைய வேலை ஏந்தியவன் வேலன் என்றார். ஈண்டு மலையென்றது குருகுபெயர்க் குன்றமான கிரௌஞ்சம். வான் எனச் சுட்டியது வானவர்களை. இப்பொருட்குச் சான்றாக, இவ்வாசிரியர் விரிவாகத் தரும் விளக்கத்தை அவர் உரையிற் கண்டுணர்க. 'வேலன் தாங்கி நிற்கும் வேல் மலையைக் கிழித்து வானத்திற்குக் காட்சி வழங்கும் அத்துணை வன்மையும் வினைத்திறமும் உடையதாயினும் இவளது கற்பின் திண்மை முன் செல்லாது என்பாள், மலைவான் கொண்ட சினைஇய வேலன் என்றாள்' என இவ்வாசிரியர் கூறும் விளக்கம் நயமுடைத்து.

பழையவுரையாசிரியரும் பிறரும் கழங்கினால் அறிய முற்படுவது தலைவியின் கற்பு எனவே கொண்டனர். ஆயின் ஈழத்து உரையாளரோ, 'இவளது வேறுபாடு கழங்குக் குறி பார்த்தலினால் தெரியுமெனக் கூறா நின்றான்' என விளக்கியுள்ளார்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : பெய்ம்மணல் – தருவித்துக் கொணர்ந்து நிரப்பிய மணல்; கவின்பெற – அழகுபெற; இயற்றி – செய்து; மலைவான் – மாறுபாடு கொண்டு, மலையும் வானும், போரிடற்பொருட்டு; சினைஇய – சினந்த; வேலன் – வெறியாட்டாளன்; நலன் – கற்பு.

இலக்கணக்குறிப்பு : பெய்மணல் – வினைத்தொகை; மலைவான் – வானீற்று வினையெச்சம்; மலைவு +ஆன் – மூன்றாம் வேற்றுமை விரி; மலையும் வானும் – உம்மைத்தொகை; என்றால் – செயின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; அம்ம, ஆல் – அசைகள்.

மேற்கோள் : வெறியாட்டிற்குக் களன் இழைத்தல் :

'களன் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி
வள நகர் சிலம்பப் பாடி ....'
– அகம். 22.

வேலன் நோய்மருந்து அறியான் :

வெறியென உணர்ந்த வேலன் நோய்மருந்து
அறியா னாகுதல் அன்னை காணிய
– குறுந். 360.

அறியாவேலற் றரீஇ அன்னை
வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
– அகம். 242.

249

பெய்ம்மணல் வரைப்பில் கழங்கு படுத்து,
அன்னைக்கு,
'முருகு' என மொழியும் வேலன்; மற்று – அவன்
வாழிய – இலங்கும் அருவிச்
சூர் மலை நாடனை அறியாதோனே!

Koviloor Digital Library

கூற்று : வேலன் கூறிய மாற்றத்தை மெய்யெனக் கொண்ட தாய் கேட்பத் தலைமகட்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவன் பிரிவால் மேனி வாட்டமுற்றாள் தலைவி. அவ்வாட்டத்திற்குரிய காரணம் அறிய அன்னை வேலனை வினவினாள். அவன் அம்மெலிவு முருகனால் ஆயிற்று என்றான். அதனை மெய்யென நம்பிய தாய் கேட்குமாறு தோழி சொல்லியது இது.

உரை : புதிதாகக் கொணரப்பெற்ற மணலால் நிரப்பப்பெற்ற வெறியாடற் களத்தில், அன்னையால் வரவழைக்கப்பட்ட வேலன் கழற்சிக்காய்களைப் பரப்பி, எண்ணிக் குறிபார்த்து, நின் மெலிவிற்குக் காரணம் முருகனே என நம் தாய்க்குக் கூறுவானாயின், அவ்வேலன் நீடுழி வாழ்வானாக! ஏனெனில், அவன் அருவியையும், தீண்டி வருத்தும் தெய்வங்களையும் உடைய மலைநாடனாகிய நம் காதலரை அறிந்து அன்னைக்குக் கூறாமையின். (கூறியிருப்பின் நம் நிலை இரங்கத் தக்கதே!)

உரை விளக்கம் : 'பெய்ம்மணல்' என்பதற்கு முன்னைய செய்யுளில் சொல்லப்பட்ட விளக்கம் கொள்க. கழங்குபடுத்த லாவது கழற்சிக்காய்களைப் பரப்பி வைத்து எண்ணிச் சொல்லுதல். இது முன்னும் விளக்கப்பட்டது. (ஐங். 245) 'முருகென மொழியும்' என்றாள், அவன் அஃதொன்று தவிரப் பிற சொல்லியறியான் என்ற இகழ்ச்சிக் குறிப்பில். 'அவன் வாழிய' என வாழ்த்தினாள். அன்னையின் அலைப்பினின்று நம்மைக் காப்பாற்றினான் வேலன் என்ற மகிழ்ச்சியில். தலைவியின் மெலிவுக்குக் காரணம் சூர்மலை நாடனே என்று உண்மை கூறின், களவு வெளிப்பட்டு அன்னையின் சினத்திற்கு ஆளாக வேண்டும். அங்ஙனம் கூற இயலாத அவனுடைய அறியாமைக்காக அவன் நீண்ட நாள் வாழவேண்டுமென்றாள். 'நோய் செய்தானை விடுத்து அது செய்யாத முருகனைக் கூறிய குற்றத்திற்கு இரங்குவாள், 'அவன் வாழிய' என்றாள் என்று நயவுரை தருவார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

குறிப்புப் பொருள் : தலைவனை இலங்கும் அருவிச் சூர்மலை நாடன் என்றது அவன் தலைவிக்குச் செய்யும் தண்ணளியும், தன் பிரிவாலே அவட்கு நோய் செய்யும் வன்கண்மையும் ஒருங்கே உடையன் என்னும் இறைச்சிப்பொருள் கொண்டது.

250

பொய் படுபு அறியாக் கழங்கே! – மெய்யே
மணி வரைக் கட்சி மட மயில் ஆலும் நம்
மலர்ந்த வள்ளி அம் கானம் கிழவோன்;
ஆண் தகை விறல் வேள் அல்லன் – இவள்
பூண் தாங்கு இளமுலை அணங்கியோனே.

கூற்று : 'தலைமகட்கு வந்த நோய் முருகனால் வந்தமை இக்கழங்கு கூறிற்று' என்று வேலன் சொன்னான் என்பது கேட்ட தோழி அக்கழங்கிற்கு உரைப்பாளாய், செவிலி கேட்குமாற்றால் அறத்தொடு நிலைகுறித்துச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகள் மேனி மெலிவிற்கு முருகனே காரணம் என வேலன் கழங்கு பார்த்துச் சொன்னான். அதுகேட்ட தோழி அக்கழங்கிற்குக் கூறுவதாய்த் தாய்க்கு உண்மை உரைத்தது.

உரை : பொய்த்தல் அறியாத கழங்கே! என் தோழியின் அணிகலன்களைத் தாங்கிய இள முலைகளை முயங்கி வருத்தமுறச் செய்தவன் நீலமணியை ஒத்த மலைகளிடையே உள்ள இள மயில்கள் ஆடி மகிழும் வள்ளிக்கொடி படர்ந்த விரிந்த காட்டிற்கு உரிமையுடையனாகிய மக்களுள் உள்ளானொருவனே. இஃது உண்மை! ஆண்டன்மை மிகுந்த வெற்றியை உடைய செவ்வேளல்லன்.

உரை விளக்கம் : தலைவியை வருத்தியவன் முருகனேயெனக் கூறியது கழங்காதலின், பொய் சொன்ன அதனைப் பொய்த்தலறியாத

Koviloor Digital Library

கழங்கு எனப் பாராட்டியது, இகழ்ச்சிக் குறிப்புடையதென்க. அன்றியும், பொய்த்தலறியாதது என மக்களால் நம்பப்படும் கழங்கு என்றதுமாம்.

மணிவரை யென்ற பாராட்டு அதன் நீல (கரிய) நிறம் பற்றியது என்பது மட்டுமல்லாது நீலமணிகட்கு இருப்பிடமானது என்பதுமாம். மயிலாலுவது மலையின் உயர்ச்சியையும், வள்ளி மிகுதி அதன் வளமலி தன்மையையும் சுட்டுவனவாம். 'நம் மலர்ந்த வள்ளியம் கானம்' என்றாள், தலைவன் மேல் உள்ள காதல் உரிமை பற்றி. தலைவன் மார்பு தலைவியை அணைத்து மகிழ்விக்கும் தன்மையது என்பது பற்றி அம்மலையின் கானத்தை மலர்ந்த கானம் என்றாள் என்க. முருகன் ஆண்மையும் வீரமும் பொருந்திய சேனாபதியாதலின் ஆண்டகை விறல்வேள் என்றாள். இனி ஆண்டகை என்றதனைத் தலைவனுக்கு ஆக்கலும் பொருந்தும். 'ஆண்டகையாகிய கானம் கிழவோன்' என இயையும். 'நம் மலர்ந்த வள்ளியங்கானம் கிழவோன்' என்றது, 'நம் கண்ணிற் காண நம்மிடையே வாழும் இம்மலைத் தலைவனே என் தோழியின் இளமுலையை வருத்தியோன்; இம்மலையுறை கடவுளாம் முருகனல்லன். எனவே அத்தலைவனுக்கு விரைவில் இவளை மண முடித்துக் கொடுத்தலே கடன்' என்று அறத்தொடு நின்றாள் தோழி என்க.

அருஞ்சொற்பொருள் : கட்சி – காடு; மணி – நீலமணி; மடமயில் – இளமயில்; ஆலும் – ஆடும்; ஆரவாரிக்கும்; மலர்ந்த – அகற்சியுடைய; விறல் – வெற்றி; வேள் – செவ்வேள்; அணங்கியோன் – வருத்தியோன்.

குறிப்புப் பொருள் : இக்காட்டின்கண் இளமயில் ஆடும்படி மலர்ந்த வள்ளிக்கொடி படர்ந்த கானங்கிழவோன் என்றது, பொழிலின்கண் இளமையுடைய எம்பெருமாட்டி களித்து ஆடும்படி மலர்ந்த காதலாகிய கொடியாற் பிணித்தவன் என்பது தோன்ற நின்றது (பெருமழைப்புலவர்).

வெறிப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

26. குன்றக் குறவன் பத்து

அஃதாவது, குன்றக்குறவன் என்னும் தொடரை முதலாகக் கொண்ட பத்துச் செய்யுட்களின் தொகுதி என்பதாகும்.

251

குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண் பல் அழி துளி பொழியும் நாட!
நெடு வரைப் படப்பை நும் ஊர்க்
கடு வரல் அருவி காணினும் அழுமே.

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகனுக்கு வரைவு வேட்ட தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் வரைதலில் விருப்பம் கொள்ளாது தொடர்ந்து வந்து தலைவியொடு அளவளாவி மகிழ்தலில் ஆர்வம் காட்டி வந்தது கண்ட தோழி, ஒருநாள் தலைவனை எதிர்ப்பட்டு, அவன் விரைவில் தலைமகளை மணம் செய்துகொள்ள வேண்டும் என வற்புறுத்தியது.

உரை : குன்றத்தின்கண் வாழும் குறவன் ஆரவாரம் செய்தால் வான்முகில் நுண்ணிய பலவாகிய மழைத்துளிகளை மிகுதியாகப் பொழிவதற்கு இடமான மலைநாட்டுக்குத் தலைவனே! நெடிய மலைக்கண் உள்ள தோட்டங்கள் பொருந்திய நும் ஊரிலிருந்து விரைந்து ஓடிவரும் அருவியைக் கண்டாலும் என் தோழி கண்கலங்கி அழுகின்றாள்.

Alagappa university
Central Library
63746

Koviloor Digital Library

உரை விளக்கம் : குன்றின்மீது தாம் விதைத்து வளர்த்த தினைப் பயிருக்கு மழைவேண்டிக் குறமாந்தர் ஆரவாரம் செய்தனர் என்க. ஆரவாரம் செய்தால் மேகம் மழை பொழியும் என்பது ஒரு பழங்கால நம்பிக்கையாகும். சில பழங்குடி மக்களிடம் இன்றும் இத்தகு நம்பிக்கை உண்டு என்பர் அறிஞர். நெல் அறுவடைமுடிந்து, கதிரை அடித்து நெல்மணிகளைத் தூற்றும் பொழுது, கீழ்க்கை ஒலியெழுப்பினால் காற்று விரைவாக வீசும் என்ற நம்பிக்கை இன்றும் உண்டு 'புலிபுலி' என்று ஆரவாரித்தால் வேங்கை மரம் தன் கிளைகளைத் தணித்துக் கொடுக்கும் என்ற நம்பிக்கையொடு இதனை ஒப்பிடுக.

இவ்வார்ப்பு, குறவர் தம் கடவுளை வாழ்த்து முகமாக எழுப்பும் ஆரவாரம் என்பாரும் உளர். அஃதுண்மையெனில் ஆர்ப்பின் என்பதற்கு மாறாக வாழ்த்தின் என்றே புலவர் செய்யுள் செய்திருத்தல் கூடும். அங்ஙனம் செய்யாமையின் ஆரவாரம் என்று பொருள்கோடலே அமையும். அது மந்திரச் சடங்கு வகை சார்ந்த ஆரவாரம் என்பர். மழை வேண்டி மலையுறை கடவுட்குப் பலி தூவி வழிபட்டனர் என்றும், பின்னர் மழை தேவையில்லாதபோது மேகம் மேலே எழுந்து செல்லுதலை விரும்பி வேண்டினர் என்றும் புறநானூற்றுப் பாடல் ஒன்று (143) கூறுகின்றது. இச்செய்யுளில் குறமாக்கள் பலிதூவியது பற்றிய குறிப்பிருந்தாலும், ஆரவாரம் செய்தனர் என்பதற்குரிய சான்றேதும் காணப்படாமையை நோக்குக.

நும்மூர்க்கடுவரல் அருவி காணினும்' என்றது கொண்டு, தலைவன் ஊர்க்கண் இருந்த மலை தலைவி ஊரிலிருந்து காணும் தொலைவில் இருந்தது என்பது அறியப்படும். 'அருவி காணினும் அழும்' என்றது அதன்பால் தன் மனக்குறையைச் சொல்லித் தலைவி அழும் என்ற குறிப்பிலாகும். அன்றியும், அதனைக் காண்டலே அவள் கண்களில் நீர் நிறைந்து வழியப் போதுமானது என்றலும் அமையும். அது வெறுப்பின் வெளிப்பாடு என்க.

காதலன் நாட்டு மலையைக் காண்டலும், அவன் மலையிலிருந்து வரும் அருவியில் திளைத்தலும் பிறவும் காதலிக்கு இன்ப மூட்டுவன. ஆனால், தலைவன் அளவினை விஞ்சிக்

Koviloor Digital Library

களவினை நீட்டித்தலால் உண்டான வெறுப்பு மிகுதியால், அவன் ஊர் அருவியைக் கண்டாலேயே அழுகிறாள் என்க. அவ்வெறுப்பு மேலும் வளர்வதற்குள், வரைந்து கொள்க என்பது தோழியின் அறிவுரையாகும்.

அருஞ்சொற்பொருள் : ஆர்ப்பின் – ஆரவாரித்தால்; எழிலி – மேகம்; அழிதுளி – மிக்க துளி; படப்பை – தோட்டம்; கடுவரல் – விரைந்த வரவினை உடைய.

இலக்கணக்குறிப்பு : ஆர்ப்பின் – செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; அழிதுளி – வினைத்தொகை; வரல் – தொழிற்பெயர்.

குறிப்புப் பொருள் : குறவன் ஆர்த்த அளவிலேயே வான் முகில் மழையைப் பொழியும் நாட என்றது, நின் மலையில் படியும் மேகத்திற்கு உள்ள அருட்பண்பும் நின்பால் இல்லையென்னும் குறிப்புப் பொருள் கொண்டதென்க.

குறவன் தனக்கு இன்றியமையாத தினை நீரின்மையால் வாடுதல் கண்டு அவ்வாட்டம் கெடக் கடவுட்பேணி ஆர்த்த இடத்து எழிலி நுண்ணிய பலவாகிய மழைத்துணிகளை மிகுதியாகப் பெய்வதுபோல நினக்குத் துப்பாகிய இவள் நலம் அலர் முதலியவற்றால் வாடுவது கண்டு யாம் நின்னை வேண்டியபொழுது, நீ அவ்வலர் கூறுவார் அமைதியுறுமாறு வரைந்துகொள்க என்னும் உள்ளுறை காண்பார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

இனி, நல்லோர்க்காகவே மழை பொழிகிறது என்றும், அறநெறி நிற்கும் மாந்தர் வான்மழையைத் தருதற்கும் உரியர் என்றும் பண்டையோர் நம்பினர். எனவே, ஒரு குறவன் ஆர்த்தால் மழை பொழியும் நாடன் என்றது, நின் நாட்டில் அனைவரும் நல்லவராக இருக்கையில், நீ மட்டும் இவ்வளவு கொடியையாக இருத்தல் எவ்வாறு என வியந்து கூறியபடியாம்.

Koviloor Digital Library

252

குன்றக் குறவன் புல் வேய் குரம்பை
மன்று ஆடு இள மழை மறைக்கும் நாடன்
புரையோன் வாழி, - தோழி! - விரை பெயல்
அரும் பனி அளைஇய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் குறித்த பருவத்திற்கு முன்னே வந்தானாக, உவந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : சின்னாள் கழிந்தபின் மணந்து கொள்வதாக உறுதி கூறிப் பொருள் தேடச் சென்ற தலைமகன், தான் வருதற்குக் குறித்த பனிப்பருவத்திற்கு முந்தி வந்த போது, தோழி மகிழ்வுற்று, அம்மகிழ்ச்சியைத் தலைமகட்குக் கூறுகின்றாள்.

உரை : தோழியே! குன்றத்தின்கண் வாழும் குறவனின் புல்லால் வேயப்பெற்ற சிறுகுடிலை மன்றத்தின்கண் அசைந்து ஆடி உலவும் இளவெண்முகில் மறைக்கும் நாடன், விரைந்து பெய்யும் தாங்குதற்கு அரிய பனியொடு கலந்த, கூதிர்ப்பருவத்து வீசும் இயல்புடைய கடுங்குளிருடைய வாடைக்காற்று வருதற்கு முன்னே வந்தனன். எனவே அவன் உயர்ந்தோனாவன். அவன் வாழ்க.

உரை விளக்கம் :- குன்ற வாழ்வினர் எளிய ஊகம்புல்லால் வேய்ந்த சிறு குடில்களில் வாழ்வோராதலின் 'புல்வேய் குரம்பை' என்றாள். 'மன்றாடு இளமழை' என்றாள், மேகம் முன்றிலில் வந்து ஆடும் அளவிற்கு உயர்ந்த குவட்டினை உடைய குன்று என்பது தோன்ற. இளமழையாவது சூல் கொள்ளாத வெண்முகிலாகும். மறைத்தலாவது, குரம்பையின் பொல்லாங்கினை மறைத்தல் என்பர். வெறுமனே மறைத்தல் எனினும் தவறின்று. 'விரைபெயல் ..... பனி' என்றாள், நல்ல பனிக்காலம் என விளக்க. 'அரும்பனி' எனச் சிறப்பித்தாள், யாவரும் தாங்கலாகாத குளிர்ச்சியுடையது என்பதுபட.

Koviloor Digital Library

பிரிந்துறைவார்க்குப் பெரும் துன்பமூட்டுதலின் 'அரும்பனி' என்றாள் எனலுமாம். வாடையின் கடுமை தோன்றப் 'பெருந்தண்' என்று சிறப்பித்தாள். வாடை வந்து நம்மை வாட்டும் என்பதனை அருளுள்ளதால் உணர்ந்து தன் சொல்பிழையாது, அது வருதற்கு முன்னே வந்தார் எனப் பாராட்டுவாளாய், 'வாடையின் முந்து வந்தனன்' என்றாள். இனி, வரும் வாடை நம்மை யாதும் செய்யவல்லதன்று என்பது கருத்தாம். முந்து வந்த மூதறிவுடைமையைப் பாராட்டுவாள், 'புரையோன்' என்றாள்.

'மஞ்சாடு' எனப்பாடம் கொண்டு, 'புகைமுகிலாய் அசையும் இளமழை' என்று பொருள் கூறுவார் உளர். (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை) மன்றாடு என்பதற்குத் தோட்டத்தின் நடுவில் அசையும் என்று பொருள் கொள்வாரும், வான வெளியில் அசையும் முதிராத வெண்முகில் என்பாரும் உண்டு.

அருஞ்சொற்பொருள் : புல் – ஊகம்புல்; பைஞ்சாய்க் கோரையுமாம்; மன்று – வீட்டின் முற்பகுதி; இளமழை – முதிராத வெண்முகில்; புரையோன் – உயர்ந்தோன்; பெருந்தண் வாடை – மிக்க குளிர்ச்சியுடைய வடந்தை.

மேற்கோள் : மலை முகட்டில் இளமழை தங்கல் :

'ஆடியல் இளமழை சூடித் தோன்றும்
பழந் தூங்கு விடரகம்'

– அகம். 271.

உள்ளுறை : இளமழை மேல் நின்று வெயிலால் வரும் துயரத்தையும் பெய்யாது நின்று மழையால் வரும் துயரத்தையும் தடுத்தாற் போன்று நம் பெருமானும் நம் கருத்தின்வழி நின்று வரைதற்கு ஆவன ஈட்டிக் கொணர்தலால், இன்னும் வரைந்திலனே என்னும் நம் துயரத்தையும், குறித்த பருவங்காறும் ஆண்டுத் தங்காமல் விரைந்து மீண்டமையால் நமது பிரிவாற்றாப்

Koviloor Digital Library

பெருந்துயரத்தையும் ஒருசேரக் களைந்தான் என உள்ளுறைப் பொருள் கொள்வார் பெருமழைப்புலவர்.

253

குன்றக் குறவன் சாந்த நறும் புகை
தேம் கமழ் சிலம்பின் வரையகம் கமழும்
கானக நாடன் வரையின்,
மன்றலும் உடையள்கொல் – தோழி! – யாயே?

கூற்று : 'வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் வரைவொடு புகுதரா நின்றான்' என்பது தோழி கூறக்கேட்ட தலைமகள் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு ஆகும் பொருள் தேடச் சென்ற தலைவன் அதனை ஈட்டித் திருமண ஏற்பாடுகளோடு வந்தான் என்பதனைத் தோழி வாயிலாக அறிந்த தலைவி, தோழியிடம் கூறியது இது.

உரை : தோழியே! குன்றத்தின்கண் வாழும் குறவன் சந்தன மரத்தை வெட்டிச் சுடுதலால் எழும் நறும்புகை தேன் மணம் கமழும் பக்கமலைகளைக் கொண்ட மலைச்சாரல் முழுவதும் பரவி மணக்கின்ற மலைநாடனாகிய நம் தலைவன் என்னை வரைவான் என்றால், நம் தாய் தானும் ஒரு மன்றலை நம்மில்லத்தில் நிகழ்த்துவாளோ?

உரை விளக்கம் : சாந்த நறும்புகையாவது, விலையுயர்ந்த சந்தனக் கட்டைகளை எரிப்பதனால் எழும் நறும்புகையாம். மலை வாழ் குறவர் அடுப்பெரிப்பதும் சந்தனக் கட்டை கொண்டே என மலைநாட்டைப் புகழ்ந்தாள் என்க. அன்றியும், புனமழிப்பார் வெட்டியெரியூட்டும் பொழுது சந்தனமும் வேதலுண்டு என்க.

Koviloor Digital Library

வரையகமெல்லாம் சந்தன நறுமணம் கமழும் என்றாள், தலைவன் வரைவால் ஊரெல்லாம் மகிழும் என்னும் குறிப்பில். 'வரையின்' என்றாள், தோழி தலைவன் வரைவொடு வருவதாகச் சொன்னதை உட்கொண்டு. தன் தாய், வேற்று வரைவிற்குரிய ஏற்பாடு செய்திருந்தமையால், இப்பொழுது தலைவன் வரைவொடு வந்த பின்னும், அவ்வேற்று வரைவினை வற்புறுத்துவாளோ என்று வினவுவாளாய், 'மன்றலும் உடையள் கொல்' என்றாள். தலைவன் வேண்டுகோளை ஏற்று, அம்மன்றல் நிகழ்ச்சியில் தானும் பங்கேற்பாளோ எனக் கேட்டாள் எனினும் அமையும்.

'மன்றலும் உடையள் கொல்' என்பதற்கு 'நம் அன்னை தன் மனையின்கண்ணும் ஒரு வதுவைச் சிறப்புச் செய்தலை உடையளாவளோ? என்று உரை கூறி, 'கானக நாடன் போந்து நம்மை வரைந்து கொள்ளுங்கால், நம் அன்னை வேறும் ஒரு மணவினையால் அவர் செய்யும் சிறப்பினும் மிக்க சிறப்புச் செய்தலை உடையளாவளோ? அன்றி, தன்மனைக்கட் செய்யும் சிறப்பினால், அவர் சிறப்பு மிகுமாறு செய்வளோ? யாதோ? யானறியேன். என நயம்படக் கூறுவார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

இனிக் களவொழுக்கம் நிகழும் காலமெல்லாம் தன்னை இற்செறித்தும், புறம் போகாதவாறு தடுத்தும் இன்னோரன்ன கொடுமை பல செய்தவளாகிய நம்மன்னை இத்திருமண வினையிலே தானும் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு அதனைச் சிறப்பிப்பாளோ அல்லளோ என்று வினவியதாகக் கூறுவார் பெருமழைப்புலவர்.

அருஞ்சொற்பொருள் : சாந்தம் – சந்தனம்; தேம் – தேன்; மன்றல் – மண நிகழ்ச்சி.

Koviloor Digital Library

மேற்கோள் : குறவர் சந்தனக் கட்டை கொண்டு அடுப்பெரித்தல் :

'குறத்தி மாட்டிய வறன்கடைக் கொள்ளி
ஆரமாதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினை கமழும் பறம்பு'
– புறம். 108.

'சாந்த விறகின் உவித்த புன்கம்'
– புறம். 168.11.

உள்ளுறை : சாந்த நறும்புகை இயல்பாகவே சிலம்பின்கண் கமழும் தேன்மணத்தோடு விரவிக் காடெல்லாம் கமழ்ந்து அக்காட்டினூடே இருக்கும் நாற்றத்தை மாற்றுவது போன்று, எம்பெருமான் வரைதலானே உண்டாகும் சிறப்பு நம் சுற்றத்தார் செய்யும் மன்றற் சிறப்போடு விரவி, நாடெங்கும் பரவி ஊரினுண்டாகிய அம்பலையும் அலரையும் அழிக்கும் என உள்ளுறை கொள்வார் பெருமழைப்புலவர்.

254

குன்றக் குறவன் ஆரம் அறுத்தென
நறும் புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டு இமிர் சுடர் நுதற் குறுமகள்!
கொண்டனர், செல்வர் – தம் குன்று கெழு நாட்டே.

கூற்று : உடன்போக்கு உடன்பட வேண்டிய தோழி, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : அஃதாவது, தலைமகளைத் தலைவனொடு அவன் நாட்டுக்கு அனுப்பிவைக்க விரும்பினாள் தோழி. அதற்குத் தலைவியின் உடன்பாடு வேண்டி இங்ஙனம் கூறினாள்.

Koviloor Digital Library

உரை : குன்றத்தின்கண் வாழும் குறவன் சந்தன மரத்தை அறுத்துச் சுட்டானாக, அதனால் எழுந்த நறும்புகை சூழ்ந்தமையால், காந்தள் மலர்களும் அச்சந்தன மணம் கமழும் தம்முடைய மலைசூழ் நாட்டிற்கு, வண்டுகள் சூழ்ந்து மொய்க்கும் சுடர் நுதலுடைய இளமகளாகிய நின்னைக் கொண்டு செல்லத் தலைவர் உடன்பட்டார்.

உரை விளக்கம் : காந்தள் இயற்கையிலேயே நறுமணம் கொண்டது. சந்தனத்தை எரிப்பதால் எழுந்த புகையின் நறுமணத்தால், அக்காந்தள் மேலும் நறுமணம் உடையதாயிற்று. இனி, சந்தன மணமும், காந்தள் மணமும் கமழும் நெற்றியுடையாள் என்பதும் ஒன்று. அதனால் வண்டுகள் மொய்ப்பனவாயின என்பதுபட, 'வண்டு இமிர் சுடர் நுதல்' என்றாள். தலைவரொடு புணர்ந்து போக ஆயத்தமாக இரு என்பாளாய், 'கொண்டனர் செல்வர் தம் குன்றுகெழு நாட்டே' என்றாள்.

(1) நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும் வண்டிமிர் சுடர்நுதற் குறுமகள்.

(2) குறவன் ஆரம் அறுத்தெனப் புகை சூழ்ந்து காந்தள் நாறும் குன்றுகெழு நாடு

என இருவகையாகப் பொருள் கொள்வர் அறிஞரேனும் இரண்டாவது பொருளே இதன்கண் அமைந்த உள்ளுறைக்குப் பொருந்திவருவது என்பார் பெருமழைப்புலவர்.

'இனி, நறும்புகை சூழ அதை அந்தியில் வந்த மேகமென்று கருதிக் காந்தள் நாறும் என்க. காந்தள் நாறும் குன்றுகெழு நாடெனக் கூட்டுக' என்பார் ஈழத்து உரையாசிரியர்.

அருஞ்சொற்பொருள் : அறுத்தென – அறுத்தமையால்; இமிர் – ஒலிக்கின்ற; குறுமகள் – இளமகளே; கொண்டனர் – கொண்டு.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : குறுமகள் – விளி; கொண்டனர் – கொண்டு எனப் பொருள் படும் முற்றெச்சம்; கெழு – கேழ் என்பதன் திரிபு.

உள்ளுறை : 1. புகை சூழக் காந்தள் நாறும் என்றது, அயலார் கூறும் அலர் அடங்கிக் கற்புடைமையோடு இல்வாழ்க்கைச் சிறப்பு பொருந்தச் செய்யும் நாடன் என்பதாம். (ஈழத்து உரையாசிரியர்).

2. குன்றக் குறவன் ஆரம் அறுத்துச் சுட்டமையாலே நறும்புகை சூழ்ந்து காந்தள் மலர் மணத்தோடு விரவிக் கமழும் என்றது உள்ளுறை; நீயும் நின் சுற்றத்தார் வருந்தினும் அவரைப் பிரிந்து போய்த் தலைவனொடு அவன் மனைக்கண் இருந்து அறம் விளைத்துப் புகழ் விளைக்கக் கடவை என்பது இதனாற் போந்த பொருள். (பெருமழைப்புலவர்)

மேற்கோள் : காந்தள் நறுமணமுடையது :

கறங்கிசை விழவின் உறந்தைக் குணாஅது
நெடும் பெருங் குன்றத்து அமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை

– அகம். 4.

வேங்கையும் காந்தளும் நாறி ..... தண்ணியளே

– குறுந். 119.

255

குன்றக் குறவன் காதல் மடமகள்
வரை யர மகளிர்ப் புரையும் சாயலள்;
ஐயள்; அரும்பிய முலையள்;
செய்ய வாயினள்; மார்பினள், சுணங்கே.

Koviloor Digital Library

கூற்று : 'நின்னாற் காணப்பட்டவள் எத்தகையள்?' என்ற பாங்கற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தான் ஒரு நங்கைபால் காதல் கொண்டதாகத் தன் நண்பனிடம் கூறினான். அங்ஙனம் அவனால் காதலிக்கப்பட்ட பெண் எத்தகையவள் என அவன் வினவிய பொழுது, தலைமகன் சொல்லியது இது.

உரை : நண்ப! என்னாற் காதலிக்கப்பட்ட பெண் குன்றத்தின்கண் வாழும் குறவனின் அன்பிற்குரிய இளமகள். அவள் மலையில் இயங்கும் தெய்வப்பெண்டிரை யொத்த சாயலுடையாள்; அழகுடையவள்; அரும்புபோலும் முலையினள்; சிவந்த வாயினாள்; தன் மார்பில் தேமலையுடையவள்.

உரை விளக்கம் : தலைமகன் உடல் இளைத்துக் காணப்பட்டமைக்கு அவன் நண்பன் காரணம் வினவ, அவனுக்குத் தான் ஒரு பெண்ணின்பால் உள்ளம் செலுத்தியதைத் தெரிவிக்க, அவன் இவனைக் கழறினானாக, அவளுடைய சிறப்புக்களை இங்ஙனம் பலபடப் புகழ்ந்துரைத்தான். அவள் உயர்ந்த குடியினள் என்பதனை, 'குன்றக் குறவன் காதல் மடமகள்' என்றான். சாயலில் அவள் மானுடப்பெண்ணொடு உவமிக்கப்படும் சிறுமையள் அல்லள் என்பானாய், மலையில் இயங்கும் தெய்வப்பெண்டிரொடு ஒப்பிட்டான். கண்டார் யாரையும் தன் பேரழகால் கவரும் பண்பினள் என்றும், இப்படியும் ஓர் அழகியா எனப் பலரும் வியக்கும் தன்மையள் என்றும் பொருள்பட 'ஐயள்' என்றான். பெண்மையின் சிறப்பினைத் தெற்றென எடுத்துக்காட்டும் அவள் முலைகள் கோங்கரும்புகளை ஒத்தன என்பானாய், 'அரும்பிய முலையள்' என்றான். அவள் உதடுகள் கொவ்வைக் கனியெனச் சிவந்தன என்பானாய், 'செய்ய வாயினள்' என்றான். தேமல் உடலுக்கு அழகு கூட்டுதலின், அவள் ஆகத்தைப் பாராட்டுவானாய், 'மார்பினள் சுணங்கே' என்றான். இத்தகையவளை நீ கண்டிருப்பின், இங்ஙனம் கழறமாட்டாய் என்பது குறிப்பெச்சம்.

Koviloor Digital Library

தலைமகளின் பண்புகளாகத் தலைவன் உரைத்தவை அனைத்தும் தொல்காப்பியரால் கூறப்பட்ட தலைமகட்குரிய ஒப்புமைகளை உள்ளடக்கியுள்ளன என்பது ஈழத்து உரையாசிரியர் கருத்தாகும்.

இனி, அரும்பிய முலையள், செய்ய வாயினள், சுணங்கு மார்பினள் என்னும் அடையாளங்கள் தலைவனுக்கும் தலைவிக்கும் கூட்டமுண்டெனக் குறிப்பால் உணர்த்தும் பெற்றியன என்பது பெருமழைப்புலவர் கருத்தாகும்.

அருஞ்சொற்பொருள் : வரையர மகளிர் – மலையில் உறையும் தெய்வ மகளிர்; புரையும் – ஒக்கும்; சாயல் – மென்மை; ஐ – அழகு; வியப்பு; அரும்பிய – அரும்பு போன்ற; செய்ய – சிவந்த; சுணங்கு – தேமல்.

மேற்கோள் : தலைவன் தன் காதலியின் மேனி அழகினைப் பாராட்டுதலை அகம். 136, 212, 335 ஆகியவற்றில் கண்டுகொள்க.

256

குன்றக் குறவன் காதல் மட மகள்
வண்டு படு கூந்தல் தண் தழைக் கொடிச்சி;
வளையள்; முளை வாள் எயிற்றள்;
இளையள் ஆயினும், ஆர் அணங்கினளே.

கூற்று : 'நீ கூறுகின்றவள் நின்னை வருத்தும் பருவத்தள் அல்லள்' என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியை இயற்கைப் புணர்ச்சியிற் கூடிய தலைமகன், பின் அவள் தோழியின் துணையுடன் அவளைக் கூட விரும்பினான். அவனுக்கு விடை கூறும் தோழி,

Koviloor Digital Library

தலைவியின் மிக்கிளமை கூறி, அவள் தலைவனை வருத்தும் பருவமுடையாள் அல்லள் என்றான். அதற்கு மறுமொழியாகத் தலைவன் கூறியது இது.

உரை : பெண்ணே! நின் தோழி குன்றக் குறவனின் அன்புக்குரிய இளமகளாவாள்; வண்டுகள் மொய்க்கும் மலரணிந்த கூந்தலுடையாள்; குளிர்ந்த தழையுடைய பூண்ட கொடிச்சியாவள்; வளையல் அணிந்த கையினள்; நாணல் முளை போலும் வெள்ளிய பற்களையுடையவள்; வயதில் இளையளே எனினும் எனக்கு உய்தற்கு அரிய துயரைத்தருபவளாம்.

உரை விளக்கம் : ஈண்டுத் தலைவன், தலைவியின் பண்புகளாகக் கூறியன யாவும், தோழி கூறியனவற்றை அவன் கொண்டெடுத்துக் கூறியனவாகக் கொள்வார் பெருமழைப் புலவர்.

வளையும் எயிறும் இளமை விளங்க நின்றன என்பார் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.

மேற்கோள் : குறிஞ்சி நிலத்து மகளைக் கொடிச்சி என்னல் :
தேனாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை
– அகம். 58

'குறவர் மகளிரேம் குன்று கெழு கொடிச்சியேம்'
– நற். 276.

பெண்ணின் பல்லுக்கு நாணல் முளையை உவமை கூறல் :
'இளையள் முளைவாள் எயிற்றள்'
– குறுந். 119.

தலைவி இளையள் ஆயினும் வருத்தமளித்தல் :
இளையள் முளைவாள் எயிற்றள்
வளையுடைக் கையள் எம் அணிங்கியோளே
– குறுந். 119.

Koviloor Digital Library

257

குன்றக் குறவன் கடவுள் பேணி
இரந்தனன் பெற்ற எல் வளைக் குறு மகள்
ஆய் அரி நெடுங் கண் கலிழ,
சேயதால் தெய்ய - நீ பிரியும் நாடே.

கூற்று : 'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி உடன்படாது கூறியது.

கூற்று விளக்கம் : *சில காலம் கழித்து வந்து மணந்து கொள்வதாக உறுதி கூறிப் பொருள்தேடச் செல்ல விரும்புவதாகத் தலைமகன் தோழியிடம் கூறி அதற்குத் தலைமகளின் ஒப்புதல் பெற்றுத் தருமாறு வேண்டினான். தோழி அதற்கு உடம்படாது சொல்லியது இது.*

உரை : *குன்றத்தின்கண் வாழும் குறவன் தன் குடித்தெய்வமாம் முருகனை வழிபட்டு, குறையிரந்து பெற்ற ஒள்ளிய வளைகளை அணிந்த இளமகள் இத்தலைவி. ஐய! நீ இவளுடைய அழகிய அரிபரந்த நெடிய கண்கள் கலங்கி நீர் உகுக்குமாறு பிரிந்து செல்ல விரும்பும் நாடு மிகச் சேய்மைக்கண் உள்ளது. (நின் பிரிவை இவள் எங்ஙனம் ஆற்றியிருப்பாள்?)*

உரை விளக்கம் : *தலைவி ஏனைய பெண்களைப் போலாது, இவள் தந்தை பன்னாள் மலையுறை கடவுட்குப் பாடு கிடந்து, அக்கடவுள் அருளால் பெற்ற அரிய செல்வமானவள் என்பது விளக்க, 'கடவுள் பேணி' என்றும் 'இரந்தனன் பெற்ற' என்றும் கூறினாள். அவள், தலைவன் பிரிவைத் தாங்கிக் கொள்ளும் அகவை முதிர்ச்சியற்றவள் என்பது தோன்ற 'எல்வளைக் குறுமகள்' என்றாள். அழுது அழுது அழகு இழக்குமே என்பது பட 'சேயரி நெடுங்கண் கலிழ' என்றாள். தலைவன் பிரிந்து செல்ல விரும்பும் நாடு மிகச் சேய்மையது ஆதலின் நடந்து செல்லுதலும் திரும்புதலும் அரிய செயல்கள் என்று எண்ணியும், வர நாட்கள்*

Koviloor Digital Library

பல பிடிக்குமே என்று எண்ணியும் அவள் கண்கலங்கினாள் என்று அறிவுறுத்துவாளாய், ஆதலின் 'சேயதால்' என்றாள்.

அருஞ்சொற்பொருள் : இரந்தனன் – தவமிருந்து வேண்டி; எல்வளை – ஒளிவிடும் வளையல்; ஆய் – அழகிய; கலிழ, கலுழ – கலங்க; சேயது – சேய்மைக் கண் உள்ளது.

இலக்கணக்குறிப்பு : ஆல் – அசை; தெய்ய – அசைநிலை; இரந்தனன் – இரந்து – முற்றெச்சம்; கலுழ என்பது கலிழ எனத் திரிந்தது. பிரியற்க என்பதனைக் குறிப்பெச்சமாகக் கொள்க.

மேற்கோள் : குன்றக் குறவர் இன்றியமையாத காலங்களில் தம் கடவுளை வழிபடும் மரபு :

மழை வேண்டி வழிபடல் :
'மழை வான் கொள்கென உயர்பலி தூஉய்
மாரி ஆன்று மழை மேக்கு உயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்'
– புறம். 143.

குறிப்பு : சங்க இலக்கியத்தில், பெண் மகவு அளிக்குமாறு இறைவனை வேண்டுவதாக அமைந்த செய்யுள் இஃது ஒன்றே. 'புதல்வன் தாய்' எனத் தாயைப் புகழ்வது பரவலாகக் காணத்தக்கதாகும்.

258

குன்றக் குறவன் காதல் மடமகள்
அணி மயில் அன்ன அசை நடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையும் ஆயின்,
கொடுத்தனெம் ஆயினோ நன்றே –
இன்னும் ஆனாது, நன்னுதல் துயரே.

Koviloor Digital Library

கூற்று : வரைவு வேண்டிவிட மறுத்துழித் தமர்க்கு உரைப்பாளாய், வரையாது வந்தொழுகும் தலைமகற்குத் தோழி, அவன் மலை காண்டலே பற்றாகத் தாங்கள் உயிர்வாழ்கின்றமை தோன்றச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன், தலைமகளின் உற்றார்க்குத் தான் தலைமகளை மணம் புரிய விரும்புவதாகச் செய்தி அனுப்பினான். ஆனால் அவள் தமர் அதற்கு உடம்படவில்லை. தலைவன் வழக்கம்போல் தலைமகளைக் களவில் கூடியின்புற்ற போது ஒருநாள் தோழி, தலைவனுக்கு உரைப்பாளாய்த் தமர் கேட்கும் வகையில் தாம் உயிர் வாழ்ந்திருப்பது தலைவன் மலையைக் காண்பதாலேயே என்று கூறியது.

உரை : குன்றத்தின்கண் வாழும் குறவனின் அன்பிற்கு உரிய இளமகளாகிய இக்கொடிச்சி அழகிய மயில் போன்ற அசைந்த நடையை உடையவள். இவளைப் பெரிய மலைக்குத் தலைவன் வரைய விரும்பினான் எனில், அவன் விருப்பத்திற்கு இணங்கி நாமும் அவளை அவனுக்கு விரும்பிக் கொடுத்தனம் ஆயின் அது மிக நன்றாகும். மாறாக மறுத்தோம் ஆயின், அழகிய நெற்றிய உடைய இவள் துயரம் மேலும் மேலும் பெருகும்.

உரை விளக்கம் : தலைவனும் தலைவியும் கணவன் மனைவியாக இணைதற்குரிய குடித்தகுதிப்பாடு உடையோர் எனவுணர்த்துவாளாய், தலைவியைக் கொடிச்சி என்றும் தலைவனைப் 'பெருவரை நாடன்' என்றும் சுட்டினாள் தோழி. தலைமகளைப் பெண் கேட்டு வந்தான் எளியனன்றி உயர் மதிப்புடையோன் என்பது தமர் உணரும் வண்ணம், 'பெருவரை நாடன்' எனச் சிறப்பித்தாள். 'வரையுமாயின்' என்றாள் அவன் வரைதற்குப் பெரிதும் விரும்புவது விளங்கித் தோன்றுமாறு. அவளை அவனுக்குக் கொடுத்தால் விளையும் நன்மை பெரிதாகுமெனின், கொடாதவழித் தீமையும் பெரிதாகும் என்று கூறுவாளாய், 'கொடுத்தனெம் ஆயின் நன்றே' என்றாள்.

Koviloor Digital Library

'இன்னும் ஆனாது நன்னுதல் துயர்' என்றாள், அவள் துயர் தொடர்ந்து பெருகும் என்பது தோன்ற.

'இனி இவனினும் சிறந்தானொரு நம்பியை நாம் காண்டலரிது என்பாள், கொடுத்தனம் ஆயின் நன்று என்றாள்'. கொடுக்க மறுத்தால் இழப்பு நமக்கேயன்றி அவனுக்கு அன்று என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : கொடிச்சி – குறவர் குடிப் பெண்ணுக்குரிய பெயர்; ஆனாது – நில்லாது; இடைவிடாமையை உணர்த்துவது.

இலக்கணக்குறிப்பு : நன்னுதல்– அன்மொழித் தொகை.

மேற்கோள் : தலைவன் மலையைப் பார்த்துத் தலைவி ஆற்றியிருத்தல் :

படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே
– குறுந். 249.

தலைவியைத் தலைவற்குக் கொடுத்தல் நன்று எனல் :

'சான்றோர் வருந்திய வருத்தமும் நுமது
வான்தோய் வன்ன குடிமையும் நோக்கித்
திருமணி வரன்றும் குன்றம் கொண்டு இவள்
வருமுலை ஆகம் வழங்கினோ நன்றே'
– தொல். பொருள் 114. நச்சி. மேற்கோள்.

Koviloor Digital Library

259

குன்றக் குறவன் காதல் மட மகள்
மன்ற வேங்கை மலர் சில கொண்டு,
மலை உறை கடவுள் குல முதல் வழுத்தி,
தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள்;
மலர்ந்த காந்தள் நாறிக்
கலிழ்ந்த கண்ணள் – எம் அணங்கியோளே.

கூற்று : வரையத் துணிந்த தலைமகன் வரைவு முடித்தற்குத் தலைமகள் வருந்துகின்ற வருத்தம் தோழி காட்டக் கண்டு, 'இனி அது கடுக முடியும்' என உவந்த உள்ளத்தனாய், தன்னுளே சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியை வரைவதென முடிவு செய்தான் தலைவன்; வரைவுக்குரிய காலம் நீண்டமை கருதித் தலைவி வருந்துவனைத் தோழி வாயிலாக உணர்ந்து, இனித் துளியும் காலதாமதமின்றி முடியும் என உணர்ந்து, மகிழ்ச்சியுற்றுத் தனக்குத் தானே கூறிக் கொண்டது.

உரை : எம்மைப் பெரிதும் வருத்தியவள் மலையை வாழிடமாகக் கொண்ட குறவனின் அன்புக்குரிய இளமகள். அவள் ஊர்மன்றத்திடத்தே நிற்கிற வேங்கை மரத்தின் சில மலர்களைப் பறித்து, அவற்றைத் தூவி, மலையை உறைவிடமாகக் கொண்டவரும், தம் குடித்தெய்வமும் ஆன முருகவேளுக்குத் தேனாகிய பலியைக் கொடுத்து, வழிபட்டமையால் நறுமணமும் ஈரமும் கொண்ட கையையும், மலர்ந்த காந்தள் மலரின் மணம் கமழும் உடம்பையும், நீர் சொரியும் கண்களையும் உடையவளாவாள்.

உரை விளக்கம் : தனக்கும் தன் காதலனுக்கும் ஏற்பட்ட காதல் இடையூறின்றி நிறைவேற வேண்டி முருகவேளுக்குப் பலி

Koviloor Digital Library

சிதறினாள் தலைவியாகையால், அதனை அறிந்த தலைவன் தன் உள்ளத்திலே உவகையுற்றான் என்க.

மலரைச் சிதறியதனால் மணமும், தேனைச் சிதறியதால் ஈரமும் அவள் கைக்கு அமைந்தன. குறவனின் அன்புக்குரிய மகள் என்ற பொருளில் 'காதல் மடமகள்' என்று நினைத்தான் தலைவன். இனி, காதலைத் தலைவிக்காக்கி, தலைவன் மீது காதல் கொண்ட இளமகள் எனவுரைப்பாரும் உளர். மலைவாழ்நரான குறவர்க்கு, அம்மலைக்குத் தெய்வமான முருகன் குலதெய்வம் என்பது யாவர்க்கும் உடம்பாடாதலின், இக்கருத்தைத் தழுவி உரை கூறப்பட்டது. எனினும் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், குலம் என்ற சொல்லுக்குரிய கோயில் என்னும் பொருளைக் கருதி, 'கடவுட்குலம்' என இயைத்துக் கடவுளுக்கு எடுத்த கோயிலில் எழுந்தருளியுள்ள எனப் பொருள் விரித்தார். மேலும், முதல் என்பதற்கு முதற்பொருள் என்று பொருள் செய்தார். குலம் என்ற சொல்லுக்குக் கோயில் என்ற பொருள் பிற்காலத்தில் அமைந்தது உண்மையெனினும், சங்க நூற் செய்யுட்களில் ஒன்றிலேனும் இச்சொல் இப்பொருளில் ஆளப்படவில்லை. மலையுறை கடவுளாம் (தம்) குலமுதல் என்று நேர்ப்பொருள் கொள்வதே சரியெனப்படுகின்றது. 'குலமுதல்' என இயைத்துப் பொருள் கொள்வதே பெரும்பாலோர்க்கு உடம்பாடு.

இனித் தேம்பலி என்பதற்கு இனிமையான பலியென்றும் உரை கூறுவர். இவ்வாறே 'இனிமையான தேவர் உணவு' என்பாரும் உளர். மலர்ந்த காந்தள் போல் நாறியது தலைவியின் உடம்பே. உ.வே.சாமிநாத ஐயர்க்கு இதுவே உடம்பாடாகும். 'தலைவி மேனி காந்தள் நாறுதல் : ஐங். 254 : 2 – 3; வேங்கையும் காந்தளும் நாறி .... தண்ணியளே' (குறு. 84 : 4 – 5) என அவர் மேற்கோள் காட்டுவதனால் இவ்வுண்மை புலப்படும். ஆனால், ஈழத்து உரையாசிரியர் தலைவியின் கைகட்கு ஈரம், நறுமை என்பவற்றோடு காந்தள் போன்ற தோற்றத்தையும் உரிமையாக்குவார். பெருமழைப்புலவரும், ஒளவை சு. துரைசாமிப் பிள்ளையும்

Koviloor Digital Library

காந்தள்போல் மணக்கும் பண்பினைத் தலைவியின் கண்கட்கு ஆக்கியுரைப்பர். கண் கலுழ்தற்குத் தலைவியின் மன உருக்கம் காரணமாம்.

அருஞ்சொற்பொருள் : மன்றம் – ஊர்ப்பொதுவிடம்; மலையுறை கடவுள் – முருகன்; வழுத்தி – வாழ்த்தி; தேம்பலி – தேனாகிய பலி, இனிமையான பலி; ஈர் – ஈரமான; அணங்கியோள் – அழகால் வருத்தியவள்.

இலக்கணக்குறிப்பு : குலமுதல் – குலத்திற்கு முதல், நான்காம் வேற்றுமைத் தொகை; தேம்பலி – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; காந்தள் – பூவிற்கு ஆகுபெயர்; கலிழ்ந்த – கலுழ்ந்த என்பதன் திரிபு.

மேற்கோள் : மன்றத்தின்கண் வேங்கை பூத்திருத்தல் :

'குன்ற வேலிச் சிறுகுடி யாங்கண்
மன்ற வேங்கை மணநாட் பூத்த
மணியேர் அரும்பின் பொன்வீ'

– அகம். 232 : 6–8.

தலைவி மேனி காந்தள் நாறுதல் :

'காந்தள் நாறும் .... குறுமகள்'

– ஐங். 254.

'வேங்கையும் காந்தளும் நாறி ..... தண்ணியளே'

– குறுந். 84 : 4–5.

தெய்வத்திற்குப் பலி செய்தல் :

'ஒழுகு பலி மறந்த மெழுகாப் புன்திணை'

– அகம். 167.

'பலிகண் மாறிய பாழ்படு பொதியில்'

– புறம். 52.

Koviloor Digital Library

'நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை'
– அகம். 287.

மலர்ப்பலி இடல் :
'மலரணி மெழுக்கம் ஏறி'
– பட்டினப். 248.

குயவன் கையில் பலிகள் நிறைந்திருத்தல் :
பலிகள் ஆர்கைப் பார்முது குயவன்
– நற். 293 : 2.

260

குன்றக் குறவன் காதல் மட மகள்,
மென் தோட் கொடிச்சியைப் பெறற்கு அரிதுதில்ல–
பைம் புறப் படு கிளி ஓப்பலர்;
புன் புல மயக்கத்து விளைந்தன தினையே!

கூற்று : பகற்குறிக்கண் வந்த தலைமகனைத் தோழி, 'இனிப் புனங்காவற்கு வாரோம்' எனக் கூறி வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைமகளைச் சந்திக்கப் பகற்பொழுதில் வந்தான். அவனைக் கண்ட தோழி, தாம் இனித் தினைப் புனம் காப்பதற்கு வர இயலாமையைக் கூறி, தலைவியை விரைவில் திருமணத்தில் கொள்ளுமாறு வற்புறுத்தினாள்.

உரை : தலைவ! குன்றத்தின்கண் வாழும் குறவனின் அன்பிற்குரிய மடமகளாம் இவள், மென்மையான தோள்களை உடைய கொடிச்சியாவாள். இவளை நீ பெறுவது மிக அரிதாகும். ஏனெனில், இனி இவள் பசிய புறத்தினைக் கொண்ட, தினைப் பயிரின் மேல் படிகின்ற கிளிகளை ஓப்பும் வாய்ப்பு இலள்.

Koviloor Digital Library

ஏனெனில், புன்செய்க் கண் உழுது புழுதியாக்கிப் பண்படுத்திய புனத்திலே விதைத்த தினை நன்கு முற்றியதாகலின்.

உரை விளக்கம் : விதைத்த தினை நன்கு விளைந்து முற்றிவிட்டமையால், அதனை அறுத்து இல்லின்கண் சேர்ப்பராதலின், அவள் தினைப்புனத்தில் தலைவனாற் காண்பதற்கு அரியளானமையை இங்ஙனம் கூறி வரைவினை முடுக்கினாள் தோழி என்க. மெல்லிய தோள்களை உடைய கொடிச்சியை விரைவில் மணந்து கொள்ளத் தவறின், அத்தோள்கள் மெலிவுற்று அழகு இழக்கும் எனச் சுட்டுவாளாய், 'மென்றோட் கொடிச்சி' என்றாள். 'பெறற்கு அரிது' என்றாள் இனிக் காவல் மிக்க மனைக்கண் உறைவாள் என்பது பட. மரங்களையும் புதர்களையும் செடி கொடிகளையும் வெட்டியழித்தும், தீயிட்டுக் கொளுத்தியும் கடிதின் உழுது பண்படுத்திய புனம் என்பாள், 'புன்புல மயக்கத்து' என்றாள். கிளி படுதலாவது, தினைப்புனத்தே படிந்து கதிர்களை உண்டல். அவளை வரைந்து எய்துவது தவிரத் தலைவனுக்கு வேறு வழியில்லை என்பது அவள் கருத்தாகும். கிளிகளை ஓப்புதல் தலைமகளின் பணியாயினும், 'ஓப்பலர்' என்றாள், தினை முற்றினமையின், அவளையும் தன்னையும் பிறரையும் கொண்டு தினையைக் காவல் செய்யும் பணியை இனித் தொடரார் மூத்தோர் என்பது பட.

'யாம் கிளி கடிந்து பேணிய தினை முற்றிப் பயன் தந்தாங்கு நீ இவளைத் தலைப்பெய்து கொண்ட நின் நட்பு வரைவால் சிறப்பெய்துதல் வேண்டும்' என்பது தோழியின் கருத்து என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. இவர் 'ஓப்பலள்' என்ற பாடம் கொண்டார். இது உ.வே.சா. பதிப்பைத் தழுவிய பாடமாகும்.

அருஞ்சொற்பொருள் : கொடிச்சி – குறப்பெண்; மலையில் வாழ்பவள்; படுகிளி – படிகின்ற கிளிகள்; ஓப்புதல் – ஓச்சுதல், வெருட்டுதல்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : தில்ல – அசைச்சொல்; அத்து – சாரியை.

மேற்கோள் : தலைவி தினையிற் கிளி கடிதல் :

'வளைவாய்ச் சிறுகிளி விளை தினைக் கடீஇயர்
செல் கென் றோளே அன்னை'

– குறுந். 141.

'சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை'

– குறுந். 142.

குன்றக் குறவன் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

27. கேழற் பத்து

அஃதாவது, குறிஞ்சித்திணையின் கருப்பொருள்களுள் ஒன்றான கேழல் (பன்றி) செய்யுள் தோறும் இடம்பெறும் பத்துச் செய்யுட்களின் தொகுதி என்பதாம்.

261

மென் தினை மேய்ந்த தறுகட் பன்றி
வன் கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன் –
எந்தை அறிதல் அஞ்சிக் கொல்?
அதுவே மன்ற – வாராமையே.

கூற்று : அல்ல குறிப்பட்டுத் தலைமகன் நீங்கினமை அறியாதாள் போன்று தோழி, பிற்றைஞான்று அவன் சிறைப்புறத்தானாய் நிற்ப, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : இரவுக்குறி வந்த தலைவன் காலம் தவறி வந்தமையால் தலைவியைக் காணவியலாது திரும்பினான். மறுநாள் இரவு தலைவியின் இல்லத்தருகே வந்து நின்றான். அதனைக் கண்ட தோழி, அவன் முதல் நாள் அல்ல குறிப்பட்டுத் திரும்பியதனை நன்கறிந்திருந்தும் அவன் வாராதான் போன்று, அங்ஙனம் வாராமைக்குக் காரணம் கற்பித்துக் கூறியது.

உரை : தோழியே! மென்மையான தினையை மேய்ந்த அஞ்சாமை மிகுதியும் கொண்ட பன்றி, வலிய கற்கள் பொருந்திய பக்க மலையில் துயிலுவதற்கு இடனான மலைநாட்டுக்குரிய நம் காதலன் நேற்றிரவு குறியிடத்திற்கு வாராமைக்குக் காரணம்,

Koviloor Digital Library

நம் தந்தை அறியின் அதனால் வரும் ஏதம் குறித்த அச்சமாக இருக்குமோ? ஆம்! தெளிவாக அதுவே காரணமாதல் வேண்டும்.

உரை விளக்கம் : தறுகணாவது அஞ்சாமையாகும். பன்றி அஞ்சாமையுடையதாய்ப் புலி, யானை முதலியவற்றோடு போரிடும் இயல்புடையதாதலின் 'தறுகட்பன்றி' என்று சிறப்பித்துச் சொன்னாள். கானவர்க்கு அஞ்சாத பன்றி என்னலும் ஆம். வன்மைமிக்க பன்றி மென்மையான தினையை மேய்ந்தது என்பதிலுள்ள முரண்தொடை நயம் காண்க.

சிறைப்புறம் நிற்கும் தலைவன் தன் பொறுப்பை உணர்ந்து விரைவில் தலைவியை மணந்து கொள்ள ஆவன செய்யவேண்டும் என்பது தோழியின் நோக்கமாதலின், அவன்பால் அந்த முயற்சியைத் தோற்றுவிக்க, அவன் தலைவியின் தந்தைக்கு அஞ்சியே நேற்று வரவில்லை என்றாள். தலைவன் தன்னாட்டுப் பன்றி போலவே அஞ்சாமை மிக்கவன் என்பதனை அவள் அறிவாள் எனினும், அவன் அச்சமின்றித் தலைவியின் தந்தையிடம் மகட்பேசி வருதல் வேண்டும் என்பதற்காக, அவன் அஞ்சும் இயல்புடையவன் என்பது பட 'எந்தை அறிதல் அஞ்சிக் கொல் .... வாராமையே' என்றாள் என்க.

முதலில் ஐயவாய்பாட்டாற் சொன்னவள் பின்னர் 'அதுவே மன்ற' என உறுதிபடக் குறிப்பிட்டாள் வேறு காரணம் யாவதும் இல்லை என்ற கருத்தில்.

தலைவன் அஞ்சினனாகக் கூறுவது வழுவேயானாலும் தலைவியின் ஆற்றாமையை உணர்த்தி அவன் இடையறாது வருதல்வேண்டுமென்று வேண்டிக்கோடற் பொருட்டே கூறலின் அமைவதாயிற்று என்று கூறி, அதற்கு அமைவாக, 'அறக்கழிவுடையன பொருட் பயம் படவரின் வழக்கென வழங்கலும் பழித்தன்றென்ப' (தொல். பொருளியல்-24) என்ற சூத்திரத்தை மேற்கோள் காட்டுவார் பெருமழைப்புலவர்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : தறுகண் - அஞ்சாமை.

இலக்கணக்குறிப்பு : மன்ற - தெளிவுப் பொருளில் வந்த இடைச்சொல்; வாராமை - தொழிற்பெயர்.

மேற்கோள் : பன்றி தினைமேய்ந்து உறங்குவது :
- கானவர்
வரையோங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்
நன்மலை நாடன்
- ஐங். 268.

பன்றி அஞ்சாமை மிக்கது என்பது :
சிறுதினை மேய்ந்த தறுகட்பன்றி
- ஐங். 262.

உள்ளுறை : தினைமேய்ந்த பன்றி கல்லடுக்கத்துத் துஞ்சும் நாடன் என்றது, தான் விரும்பின காம இன்பத்தை நுகர்ந்து இனிது உறங்குவதல்லது தன் தலைமைப் பண்புக்கு ஏற்ப விரைவில் வரைதற்குரியன செய்யலன் தலைவன் என்ற உட்பொருள் கொண்டது.

262

சிறு தினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்;
மருந்தும் அறியும் கொல் - தோழி! - அவன்
விருப்பே?

கூற்று : 'வரைந்து கொள்ள நினைக்கிலன்' என்று வேறுபட்ட தலைமகள், 'அவன் நின்மேல் விருப்புடையன்; நீ நோகின்றது என்னை?' என்ற தோழிக்குச் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைத் திருமணத்திற் கொள்ளுதலில் கருத்தின்றிப் பன்னாள் வாராதிருந்தமையால் தலைவி உடல் மெலிந்தாள். அவளைத் தேற்றவிரும்பியதோழி, தலைவன் அவள்மீது பேரன்புடையனாக இருப்பவும் மெலிவது பொருளற்றது என்றாள். அவட்குத் தலைவி சொல்லியது இது.

உரை : தோழியே! சிறிய தினையை மேய்ந்த அஞ்சாமை மிகுந்த ஆண்பன்றி குண்டுக்கற்கள் நிறைந்த பக்கமலையில் தன் துணையுடன் தங்குதற்கு இடமான மலைநாடன் நீ கூறுமாறு என்மேல் கொண்டுள்ள விருப்பம் எனக்குத் துயர் தருவதன்றி, அத்துயர் தீருமாறு வருதலாகிய மருந்தையும் அறியுமோ?

உரை விளக்கம் : தலைவன் தலைவிமேல் ஆராக் காதலுடையவனாதலின், தலைவி வருந்துதல் அறிவுடைமையாகாது என்று தோழி கூறினாளாதலின், 'தோழியே! நீ கூறுவது மெய்யானால், அவன் என்மேல் கொண்டுள்ளதாக நீ கருதும் அவன் பெருவிருப்பம் அவன் வரைவொடு வருதலாகிய மருந்தையும் அறியுமோ?' என்றாள். மருந்தையும் என்றதில் உள்ள உம்மை, 'அவன் விருப்பம் எனக்கு நோய் செய்தலையறியுமேயன்றி, அதற்கு மருந்தாகுமாறு வரைவொடு வருதலை அறியாது' என்று பொருள்பட்டது. காதல் உண்மையெனில், அது வரைவுக்கு வேண்டுவன செய்தலில் வெளிப்படல் வேண்டும் என்றாள் தலைவி என்க.

'விருப்பு வரூஉம் மருந்தும் அறியும் கொல்?' எனக் கூட்டிப் பொருள் கொள்க. வரூஉம் மருந்தாவது, வருதலாகிய மருந்தாம். இதனால், தலைவன் வாராமையே அவட்கு நோய் என்பது விளக்கப்பட்டது.

அருஞ்சொற்பொருள் : தறுகண் - அஞ்சாமை; துறுகல் - குண்டுக்கல்; அடுக்கம் - பக்கமலை; துணை - பெண்பன்றி; வதியும் - தங்கும்; இலங்குதல் - ஒளிவிடுதல்; மருந்து - தீர்வு.

Koviloor Digital Library

மேற்கோள் : பன்றி கற்களிடையே வதிதல் :

- சிறுகட் பன்றி

....

....

....

....

கல்லளைப் பள்ளி வதியும் நாடன்

– நற். 98.

பன்றி கடுங்கண் உடையது :

– இரும்பில்

பிறையுறழ் மருப்பின் கடுங்கண் பன்றி

– அகம். 322.

குறிப்புப் பொருள் : 'சிறு தினை மேய்ந்த .... துணையொடு வதியும் நாடன்' என்றது, களவொழுக்கத்தான்வரும் சின்றின்பமின்றியே வரைந்துகொண்டு நின்னோடு ஒழுகுவதனைத் தோழி கூறிய அதனைத் தலைமகள் கொண்டு கூறியனதாகக் கொள்வார் பழையவுரையாசிரியர்.

263

நன் பொன் அன்ன புனிறு தீர் ஏனல்
கட்டளை அன்ன கேழல் மாந்தும்
குன்று கெழு நாடன் தானும்
வந்தனன்; வந்தன்று – தோழி – என் நலனே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்த தலைமகன் மீண்டமை அறிந்த தலைமகள், 'தொலைந்த நலம் நீ இன்று எய்திய காரணம் என்னை?' என்ற தோழிக்குச் சொல்வியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : திருமணத்திற்கு வேண்டும் பொருள் ஈட்டக் கருதிப் பிரிந்த தலைவன் வரத் தாமதித்ததால் தலைவி மேனி வாடிப் பொலிவிழந்தாள். அவன் மீண்டபோது அவள் அழகும் மீண்டது. இங்ஙனம் மீண்டதற்குரிய காரணம் அறியாள் போல வினவிய தோழிக்குத் தலைவி கூறிய விளக்கம் இது.

உரை : முதல் தரமான பொன்னின் நிறம் கொண்டதும் நன்கு முற்றியதுமான தினைக்கதிரை, பொன்னுரை காண உதவும் கட்டளைக் கல் போலும் கருநிறம் கொண்ட பன்றி வயிறு நிரம்ப உண்டு களித்தற்கு இடனான குன்றுகளால் சூழப்பட்ட நாடன் வந்தானாதலின் அவனொடு சென்ற என் நலனும் வந்தது.

உரை விளக்கம் : நன் பொன்னாவது கலப்பற்ற தூய பொன்னாகும். இதனை ஓடவைத்த பொன் என்றும் கூறுப. புனிறு என்பது ஈன்ற அணிமையைக் குறிக்கும் சொல். இங்குப் 'புனிறுதீர் ஏனல்' என்றது கதிர் ஈனப்பட்டு நீண்ட நாள் கழிந்த, அஃதாவது நன்கு முதிர்ந்த தினையைக் குறித்தது.

பண்டைத் தமிழகத்தில் பொன் அகழ்ந்தெடுக்கும் தொழில் நன்கு அறிமுகமாகியிருந்தது. பொற்கொல்லர் புலவராயும் இருந்துளர். தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார் அத்தகையாருள் ஒருவர். பொன்னின் தரங்காண்பதற்குப் பண்டையோர் பயன்படுத்திய ஒருவகைக் கல் கட்டளைக்கல் எனப்பட்டது. 'அவரவர் கருமமே கட்டளைக் கல்' (திருக். 114) என்றார் நாயனாரும்.

கட்டளையன்ன பன்றி பொன்னன்ன தினையை உண்டது என்பதில் உள்ள முரண் தொடையைக் காண்க. மாந்துதலாவது மிகுதியாக உண்டலாம்.

குன்றுகெழு நாடன் என்று வாளா கூறாது, பன்றி தினையை மாந்தும் நாடன் என்றது, தன் காதலன் செல்வ வளம் பற்றிய பெருமித உணர்வால் என்க. 'நாடன் தானும் வந்தான் வந்தன்று

Koviloor Digital Library

என் நலனே' என்றாள், தலைவன் சென்றபோது அவன் பின்னே சென்றது அவன் வந்தபோது தானும் வந்தது என்பது பட. இதனால் தன்பால் அழகு தங்குதற்கும் தன்னின் நீங்குதற்கும் தான் காரணமாகாது தலைவனே காரணமாவான் என்று விளக்கினாள் என்க.

நன்பொன்னாவது நால்வகைப் பொன்னினும் உயர்ந்த சாம்புனதப் பொன்னென்றும், அது பொன்மலையிலுள்ள பொன்னாவற் கனிச்சாறு பாயும் ஆற்றிலுண்டான பொன்னென்றும் கூறுவார் ஈழத்து உரைகாரர்.

இனி, "நாடன் தானும் என்றது படுத்தலோசையால், தலைமகன் பிரிந்து நீட்டித்தமையும் தலைமகளது ஆற்றாமை மிகுதியும் உணர்த்திற்று" என்பார் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை.

அருஞ்சொற்பொருள் : புனிறு – ஈன்ற அணிமைக் காலம்; கட்டளை – கட்டளைக்கல்; கேழல் – பன்றி; மாந்தும் – மிகுதியாக உண்ணும்.

மேற்கோள் : தினைக்குப் பொன் உவமையாதல் :

புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை
– குறுந். 133.

முற்றிய தினையைப் புனிறுதீர் எனச் சிறப்பித்தல்:

புனிறுதீர் பெருங்குரல் நற்கோள் சிறுதினை
– குறிஞ். 37–8.

பன்றிக்குக் கட்டளைக் கல் உவமையாதல் :

பரூஉ மயிர்ப் பன்றி பொன்னுரை கட்டளை
கடுப்பக் காண்வரக்
கிளையமல் சிறுதினை விளை குரல் மேய்ந்து
– அகம். 178.

Koviloor Digital Library

தலைவன் வரக் கவினும் வருதல் :
நீ இவண் வருஉம் காலை மேவரும் மாதோ
இவள் நலனே தெய்யோ
– ஐங். 238.

அறனிலாளன் வந்தனனோ மற்றிரவிற்
பொன்போல் விறற்கவின் கொள்ளும் நின்
நுதலே
– ஐங். 228.

குறிப்புப் பொருள் : பொன்னன்ன தினையைக் கட்டளையன்ன கேழல் மாந்தும் என்றது தன்னாட்டில் வாழும் விலங்குகளும் தமக்கு வேண்டுவன குறைவின்றிப் பெற்று இன்பம் நுகரும் நாடன் என்று பொருள் தந்து நின்றது.

இனி, கல் பொன்னின் தரத்தினைக் காட்டுவது போல அவனும் நம்மை வரைந்து நம் நலம் நுகர்ந்து மனைக்கண் இல்வாழ்க்கைச் சிறப்பை எய்துவிப்பான் என்று விளக்குவார் ஈழத்து உரையாசிரியர்.

264

இளம் பிறை அன்ன கோட்ட கேழல்
களங் கனி அன்ன பெண்பால் புணரும்
அயம் திகழ் சிலம்ப! கண்டிகும்
பயந்தன மாதோ, நீ நயந்தோள் கண்ணே!

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகனைப் பகற்குறிக் கண்ணே எதிர்ப்பட்டுத் தோழி வரைவு கடாயது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் திருமணம் செய்து கொள்ளாது காலம் தாழ்த்தான். ஒருநாள் அவன் தலைவியைக் காணப்பகல் வேளையில் வந்தான். அவனைச் சந்தித்த தோழி, தலைவியை விரைவில் மணம் புரிந்து கொள்ளுமாறு வற்புறுத்தினாள்.

உரை : இளம்பிறை போன்ற மருப்பினைக் கொண்ட பன்றி களங்கனி போலும் கருநிறம் கொண்ட தன் பிணவினைப் புணர்ந்து இன்புறும், நீர் ஒளிவிட்டு ஒழுகும் மலைநாடனே! உன் அன்பிற்குரிய என் தோழியின் கண்கள் பசப்புற்றமையைக் காண்பாயாக.

உரை விளக்கம் : பன்றியின் கோடு வடிவாலும் நிறத்தாலும் இளம் பிறையை ஒத்திருத்தல் பற்றி 'இளம்பிறையன்ன கோட்ட' என்றாள். மிகு கருமைக்குக் களங்கனியை, உவமை கூறல் மரபு. 'காக்கையிற் கரிது களம்பழம்' என்ப. பெண்பன்றியின் மிகு கருநிறம் தோன்ற, 'கட்டளையன்ன பெண்பால்' என்றாள். சிலம்பினின்றும் வீழும் அருவி ஒளிரும் தன்மையதாதலின் 'அயம் திகழ் சிலம்பு' என்றாள்.

தலைவன் அவ்வப்போது வந்து புணர்ந்து நீங்கினான் எனினும், வரையாது காலம் தாழ்த்தமையான் அவள் மேனி வாடி மெலிந்தாளாதலின் 'பயந்தன மாதோநீ நயந்தோள் கண்ணே' என்றாள். 'நீ நயந்தோள்' என்றது, நின்னால் காதலிக்கப்படும் ஒருத்தியின் கண்கள் பசப்புறுமாறு நடப்பது நின் தகுதிக்கு ஆகாது என்னும் குறிப்பினதாகும்.

'பெண்பாற்புணரும் அயந்திகழ் சிலம்பு' என்பதற்கு, பன்றி களங்கனிபோல் கரிய பெண்பன்றியோடு கூடிச் சென்று அருந்தும் நீர் மிக்க சிலம்பு என்று உரை கூறினார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. களாப்பழம் போன்ற கருநிறமமைந்த தனது பிணவுப் பன்றியினது செவ்வி தேர்ந்து கூடிக்களித்தற்கு இடனான கோடையினும் நன்னீர் அருவியால் விளங்கா நின்ற பக்கமலை என்பது பெருமழைப்புலவரின் விளக்கமாகும்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : கோடு – மருப்பு, கொம்பு; கேழல் – பன்றி; அயம் – நீர்; சிலம்பு – பக்க மலை; பயந்தன – பசப்புற்றன; களங்கனி – களாப்பழம்.

மேற்கோள் : பன்றியின் கோட்டுக்குப் பிறைமதி உவமையாதல்:

'பிறையுறழ் மருப்பின் கடுங்கண் பன்றி'

– அகம். 322.

சிலம்பினை அயம் திகழ் சிலம்பு எனல் :

'அருவி ஆர்க்கும் அயம் திகழ் சிலம்பு'

– நற். 365.

உள்ளுறை : பெண்பாற் புணரும் என்பதற்குத் தாம் கொண்ட பொருளை ஒட்டிக் கேழற்பன்றி வேண்டுவதாகிய நீரைத்தன் பெண்பன்றியோடு கூடிச்சென்று அருந்துவதுபோல, நீயும் நினக்கு வேண்டுவதாகிய இன்பத்தை நின் காதலியை வதுவையிற் கூடி நுகர்தல் வேண்டும் எனத் தோழி கூறியதாக உள்ளுறை கூறுவார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

'அறிவில்லாதன ஒழுகும் ஒழுக்கமும் நின்மாட்டுக்கண்டிலேம்' எனத் தோழி குறிப்பிற் கூறுவதாகப் பழையவுரை கூறும். எனவே புணரும் என்பதற்குக் காதலால் கூடி இன்புறும் என்பதே பழைய உரையாசிரியர் கொண்ட பொருள் என்பது விளங்கும்.

265

புலி கொல் பெண்பால் பூ வரிக் குருளை
வளை வெண் மருப்பின் கேழல் புரக்கும்
குன்று கெழு நாடன் மறந்தனன் –
பொன்போல் புதல்வனோடு என் நீத்தோனே.

Koviloor Digital Library

கூற்று : பரத்தையிடத்தானாக ஒழுகுகின்ற தலைமகன் விடுத்த வாயில் மாக்கட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைத் தனி விடுத்துப் பரத்தையில்லில் இருந்தான். தன் மனைக்குத் திரும்பும் விருப்புடன் தன் தூதுவர்களைத் தலைவிபால் அனுப்பினான். அங்ஙனம் சென்ற தூதுவர்கட்குத் தலைவி கூறியது இது.

உரை : புலியால் கொல்லப்பட்ட பெண்பன்றியின் அழகிய வரிகளைத் தம் மேனியிற்கொண்ட குட்டிகளை அவற்றின் தந்தையாகிய, வளைந்த வெண்மையான பற்களைக் கொண்ட ஆண்பன்றி பேணிக்காக்கும் குன்றுகள் பொருந்திய நாடன் என்னை அறவே மறந்தனன்; பொன் போலும் பெறுதற்கு அரிய புதல்வனோடு என்னை நீத்துச் சென்றனன்.

உரை விளக்கம் : 'பூவரிக்குருளை' என்றாள் குருளையின் உடம்பில் காணும் அழகிய வரிகளைக் கருதி. பூவரி என்பதற்குப் 'பூப்போன்ற வரி' எனப் பொருள் கூறலும் பொருந்தும்.

'நாடன் மறந்தனன்' என்றாள், தலைவன் தன்னைப் பிரிந்து சென்ற நாட்களின் நெடுமையைக் கருதி. தன் மகனைப் 'பொன்போற் புதல்வன்' என்றாள், ஆண்மகவின் பெறுதற்கு அருமையை நோக்கி. பொன்போலப் பேண வேண்டிய மகனையும் நீத்த கொடுமையை இங்ஙனம் சுட்டினாளாம். தன் முன்னோர்க்கு அருங்கடனிறுக்கும் தகுதிப்பாடு மிக்க அரும் பெறல் செல்வமாம் மகனையும், அத்தகு மகனைத் தனக்கு ஈன்று கொடுத்த தன் மனைவியையும் அறவே மறந்து காமஇன்பம் நாடிப் பரத்தையர் மனையில் தங்க ஒருப்பட்ட ஒருவனுக்காகத் தூதுவந்த நும் அறிவுதான் என்னே! என்று தலைவி தன் வெறுப்பை வெளியிட்டாள் என்க.

அருஞ்சொற்பொருள் : பூவரி – அழகிய வரிகள்; பூப்போன்ற வரிகளுமாம்; புரக்கும் – பேணிக்காக்கும்.

Koviloor Digital Library

மேற்கோள் : புதல்வனைப் பொன்போற் புதல்வன் எனல் :
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வன்
– புறம். 9.

பன்றி வளைந்த மருப்புடையது :
புகழா வாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம்
– பெரும். 109–110.

உள்ளுறை : புலியால் கொல்லப்பட்ட தன் பிணவின் குட்டியைத் தந்தையாகிய கேழல் புரக்கும் நாடன் என்றது பரத்தையர் காரணமாக யான் இறந்தால் தன் புதல்வனைத் தானே வளர்க்கத் துணிந்து என்னை நீத்தான் என்பதாம். (பழையவுரை)

266

சிறு கட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தலொடு
குறுக் கை இரும் புலி பொரூஉம் நாட!
நனி நாண் உடையை மன்ற –
பனிப் பயந்தன, நீ நயந்தோள் கண்ணே.

கூற்று : நொதுமலர் வரைவு பிறந்துழி, தலைமகட்கு உளதாகிய வேறுபாடு தோழி கூறி, தலைமகனை வரைவு கடாயது.

கூற்று விளக்கம் : தலைமகள் ஒரு காளையைக் காதலித்துக் கற்புக் கடம் பூண்டமை அறியாத சிலர் அவளை மகட்பேசி வந்தனர். அதனை அறிந்த தலைவி மனம் வருந்திக் கண்ணீர் உகுத்தாள். இதனைத் தோழி தலைமகன் மனங்கொள்ளுமாறு கூறி விரைவில் தலைவியை மணந்துகொள்ளுமாறு வற்புறுத்தினாள்.

Koviloor Digital Library

உரை : சிறிய கண்களையும் பெரும்சினத்தையும் உடைய ஆண்பன்றி, குறுகிய முன்னங்கால்களை உடைய புலியோடு போரிடற்கு இடனான மலைநாட்டுத் தலைவனே! நீ பெரிதும் நாண உணர்ச்சி உடையை! (எவ்வாறெனின்,) நின்னாற் காதலிக்கப்பட்டவளின் கண்கள் நீரொழுக நின்றனவாதலான்.

உரை விளக்கம் : பன்றியின் கண்கள் சிறியனவெனினும் அவை கடுஞ்சினத்தை வெளிப்படுத்தவல்லன வாதலின் 'சிறுகட்பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்' என முரண்டொடை தோன்றச் செய்யுள் செய்தார் புலவர். இவ்வாறே புலியையும், 'குறுக்கை இரும்புலி' என்றது, பேருருவினதெனினும் அதன் முன்கால்கள் சிறியனவாதல் பற்றியாம். புலி தன் முன்னங்கால்களைக் கைபோற் பயன்படுத்துவது பற்றிக் கையென வழங்குவது மரபாகும். குறுங்கை என்பது குறுக்கை எனவானது செய்யுள் விகாரம்.

'நனி நாண் உடையை மன்ற' என்றது குறிப்புமொழியாம். 'நீ சிறிதும் நாணவுணர்ச்சியற்றவன்' என்பது அவள் கருத்தாகும். 'தன்னைச் சார்ந்தாரின் புன்கண்ணீர் கண்டு அதனைத் துடைக்க முந்துவதே நாணுடைய நன்மாந்தர் செயலாகவும், நீ அதற்கு மாறாக, நின்னால் காதலிக்கப்பட்டவள் கண்கள் நீர் சொரியுமாறு நடந்து கொண்டனை. நினக்கே உரிமையுடையவளை, அயலவர் மகட்பேசி வருதற்கு இடமளித்தனை யாதலின் நீ நாணமில்லாதவன்' என இடித்துரைத்து வரைவு கடாவினாள் என்க.

'நீ நயந்தோள் கண் பனிப்பயந்தன' என்றது அப்படி அக்கண்கள் நீர் சொரிவது நின் பெருமைக்கு அழகோ என்னும் குறிப்பில் என்க.

இனி, உ.வே.சாமிநாதையர் பழையவுரையோடு வெளியிட்ட நூலில் 'நனி நாண் உடைமையம்' என்னும் பாடம் மேற்கொள்ளப்பட்டது. 'நனிநாண் உடையை' என்பதும் வேறு பாடமாகக் குறிக்கப்பட்டுள்ளது. பெருமழைப்புலவரும் இப்பாடமே கொண்டனர். ஆனால் மர்ரே எஸ். ராஜம் அவர்களின் பதிப்பில்,

Koviloor Digital Library

'நனி நாணுடையை மன்ற' என்ற பாடமே உள்ளது. அதனையொட்டியே இவ்வுரையும் அமைகிறது.

பெருமழைப்புலவர் தாம் கொண்ட பாடத்திற்கு ஒப்ப, 'பேதையரேமாகிய யாங்களோ மிகவும் பெரிய நாணத்தைப் பிறப்புரிமையாகப் பெற்றுள்ளேமல்லமோ; ஆதலால் சில நிகழ்ச்சிகளை யாங்கள் கூறுதற்கும் இயலாதவராகின்றேம் காண்' என்று உரை வகுத்தார்.

ஔவை சு. துரைசாமிப் பிள்ளை 'நனி நாணுடைய மன்ற' என்னும் பாடங் கொண்டார். நனி நாணுடைய பண்பினைத் தலைவியின் கண்களுக்கு ஆக்கி, 'நீ விரும்பிய இவளுடைய கண்கள் தெளிவாக மிக்க நாணுடையவை ஆகலின் பசந்து நீர் சொரிவனவாயின என்றார் அவர். நொதுமலர் மகட்பேசி வந்தமையால் தலைவி நாணமுற்றுக் கண்ணீர் வடித்தாள் என்பது அவர் கருத்து.

ஐயரவர்கள் பதிப்பில் 'நனிநாணுடையை' என்ற பாடவேறுபாடு மட்டுமே காணப்படுகின்றது. அதுவே பொருத்தமானதாக மர்ரே ராஜம் பதிப்பில் பங்கேற்ற அறிஞர் பெருமக்களால் ஏற்கப்பட்டது. 'நனி நாணுடைய' என்னும் பாடம் வேறு யாராலும் காட்டப்பெறவில்லை.

அருஞ்சொற்பொருள் : ஒருத்தல் - ஒருசார் விலங்குகளின் ஆண்பாற்பெயர்; குறுக்கை - குறுங்கை- சிறியகை; இரும்புலி - பெரிய புலி, கரிய புலி; பொரூஉம் - போரிடும்; பனி - கண்ணீர்.

இலக்கணக்குறிப்பு : குறுக்கை - குறுங்கை என்பதன் வலித்தல் விகாரம்; நனி - உரிச்சொல்; மன்ற - இடைச்சொல்.

உள்ளுறை : பன்றியொருத்தலொடு புலிபொரும் நாடன் என்றது தலைவன் தனக்கு நிகர் அல்லாதார் வந்து மகட்பேசிய பொழுதும் அதனை நீக்காது அவர்கட்கு இடங்கொடுத்தான் என்பதனை உள்ளுறுத்தது.

Koviloor Digital Library

267

சிறு கட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
துறு கல் அடுக்கத்து வில்லோர் மாற்றி,
ஐவனம் கவரும் குன்ற நாடன்
வண்டு படு கூந்தலைப் பேணி,
பண்பு இல சொல்லும், தேறுதல் செத்தே.

கூற்று : தலைமகளைத் தலைமகன் 'வரைவல்' எனத் தெளித்தான் என்று அவள் கூறக்கேட்ட தோழி, அவன் சிறைப்புறத்தானாச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவின்பத்தில் ஈடுபாடு மிகக் கொண்ட தலைமகன் தலைமகளை விரைவில் மணந்து கொள்வதாகப் பொய்ம்மொழிகளால் தெளிவித்தான். ஆனால் தொடர்ந்து களவின்பம் ஒன்றையே நாடினான். ஒருநாள். அவன் சிறைப் புறத்தே காத்து நிற்பது அறிந்த தோழி, அவன் கேட்டுத் திருந்தும் வண்ணம் தலைமகளிடம் கூறியது இது.

உரை : சிறிய கண்களையும் கடுஞ்சினத்தையும் உடைய ஆண்பன்றி, குண்டுக்கற்கள் நிறைந்த பக்க மலையில் வில்லையேந்திப் புனம் காக்கும் மலைவாழ்நரை ஏமாற்றி அவர்கள் விளைவிக்கும் மலை நெல்லைக் கவருவதற்கு இடனான மலைநாடன், வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய இவளை விரும்பி, இவள் தான் கூறும் மாயமொழிகளை ஏற்பாள் என நம்பிப் பண்பில்லாத சொற்களைச் சொல்லுகின்றான்.

உரை விளக்கம் : விழிப்புடன் வில்லேந்திக் காவல் புரியும் குறவர்களையும் தளருமாறு செய்து தினையைக் கவரும் பன்றியின் சதுரப்பாட்டை விதந்து 'வில்லோர் மாற்றி ஐவனம் கவரும்' என்றாள். வரைவதாக உறுதி கூறி வரையாது ஒழுகும் தன்மை காரணமாக, அவன் உறுதிமொழியைப் 'பண்பில்' என்ற அடைகொடுத்துக் கூறினாள். பண்பு இங்கு மெய்ம்மை மேல் நின்றது.

Koviloor Digital Library

தலைவி தலைவன் சொற்களை எளிதில் நம்பி ஏற்றுக் கொண்டு பின் ஏமாறும் அளவுக்குப் பேதைமையுடையவள் என்பது புலப்படுமாறு, 'தேறுதல் செத்து' என்றாள். இச்செய்யுளில், 'சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்' என்ற முரண்தொடை நயம் காண்க.

அருஞ்சொற்பொருள் : ஒருத்தல் - ஒரு சார் விலங்குகளின் ஆண்பாற் பெயர்; துறுகல் - குண்டுக்கல்; மாற்றி - தளரச் செய்து, ஏமாற்றி; ஐவனம் - மலைநெல்; பேணி - விரும்பி; செத்து - நம்பி.

இலக்கணக்குறிப்பு : வண்டுபடுகூந்தல் - அன்மொழித் தொகை (தலைவி).

மேற்கோள் : மலைவாழ்நர் ஐவனம் வித்தி அறுவடை செய்தல்:

கரிபுனம் மயக்கிய அகன்கண் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
- புறம். 159 : 16-17.

ஐவனத்தை இரவில் காவல் புரிதல் :
- வருபதம் நாடி
ஐவனம் காவலர் பெய்தீ நந்தின்
ஒளி திகழ் திருந்துமணி ஒளி இருள் அகற்றும்
- புறம். 172.

உள்ளுறை : பன்றியொருத்தல் காவலரை ஒட்டி ஐவனம் கவரும் நாடன் என்றது, தலைவன் களவிற் காவலரை வென்று பெறும் இன்பமே விரும்புவான் என்றதை உள்ளுறுத்ததாம்.

Koviloor Digital Library

268

தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு
வள மலைச் சிறு தினை உண்இ, கானவர்
வரை ஓங்கு உயர் சிமைக் கேழல் உறங்கும்
நல் மலை நாடன் பிரிதல்
என் பயக்கும்மோ - நம் விட்டுத் துறந்தே?

கூற்று : 'அவன் குறிப்பு இருந்தவாற்றால் நம்மைப் பிரிந்து வந்தல்லது வரையமாட்டான் போன்று இருந்தது' எனத் தலைமகள் கூறக்கேட்ட தோழி, அவட்குத் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைப் பிரியாதிருந்தே வரைதற்கு முயலான் என்றும், சேய்மைக்கண் சென்று பொருள் ஈட்டி வந்தே வரைவான் போலும் என்றும் ஐயுறவோடு தலைவி தோழியிடம் சொன்னபோது, தலைமகன் சிறைப்புறத்தே நிற்பதறிந்து அவன் கேட்கும் வகையில் தோழி சொல்லியது.

உரை : தம் தாயை இழந்த நெருங்கிய வரிகளை உடல்மேல் கொண்ட குருளையொடு சென்று வளப்பம் உடைய மலையில் விளைந்த சிறிய தினையின் கதிர்களை உண்டு, கானவர்கள் வாழும் உயர்ந்த மலையின் உயர்ந்த குவட்டிலே உறங்குதற்கு இடனான நல்ல மலைநாட்டின் தலைவன் நம்மைத் தனியே விட்டுப் பிரிந்து செல்வது என்ன பயனைத் தரும்? (ஒரு பயனும் தாராது.)

உரை விளக்கம் : கேழற் குருளையைத் தழுவரிக் குருளை என்றாள், அவ்வரிகள் ஒன்றோடொன்று நெருக்கமாக அமைந்தமையான். தாயை இழந்தமையான், தந்தையாகிய ஆண்பன்றியை எப்பொழுதும் சூழ்ந்து திரிந்தமையின் அங்ஙனம் கூறியதாகக் கூறலும் ஒன்று. இப்பொருட்குத் தழுவலைப் பன்றி மேலேற்றுக. முன்னைப் பொருட்குத் தழு என்பது வரிக்கு அடையாகும்.

Koviloor Digital Library

தலைவியை மணந்து கொள்ளத் தேவையான பொருளை ஈட்டவே தலைவன் பிரிய எண்ணினான். அவன் பொருளொடு திரும்பி வரும்வரையில் தலைவி உயிர்தாங்கியிருந்தாலல்லத் அவன் பிரிந்ததற்கு ஒரு பயன் இல்லையாதலின், 'என் பயக்குமோ நாடன் பிரிதல்?' என்றாள். ஓகாரம் எதிர்மறை. ஒரு பயனும் இன்றென்பது.

இனி, 'உணீஇய' என்று பாடங்கொண்டு, கேழல் குருளையைத் தன் உடன்கொண்டு சென்று தினையுண்பான் உறங்கும் நாடனாகவும், நின்னையும் தன் உடன்கொண்டு வரைந்து கோடலை எண்ணாது இவண் விடுத்துப்பிரிதலைக் கருதுவது என்னை என்றற்கு என் பயக்குமோ என்றாள் என்று விளக்குவார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

இப்பாடமே கொண்ட பெருமழைப் புலவர், ஆண்பன்றி தன் குருளைகளோடு செல்லாது, தனியே சென்று மலையுச்சியில் துயின்றது என்பார். 'தழுவரிக்குருளையோடு தினை உணீஇய கேழல் உறங்கும்' என்று இசைத்துக் காண்கையில், பன்றி தன் குருளையுடனே உறங்குவதாகக் கொள்ளுவதே அமைவுடைத்தாகவும், இவ்வாசிரியர் இங்ஙனம் கொள்ளாமைக்குக் காரணம், இவர் இதற்குக் கூற விரும்பிய உள்ளுறைப் பொருளாகவே தெரிகிறது. இது பின்னர் விளக்கப்படும்.

இனி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை 'உணீஇய ...... உயர்சிமை ...... உறங்கும் என்ற பகுதிக்கு 'சிறுதினையை உண்ணக் கருதிக் கானவர் வாழும் மலையினது உயர்ந்த உச்சிக்கண் பகற்போதில் ஆண்பன்றி உறங்கும்' என்று உரை வகுத்தார். பன்றி தினையைக் கவர்வது பெரிதும் இராப்போதில் ஆதலான், உணீஇய என்று தாம் கொண்ட பாடத்திற்கு ஒப்பப் பகற்போதில் உறங்கிற்று என்றார். அஃதாவது, இரவில் கண்விழித்துத் தினையைக் கவர்தற் பொருட்டுப் பகற்போதில் உறங்கிற்று என்றார். 'உணீஇ' என்ற பாடமே கொண்டு, இரவில் தன் குட்டியொடு தினையை உண்டபின் மலையுச்சியில் அயர்ந்து, உறங்கிற்று எனக் கோடல் அமைவுடைத்தாகும்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : தழுவரி – நெருங்கிய வரிகள்; குருளை – ஒருசார் விலங்கின இளமைப் பெயர்; உணீஇ – உண்டு; உணீஇய என்பது பாடமெனின் உண்டற்பொருட்டு; சிமை – மலையுச்சி; கேழல் – பன்றி, இங்கு ஆண்பன்றி.

இலக்கணக்குறிப்பு : உணீஇ – செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; என் பயக்குமோ – ஓகாரம் எதிர்மறை.

மேற்கோள் : பன்றி புனத்தில் மேய்தல் :

எய்ம்முள் அன்ன பருஉ மயிர் எருத்தின்
செய்ம் மேவல் சிறுகண் பன்றி
ஓங்குமலை வியன்புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும்

– நற். 98.

தினையை உண்ட பன்றி துஞ்சுதல் :

மென்றினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்கல் அடுக்கத்துத் துஞ்சும் நாடன்

– ஐங். 261.

குறிப்புப் பொருள் : தாயிழந்த குருளையோடே தினையை உண்டு கேழல் உறங்குகின்ற இத்தன்மையை உடைய நாடனாதலால் இவ்வாறு நிகழ்தல் கூடாது என்றார் பழைய உரையாசிரியர். குருளையை ஒருபொழுதும் பிரியாது, அதனோடு உண்டு, அதனோடு உறங்கும் பேரன்புடைய கேழலை உடைய நாட்டுத் தலைவன் தம்மைத் தனிவிடுத்துப் பிரிந்துபோதல் தகாது என்பது கருத்தாகக் கொள்க.

இனி, 'உணீஇய' என்று பாடங்கொண்ட பெருமழைப்புலவர் அதற்கேற்பக் கூறும் உள்ளுறை வருமாறு :–

''தாய் இழந்த தழுவரிக் குருளையோடு வளமலையிற் சென்று சிறுதினை உண்ணக் கருதிய பன்றி அந்நெறியில் முயலாமல்,

Koviloor Digital Library

ஏறுதற்கரிய மலைக்குவட்டிற் சென்று குட்டியையும் மறந்து உறங்கும் என்றது, தன் சுற்றத்தாரையும் இழந்து தலைவனையே புகலிடமாகக் கொண்டு வாழாநின்ற தலைவிய்ய வரைந்து அழைத்துக் கொண்டுபோய் ஆதல், தன் கருத்தினை நிறைவேற்றிக் கொள்ள அறியாமல், நொடிப்பொழுதும் பிரிவினைப் பொறாத இவளைப் பிரிந்து நெடுந்தொலை சென்று ஆண்டுத் தலைவியையும் மறந்து உரைவானாயின் ஈண்டுந் தலைவி இறந்துபடுதலன்றி வேறு யாது பயன் என்று நுண்ணிதின் உள்ளுறுத்தியவாறு.''

தினையை மேய்ந்த பின் கேழல் உறங்கும் இயல்பினது என்பது இப்பத்தின் முதற்செய்யுளில் குறிக்கப்படுகின்றது. மேலும், ஆண்பன்றி தன் குருளையைத் தனியே விடுத்துச் சென்றது என்பதற்கு ஆதரவாகச் செய்யுளில் ஒரு சொல்தானும் இல்லை. எனவே, மேற்கண்ட விளக்கம் நுட்பமானதேனும் ஏற்புடைத்தாக இல்லை.

இனி, ''கேழல் தன் குருளையை உடன்கொண்டு சென்று தினையுண்பான் உயர்சிமைக்கண் உறங்கும் நாடனாகலின் நின்னை உடன் கொண்டு சென்று வரைந்து கொள்வான் எண்ணாது அவன் பிரிதலைக் கருதுவது பயனின்று என்றாள் என்னுமாம்'' என்றார் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை.

இவற்றுள் மிகப்பொருத்தமானதொன்றைக் கோடல் அறிஞர் கடன்.

269

கேழல் உழுதெனக் கிளர்ந்த எருவை
விளைந்த செறுவின் தோன்றும் நாடன்
வாராது அவண் உறை நீடின் – நேர் வளை
இணை ஈர் ஓதி: நீ அழ –
துணை நனி இழக்குவென், மடமையானே.

Koviloor Digital Library

கூற்று : குறை நயப்பக் கூறித் தலைமகளைக் கூட்டிய தோழி, அவன் இடையிட்டு வந்து சிறைப்புறத்து நின்றுழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் தலைமகளைக் கூட்டுவிக்குமாறு தோழியை வேண்டினான் தலைவன். அவளும் அதற்கு உடன்பட்டு அவளைத் தலைவனொடு கூட்டுவித்தாள். ஆனால் தலைவன் அதற்குப்பின் ஒழுங்காக வாராது இடையிட்டு வருதலை மேற்கொண்டான். ஒருநாள் அவன் தலைவி வீட்டருகே நிற்பதனைத் தான் அறியாதாள் போல, அவன் செவிப்படும் வண்ணம் தலைவிக்குச் சொல்லியது இது.

உரை : நேரிய வளையல்களையும் ஒன்றற்கொன்று இணையாக அமைந்த நெய்ப்புடைய கூந்தலையும் உடையாய்! பன்றி உழுதமையால் ஓங்கியெழுந்த கோரைப்புற்கள், அவை உள்ள இடத்திற்கு நெல்வயல் போன்ற தோற்றத்தைக் கொடுத்தற்கு இடனான நாட்டின் தலைவன், நீ துயருற்று அழுமாறு ஈங்கு வாராது தான் சென்ற இடத்திலேயே நீடித்து உறைவானென்றால், யான் என் அறியாமை காரணமாக நினக்குத் தோழியாயிருக்கும் பேற்றினை இழப்பேன்.

உரை விளக்கம் : கேழல் கிழங்ககழ்தலைக் 'கேழல் உழுத' என்றாள். வலிய தன் மூக்குப் பகுதியை ஊன்றிப் பள்ளம் பறித்துக் கிழங்கினை எடுத்துண்டலின், அவ்வாறு அகழப்பட்ட நிலம் கலப்பை கொண்டு உழுததுபோல் தோன்றிற்று. அங்ஙனம் உழுத புழுதியில் பஞ்சாய்க்கோரை உயர்ந்து வளர்ந்தமையால் அவ்வாறு உழப்பட்ட இடம். நெல்வயல்போல் தோற்றமளித்ததென்று அறிக. 'அவண்' என்று தோழி சுட்டியது தலைவன் சென்ற இடத்தையாகும். தன் சொற்கேட்டுத் தலைவனுக்குக் குறைநேர்ந்தாள் தலைவியாதலாலும், தான் உறுதி கூறியவாறு தலைவன் நடக்கத் தவறியதாலும், தலைவி படும் துன்பத்துக்கெல்லாம் தானே காரணமானது பற்றி, 'என் மடமையால் துணை நனி இழக்குவென்' என்றாள். இங்ஙனம் கூறியது சிறைப்புறமாக நிற்கும் தலைவன் கேட்டு விரைவில்

Koviloor Digital Library

வரைதற்கு முயலவேண்டும் என்பதற்காம். தலைவன் வாராமையால் நீ தனிமையுற்று, அழுது, அதனால் இறந்துபடுதலை நான் காணாது, நீ கண்டு அழுமாறு யான் மடிவேன் என்றாள் என்க. நீ அழ நாடன் அவணுறை நீடின் (யான்) என் மடமையான் துணை நனி இழக்குவென் எனவும், நாடன் வாராது அவண் உறை நீடின் நீ அழ என் மடமையான் துணை நனி இழக்குவென் எனவும் இரு வகையாகப் பிரித்துப் புணர்க்க இடமுண்மை காண்க.

'துணை நனியிழக்குவென் மடமையான்' என்றது, நீ எனக்குத் துணையாதலை இழப்பேன் யான், அவனைத் தேறி முன் செய்த மடமையான் என்பது பழையவுரை.

அருஞ்சொற்பொருள் : கேழல் – பன்றி; எருவை – பைஞ்சாய் என்னும் கோரைப்புல்; கொறுக்கைச்சியுமாம்; செறு – வயல்; மடமை – அறியாமை.

இலக்கணக்குறிப்பு : ஈர்ஓதி – அன்மொழித்தொகை; உறை – முதனிலைத் தொழிற்பெயர்.

குறிப்புப் பொருள் : கேழல் உழுத இடத்தில் எருவை வளர்ச்சியுற்று அவ்விடத்திற்கு நெல் விளைந்த வயல் போன்ற தோற்றமளித்தது என்பது, தலைவன் தன்னைக் காமவேட்கை வாட்டியதனால், அவ்வேட்கையைத் தீர்த்துக்கோடற் பொருட்டு, தோழிபால் தலைசாய்த்துப் பணிவாக நடந்து கொண்டு நல்லவன் போல் தோன்றினான் என்பதல்லது அவன் உண்மையில் நல்லவன் அல்லன் என்ற உள்ளுறை அமைந்தமை காண்க.

இனிக் கேழலைக் காமமாகவும், எருவையை அதனால் அவன் காட்டிய ஆசைமொழியாகவும், விளைந்த செறுவினை மெய்க்காதல் தோன்றிய நெஞ்சமாகவும் கொண்டு, ''வறிய காமத்தாலே அவன் கூறிய பசப்புரைகளை யான் மெய்க்காதலால் தோன்றிய வாய்மை மொழிகளாகக் கொண்டு மயங்கிவிட்டேன் என உள்ளுறை காண்பார் பெருமழைப்புலவர்.

Koviloor Digital Library

இனி, கேழல் உழுததனால் கிளர்ந்தெழுந்த எருவைப்புல் விளைந்த நெல்லைப்போலத் தோன்றும் நாடன் என்றதனால், தலைவனொடு உளதாகிய தொடர்பினால் தலைவி மேனிக்கண் தோன்றிய வேறுபாட்டை இளமைக் கதிர்ப்புப் போலும் எனத் தோழி மறைத்து ஒழுகியவாறு கூறினாள் என்றார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

270

கிழங்கு அகழ் கேழல் உழுத சிலம்பில்
தலை விளை கானவர் கொய்தனர் பெயரும்
புல்லென் குன்றத்துப் புலம்பு கொள் நெடுவரை
காணினும் கலிழும் நோய் செத்து
தாம் வந்தனர், நம் காதலோரே.

கூற்று : வரைவு காரணமாக நெட்டிடை கழிந்து பொருள்வயிற் போகிய தலைமகன் வந்தமை அறிந்த தோழி, உவந்த உள்ளத்தளாய்த் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகளை மணந்து கொள்ளத் தேவையான பொருளை ஈட்டுதல் காரணமாக நெடுந்தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்ற தலைமகன் திரும்பி வந்தமை கண்டு மகிழ்ந்த தோழி அதனை மகிழ்ச்சியோடு தலைமகளுக்கு அறிவித்தது.

உரை : கிழங்குகளை அகழ்ந்தெடுக்கும் பன்றிகள் தம் மருப்பினால் உழுத புழுதியில் தாம் விதைத்து விளைவித்த தினையின் முதல் விளைச்சலைக் கானவர் கொய்து சென்றமையால் புல்லென்று தோற்றம் அளிக்கும் தனிமை மிகுந்த நெடிய மலையினைக் கண்ட அளவிலேயே நீ கண்ணீர் உகுத்து வருந்தும் படியான நின் பிரிவுத்துன்பத்தைத் தாமே எண்ணிப் பார்த்து நம் காதலர் வந்தார். (நீ மகிழ்வாயாக!)

உரை விளக்கம் : கானவர் நிலத்தை உழுதற்குத் தேவையில்லாதபடி, பன்றிகள் தம் மருப்பினால் உழுது விட்டன என்பதுபட,

Koviloor Digital Library

'கேழல் உழுத சிலம்பில் .... கொய்தனர் பெயரும்' என்றாள் தோழி. குன்றம் தனிமையுற்றதற்குக் கதிர் கொய்யப்பட்டு நின்ற வறும் தட்டைகளும், தினைப்புனங்காப்பார் இன்மையும், பிற மக்கள் இயங்காமையும் காரணங்களாம். எனினும் தலைமையான காரணம் தலைவன் வாராமை என்க. நெடியமலை பண்டு தான் தலைவனைக் கண்டு காதலித்த சோலையையும், ஆடிக்களித்த சுனைகளையும் உடையது ஆதலின், அவன் வாராத நிலையில், அவன் பிரிவை நினைவூட்டித் தனிமைத்துயரை மிகுவித்தமையின், 'காணினும் கலிழும் நோய்' என்றாள். நினைப்பினும் கலிழும் நோயுமாம் என்க.

'நோய் செத்துத் தாம் வந்தனர்' என்பதற்கு, பிறர் நினைவூட்டத் தேவையின்றி, தாமே தம் பெருங்கருணையினால், நின் துயர் நிலையை எண்ணிப் பார்த்து நெஞ்சம் நெகிழ்ந்து வந்தனர் என்று பொருள் கொள்க. தாம் என்பதனைத் தாமே எனத் திரித்துப் பொருள் கொள்க. 'நம் காதலோர்' என்றது. அவன் பால் தமக்குரிய பெருமதிப்புத் தோன்றக் கூறியதாகும். நம் காதலுக்குரியவர் என்றும், நம்பால் காதலுள்ளவர் என்றும் பொருள் கொள்க.

அருஞ்சொற்பொருள் : சிலம்பு – மலை; தலைவிளை – முதல் விளைவு; புலம்பு – தனிமை; கலிழ்தல் – கண்கலங்குதல்; செத்து – எண்ணி.

இலக்கணக்குறிப்பு : சிலம்பு – தினைப்புனத்தைக் குறித்தலின் ஆகுபெயர்; கொய்தனர் – கொய்து .... முற்றெச்சம்.

உள்ளுறை : கானவர் தாம் உழுது வருந்தாமல் பன்றிகள் உழுத புழுதியில் விளைந்த தலைவிளைவினைக் கொய்து கொண்டு பெயரும் குன்றம் என்றது நம் தலைவன் ஊழ் தானே காட்டிய நின்னிடம் விதைந்த அன்பு விதையானது காதலாம் பயிராகி நன்கு விளைந்தது. அதன் முதல் விளைவாகிய திருமணத்தை இனி நம் காதலர் நிகழ்த்தி நின்னைத் தன் இல்லத்திற்குக் கொண்டு போவான் என்று உள்ளுறுத்திக் கூறியதென்க.

கேழற் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

28. குரக்குப் பத்து

செய்யுள்தோறும் குறிஞ்சி நிலக் கருப்பொருளான குரங்கு இடம் பெறலால் இப்பெயர் எய்திற்று.

271

அவரை அருந்த மந்தி பகர்வர்
பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்,
பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன்;
தொல் கேள் ஆகலின், நல்குமால் இவட்கே.

கூற்று : தலைமகன் வரைவு வேண்டிவிடத் தமர் மறுத்துழி, செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது.

கூற்று விளக்கம் : தலைமகளை மகட்பேசிடச் சான்றோரை அனுப்பினன் தலைவன். ஆயின் அவள் தமர் மறுத்தனர். அது கண்டு தோழி அவன் பெருந்தகுதியைச் செவிலிக்கு அறிவித்து அறத்தொடு நின்றது.

உரை : அவரைக் காய்களை வயிறார உண்ட பெண்குரங்கு, வணிகர் கையாளும் பையைப் போலப் பருத்துக் காணப்படும் மலைநாடன் விரும்பினானெனில் பசுப்போல் பெண்டிர் பலரையும் தன் பெண்டாகப் பெறவல்லான். ஆயினும், அவன் தலைவிக்குப் பழைய கேள் ஆதலின் பிறர் யாரையும் விழையானாய் நம் பெண்ணிடத்தே தன் அருளைப் பொழிந்தான்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தாம் விற்கும் பொருள்கள் பலவற்றையும் அவற்றின் உண்மை விலையை வெளிப்படக் கூறி விற்போர் பகர்வராகிய வணிகராவர். 'பல்பண்டம் பகர்ந்து வீசி' எனப் பிறரும் கூறுவர். பக்காவது பொருளைப் பொதிந்து வைக்கும் பையாகும். பொருளை மிகுதியாகப் பொதிந்த பை பருத்துத் தோன்றுவதுபோல் அவரையை உண்ட குரங்கின் வயிறு புடைத்துத் தோன்றிற்றென்க.

தலைவன் 'வேண்டின்' என்றாள், அவன் அவ்வாறு வேண்டிற்றிலன் என்று பொருள்பட. அங்ஙனம் அவன் வேண்டினால், பசுப்போல் பெண் ஒருத்தியை அன்றி எத்துணைப் பேரையும் எளிதிற்பெறும் தகுதி மிகுதி உடையான் என்று உள்ளுறுத்துப் பெண்டிரும் பெறுகுவன் என்றாள். 'பசு' ஈண்டு குடியையும், கொண்டானைத் தெய்வமாகக் கொண்டொழுகும் பண்பாட்டையும் சுட்டிநின்றது. இங்ஙனம் பலரும் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வருவரெனினும் தலைவிமேல் காதல் கொண்டது, முற்பிறப்புக்கள் பலவற்றிலும் அவன் அவட்குக் கேளாக இருந்தமையே என்பதும் உயர்ந்த பாலே இப்பிறப்பிலும் அவர்களை ஒருங்கு கூட்டிற்று என்பதும், ஊழால் சேர்ந்தவரை நும் அறியாமையால் பிரிக்கப் பார்த்தீர் என்றும் சுட்டினாளாம். 'இவட்கு நல்கும்' என்றாள், அவன் தன் பெருந்தன்மையால், நும் பெண்ணிடம் காதல் கொண்டான் என்னும் பொருள்பட.

இனிப் பல்பசு என்று பாடம் கொள்வாரும் உளர். 'நல்குமால் இவட்கே' என்பதற்குப் பல பெண்டிர்க்குத் தரற்குரிய அனைத்துப் பொருட்களையும் இவள் ஒருத்திக்கே தருவான் தலைவன் என்று விளக்குவார் உளர்.

'பல்பசுப்பெண்டிரும் பெறுகுவேன்' எனப்பாடம் கொண்ட பெருமழைப்புலவர், 'தான் மணஞ் செய்துகொள்ள விரும்புவானாயின், ஆனேற்றினைப் பெரிதும் விரும்பிப்பின் தொடர்ந்து வருகின்ற ஆன்களைப்போன்று தன்னை விரும்பிப் பின்வரும் குலமகளிர் பலரையும் வாழ்க்கைத் துணையாகக் கோடல் இயலும்' என்று விளக்குவது நயமுடையதே.

Koviloor Digital Library

இதற்கு இப்புலவர் தரும் பிற விளக்கங்களை அவர் உரையிற்காண்க. இவ்வுரை மாட்சிமை உடையதெனினும், இப்படியொரு பாடவேறுபாட்டை ஐயர் பதிப்பிற் கண்டிலம்.

மந்தி அவரையை நிரம்ப உண்டு வணிகர் பை போலத் தோன்றும் நாடன் என்றது தலைவனுடைய பெருஞ் செல்வமுடைமையை விதந்தது என்பர்.

பழையவுரை : 'பசுப்போற் பெண்டிரும்' என்றது, வரைவெதிர் கொள்ளாத் தமர் மறுத்த தீங்கினைத் தங்கள் மேலேற்றி, இத்தீங்கு செய்யாது தான் நினைத்தவழி ஒழுகும் குணமுடைய பெண்டிர் பலரையும் பெறுகுவன், அவனே வேண்டின் என்று கூறியவாறாகக் கொள்க.

அருஞ்சொற்பொருள் : மந்தி – பெண் குரங்கு; பகர்வர் – வணிகர்; பக்கு – பை; தொல்கேள் – பல பிறவிகளிலும் கேளானோர்; நல்கும் – அருளும்.

இலக்கணக்குறிப்பு : அருந்த – அருந்திய என்னும் எச்சத்தின் திரிபு; அவரை – அதன் காய் மேல் நின்ற ஆகுபெயர்; ஆல் – அசை.

உள்ளுறை : அவரையை உண்ட மந்தி வணிகரது பக்குப்போலத் தோன்றும் நாடன் என்றது தமர் அவனது கேண்மைச் சிறப்பை அறியாது ஏனோர் போலக் கருதி மகட்கொடை மறுத்தனர் என்பதனை உள்ளுறுத்தது. (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை)

மந்தி அவரையை வயிறு முட்டத் தின்று சரக்கு இட்ட பைபோலத் தோன்றும் நாடன் என்றது, தலைவனுடைய திருவுடைமையை விதந்தபடியாம் என்பார் பெருமழைப்புலவர். இது, 'ஆண்டு வாழ்வனவும் மேலாம் உணவுகளில் குறைவின்றி வாழும் நாடன்' என்ற பழைய உரையாசிரியர் கருத்தை ஒட்டியதாகும்.

Koviloor Digital Library

272

கருவிரல் மந்திக் கல்லா வன் பறழ்
அருவரைத் தீம் தேன் எடுப்பி, அயலது
உருகெழு நெடுஞ் சினைப் பாயும் நாடன்
இரவில் வருதல் அறியான்;
'வரும் வரும்' என்ப - தோழி - யாயே.

கூற்று : அல்ல குறிப்பட்டு நீங்கும் தலைமகன் சிறைப்புறத்தானாக, முன்னை நாள் நிகழ்ந்ததனைத் தோழிக்குச் சொல்லுவாள் போன்று, தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியைக் காணக் குறியிடம் வந்த தலைவன், குறி தவறியமையின் வருந்தி நீங்கினான். மறுநாள் அவன் வந்து வீட்டருகே நின்றான். அவன் முதல் நாள் இரவு வந்து ஏமாற்றமுற்றதற்கு அவனுடைய அறியாமையே காரணமன்றித் தான் தவறுடையாள் அல்லள் என்பதனை அவன் உணரும் வண்ணம் தோழிக்குச் சொல்லுவாளாய் முதல் நாள் நடந்தவற்றைச் சொல்லியது.

உரை : தோழியே! கரிய விரல்களைக் கொண்ட மந்தியினது, முயன்று கல்லாமல் இயல்பாகவே தன் தாயைப் பற்றிக் கொள்ளும் வன்மை கொண்ட இளங்குட்டி, ஏறற்கு அரிதான மலையில் இழைக்கப் பெற்ற தேன் இறாலின் கண்ணுள்ள தேனைப் பருகிட எண்ணி அதிலுள்ள தேனீக்களைக் கலைத்து எழுப்பிவிட்டுப் பின்னர் அயலே உள்ள அச்சந்தரும் நெடிய கிளையின்மேலே பாய்தற்கு இடமான மலை கிழவன் இராப்பொழுதில் வருதலை அறியான். இவ்வாறிருப்பவும் நம் தாயோ அவன் வரும் வரும் என்று அடிக்கடி கூறா நிற்பள்.

உரை விளக்கம் : குரங்குக் குட்டியைக் கல்லா வன்பறழ் என்றது அது பிறந்தநாள் தொட்டுத் தன் தாயின் வயிற்றுப்பகுதியையும் பின்னர் மரக்கிளை முதலியவற்றையும்

Koviloor Digital Library

இறுகப்பற்றிக் கொள்ளும் வன்மையை இயல்பாகவே பெற்றிருத்தலான் என்க. 'குலவிச்சை கல்லாமல் பாகம்படும்' என்பதனை ஒப்பு நோக்குக. பிறரெல்லாம் தன் தொழிலை முற்றக்கல்லாத என்று பொருள் கூறுவர்.

கல்லா என்னும் அடைபுணர்த்தமைக்கு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, பின்வாருமாறு விளக்கம் தருவார். "இது செய்யின் இது விளையும் என்னும் நல்லுணர்வு பெறாத இளமைச் செல்வி தோன்றக் கல்லாவன்பறழ் என்றார்; கல்வியின் பயன் அதுவாகலின், 'கல்லா வன்பார்ப்பு' எனப் பிறரண்டும் கூறுப. குரங்கிற்குரிய தொழிலை அறியாமை பற்றி இவ்வாறு கூறினாரென்றலுமொன்று. ஆயினும் கல்லாமையைக் குரங்கினுக்கே பொதுவாகக் கூறுதல் மரபு. 'கல்லாக் கடுவன்' என்றும் 'கல்லாமந்தி' என்றும் நூலோர் நுவல்வது நோக்குக."

'கல்லாவன்பறழ் – தனது மரமேறுதல் தேன் அழித்தல் தாவுதல் முதலிய தொழில்களை இன்னும் நன்கு பயின்றிலாத புனிற்றிளங்குட்டி என்றவாறு' என்பது பெருமழைப்புலவர் விளக்கம்.

'பிறிதொன்றும் அறியாத குரங்கின்குட்டி' என்றார் ஈழத்து உரையாசிரியர்.

அருவரையாவது எளிதில் சென்றடைய முடியாத முகடுடையதாம். பறழ் வன்மை உடையதாதலின் அம்மலைமீதும் அது எளிதில் ஏறிற்றாம். இனிய தேனடையைத் தீண்டவே ஈக்கள் கிளர்ந்தன. எனவே அவற்றை அஞ்சிய பறழ் அயலே உள்ள அச்சமூட்டும் மரக்கிளை மேற்பாய்ந்தது.

தலைவன் இரவில் வரவில்லையாகவும் அவன் வந்ததாக அடிக்கடி சொன்னாள் தாய் என்பதுபட 'வரும் வரும்' என்று கூறியதாகச் சொன்னாள். அவன் வந்ததே இல்லை என்பது பட 'வருதல் அறியான்' என்றாள். இரவின் வருதலறியான் என்றலின், அவன் இரவில் வருதற்குரிய வழிமுறைகளை அறியான் என்றாளும் ஆம்.

Koviloor Digital Library

தலைவன் இரவுக்குறிக்கண் வந்தமையைத் தாய் அறிந்து ஆரவாரம் செய்தமையும், அதனால் தலைவன் அஞ்சி அகன்றமையும் கூறி, அவன் அகன்றது அவன் பிழையே என்றாள். இதற்குத் தீர்வு வரைதலே என்பது கருத்தாகும்.

அருஞ்சொற்பொருள் : பறழ் – குட்டி; அருவரை – ஏறற்கு அரிய மலை; எடுப்பி – எழச்செய்து; உரு – உட்கு, அச்சம்.

உள்ளுறை : தேன்பருகும் அவா இருப்பினும் அதனை எடுத்துண்ணும் வழிதெரியாத மடமையுடைய நின்னாட்டுக் குரங்குக்குட்டி ஆற்றலுடையதே ஆயினும் போதிய அறிவின்றித் தேனிறாலில் உள்ள ஈக்களை ஒதுக்கி உண்ண அறியாது ஈக்களை எழுப்பி விட்டுப் பின்னர் அவற்றுக்கு அஞ்சிப் பின்னும் கேடு தரும் நெடிய சினைமேல் பாயும். நீயும் இரவில் வரும் உபாயம் அறியாது, எம் குறியையும் பிழைத்து, அல்ல குறிப்பட்டு, தாய் முதலியோர்க்கு நின் வரவை அறிவித்துப் பின் அவர் ஆரவாரம் கேட்டு உருகெழு காட்டின் ஊடே ஓடிப்போயினை என்று உள்ளுறை காண்பார் பெருமழைப்புலவர்.

'மந்திக்கு ஒரு மகவாகிய பார்ப்பு மலைக்கண் பெருந்தேனிறாலைக் கிளர்த்து எழுப்பி, ஈக்குவெருவி அதன் அயற்சிகரத்திலே பாயுமென்றது, தான் நுகரக் கருதி வந்து நம்மையுணர்த்திச் சுற்றத்தார் பலரும் உணர்ந்த அதற்கு வெருவிப் பெயர் வான்.' – பழையவுரை.

'மந்தி விலக்குவது இரவுக்குறி விலக்கிய குறிப்பாகவும், வன்பறழ் தலைவனாகவும், தேனீ சுற்றத்தாராகவும், பறழ் நெடுஞ்சினையிற் பாய்ந்து தலைவன் பெயர்ந்து சென்றதாகவும் உள்ளுறை உவமம் கொள்க.'

– ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

Koviloor Digital Library

273

அத்தச் செயலைத் துப்பு உறழ் ஒண் தளிர்
புன் தலை மந்தி வன்பறழ் ஆரும்
நல் மலை நாட! நீ செலின்,
நின் நயந்து உறைவி என்னினும் கலிழ்மே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரியும் தலைமகன் 'நின் துணைவியை உடம்படுவித்தேன்; இனி நீயே இதற்கு உடம்படாது கலிழ்கின்றாய்' என்றாற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : சின்னாள் சென்று திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து, பிரிவிற்குத் தலைவியின் உடம்பாட்டைப் பெற்றான் தலைவன். அவள் உடம்பட்டமையைத் தோழியிடம் கூறினான். ஆனால் தோழி அஃதாற்றாது வருந்தினாள். அது கண்ட தலைமகன், 'பெண்ணே' நின்தோழியே உடம்பட்டாள். நீ உடம்படாது வருந்துவது ஏன்? என்று வினவினான். அதற்கு விடையாகத் தோழி சொல்லியது இது.

உரை : மென்மையான தலையைக் கொண்ட மந்தியின் வலிய குட்டி வழிக்கண்ணுள்ள அசோக மரத்தின் பவழம் போன்ற ஒளிமிக்க தளிர்களை விரும்பியுண்ணுதற்கு இடனான வளப்பம் மிக்க மலைநாடனே! நீ திட்டமிட்டவாறு பிரிந்து செல்குவையெனில், நின்னையே தன்னுயிர்க் காவலனாய் விரும்பி, நம்பிக்கையோடு வாழும் என்தோழி, என்னினும் மிகுதியாகக் கலங்குவாள்.

உரை விளக்கம் : தலைவன் பிரிவினைத் தன்னைப் போலவே தலைவியும் விரும்பாள் என்பதனை 'என்னினும் கலிழ்ம்' என்பதனால் தெளிவாக்கினாள் தோழி. இதனால் தாம் இருவரும் உணர்வால் ஒன்றுபட்டமையைத் தெளிவுபடுத்தினாள் என்க. 'நின்னயந்துறைவி' என்று தலைவியைக் குறிப்பிட்டாள், அவள் உயிர்தாங்கியிருப்பதற்குக் காரணமே தலைவன் மேல் அவள் கொண்ட காதலே என்னும் கருத்தில். அவனன்றித் தலைவிக்கு

Koviloor Digital Library

எனத்தனி இருப்பில்லை என்றாளாயிற்று. இவ்வாறிருக்க, அத்தகையவளைப் பிரிந்து செல்ல நயந்தனையே, இது நினக்கு அழகா என்று வினவினாள் என்க. அவள் கலுழ்வது நினக்கு உடம்பாடெனில் பிரிந்து செல்க என்றாளாம். அவள் கலுழ்வதனை யான் எங்ஙனம் தாங்குவேன் என்றாளுமாம். தலைவன் விரைந்து வந்து வரைந்து கொள்ளவேண்டும் என்பது அவள் விருப்பமாகும்.

அருஞ்சொற்பொருள் : அத்தம் – வழி; செயலை – அசோகு; துப்பு – பவழம்; உறழ் – மாறுபடும், ஒப்பான; மந்தி – பெண் குரங்கு; பறழ் – குட்டி; ஆரும் – உண்ணுகின்ற; கலிழ்ம் – கண்கலங்கி அழுவாள்.

மேற்கோள் : குரங்குகள் தளிர்களை உண்ணல் :

குளவி மேய்ந்த மந்தி

– ஐங். 279.

கடுவன் முறியார் பெருங்கிளை

– நற். 151.

குறிப்புப் பொருள் : மந்தியின் வன்பறழ் செயலையின் தளிர் முற்றி நிறம் மாறுமுன்பே உண்டாற்போல, நீயும் இவள் இவளைப் பருவத்தே மணந்து வாழவேண்டும் என்ற குறிப்புப் பொருள் காணலாம்.

இளமை கழிதற்கு முன்பே வரைதல் வேண்டும் என்று குறிப்புப் பொருள் காண்பார் பழைய உரையாசிரியர்.

இனி, 'அத்தத்தே எளிதிற்கிடைத்த அசோகின் இளந்தளிர் என்றது தலைவியை; குடியுயர்வு கூறுவாள் அசோகந்தளிர் என்றாள். நனி சிறந்த இளமை ததும்பும் செவ்வியுடையாள் என்பாள் 'துப்புறழ் ஒண்டளிர்' என்றாள். ஒரு நாள் கழியினும் முதிர்ந்து செவ்வி கெடும் என்பாள் ஒண்டளிர் என்றாள்' எனக் குறிப்புப் பொருள் காண்கிறார் பெருமழைப் புலவர்.

Koviloor Digital Library

274

மந்திக் கணவன் கல்லாக் கடுவன்,
ஒண்கேழ் வயப்புலி குழுமலின், விரைந்து, உடன் –
குன்று உயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன் – வாழி, தோழி! – என்
மென் தோட் கவினும், பாயலும், கொண்டே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் சின்னாட் சென்றபின் வரைந்துகொள்வதாக உறுதியளித்துப் பிரிந்தானாக, தலைவி ஆற்றாது வருந்தினாள். அவட்கு ஆறுதல் கூறும் தோழிக்குத் தலைவி சொல்லியது.

உரை : தோழியே! நீ வாழி! மந்தியின் கணவனான, இயல்பாகவே குரங்குச் சாதிக்குரிய திறன்கள் யாவும் படைத்த ஆண்குரங்கு, ஒள்ளிய நிறம் படைத்த வலிமை சான்ற புலி முழங்குதலால், மிக விரைந்து உயர்ந்த மலைப்பக்கத்திற்குத் தப்பிச் செல்லுதற்கு இடனான மலைநாடன் என்னைத் தனிவிடுத்துச் சென்றனன். அவ்வாறு செல்கையில் என் மெல்லிய தோள்களின் அழகையும் என் உறக்கத்தையும் உடன் கொண்டு போனான். (யான் என்ன செய்வேன்?).

உரை விளக்கம் : வலிமைசான்ற புலி முழங்குதலைக் கேட்டு அச்சமுற்று விரைந்து உயர்ந்த மலைச்சிகரத்தில் ஏறிக்கொண்டு தப்பியதாதலின் ' விரைந்து, உடன் குன்றுயர் அடுக்கம் கொள்ளும்' என்றாள். புலியால் ஏற இயலாத உயரத்தினைக் குரங்கு ஏறும் என்க. ஒளியுடைமையும், நிறமுடைமையும் புலித்தோலுக்கு இயல்பாதலின் 'ஒண்கேழ் வயப்புலி' என்றாள். தன் முழக்கத்தால் மட்டுமல்லாது நிறத்தாலும் பிற விலங்குகட்கு அச்சமூட்டவல்லது புலியென்க.

Koviloor Digital Library

கல்லாக் கடுவன் என்றாள், குரங்குச் சாதிக்குரிய அனைத்து ஆற்றல்களையும் இயற்கையாக உடைமைபற்றி. ஈண்டு விரைந்து தாவிச் சேறல், பற்றிக்கோடல் முதலிய ஆற்றல்கள் சிறப்பாக எண்ணப்படும். தலைவன் பிரிந்த பொழுதே தோள்கள் மெலிந்தமையையும், கண்கள் உறக்கம் நீத்தமையையும் கூறுவாள் 'மென்தோள் கவினும் பாயலும் கொண்டு சென்றனன்' என்றாள். இனி அவன் வரும் நாளிற்றான் அக்கவினும் உறக்கமும் தன்பால் மீளும் என்றாள் என்க.

அருஞ்சொற்பொருள் : கடுவன் – ஆண்குரங்கு; ஒண்கேழ் – ஒளியுடைய நிறம்; ஒளியும் நிறமும் எனலுமாம்; வயப்புலி – வலிமை மிகு புலி; குழுமும் – முழங்கும்; கவின் – அழகு; பாயல் – உறக்கம்.

இலக்கணக்குறிப்பு : மந்திக்கணவன் – நான்கன் தொகை.

மேற்கோள் : பிரிவில் தலைவி துயில் துறத்தல் :

துயில் துறந்தனவால் தோழி என் கண்ணே
– குறுந். 301.

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடெல்லாவே
– குறுந். 6.

பாடில கலிழும் கண்ணொடு புலம்பி
– குறுந். 11.

உள்ளுறை : கல்லாக் கடுவன் புலி குழுமல் கேட்டு அஞ்சிக் குன்றுயர் அடுக்கம் கொள்ளும் என்றது, வேற்று வரைவு வரும் என யாம் படைத்து மொழிந்தமை கேட்டு அஞ்சி வரை பொருட்குச் சென்றான் தலைவன் என்ற பொருளை உள்ளுறுத்தது என்பர்.

இனி, மந்திக்கணவனான கல்லாக் கடுவன் புலி முழக்கு அஞ்சி வரையகத்துப்பாயும் நாடனென்றது நமக்கு உரியனாய்

Koviloor Digital Library

ஒழுகுகின்றவன் யாம் எம்மைப்பாதுகாத்து உரைக்கின்ற உரைக்கு அஞ்சிச் சென்றான் என உரைப்பார் பழைய உரையாசிரியர்.

275

குரங்கின் தலைவன் குரு மயிர்க் கடுவன்
சூரல்அம் சிறுகோல் கொண்டு, வியல் அறை
மாரி மொக்குள் புடைக்கும் நாட!
யாம் நின் நயந்தனம் எனினும், எம்
ஆய்நலம் வாடுமோ - அருளுதி எனினே?

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் இடையிட்டு வருதலால், எதிர்ப்பாடுபெறாத தோழி குறியிடத்து எதிர்ப்பட்டு, அவன் கொடுமை கூறி, நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் திருமணத்தை நினையாது தொடர்ந்து களவினை நீட்டித்தான். தொடர்ந்து வருதலின்றி இடையிட்டு வரலானான். இதனால் தோழி அவனைச் சந்தித்து வரைவு கடாவ இயலாதவளாய், ஒரு நாள் அவனைக் குறியிடத்தே கண்டு அப்பொழுது அவன் குறைகளைச் சுட்டிக் காட்டி வரையுமாறு வற்புறுத்தியது.

உரை : குரங்கின் தலைவனாகிய நிறம் விளங்குகின்ற மயிரையுடைய கடுவன், சிறிய பிரப்பங்கோலைக் கைக்கொண்டு அகன்ற பாறையில் மழையாலுண்டான மொக்குளை அடிக்கின்ற நாட்டுக்குரிய தலைவ! யாம் நின்னைப் பெரிதும் விரும்புகின்றோம். அப்படி விரும்பிய எம் பிழையால் எம் நலம் இழக்கக் கடவேமாயினும் நீ எமக்கு அருள் செய்தாய் எனில் எம் அழகிய நலம் வாட்டமுறுமோ?

உரை விளக்கம் : குருமயிர்க்கடுவன் என்றாள் அது சிறிய நிறமுடைய குரங்கு என்பது பட. அகன்ற மலைப்பாறையில்,

Koviloor Digital Library

மழைபெய்தபொழுது நீர் நிறைந்து மொக்குள் உண்டானது என்றும் அதனைப் பிரம்பினால் புடைத்து மகிழ்ந்தது குரங்கு என்றும் கொள்க.

'யாம் நின் நயந்தனம்' என்றாள் தானும் தலைவியும் அவன்பால் பெருநயப்புக் கொண்டமை புலப்பட. அப்படி நயந்தமையின், நின்னைக் காணாத பொழுது எம் நலம் வாட்டமுறுவது இயல்பே. ஆயினும், யாம் நின்பால் அன்பு செலுத்துவதுபோல நீயும் எம்பால் அருளுடையை எனில் எம் வாடாத அழகு வாட்டமுற வாய்ப்புண்டோ? என்றாள்.

நீ அருளாமையாலேயே நின்னை யாம் நயந்தமையால் அழிந்த எம் அழகு மீண்டும் துளிர்க்காதொழிந்தது. இனியேனும் நின் பிழையுணர்ந்து எமக்கு அருள் செய்க என வேண்டியதாகக் கொள்க.

அருஞ்சொற்பொருள் : குருமயிர் – நிறமுடைய மயிர்; சூரல் – பிரம்பு; அறை – பாறை; வியல் – அகன்ற; புடைக்கும் – அடித்து விளையாடும்; நயந்தனம் – காதலித்தோம்.

குறிப்புப் பொருள் : குரங்கின் தலைவனாகிய கடுவன் சூரற்கோலைக் கொண்டு தானே அழிகின்ற மாரி மொக்குளைப் புடைத்து அழிக்கும் நாடனென்றது, நின்னை நயந்த எங்கள் நலம் நீ வரையாமலே அழிகின்ற இதனை நீ இவ்விடையிட்ட ஒழுக்கத்தாலே அழிக்கின்றாய் என்பதாம் என்பது பழையவுரை.

"கடுவன் மாரிமொக்குள் சிறுகோல்கொண்டு புடைக்கும் நாட என்றது, தாமே நொடிப்பொழுதில் அழிந்தொழியும் மொக்குளைக் குரங்கு கோல்கொண்டு புடைத்து நனிவிரைவில் அழித்தாற்போன்று நீ எம்மை நயவாமையால் வரையாது ஒழுகும் ஒழுக்கமே யாங்கள் மாரிமொக்குள்போன்று நின்றாங்கு நின்று அழிந்தொழியப் போதியதாகவும் களவொழுக்கத்தானும் நீ இடையீடு செய்து எம்மைக் கொல்கின்றனை." (பெருமழைப்புலவர்)

Koviloor Digital Library

276

மந்திக் காதலன் முறி மேய் கடுவன்
தண் கமழ் நறைக் கொடி கொண்டு, வியல் அறைப்
பொங்கல் இள மழை புடைக்கும் நாட!
நயவாய் ஆயினும் வரைந்தனை சென்மோ
கல் முகை வேங்கை மலரும்
நல் மலை நாடன் பெண்டு எனப்படுத்தே!

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவினை நீட்டித்துத் திருமண முயற்சியின்றி ஒழுகும் தலைவனை நெருங்கித் தலைவியை விரைந்து மணமுடித்துக் கொள்ளுமாறு தோழி வற்புறுத்தியது.

உரை : மந்தியின் காதலனாகிய, இளந்தளிர்களை மேய்கின்ற கடுவன், குளிர்ச்சியும் நறுமணமும் கொண்ட நறைக் கொடியைக் கைக்கொண்டு மலைப்பாறையில் திரண்டு படியும் இளமேகத்தினை அடிக்கும் நாடனே! நீ என்தோழி மீது அன்புடையை அல்லையாயினும், அவள் கல்மேல் வளரும் வேங்கையின் முகைகள் மலர்ந்து மணம் பரப்பும் நல்ல மலைநாடனின் மனையாட்டி என்று பிறர் பாராட்டும் வண்ணம் அவளை வரைந்து கொள்வாயாக!

உரை விளக்கம் : மரஞ்செடி கொடிகளின் இளந்தளிர்களைக் குரங்குகள் விரும்பியுண்ணல் பற்றி இந்நூலகத்தும் பிறாண்டும் அவை 'முறிமேய்' என்ற அடைகொடுத்துச் சுட்டப்பட்டன. உயர்ந்த மலைச் சிகரம் என்பதுபடப் பொங்கல் இளமழை படிதல் சுட்டப்பட்டது. 'நயவாய் ஆயினும்' என்றாள், தலைவன் முன்னர்த் தலைவியைப் பெரிதும் நயந்து பின் வரைவு நீட்டித்து அவட்குத் துயர் விளைத்தமையின். நின் நயப்பு மெய்யானது எனின் இதுகாறும் அவளை உரிமை மனைவியாக்கியிருக்க வேண்டும் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

'வரைந்தனை சென்ம்' என்றாள், இவ்விடம் விட்டு நீ பிரிதல் எண்ணினால், இவளை வரைந்து கொண்டல்லது செல்லலாகாது என்னும் பொருள்பட. அவளை வரையாது நீங்குவையாயின், மனமுடைந்து இவள் இறந்து படுதலும் கூடும் என எச்சரித்தவாறு.

நின் நாட்டகத்துக் கல்லில் வளரும் வேங்கை கூடப் பருவத்தே அரும்புகளைத் தோற்றுவித்து மலர்களால் மலை முழுதும் மணம் பரப்புகின்றது. ஆனால் நீயோ, நற்குடியிற் பிறந்து வளர்ந்தனையாயினும், உரிய கடமையை உரிய நேரத்தில் ஆற்றும் வன்மை பெற்றாயல்லை என்று இடித்துரைப்பாளாய், 'கல்முகை வேங்கை மலரும் நல்மலை நாட' என்று விளித்தாள் என்க.

இனி, 'நயவாய் ஆயினும் ..... மலை நாடன் பெண்டு எனப்படுத்து வரைந்தனை சென்மோ' என்றதற்கு, 'இவளை வரைந்து கொண்ட பின்னும் இப்பொழுது போலவே இவள்பால் அன்பில்லாத வகையில் நடந்துகொள்வாய் எனினும், ஊரவர் கண்ணுக்கு இவள் நின் மனைவி எனத்தோன்றும் வகையில் வரைந்து கூட்டிச் செல்வாயாக, அஃதாவது நின் மனைவி என்ற பெயரொன்றே அவட்குப்போதுமானது' என்று சொன்னதாகப் பொருள்கொள்ள இடமுண்டு. அங்ஙனம் வரையவில்லையேல் இவள் உயிர் வாழ்தல் அரிது என்பது குறிப்பு.

அருஞ்சொற்பொருள் : முறி - இளந்தளிர்; தண் - குளிர்ந்த; நறைக் கொடி - மலையில் வளரும் நறவம் என்னும் கொடிவகை; வியல் - அகன்ற; அறை - பாறை; புடைக்கும் - அடிக்கும்; பெண்டு - மனைவி; பொங்கல் - திரட்சி.

மேற்கோள் : விலங்குகட்கும் கணவன், காதலன் என்னும் உறவுச் சொற்களை ஏற்றிக் கூறல் :

மந்திக் கணவன் - ஐங். 274.

குரங்கின் தலைவன் - ஐங். 275.

Koviloor Digital Library

குரங்குகள் தளிரை உண்ணல் :
கைக்கோள் மறந்த கருவிரல் மந்தி
அருவிடர் வீழ்ந்த தன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றி
– மலைபடு. 311–313.

கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறியருந்து
குரங்கு ஒருங்கிருக்கும்
– குறுந். 288

குறிப்புப் பொருள் : மேல் கருக்கொண்டு முற்றிப் பயன்படுவதாய இளமுகிலை மந்தி நறைக்கொடி கொண்டு புடைக்கும் நாடவென்றது, வரைந்து மகட்பெறுதற்கு உரியளாகிய இவளை இம்மறைந்த ஒழுக்கத்தாலே கொலை சூழ்கின்றாய் என்பதாம். (பழையவுரை).

கன்முகை வேங்கை மலரும் என்றது, ஈரமற்ற கற்பாறை மேல் நிற்கும் வேங்கை தானும் பருவமுற்றுழி அரும்பெடுத்து மலருகின்ற நாடாதலால், யாங்களும் ஈரமற்ற கன்னெஞ்சனாகிய நின்னையே புகலிடமாகக் கொண்டு விட்டாலும், எமக்குரிய மகப்பேறும் அறப்பயனும் எய்தப் பெரிதும் விழைகின்றோம் என்ற இறைச்சிப் பொருள் காண்கிறார் பெருமழைப் புலவர்.

277

குறவர் முன்றில் மா தீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
குன்ற நாட! நின் மொழிவல்; என்றும்,
பயப்ப நீத்தல் என் – இவள்
கயத்து வளர் குவளையின் அமர்த்த கண்ணே?

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் புணர்ந்து நீங்குழி, எதிர்ப்பட்ட தோழி வரைவு கடாயது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைமகன் களவுக் காலத்தை அளவின்றி நீட்டித்தான். ஒருநாள் அவன் தலைவியைக் கண்டு அளவளாவி நீங்கியபோது அவனை எதிரே கண்ட தோழி, விரைவில் மணம்புரிந்து கொள்ளுமாறு தலைவனுக்கு அறிவுறுத்தது.

உரை : குறவர்தம் முற்றத்திடத்தே விலங்குகள் உராய்ந்து தம் உடற்றினவைப் போக்கிக் கொள்ள உதவுமாறு கிடக்கும் குண்டுக் கல்லின்மீது ஏறி, குரங்குச் சாதிக்குரிய அனைத்துப் பண்புகளையும் இயல்பாகவே கொண்ட மந்தி, தன் காதலனாகிய கடுவனோடு துள்ளித் திரியும் மலை நாடனே! நின்னை ஒன்று வினவுவேன். குளத்தில் நன்கு வளரும் தன்மையுடைய குவளை மலர் போன்ற, ஒன்றோடு ஒன்று மாறுபடும் இவள் கண்கள் பசலையுறும் வண்ணம் நீ எப்பொழுதும் இவளைப் பிரிந்து ஏகக் காரணம் யாதோ?

உரை விளக்கம் : உடல் தினவுற்றபொழுது ஆடுமாடு முதலிய விலங்குகள் அருகேயுள்ள பாறை, மரம் முதலியவற்றில் தம் உடலை உராய்ந்து அத்தினவு தீர்தல் இயல்பாம். அங்ஙனம் மலை விலங்குகள் பாறையில் உராய்ந்து தினவு தீர்ந்தன. ஆதீண்டு குற்றி என்ற வழக்குண்மை காண்க. அத்துறுகல்லின்மேல் குரங்குகள் துள்ளித் திரிந்தனவாதலின் 'கல்லா மந்தி கடுவனோடு உகளும்' என்றாள். கல்லா என்ற அடையால் மந்தியைச் சிறப்பித்தலின் காரணமாவது, அது இயல்பாகவே அறிவுடையது என்பதாம். ஈண்டு அறிவாவது, குரங்குச் சாதிக்கு உரிய தாவுதல், பற்றுதல், குதித்தல் முதலிய திறன்களாம். இத்திறன்கள் அருமுயற்சியால் வந்தனவல்ல. மாறாகப் பிறவியிலேயே அமைந்தனவாம். குலவிச்சை கல்லாமல் பாகம் படும் என்றாற்போற் கொள்க. இடைக்காலம் முதல் சான்றோர் பலரும், தம்தொழிலன்றிப் பிற தொழிலேதும் கல்லாத என்றே பொருள் கூறினர். பிற தொழில்களைக் கற்றற்குரிய தேவை விலங்கிற்கு இல்லையென்க.

'நின்மொழிவல்' என்றது நின்னை வினவுவேன் என்னும் பொருட்டு. 'என்றும் பயப்ப நீத்தல்' என்றாள், தலைவன் நாளும் வந்து, பின் அவள் வருந்துமாறு பிரிதலை வழக்கமாகக் கொண்டமையால்.

Koviloor Digital Library

இங்ஙனம் நாளும் வருதலும், பின்னர்ப்பிரிந்து துயர் செய்தலும் எற்றுக்கு? இன்பமும் துன்பமும் அடுத்தடுத்து இவள் துய்க்குமாறு செய்தலின், இருவரும் அச்சமின்றி இடையறவு இன்றிக் கூடி இன்புறுமாறு மணந்து கொள்வது அறிவுடைமையாகுமே என்று அறிவுறுத்தினாள் தோழி என்க. நீத்தல் என்? – என்ற வினா, என்ன பயன் உடையது என்னும் பொருள் தருதல் நோக்குக.

அருஞ்சொற்பொருள் : முன்றில் – முற்றம்; மா – விலங்குகள்; துறுகல் – பாறை; கல்லாமந்தி – இயல்பாக அறிவுடைய மந்தி; உகளும் – துள்ளிக்குதிக்கும்; மொழிவல் – வினவுவேன்; பயப்ப – பசக்குமாறு; நீத்தல் – பிரிதல்; கயம் – குளம்.

இலக்கணக்குறிப்பு : கல்லா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; மொழிவல் – தன்மை ஒருமை வினைமுற்று; பயப்ப – செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

உள்ளுறை : குறவர் முன்றில் மாதீண்டு துறுகல் மந்தி கடுவனோடு உகளும் என்றது, தலைவனும் தலைவியும் இருவகைக் குறிகளிலும் சந்தித்துக் குலவும் அவ்விடம் எப்பொழுதும் கொடிய சுற்றத்தார் உலவும் வகையால் அஞ்சத்தக்கது என்ற குறிப்பினது.

கல்லாமையை உடைய மந்தி கூடக் குறவர்க்கு அஞ்சாது அவர் முற்றத்திலே தன் கடுவனோடு பிரிவில்லாது துள்ளி விளையாடுகின்ற நாடனாகியும் இதற்குத்தக ஒழுகாமல் இவளை இவ்வண்ணம் வருந்துகின்றனை என உள்ளுறை காண்பார் ஈழத்து உரையாசிரியர். 'கல்லா' என்பதற்கு அறியாமை உடைய என்ற பொருள் கொண்டு இங்ஙனம் கூறினார்.

'குறவர் முன்றிலில் கல்லாமந்தி ஏதம் நினையாது கடுவனொடு உகளும் என்றது மனையின் அகத்தும் புறத்தும் அமைந்த குறியிடத்தே கூட்டத்துக்குண்டாகும் ஏதம் நினையாது இன்றியமையாக் காதலாற் கூடி ஒழுகுகின்றான் என

Koviloor Digital Library

உள்ளுறையால் இருவகைக் குறியையும் விலக்கிக் குறிப்பால் வரைவு கடாயவாறு' என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

இது, குறவர் முன்றிலில் மாதீண்டு துறுகல் கண்ணே நாணாது மந்தி கடுவனோடு உகளும் நாட வென்றது சுற்றத்தார் நடுவே இவ்வொழுக்கம் புலனாகிய ஞான்று விளையும் ஏதத்திற்கு நாணாதோய் என்பதாம் என்ற பழைய உரையை ஓராற்றான் தழுவியது.

278

சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன் பறழ் பாய்ந்தென, இலஞ்சி
மீன் எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
உற்றோர் மறவா நோய் தந்து,
கண்டோர் தண்டா நலம் கொண்டனனே!

கூற்று : வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாக, தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியை மணத்திற் கொள்ளக் கருதாது தொடர்ந்து களவினை நீட்டித்த தலைவன், ஒருநாள் அவன் வந்து தலைவியின் இல்லத்தருகே மறைந்து நின்றபோது தலைவி, தன் தோழியை நோக்கி, அவன் கேட்கும் வகையிற் சொல்லியது.

உரை : தோழி! மலையின்கண் உள்ள மூங்கிலின் கணுக்களிலிருந்து வெடித்து வளர்ந்த கோல், தன் மீதிருந்த குரங்கினது வலிமையுடைய குட்டி, அக்கோலை விடுத்து வேறு கோலிலே பாய்ந்த அளவில், நீர் நிலையின்கண் மீனை எறிகின்ற தூண்டில்கோல் சட்டென நிமிர்வதுபோல் உயர்வதற்கு இடமான நாட்டையுடைய நம் காதலன், தன்னொடு நட்புற்றோர் என்றும் மறக்க முடியாத பெருந்துன்பத்தை நமக்குத் தந்து, அதற்கு ஈடாக,

Koviloor Digital Library

ஒருகால் கண்டோர் மீண்டும் மீண்டும் காண விழையும் நம் பேரழகைத் தான் கொண்டேகினான்!

உரை விளக்கம் : மூங்கிலின் கணுவைக் கண்ணென்றும் கூறுவர். அக்கண்ணிடத்தே கோல்கள் கிளைத்து வளருதலால் அவை கண்விடு கழைக்கோல்களாயின. குரங்குக் குட்டியை வன்பறழ் என்றது அது தன் மிக்கிளமைப் பருவந்தொட்டே எதனையும் இறுகப்பற்றிக் கொள்ளும் வன்மையுடைமை பற்றியாகும்.

குட்டி அமர்ந்திருந்த கோல், அது வேறிடம் நோக்கிப் பாய்ந்தவுடனே நிமிர்தலால் மீன் இரையைப் பற்றியவுடனே மேலே நிமிரும் தூண்டிற்கோலை அதற்கு உவமை கூறினாள்.

உற்றார்க்கு உறுதி பயத்தலே நன்மாந்தர் பண்பாகவிருக்க நம் காதலரோ நேர் மாறாக, நட்டோர் என்றும் மறவாத துயரத்தைத் தந்தது வியப்பே! இவரை நாம் சான்றோன் என மதித்தல் எவ்வாறு என்பாள், 'உற்றோர் மறவா நோய் தந்து' என்றாள். 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் பண்புடைமையாகவும், யாதொரு தீங்கும் செய்யாது நன்மையே புரிந்த நமக்கு இவர் நீங்காத் துயரம் செய்தது வியப்புக்குரியது' என்றாளாம்.

'உலகில் வணிகம் செய்வார், தாம் ஒன்றைக் கொடுத்து அதற்கு ஈடாக வேறொன்றைக் கொள்வர். ஆனால் நம் காதலனோ, நம்பால் தீமையைக் கொடுத்து நம்மிடமிருந்த நன்மையை எடுத்துக் கொண்டான். என்னே இவன் நடுநிலைமைப் பண்பு!' என எள்ளும் வகையில் 'உற்றோர் மறவா நோய் தந்து கண்டோர் தண்டா நலம் கொண்டனனே' என்றாள்.

ஈண்டு மறவா நோய் எனப்பட்டது, தலைவன் செயலையே என்றும் நினைந்து நினைந்து வருந்துவதாகும். தலைவன் தன்னை வரைந்து கொள்ளாமல் கைவிட்டொழுகுதல் அவளால் மறக்கவொண்ணாத நோயாகும்.

Koviloor Digital Library

தண்டா நலமாவது, ஒருமுறை கண்டார் மீண்டும் மீண்டும் காணத்தூண்டும் பேரழகு என்க.

அருஞ்சொற்பொருள் : சிலம்பு - மலை; வெதிரம் - மூங்கில்; கண் - கணு; பறழ் - குட்டி; இலஞ்சி - நீர்நிலை; நிவக்கும் - உயரும்; உற்றோர் - நட்பினர்; தண்டா - அமையாத; நலம் - அழகு.

இலக்கணக்குறிப்பு : பாய்ந்தென - செய்தென என்னும் வாய்பாட்டு வினை எச்சம்; மறவா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

மேற்கோள் : கழைக்கோல் நிமிர்தற்கு உவமை :

'ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங் கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும் நாடன்'

— குறுந். 54.

குறிப்புப் பொருள் : 'வெதிரத்துக்கோல் மீனெறி தூண்டிலின் நிவக்குமாயினும் அது தூண்டில் போல் பிறவுயிர்க்குத் தீங்கு செய்யாதாக, தலைமகன் வரையாதொழுகும் ஒழுக்கம் எனக்குத் தீங்காயினவாறு என்னை' என இறைச்சிப் பொருள் கொள்வார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

குரங்கு தன்மேலிலிருந்துழி வளைந்து அது பாய்ந்து போவுழி நிமிர்கின்ற மூங்கிற்கோல் மீனெறி தூண்டில் போல வோங்கும் நாடனாதலால், தன்னெஞ்சத்து அன்புளதாகிய காலத்து வளைந்து வளைந்தொழுகி இன்பற்ற காலத்துப் பணிவின்றித் தலைமை செய்து நம் நலங்கொண்ட தன் கொடுமை தோன்ற ஒழுகுகின்றான் என்பதாம்' என்பார் ஈழத்து உரையாசிரியர்.

இவ்வழகிய உவமையைக் கையாண்ட புலவர் ஒருவர் மீனெறி தூண்டிலார் எனப்பெயர் பெற்றார்.

Koviloor Digital Library

யானே ஈண்டையேனே என் நலனே
ஏனல் காவலர் கவண் ஒலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு ஆண்டு ஒழிந் தன்றே
– குறுந். 54.

என்பது அப்பெயர்க்குரியார் பாட்டாகும். வேறு யாரும், யாண்டும் பயன்படுத்தாத அரிய உவமையைப் பயன்படுத்தியது கண்ட சான்றோர் ஆசிரியர்க்கு மீனெறிதூண்டிலார் எனப் பெயர் இட்டு மகிழ்ந்தனர். அழகிய தொடரால் பெயர்பெற்ற புலவர் யாவரும் தத்தம் பெயர்க்குரிய தொடரை முதன்முதல் பயன்படுத்தியோர் என்பது நோக்கத்தக்கது. அங்ஙனமாக, இருபுலவர் பெருமக்கள் பயன்படுத்திய தொடரைக் கொண்டு ஒருவர்க்கு மட்டும் பெயரிட்டது எவ்வாறு என அறிஞர் சிந்திப்பாராக. குறுந்தொகையே முதலில் தொகுக்கப்பட்ட தொகை நூல் என்ற அறிஞர் கருத்தையும் உடன் சிந்தித்தல் நல்லது.

279

கல் இவர் இற்றி புல்லுவன ஏறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரை மிசை உகளும் நாட! நீ வரின்,
கல் அகத்தது எம் ஊரே;
அம்பற் சேரி அலர் ஆங்கட்டே.

கூற்று : இரவுக்குறி வேண்டும் தலைமகனைத் தோழி வரவு அருமை கூறி மறுத்தது.

கூற்று விளக்கம் : பகற்பொழுதில் வந்து தலைவியைக் கண்டு சென்ற தலைமகன் இரவுக்குறி வேண்டினபொழுது, அவன் அங்ஙனம் வருவதிலுள்ள அருமைப்பாட்டைக் கூறித் தோழி குறி மறுத்தது.

Koviloor Digital Library

உரை : மலையினைத் தன் வேராற் பற்றிக் கொண்டு வளரும் இற்றி மரத்தினைப் பற்றிக் கொள்ளுவனவாய் (பற்றிக்கொண்டு) மந்தியும் கடுவனும் காட்டு மல்லிகையின் தளிர்களை மேய்ந்து மலைமீது துள்ளிக் குதித்து விளையாடுதற்கு இடமான நாடனே! மலைகட்கு இடையே யமைந்த எம்மூர் அலரும் அம்பலும் மொழியும் மாந்தர் வாழும் இடங்களை உடையது. (ஆண்டு நீ வருதலரிது.)

உரை விளக்கம் : இற்றியென்னும் ஆல் இனத்தைச் சார்ந்த மரம், கற்களிடையே முளைத்தால் தன் வேர்களைக் கல்லிடுக்குகளிற் பரப்பி மேனோக்கி வளரும் இயல்பினது ஆதலின் கல்லிவர் இற்றியென்றாள். அம்மரங்களைப் பற்றிக் கொண்டு குரங்குகள் ஏறினவென்பாள், 'புல்லுவன ஏறி' என்றாள். புல்லியேறி என்றவாறு. குளவியென்பது காட்டு மல்லிகைக் கொடி. அதன் பூக்களையும் தளிர்களையும் குரங்குகள் விரும்பி உண்ணும் என்ப. துணையொடு உகளும் என்றாள், துணையொடு மேய்ந்து உகளும் என்ற கருத்தில். அஃதாவது தன் காதற்துணையை மந்தி பிரியாது வாழ்கிறது என்றவாறு.

'நீ வரின்' என்றாள், தான் வர விரும்புவதாக அவன் சொன்னமையின். 'கல்லகத்தது எம்மூர்' என்றது, வழிகள் இராப்போதில் எளிதில் வருதற்குரியன அல்ல என்ற பொருளிலாகும். அது மட்டுமன்றி, அவ்விடர்ப்பாடுகட்கு இடையே ஒருகால் வந்தாலும், அவ்வரவு, ஊரில் அலரும் அம்பலும் தோன்றுதற்கு இடனாகும் என்பாளாய், 'அம்பற்சேரி அலராம்கட்டு' என்றாள். அம்பல் மொழியும் சேரியும், அலர் தூற்றும் பிற இடங்களும் உடையது என்றாளாம். இதனால், இங்ஙனம் ஊரார் அறிந்து தூற்றுதற்கு இடனின்றி, விரைவில் பெரியோரை விடுத்து மகட்பேசித் திருமணத்திற் கொள்ளுமாறு அறிவுறுத்தினாளாம்.

அருஞ்சொற்பொருள் : இற்றி – ஒரு வகை மரம். இக்காலத்தால் இச்சிமரம் என வழங்குவர். கல் – மலை; இவர்தல் – ஏறுதல்; புல்லுதல் – அணைதல்; குரங்குகள் தம் மார்பு

Koviloor Digital Library

மரத்தின் மேற்படக் கைகளாற்பற்றி ஏறின. குளவி - காட்டு மல்லிகை; வரை - மலை; உகளும் - துள்ளிவிளையாடும்; அம்பல் - அலரின் முதல் நிலை; அலர் - வெளிப்படத் தூற்றும் பழிச் சொல்.

இலக்கணக்குறிப்பு : புல்லுவன - புல்லுவனவாய், முற்றெச்சம்; அம்பற்சேரி - அம்பலை உடைய சேரி, இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

உள்ளுறை : நீ இதுகாறும் ஒழுகிய களவொழுக்கத் தினை விடுத்துத் தலைவியை வரைந்து கொண்டு நின்னூர் சென்று அவளோடு பிரிவிலாப் பெருவாழ்க்கை பெறுதலே தகுதி என உள்ளுறை காணும் பெருமழைப்புலவர், மந்தியும் கடுவனும் தமக்கு அரிதாயிருக்கும் காட்டு மல்லிகைப் பூவையும், தளிரையும் கல்லைப் பற்றித் தழைத்த இற்றியைப் பற்றுக்கோடாகக் கொண்டு அரிதின் ஏறி வயிறார மேய்ந்து பின்னர் இடையூறில்லாத மலைமிசைச் சென்று களித்தாடினாற்போன்று கல்போன்ற கனிவற்ற சிந்தையுடைய எம் சுற்றத்தாரைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழும் என்னை உறுதுணையாகக் கொண்டு நீயிர் அருமையாக ஒருவரையொருவர் தலைப்பட்டு இன்புற்றிருந்தீர்; இனி, நீயிர் மணந்து கொண்டு நும்மில்லத்தே சென்று நல்லற வாழ்க்கை தலைப்படலே முறை; இன்னும் இத்தீய களவொழுக்கம் மேற்கோடல் இருவர்க்கும் இன்னாமையே தரும் என்பது இதன் கருத்து என மிகச் சிறந்த விளக்கவுரையும் தந்துள்ளமை பாராட்டுக்குரியது.

'இற்றிமேற் படர்ந்த குளவித்தளிரை மேய்ந்து வரையகத்திலே மந்தி கடுவனோடு உகளும் நாடனாதலான், இதற்கு முன்பு இவள் நின்னோடு நுகர்ந்ததே கொண்டு இனி இவள் நின் பதிக்கண் வாழ்தல் வேண்டும் என்பதாம்.' (பழையவுரை)

'இற்றியின் வேரையும் வீழ்தையும் பற்றி ஏறிய மந்தியும் கடுவனும் ஆண்டுப் படர்ந்த குளவியின் தளிரை மேய்ந்து இன்புறும்

Koviloor Digital Library

என்றது, களவு நெறிபற்றிக் காதலன்பு வாழ்வில் தலைப்பட்ட நீவிர் இருவரும் இனிக் கற்புவழி மணந்து இல்லிலிருந்து நுகரும் நல்லின்பத்தை எய்துதல் வேண்டும்' (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை)

280

கரு விரல் மந்திக் கல்லா வன்பார்ப்பு
இரு வெதிர் ஈர்ங் கழை ஏறி, சிறு கோல்
மதி புடைப்பது போல் தோன்றும் நாட!
வரைந்தனை நீ எனக் கேட்டு யான்
உரைத்தனென் அல்லெனோ - அஃது என்
யாய்க்கே?

கூற்று : புணர்ந்து உடன்போகிய தலைமகன் தலைமகளைக் கரண வகையான் வரைந்தானாக, எதிர் சென்ற தோழிக்கு, 'இனியான் இவளை வரைந்தமை நுமர்க்கு உணர்த்த வேண்டும்' என்றானாக, அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியும் தலைவனும் உடன் போயினர். தலைவன் தன்னூரில் அவளை முறைப்படி மணச்சடங்கு இயற்றி மணந்து கொண்டு திரும்பினான். தோழி அவனை எதிர்ப்பட்டபோது, தான் தலைவியை மணந்து கொண்ட செய்தியைச் சொல்லி, இச்செய்தியைத் தலைவியின் உறவினரிடம் தெரிவிக்குமாறு வேண்டினபோது, தோழி அவனுக்குச் சொல்லியது இது.

உரை : கரிய விரல்களைக் கொண்ட மந்தியின், இயல்பாகவே ஏறுதல் தொழிலில் வன்மை பெற்ற வலிய குட்டி, பெரிய மூங்கிலின் ஈரமுடைய கோலின் மேல் ஏறி இருந்து, காண்பார்க்கு அது சிறிய கோலைக் கொண்டு வானத்தே ஊரும் மதியை அடிப்பது போலத் தோன்றுதற்கு இடமான நாடனே!

Koviloor Digital Library

நீ என் தோழியை முறைப்படி மணந்தனை என்ற இனிய செய்தியை நீ கூறுதற்கு முன்பே கேள்வியுற்று அப்பொழுதே என் தாய்க்கு உரைத்தேன் அல்லெனோ?

உரை விளக்கம் : கல்லா வன்பார்ப்பு என்றதற்கு முன்னைச் செய்யுளில் கூறியவாறு பொருள் கொள்க. 'இளம்பார்ப்பு' என்று பாடம் கொண்டார் துரைசாமிப்பிள்ளை. 'இருவெதிர்' என்றாள் மிக உயர்ந்த மூங்கிற்கழி என்பது பட. வானளாவி வளர்ந்த மூங்கிலாதலின், அதன் உச்சியில் இருந்த குரங்கு மதியைப்புடைப்பதுபோல் தோன்றிற்று. உச்சியில் இருந்தபொழுது, கழி அசைதலான் அதன் சிறிய கிளைகள் மதியை அலைப்பன போல் தோன்றின.

தோழி தானே தலைவியைத் தலைவனுடன் அனுப்பினாள் ஆதலின், அதன்பின் நிகழ்ந்த செயல்களை ஆய்ந்து, தலைவன் மணந்த செய்தியை அறிந்து தாய்க்கு உரைத்தாள் என்க.

'வரைந்தனை நீயெனக் கேட்டு' என்றது அதனையே. கேட்டு என்றாள், கேட்டுப் பெருமகிழ்வு எய்தி என்னும் பொருளில். உரைத்தனென் அல்லெனோ என்றது, இது வரை உரையாமல் இருப்பேனோ என்னும் பொருட்டாம். இனி நின்னை மருமகனாக எமர் ஏற்பது உறுதியாதலின் கவலையொழிக என்றாளாம்.

அருஞ்சொற்பொருள் : மந்தி – பெண்குரங்கு; பார்ப்பு – இளங்குட்டி; இரு – பெரிய; வெதிர் – மூங்கில்; ஈர் – தண்ணிய; மதி – திங்கள்; புடைத்தல் – அடித்தல்; யாய் – என் தாய்.

இலக்கணக்குறிப்பு : கல்லா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வரைந்தனை – முன்னிலை ஒருமை வினைமுற்று; அல்லெனோ – ஓகாரம் உடன்பாடு.

Koviloor Digital Library

மேற்கோள் : குரங்குப் பறழைக் கல்லா என்னும்
அடைமொழியுடன் கூறல் :
கருங்கண் தாக்கலை பெரும் பிறிதுற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
– குறுந். 69.

குரங்குப் பறழ் மூங்கில் மேல் இருத்தல் :
சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென இலஞ்சி
மீன் எறி தூண்டிலின் நிவக்கும் நாடன்
– ஐங். 278.

குறிப்புப் பொருள் : குரங்கின் செயல்கள் யாவும் தலைவன் செயல்களாக உள்ளுறுத்தப்பட்டன. குரங்கின் பார்ப்பு சிறிய கோலால் மதியைப் புடைப்பது போல் தோன்றியது வெறும் தோற்றமே. தலைவன் செயலும், தலைவியின் பெருங்குடிக்கு ஏதம் சூழ்வது போல் தோன்றிற்றேயன்றி, அஃது உண்மையில் ஏதமாகாது இனிதே திருமணத்தில் முடிந்தது. இதிலுள்ள உள்ளுறைப் பொருளைத் தம் நுண்மாண் நுழைபுலத்தால் அழகாக விளக்கியுள்ளார் பெருமழைப்புலவர். அதனை அவர் உரையுட் கண்டு இன்புறுக.

குரங்கின் இளம்பார்ப்பு இருவெதிர் ஈர்ங்கழை ஏறி மதிபுடைப்பது போல் தோன்றும் நாட என்றது, தீங்கு செய் வாயைப்போலத் தோன்றுவதல்லது உண்மை வகையாற் செய்யாய் என்பதாம். (பழையவுரை)

'களவுவழியொழுதி உடன்போக்கின் முடிவில் கரண வகையால் மணந்து இன்புறும் நீ, மதிபோல் உயர்ந்த எம் குடிக்குத் தீங்கு செய்வாய் போல என் யாய்க்குத் தோன்றா நின்றனை எனத் தாயர் முதலியோர் கொண்ட கருத்தினைத் தோழி உள்ளுறுத்து உரைத்தவாறு' (ஔவை சு. துரைசாமிப் பிள்ளை).

குரக்குப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 63737
Date of purchases:
Call Number:
ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

29. கிள்ளைப் பத்து

குறிஞ்சித் திணைக் கருப்பொருள்களுள் ஒன்றான கிள்ளை பாடல்தோறும் இடம்பெறும் காரணம் பற்றி இப்பத்து இப்பெயர் பெறுவதாயிற்று.

281

வெள்ள வரம்பின் ஊழி போகியும்
கிள்ளை வாழிய, பலவே – ஒள் இழை
இரும் பல் கூந்தற் கொடிச்சி
பெருந் தோள் காவல் காட்டியவ்வே.

கூற்று : ஆயத்தோடு விளையாட்டு விருப்பினால் பொழிலகம் புகுந்த தலைவியை எதிர்ப்பட்டு ஒழுகுகின்ற தலைமகன், அவள் புனங்காவற்கு உரியளாய் நின்றது கண்டு, மகிழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவி தன் தோழியருடன் ஒரு பொழிலில் விளையாடச் சென்ற பொழுது தலைமகன் அவள் மேற் காதல் கொண்டான். அவளும் அவனை விரும்பினாள். அத்தகையவள் பின்பொருநாள் தினைப்புனத்தின்கண் நிற்றலைக் கண்டு தலைவன் மகிழ்ந்து சொல்லியது இது.

உரை : ஒளிபொருந்திய அணிகளைப் பூண்டவளும், இருண்ட அடர்த்தியான கூந்தலைக் கொண்டவளும் ஆகிய (என் காதலியின்) கொடிச்சியின் பருத்த தோள்களுக்குத் தினைப்புனக் காவலைத் தந்த கிளிகள், (அந்நன்மையை எனக்குச் செய்தமைக்காக)

Koviloor Digital Library

வெள்ளம் என்னும் பேரெண் அளவிலான ஊழிகள் பல கழிந்த பின்பும் வாழ்வனவாக!

உரை விளக்கம் : காண்டற்கு அரியளாகிய உயர்ந்த தலைவியைக் கண்டு காதல் கொள்ளுதற்கும் பன்னாளும் எளிதிற் கண்டு அளவளாவி மகிழ்தற்கும் உதவினமையின், தன் நன்றிப்பெருக்கு வெளிப்படக் கிளியை வாழ்த்தினான் தலைவன் என்க. கிளிகள் ஏனைய உயிர்கள் போலவே சின்னாள் வாழ்வினவாயினும், தனக்கு உதவி செய்தமை காரணமாக ஊழிதோறூழி வாழ வேண்டுமென வாழ்த்தினான். எண்ணிலடங்காக் காலம் அவை வாழவிரும்பினனாய் வெள்ளம் என்னும் பேரெண்ணைச் சுட்டினான்.

கிளிகள் தினைப்புனத்திற் படியவில்லையேல் காவற்குத் தேவை ஏதுமின்மையின், தலைவிக்குக் காவற் கடமையைத் தமர் தருமாறு, விளைந்த தினையிற் படிந்தமைக்கு அவற்றை வாழ்த்தினான் என்க.

வெள்ளமாவது நூறாயிரம் என்னும் பேரெண்ணுக்கு மேற்பட்டதாகும். தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பன பேரெண்கள். இவற்றுள் வெள்ளம் இடைப்பட்டதாகும். இப்பேரெண்களை ஆசிரியர் தொல்காப்பியனார் 'ஐயம்பல்லென வரூஉம் இறுதி' (எழுத். 393.) என்று குறிப்பார்.

தான் காதலால் பூச்சூட்டி மகிழவும், மெல்லணையாய்க் கொண்டு தலைவியுடன் இன்றுயில் கொள்ளவும் காரணமாயினமைபற்றி அவள் கூந்தலை 'இரும்பல் கூந்தல்' எனப் புகழ்ந்தான். கருமையும் அடர்த்தியும் கூந்தற்கு அழகு. இருமை பெருமையுமாதலின் நீட்சியைச் சுட்டியதுமாம்.

பெருந்தோள் எனத் தோளைப் பாராட்டினான், அவள் தோள்களை அணைத்து இன்புற்றமை தோன்ற. அன்றியும், கவணும் தட்டையும் தழலும் கொண்டு கிளியோப்பற்கு ஏற்ற

Koviloor Digital Library

வலிமையுடைமை பற்றி அங்ஙனம் வாழ்த்தினானும் ஆம். காவல் காட்டியமையாவது, காவற்றொழிலைத் தோற்றுவித்தமை.

இனி, அவள் காவற்றொழிலில் ஈடுபட்டுள்ளாள் என்பதனை, அவள் கருவிகளால் ஒப்புந்தொறும் எழுந்து காட்டியமையால் 'பெருந்தோள் காவல் காட்டியவ்வே' என்றானுமாம்.

அருஞ்சொற்பொருள் : வெள்ளம் – வெள்ளம் என்னும் பெயருடைய பேரெண்; வரம்பு – எல்லை; போகியும் – கழிந்த பின்னும்; இரும் – கரிய; பல் – அடர்த்தியான; கொடிச்சி – குறப்பெண்.

இலக்கணக்குறிப்பு : வாழிய – வியங்கோள் வினைமுற்று.

மேற்கோள் : பேரெண்ணால் வாழ்த்தல் :

அடையடுப்பறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி யாத வாழிய பலவே
– பதிற். 63.

'முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'
– புறம். 9.

யானே பிழைத்தனென் சிறக்கநின் ஆயுள்
மிக்குவரும் இன்னீர்க் காவிரி
எக்கர் இட்ட மணலினும் பலவே
– புறம். 43.

மண்ணாள் வேந்தே நின்வா ணாட்கள்
தண்ணான் பொருநை மணலினும் சிறக்க
– சிலப். 28 : 125 – 126.

Koviloor Digital Library

282

சாரற் புறத்த பெருங்குரற் சிறு தினைப்
பேர் அமர் மழைக் கண் கொடிச்சி கடியவும்,
சோலைச் சிறு கிளி உன்னும் நாட!
ஆர் இருள் பெருகின; வாரல் –
கோட்டு மா வழங்கும் காட்டக நெறியே.

கூற்று : இரவுக் குறி நேர்ந்த தோழி தலைமகன் வந்து புணர்ந்து நீங்குழி, அவனை எதிர்பட்டுச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் இரவு நேரத்தில் தலைவியைக் கூட உதவிய தோழி அவன் தலைவியைக் கூடி நீங்கும் பொழுது அவனை எதிர்ப்பட்டு, இரவில் வருதலில் தோன்றும் இடையூறுகளைச் சொல்லி, இரவு வாரற்க என்று அறிவுறுத்தியது.

உரை : மலைச் சாரலின் புறத்தே விளைந்த பெரிய கதிரைக் கொண்ட சிறிய தினையின்கண் படியும் சோலையில் வாழும் சிறிய கிளிகளைப் பெரிய அமர்த்த குளிர்ந்த கண்களைக் கொண்ட கொடிச்சி கடியவும், அதுபற்றிக் கவலையுறாது, அக்கிளிகள் மீண்டும் அத்தினையைக் கவர எண்ணுகின்ற நாடனே! சாரலில் மிக்க இருள் பெருகிற்று. மேலும், காட்டகத்தே செல்லும் நெறிகளில் யானைகள் உலவுகின்றன. ஆதலால் அவ்வழி வருதலைத் தவிர்ப்பாயாக.

உரை விளக்கம் : தலைமகனின் வற்புறுத்தலாலும், தலைவியின் எதிர்பார்ப்பாலும் தோழி இரவுக்குறிக்கு உடன்பட்டபோதும், இரவு வேளையில் ஆரிருள் பெருகல், யானை, பன்றி, புலி முதலிய கொடு விலங்குகள் உலாவுதல் முதலிய இடையூறுகள் இருத்தலால் தலைவனுக்கு யாதேனும் ஏதம் ஏற்படின் தலைமகள் உயிர் வாழாள் என்னும் அச்சத்தால் இரவில் வருதலைத் தவிர்க்குமாறு வற்புறுத்தினாள் என்க. கொடிச்சியின் கடிதலையும் பொருட்படுத்தாது மீண்டும் மீண்டும் தினையின்மேல் கிளிகள் படிவதனால், 'கிளி .... கொடிச்சி கடியவும் உன்னும் நாட' என்றாள்.

Koviloor Digital Library

கிளியின் அச்சமற்ற தன்மை இதனால் போதரும். கோட்டுமா என்பது கொம்புகளைக் கொண்ட விலங்குகள் பலவற்றுக்குமாகிய பொதுப் பெயராகும். குறிப்பாக இப்பெயர் யானையைக் குறித்தது. ஆர் இருள் என்றாள் கடத்தற்கு அருமை நோக்கி. 'வாரற்க' என்றாள், வரின் தலைவி அவனுக்கு நேரத் தகும் துன்பங்கள் கருதி வருந்துவள் என்பதுபட. இடையூறுகட்கு இடையே இன்பம் துய்த்தலின், வரைந்து கொண்டு இடையறாக் காதல் இன்பம் துய்ப்பது அறிவுடைமை என்று உணர்த்தினாள் தோழி என்க. 'பெருங்குரற் சிறுதினை' என்பதிலமைந்த முரண்தொடையின் அழகை நோக்குக.

அருஞ்சொற்பொருள் : சாரல் - மலைப்பக்கம்; குரல் - கதிர்; அமர் - விருப்பமூட்டும்; மழைக்கண் - குளிர்ந்த கண்கள்; உன்னும் - நினைக்கும்; ஆர் - நிறைந்த; வாரல் - வாராதே; கோட்டுமா - யானை; வழங்கும் - இயங்கும்.

இலக்கணக்குறிப்பு : வாரல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.

மேற்கோள் : தலைவனை இரவில் வாரற்க என வேண்டல் :

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக்காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே

- குறுந். 69.

நெடுமலை அடுக்கம் கண்கெட மின்னிப்
படுமழை பொழிந்த பானாட் கங்குல்
குஞ்சரம் நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்
செங்கண் இரும்புலி குழுமும் சாரல்
வாரல் வாழியர் ஐய

- அகம். 92.

Koviloor Digital Library

இயங்குநர் மடிந்த அயம்திகழ் சிறுநெறிக்
கடுமா வழங்குதல் அறிந்து
நடுநாள் வருதி நோகோ யானே.

– நற். 257.

உள்ளுறை : கொடிச்சி கடியவும் சிறுகிளிகள் தினையைத் தொடர்ந்து உண்ண நினைக்கும் நாடன் என்றது, காவலர் காத்து நிற்கவும் அதனைப் பொருட்படுத்தாமல் களவொழுக்கமே விரும்பியொழுகுவான் தலைவன் என்பதனை உள்ளுறுத்ததாகும்.

யான் பகற்குறி விலக்கவும் விலகாது இரவுக் குறிக்கண் வந்து கூடுதலை விரும்புகின்றாய் என உள்ளுறை கூறலும் ஒன்று.

இனி, 'சாரற்புறம் தலைவி மனையாகவும், பெருங்குரற் சிறுதினை தலைவியாகவும், கொடிச்சி செவிலி முதலிய காவலராகவும், சோலைச்சிறு கிளி தலைவனாகவும், உன்னுதல் இரவுக் குறிக்கண் வருதலாகவும் கொள்க' என்றார் ஈழத்து உரையாளர். இதிலுள்ள உன்னும் நாட என்பதற்கு வேறாக 'உண்ணும் நாட' என்று கோடல் பொருந்தும் என்பார் இவர்.

283

வன்கட் கானவன் மென் சொல் மட மகள்
புன்புல மயக்கத்து உழுத ஏனல்
பைம் புறச் சிறு கிளி கடியும் நாட!
பெரிய கூறி நீப்பினும்,
பொய் வலைப் படூஉம் பெண்டு தவப் பலவே.

கூற்று : தோழி வாயில் மறுக்கவும், தலைமகன் ஆற்றாமை கண்டு, தலைமகள் வாயில் நேர, அவன் பள்ளியிடத் தானாய் இருந்துழிப் புக்க தோழி கூறியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைவன் பரத்தையரில்லத்தில் இருந்து மீண்டு வந்து வாயில் வேண்டிய பொழுது தோழி வாயில் மறுத்தாள். ஆயினும் தலைவனின் ஆற்றாமை கண்டு அவனுக்கு வாயில் நேர்ந்தாள். தலைமக்கள் இருவரும் படுக்கையறையில் மகிழ்ந்து இருந்தனர். அப்போது அங்கு வந்த தோழி வெறுத்துக் கூறியது இது.

உரை : வன்கண்மை உடைய கானவனின் மெல்லிய சொற்களை உடைய இளமகள், புன்புலத்தை உழுது கானவர் விதைத்து வளர்த்த தினைப்பயிரில் வந்து படியும் பசிய புறத்தையுடைய சிறிய கிளிகளை வெருட்டுதற்கு இடமான மலைநாட்டின் தலைவனே! தம் உறவினர் உறுதிபயக்கும் சொற்கள் பலவற்றையும் கூறி விலக்கிய போதும், இவ்வுலகில் தம் கணவன்மார் கூறுகின்ற பொய்களாகிய வலையின்கண் சிக்கி அவர்க்கு ஆட்பட்டொழியும் பெண்டிர் எண்ணற்றவர் ஆவர்.

உரை விளக்கம் : தன் கணவனின் பரத்தமைக்காக முதற்கண் வருந்தினாள் எனினும், பின்னர் அவன் சொன்ன சொற்களில் உண்மையிருப்பதாக நம்பி அவனை ஏற்று மகிழ்ந்தாள் தலைவியாதலின், பொதுவாகப் பெண்டிர் இங்ஙனம் ஏமாறும் தன்மையரே என்று கருதித் தோழி இங்ஙனம் கூறினாள்.

இவள் தந்தை வன்கண்மை உடையவன் எனினும், அவனுக்கு மாறாக, மெல்லிய இனிய சொற்களைக் கூறுபவள் கானவன் மகள் என்பாள் 'வன்கண் கானவன் மென்சொல் மடமகள்' என்றாள். 'உழுத ஏனல்' என்றது உழுது விதைத்த தினைப் பயிரைக் குறித்தது. முதலடியில் உள்ள முரண் தொடையைக் காண்க.

கணவன்மார் செய்த கொடுமைகளை நன்குணர்ந்தோர் தமராதலின், அவனை விலக்குமாறு பல ஏதுக்களைக் காட்டினர் என்பது பட, 'பெரிய கூறி விலக்கினும்' என்றாள். பெரிய கூறி விலக்கினும் அதனைச் சிறிதும் மனைவிமார் செவிமடுப்பவரல்லர் என்றும், மீண்டும் தம் ஆற்றாமை காரணமாகத் தம் கணவன்மார்

Koviloor Digital Library

சொல்லும் பொய்களாம் வலையிலேயே வீழ்வர் என்றும் குறை கூறுவாள், 'பொய்வலைப்படும் பெண்டிர் மிகப்பலர்' என்றாள். அத்தகைய பெண்டிர் பலருள் இவளும் அடங்குவள். இவட்கு அறிவுரை கூறல் பயனற்றது என்றாளாம். இதனால், கணவன் பிழை பொறுத்தமைவது பொதுவாகப் பெண்டிர் இயல்பு என்று உலகியல் கூறினாள் என்க.

இனி, ஆடவர் புறத்தொழுக்கத்திலேயே அழுந்தியிருந்து தம் பெண்டிர்க்கு வருத்தம் செய்து, பின் தம் சொல்லாற்றலால் அவர்களை மயக்கிக் கூடுவதில் சமர்த்தர். ஏமாறும் பெண்டிர் உள்ளவரை ஏமாற்றும் ஆடவரும் தொடர்ந்து உலகில் இருப்பர் என்று பெண்டிர்க்கு இரங்கி நொந்தாள் என்பதுமாம்.

இனி, 'கேட்போர் மனத்தில் ஒரு சிறிதும் அன்பு தோன்றாத வகையில் பொறுத்தற்கரிய பெரிய குற்றங்களைப் படைத்து மொழிந்து நீக்கினும் என்பாள், பெரிய கூறி நீப்பினும் என்றும், பின்னர் நீ போந்து பொய்யே சொல்லினும் அச்சொல்லைக் கேட்டு மறுத்து நீங்கும் வன்மையுடைய மகளிர் எவரும் இலர் என்பாள், பொய்வலைப் படூஉம் பெண்டு தவப்பலவே என்றும் கூறினாள் என்பாரும் உளர்.

இன்னும் இவர், 'பெரிய கூறி நீ நீப்பினும்' என்று பாடம் கொண்டு, 'பிரிவென்பதே இனி நிகழாது எனத் துணியும் அளவு பெரிய சூளுறவுகளைச் சொல்லிப் பின் அவை பொய்ப்ப நீ பிரிந்தாய் ஆயினும் என்பாள், பெரிய கூறி நீ நீப்பினும் என்றாள்' என்றும் விளக்குவார்.

அருஞ்சொற்பொருள் : வன்கண் – கடியநெஞ்சம்; ஏனல் – தினைப் பயிர்; பெரிய – அரிய அறிவுரைகள்; தலைவன்பாலுள்ள பெரிய குறைகள்; பெரிய சூளுரைகள்; நீத்தல் – விலக்கல்; பெண்டு – பொதுவாகப் பெண்டிரைக் குறித்தது; தவப்பல – மிகப்பலர்.

Koviloor Digital Library

இலக்கணக்குறிப்பு : பெரிய - குறிப்பு வினையாலணையும் பெயர்; பொய் வலை - உருவகம்; தவ - உரிச்சொல்.

உள்ளுறை : தினைப்புனத்துப் பலவாய்ப் படிகின்ற கிளிகளை ஒருத்தி தன்னாற் காக்க முடியாதாயினும் அவற்றை அவள் கடிய முயலும் நாடவென்றது, நின்னோடு இன்ப நுகர்ச்சி விரும்பும் மகளிரை யாங்கள் விலக்க முயல்கின்றது முடியாது என உள்ளுறை கொள்வார் பழைய உரையாசிரியர்.

இன்னும், 'தந்தை உழுத ஏனற்கண் படியும் கிளிகளை அவன் மடமகள் கடியவும், அவளது சொல்லின் மென்மை நயந்து கிளிகள் படிதலால், அவள் மாட்டாளாயினவாறுபோல, யாங்கள் நின்னை மறுத்தேமாயினும், நின் மார்பு தரும் இன்பம் நயந்து கூடும் மகளிரை விலக்கும் வன்மையிலேமாயினேம் எனத் தோழி உள்ளுறுத்தாள் என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. இவ்வுரையின் நயம் கண்டுணர்க.

பரத்தையர் மனைக்குப் போகாவண்ணம் தம் கணவன்மாரைத் தடுக்கப் பெண்டிர் பெரிதும் முயன்றும் ஆடவர் அவர்களை ஏமாற்றிவிட்டு மாயமொழிகளால் வயப்படுத்தி விடுகின்றனர் என்ற பொருள் அமையுமாறு 'மடமகள் பைம்புறக் கிளிகளைக் கடியும் நாட' என்றதாகப் பெருமழைப்புலவர் விளக்குவார். 'கானவன் மென்சொல் மடமகள் தான் ஒருத்தியேயாகித் தினைக்காவல் செய்யுங்கால் கிளிகளோ பல திசைகளினின்றும் வந்து அவள் தம்மை எத்துணை முயன்று ஓட்டினும் தினைக்கதிரைக் கொய்து கொண்டே போதற்கு இடனான நாடனே என்றாள்' என்பார் அவர்.

Koviloor Digital Library

284

அளிய தாமே, செவ்வாய்ப் பைங் கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங் கால்
இருவி நீள் புனம் கண்டும்,
பிரிதல் தேற்றாப் பேர் அன்பினவே.

கூற்று : *தினை அரிந்துழி, கிளியை நோக்கிக் கூறுவாள் போல், சிறைப்புறமாக ஓம்படுத்தது.*

கூற்று விளக்கம் : *தினை முற்றியமையால் தலைவியின் உறவினர் அறுவடை முடித்தனர்; இனித் தலைவி புனங்காக்க வாய்ப்பில்லை. தலைவனோ காட்சியாசையால் அத்தினைப் புனத்திற்கு வந்து வறுங்கொல்லையை நோக்கி நின்றான். அது கண்ட தோழி, கிளிகளை நோக்கிக் கூறுவாள் போல அவன் கேட்கும்படி இங்ஙனம் கூறி, அவன் அன்பைத் தலைவி எதிர்பார்த்துள்ளமையை வெளிப்படுத்தினாள்.*

உரை : *சிவந்த அலகினை உடைய பசிய கிளிகள் இரங்கத்தக்கன. குன்ற வாழ்வினரான குறவர் தம் விளைந்த தினையைக் கொய்துவிட்டமையால், அக்கொய்யப்பட்ட தினையின் பசிய அடிப்பக்கத்தை உடைய வறுந்தட்டைகள் மட்டும் நீண்டு நிற்றலைக் கண்ட பின்னும், இவ்வறுங்கொல்லையை நீத்துச் செல்ல மனமின்றி மீண்டும் மீண்டும் வருதற்குரிய பேரன்பினை அவை உடையவாயின.*

உரை விளக்கம் : *தம் சிவந்த அலகும் பசிய சிறகுகளும் கொண்டு கண்டாரைக் கவரும் இக்கிளிகள் என்று தன் இரக்கம் தோன்றச் 'செவ்வாய்ப் பைங்கிளி' என்றாள். ஏமாற்றமுறுதற்குத் தகுதியில்லனவாகிய இவ்வழகிய பறவைகள் ஏமாறுகின்றனவே என்பாளாய் 'அளிய' என்றாளாம். தாம் துய்ப்பதற்குரிய தினையை உரியவர் கொய்து சென்றபோதும், முன்பு தாம் துய்த்தற்கு உதவிய கொல்லையென்று, கருதி மீண்டும் வந்தன, தம் பேரன்புடைமையும்*

Koviloor Digital Library

நன்றியுணர்ச்சியும் காரணமாக என்பாளாய், 'இருவி நீள்புனம் கண்டும்' என உம்மை கொடுத்துச் சொன்னாள் என்க. நீள் புனம் வெறும் இருவியுடன் நின்றது கண்டும் மீண்டும் வந்தன என்பது.

அருஞ்சொற்பொருள் : அளிய - இரங்கத் தக்கன; பைங்கால் - பசிய அடிப்பகுதி; இருவி - வறும் தட்டை; நீள்புனம் - பெரிய கொல்லை; தேற்றா - தெளியமாட்டாத.

இலக்கணக்குறிப்பு : செவ்வாய், பைங்கிளி - பண்புத் தொகைகள்; கொய்தினை - வினைத்தொகை.

குறிப்புப் பொருள் : "எம் சுற்றத்தார் தினையைக் கொய்து போன பின்னரும் இக்கிளிகள் தாம் முன்னர் உண்டு களித்த தினைக்கதிர்களையே நினைந்து இவ்விடத்திலேயே இருந்து வருந்துவதுபோல, இதுவரை இத்தினைப்புனத்தில் நின்னைக் கூடி இன்புற்ற என் தோழியும் எம் சுற்றத்தார் இவளை இல்லத்தே வைத்துக் காத்த போதும் இங்கு அவள் கண்டு இன்புற்ற நினைவுடனேயே நின் வரவினை எதிர்நோக்கியிருப்பாள். அவளைக் கைவிடாது தலையணி செய்க" என்றாளாம்.

இனி, 'தாம் பண்டு போந்து உணவுண்டு இனிது வாழ்தற்கு ஏதுவாயிருந்த தினை இப்போது இல்லையாயினும், கிள்ளை அதன் இருவி கண்டு பிரியாப் பேரின்புடைய வாதல் போலப் பண்டு இவண்போந்து கூடி இன்ப நுகர்தற் கேதுவாய் இருந்த இவள் இளமை நலம் புதல்வர்ப் பயந்து முதுமை யெய்துதலால் குறையினும், பிரியாய் பேரன்புடையையாய் வாழ்வாயாக' என ஓம்படுத்ததாகக் கூறுவார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

Koviloor Digital Library

285

பின் இருங் கூந்தல் நல் நுதற் குறமகள்
மென் தினை நுவணை உண்டு, தட்டையின்
ஐவனச் சிறு கிளி கடியும் நாட!
வீங்கு வளை நெகிழப் பிரிதல்
யாங்கு வல்லுநையோ, ஈங்கு - இவட் டுறந்தே?

கூற்று : ஒருவழித் தணந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : களவொழுக்கத்தின்பொழுது சிறிது காலம் பிரிந்து சென்று மீண்டான் தலைமகன். அவன் திரும்பியபொழுது அவன் தலைமகளைத் தனியே விடுத்துப் பிரிந்தமைபற்றித் தோழி கவன்று சொல்லியது.

உரை : பின்னிய கருங் கூந்தலையும், அழகிய நுதலையும் உடைய குறக்குடிப் பெண் மெல்லிய தினையின் மாவை உண்டு, பின்னர்த் தட்டையைப் புடைத்து ஐவன நெல்லை உண்ண வரும் சிறிய கிளிகளை ஓச்சும் மலை நாடனே! இவளுடைய விம்மிய வளையல்கள் நெகிழ்ந்து ஓடும்படியாகத் தனியே விடுத்துப் பிரிதலை நீ எவ்வாறு வன்கண்மையோடு துணிந்தனையோ?

உரை விளக்கம் : 'வீங்குவளை நெகிழ' என்றாள், தலைவனுடன் இருக்கும்பொழுது மகிழ்ச்சியால் பூரித்த உடம்பில் வளை செறிந்து கிடந்தமை கருதி. அவன் பிரிந்தவுடனே அவை நெகிழ்ந்தோடும் என்பது தெரிந்தும் பிரிந்தான் என்பது படவும், இங்ஙனம் பிரிதல் பெரிய வன்கண்மையுடையார்க்கன்றி இயலாது என்பது தோன்றவும் 'யாங்கு வல்லுநையோ' என்றாள். பின்னப்பட்டதும் கருநிறம் கொண்டதும் ஆகிய கூந்தல் எனத் தனித்தனிக் கூட்டிப் பொருள் கொள்க. தட்டையாவது, மூங்கிற்கழியின் துண்டத்தைப் பிளந்து அமைக்கப்பட்ட கிளிகடி கருவியாம்.

Koviloor Digital Library

தட்டி ஒலியெழுப்புதற்குரியதாகலின் தட்டையாயிற்று. தழலையென்றொரு கருவியும் உண்டு.

பிரியத்தகாதவளைப் பிரிதல் என்பது வன்கண்மையாளர்க் கன்றிக் கூடாமையின், சிறந்த அன்பினனாகிய நினக்கு இவ்வன்கண்மை வந்த தெவ்வாறோ என்பாளாய், 'யாங்கு வல்லுநையோ?' என்றாள் என்க. 'இப்பண்பினை நின்பால் யாம் எதிர்பார்த்ததில்லை' என்றாள்.

இவளை என்றும் பிரிவதில்லை என இவள் நேர் இறை முன் கைப் பற்றி நீ சொன்ன உறுதிமொழிகளையெல்லாம் அற மறந்து, இவள் வளையும் பிற அணிகளும் நெகிழுமாறு பிரிந்தனையே என நொந்தாள் என்க.

அருஞ்சொற்பொருள் : நுவணை – தினை மா; தட்டை – கிளி கடி கருவி; ஐவனம் – மலையில் விளையும் ஒருவகை நெல்; கடிதல் – ஓட்டுதல், வெருட்டுதல்; வீங்கு வளை – செறிந்த வளை; யாங்கு – யாங்ஙனம்.

இலக்கணக்குறிப்பு : ஐவனச் சிறுகிளி – ஐவனத்தின்மேல் படியும் சிறுகிளி – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. வல்லுநையோ – ஓகாரம் வினா.

மேற்கோள் : தட்டை கொண்டு கிளியோட்டல் :

தழலும் தட்டையும் முறியும் தந்திவை
ஒத்தன நினக்கு எனப் பொய்த்தன கூறி
– குறுந். 223.

தழலை வாங்கியும் தட்டை ஓச்சியும்
அழலேர் செயலை அந்தழை அசைஇயும்
– அகம். 188.

Koviloor Digital Library

தட்டைப் பறையிற் கறங்கும் நாடன்
- குறுந். 193.

குறவர் ஐவனம் விதைத்தல் :
அருவிப் பரப்பின் ஐவனம் வித்தி
- குறுந். 100.

மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி
அருவியின் விளைக்கும் நாடன்
- குறுந். 371.

குறிப்புப் பொருள் : குறமகள் தினைமாவை உண்டு தட்டையினால் ஐவன நெல்லைக் கவரும் கிளிகளைக் கடிவள் என்றதனால் நின்னால் துறக்கப்பட்ட இவள் நின் பிரிவுத் துன்பத்தை உட்கொண்டு தன் நிறையினால் பிறரறியாவண்ணம் தன் மறையினைக் காத்தொழுகினாள் என உள்ளுறை கொள்வார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

இனி, நுவணையுண்டு கிளி கடியும் என்றது, குறமகள் தான் பாதுகாக்கும் தினையினது மாவையுண்டு அயலே தனக்குரிமையுடையதாகிய ஐவனக்கதிரில் கிளி விழாமலும் ஓட்டுதல் போன்று இவளும் இக்களவுக் காலத்தும் நின்னோடு கூடி இன்பம் நுகர்ந்து பின்னரும் நீ வரைந்து கொண்ட கற்புக் காலத்தே நின் மார்பினைப் பரத்தையர் முயங்காமல் பாதுகாக்கும் பெருமையும் உடையவள் என உணர்த்தினாள் என விளக்குவார் பெருமழைப்புலவர்.

'குறமகள் தினைப்பிண்டியையுண்டு ஐவனச் சிறுகிளி கடியும் நாடவென்றது நின்னோடு இக்காலத்து இன்பம் நுகர்ந்து பின்பு நின்மனைச் செல்வமும் பிற மகளிர் ஒழியத் தானே நுகரும் வேட்கை உடையாளைப் பிரிந்து ஒழுகுகின்றாய் என்பதாம்' (பழையவுரை).

Koviloor Digital Library

286

சிறு தினை கொய்த இருவி வெண் கால்
காய்த்த அவரைப் படு கிளி கடியும்
யாணர் ஆகிய நல் மலை நாடன்
புகர் இன்று நயந்தனன் போலும்;
கவரும் - தோழி! - என் மாமைக் கவினே.

கூற்று : உடன்போக்குத் துணிந்த தலைமகன் அஃது ஒழிந்து, தானே வரைவிடை வைத்துப் பிரிய நயந்ததனைக் குறிப்பினால் உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகன், 'வரைவிடை வைத்துப் பிரிவல்' என்ற வழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியதூஉம் ஆம்.

கூற்று விளக்கம் : தலைவியை உடன்கொண்டு ஏக முடிவு செய்திருந்த தலைவன் பின் தன் முடிவை மாற்றிக் கொண்டு, தானே சிறிதுநாள் கழித்துப் பொருளீட்டி வந்து மணக்க விரும்பினான். அதனை உணர்ந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது இது. தலைமகன் வரைதற்கு வேண்டும் பொருள் கொணர்ந்து பின் வரைவதாகச் சொன்னதனைத் தலைவி தோழிக்கு அறிவித்ததுமாம்.

உரை : சிறிய தினைத் தானியம் கொண்ட கதிர்களைக் குறவர் அறுவடை செய்த பின்னர் நின்ற வெள்ளிய இருவிகளின்மேல் ,படர்ந்து காய்த்த அவரையின் மேல் வந்து படிகின்ற கிளிகளை ஓட்டுதற்கு இடனான புதிய வருவாய்கள் உண்டாகும் வளமலை நாடன் இன்று குற்றமுடைய ஒற்றனைச் செய்ய விரும்பினான் போலும். இதன் விளைவாக என் மாமையாகிய கவினை அவன் கவர்வது உறுதியாம்.

உரை விளக்கம் : தினை கொய்த பின் நிற்கும் தட்டை கதிரின்றி வறிதே நிற்றலின் அதனை 'வெண்கால்' என்றாள். வெண்மையாவது ஒன்றும் இன்மையென்க. அறிவில்லாதானை வெள்ளியோன் என்னும் வழக்கினை எண்ணுக.

Koviloor Digital Library

அன்றியும் வெண்ணிறமான தட்டை எனலுமாம். இங்குச் சுட்டப்பட்ட அவரை ஊடுபயிராக வளர்ந்தது எனவுணர்க. இஃது இக்காலத்தும் காணத்தக்கதொன்றே. முன்னர்த் தினையின் மேற்படிந்த கிளிகள் இப்போது அவரையின்மேற் படிந்தன என்றாள். ஒன்றையடுத்து ஒன்றாகப் பயிர்கள் புதியனவாய் வளர்தல் பற்றி 'யாணர்' என்றாள். அதனாலேயே அந்நாடு நன்மலை நாடாயிற்று. நலன் இங்கு வளம் என்க. 'இன்று புகர் நயந்தனன்' என்று மாற்றிக் கூட்டுக. என்றும் குற்றத்தை நயவாதான் இப்பொழுது நயந்தான் என்பதுபட இன்று புகர் நயந்தனன் என்றாள். இது நம் தீயூழே என்று நொந்தபடியாம். இஃது அவன் அன்பற்ற செயலாதலான், இப்பொழுது அவன் உடன் இருத்தலால் என்னுடன் இருக்கும் என் கவின் அவன் போங்காலத்து அவனோடு போதல் உறுதியென்பாளாய், 'கவரும் தோழி என் மாமைக்கவினே' என்றாள். கவரும் என்பது அவனே கவரும் என்ற பொருளது. கவர்ச்சியாவது மாறி மாறி நிற்றலாதல் பற்றி, 'என் கவின் விளர்ப்பதும் தளிர்ப்பதுமாய்த் தடுமாறுகின்றது' என்று உரைப்பாருளர்.

பழைய வுரைகாரர் புகர் என்பதனை உடன்போக்கு என்றார். அவ்வாறெனின், தலைவன் உடன் வரைதலை எண்ணாது உடன்போக்கு மேற்கொண்டமையை எண்ணி அதனைப் புகர்நெறி என்று கருதியதாகக் கொள்ளல் வேண்டும். கவரும் என்றதற்குத் தடுமாறும் என்று பொருள் கொண்டதற்கு ஏற்ப, அவன் உடன்போக்குத் துணிந்த வழித் தந்த மாமைக் கவினை, அஃது ஒழிந்த விடத்துக் கவர்ந்து கொள்வான் எனக் கூறினான் என்றும் விளக்குவார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

அருஞ்சொற்பொருள் : இருவி – வறுந்தட்டை; வெண்கால் – வெள்ளிய தட்டை, கதிரில்லாத தட்டை; யாணர் – புதுவருவாய்; நன்மலை – வளமலை; புகர் – குற்றம்; நயந்தனன் – விரும்பினான்; கவரும் – கைக்கொண்டேகும், தடுமாறும்; மாமைக்கவின் – மாந்தளிர் போன்ற அழகு.

Koviloor Digital Library

மேற்கோள் : ஊடுப்பயிராக அவரையை விதைத்தல் :
சிறுதினை மறுகால் கொழுங் கொடி அவரை
பூக்கும்
– குறுந். 82.

கொய்பதம் உற்றன குலவுக் குரல் ஏனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை
– மலைபடு. 108–110.

குறிப்புப் பொருள் : தினையிற் கடிந்த கிளியைத் தினை அரிகாற்கண் விளைந்த அவரைக் கண்ணும் கடியும் நாடனென்றது, வரையாதொழுகுதலன்றி உடன் போதலையும் விலக்காநின்றான் என்பதாம். (பழையவுரை).

287

நெடு வரை மிசையது குறுங் கால் வருடை
தினை பாய் கிள்ளை வெரூஉம் நாட!
வல்லை மன்ற பொய்த்தல்;
வல்லாய் மன்ற, நீ அல்லது செயலே.

கூற்று : 'இன்ன நாளில் வரைவல்' எனக் கூறி, அந்நாளில் வரையாது பின் அவ்வாறு கூறும் தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியைக் குறித்ததொரு நாளில் வரைவதாக உறுதி கூறினான்; ஆனால் சொன்னவாறு செய்யவில்லை; ஆனால் மீண்டும் அத்தகைய உறுதிமொழி கூறினான்; அப்போது அவனுக்குத் தோழி கூறியது இது.

உரை : நெடுமலைமேல் வாழும் குறிய கால்களையுடைய வருடை மான்களைக் கண்டு அஞ்சி, தினைக்கதிர் மேல் படியும்

Koviloor Digital Library

கிளிகள் அஞ்சி விலகிச் செல்லும் மலைநாடனே! நீ பொய் சொல்வதில் வல்லவன் என்பது தெளிவு. அவ்வாறே பொய்க்கு மாறானவற்றைச் செய்வதில் ஆற்றலுடையாய் அல்லை என்பதும் தெளிவே.

உரை விளக்கம் : தலைமகன் தான் வரைதற்குக் குறித்த நாளில் வரையாததோடு, மீண்டும் அத்தகு வாக்குறுதிகளையே கொடுத்தமையின் வெறுப்புற்றவள் தோழியாதலின், 'நீ பொய்த்தலில் ஆற்றலும், பொய்யாமையில் ஆற்றலின்மையும் உடையை' என இழித்துரைத்தாள் என்க. தலைவன் வெட்கித் திருமணத்திற்கு ஆவன செய்வான் என எண்ணி இங்ஙனம் மொழிந்தாளாம்.

நீ ஒன்றில் வல்லவன் எனில் அது பொய்த்தலில் மட்டுமே, என்ற பொருளில் 'வல்லை மன்ற பொய்த்தல்' என்றாள். பிழை செய்துவிட்டு அதனை மறைத்தலும், வாக்குறுதி அளித்துவிட்டு அதனை நிறைவேற்றாமையும் இதில் அடங்கும். அவ்வண்ணமே நீ ஒன்றில் வல்லமையில்லாதவன் எனில் அது நன்மை செய்வதில் மட்டுமே என்ற பொருளில், 'வல்லாய் மன்ற நீ அல்லது செயல்' என்றாள். ஈண்டு 'அல்லது' என்றது அல்லாதது, அஃதாவது பொய்த்தல் அல்லாதது. மெய்யாக – நல்லவனாக நடத்தல் என்பது இதன் கருத்தாகும். மொத்தத்தில் 'நீ அறவுணர்வு சிறிதுமற்றவன்' எனப் பழித்தாள் என்க. இன்னநாளில் வரைவேன் எனக் கூறியவன் அதனை நிறைவேற்றாமல் மீண்டும் அதையே சொல்லிக் காலம் தாழ்த்தமையின் அவன் நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும் அறியாதவன் என இடித்துரைத்தாள் என்க.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் விளக்கம் வருமாறு : 'நாடனே நன்றல்லது செய்தல் வல்லுவை அல்லை ஆயினும் பொய் கூறுதலில் நீ தெளிவாக வல்லையாய் உள்ளாயாகலின், யாம் நினக்குக் கூறுவதென்னை?'

இன்னநாளில் வந்து திருமணம் செய்து கொள்வேன் என்று கூறிச்சென்றவன் பின்னர் அதனைச் செய்யாமல் காலம்

Koviloor Digital Library

நீட்டித்தமையால் பொய்த்தலில் நீ வல்லவன் என்று சொன்ன தாகவும், பொய்யாக நடத்தலில் வல்லவர் அறமல்லாதவற்றைச் செய்வது மிகவும் எளிதாயிருக்க நீ அதனையும் செய்ய இயலாதவனாய் உள்ளாய் என்ற பொருளில் 'வல்லாய் மன்ற நீ அல்லது செயலே' என்று சொன்னதாகவும் அவர் கூறுகின்றார். அஃதாவது, வரையாது காலம் தாழ்த்தவன் வாராதிருக்கவில்லை. அவ்வப்போது வந்து தலைவியைக் கூடிச் சென்றான். அதற்குக் காரணம், தலைவி மனம் உடைந்து இறந்து படக்கூடும் என்ற அச்சமே. இதனால், அவன் அறமல்லவற்றைச் செய்ய அஞ்சுபவனும் ஆயினான். இதனால் அவன் அல்லது செய்வதற்குரிய வல்லமையற்றவனும் ஆகிறான். இதுவே துரைசாமிப்பிள்ளை விளக்கத்தின் பொருளாகும். இதில் ஆசிரியரின் கூரிய புலமை வெளிப்படுவது உண்மையேனும் மிகமிக வலிந்ததாகவே தோற்றுகிறது. இத்தகு வலிந்துரைக்குக் காரணமாவது அவர் இச்செய்யுளின் ஈற்றடியிலுள்ள 'அல்லது' என்றதற்கு 'அறமல்லாதது' என்று பொருள் கொண்டமையேயாம். மாறாக, இந்த 'அல்லது' என்ற சொல்லை, இதற்கு முந்திய அடியிலுள்ள 'பொய்த்தல்' என்பதோடு இசைத்து, பொய்த்தல் அல்லாததைச் செய்ய வல்லாயல்லை என்று பொருள் செய்தலே மிகப்பொருந்துவது. பொய்த்தல் அல்லாதது என்றது மெய்யாக நடத்தல் என்க.

பெருமழைப்புலவர் இப்பொருளே கொண்டார். 'அல்லது என்றது பொய்த்தல் அல்லாத நற்செயல் என்பதுபட நின்றது. அஃதாவது வரைந்துகோடல்' என்பது அவர் கூற்று.

பிள்ளையவர்கள் இத்தகைய வலிந்துரை செய்ய முற்பட்டதற்கு அவர் 'தினைமீது படியும் கிளி வருடையை அஞ்சும் நாட!' என்ற பகுதிக்குக் கொள்ளும் உள்ளுறைப் பொருளே காரணம் சொன்னபடி வரையாவிட்டாலும், தன் வாராமை காரணமாகத் தலைவி இறந்துபடக் கூடும் என்ற அச்சத்தினால் அவன் வருதலைத் தவிரவில்லை என்றும், இந்த அச்சத்தையே கிளிகளின் அச்சமாகத் திரித்துச் சொன்னாள் தோழி என்றும் பிள்ளை கூறுகின்றார்.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : வருடை - ஒருவகைமான்; அல்லது - ஈண்டு நன்மை அல்லாதது; மன்ற - ஈரிடத்தும் தெளிவுப் பொருள் தரும் இடைச்சொல்.

இலக்கணக்குறிப்பு : செயல், பொய்த்தல் - தொழிற்பெயர்கள்; வல்லை - முன்னிலை உடன்பாட்டு வினைமுற்று; வல்லாய் - முன்னிலை எதிர்மறை வினைமுற்று.

மேற்கோள் : வருடை மலையில் உறைவது என்பது :

பொதி மூடைப் போரேறி
மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்
வரையாடு வருடைத் தோற்றம் போலக்
கூருகிர் ஞமலிக் கொடுந்தாள் ஏற்றை
ஏழகத் தகரோடு உகளும் முன்றில்
- பட்டின. 137 - 41.

வருடை - வருடை மான் (நச்சினார்க்கினியர்).

உள்ளுறை : 'தமக்கு ஓரிடையூறும் செய்யாத நெடுவரைக் கண்ணே வாழும் வருடையைத் தினை மேய்கின்ற கிள்ளை வாழும் நாடவென்றது, நீ சொன்ன பொழுதே நம் சுற்றத்தார் வரைவிற்கு இடையூறு செய்யார் என்பது அறியாது வெருவுகின்றாய் என்பதாம்' என உள்ளுறைகொண்டார் பழைய உரையாசிரியர். 'தலைவன் களவின்பமே விரும்பி வரைவு நீட்டிப்பானாகவும் அதற்குக் காரணம் தலைவியின் சுற்றத்தாரைத்தான் அஞ்சுதலே என்று தலைவியும் தோழியும் கருதும்படி ஒழுகுகின்றான் ஆதலின், இவ்வச்சம் வருடையைக் கிளியஞ்சுதல் போல்வதொரு பேதைமையே யாகும் என்பாள் வருடை தினைபாய் கிள்ளை வெரூஉம் நாட' என்றாள் என்பார் பெருமழைப்புலவர்.

Koviloor Digital Library

288

நன்றே செய்த உதவி - நன்று தெரிந்து
யாம் எவன் செய்குவம்? நெஞ்சே! - காமர்
மெல் இயல் கொடிச்சி காப்பப்
பல் குரல் ஏனல் பாத்தரும் கிளியே.

கூற்று : 'கிளிகள் புனத்தின்கண் படியா நின்றன' என்று தலைவியைக் காக்க ஏவிய வழி அதனை அறிந்த தலைமகன் உவந்து தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியின் பெற்றோர், தம் தினைப் புனத்தில் கிளிகள் படிந்து மேய்வதனைச் சொல்லி, அதனைக் காக்கத் தலைவியை ஏவினர். இதனை அறிந்த தலைமகன், தான் வந்து அவளைக் கூடி இன்புற நேர்ந்த வாய்ப்பாக எண்ணி உவந்து தன் நெஞ்சுக்குச் சொல்லியது இது.

உரை : என் நெஞ்சமே! அழகிய மென்மையான இயல்பினைக் கொண்ட குறமகள் காவல் புரியும்படி, பலவாகிய கதிர்களையுடைய தினைப்புனத்திலே கிளிகள் படிகின்றன. இக்கிளிகள் எமக்குச் செய்த உதவி மிக நன்றாகும். இதனை நன்கு உணர்ந்து நாம் எவ்வாறு இவற்றுக்கு நன்றி செய்யவல்லோம்?

உரை விளக்கம் : தலைமகளைக் கூடியின்புறுதற்குரிய வாய்ப்பை எதிர்பார்த்திருந்த தலைமகனுக்குத் தலைவி தினைப்புனத்திற்கு வருதல் பெருவாய்ப்பாயிற்று. அவள் புனத்திற்கு வருதற்குக் காரணம், தினை முதிர்ந்ததும், அத்னை உண்ணக் கிளிகள் அங்கு வந்தமையே. கிளிகட்குத் தான் எந்த நன்மையும் செய்தவனல்லன். எனவே, அவை செய்த உதவி செய்யாமற் செய்த உதவி என்பதும், பயன் தூக்காது செய்த உதவி என்பதும், உணர்ந்தவன் தலைவனாதலின் "யாம் எவன் செய்குவ?" என்றான். என்ன உதவி செய்யினும், அது கிளிகள் செய்த உதவிக்கு ஈடாகாது என்பது கருத்தாம்.

Koviloor Digital Library

'உதவி நன்று தெரிந்து' என்பதற்கு, 'செய்யாமற் செய்த இவ்வுதவிக்கு மண்ணுலகமும் விண்ணுலகமும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிதென்று அதன் நன்மையை நாம் நன்குணர்ந்து வைத்தும்' எனக் குறள் பெய்து விளக்கம் தருவார் பெருமழைப்புலவர்.

"அந்நன்றி தானும் பின்னர்த் தெளிந்தவிடத்துச் செய்யாமற் செய்த உதவியாய், படிதற்கு வையகமும் பறத்தற்கு வானகமும் அக்கிளிகட்குக் கொடுப்பினும் ஆற்றாச் சிறப்பிற்றாய் விளங்குதலின், யாம் எவன் செய்குவம் என்றும் கூறினான்" என்பார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

அருஞ்சொற்பொருள் : காமர் – அழகிய; கொடிச்சி – குறமகள்; காப்ப – காக்குமாறு; பலகுரல் – பலவாகிய கதிர்கள்; பாத்தரும் – படியும், பரவுதல் செய்யும்; நன்று – நன்மை.

289

'கொடிச்சி இன் குரல் கிளி செத்து, அடுக்கத்துப்
பைங் குரல் ஏனற் படர்தரும் கிளி' எனக்
காவலும் கடியுநர் போல்வர் –
மால் வரை நாட! - வரைந்தனை கொண்மோ!.

கூற்று : இஃது இற்செறித்த பின்னர்த் தோழி வரைவுகடாவுழி முதிர்ந்த தினைப்புனம் இவள் காத்தொழிந்தால் வரைவல் என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவியைத் தமர் இல்லக் காவலில் வைத்தனர். அப்பொழுது தோழி தலைவனைச் சந்தித்து விரைவில் தலைவியை மணக்குமாறு வற்புறுத்தினாள். தலைவி தினைப் புனக் காவல் நீங்கிய பிறகு வரைவதாகக் கூறினான் தலைவன். அதற்கு விடையாகத் தோழி கூறியது இது.

Koviloor Digital Library

உரை : குறமகளாம் தலைவியின் இனிய குரலைக் கிளிகள் தம்மையொத்த கிளியின் ஓசையெனக் கருதி, மலையடுக்கத்திலே விளைந்த பசிய கதிர்களை உடைய தினைப்புனத்திற்கு வந்து சேரும் என அஞ்சிய எம் உறவினர், இவளைத் தினைப்புனக் காவலில் இருந்தும் நீக்குவர் போலும்'. எனவே நீ இவளை விரைவில் வரைந்து கொள்வாயாக.

உரை விளக்கம் : தினைப் புனக் காவலுக்குத் தலைவி இனி வாராள் என்பதற்கு ஏதுவாக அவளுடைய இனிய குரல் அமைந்தது. கிளியை ஓப்புதற்கு இடையிடையே அவள் எழுப்பும் விளியும் அவற்றை ஓப்புதற்கு மாறாக வருவிக்கக் காரணமாயினமையின், தமர் இனி அவளைப் புனங்காக்க அனுப்பாரோ என்னும் ஐயம் நிகழ்கிறது என்பாளாய், 'காவலும் கடியுநர் போல்வர்' என ஐய வாய்பாட்டாற் கூறினாள். தலைவியைக் கிளிமொழியாள் எனப் பாராட்டினாளாயிற்று. 'தலைவியை நீ வரைந்து கொள்வதனினும் வேறு வழியில்லை' என்பாளாய் இங்ஙனம் கூறினாள்.

அருஞ்சொற்பொருள் : செத்து – கருதி; கடியுநர் – விலக்குவர்; பைங்குரல் – பசிய கதிர்; ஏனல் – தினை.

இலக்கணக்குறிப்பு : கிளி – கிளியின் குரலுக்கு ஆகுபெயர்; காவலும் – உம்மை சிறப்பு, எச்ச வும்மையுமாம்; வரைந்தனை – முற்றெச்சம்; கொண்ம் – முன்னிலை வினைமுற்று; ஏ – ஈற்றசை.

290

அறம் புரி செங் கோல் மன்னனின் தாம் நனி
சிறந்தன போலும், கிள்ளை – பிறங்கிய
பூக் கமழ் கூந்தற் கொடிச்சி
நோக்கவும் படும்; அவள் ஒப்பவும் படுமே.

Koviloor Digital Library

கூற்று : காவல் மிகுதியான் இரவுக் குறி மறுக்கப்பட்டு நீங்கிய தலைமகன் வந்துழி, அவன் கேட்டு வெறுப்புத் தீர்தற்பொருட்டால், தினைப்புனம் காவல் தொடங்கா நின்றாள் என்பது தோன்ற, தோழி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாலுணர்ந்து தமர் அவளை மனையின்கண் செறித்தனர். அதனால் தோழி இரவுக் குறி மறுத்தாளாதலால். தலைவன் வெறுப்புற்றான். அவன் அவ்வெறுப்புத் தீர்தற் பொருட்டுத் தோழி, மீண்டும் தலைவி தினைப்புனக் காவற்கு வருகிறாள் எனத் தலைவன் கேட்பக் கூறியது.

உரை : இக்கிளிகள் விளங்கிய பூக்களால் மணம் கமழும் கூந்தலையுடைய கொடிச்சியாகிய என் தோழியால் உவந்து நோக்கப்படுதலேயன்றி விரைந்து கடியவும்படுகின்றன. இக்காரணத்தால் இவை அறநெறியை விரும்பி மேற்கொள்ளும் செங்கோல் அரசனைப் போல மிகவுயர்ந்தனவாயின.

உரை விளக்கம் : ஈண்டு 'அறம்புரி செங்கோல் மன்னன் எனச் சுட்டப்பட்டவன் தலைவனாவான். தலைவன் மன்னன் மகன் என்று அறிந்தவளாதலின் தோழி இங்ஙனம் கூறினாள். இது முன்னிலைப் புற மொழியாம். அறம் புரியும் மன்னன் குடிமக்கள் நல்லவரான வழி அவர்கட்குப் பாராட்டும் நன்மையும் செய்வான். அவர்பாற் குற்றம் காண்புழித் தண்டித்தலையும் செய்வான். இங்ஙனமே தலைவி கிள்ளையைத் தன் வீட்டில் வளர்க்குங்கால் அன்பொடு நோக்கிப் பாலும் பழமும் ஊட்டுவாள். அதே இனக் கிளிகள் தன் புனத்தை அழிக்கும்பொழுது அவற்றை வெருட்டவும் செய்கின்றாள். இதனால் அவள் செங்கோல் அரசனுக்கு ஒப்பானவளாம்.

இனி, எம்பெருமான் எம்பெருமாட்டியால் அளிசெய்யவும் படுகின்றான் ஊடிக் கடியவும் படுகின்றான். அங்ஙனமே கிளிகளும் அவளால் நாளை முதலாக அளிசெய்யவும் கடியவும் படும் என்றவாறு. எனவே நாளைமுதல் எம்பெருமாட்டி கிளி கடிதற்குத்

Koviloor Digital Library

தினைப்புனத்திற்கு வருகுவள் என அவன் மகிழுமாறு உணர்த்தியபடியாம் என்பார் பெருமழைப் புலவர்.

மன்னன் இப்பொழுது பெரும்பாலும் கடியவே படுகிறான். கிள்ளைகளோ நோக்கவும்படும் ஆதலின் மன்னனிற் கிள்ளை நனி சிறந்தனவாயின என்றும் இவர் கூறுவார். ஈண்டு 'இன்' உருபு உறழ்ச்சிப் பொருளதாயிற்று.

இனி, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை மன்னனை விடக் கிளிகள் நனி சிறந்தன எனக் கொள்ளாது, நனி சிறந்த தன்மையைத் தலைவிமேலேற்றி, 'கொடிச்சியாகிய தலைமகள் மிக உயர்ந்தாள் என்றார். இவர் 'தாம் நனி சிறந்தன' என்ற பாடத்தைத் தவிர்த்துத் 'தான் நனி சிறந்தனள்' என்ற பாடம் கொண்டார். ஆயின், உ.வே.சாமிநாதையர் பதிப்பில் வேறுபாடம் காணப்படவில்லை என்பது நோக்கற்பாலதாரும். பழையவுரையாசிரியரும், பெருமழைப் புலவரும் ஈழத்து உரையாசிரியரும் தாம் நனி சிறந்தனபோலும் கிள்ளை' என்ற பாடமே கொண்டனர்.

அருஞ்சொற்பொருள் : மன்னன் – தலைவன்; நனி – மிக; கிள்ளை – கிளிகள்; பிறங்குதல் – ஒளிர்தல்; கொடிச்சி – குறமகள்; ஒப்பப்படுதல் – கடியப்படல்.

இலக்கணக்குறிப்பு : நனி – உரிச்சொல்; பூக்கமழ் – பூவால் மணம் கமழும் – மூன்றாம் வேற்றுமைத் தொகை; நோக்கவும், ஒப்பவும் – உம்மை எண்ணற் பொருட்டு; மன்னனின் – இன் ஒப்புப் பொருள்; உறழ்ச்சிப் பொருளுமாம்.

கிள்ளைப் பத்து முற்றிற்று

Koviloor Digital Library

30. மஞ்ஞைப் பத்து

குறிஞ்சித்திணைக் கருப்பொருள்களுள் ஒன்றான மயில் பாடல்தொறும் இடம் பெறுதலின், இப்பத்து மஞ்ஞைப் பத்தாயிற்று.

291

மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத்ததுவே - பணைத்தோள்,
ஆய் தழை நுடங்கும் அல்குல்,
காதலி உறையும் நனி நல் ஊரே.

கூற்று : வரைவிடை வைத்துப் பிரிந்து மீள்கின்ற தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில், தன் திருமணத்திற்கு வேண்டும் பொருளீட்டுதற் பொருட்டுப் பிரிந்து சென்ற தலைமகன், பொருளீட்டி மீண்டு வருகையில், தன் காதலியை எண்ணித் தன்னுள்ளே சொல்லியது இது.

உரை : மூங்கில் போன்ற தோள்களையும், அழகிய தழைகளால் தொடுத்தமைத்த தழையுடை கிடந்து அசையும் அல்குலையும் உடைய என் காதலி வாழ்கின்ற மிக்க நலத்தாற் சிறந்த ஊர், மயில்கள் மகிழ்ந்து ஆட, அவ்வாட்டத்திற்கு ஏற்பப் பேராந்தைகள் மாறிமாறி அலறுதற்கு இடனான சிறிய குன்றுகளைக் கொண்ட பக்கமலைகளிடையே அமைந்ததாகும்.

Koviloor Digital Library

உரை விளக்கம் : தன் காதலியின் தோள்களைத் தான் அணைத்து மகிழ்ந்ததை எண்ணியும், தான் கொணர்ந்த தழையுடையை அவள் அல்குற்பகுதி அழகுபெற அவள் அணிந்து மகிழ்ந்தமையை நினைவு கூர்ந்தும், 'பணைத்தோள் ஆய்தழை நுடங்கும்அல்குல் காதலி' என்று குறித்தான். தன் காதலி வாழும் ஊராதலின், அவள்மீது தனக்குள்ள பேரன்பை வெளிப்படுத்தும் முகமாக 'நனி நல்லூர்' என்று அதனைச் சிறப்பித்தான்.

அழகிய விறலியர் போல் மயில்கள் தம் தோகை விரித்து ஆடுவதற்கு ஏற்பக் குடிஞை தாள அறுதியோடு முழக்கப்படும் சிறுபறை போல முழங்கிற்று என்பானாய், 'மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்' என்றான். மகுளியென்னும் சிறுபறையின் ஒலியும் குடிஞையின் குழறலும் ஒலியால் ஒத்திருத்தலை, 'உருள்துடி மகுளியின் பொருள் தெரிந்து இசைக்கும் கடுங்குரற் குடிஞை' (அகம். 69) என்பதால் அறிக. இன்னும், 'விரலூன்று படுகண் ஆகுளி கடுப்பக், குடிஞை இரட்டும் நெடுமலை அடுக்கத்து (மலைபடு. 140-1) என்பதும் காண்க.

தேடிய பொருளோடு அவளூர்க்கு மீண்டு தான் அவளை மணந்து இன்புறப் போகும் நினைவு தன் உள்ளத்தே தோன்றியமையால் இங்ஙனம் தன்னுள்ளே கூறி மகிழ்ந்தானாம்.

அருஞ்சொற்பொருள் : குடிஞை - பேராந்தை; ஆல - ஆட; இரட்டல் - மாறி மாறி ஒலித்தல்; துறுகல் - சிறுகுன்று; அடுக்கம் - பக்கமலை; நுடங்கும் - அசையும்; பணைத்தோள் - பருத்த தோள்; மூங்கில் போலும் தோள்.

இலக்கணக்குறிப்பு : நனி - உரிச்சொல்.

மேற்கோள் : மயிலை விறலியாகக் கூறல் :

"பாடு இமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடு மயில் முன்னதாகக் கோடியர்
விழவு கொள் மூதூர் விறலி பின்றை
முழவன் போல அகப்படத் தழீஇ"

- அகம். 352.

Koviloor Digital Library

பறவையின் ஒலியைத் தாளக் கருவியாகக் கூறல் :

மேல் துறைக் கொளீஇய கழாலின் கீழ்த்துறை
உகுவார் அருந்தப் பகுவாய் யாமை
கம்புள் இயவன் ஆக விசிபிணித்
தெண்கண் கிணையின் பிறழும் ஊரன்
- அகம். 356.

குறிப்புப் பொருள் : மயில்கள் ஆலக்குடிஞை இரட்டும் அடுக்கம் என்றது, தலைவன் இனி நிகழ்த்த விருக்கும் திருமணத்திற்குத் தலைவியின் சுற்றத்தார் உவந்து உறுதுணையாகிச் சிறப்பிப்பார் என்னும் உள்ளுறை கொள்வார் பெருமழைப்புலவர்.

இனி, பிரிவாற்றாது வருந்துகின்ற தலைவியைத் தோழி ஆற்றுவித்திருக்கும் என்பதனை உள்ளுறைப் பொருளாகக் கொள்வார் இலங்கை உரையாசிரியர்.

292

மயில்கள் ஆல, பெருந் தேன் இமிர,
தண் மழை தழீஇய மா மலை நாட!
நின்னினும் சிறந்தனள், எமக்கே - நீ நயந்து
நன் மனை அருங்கடி அயர,
எம் நலம் சிறப்ப, யாம் இனிப் பெற்றோளே.

கூற்று : பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவை முடித்தவளை இல்லத்துக் கொண்டு புகுந்துழி, தலைமகள் உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தன் முதல் மனைவி இருக்கும்பொழுதே தன் தகுதிக்கு ஏற்பத் தன் குலத்தாள் ஒருத்தியை இரண்டாம் மனைவியாக ஏற்று, அவளைத் தன் இல்லத்திற்கு

Koviloor Digital Library

அழைத்து வந்தபோது, முதல் மனைவி அவளை மகிழ்ந்து ஏற்றுக் கூறியது இது.

உரை : மயில்கள் மகிழ்ந்து ஆடவும், பெரிய தேனீக்கள் ஆரவாரிக்கவும் குளிர்ந்த மழைமுகில்கள் முகட்டைத் தழுவிக் கிடக்கும் பெரிய மலையை உடைய நாட்டின் தலைவனே! நீ விரும்பி நம் நல்ல மனையின்கண் கொணர்ந்து வதுவை செய்து கொண்டமையின், அம்மணத்தால் எம் நலமும் சிறத்தலான், இப்பொழுது யாம் பெற்ற இவள் எமக்கு நின்னினும் மேலானவளாவாள்.

உரை விளக்கம் : மயில்கள் மழையினால் இன்புறுவன வாதலானும், மரஞ்செடிகொடிகள் தழைத்துப் பூத்தலான் தம் உணவாகிய தேன் மிகுதியும் பெருகுதலான் தேனீக்கள் மகிழ்வது இயல்பாதலானும், இவ்வுயிர்கள் மகிழுமாறு மழைமேகம் மலையைச் சூழ்ந்திருந்தது என்பாள், 'மயில்கள் ஆலப் பெருந்தேன் இமிரத் தண்மழை தலைஇய மாமலை' என்றாள். குடிவளர்ச்சிக்குரிய மகப்பேறு காரணமாகவே தலைவன் இரண்டாவது மனைவியைக் கொண்டானாதலின், 'எம் நலம் சிறப்ப யாம் இனிப்பெற்றோள்' என்றாள். அவள் பெறப் போகும் மகவும் தன் மகவே என்பது தலைவியின் கருத்தாகும். கணவன் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாகக் கொண்டவள் தலைவியாதலின் 'நீ நயந்து அருங்கடி அயர ...... இனிப் பெற்றோள்' என்றாள். முறைப்படி மணந்து கொண்டான் என்பதும், தன் மனைவியின் முழு ஏற்புடன் வதுவை செய்தான் என்பதும் தலைவன் தன் மனையிலேயே மணவிழாவை நிகழ்த்தியமையால் பெறப்பட்டன. 'நின்னை யான் பெரிதும் மதித்தொழுகுபவள்; நீ புதுவதாக மணந்த இவளை நின்னினும் மேலாக மதித்தொழுகுவேன்' என்ற வாக்குறுதியால், புதியவளோடு கணவன் நிகழ்த்தும் வாழ்க்கைக்கு யாதோர் இடையூறும் செய்யமாட்டாள் என்னும் குறிப்புத் தோன்றுவது காண்க.

இச்செய்யுளால், பலமனைவியரை ஓராடவன் மணப்பது தொன்மையான மரபு என்பது விளங்குகின்றது.

Koviloor Digital Library

தொல்காப்பியரும் இவ்வழக்கத்தினைப் 'பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவைத் தொன்முறை மனைவி எதிர்ப்பாடு' (தொல். கற்பு. 31) என்று குறிப்பிட்டுள்ளமை காண்க. சங்க இலக்கியத்துள் இஃதொரு செய்யுள் மட்டுமே இதற்குச் சான்றாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனி, இத்திருமணம் தலைவன் இல்லில் நிகழ்ந்தது என்று கூற இடமிருப்பினும், இதற்கு மாறாகக் கருதுவாரும் உளர். 'நன்மனை அருங்கடி அயர' என்பதில் உள்ள செயவென் எச்சத்திற்கு அயர்தற்பொருட்டு என்று பொருள் கொள்ளாது, 'இவள் தந்தையினது நல்ல இல்லத்திற்கண்ணே அரிய பின்முறை வதுவையைச் செய்தலானே' என்று உரைவகுத்தார் பெருமழைப் புலவர். இவ்விரு முறைகளும் இன்றும் தமிழரிடையே பின்பற்றப்படுவது எண்ணத் தக்கதாகும்.

'நின்னினும் சிறந்தனள் எமக்கே' என்பதற்கு, "மகளிர்க்குக் கணவனிற் சிறந்த கேளிர் இல்லையென்பதுபற்றி நீ எமக்குச் சிறந்தனை. நின் கருத்தினை இவள் மகப்பெற்று முற்றுவிக்கு மாதலின் இவள் நின்னினும் எமக்குச் சிறந்தனள் என்றாள். எமது குறையை இவள் நிறைவேற்றுதலின் எமக்கு இவள் நின்னினும் சிறந்தனள் என்பது கருத்து. அவள்குறை - மகவின்மை என்க" என்று பெருமழைப்புலவர் தரும் விளக்கம் அழகிதாம்.

அருஞ்சொற்பொருள் : ஆல - ஆட; ஆரவாரித்தலுமாம்; பெருந்தேன் - பெரிய தேனீக்கள்; இமிர - முரல; தழீஇய - தழுவிய; கடி - திருமணம்; அயர - நிகழ்த்த, கொண்டாட.

இலக்கணக்குறிப்பு : ஆல, இமிர - ஆலவும் இமிரவும் ... உம்மை தொக்கது; மாமலை - மா, உரிச்சொல்; தழீஇய - பெயரெச்சம்; அயர - செயவென் எச்சம் பொருட்டு என்னும் பொருள்பட்டது; சிறப்ப - காரணப்பொருட்டாகிய செயவென்னெச்சம்.

Koviloor Digital Library

மேற்கோள் : தேன் என்னும் சொல் தேன் வண்டைக் குறித்தல்:
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
– குறுந். 3.

மாரிக்காலத்து மயில்கள் ஆலுதல் :
'மடவ மன்ற மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின'
– குறுந். 251.

குறிப்புப் பொருள் : மழைப்பருவம் வேண்டிய மயிலினம் ஆலத் தேன்கள் இமிர மழை பெய்யும் நாடன் என்றது, யாங்கள் கருதியிருக்கின்ற பெரும்பொருளாகிய வதுவைச் சடங்கை யாமுவப்ப முடித்தனன் என்ற குறிப்பிற்று. மயில் – தலைவி; தேன் – பின்முறை வதுவையாள்; மழை – தலைவன் செய்த அருள். (ஈழத்து உரை).

293

சிலம்பு கமழ் காந்தள் நறுங் குலை அன்ன
நலம் பெறு கையின் என் கண் புதைத்தோயே!
பாயல் இன் துணை ஆகிய பணைத் தோள்
தோகை மாட்சிய மடந்தை!
நீ அலது உளரோ – என் நெஞ்சு அமர்ந்தோரே?

கூற்று : பகற்குறியிடம் புக்க தலைமகன், தலைவி பின்னாக மறைய வந்து கண் புதைத்துழி, சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவன் பகற்பொழுதில் தலைவியைக் கண்டு அளவளாவுதற் பொருட்டு முன்பே தீர்மானித்த இடத்திற்கு வந்த பொழுது, அவனறியாது, அவன் பின்னே வந்து தலைவி

Koviloor Digital Library

அவன் கண்களைத் தன் கையால் விளையாட்டு வகையாகப் பொத்தினாள். அப்போது தலைவன் மகிழ்ந்து உரைத்தது இது.

உரை : மலைப்பக்கம் முழுவதும் இனிய மணம் கமழச் செய்யும் காந்தளின் நறிய பூங்கொத்தினைப் போன்று அழகாற் சிறந்த நின் கைகளினால் என் கண்களைப் பொத்தியவளே! என் நெஞ்சகத்தே என்றென்றும் நீங்காது அமர்ந்திருப்போர், படுக்கையின் கண்ணே இனிய துணையாகிய மூங்கில் போன்ற மென்மை மிக்க தோள்களை உடைய, மயிலின் சாயலைக் கொண்ட நின்னையன்றி, என் கண்களைப் பொத்தி விளையாடும் உரிமை பெற்றார் பிறர் யார் உளர்?

உரை விளக்கம் : மலைப்பகுதிக்கு அழகும் நறுமணமும் சேர்ப்பது காந்தளாதலின் 'சிலம்பு கமழ் காந்தள்' என்றான். அம்மலர் மலையெங்கும் நீக்கமற நிறைந்திருப்பது என்பது கருத்து. தலைவியின் சிவந்த கைக்கு உவமை கூறப்பட்டதாதலின், இது வெண்காந்தளினும் வேறான செங்காந்தள் என்க. மகளிர் கைவிரல்கட்குக் காந்தளை உவமை கூறுவதனை, 'காந்தள் மெல்விரல்' (குறுந். 161) என்னும் பகுதியால் அறிக. தலைவன் பண்டு பலகாலும் தொட்டறிந்ததாதலின், 'காந்தள் நறுங்குலையன்ன நலம்பெறு கை' எனப்பாராட்டினான். வேறு யார் கைக்கும் இல்லாத சிறப்பு அவள் கைக்குரியது ஆதலின் 'நின்னைக் காணாத போதும் கைகளின் தொடுவுணர்ச்சியாலேயே நின் கைகளென்பதனை யான் அறியேனோ?' என்று வினவினான் என்க. என் கண்களைப் புதைத்து விளையாடும் உரிமை நினக்கன்றிப் பிறர் யார்க்குரியது? என்று உரிமைப்படக் கூறினான் என்க. 'பாயல் இன்துணையாகிய பணைத்தோள்' என்றது, பல காலம் அவற்றை அணைத்து மகிழ்ந்தமையைச் சுட்டிற்றாம். தலைவியின் மயில் தோகைபோலும் கூந்தற் பாயலில் படுத்து இன்பம் துய்த்தமை தோன்ற 'தோகை மாட்சிய மடந்தை' என்றான். 'நீயலது உளரோ?' என்றான், பிறர் யாரும் இலர் என்பது பட.

Koviloor Digital Library

அருஞ்சொற்பொருள் : சிலம்பு - மலை; நலம் - மென்மையும் செந்நிறமும்; புதைத்தல் - மூடுதல், கவித்தல்; பாயல் - படுக்கை; பணை - பருத்த; மூங்கில் போன்றதுமாம்; தோகை - மயில்.

இலக்கணக்குறிப்பு : அன்ன - உவம உருபு; கையின் - 'இன்' கையினால் என மூன்றன் பொருள் தந்த இடைச்சொல்; தோகை - ஆகுபெயர்; மடந்தை - விளி; உளரோ - ஓகாரம் எதிர் மறை.

மேற்கோள் : காந்தள் மலைக் குரித்தென்பது :

நறுந்தண் சிலம்பின் நாறுகுலைக் காந்தள்

- ஐங். 226.

மலைச் செங்காந்தள் - நற். 173.

காதலர் கண்புதைத்தல் :

"நின்றோள் எய்திக் கைகவியாச் சென்று
கண்புதையாக் குறுகிப் பிடிக்கை அன்ன
பின்னகம் தீண்டித் தொடிக்கை தைவரத்
தோய்ந்தன்று கொல்லோ"

- அகம். 9.

காதலன் காதலியின் கூந்தற் பாயலில் துயிலுதல்:

"பயிலிரும் கதுப்பின் பாயலும் உள்ளார்

- குறுந். 254.

Koviloor Digital Library

294

எரி மருள் வேங்கை இருந்த தோகை
இழை அணி மடந்தையின் தோன்றும் நாட! -
இனிது செய்தனையால்; நுந்தை வாழியர்! -
நல் மனை வதுவை அயர, இவள்
பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே!

கூற்று : வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : தலைவன் தலைவியை மணம் புரியும் நாளில் அவன் தன் காதலியின் கூந்தலில் மலர்சூட்டும் சடங்கினைச் செய்தது கண்டு உவந்து பாராட்டிக் கூறியது இது.

உரை : சுடர் விட்டெரியும் தீயைப் போன்று ஒளிவிடும் செந்நிற மலர்களையுடைய வேங்கை மரத்தின் மீது அமர்ந்த மயில், பொன்னணிகள் பூண்ட மடந்தையைப் போலத் தோற்றமளிக்கும் மலை நாடனே! என் தோழியின் நல்ல மனையின் கண்ணே (பண்டு களவுக்காலத்தில் பிறர் அறியாவண்ணம் இவள் கூந்தலில் மலர் அணிந்து மகிழ்ந்த நீயே) இன்று யானும் பிறரும் கண்டு மகிழும் வண்ணம் இவ்வதுவைச் சடங்கிலும் இவளுடைய பின்னப்பட்ட கரிய கூந்தலில் மலர் அணிந்து இனிய செயலொன்றனைச் செய்தனை. (இத்தகு இனிய செயலைச் செய்த மகனை ஈன்ற) நின் தந்தையார் நீடு வாழ்க!

உரை விளக்கம் : வேங்கைப்பூ நெருப்புப் போலும் நிறமும் ஒளியும் உடைமை பற்றி 'எரிமருள் வேங்கை' என வேங்கை மரத்தைக் குறிப்பிட்டாள். வேங்கை மலரை எரியோடு உவமித்தல் சங்க இலக்கியத்தில் பெருவழக்காகும்.

பெண்ணை மயிலோடு உவமித்தலும் பெருவழக்காகும். தம் அழகிய சாயலால் பெண் போன்றிருக்கும் மயில்கள் ஒளிமிக்க

Koviloor Digital Library

வேங்கை மலர்கட்கு இடையே அமர்ந்திருப்பது செவ்விய அணிகளை அணிந்து அழகாகத் தோன்றும் மகளிர்போன்று காணப்பட்டமையின் 'இழையணி மகளிரின் தோன்றும்' என்றாள். மலர்கள் மகளிர் அணிந்த அணிகட்கு உவமையாம்.

'இழையணி மகளிர்' – 'கல்யாணக் கோலம் அமைந்த மகளிர்' என்பார் இலங்கை உரையாசிரியர்.

களவுக் காலத்தே இவட்கு மலரணிந்து இவட்கு நீயே கணவன் என்பதனை உறுதி செய்தனையெனினும், இக்களவு கற்பாக எவ்வகை இடையூறுமின்றி மாறுமோ மாறாதோ என்று பலகாலும் மனம் சுழன்ற எமக்குப் பெருமகிழ்ச்சியேற்படுமாறு வதுவை நாளான இன்றும் இவட்கு மலர்சூட்டும் பெருமகனாய் நீயே அமைந்தனை என்று பாராட்டுவாளாய், 'இனிது செய்தனையால்' என்றாள். பண்டு மலர் சூட்டிய பொழுதே இவட்குக் கொழுநன் நீயே என்பது உறுதிப்பட்டதாயினும், இன்று யாவரும் அறிய மலர் சூட்டி இனிது செய்தனை என்பது கருத்து.

இச்செயல் செய்து எம்மை இன்புறுத்திய நீ, இவளோடு நெடிது வாழ்வாயாக என்று வாழ்த்தியதோடமையாது, எம் தலைவிக்கு ஏற்ற மணவாளனாகிய நின்னை ஈன்ற தந்தையும் வாழ்க என்பாள், 'நுந்தை வாழியர்' என்றாள். நீ இவளை மணந்து கொள்ள ஒப்புதலளித்ததற்காக நுந்தையும் வாழ்க என்றாளுமாம்.

இனி, 'எந்தை' எனப்பாடங்கொண்டு 'எந்தையே! நீ நெடிது வாழ்க!' என்று உரைத்தார் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை. தலைவனை 'எந்தை' எனக் கூறலும் வழக்காதலின் இப்பொருள் சிறப்பானதே.

'நன்மனை வதுவை அயர' என்பதற்கு, நல்ல மனைக்கண் வதுவை அயரும் இப்பொழுது மலரணிந்தாய் என்றும், இப்பொழுது வதுவை அயரப்பண்டே மலரணிந்தனை என்றும் இருவகையாகவும் பொருள் கொள்ள அமையும்.

Koviloor Digital Library

திருமணச்சடங்கில், மணமகன் மணமகள் கூந்தலில் மலரணிதல் இன்றும் வழக்காக உண்மை காண்க. இதனால்தான், 'கூந்தற் கிழவன்' என்று காதலனைக் குறித்தனர் சான்றோர் என்க. பெண்ணின் கூந்தற்கு உரிமையுடையான் எவனோ அவனே அவள் கூந்தலில் மலரணிய உரிமையுடையான் என்பது தமிழ் நாகரிகமாம்.

இனிச் சிலம்பணிதலும், மலரிட்டு முடியாமையும் கன்னிப்பெண்கட்கு இயல்பு என்றும், சிலம்புகழித்தலும், கூந்தலில் மலர் சூடுதலும் திருமணமானதற்கு அடையாளம் என்றும் கூறுவார் அறிஞர் வ.சு.ப. மாணிக்கம். (தமிழ்க் காதல், பக். 157 – 67) தம் கருத்துக்கு வலிமை சேர்க்க இச்செய்யுளையும் சான்றாகக் காட்டினார் இவ்வறிஞர். ஆயின், சங்கச் செய்யுட்கள் இதற்கு ஆதரவாக இல்லை.

தமிழ் நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாகக் கபிலர் பெருமான் பாடிய குறிஞ்சிப்பாட்டில், கன்னிப் பெண்கள் 99 மலர்களைப் பறித்துப் பாறையிற் குவித்தமையைக் காட்டினார். வெறும் பொழுதுபோக்காக இதனைக் கொள்ளல் பொருந்தாது. மகளிர் பூப்பறித்துச் சூடிக்கொண்டதற்குப் பல சான்றுகளைச் சங்க இலக்கியத்திற் காணலாம்.

தினைப்புனங்காக்கும் கன்னிப்பெண் 'பூக்கெழு தொடலை நுடங்க எழுந்தெழுந்து கிள்ளைத் தெள்விளி இடை இடை பயிற்றி ஆங்காங்கு ஒழுகாமையைக் குறை கூறுகிறாள் தோழி. (அகம். 28).

– பொன்னென
மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப்
பொலிந்த ஆயமொடு காண்டக இயலி

– அகம். 188.

Koviloor Digital Library

வண்டு வழிப்படரத் தண்மலர் வேய்ந்து
வில் வகுப்புற்ற நல்வாங்கு குடைச்சூல்
அம் சிலம்பு ஒடுக்கி அஞ்சினள் வந்து
துஞ்சூர் யாமத்து முயங்கினள்

– *அகம். 198.*

சிறு தினைப் படுகிளி எம்மொடு ஓப்பி,
மல்லல் அறைய மலிர்சுனைக் குவளைத்
தேம்பாய் ஒண்பூ நறும் பல அடைச்சிய
கூந்தல் மெல்லணைத் துஞ்சிப் பொழுதுபடக்
காவலர்க் கரந்து

– *அகம். 308.*

எனக் கன்னிப் பெண்கள் தம் கூந்தலில் பூச்சூடியதற்குப் பல சான்றுகள் உள்ளமை கண்டுகொள்க.

அருஞ்சொற்பொருள் : இழை – அணிகலன்கள்; நுந்தை – உன் தந்தை; வதுவை – திருமண நிகழ்ச்சி; பின் – பின்னப்பட்ட; இருங்கூந்தல் – கருங்கூந்தல்.

இலக்கணக்குறிப்பு : மருள் – உவம உருபு; தோகை – தோகையை உடைய மயிலுக்கு ஆகியமையின் ஆகுபெயர்; மடந்தையின் – இன் ஐந்தன் உருபு, ஒப்புப்பொருள் தந்தது; செய்தனையால் – ஆல் அசைநிலை; வாழியர் – வியங்கோள் வினைமுற்று.

மேற்கோள் : வேங்கைப்பூவுக்கு எரி உவமையாதல் :

எரி அகைந்தன்ன வீததை இணர
வேங்கையம் படு சினை

– *நற். 379.*

‘அழற்சினை வேங்கை’ – *அகம். 398.*

Koviloor Digital Library

வேங்கை மரத்தில் அமர்ந்த மயில் மகளிர்போல் தோன்றுதல் :
'வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக்கொய் மகளிரின் தோன்றும் நாடன்
- குறுந். 26.

களவில் தலைவன் தலைவிக்கு மலரணிவித்தல்:
'கூந்தல் வேய்ந்த விரவு மலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்தளாகி'
- குறுந். 312.
(யான் தனது கூந்தலில் அணிந்த ... மலர் உதிர்த்து என்னும் ஐயர் உரையை நோக்குக.)

தலைவன் செயலை வாழ்த்தலும் 'எந்தை' எனப் பாராட்டலும் :
இனிது செய்தனையால் எந்தை வாழியர் -
பனிவார் கண்ணள் பலபுலந்து உறையும்
ஆய்தொடி அரிவை கூந்தல்
போது குரல் அணிய வேந்தந்தோயே!
- அகம். 104.

உள்ளுறை : *மலர்ந்த வேங்கைக் கண் இருந்த தோகை இழையணி மடந்தையின் தோன்றும் நாட என்றது, நீ வரையாது ஒழுகுகின்ற ஞான்றும் நின் தமர் பொன்னணிந்த இன்று போலச் சிறப்ப ஒழுகினாய் என்பதாம். (பழையவுரை) சிறப்ப என்பதற்கு* **இவள் சிறப்ப** *எனச் சிறிது விளக்கிக் கூறுவார் ஈழத்து உரையாளர். வேங்கையைத் தலைவனுக்கும் தோகையை அவன் அணி பெற்ற தலைவிக்கும் உவமையாக்கி, இழையணி மகளிரிற்றோன்றும் என்றது, அன்றே நின்னால் வரைந்து கொள்ளப்பட்டவள் போன்றே என் விழிக்கு விருந்தாகி இவள் பொலிவு பெற்றிருந்தனள் என்று விளக்குகிறார் பெருமழைப்புலவர்.*

Koviloor Digital Library

இனி, இலை பூ முதலியவற்றால் பொதுளப்பட்ட வேங்கை வதுவையஞ் சாலையாகவும், பூ ஓமாக்கினியாகவும், தோகை கலியாணக் கோலம் அமைந்த தலைவியாகவும் கொள்க என்ற ஈழத்து உரையாளரின் விளக்கம் நயமுடையது. எனினும், சங்க நாளில் தமிழ் மக்கள் திருமணத்தில் இல்லாத ஓமாக்கினையக் குறிப்பிடுவது பொருத்தமா என ஆய்ந்து காண்க.

295

வருவதுகொல்லோ தானே - வாராது
அவண் உறை மேவலின், அமைவதுகொல்லோ -
புனவர் கொள்ளியின் புகல் வரும் மஞ்ஞை,
இருவி இருந்த குருவி வருந்துற,
பந்து ஆடு மகளிரின் படர்தரும்
குன்று கெழு நாடனொடு சென்ற என் நெஞ்சே?

கூற்று : தலைமகன் வரைவிடை வைத்துப் பிரிந்து நீட்டித்துழி, உடன் சென்ற நெஞ்சின்னைத் தலைமகள் நினைந்து கூறியது.

கூற்று விளக்கம் : தலைவன் திருமணத்திற்கு வேண்டுவன செய்தற் பொருட்டுப் பிரிந்து தன்னூர்க்குச் சென்றான். அப்பொழுது அவனுடன் சென்ற தன் நெஞ்சினைப் பற்றித் தலைவி ஐயுற்றுக் கூறியது இது.

உரை : வேடர்கள் காட்டின்கண் கொளுத்திய கொள்ளியை அஞ்சித் தம் புகலிடங்களான கூடுகளுக்குச் செல்லும் மயில்கள், கதிர்கள் கொய்யப்பெற்ற அரிதாளில் தங்கியிருந்த குருவிகள் எழுவதும் விழுவதுமாய் வருந்திடத் தம் சிறகை விரித்துப் பந்தாடு மகளிர்போல அசைந்து ஆடிச் செல்லுதற்கு இடமான மலைகள் சூழ்ந்த நாடனொடு சென்றுவிட்ட என் உள்ளம் மீண்டும் என்னிடம் வருமா அன்றி வாராது அவன் வாழும் இடத்திலேயே தானும்

Koviloor Digital Library

இருத்தலை விரும்பி அவ்விடத்திலேயே தங்கிவிடுமா என்பதறியேன். (அங்ஙனம் தங்கினால் யான் என்னாகுவேன்?).

உரை விளக்கம் : புனவராவார் காட்டின்கண் வாழும் இயல்பினரான குறவராவர். அவர்கள் புனத்தை அழித்துத் தீயிட்டுக் கொளுத்திப் புனங்களைத் தினை முதலியன விளைக்கத் தகுதியுடையனவாக்குவது வழக்கம். அத்தகைய கொள்ளிகளை அஞ்சிய மயில்கள் தம் கூடுகளை நோக்கி விரைந்தனவாதலின், 'புனவர் கொள்ளியிற் புகல் வரும் மஞ்ஞை' என்றாள்.

அங்ஙனம் செல்லும் மயில்கள் தம் அழகிய தோகைகளை விரித்து அசைந்து ஆடிச் சென்றமையின், அவை பந்தினைத் தொடர்ந்து அசைந்து ஆடிச் செல்லும் பெண்டிரையொத்தனவென்றாள். அவற்றையஞ்சி எழுவதும் விழுவதுமான குருவிகள் அப்பெண்டிர் கையிற்கொண்டு விளையாடும் பந்தினையொத்தனவென்க.

தலைவன்பால் தஞ்னெஞ்சை முழுவதுமாகப் பறிகொடுத்தமையின் 'நாடனொடு சென்ற என் நெஞ்சு' என்றாள். அவன் மீண்டு வரத் தானும் வரும் என்றாள் என்க. எனவே அவனன்றித் தனக்கு வாழ்வில்லையென்றாளாயிற்று.

தன்னெஞ்சம் தன்வயத்தது அன்று என்பாள் வருவதும், வாராது அமைதலும் தன் நெஞ்சின் விழைவையொட்டியது என்றாள். அது மீண்டு வாராமைக்குக் காரணம் உண்டெனில், தலைவன் இருக்குமிடமே தன்னிடம் என்ற முடிவோடு அங்கேயே தங்கிவிட விரும்பியதாகவே இருக்கும் என்பாள், 'அவண் உறை மேவலின்' என்றாள். எனவே, அது தான் தனித்து மீண்டுவர வாய்ப்புச் சிறிதும் இல்லையென்றாள் என்க. இங்ஙனம் தன்னையும் தன் நெஞ்சையும் வேறுவேறு நிறுத்திப் பேசும் நிலையை அக இலக்கியப் பரப்பு முழுவதும் காணலாம்.

அருஞ்சொற்பொருள் : அவண் உறை – அங்கேயே தங்குதல்; மேவல் – விரும்புதல்; புனவர் – காட்டுவாழ்வினரான குறவர்;

Koviloor Digital Library

புகல் – இருப்பிடம்; மஞ்ஞை – மயில்; இருவி – அரிதாள்; வருந்துற – வருந்த; படர்தரும் – செல்லும்.

இலக்கணக்குறிப்பு : கொல் – ஈரிடத்தும் அசைநிலை; உறை – (உறைதல்) முதனிலைத் தொழிற்பெயர்.

குருவி : ஒருவகைச் சிறிய பறவையினம் குருவியாகும். இது குரீஇ என்னும் வடிவிலேயே ஏனைய செய்யுட்களில் இடம் பெற, இதில் மட்டுமே இருவி என்பதனோடு தொடைநயம் பெறக் குருவி என்று ஆளப்பட்டுள்ளது. கபிலர் **குரீஇப்பூளை** என்றே குறிஞ்சிப் பாட்டில் ஆள்கிறார். அவரே இங்குக் குருவி என்று ஆண்டார் என்பது சிந்தனைக் குரியதாகும்.

மேற்கோள் : நெஞ்சு தலைவன் இடம் சேர்தல் :

எல்வளை ஞெகிழ்ந்தோர்க்கு அல்லல் உறீஇச்
சென்ற நெஞ்சம் செய்வினைக்கு அசாவா
ஒருங்குவரல் நசையொடு வருந்தும் கொல்லோ?
அருளான் ஆதலின் அழிந்து இவண் வந்து
– நற். 56.

இன்னம் ஆகவும் நன்னர் நெஞ்சம்
என்னொடும் நின்னொடும் சூழாது கைமிக்கு
. . . .
இருளிடை மிதிப்புழி நோக்கி அவர்
தளரடி தாங்கிய சென்றது இன்றே.
– அகம். 128.

குறிப்புப் பொருள் : புனவர் கொள்ளிக்கு அஞ்சித் தன் புகலிலே செல்லும் மயில் புனம் கொய்த பின்பு அரிதாளிலே இருந்த குருவி எழுவது விழுவதாய் வருந்துறச் சிறகை விரித்து ஆடிச் செல்லும் நாடன் என்றது, பின்பு வரைந்து கொள்ளக் கருதாதே அலரஞ்சித் தன் மனைவயின் சென்றவன் இக்காலத்து யானும் என் ஆயத்தாரும் வருந்துறப் பிரிந்தான் என்பதாம் (பழையவுரை).

Koviloor Digital Library

இனி, முன்னம் ஊரின்கண் தன் வருகையாலே அம்பல் முகிழ்த்த காலத்தே அஃது அலராகாமல் அடங்குதற் பொருட்டு ஒருவழித்தணந்து அதனைப் பரிகரித்த (நீக்கிய) நம் பெருமானே, இப்பொழுது நாடும் ஆயமும் மெய்வேறுபட்டுக் கண் கனிந்து அழும்படி நம்மைப்பிரிந்து நீள உறைகுவானாயினன். இதனால் இப்பொழுது ஊரெங்கும் அல்ரெழுந்து எம்மைப்பெரிதும் வருந்துகின்றது என உள்ளுறை காண்பார் பெருமழைப்புலவர்.

ஈழத்து உரையாசிரியர் கருத்து வருமாறு :

''வேடர் தாம் தமக்குப் பாதுகாவலாக வைத்திருக்கும் கொள்ளியால் தனக்குத் தீங்கு வருமென்று கருதி நெடுநாட் பழகிய குருவிகளும் மிக வருந்த மயில் தன் காட்டிற் சென்றாற்போல, இவனும் அலர் எழுந்ததெனக் கருதி அதறகஞ்சித் தன்னூர்க்கு நம்மை வருந்தவிட்டுச் சென்றான்''

296

கொடிச்சி காக்கும் பெருங்குரல் ஏனல்
அடுக்கல் மஞ்ஞை கவரும் நாட!
நடுநாள் கங்குலும் வருதி;
கடுமா தாக்கின், அறியேன் யானே.

கூற்று : இரவுக்குறி வருகின்ற தலைமகற்குத் தோழி ஆற்றாமை கூறி மறுத்தது.

கூற்று விளக்கம் : தலைவன் தன் காதல் மிகுதியால் நள்ளிரவில் நேரத்தக்க இடையூறுகளையும் பொருட்படுத்தாது வருதல் கண்டு, அவ்விடையூறுகட்கு அஞ்சியும், விரைவில் திருமணம் செய்துகொள்ள வற்புறத்தவும், தோழி வழியருமை கூறி இரவுக்குறி மறுத்துக் கூறியது.

Koviloor Digital Library

உரை : குறமகள் காத்து நிற்கும் பெரிய கதிர்களைக் கொண்ட தினையைப் பக்க மலையில் வாழும் மயிலினம் கள்ளத்தனமாகக் கவர்ந்து உண்ணுதற்கு இடனான மலைநாட்டுத் தலைவ! நீ (உயிர்க்கு ஏதம் விளைக்கத்தக்க) நடுயாமப் பொழுதிலும் இவளைக் காண வருகின்றனை. அங்ஙனம் வரும்போது காட்டு விலங்குகள் நின்னைத் தாக்கினால், அதன் பின் விளைவுகளைச் சொல்லவும் யான் அறியேன்.

உரை விளக்கம் : 'நடுநாட் கங்குலும் வருதி' என்றாள் நள்ளிரவில் நேரக்கூடிய பெரிய இடர்களைக் கருத்திற் கொண்டதனால். அவ்விடர்கள் பாம்பு, புலி, யானை, இரைதேர் முதலை, நெடுஞ்சுழிக் கான்யாறு முதலியனவாம். நின் ஆர்வ மிகுதியால் நீ வரினும், அதனால் தலைவியும் யானும் அடையும் துயரம் அளவில்லாதது என்று கூறினள் என்க. 'கடுமா தாக்கின்' என்றாள், அங்ஙனம் தாக்குதற்கு நிறைய வாய்ப்புக்கள் உண்டு என்னும் குறிப்பில்.

'அறியேன் யான்' என்றது, அதன் விளைவுகளை என்னால் கருதிப்பார்க்கவும் இயலாது என்ற கருத்திலாகும். அஃதாவது, ஒருநாள் விழுமம் உறினும் வழிநாள் தன் தோழி வாழாள் என்றதனைக் குறிப்பால் உணர்த்தினாள் என்க.

நீ வரும் பொழுதையும், நேரத்தக்க துயரங்களையும் எண்ணியெண்ணி யாம் நாளும் சாகாமல் செத்துக் கொண்டுள்ளோம். ஆதலின், விரைவில் வதுவையிற் கூடி இனிதிருக்க முயல்க என அறிவுறுத்தினாள் என்க.

அருஞ்சொற்பொருள் : கொடிச்சி – குறமகள்; குரல் – கதிர்; ஏனல் – தினை; அடுக்கல் – பக்கமலை; கங்குல் – நள்ளிரவு; கடுமா – கொடிய விலங்குகள்.

இலக்கணக்குறிப்பு : வருதி – முன்னிலை ஒருமை வினைமுற்று; கடுமா – கடு ... கடி என்னும் உரிச்சொல் திரிபு.

Koviloor Digital Library

மேற்கோள் : தலைவன் நள்ளிரவில் வரும் வழியருமை கருதித் தலைவி வருந்தல் :

நினைத்தொறும் கலுழுமால் இவளே கங்குல்
அளைச்செறி உழுவையும் ஆளியும் உளியமும்
புழற்கோட்டு ஆமான் புகல்வியும் களிறும்
வலியில் தப்பும் வன்கண் வெஞ் சினத்து
உருமும் சூரும் இரைதேர் அரவமும்
ஒடுங்கிரும் குட்டத்து அருஞ்சுழி, வழங்கும்
கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்
நூழிலும் இழுக்கும் ஊழடி முட்டமும்
பழுவும் பாந்தளும் உளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமம் அவர்
குழுமலை விடரகம் உடையவால் எனவே
(குறிஞ்சி. 251 - 261)

இரவு ஏதம் அஞ்சி வாரற்க என வற்புறுத்தல் :

கருங்கண் தாக்கலை பெரும் பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
. . . .
நடுநாள் வாரல் வாழியோ வருந்துதும் யாமே
- குறுந். 69.

நடுநாள் வருதி நோகோ யானே - நற். 257.
வாரல் வாழியர் ஐய - அகம். 92.

குறிப்புப் பொருள் : "குறத்தி காக்கும் தினையை மஞ்ஞை கவரும் நாடவென்றது, நின்னாட்டுக்குத் தக்க களவின் நுகர்ச்சியே விரும்புகின்றாய் என்பதாம்" என்பது பழையவுரை.

கொடிச்சி காக்க விளங்கும் தினைக்குரலைப் பல இடையீடுகட்கிடையே மஞ்ஞை கவரும் என்றதனால், தாயர் தந்தையரது காவலில் இருக்கும் தலைமகளது கூட்டத்தை இடையீடு இன்றிப் பெறுதற்கு நீ விரைந்து வரைதல் வேண்டும்

Koviloor Digital Library

எனக் குறிப்பால் தோழி வரைவு கடாவியதாக ஔவை சு. துரைசாமிப்பிள்ளை விளக்குவார்.

297

விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை
பூக் கொய் மகளிரின் தோன்றும் நாட! –
பிரியினும், பிரிவது அன்றே –
நின்னொடு மேய மடந்தை நட்பே.

கூற்று : ஒருவழித்தணந்து வரைய வேண்டுமென்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம் : களவுக் காலத்தில் சில நாள் பிரிந்து சென்று மீளும் கருத்துடைய தலைவன் அதனைத் தோழிக்கு உரைத்தபோது தோழி அவனுக்குக் கூறியது இது.

உரை : மலர்ந்த பூக்களைக் கொண்ட வேங்கை மரத்தின் பெரிய கிளையில் அமர்ந்துள்ள மயில், அம்மரத்தின்மீது ஏறிப் பூப்பறிக்கும் பெண் போலத் தோற்றமளிக்கும் மலை நாடனே! நீ என் தோழியை மறந்து வாழ்தல் ஒருகால் நிகழ்வதாயினும், அவள் நின்னொடு கொண்ட நட்பு என்றும் பிரிதற்கு இயலாதது என்பதனை அறிக.

உரை விளக்கம் : ஒருவழித் தணந்து சென்று மீண்டும் வருவதாகக் கூறினான் தலைவனாதலின், நீ இப்பொழுது பிரிந்து செல்வதோடமையாது, அறவே இவளை மறந்து விடும் காலம் தோன்றுவதாயினும், தான் உன்னையும் உன்னொடு கொண்ட கேண்மையையும் மறக்க மாட்டாள் என்னும் கருத்தில் 'பிரிவினும் பிரிவது அன்றே' என்றாள். அத்தகைய அவிழ்க்கலாகா நட்பினையுடையாளை விரைந்து மணமுடிப்பாயாக என்னும் குறிப்பில், வேங்கை மலர்ந்தமையைச் சுட்டி 'விரிந்த வேங்கை' எனச் சிறப்பித்தாள்.

Koviloor Digital Library

வேங்கை மலரும் காலம் மணம்புரிதற்குரிய பருவம் என்ற பண்டை நம்பிக்கையை எண்ணுக.

'பிரிவதன்று' என்றாள், யாத்துப்பின் மறந்துவிடும் எண்மையுடையதன்று; மாறாக ஏனை உலகத்தும் தொடர்வதாகும் என்பது கருத்தாகக் கொள்க. 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' (சிலப். 7 : 32) என்பதனை ஒப்பிட்டுக் காண்க.

அருஞ்சொற்பொருள் : விரிந்த வேங்கை - விரிந்த மலர்களை உடைய வேங்கை மரம்; சினை - கிளை; தோகை - மயில்; மேய - பொருந்திய.

இலக்கணக்குறிப்பு : தோகை - ஆகுபெயர்; தோகையை உடையது தோகையாயிற்று. பிரிவது - வினையாலணையும் பெயர்.

மேற்கோள் : வேங்கை மலர்வது திருமணக் காலத்தைக் குறிப்பது :

வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன பசுவெண்
திங்களும் ஊர்கொண்டன்றே
— அகம். 2.

மயில் பூக்கொய் மகள் போல் தோன்றல் :

வேங்கை .... சினையிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற்றோன்றும் நாடன்
— குறுந். 26.

நட்பு அவிழ்க்க முடியாதது என்பது :

பூக்கமழ் பொதும்பிற் சேக்கும் துறைவனொடு
யாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்த்தற் கரியது முடிந்தமைந்தன்றே
— குறுந். 312.

Koviloor Digital Library

- நாடன் நம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பயந்தக் காலும் பயப்பொல் லாதே
- குறுந். 264.

உள்ளுறை : மலர்ந்த வேங்கைச் சினைக்கண் இருந்த தோகை மலர்கொய்யும் மகளிரைப்போல் தோன்றும் நாடவென்றது, நீ மனத்தால் எங்கட்கு நல்லது புரியாய் எனினும் நன்மை செய்கின்றாய் போலத் தோன்றுகின்றாய் என்பதாம். (பழையவுரை)

இனி, வேங்கைப் பெருஞ்சினைக்கண் தோகை வாளாது இருப்பினும் பூக்கொய்யும் மகளிர் போலத் தோன்றா நிற்கும் என்றது, நீ வரைவு கருதிப் பிரிதலை நினைத்தாய் ஆயினும் அஃது எமது உயிரைக் கொல்லும் செயல்போல எமக்குத் துயர் விளையா நிற்கின்றது என உள்ளுறையால் செலவழுங்குவித்தவாறு என்று விளங்குவார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.

ஈழத்து உரையாசிரியர், "பூக்கொய் மகளிரிற்றோன்றும் என்னும் ஏனை உவமை, உள்ளுறை உவமையைத் தரும் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது என்றார்.

298

மழை வரவு அறியா மஞ்ஞை ஆலும்
அடுக்கல் நல் ஊர் அசைநடைக் கொடிச்சி
தான் எம் அருளாள் ஆயினும்,
யாம் தன் உள்ளுபு மறந்து அறியேமே!

கூற்று : தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தியவழி, அவள் நாணத்தினால் மறைத்து ஒழுகிய அதனைக் கூறக்கேட்ட தலைமகன் சொல்லியது.

Koviloor Digital Library

கூற்று விளக்கம் : தலைமகன் தோழியை நெருங்கித் தன் மனக்குறையைத் தீர்க்குமாறு வேண்டிய பொழுது அதற்கு உடம்பட்ட தோழி, தலைவியைக் கண்டு அவள் உடம்பாடு வேண்டினாள். தலைவி தன் நாணத்தினால் தனக்கும் அவனுக்கும் உள்ள உறவை மறைத்தாளாயினும் குறிப்பினால் உடம்பட்டாள். அதனை அவள் தலைவனுக்கு உணர்த்தியபோது தலைவன் இங்ஙனம் கூறினான்.

உரை : மயில் மழைமுகில் வருதலையுணர்ந்து களிப்பு மிக்கு ஆடுதற்கு இடனான பக்க மலைகளை உடைய நல்ல ஊரில் உள்ள அசைந்த நடையினைக் கொண்ட கொடிச்சியான என் காதலி, எமக்கு அருளுதற்கு உடம்படாளாயினும் யாம் அவளை நினைத்தலை ஒருபொழுதும் மறந்தறியோம்.

உரை விளக்கம் : மழையைக் கண்டு மகிழ்ந்து ஆரவாரித்து ஆடும் இயல்பினது மயிலாதலின் 'மழைவரவு அறியா மஞ்ஞை ஆலும்' என்றான். தன் வரவு கண்டால் மகிழ்ச்சியால் திளைக்கும் காதலியை உடைய ஊரை நல்லூர் என்று சிறப்பித்தான் என்க.

தன் காதலி தன்பால் அன்பு நீங்கப் பெறாதவள் என்பதனைத் தோழி கூற்றால் உணர்ந்தவன் ஆதலின், அவளைப் பாராட்டும் வகையில், அவள் அருளுதலை மேற்கொண்டாள் என்பதனை அறிந்து மகிழ்கின்றேன். ஒருவேளை அருளாள் எனினும் யான் அவளை மறவேன்' என்பான், 'தான் எம் அருளாள் ஆயினும் ..... உள்ளுபு மறந்தறியேம்' என்றான். அருளாள் ஆயினும் என்றது அருளியமை தோன்ற நின்றதென்க.

அருஞ்சொற்பொருள் : ஆலும் - ஆடும்; ஆரவாரித்தலுமாம்; அடுக்கல் - அடுக்கம், பக்கமலை; கொடிச்சி - குறமகள்; உள்ளுபு - நினைத்தலை.

இலக்கணக்குறிப்பு : வரவு அறியா - அறிந்து என்னும் பொருள் கொண்ட செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். உள்ளுபு - செய்பு என்னும் எச்சம்.

Koviloor Digital Library

மேற்கோள் : மழை கண்டு மயில் ஆலுதல் :
மடவ வாழி மஞ்ஞை மாயினம்
கால மாரி பெய்தென அதனெதிர்
ஆலலும் ஆலின
– குறுந். 251.

தலைவியின் நட்பு மறக்க முடியாதது :
பெறுவது இயையா தாயினும் உறுவதொன்று
உண்டுமன் வாழிய நெஞ்சே . . . .
. . . .
இறுமுறையென ஒன்றின்றி
மறுமை உலகத்தும் மன்னுதல் பெறுமே
– குறுந். 199.

குறிப்புப் பொருள் : மழையினது வரவையறிந்து மஞ்ஞை ஆலும் என்றது யான் நின்னிடத்து வருகின்ற வரவினையறிந்து இதற்கு அவள் மகிழா நிற்கும்; நீ கூறுகின்றது பொய்யென்பதாம். (பழையவுரை).

மழை வரவறிந்து மயில்கள் ஆலுமாறு போல யான் வந்தனன் என்பதை நின் தலைவி அறிந்தால் அருள் வந்த சொல்லும் செயலும் உடையளாவள் காண் என உள்ளுறை கொள்வார் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

299

குன்ற நாடன் குன்றத்துக் கவாஅன்,
பைஞ் சுனைப் பூத்த பகுவாய்க் குவளையும்
அம் சில் ஓதி அசைநடைக் கொடிச்சி
கண்போல் மலர்தலும் அரிது; இவள் –
தன் போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே.

Koviloor Digital Library

கூற்று : இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய நிலைமைக் கண், தலைமகள் ஆய வெள்ளத்தோடு கூடி நிற்கக் கண்ட தலைமகன் மகிழ்ந்த உள்ளத்தனாய்த் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைவனும் தலைவியும் ஊழ் கூட்ட இயற்கைப் புணர்ச்சியிற் கூடி இன்புற்றனர். இயற்கைப் புணர்ச்சிக்குப் பின், தலைவி வெள்ளம் போன்ற தன் தோழியர் கூட்டத்துடன் நிற்கக் கண்ட தலைவன், அவளுடைய பேரழகை எண்ணி வியந்து தனக்குத்தானே சொல்லி இன்புற்றது இது.

உரை : குன்ற நாடனுடைய மலைச் சாரலின் கண் அமைந்த பசிய சுனையகத்தே விரிந்த வாயை உடையனவாய், அழகிய சிலவாகிய கூந்தலையுடைய, அசைந்த நடையையுடைய கொடிச்சியின் கண்ணைப்போல் குவளை மலர்தலும் அரிது; இவளுடைய சாயலைப் போன்ற சாயலைத்தான் பெறுவது மயிலுக்கும் அரியதாகும்.

உரை விளக்கம் : குன்ற நாடன் என்றது தலைவியின் தந்தையை. தன் காதலியின் தந்தையும் தன்போல் ஒரு குன்ற நாட்டுத் தலைவன் என்னும் பெருமிதம் தோன்ற இங்ஙனம் எண்ணி மகிழ்ந்தான் என்க. தன் காதலியை 'அம் சில் ஓதி அசைநடைக் கொடிச்சி' என்று சிறப்பித்தான், அவ்வோதியை அணைத்து மகிழ்ந்த குறிப்பும், அவளது மயில்போலும் அசைந்த நடையைக் கண்டு உவந்த குறிப்பும் தோன்ற.

பைஞ்சுனையில் பூத்த குவளையாயினும், தன் காதலியின் கண்களில் உள்ள குளிர்ச்சி அதற்கு இல்லையென்பது பட 'கொடிச்சி கண்போல் மலர்தலும் அரிது' என்றான். காதல் ததும்பத் தன்னைப் பார்த்தாள் ஆதலின், பொதுவாகப் பெண்களின் கண்கட்கு உவமை சொல்லப்படும் குவளையும் அவள் கண்களை ஒவ்வா எனப் பாராட்டினான். மயிலின் சாயல் கண்டோர்க்குக் காட்சியின்பம் அளித்தலொன்றே உடையதாக, இவள் சாயல் கண்டோர் உயிரைத்

Koviloor Digital Library

தளிர்க்கச் செய்ய வல்லதாதலின், இவள் சாயலை மயிலின் சாயல் ஒவ்வாது என்றான். இதனால், அவள் மேனியை அணைத்து உற்ற ஊற்றின்பத்தினையும் பாராட்டினானாம்.

ஏனைய பெண்கட்காயின், குவளையும் மயிலும் கண்கட்கும் சாயற்கும் உவமமாகலாம். ஆயின் என் காதலியின் கண்கட்கும் சாயலுக்கும் அவை ஒப்பாகா என்றான்.

ஈண்டுக் குன்ற நாடன் எனக் குறித்தது முருகக் கடவுளையென்பாரும் உளர். இன்னோர், முருகனுக்குரிய சுனையிற் பூத்த குவளை மலரினும், அவனுக்குரிய மயிலினும் இவளுடைய கண்களும் சாயலும் சிறப்பால் உயர்ந்தன என்பதாக விளக்குவர்.

அருஞ்சொற்பொருள் : கவா அன் - மலைப்பக்கம்; அம் - அழகிய; சில் ஓதி - சிலவாகிய கூந்தல்; சாயல் - மென்மை; மஞ்ஞை - மயில்.

இலக்கணக்குறிப்பு : மஞ்ஞைக்கும் - உம்மை சிறப்பு.

மேற்கோள் : குவளையினும் கண்கள் சிறந்தன :

காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று
- திருக். 1114.

மயிலின் சாயலினும் தலைவியின் சாயல் சிறந்தது என்பது :

மாயிரும் பீலி மணி நிற மஞ்ஞை நின்
சாயற்கு இடைந்து தண்கான் அடையவும்
- சிலப். மனையறம் : 53 - 54.

Koviloor Digital Library

300

கொடிச்சி கூந்தல் போலத் தோகை
அம் சிறை விரிக்கும் பெருங் கல் வெற்பன்
வந்தனன் எதிர்ந்தனர் கொடையே
அம் தீம் கிளவி பொலிக நின் சிறப்பே.

கூற்று : தலைமகன் தானே வரைவு வேண்டிவிட, சுற்றத்தார் கொடை நேர்ந்தமை தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம் : தலைமகன் தன் சுற்றத்தார் வழியே மகட்கொடை வேண்டினனாக, அதற்கு உடம்பட்ட தலைவியின் உறவினர் அவர் வேண்டுகோட்கு இசைந்தனர். அச்செய்தியைத் தோழி தலைவிக்கு இங்ஙனம் மகிழ்வுடன் தெரிவித்தனள்.

உரை : அழகும் இனிமையும் கொண்ட சொற்களை உடைய தோழியே! குறிஞ்சிநிலக் குறப் பெண்ணின் கூந்தலைப் போல மயில் தன் அழகிய தோகையை விரிப்பதற்கு இடமான பெரிய மலைகளை உடைய நாட்டின் தலைவன் (மகட்பேசி) வந்தனன். நம் சுற்றத்தாரும் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி நின்னை அவனுக்குக் கொடுக்க உடம்பட்டனர். இனி நின் சிறப்பு மேலும் பொலிவு பெறுமாக!

உரை விளக்கம் : மயிலின் தோகையைப் பெண்களின் கூந்தலுக்கு உவமை கூறுவது இயல்பு. ஆனால் தலைவன் நாட்டு மயில்களின் தோகை அவன் நாட்டுப் பெண்களின் கூந்தலைப் போல் இருந்தது என்றாள். அப்பெண்களின் மிக்க அழகினைச் சிறப்பிக்க வேண்டிக் குறப்பெண்ணின் கூந்தலுக்கு ஒப்பாதலை விரும்பி மயில் தன் தோகையை விரித்தது என்று உரைத்தலும் அமையும். தலைவனைப் பெருங்கல் வெற்பன் என்றது அவனுடைய செல்வப் பெருமையை விளக்கும் குறிப்பினதாகும். அத்தகையோனும் நின்னை விரும்பி மகட்பேசி வந்தனன் என்பாளாய், "வெற்பன் வந்தனன்" என்றாள். அவன் என்று வருவான் என ஆவலோடு

Koviloor Digital Library

எதிர்பார்த்தமையை இங்ஙனம் வெளிப்படுத்தினாள் என்க. ''எதிர்ந்தனர் கொடையே'' என்றாள், தமர் உடம்படுவரோ மாட்டாரோ என்று நாம் ஐயுற்று வருந்திய வருத்தமெல்லாம் இனி நீங்கின என்னும் கருத்தில்.

'தலைவியை அந்தீம்கிளவியை உடையவளாகப் பாராட்டினாள், தலைவனை அவள் சொற்கள் பெரிதும் கவர்ந்தன என்னும் கருத்தில். ''பொலிக நின் சிறப்பே'' என்றாள், தலைவியின் கற்பிற்கு இம்மகட்கொடை நேர்தல் ஊறு செய்யாது மேலும் சிறப்புச் சேர்த்தலின். இனி 'நின் வதுவை கூடியபின்னர், இல்லறத்தின் சிறப்பெல்லாம் இனிதே அடைந்து பொலிக' என்று வாழ்த்தினாள் என்றலும் அமையும்.

அருஞ்சொற்பொருள் : கொடிச்சி – குறப்பெண்; அம்சிறை – அழகிய தோகை; பெரும்கல் – பெரிய மலை.

குறிப்புப் பொருள் : கொடிச்சி கூந்தல் போல வேண்டி மஞ்ஞை சிறகை விரிக்கும், வெற்பன் என்றது, நின் மகிழ்ச்சிக்குத் தக நின் தமர் மகிழ்ச்சி கூர்ந்தனர் என்பதாம். (பழையவுரை)

இனி, நம் தலைவன் விழைவிற்கு ஒப்பாகவே நம் சுற்றத்தாரும் விழைந்து உவகையொடு முகமன் கூறி வரவேற்று மகட்கொடையும் நேர்ந்தனர் என்னும் உள்ளுறையும் கொள்வர்.

மஞ்ஞைப் பத்து முற்றிற்று

குறிஞ்சி முற்றிற்று

கபிலர்

அழகப்பா பல்கலைக்கழகம் வள்ளல் தமிழ் நூலகம் காரைக்குடி

வள்ளல் தமிழ் நூலகம்
அழகப்பா பல்கலைக்கழகம்
Accession No. 66659